பாலகுமாரன்
பயணிகள்
கவனிக்கவும்

பயணிகள் கவனிக்கவும்..

பாலகுமாரன்

ஒரு பெரிய வெள்ளை யானையாய் ஒற்றை மேகம் ஒன்று நகர்வது அந்த இருட்டிலும் தெளிவாய்த் தெரிந்தது.

சற்று முன் நீட்டிய தும்பிக்கை, தலைக்கு மேலே கொஞ்சம் தூக்கியபடி. காதுகள் முன் கால்களில் ஒன்று நீண்டு, மற்றது சிறிது மடிந்து ஒடுகிற பாலையில் நீரே இறங்கிக் கொண்டிருக்கிற மேகம். இது தரையிறங்கினால் இந்த ஏர்போர்ட் முழுவதும் அடைத்துக் கொள்ளும். இந்த மேகம் எங்கே இறங்கும்? எப்போது இறங்கும்? அது இஷ்டம். யாரும் கட்டளை கொடுக்க முடியாது. யாரும் கட்டாயப்படுத்த முடியாது.

ஒரு மேகம் தன் கூட்டம் விட்டுத் தான் மட்டும் தனியே இறங்கத் தடம் தேடிக் கொண்டிருக்கிறது. அட... கவிதை கவிதையா இது. இல்லை... த...த என்று வந்தால் கவிதையா...சரியாய் யோசி.

விமான மனோகரன் நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தான். மறுபடி வெள்ளை யானையைக் கவனிக்கத் தலைப்பட்டான்.

'மரணம் நோக்கி வரும் ஒரு மேகம்
நன்னைப் புதைத்துக் கொள்ள மண் தேடுகிறது.'

ஆட. இது...கவிதை...ஆனால், மேகம் மழையாவதை மரணம் என்று சொல்வானேன்? மங்கலமாய்ச் சொல்ல வரமே. மேகம் மழையாவது யாருக்கு மங்கலம். எனக்கு. இங்குள்ள உயிர்களுக்கு மேகத்துக்கு இது மரணம்தானே சரி...சரி... மங்கலமாய் யோசி, பார்ப்போம்.

மங்கலம் என்றால்... ரொமாண்டிக்காக யோசி.
'புமியை நேசித்த மேகம்.
மோகத்தில் முத்தமிட இதழ் குவித்து
இடம் தேடுகிறது.
பூமியோ ரோமப் புல் பொடிக்க ஏங்கி
மேல்மூச்சு அலைக்கழிக்க
மலையெனும் முலை திமிர
மல்லாந்து கிடக்கிறது.
மழை பெய்யும் எங்கேனும்.
உலகில் எந்நேரமும்
கூடல் நடக்கும், இடைவிடாது.'

தூள். கவிதை வந்துடுச்சு. கவிதை வந்துடுச்சு. ஸ்டீபன் உள்ளுக்குள்ளே கூவினான் சே. விமான நிலைய டவர்ல நைட் ட்யூட்டியே உட்காரக் கூடாது. இப்படி இருட்டும் ஹோவென்றிருக்கும் நிறைந்த வெளியும் பார்க்கும் போது சில சமயம் காமம் பொங்குகிறது. சில சமயம் மரண பயம் வருகிறது ஒருவேளை, இரண்டு ஒன்றோ... காமமும் மரணமும் ஒரே மாதிரி விஷயமோ?

கொஞ்சம் நடுக்கமாய். கொஞ்சம் பதட்டமாய், தெரிந்துகொள்ள விருப்பமாய், ரொம்ப யோசிக்கக்கூடாத

விஷயமாய் இரண்டும் ஒன்றோ...? இரண்டையும். வைத்து ஒரு கவிதை ட்ரை பண்ணலாமா? வேண்டாம்.

''ஸ்டீபன், தூங்கிட்டியா?''—எதிரே ரேடியோ கரகரத்தது.

பசுபதிநாதன் குரல். கிழக் குரல்!

''இல்லை சார்...சொல்லுங்க!''

''காத்து ஜாஸ்தி இருக்கு ஸ்டீபன் எய்ட்டீன் நாட்ஸ். கஜராஜ் இறங்கப் போறான்...இறங்கறபோது கேட்பான் சொல்லு வெதர் ரிப்போர்ட் வந்துடுச்சா?''

''வந்துது சார். செவன்னுதான் போட்டிருக்கு.''

''இல்லை. இப்போ காத்து தூக்குது எய்ட்டீன். நோட் பண்ணிக்க!''

பசுபதி, ஏரியா கண்ட்ரோல் ஆள். பச்சை ராடாருக்கு முன்னே உட்கார்ந்து சென்னை வரும் விமானத்தைப் புள்ளியாய்—இருநூறு மைல் தொலைவில் ஒரு புள்ளியாய் அதைக் கண்டுவிட்டு அலனோடு ஓயர்லெஸ்ஸில் பேசி உயரம் கேட்டு அங்க அடையாளம் கேட்டு வழி சொல்பவர். இத்தனை டிகிரியில் இந்த வழியாய் இத்தனை வேகத்தில் வா...இந்தத் தொலைவுக்குப் பிறகு இந்த மீட்டரில் பேசு...மாற்றி அறுபது மைல் ராடாரில் மறுபடி பார்த்து விட்டு இறங்க உத்தரவு கொடுப்பவர்.

விமானம் சென்னை நகர விளிம்பு தொடும்போது டவரைத் தொடர்பு கொள்ளச் செய்பவர்.

விமான நிலையத்தில் டவர் உயரமான இடம் ஐந்து மாடி உயரம். இரண்டரை கிலோ மீட்டர் ரன்வே அங்கிருந்து தெளிவாய்த் தெரியும். வடக்குப் பக்கத்தைச் சரியாய் சைபர் டிகிரி என்று வைத்துக் கொண்டால் இந்த ரன்வே எழுபது டிகிரியிலிருந்து இருநூற்று முப்பது டிகிரி

வரை நீளும் அதாவது, ரன்வேயின் ஒரு முனை எழுபது டிகிரியில் இருக்கும் மற்ற முனை இருநூற்று முப்பது டிகிரியில் இருக்கும். மொத்த கான்கிரீட் தளமும் இந்த டவரிலிருந்து தெளிவாய்த் தெரியும் கஜராஜ் ராணுவ விமானம். ராணுவ விமானத்துக்கு நேரம் காலம் கிடையாது. எப்போது வேண்டுமானாலும் வரும்; எப்போது வேண்டுமானாலும் போகும் ஸ்டீபன் மேஜையிலிருந்த ஸ்டிக் எடுத்துப் பார்த்தான். ஸ்டிக் என்பது நீள பிளாஸ்டிக் பட்டை முக்காலடிப் பட்டை. வரப்போகும் விமானத்தின் எண் வரும் நேரம், வழி, அது பறக்கும் உயரம், எங்கிருந்து வருகிறது என்பது அதில் அட்டையில் எழுதிச் செருகப்பட்டிருக்கும்.

இந்தத் தகவல், புறப்பட்ட இடத்திலிருந்து போன் மூலம் வந்துவிட ஏர் டிராபிக் கண்ட்ரோல் ரூமில் எழுதி மேலே டவருக்கு அனுப்பி விடுவார்கள்.

இது சிலோனிலிருந்து வரும் விமானம், கஜராஜ் காரியர். லாரி மாதிரி உள்ளே ஐந்து ஜீப் அடக்க முடியும். மூன்று டாங்க் உட்காரும். பாராசூட் இறக்க உதவும் மஞ்சளாய்ப் பறக்கிற பயிற்சி விமானத்தை நாய்க்குட்டி என்றால் கஜராஜை யானை என்று சொல்லலாம். அத்தனை பெரிசு போன தடவை கஜராஜில் சிலோனிலிருந்து பத்துப்பெட்டி செத்த உடம்பு கொண்டு வந்தார்கள். மடமடவென்று லாரியில் ஏற்றிக் கொண்டு போய் விட்டார்கள். செதில் செதிலாய்ப் போன பீரங்கி டாங்க் கொண்டு வந்தார்கள். நாற்பது வீரர்கள் முகம், முழங்கை, காலில் கட்டுகளோடு இறங்கினார்கள்.

இந்த முறை என்ன வருகிறதோ தெரியவில்லை. டவரிலிருந்து இது தெரியவும் தெரியாது. ஒரு நாளைக்கு இருபது இருபத்தைந்து விமானங்கள் தரையிறங்கும், மேலேறும் யார் யார் போகிறார்கள் என்பது தெரியாது. டவரில் இருப்பவனுக்கு விமானம் முக்கியம், பயணி இல்லை.

வேலைக்கு வந்த புதிதில் ஸ்டீபன் மனோகரனுக்குப் பயணிகளும் முக்கியமாய் இருந்தது. ஜெய்சங்கர்... ஜெய்சங்கர்... அமைச்சர் ராசாராம்... ஐயோ! ஸ்ரீப்ரியா... ஸ்ரீப்ரியா... பைனாகுலர் வழியாய்ப் பார்த்துப் பார்த்து பரவசப் பட்டதுண்டு.

'கண்ணா, இது ஆள் பார்க்கறதுக்குக் கொடுக்கலை. ரன்வேல நாய் பூனை ஓடாத இருக்கா... ஆளு உள்ள தலைகாட்டாத இருக்கானா... இது பார்க்கக் கொடுத்திருக்கு தொழிலைக் கவனி ஸ்டீபன் ஏரோப்ளேன்ல போறவன் எல்லாரும் முக்கியமானவன்தான்' — அன்று அடடிய பசுபதிதான் தொழில் கற்றுக் கொடுத்தவர். இதற்கென்று ஒரு வருடம் தனியே பயிற்சி எடுத்தாலும்— டவரில் வாத்தியாராக நின்று தனியே தைரியமாய் விமானம் இறங்க உத்தரவு கொடுப்பதை, ஏறிக் கிளம்ப வழி சொல்வதைக் கற்றுக் கொடுத்தவர்.

''ரன்வேல நாய், பூனை வந்துடலாம். ஆள் எட்டிப் பார்ப்பானா சார்?''

''பார்த்தானே ஒரு தடவை. நான் டவர் ட்யூட்டில நிக்கறபோது பார்த்தேனே... ஏர்போர்ட்டே சிரிச்சுப் போச்சு.''

''எப்படி சார்?''

'சொல்றேன், நீயும் சிரி.''

ஸ்டீபன் சிரிப்போடு கேட்கத் தயாரானான்.

''இதே ஏர்போர்ட்-இதே இரண்டரை கிலோ மீட்டர் ரன்வே அரை கிலோ மீட்டருக்கு ஒரு ஆளா சிமெண்ட் தரை தாண்டிப் புல்வெளில செக்யூரிடி போட்டிருக்கும். சின்ன மர பங்க் வெச்சுக் கையில டார்ச்சுக் கொடுத்து தடி கொடுத்து வெச்சிருக்கும்.''

''டார்ச், தடி எதுக்கு?''

''அட... ஏரோப்ளேன் போகாதபோது ரோடு செக் பண்ண. லைட் செக் பண்ண வண்டிங்க போகும். வரும்... வர்றது போறது ஏர்போர்ட் வண்டிங்தானா... நம்ம ஆளுங்கதானானு பார்க்க டார்ச்.''

''நடி?''

''ஒரு தைரியத்துக்கு. பூச்சி பொட்டு வாலா மில்லையா?''

''புரியுது, சொல்லுங்க.'

''நிக்கற செக்யூரிடிகிட்ட கண்டிப்பா உத்தரவு— ''ஏதாச்சும் வண்டிங்க போனா சும்மா உட்காரக்கூடாது. டார்ச் அடிச்சுக் காட்டணும். அப்பதான் நீ இருட்டுல நிக்கறது தெரியும்'னு உத்தரவு. நாங்க அப்பப்ப செக் பண்ண வருவோம். தூங்கிடக்கூடாது. வண்டி வந்தா டார்ச் அடிச்சே ஆகணும்னு உத்தரவு.''

''புரியுது.''

''உத்தரவு போட்டவன் புதுசு. கேட்டவன் புதுசு. எதுக்கு?''

''இந்த ஏர்போர்ட்டுக்கு''

''கரெக்ட். ஒரு ஜீப் போச்சு. டார்ச் அடிச்சான் ஒரு ஃபயர் இன்ஜின் போச்சு டார்ச் அடிச்சான். செக்யூரிடி ஆபீசர் கார் போச்சு. டார்ச் அடிச்சான் வந்துச்சுய்யா போயிங் ஸெவன் நாட் ஸெவன். 'ஐயோ... ராத்திரி பத்து மணிக்கு வர வேண்டியவன் லேட்டு. விடிகாலை மூணு மணிக்கு வரான் இந்தப் புண்ணாக்கு செக்யூரிடி என்ன பண்ணாங்கறே... வண்டி வந்தா டார்ச் அடிக்கச் சொன்னாரு ஆபீசரு, அடிப்போம்'னு நேரா சிமெண்டு தளத்துக்குப் போனான். டார்ச் எடுத்து காக்பிட் பார்த்து இறங்கற ஏரோப்ளேன் மேலே அடிக்கிறான் பைலட் ஒரு செகண்ட் உதறிட்டான். அப்படியே ஒரே தூக்கு—தரை தொடாம பளீர்னு என்னவோ ஏதோனு அஞ்சாயிரம் அடி

உயரம் போயிட்டான். உள்ளே இருந்த பாஸஞ்சர் எல்லாருக்கும் குடல் வாய்க்கு வந்திருக்கும்.''

''ஐயோ...''

''மேலே போயிட்டுக் கத்தறான். என்ன புடுங்கறே அங்கே...டவர்ல உட்கார்ந்து? ரன்வே க்ளியர் ஃபார் ஃபைனல் அப்ரோச்லாண்டிங்கறே எவனோ பொறம் போக்கு டார்ச் அடிக்கறான்னு திட்டறான். பைனாகுலர் வெச்சுப் பார்த்தா இவரு டார்ச் லைட்டை ஆட்டிக்கினு இருக்காரு.''

சிரிப்பு பொங்கிற்று.

''அப்புறம்?''

''அவனை வானத்துலயே சுத்திக்கினு இருடானுட்டு. செக்யூரிடிக்கு போன் பண்ணேன் ஒண்ணுக்கு நாலு ஜீப்பா சைரன் போட்டுக்கிட்டு ரன்வேக்குள்ள நுழைஞ்சு அப்படியே அவனை டார்ச்சோட அள்ளிக் கொணாந்துட்டாங்க.''

''அப்புறம்?''

''அப்புறம் என்னா...எனக்கு மெமோ— 'டார்ச் ஆடறதை ஏன் பார்க்கலே'னு.''

''கேட்டீங்களா செக்யூரிடிலே''

''அவனைக் கூப்பிட்டுக் கேட்டமே— 'ஏண்டா ஆட்டினே?'னு... 'வண்டி வந்தா டார்ச் போடச் சொன்னாங்க ஏரோப்ளேன் வண்டி வந்துச்சு அதுக்கு வழி தெரியணுமேனு டார்ச் போட்டேன்'னான். அவன் பாஷையில வண்டின்னா காரும் வண்டி; ஏரோப்ளேனும் வண்டி?''

''தமாஷா இருக்கு சார்.''

''டவர்ல உட்கார்ந்தா பல தமாஷ் நடக்கும். உன் தப்பு இல்லாத ஊரான் தப்புக்கு நீ பதில் சொல்லணும். அதனால

பைனாகுலர்ல பொம்பளை கவனிக்கறதை வுட்டுட்டு பொறுப்பா தொழிலைக் கவனி.''

ஏழு வருடங்கள் ஆகிவிட்டன. இதுவரை எந்தத் தவறும் இல்லை. விளக்கே இல்லாமல் பவர் போய் கும்மிருட்டாய்த் தளம் ஆனபோது கூடத் தடம் சொல்லி விமானம் இறக்க முடிந்திருக்கிறது. நல்ல பெயர் வாங்க முடிந்திருக்கிறது.

இத்தனை சிறப்புக்குக் காரணம் தன் புத்தி மட்டு மில்லை. மாதாவின் அருள். தோமையாவின் கருணை டவரிலிருந்த ஸ்டீபன் மனோகரன் வலப்பக்கம் திரும்பி செயிண்ட் தாமஸ் மலையுச்சியைப் பார்த்துச் சிலுவை யிட்டுக் கொண்டான். ''பிரியமுள்ள எங்கள் பிதாவே...'' மனசு ஜபம் சொல்லிற்று.

எதிரே ரேடியோ உயிர் பெற்றது கரகரத்து.

''மெட்ராஸ் டவர்...மெட்ராஸ் டவர்...கஜராஜ்!'' பைலட் குரல் கேட்டது.

வந்து விட்டான்.

கஜராஜ், டவர் குட்மார்னிங், கோ அஹெட்...''

''குட்மார்னிங் ரிக்வெஸ்ட்...வெதர்.''

ஸ்டீபன் மேஜையிலிருந்த தட்பவெப்ப நிலை ரிப்போர்ட் படித்தான் ''வெதர் டு த்ரீ, ஃபோர், ஸீரோ. விண்ட் ஸீரோ எய்ட்டீன் நாட்ஸ். டெம்பரேச்சர் ஸெவன்டீன் ட்யூபாயிண்ட்ஸிக்ஸ்டீன். விஸிபிலிடி த்ரீ கிலோ மீட்டர்' காற்று வேகமும் ஈரப்பதமும் உஷ்ணமும் பார்வை தெரியும் சொன்னதை அப்படி பைலட் திரும்பச் படிக்க

சுயர் போன் காதில் பொருத்தி பொஸிஷன் கேட்டான்.

''அவுட் பௌண்ட்லெவல். ஸீரோ பை.''

விமான தளம்தாண்டி வெளியே போய்விட்டானா...? பார்க்க முடியவில்லை. குரல் மட்டும் கேட்கிறது. சிலோனிலிருந்து வருகிறான்.

''க்ளியர் ..பார் ..பைனல் அப்ரோச் அண்ட் லாண்டிங். ரன்வே டூ பை ஸீரோ.''

''ராஜர் ரிக்வெஸ்ட் வாஸி ஆன்.''

''வாஸி ஆன்.'' விமான நிலையத்தின் கடைசிப் பகுதி விளக்குகள் போடப்பட்டன. மரத் தடுப்புகளுக்கு நடுவே உள்ள பல வர்ண பெரிய விளக்குகள் வாஸி என்ற பெயருள்ள விளக்குகள்—கீழிறங்கும் டிகிரியைக் காட்ட உதவிபுரியும் விளக்குகள் பளீரென்று எரிந்தன.

''டவர்...கஜராஜ்''—மறுபடி பைலட் குரல் கேட்டது.

''கோ அஹெட்.''

'ஆன் ..பைனல் அப்ரோச்.''

கிழக்கே மலைக்குப் பக்கத்தில் விமானம் தெரிந்தது.

ஸ்டீபன் எழுந்து நின்றான். விமான தளத்தைச் சுற்றிப்பார்த்தான். மெள்ளப் பொழுது விடிந்து மங்கலாய் ஒரு வெளிச்சம் வந்து கொண்டிருந்தது. தொடர்ச்சியான நீல விளக்குகள் சற்று நிறமிழந்தன. வெள்ளை விளக்குகள் எரிந்து—விமான ஓடுபாதை காட்டிற்று. யாரோ ஆட்கள் பத்துப்பேர் புல்வெளியில் நடந்துகொண்டிருந்தார்கள். தலையில் துணி போர்த்திக் கையில் தூக்கு டிபன் பாக்ஸுமாய் மெள்ள மேற்கே போய்க் கொண்டிருந்தார்கள்.

புல் வெட்டுகிற ஆட்கள். கான்கிரீட் ஓடுபாதை தவிர மற்ற இடத்தில் முளைக்கும் புற்களைச் செதுக்குவார்கள்.

விமானம் சர்ச் லைட் போட்டது. மலையை நெருங்கிற்று. முன்சக்கரங்கள் விடுபட்டு விறைப்பாய்க் கீழே நின்றன. தரைக்குச் சமமாய் வைத்துப் படிப்படியாய்—

பத்தடி பத்தடியாய்க் கீழே இறங்குவது உணர முடிந்தது. இன்னும் பத்து செகண்டில் தரை தொட்டுவிடும்.

''ஹலோ தட்...?''—திடீரென்று குரல் அலறிற்று. ஸ்டீபன் நிமிர்ந்திட்டான். தரையிலிருந்து முப்பதடி உயரத்துக்கு வந்துவிட்ட விமானம் அப்படியேமேலே போயிற்று.

''ஹலோ ஈஸ் தட் இடியட் கிராஸிங் த ரன்வே?''—மறுபடி பைலட் குரல் அதட்ட, ஸ்டீபன் பைனாகுலரைக் கண்ணில் பொருத்தி ரன்வே பார்த்தான்.

கையில்...பதினெட்டு வயசுப் பையன் கையில் புல் வெட்டும் கத்தி எடுத்துத் தூக்கிப் பிடித்தபடி சிமெண்ட் தளத்தில்ஏதோ கத்திக்கொண்டிருந்தான். விமானம்வெகு உயரம் போய்விட்டது

''டாய், போடா வெளியே.'' ஸ்டீபன் பைத்தியம் போல் பையனை நோக்கிக்கூவினான். யாரோ பையனைப் பிடித்து இழுக்க பையன் திமிறுவது தெரிந்தது.

''மிஸ் அப்ரோச்...மிஸ் அப்ரோச்.''

சகலருக்கும் இந்நேரம் தெரிந்திருக்கும். பசுபதி அலறினார்...''என்னடா...என்னடா. ஏன் ஏறிட்டான்?''

''செக்யூரிடி செக்யூரிடி...''-போன்எடுத்துபட்டனைப் படபடவென்று ஸ்டீபன் தட்டினான்.

''யெஸ்...செக்யூரிடி...''

''டவர்லேர்ந்து ஸ்டீபன் பேசறேன். எவனோ புல் வெட்டறவன் ரன்வேல கத்தி வெச்சுக்கிட்டு ஆடறான். ப்ளேன் மிஸ் அப்ரோச் ஆயிடுச்சு...''

ஒரே நிமிடத்தில் ஜீப் ஒன்று ரன்வே நோக்கி சிவப்பு வெளிச்சம் சிதறிச் சிதறிப் பறக்க சைரன் ஒலியோடு ஓடிற்று ஓடிக்கொண்டே உள்ளே போக அனுமதி கேட்டது. ஸ்டீபன் அனுமதி தர ரன்வேக்குத் திரும்பிற்று.

அந்த ஆட்கள் அசையாது நின்றார்கள்.

விமானம் பனி மூட்டத்தில் மறைந்து போயிற்று.

ஸ்டீபன் விரல் பின்னி ரன்வேயைப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த விமான நிலையத்தில் பல பகுதிகளில் வேலை செய்பவர்கள் டவருக்கு ஓடி வந்தார்கள். ''ஏன், ஏன்?'' என்று கேட்டார்கள். ஸ்டீபன் மனோகரன் அந்தக் கூட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மெள்ள கதிர் கிளம்பி நகரில் தன் அன்றைய தடத்தைப் பதித்தது

2

ஜீப். ரன்வேயில் சீறலுடன் ஓடி அந்தக் கூட்டத்துக்கு அருகே போய்க் கிறீச்சிட்டு நின்றது. வளைந்து புல்வெளியில் ஒதுங்கிற்று.

முன்னும் பின்னுமாய் ஆறு போலீஸ் ஆட்கள் இறங்கினார்கள். கைக்குக் கிடைத்தவர்களைப் பற்றிக்கொண்டு பளீர் பளீரென்று கன்னத்தில் அடித்தார்கள்.

''நாங்க இல்லீங்க...நாங்க இல்லீங்க''—கூட்டம் அலறிற்று. கைகளைத் தலைக்குமேல் மறைத்துக் கொண்டு அடி தாங்கிற்று.

''யாரு நடுவுல ஓடினவன்? யாரு அந்தப் பேமானி?''

''இவன் தாங்க!''—சுலபமாய் அவனைக் காட்டிக் கொடுத்தார்கள்.

முழங்கால்களுக்கு இடையே தலையைப் பொதித்து, இரண்டு கைகளையும் தலையில் பொத்தி, பாதங்களுக்கு

இடையே இட்லிப் பொட்டலம் வைத்துக் கொண்டிருந்த இளைஞன் நிமிர்ந்தான்.

ஒரு வலிமையான இரும்புக் கை கொத்தாய் அவன் முடி பிடித்துத் தூக்கிற்று. நிற்க வைத்தது. பளீரென்று இடது கன்னத்தில் ஓர் அறை விழுந்தது. சின்னராசு வலது புறம் சரிந்தான். சரிந்த வேகத்தில் நிமிர்ந்தபோது நெஞ்சில் விழ வேண்டிய பூட்ஸ் உதை வாயில் விழுந்தது மறுபடி மல்லாக்கச் சரிந்தான். உதட்டில் ரத்தம் கொப்பளித்தது.

"அடிக்காதீங்கய்யா... அடிக்காதீங்கய்யா... அறியாத பையன்யா!"—புல் லெட்டுகிற ஆட்களில் வயதானவன், போலீஸார் கை பிடித்துக் கெஞ்சினான்.

"இருபத்துமூணு நாற்பத்தொண்ணு... பையனைத் தூக்கி ஜீப்ல போடு. மத்த ஆட்களை வெளியே ஓட்டிக்கிட்டு வா. ஒருத்தனையும் நகரவிடாதே. டிரைலர், டவரைக் கேளுங்கய்யா—ரன்வே க்ராஸ் பண்ணலாமானு?"

"டவர்...திஸ் இஸ் செக்யூரிடி ஜீப்! ரன்வே க்ராஸ் பண்ணலாமா...?"

"க்ளியர்...சீக்ரம் வாங்க!"

பையனைக் கொத்தாய்த் தூக்கிப் போட்டார்கள். சின்னராசு, துண்டால் வாய் பொத்திக் கொண்டான். எடுத்துத் தன் ரத்தம் பார்த்தான், அழுதான். உதடு கிழிந்து புஸ்புஸ்வென்று வீங்கத் துவங்கியது.

வண்டி கிளம்பிற்று.

"உன் ஊர் எதுடா? பேர் என்ன உனக்கு?"

"ஐயோ, என் இட்லிப் பொட்டலம்...இட்லிப் பொட்டலம்"—சின்னராசு காயம் மறந்துவிட்டு அலறினான்.

"இட்லிப் பொட்டலமா...? எதுடா...ஊரா, பேரா?"

"என் இட்லிப் பொட்டலம்... லழில வட்டேன் என் இட்லிப் பொட்டலம்..." ஓடுகிற வண்டியில் இறங்க முயற்சித்தவனை அழுத்திக் கொண்டார்கள். ஜீப் ரன்வேயில் ஓடி 'டாக்ஸிவே' என்கிற பக்கப் பாதையில் திரும்பி ஏபரன் என்கிற விமானம் நிற்கும் தளத்தில் புகுந்து, வளைந்த தகடுகளுக்கப்பால் நுழைந்து ஏர்போர்ட் கட்டடத்தின் முன் பக்கம் வந்தது

ஸ்டீயரிங் எதிரே உள்ள ரேடியோவைப் பகபதியின் மீட்டருக்குத் திருப்பினான் ராடார் பகபதிநாதன் விமான பைலட்டோடு பேசிக் கொண்டிருந்தார்.

"டேக் ரைட் டர்ன் அண்ட்என்ட்டர் இன் பௌண்ட் என்று கூவிக் கொண்டிருந்தார்.

"எங்கே சார் போயிட்டான் கஜராஜ்?"

"திருவள்ளூர் தாண்டிட்டான்... செம வெறுப்புல இருக்கான். வந்து உன்னை மிதிக்கப் போறான், இன் பௌண்டுக்கு வரான். வாங்கிக்கிறியா...?"

"கஜராஜ்... டவர்"— ஸ்டீயரிங் விமானத்தைத் தொடர்பு கொண்டான்.

"டவர்... கஜராஜ்! என்ன நிலைமை இப்போ...?"

விமானம் தரையைத் தொட சிக்னல் கிடைத்தது.

சிறிது நேரம் மௌனம்.

"டவர்...கஜராஜ்;"— விமானம் மறுபடி குரல் கொடுத்தது.

"பிரச்னை எதுவுமில்லை... இறங்குங்க..."—ஸ்டீயரிங் காத்திருந்தான்.

மறுபடி மலையுச்சியில் வட்டமடித்து விமானம் இறங்குவது தெரிந்தது.

இடையே இட்லிப் பொட்டலம் லைத்துக் கொண்டிருந்த
இனைலுன் திமிர்த்தான்.
ஒரு வலிமையான இரும்புக் கை கொத்தாய் அவன்
முடி பிடித்துத் தூக்கிற்று. நிற்க லைத்தது. பளீரென்று
இடது கன்னத்தில் ஓர் அறை விழுந்தது. சின்னராசு
லது புறம் சரிந்தான். சரிந்த வேகத்தில் நிமிர்ந்தபோது
தெஞ்சில் விழ வேண்டிய பூட்ஸ் உதை வாயில் விழுந்தது
மறுபடி மல்லாக்கச் சரிந்தான். உதட்டில் ரத்தம் கொப்
பளித்தது.

''அடிக்காதீங்கய்யா... அடிக்காதிங்கய்யா... அறியாத
பையன்யா!''—புல் வெட்டுகிற ஆட்களில் வயதானவன்,
போலீஸார் கை பிடித்துக் கெஞ்சினான்.

''ஒருபத்துமூணு நாற்பத்தொண்ணு... பையனைத்
தூக்கி ஜீப்ல போடு. மத்த ஆட்களை வெளியே ஓட்டிக்
கிட்டு வா. ஒருத்தனையும் நகரவிடாதே. டிரைவர்,
டவரைக் கேளுங்கய்யா—ரன்வே க்ராஸ் பண்ண
லாமானு?''

''டவர்...நில் இஸ் செக்யூரிடி ஜீப்! ரன்வே க்ராஸ்
பண்ணலாமா...?''

''க்ளியர்...சீக்ரம் வாங்க!''

பையனைக் கொத்தாய்த் தூக்கிப் போட்டார்கள்.
சின்னராசு, துண்டால் வாய் பொத்திக் கொண்டான்.
எடுத்துத் தன் ரத்தம் பார்த்தான், அழுதான். உதடு
இழிந்து புஸுபுஸுவென்று வீங்கத் துவங்கியது.

வண்டி கிளம்பிற்று.

'உன் ஊர் எதுடா? பேர் என்ன உனக்கு?''

''ஐயோ, என் இட்லிப் பொட்டலம்...இட்லிப்
பொட்டலம்''—சின்னராசு காயம் மறந்துவிட்டு அலறி
னான்.

''இட்லிப் பொட்டலமா...? எதுடா...ஊரா, பேரா?''

''என் இட்லிப் பொட்டலம்... லழில வட்டேல் என்
இட்லிப் பொட்டலம்...'' ஓடுகிற வண்டியில் இறங்க
முயற்சித்தவனை அழுத்திக் கொண்டார்கள். ஜீப் ரன்வே
யில் ஓடி 'டாக்ஸிவே' என்கிற பக்கப் பாதையில் திரும்பி
ஏபரன் என்கிற விமானம் நிற்கும் தளத்தில் புகுந்து,
வளைந்த தகடுகளுக்கப்பால் நுழைந்து ஏர்போர்ட்
கட்டடத்தின் முன் பக்கம் வந்தது

ஸ்டீபன் எதிரே உள்ள ரேடியோவைப் பகபதியின்
மீட்டருக்குத் திருப்பினான் ராடார் பகபதிநாதன்
விமான பைலட்டோடு பேசிக் கொண்டிருந்தார்.

''டேக் ரைட் டர்ன் அண்ட்என்ட்டர் இன் பௌண்ட்
என்று கூவிக் கொண்டிருந்தார்.

''எங்கே சார் போயிட்டான் கஜராஜ்?''

''திருவள்ளூர் தாண்டிட்டான்... செம லெறுப்புல
இருக்கான். வந்து உன்னை மிதிக்கப் போறான், இன்
பௌண்டுக்கு வரான் வாங்கிக்கிறியா...?''

''கஜராஜ்... டவர்''— ஸ்டீபன் விமானத்தைத்
தொடர்பு கொண்டான்.

''டவர்... கஜராஜ்! என்ன நிலைமை இப்போ...?''

விமானம் தரையைத் தொட சிக்னல் கிடைத்தது.

சிறிது நேரம் மௌனம்.

''டவர்...கஜராஜ்;''— விமானம் மறுபடி குரல்
கொடுத்தது.

''பிரச்னை எதுவுமில்லை... இறங்குங்க...''—ஸ்டீபன்
காத்திருந்தான்.

மறுபடி மலையுச்சியில் வட்டமடித்து விமானம்
இறங்குவது தெரிந்தது.

வெயில் பளபளத்தது. வழக்கமாய் வரும் மெல்லிய புகை இன்ஜினிலிருந்து வருவது புரிந்தது.

சக்கரங்கள் விறைப்பாயின. இறக்கையிலுள்ள நகடுகள் மேலே மடிக்கப்பட்டு ஒரு பெரும் கழுகு இரைக்கு அருகே நிதானமாய் வருவதுபோல் விமானம் மெள்ளக் கவனத்துடன் கீழிறங்கியது. இன்னும் கீழிறங்கியது. சக்கரங்கள் கிறீச்சிட்டுத் தரை தொட்டன. ஓராய்வில் பெரும்புகை எழுந்தது. இன்ஜின் உடனே வேகத்தில் சுழலது சத்தத்தில் உணர முடிந்தது. மெள்ள மூக்குப் பகுதிச் சக்கரம் தரை தொட்டது. எதிர்க் காற்றைக் கிழித்துக் கொண்டு விமானம் தரையில் ஓடி ஒரு தனத்தில் எல்லை வரை சென்றது.

''கஜராஜ்... டவர்!''— ஸ்டீபன் குரல் கொடுத்தான்.

''கோ அஹெட்''—விமானி பதில் இறுத்தான்.

''டச் டௌன் ஸீரோ ஸீரோ ஒன் ஒன் ஃபைவ்...பேக் ட்ராக் ஆன் ஸீரோ ஸெவன் ஆல்பா டூ ஆல்பா த்ரீ...பே எய்ட் ''

அவர்கள் பாஷையில் பேசிக் கொண்டார்கள்!

விமானம் திரும்பியது. நீல விளக்குகள் எரியும் பக்கப் பாதையில் நுழைந்தது. கோ கொடுத்த ஒரு பொம்மை போல் பாதையில் போடப்பட்டிருந்த மஞ்சள் கோட்டை மூக்குப் பக்கச் சக்கரம் தொட்டபடி மெள்ள ஊர்ந்து வந்தது. டவருக்கு எதிரேவந்து திரும்பியது. மஞ்சள்கோடு முடிந்து பெரிய வட்டத்தில் எட்டு என்று எழுதப்பட்ட இ–த்தில் மூக்கு நேராய் வர நின்றது.

''டவர்...கஜராஜ் ''—மறுபடி குரல் கேட்டது.

''கோ அஹெட்!'' ஸ்டீபன் பதில் குரல் கொடுத்தான்

''வாட்ஸ் யுவர் நேம்?''—கேள்வி வந்தது.

இது வழக்கமில்லை. டவர்தான் முக்கியமே ஒழிய ஆன் முக்கியமில்லை. யார் இறங்க உத்தரவு கொடுக்கிறார்கள் என்பது விமானிக்கு அவசியமேயில்லை. உத்தரவுதான், இறங்கும் வழிமுறைதான் முக்கியமேஒழிய நபர் தெரிய வேண்டிய அவசியமில்லை.

இன்று பெயர் கேட்கிறார்கள்.

''ஸ்டீபன் மனோகரன் இஸ்ரேல்.''

''தான் விங் கமாண்டர் குப்தா. உன்னை நான் சந்திக்க வேண்டும். நோட்டம் ஆபீஸில் என்னைச் சந்திக்கவும்.''

நோட்டம் என்பது 'நோட்டீஸ் ஃபார் ஏர்மென்' என்பதன் சுருக்கம். விமான நிலைய அதிகாரிகளும் விமானியும் சந்திக்கும் இடம்... விமானம் கிளம்புமுன் எல்லா விமானியும் நோட்டம் வர வேண்டும். எங்கே போகிறேன், என்ன வகை விமானம் விமான எண் என்ன, எத்தனை உயரத்தில் பறக்கப்போகிறேன், எந்தப்பாதையில் போகப் போகிறேன், பயணிகள் எத்தனை என்றெல்லாம் எழுதிக் கொடுத்துவிட்டுப் போக வேண்டும். தினசரி பம்பாய், கல்கத்தா, டில்லி போனாலும் இந்த எழுத்து வேலை நிச்சயம் நடக்க வேண்டும்.

குப்தா நோட்டம் வரச் சொல்வதற்கு அர்த்தம், ரிப்போர்ட் செய்யப் போகிறான் மிலிட்டரிக்காரன் மிஸ் அப்ரோச்சை— விமானம் இறங்கமுடியாமல் மறுபடி மேலேறியதைச் சாதாரணமாய் விடமாட்டான்.

ஏழு வருட சர்வீஸுக்குப் பிறகு இப்போது ஒரு ரிப்போர்ட்; ஒரு விசாரணை. அதற்குப்பதில் சமாதானம், தண்டனை எல்லாம் நடக்கும்.

ஸ்டீபன் பரங்கிமலைப் பக்கம் பார்த்தான்.

''மாதா!'' — மறுபடி-சிலுவையிட்டுக் கொண்டான். ''ஆண்டவரே... என்னை மன்னியும். நான் செய்யாத

லையில் பனபனத்தது. வழக்கமாய் வரும் மெல்லிய புகை இன்ஜினிலிருந்து வருவது புரிந்தது.

சக்கரங்கள் விறைப்பாயின. இறக்கையிலுள்ள தகடுகள் கீழே மடிக்கப்பட்டு ஒரு பெரும் கழுகு இரைக்கு அருகே நிதானமாய் வருவதுபோல் விமானம் மெள்ளக் கவனத்துடன் கீழிறங்கியது. இன்னும் கீழிறங்கியது. சக்கரங்கள் கிறீச்சிட்டுத் தரை தொட்டன. உராய்வில் பெரும்புகை எழுந்தது. இன்ஜின் உடனே வேறு கதியில் சுழலது சத்தத்தில் உரை முடிந்தது. மெள்ள மூக்குப் பகுதிச் சக்கரம் தரை தொட்டது. எதிர்க் காற்றைக் கிழித்துக் கொண்டு விமானம் தரையில் ஓடி ஒரு தளத்தில் எல்லை வரை சென்றது.

''கஜராஜ்... டவர்!''— ஸ்டீபன் குரல் கொடுத்தான்.

''கோ அஹெட்''—விமானி பதில் இறுத்தான்.

''டச் டௌன் ஸீரோ ஸீரோ ஒன் ஒன் ஃபைவ்...பேக் ட்ராக் ஆன் ஸீரோ ஸெவன் ஆல்பா டூ ஆல்பா த்ரீ...பே எய்ட் ''

அவர்கள் பாஷையில் பேசிக் கொண்டார்கள்!

விமானம் திரும்பியது. நீல விளக்குகள் எரியும் பக்கப் பாதையில் நுழைந்தது. கீ கொடுத்த ஒரு பொம்மை போல் பாதையில் போடப்பட்டிருந்த மஞ்சள் கோட்டை மூக்குப் பக்கச் சக்கரம் தொட்டபடி மெள்ள ஊர்ந்து வந்தது. டவருக்கு எதிரேவந்து திரும்பியது. மஞ்சள்கோடு முடிந்து பெரிய வட்டத்தில் எட்டு என்று எழுதப்பட்ட இ—ந்தில் மூக்கு நேராய் வர நின்றது.

''டவர்...கஜராஜ் ''—மறுபடி குரல் கேட்டது.

''கோ அஹெட்!'' ஸ்டீபன் பதில் குரல் கொடுத்தான்

''வாட்ஸ் யுவர் நேம்?''—கேள்வி வந்தது.

இது வழக்கமில்லை. டவர்தான் முக்கியமே ஒழிய ஆள் முக்கியமில்லை. யார் இறங்க உத்தரவு கொடுக்கிறார்கள் என்பது விமானிக்கு அவசியமேயில்லை. உத்தரவுதான், இறங்கும் வழிமுறைதான் முக்கியமே ஒழிய நபர் தெரிய வேண்டிய அவசியமில்லை.

இன்று பெயர் கேட்கிறார்கள்.

''ஸ்டீபன் மனோகரன் இஸ்ரேல்.''

''தான் விங் கமாண்டர் குப்தா. உன்னை நான் சந்திக்க வேண்டும். நோட்டம் ஆபீஸில் என்னைச் சந்திக்கவும்.''

நோட்டம் என்பது 'நோட்டீஸ் ஃபார் ஏர்மென்' என்பதன் சுருக்கம். விமான நிலைய அதிகாரிகளும் விமானியும் சந்திக்கும் இடம்... விமானம் கிளம்புமுன் எல்லா விமானியும் நோட்டம் வர வேண்டும். எங்கே போகிறேன், என்ன வகை விமானம் விமான எண் என்ன, எத்தனை உயரத்தில் பறக்கப்போகிறேன், எந்தப்பாதையில் போகப் போகிறேன், பயணிகள் எத்தனை என்றெல்லாம் எழுதிக் கொடுத்துவிட்டுப் போக வேண்டும். தினசரி பம்பாய், கல்கத்தா, டில்லி போனாலும் இந்த எழுத்து வேலை நிச்சயம் நடக்க வேண்டும்.

குப்தா நோட்டம் வரச் சொல்வதற்கு அர்த்தம், ரிப்போர்ட் செய்யப் போகிறான் மிலிட்டரிக்காரன் மிஸ் அப்ரோச்சை— விமானம் இறங்குமுடியாமல் மறுபடி மேலேறியதைச் சாதாரணமாய் விடமாட்டான்.

ஏழு வருட சர்வீஸுக்குப் பிறகு இப்போது ஒரு ரிப்போர்ட்; ஒரு விசாரணை. அதற்குப்பதில் சமாதானம், தண்டனை எல்லாம் நடக்கும்.

ஸ்டீபன் பரங்கிமலைப் பக்கம் பார்த்தான்.

''மாதா!''— மறுபடி-சிலுவையிட்டுக் கொண்டான். ''ஆண்டவரே... என்னை மன்னியும். நான் செய்யாத

நவுறுக்காக என்னைத் தண்டித்து விடாதேயும். கருணை உள்ளலே...என் மீது இரக்கம் கொள்ளும்!'— மனசுக்குள் பிரார்த்தனை ஓடியது.

ஸ்டீபன் மனிதனைக் கெஞ்சுவதற்குமுன்பாக, மனசுள் மண்டியிட்டுக் கடவுளைக் கெஞ்சினான்.

''மெட்ராஸ் டவர்... மெட்ராஸ் டவர்...திஸ் இஸ் ஃப்ளைட் ஒன் செவன் .'.பைல்...!''—பம்பாய் விமானம் கத்திற்று.

''ஒன் செவன் .'.பைல்...டவர்! குட்மார்னிங்!''

''குட்மார்னிங்! ரிக்வெஸ்ட் வெதர்!''— விமானம் கேட்டது.

ஸ்டீபன் இயந்திரமாய்ப் பதில் சொன்னான்.

லாண்டிங் பொஸிஷன் கேட்டது. பைனாகுலர் எடுத்து ரன்வேயைப் பார்த்தான். சுத்தமாய் இருந்தது.

இறங்க வேண்டிய இடம் சொன்னான். வானி விளக்குகளை ஒருமுறை அணைத்துப் போட்டான். வலது புற எல்லையில் பம்பாய் விமானம் மலையுச்சியில் தெரிந்தது. கீழிறங்கியது புகை பறக்கத் தரை தொட்டது. ஓடிற்று, மூக்குச் சக்கரம் நிதானமாய்த் தரையிறங்கிற்று. ரன்வே கடைசிக்குபோய் பேக் ட்ராக் என்கிற முழுவட்டம் அடித்துத் திரும்பி ஒரு பாதைவிட்டு விலகி, பக்கப்பாதைக்கு நுழைந்து புதிய டெர்மினல் நோக்கிப்போயிற்று.

ட்யூட்டி இதோடு முடிகிறது.

ஆறரை மணிக்கு வைத்தியநாதன் வந்து விடுவான்.

''என்ன கண்ணா... சொதப்பிட்டியாமே! மிஸ் அப்ரோச்சா...? மிலிட்டரிக்காரனா...கிழிஞ்சிடும் போ. ரன்வே பார்க்காமயா விமானம் இறங்க உத்தரவு குடுத்தே? குத்திக் கிளறப்போறான்.''

டவர் படிக்கு வைத்தி வரும்போதே சொல்லி விடுவார்கள். 'கஜராஜ் மிஸ் அப்ரோச்... ஸ்டீபன் சொதப்பிட்டான்' என்று பரப்பிவிடுவார்கள்.

பிளாஸ்டிக் சார்ட்டை எடுத்துப் பார்த்தான். இனி ஏழரைக்குத்தான் அடுத்த விமானம் வரும் எட்டு மணிக்கு ஒரு விமானம் புறப்படும்.

வைத்தியைக் காணோம். ட்யூட்டி தொடருமா தெரியவில்லை

தடாரென்று பின்புறக் கதவு திறந்தது. ''ஸ்டீபன், நோட்டம்ல கூப்பிடறாங்க. பெரிய புடுங்கி மாதிரி கத்தறான் கஜராஜ் டைலட். க்ளியர் ஃபார் லாண்டிங்னு சொன்ன பிறகு ரன்வேல ஆள் போச்சுன்னா நாமா பொறுப்பு? அடிச்சு இறக்க வேண்டியதுதானே...டவர்ல உட்கார்ந்து ஆளு, நாய், பூனை ஓட்ட முடியுமா? நானும் பதிலுக்குக் கத்திட்டேன். நீ யாரு...?'ன்னு கேட்டான் 'நான் டவர் ஆளு...உன்னால முடிஞ்சது பார்த்துக்க'ன்னுட்டேன்.''

வைத்தி வாதாடியிருக்கிறான். அதான் லேட்.

''தாங்க்யூ வைத்தி''—ஸ்டீபன் வைத்தியின் தோள் தொட்டான்.

''நீ பதட்டப்படாதே ஸ்டீபன் தப்பு உன்னோடது இல்லை...'செக்யூரிடி என்னா பண்ணிக்கிட்டிருந்தான்?'ன்னு கேளு. பன்னிரண்டு பேருக்கு பாஸ் போட்டு உள்ளே புல்லெட்ட அனுப்பியிருக்கான். அவன் நடு ரன்வேல நின்னு கத்தினா டவரைத் திட்டுவியா...டவரா பாஸ் குடுத்தது.? டவரா நடுவுல தள்ளிக் கைகாட்டச் சொன்னது? 'புல்லெட்டறவன் கூட ஏன் செக்யூரிடி போகலே?'ன்னு கேளு''

ஸ்டீபன் மெள்ளச் சுழல் படிக்கட்டில் இறங்கினான். அறுபது படிகள் இறங்கி நோட்டம் ஆபீஸுக்குப் போனான். வாசலில் நின்றான். உள்ளே குரல் உரக்கக் கேட்டது.

"புல்லெலிமிலிருந்து ரன்வேக்கு ஒரு ஆள் ஓடி வரப் பத்து வினாடிகள்தான் ஆகும். டவர் இதை எப்படித் தடுக்க முடியும்? டவர் உன்னைக் கவனிக்குமா... தளத்தைக் கவனிக்குமா?"

"ரெண்டையும்."

"வாஸ்தவம் ரன்வே சுத்தமாய்இருந்தது. திடீரென்று ஆள் புகுந்தால் யார் பொறுப்பு? புல் கத்தியால் ஏரோப்ளேன் என்ன ஆகும் ஆள்தான் அடிபட்டுச் செத்துப் போவான் அல்லவாதானே... உன்னை யார் குற்றம் சொல்வார்கள்?"

"லந்து காக்பிட்டில் உட்கார்ந்து பார்...அப்போது தெரியும் அந்தப் பயம். அது கத்தியா மெஷின் கன்னாலு உனக்கும் சந்தேகம் வரும். அப்போது கிளி ஜோசியம் கேட்க முடியாது. மிஸ் அப்ரோச்தான் செய்ய முடியும். மறுபடி உயரக் கிளம்பித்தான் ஆகவேண்டும்."

"சரி, உன் பயம் புரிகிறது டவரை ஏன் திட்டுகிறாய்?"

"உன் தாயாரையா திட்டுவது? இந்த ஏர்போர்ட் போல ஒரு குப்பை ஏர்போர்ட் நான் பார்த்ததில்லை."

"வரம்பு மீறிப் பேசுகிறாய்."

"பேசுவேன் என்ன செய்வாய்?"

"நடவடிக்கை எடுக்கப்படும் உன் நடத்தை குறித்து ரிப்போர்ட் செய்யப்படும்."

"ரிப்போர்ட்டா .? நான் கொடுக்கறேன் ரிப்போர்ட்" டடாரென்று மேஜையில் அறையும் சத்தம் கேட்டது. பளீரென்று கதவு திறந்து ஒரு ஆள் ஸ்டீபன் தோளில் முட்டினான்.

"ஸாரி" —முட்டியவன் முணுமுணுத்தான்.

"உம்...பரவாயில்லை...நீங்க விங்க கமாண்டர் குப்தாவா?"

"யெஸ்"

"நான் ஸ்டீபன் மனோகரன் இஸ்ரேல்."

"யூ...யூ...இடியட்"—குப்தா கத்தினான். இன்னும் பதட்டம் குறையாமல் இருந்தான்.

"என்னோடு பேசவேண்டும் என்றீர்களே?"

"நான் எதற்குப் பேசவேண்டும்? என் ரிப்போர்ட் பேசும்"—ஷூக்கள் மொஸைக் தரையில் கிரீச்சிட, புயல் மாதிரி நடந்து போனான்.

நோட்டம் உள்ளே கருணாகரன் உட்கார்ந்திருந்தார்

"ஸ்டீபன், இது பெரிசாகும் போல இருக்கு. எதுக்கும் என்ன நடந்ததுனு எழுதிக் கொடுத்துட்டுப் போ...வைத்தி வந்துட்டானா?"

"வந்துட்டான். என்ன எழுதணும் சார்?

"எழுது...'புல் வெட்டறவன் உள்ளே பூந்துட்டான். அது என் தப்பு இல்லை, ஏர்போர்ட் செக்யூரிடியைக் கேளு'னு சொல்லு."

"சரியாயிடுமா சார்?"

"பார்ப்போம்."

ஸ்டீபன் எழுதிக் கருணாகரனிடம் கொடுத்துவிட்டு மறுபடி முதல் மாடியிலிருந்து இறங்கி லவுஞ்சுக்கு வந்தான். லவுஞ்ச் தாண்டி வாசலில் இறங்கினான்.

ஜீப் நின்று கொண்டிருந்தது. அருகே ஒரு பையனை உட்கார வைத்திருந்தார்கள் முகம் வீங்கி ரத்தம் உறைந்து கண்களில ஜலம் இறங்கி, துடைத்த கழுக்கோடு குத்திட்டு உட்கார்ந்திருந்தான். அவன் அருகே புல் வெட்டுகிற பெரிய கத்தி இருந்தது, ஸ்டீபனுக்குள்ளே கோபம் பொங்கியது.

காலங்கார்த்தால இந்தச் சனியன் புடிச்சவனால ஒரு வேதனை. ஏழு வருடங்கள் எந்தத் தவறும் நடக்காத உத்தியோகத்தில் ஒரு தவறு...தேவையில்லாத ஒருவிசாரணை கெட்ட பேச்சு.'

'மூடியைப் புடிச்சு ஒரு நெத்து நெத்தினா என்ன?'

''உன் பேர் என்னடா?'' ஸ்டீபன் பல் கடித்தபடி கேட்டான்.

''தின்...சு''—உப்பிச் சொதப்பியிருந்த உதடுகளை அவனால் பிரிக்க முடியவில்லை.

''சார்...டவருங்களா...?'' போலீஸ்காரர் மெல்ல சல்யூட் அடித்தார்.

''ஆமா... இவன்தான் குறுக்கே ஓடினவனா...? என்னைச் சாலடிக்கிறாங்க உள்ளே.''

''பேரு சின்னராசுலாம். இன்னிக்குத்தான் சேர்ந்தானாம் புல்லு வெட்ட ஒட்ட ஏரோப்ளேன் பார்த்ததும் லீரம் பொங்கிடுச்சு,''

''ஏன் கத்தி காட்டினானாம்?''

''கையில வெச்சிருந்திருக்கான் புல்லு வெட்ட... அதோட லாவேற்புக் கொடுத்தானாம். மிலிட்டரின்னா ரொம்ப இஷ்டமாம். மிலிட்டரி ஏரோப்ளேன்லுகூட வந்தவங்கசொன்னாங்களாம். வெற்றிவேல்லுலாவேற்றுக் கத்தினானாம். வேற ஒண்ணும் பண்ணலையாம்,''

''எந்த ஊர்டா உனக்கு?'

''மதுரை...மதுரைக்கு...''— திக்கித் திக்கி வாய் கூடாது பேச்சு வந்தது.

''மதுரையா...மதுரையில எங்கன?''

''தேனிப் பக்கம்.''

உள்ளே சில்லென்று ஓர் இதம் படர்ந்தது. தேனி—ஸ்டீபன் மனோகரனின் சொந்த ஊர்.

''தேனிப் பக்கம் எங்கடா?''

பையன் விழித்தான்.

''சொல்லு. எனக்கும் தேனிதான்.''

''ஐயா...''—பையன் காலில் விழுந்து அழுதான். ''போட்டுப் போட்டு அடிக்கறாங்க நான் தலைச்சன் புள்ளை. தலையில அடிக்காதிங்கன்னேன். தலையிலயே அடிக்கறாங்களே...''— உதடு கோண விகாரமாய்ப் பையன் அழ, ஸ்டீபன் உதடுகள் மலைமேல் இருக்கற மாதாவைக் கூப்பிட்டன.

''அழுவாத...அழுவாத...செய்தது தப்புதானே?''

''தப்புதாங்க.''

''ரண்டே உள்ளே வரலாமா?''

''வரக்கூடாதுங்க தப்புங்க.''

''அடிக்கமாட்டாங்க...நான் சொல்றேன்.''

''ஐயா...''—பையன் தரையில் விழுந்து கால்களைப் பற்றிக் கொண்டான். ''நான் ஊருக்குப் போயிடறேங்க. என்னை ஜெயில்ல அடைக்கவேணாம்னு சொல்லுங்க நான் ஜெயிலுக்குப் போனா எங்க அப்பாரு நாண்டுக்கிட்டுப் போயிடுவாருங்க.''

''காலை வுடு...காலை. வுட்றா...கான்ஸ்டபிள்...''

''சார்.''

''அடிக்கவேணாம்.''

''கைது பண்ணிட்டம் சார்.''

''சரி, அடிக்கவேணாம் செக்யூரிடி ஆபீஸர் யாரு?''

''டி.ஐ.ஜி சம்பத் சாருங்க. அல்லு வெளியூர் போயிருக்கறதால ஏ.ஸி.விசாரிப்பாரு.''

"ஏ.லி யாரு?"

"குணசேகரன் ஐயாங்க."

"வந்துட்டாரா?"

"போன் போட்டுச் சொல்லிட்டம்...வரேன்னாருங்க."

"எம் பேரு ஸ்டீபன் மனோகரன் டவர் ஆபீஸர். பையன் நம்மூர்...அடிக்க வேணாம். நான் சொல்றேன்,"

"ஐயா வந்துட்டாருங்க."

எதிரே முப்பத்தைந்து வயது மதிப்பில் உயரமாய், முழுக்கை வெள்ளைச் சட்டையும் நீல பாண்ட்டுமாய் பழுப்பு நிற ஷூக்களோடு ஒரு மனிதர் வந்தார்.

"என்ன ரங்கராஜு...என்ன ஆச்சு?"

"ப்ளேன் வர்றப்போ பையன் குறுக்கே பூந்துட்டான். ப்ளேன் தரை தொடாத மறுபடி மேலே போயிடுச்சு. ஐயா தாங்கடவர் ஆபீஸர்...பேரு...என்ன சொன்னீங்க ஐயா. ஸ்டீபனா?"

"மிஸ்டர் குணசேகரன்...நான் ஸ்டீபன் மனோகரன் இஸ்ரேல். டவர் ஆபீஸர்"—கை குலுக்கினார்கள்.

"என்ன மிஸ் அப்ரோச்சா...எந்த ப்ளேன்"

"கஜராஜ்...மிலிட்டரி ப்ளேன்."

"அடக் கடவுளே...ரொம்ப நொய்யு நொய்யுன்னு வாங்களே..."

"கெட்ட வார்த்தையில திட்டிட்டுப் போறான். பெரிய ரிப்போர்ட் எழுதறான்."

"யார்மேலே?"

"உங்கமேல...என்மேல... மொத்தமா ஏர்போட்ல எல்லாரையும் கெட்ட வார்த்தையில திட்டறான்."

"புல்லெட்ட பாஸ் தொடுன்னாங்க...தரோம். இவன் உள்ளே ஓடுவான்னு யார் கண்டது

"கூட செக்யூரிடி ஆள் போகவேணாமா?"

"ஸ்டீபன், இவனை உள்ளே விட்டது எங்க டிபார்ட்மெண்ட். ஆனா அனுப்பச் சொன்னது யார்...? இண்டர் நேஷனல் ஏர்போர்ட் அத்தாரிடி. புல் லெட்ட காண்ட் ராக்ட் கொடுத்த அத்தாரிடி. இவன்கூட நான் போகணுமா அவன் போகணுமா?"

"எனக்குத் தெரியாது சார்"

"வரட்டும். விசாரணை வரட்டும் யாருலே நீ...?" பையனைப் பார்த்து அதட்டினார். "அடிச்சிட்டீங்களா... உதடு வீங்கியிருக்கு. ரங்கராஜு, யாரு அடிச்சது...?"

"சப்-இன்ஸ்பெக்டர் சார்."

"எதுக்குய்யா அடிக்கறீங்க. இவனை முதலுதவிக்குக் கூட்டிட்டுப் போய்க் காயம் சுத்தம் பண்ணி மருந்து போட்டு என் ரூமுக்குக் கொண்டா...சாப்பிட்டியாடா"?

"என் இட்லிப் பொட்டலம் மைதானத்துலயே வுட்டேங்க."

"இட்லிப் பொட்டலமா? சண்டாளா, இங்கே நாலு பேர் சோத்துக்கு வேட்டு வெச்சுட்டே. இட்லிப் பொட்டலமா கேக்கறே ரங்கராஜு, மருந்து போட்ட பிறகு பையனுக்கு ஏதாவது கான்டீன்ல வாங்கிக் கொடு"—பையிலிருந்து ஐந்து ரூபாய்த் தான் ஒன்றை உருவிக் கொடுத்தார்... "வாங்க ஸ்டீபன்...என் ரூமுக்கு வாங்க. பேசுவோம்."

"பையனை விட்டுருவீங்களா?"

"விடமாட்டோம்."

"லாக்கப்பா?"

"என்ன லாக்கப்பு, ரெண்டு நாள் இங்கேயே செக்யூரிடி பக்கத்துல உட்கார வெச்சிருப்போம் விசாரணை முடிஞ்சதும் வுட்டுருவோம். இவன் பாவம்... படிப்பறிவு இல்லா

"ஏ.லி யாரு?"

"குணசேகரன் ஐயாங்க."

"வந்துட்டாரா?"

"போன் போட்டுச் சொல்லிட்டம்...வரேன்னாருங்க."

"எம் பேரு ஸ்டீபன் மனோகரன் டவர் ஆபீஸர். பையன் நம்மூர்...அடிக்க வேணாம். நான் சொல்றேன்,"

"ஐயா வந்துட்டாருங்க."

எதிரே முப்பத்தைந்து வயது மதிப்பில் உயரமாய், முழுக்கை வெள்ளைச் சட்டையும் நீல பாண்ட்டுமாய் பழுப்பு நிற ஷூக்களோடு ஒரு மனிதர் வந்தார்.

"என்ன ரங்கராஜு...என்ன ஆச்சு?"

"ப்ளேன் வர்றப்போ பையன் குறுக்கே பூந்துட்டான். ப்ளேன் தரை தொடாத மறுபடி மேலே போயிடுச்சு. ஐயா தாங்க டவர் ஆபீஸர்...பேரு...என்ன சொன்னீங்க ஐயா. ஸ்டீபனா?"

"மிஸ்டர் குணசேகரன்...நான் ஸ்டீபன் மனோகரன் இஸ்ரேல். டவர் ஆபீஸர்"—கை குலுக்கினார்கள்.

"என்ன மிஸ் அப்ரோச்சா...எந்த ப்ளேன்"

"கஜராஜ்...மிலிட்டரி ப்ளேன்."

"அடக் கடவுளே...ரொம்ப நொய்யு நொய்யுன்னு வாங்களே..."

"கெட்ட வார்த்தையில திட்டிட்டுப் போறான். பெரிய ரிப்போர்ட் எழுதறான்."

"யார்மேலே?"

"உங்கமேல...என்மேல... மொத்தமா ஏர்போர்ட்ல எல்லாரையும் கெட்ட வார்த்தையில திட்டறான்."

"புல்லெட்ட பாஸ் கொடுன்னாங்க...தரோம். இவன் உள்ளே ஓடுவான்னு யார் கண்டது

"கூட செக்யூரிடி ஆள் போகவேணாமா?"

"ஸ்டீபன், இவனை உள்ளே விட்டது எங்க டிபார்ட்மெண்ட். ஆனா அனுப்பச் சொன்னது யார்...? இன்டர் நேஷனல் ஏர்போர்ட் அத்தாரிடி. புல் லெட்ட கான்ட் ராக்ட் கொடுத்த அத்தாரிடி. இவன்கூட நான் போகணுமா அவன் போகணுமா?"

"எனக்குத் தெரியாது சார்"

"வரட்டும் விசாரணை வரட்டும் யாருவே நீ...?" பையனைப் பார்த்து அதட்டினார். "அடிச்சிட்டீங்களா... உதடு வீங்கியிருக்கு. ரங்கராஜு, யாரு அடிச்சது...?"

"சப்-இன்ஸ்பெக்டர் சார்."

"எதுக்குய்யா அடிக்கிறீங்க. இவனை முதலுதவிக்குக் கூட்டிட்டுப் போய்க் காயம் சுத்தம் பண்ணி மருந்து போட்டு என் ரூமுக்குக் கொண்டா...சாப்பிட்டியாடா"?

"என் இட்லிப் பொட்டலம் மைதானத்துலயே வுட்டேங்க."

"இட்லிப் பொட்டலமா? சண்டாளா, இங்கே நாலு பேர் சோத்துக்கு லேட்டு வெச்சுட்டே. இட்லிப் பொட்டலமா கேக்கறே ரங்கராஜு, மருந்து போட்ட பிறகு பையனுக்கு ஏதாவது கான்டீன்ல வாங்கிக் கொடு"—பையிலிருந்து ஐந்து ரூபாய்த் தான் ஒன்றை உருவிக் கொடுத்தார்... "வாங்க ஸ்டீபன்...என் ரூமுக்கு வாங்க. பேசுவோம்."

"பையனை விட்டுருவீங்களா?"

"விடமாட்டோம்."

"லாக்கப்பா?"

"என்ன லாக்கப்பு, ரெண்டு நாள் இங்கேயே செக்யூரிடி பக்கத்துல உட்கார வெச்சிருப்போம் விசாரணை முடிஞ்சதும் வுட்டுருவோம். இவன் பாவம்... படிப்பறிவு இல்லா

தவன். இவனை அடிச்சு என்ன புண்ணியம்? எல்லாத் தப்பும் நமக்குள்ளே இருக்கு.''

''ஏர்போர்ட் அத்தாரிடி தப்புன்றீங்களா?''

''வேற?''

''அவங்க உங்களைச் சொல்றாங்க.''

''இப்படித்தாங்க. நீ தப்பு, நான் தப்புன்னு ஆயிரம் தப்பு நினம் நடக்குது. வரட்டும். வெளிச்சத்துக்கு வரட்டும்''

''பையன் எங்க ஊர் சார்.''

''அடடே...எந்த இடம்...?''

''தேனிகிட்ட கிராமம்.''

''உங்களுக்குத் தெரிஞ்சவனா?''

''இல்லை. இங்கதான் தெரிஞ்சுக்கிட்டேன்.''

ஏர்போர்ட்டின் மேற்குக் கோடித்தில் நடந்து மறுபடி படிகள் ஏறி லராண்டாக்கள் கடந்து குணசேகரன் தன் அறைக் கதவு திறந்தார்.

சுழல் நாற்காலியும், பெரிய கண்ணாடி டேபிளும், முதுகுக்குப் பின்னே ஜன்னலும் உள்ள அறை. ஜன்னல் திரைச்சீலை விலக்க உள்ளே வெளிச்சம் படர்ந்தது.

''உள்ளே வாங்க ஸ்டீபன்''

''ஏழு வருஷம் ஆச்சு ட்யூட்டில சேர்ந்து. இப்படி ஒரு இடம் இங்கே இருக்குன்னு எனக்குத் தெரியாது.''

''அப்படித்தான் போவது எல்லாம். உங்க இடம் எனக்குத்தெரியாது என் இடம் உங்களுக்குத் தெரியாது.''

''எனக்கு உங்க இடம் தெரியாத இருக்கலாம். செக்யூரிடி ஆபீஸருக்கு என் இடம் தெரியாத இருக்குமா... இருக்கலாமா?''

''இடம்னா ரூம் மட்டுமில்லை ஸ்டீபன். உங்களுக்கு என்னென்ன தொந்தரவு வரும்னு எனக்குத் தெரியணும்.

உங்களுக்குத்தொந்தரவு வருமுன்னே எனக்குத்தெரியணும் அதைத் தடுக்கற வழி. பலம் எனக்கு இருக்கணும்.''

'செக்யூரிடி பலம் இல்லேன்றீங்களா?''

''மூன்றரை சதுர மைல் பரப்பு. அதுல முக்கால் இடம் புல்லுக்காடு, ரெண்டு ஏர்போர்ட், ஒண்ணு டொமஸ்டிக்; இன்னொண்ணு இண்டர் நேஷனல் ஒரு ஃப்ளையிங்ஸ்கூல், ரெண்டு கார்கோ கட்டடம். பத்து ஆயில் டாங்க், கஸ்டம்ஸ், நாலு கேட், ஒரு பங்கர் இங்கே—இத்தனை பெரிய இடத்துல ஒரு ஈ, காக்கா நுழையக்கூடாதுன்னா ஒரு ஷிஃப்ட்டுக்கு நூத்தம்பது ஆளா மூணு ஷிப்ட்டுக்கு நானூத்தம்பது ஆள் வேணும். என்கிட்ட இருக்கறதெல்லாம் மொத்தமே இருநூத்திப் பத்து பேர். அதுல நாப்பத்தேழு பேர் லீவு''

''ஏங்க?''

''ஏர்போர்ட் ட்யூட்டி யாருக்கும் பிடிக்காதுங்க. ஸ்டேஷன் ட்யூட்டி மாதிரி இல்லை. பொறுப்பு அதிகம். வருமானம் கம்மி''

''ரயில்வேக்குத் தனியா போலீஸ் இருக்கிற மாதிரி ஏர்போர்ட்டுக்குத் தனி செக்யூரிடி போடக்கூடாதா?''

''போடலாம். போடலை ஆபீஸர் சென்ட்ரல் கவர்ன்மெண்ட். போலீஸ்காரன் லோகல் ஸ்டேட். என்னவோ குழப்படி...யாரு கேட்கறது?''

''அது மட்டுமில்லீங்க குணசேகரன். எங்களுடைய இடமும் குழப்பம்தான். ஏர்போர்ட்ல இருக்கிற எல்லா இன்ஸ்ட்ரூமெண்ட் மெயின்டனன்ஸ் இண்டர் நேஷனல் ஏர்போர்ட் அத்தாரிடி ஆனா டவர்ல, ஓயர்லெஸ்ல, ராடார்ல, லவுஞ்ச்ல வேலை செய்யறது நேஷனல் ஏர்போர்ட் ஆளுங்க. இதுதவிர இண்டியன் ஏர்லன்ஸ், ஏர் இண்டியா, யார்கிட்டேயும் ஒட்டாத இண்டியன். ஆயில், ஏரோப்ளேனுக்கு என்னெய் ஊத்த...ரொம்பக் கலவையான இடம் இது.''

''இது தவிர பாம் ஸ்குவாட்''

'அது உங்க சண்ட்ரோல் இல்லையா?''

''இல்லை. அவங்க மிலிட்டரி ஆளுங்க. இங்கேதனியா டெப்பூட் பண்ணியிருக்கான்.''

''அந்தப் பையனை ஒண்ணும் பண்ணவேண்டாம் குணசேகரன். அடிக்காதிங்க ஜாஸ்தி.''

'ரெக்கார்ட் ஆயிடுச்சு ஸ்டீபன். ஒரு உற்சாகத்துல கத்திட்டான். புரியுது. விசாரணை முடியறவரைக்கும் என் பாதுகாப்பு இருக்கட்டும். அடிக்க மாட்டோம்.''

வாயில் கிளிசரின் போட்டுத் துடைத்து, கண்ணுக்குக் கீழே வங்கிய அறைக்கு மருந்து போட்டு கான்ஸ்டபிள் ரங்கராஜ், பையனை அழைத்துக் கொண்டு வந்தான்

''இட்வ போயிடுச்சு... இட்லி போயிடுச்சு'ன்னே கூவறான் சார் சரியான காட்டானா இருக்கான்.''

''உங்களுக்கு எந்த ஊரு ரங்கராஜ்?''—குணசேகரன் கேட்டார்.

''தொழுப்பேடுங்க.''

''பட்டணத்துக்கு வந்தப்புறம் தானே பாண்ட் சட்டை போட ஆரம்பிச்சிங்க?''

''ஆமா சார்.''

''அப்புறம் அவனைக் 'காட்டான்'னு சொல்லு வானேன்? தம்பி...ஏண்டா ஏரோப்ளேன்கிட்ட கத்தி எடுத்து நீட்டிகிட்டு ஓடினே?''— குணசேகரன் பரிவுடன் கேட்டார்.

''அத்தினி கிட்ட ஏரோப்ளேன் பார்த்ததில்லீங்க, கத்தி தொட்டு அதைக் கும்பிடணும்னு தோணிச்சு ''

'ஏன்?''

''எங்க ஊர்ல ஏரோப்ளேன் மேலே பார்த்தா நாங்க மண்ணு வாரிப்போடுவோம்.''

''ஏன்?''

''ஒரு மரியாதைங்க.''

''ஏன் உன் ஊரை விட்டு வந்தே?''

''உழவர் கட்சில நான் மெம்பருங்க. கட்சிக் கூட்டம் பீச்சுல நடந்தது. லாரில வந்தேங்க. ஆளுக்கு இருவது ரூபா ஏர்போர்ட் வாசல்ல வெச்சுக் கொடுத்தாங்க. வாங்கிட்டு ரெண்டு நாள் வெளிய நின்னு ஏர்போர்ட் பார்த்தேன். துட்டு தீர்ந்துபோச்சு, 'புல்லு லெட்ட வர்றியா?'ன்னாங்க. பத்து ரூபாய்க்குச் சரினு, எட்டு இட்லி வாங்கிட்டு உள்ளே வந்தேங்க.''

''உனக்கு என்ன தொழிலு?''

''விவசாயம்...அஞ்சு காணி மல்லாட்டை அஞ்சு காணி நெல்லு போட்டிருக்கோமுங்க''

''உன் பேர் என்ன சொன்னே?''

''சின்னராசு?''

''உங்கப்பா பேரு?'

''பழனியப்பன்.''

''இதுல விலாசம் எழுது?''—பேப்பர் நீட்டினார்.

''இங்கிலீஷ்லியா...தமிழ்லியாங்க?''

''அடிசக்கை. இங்கிலீஷ் வேறயா...என்ன படிச் சிருக்கே?''

''எஸ். எஸ். எல். சி. பாஸுங்க,''

''ஏண்டா புல்லு லெட்ட வந்தே?''

''ஐயோ...நான் புல்லு லெட்டறத்துக்குனு வரலீங்க. கட்சிக் கூட்டத்துக்கு வந்தேன். குடுத்த காசு தீர்ந்து போச்சு, எட்டக்க நின்னுதானே ஏரோப்ளேன் பாத் துருக்கம்...புல்லு லெட்டக் கூப்புடறாங்களே... கிட்டக்க விமானம் பாக்கலாமேலுதாங்க வந்தேன்.''

''இவனை என்ன பண்றது?''—குணசேகரன் தலை யில் அடித்துக் கொண்டார்.

''என்னை ஜெயில்ல போட்றாதீங்க ஐயா. எங்க அப்பாரு நாண்டுக்கிட்டுச் செத்துருவாரு.''

''நீ பண்ண காரியத்துக்கு நாலு பேர் நாண்டுக்கிட்டுச் சாவப் போறாங்க. இவரைத் திட்றாங்க, நீ உள்ளே ஓடினதுக்கு. இவரு யாரு தெரியுமா...உங்க ஊர் ஆளு. தேனி,''

''சொன்னாருங்க.''

ஸ்டீபன் சிரித்தான்.

''சாப்பிட்டியாடா?''—கேட்டான்.

''டீ குடிச்சேங்க.''

''இந்தா, அஞ்சு ரூபா?''—பையிலிருந்து பர்ஸ் பிரித்தான்.

போன் ஒலித்தது.

''ஸ்டீபன், உங்களுக்குத்தான்'' குணா கொடுத்தார்.

''ஹலோ, ஸ்டீபன் ஹியர்!''

''வைத்தி பேசறேன்...உனக்கு மெமோ வந்திருக்கு—ரன்வே க்ளியர் இல்லாத லாண்டிங் இன்ஸ்ட்ரக்ஷன் தந்ததுக்கு.''

''சரி, வாங்கி வை?''

''மெமோவா?'' குணா கேட்டார்.

''ஆமாம்? இந்தாடா. மத்தியானச் சாப்பாட்டுக்கு வெச்சுக்க''—ஸ்டீபன் காசு கொடுத்தான்.

''தப்பு பண்ணவனுக்கு அஞ்சு ரூபா. தப்பு பண்ணாதவனுக்கு மெமோ, தமாஷ் இல்லே...!''—குணசேகரன் சிரித்துக் கொண்டே வினவினார்.

''உம்...இதெல்லாம் சகஜம்...குணசேகரன், நான் வரேன் உங்களைச் சந்தித்தது மகிழ்ச்சி.''

சின்னராசு ரூபாய் வாங்கி லெறித்துப் பார்த்தான். தெரியாமல் இயரை மிதித்து விட்டோம் என்று அந்தப் படித்த கிராமத்து இளைஞனுக்கு மெள்ளப் புரிந்தது.

4

சுபேதார் மேஜர் சின்னசாமி பேனாகத்தி எடுத்து நெருப்புக்குச்சியின் பின்பக்க நுனியை மெள்ளச் சீவிக் கூராக்கினார். முனையை மேஜையில் தேய்த்து மழுங்கச் செய்தார். கத்தியின் பக்கவாட்டுப் பகுதியால் குச்சியின் உடம்பு முழுவதும் தேய்த்து உருளையாக்கினார். மருந்து இருந்த பகுதியைச்சடக்கென்று நறுக்கி, கந்தகப்பகுதியை எடுத்து வாஷ்பேசினுக்குள் போட்டுத் தண்ணீர் திறந்து விட்டார். மறுபடி நாற்காலிக்கு வந்து பேனாக் கத்தியை மடித்துப் பையில் போட்டுக் கொண்டார். சரிவாய் உட்கார்ந்து பல் குத்தத் துவங்கினார்.

நேற்று இரவிலிருந்து ஒரு கறித் துண்டு கடைவாய்ப் பற்கள் இரண்டுக்கு இடையில் ஈறுக்குக் கீழே புகுந்து கொண்டு உபத்திரவம் செய்கிறது. நாக்கால் பல முறை நெருடிப் பார்த்ததும் வரவில்லை குச்சி தேவைப்பட்டது. குச்சியால் குத்தி நகர்த்தியதும் கறித்துண்டு வெளியே வந்தது. எல்லாப்பற்களையும் குத்திச் சோதித்துவிட்டுக் குச்சியைச்சிறிய பேப்பரில் மடித்து மேஜைக்குள் வைத்துக் கொண்டார், எழுந்து ஜன்னல்வழியே விமானதளம் பார்த்தார்.

கஜராஜ் நின்று கொண்டிருந்தது.

கீழே பலவகைப் பெட்டிகள் அடுக்கப்பட்டிருந்தன. பெரிய கித்தான் பைகள் வைக்கப்பட்டிருந்தன. ஒரு ஜீப் முன் பகுதி சிதிலமாகி முன்பக்க டயர்கள் முற்றிலும் எரிந்து சற்று சரிவாய் நின்று கொண்டிருந்தது

கண்ணிவெடியில் ஏறியிருக்கும் என்று பார்த்ததும் தெரிந்தது அருகே போய்ப் பார்த்தால், என்ன வகைக் கண்ணிவெடி என்று பார்த்துவிடலாம்.

போகலாமா?

எதற்கு? வேண்டாம். அங்கே எவனாவது சுபேதார் மேஜர் இருப்பான். கண்ணிவெடி கழட்டுகிற பையன் இருப்பான். பார்த்தால்—பேசினால் பொறாமைப்படுவார்கள். எர்போர்ட் ட்யூட்டியா...பாம்ப் ஸ்குவாடா...! நிம்மதி. யூனிஃபார்ம் இல்லாத நிம்மதி. சிவில் டிரஸ்ஸில் வரலாம். பத்து மணிக்கு வந்து கையெழுத்து போட்டு விட்டுப் பல் குத்திக்கொண்டு உட்காரலாம். ஐந்து மணிக்கு வீட்டுக்குப் போய் டி வி. பார்க்கலாம்.

எட்டுமணிக்குப் புளிக்குழம்பு, மீன் வறுவல் சாப்பிட்டு விட்டுப்பெண்டாட்டியைக் கட்டிக்கொண்டு படுக்கலாம். பிள்ளைகளோடு மிளிட்டரி கதை பேசலாம்.

பரேட் இல்லை; சல்யூட் இல்லை: யுத்தம் இல்லை: எதிரி இல்லை, கண்ணிவெடி இல்லை; கெஷின்கள் இல்லை: கான்டீன் சாப்பாடு இல்லை: நட்டும் குவளையும் எடுத்து வரிசையாய் சோறு வாங்கப்போகும் இம்சை இல்லை.

இது சிவில் உத்தியோகம். ஆபீஸ் உத்தியோகம். அவசரம் என்றால் மட்டும் ஓடவேண்டும். மற்ற நேரம் பல்குத்தலாம். பேப்பர் படிக்கலாம் வீட்டுத்தோட்டத்தில் வெண்டை, கத்தரி பயிர் பண்ணலாம். ஆடு வளர்க்கலாம். கோழி வளர்க்கலாம்.

முப்பத்தோரு வருடங்கள் சின்னசாமி இந்திய ராணுவத் தரைப்படையில் யூனிபார்ம் போட்டு மூன்று யுத்தங்கள் பார்த்துவிட்டார். காய்ந்த ரொட்டியும் இண்ணம் நிறைய கொத்துக்கறியும், செண்மசாலாவும் வரிசையில் நின்று வாங்கியிருக்கிறார். எட்டு ரூபாய்க்கு முழு ரம் பாட்டில் வாங்கியிருக்கிறார். கத்திரிக்கோல் சிகரட்டும், கம்பளியும், காலுறையும் இனாமாகப் பெற்றிருக்கிறார்

இப்போதும் அவை உண்டு. ரம்பாட்டில். கத்திரிக்கோல் சிகரெட், கம்பளி கோட் எல்லாம் உண்டு. பணி ரேஷன்

கடை உண்டு. வெளியே பன்னாறு ரூபாய்க்குக் கிடைக்கும் வஸ்பதி, பத்து ரூபாய்க்குக் கிடைக்கும். இலோ ஒரு ரூபாய்க்கு வெங்காயம் இரண்டு ரூபாய்க்கு உருளைக் கிழங்கு கிடைக்கும்.

வேலை...அதே வேலை...

வெடிகுண்டு இருந்தால் அப்புறப்படுத்த வேண்டிய வேலை அதைச் செயலிழக்கச் செய்கிற வேலை. குச்சியால் தட்டித் தட்டிப் பார்த்துக் கண்ணிவெடி கண்டுபிடித்து, கத்தியால் பக்க மண்ணைக் கிறிப் புரட்டிப் போட்டு, வாயால் தூசு ஊது வெடிமருந்துக்கிடையே செருகியுள்ள இனிஷியேட்டரை மெள்ள உருவிக் குண்டை உயிரிழக்கச் செய்கிற வேலை.

வெடிகுண்டு உயிரிழக்கச் செய்வதில் சின்ன தவறு நேரிடினும் இவர் உயிரிழக்க வேண்டும். மரணவாசல் நுனியில் உட்கார்ந்து வாழ்வா, சாவா என்று வேலை செய்யவேண்டும்.

சாவு என்றால் சாதாரண சாவு இல்லை சுக்கு நூறாய்ச் சிதறும் சாவு அப்படி வெடித்துச் சிதறினால் சிதறின இடத்தில் இருக்கும் மாமிசத்துண்டுகளை வழித்து ஒரு ப்ளாஸ்டிக் பையில் போட்டு, கித்தான் பையில் வைத்து மரப்பெட்டியில் பொதித்து, மேலே ரெஜிமெண்ட் கொடி போர்த்திப், பெயர் எழுதி 'இதுதான் உன் புருஷன்' என்று தருவார்கள்.

''என்னப் பெத்த ராசா...' என்று பெட்டியைப் பார்த்துத் தான் அழவேண்டும், மைசூர் இளைஞன் கார்பரல் நரேந்திரகௌடா அப்படித்தான் செத்துப் போனான். கண்ணெதிரே துண்டுதுண்டாய்க்கிழித்தான். ரத்தம் சின்னசாமி முகத்தில் அடித்தது. உடம்பு உயரக் கிளம்பித் தரையெல்லாம் ரத்தம் சடசட வென்று மழை போல் பெய்தது. வழித்து ப்ளாஸ்டிக் பையில் போட்டு, சின்னசாமி தான் மைசூருக்குஎடுத்து கொண்டு போனார்.

பெட்டியைப் பார்த்ததும் நரேந்திர கௌடாவின் தாயார் மார்பில் அடித்துக் கொண்டு கன்னடத்தில் அழுதார். 'என்ன சொல்கிறார்?' என்று கேட்டதற்கு 'என்னப் பெத்த ராசா என்கிறாள்' என்று பதில் வந்தது. பின்னையோ புருஷனோ... ராஜாதான் பெண்களுக்கு வீட்டில் எல்லா ஆண்மகனும் அரசன்தான்.

வெளியேதான் நாய் படாத பாடு பட வேண்டியிருக்கிறது. உத்தியோகம் என்பது அடிமைத்தனமாகவே அமைகிறது. 'யூக் யைர சாப்...யெஸ் சாப்...' என்று சல்யூட் அடிக்க வேண்டியிருக்கிறது.

இப்போது பளீரென்று சல்யூட் தேவையில்லை. லெகு விறைப்பு அவசியமில்லை மெள்ள நிமிர்ந்து கால் சேர்த்து நெற்றிக்குக் கை உயர்த்தினால் போதும். மூனறு யுத்த சனத்தின் பயன் ஆறு பதக்கம், சுபேதார் மேஜர் பதவி, சென்னை விமான நிலையத்தில் சிவில் உத்தியோகம். பாம்ப்ஸ்குவாட் இடம் சென்னை அமைதியான நகரம். பயங்கரவாதிகள் அதிகம் இல்லை. சமூகத்து இளைஞர்கள் கொஞ்சம் தொந்தரவு செய்கிறார்கள். அவர்கள் கூட இந்த மண்ணுக்கோ மக்களுக்கோ உடைமைகளுக்கோ சேதம் தருவதில்லை.

போனவாரம் சுபேதார் மேஜர் சின்னசாமிக்கு நகரத்திலிருந்து அழைப்பு வந்தது. உள்ளூர் போலீஸ் வரச்சொல்லி செஞ்சிற்று ராஜாஜி ஹாலுக்கு அருகே ஒரு கிழவி டிரான்சிஸ்டர் ரேடியோ திருடி, லெடி வெடித்துச் செத்துப் போய் விட்டாளாம். அருகே ஒரு புதரில் நாலு பைகள் இருக்கின்றனவாம். சோதிக்க வேண்டுமாம். முதலில் போன் வந்தது. அரை மணியில் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து சப் இன்ஸ்பெக்டர் வந்து சல்யூட் அடித்தார். 'ஜீப் ரெடி' என்றார்.

மேலதிகாரி—காப்டன் ராஜூவுடன் போனில் பேசி உத்தரவு வாங்கிப் புறப்பட்டார். சின்னசாமி, பார்த்துச் செய்யுங்க... குட் லக்''—ஏர்போர்ட் வாசல் வரைக்கும்

வந்து கைகுலுக்கினார். அதிகாரிகள் மற்ற நேரத்தில் நெருங்குவதில்லை. உயிருக்கு ஆபத்தான வேலைக்குப் போகும்போது கவலையோடு கைகுலுக்குவார்கள்.

''என் பேரு முருகேசன்க.... வேலூர் பக்கம்''...சப் இன்ஸ்பெக்டர் வண்டி ஒட்டியபடி சேதினார்.

''அப்படீங்களா.... எனக்கு மெட்ராஸ்தான். சைதாப்பேட்டைலதான் பொறந்து வளர்ந்தேன்''

''நிறைய வெடிகுண்டு செயலிழக்கச் செய்திருக்கீங்களா...?''

''உம்ம்.''

''ஒரு நூறு இருக்குமா?''

''ஆயிரக்கணக்குல இருக்கும்.''

''கையில பிச்சுவா வெச்சிருக்கிறவங்களைப் பிடிக்கச் சொல்லவே எங்களுக்கு உள்ளே பக்கு பக்குன்னும். எப்படீங்க வெடிகுண்டுன்னு தெரிஞ்சு கை வைக்க நீங்க?''

''இது தொழில். யார்னா கை வெச்சுத்தானே ஆகணும்.''

''அப்படிக் குண்டு பக்கத்துல உட்கார்த்து பிரிக்கச் சொல்ல மனசு எப்படி இருக்கும்?''—சப் இன்ஸ்பெக்டர். குரலில் ஆச்சரியமும் பரிதாபமும் கலந்திருந்தன.

''ஒரு விஷயம் நிக்கும் தம்பி.''

''என்னங்க அது?''

''நான் மின்னாடியா— வெடிகுண்டு முன்னாடியா...''

''கடவுளே...'' —ஜீப் ஒரு முறை அலைக்கழிந்தது.

''பார்த்து ஓட்டுங்க முருகேசன்.''

''ஆபத்தான வேலை இல்லையா...?''

"இப்போ அலைக்குழிலிருக்கனே... கொஞ்சம் கூட அலைக்குழிலிருந்தா ரோட்டல நடந்து போறவன் செத்தருப்பான். சாலு எதுல இல்லே. சொல்லுங்க தெருவுல நடந்து போனாக்கூடச் சாலு வருது..."

"இது மரணத்தைக் கும்பிட்டு மடியில் லெச்சுக்கற மாதிரி இல்லையா...?"

"முறைக்க இருக்கு தம்பி. முறையா செஞ்சா யாருக்கும் காயம் இல்லாத தப்பிச்சுரலாம்.

"என்ன முறைக்க?"

"பக்கத்துல நின்னு பாருங்க... பார்ப்பீங்க இல்லையா?"

சப் இன்ஸ்பெக்டர் நாறு கெஜம் தள்ளி நின்று கொண்டார். நாறு கெஜத் தொலைவிலேயே பைகள் இருக்கிற புதர் காட்டப்பட்டது.

தோளில் கருவிகள் அடங்கிய பையை மாட்டிக்கொண்டு புதர் நோக்கி நடந்தபோது கற்றியுள்ள அத்தனை போலீஸும் பயத்தோடு பார்ப்பது முதுகுக்குப் பின் நடந்தது. புல்தரையில் லிப் வைத்த ப்ளாஸ்டிக் பை. மெள்ளப் பெரிய ரம்பொல் பையைக் குத்தினார். உள்ளே ஏதோ கடினமாய்த் கட்டுப்பட்டது. இழுத்துப்பை ஓரத்தில் ரம்பி குத்தி வெளியே எடுத்து ரம்முனையில் கம்பி செருகித் திருகினார் நாறடி கம்பி. மெள்ள எழுந்து பின்பக்கம் போனார் ம்றுமுனையைப் பிடித்துப் பையை இழுத்தார். இப்படியும் அப்படியும் புரட்டினார். புல்வெளியிலிருந்து நடைபாதைக்கு இழுத்து, நடைபாதையிலிருந்து தரைக்கு இழுத்தார். தொப்பென்று பை விழுந்தது ஒன்றும் நடக்கவில்லை.

ஆக, குலுக்கின போதும் தரையில் இழுத்தபோதும் ஒரு அடி கீழே விழுந்த போது குண்டு வெடிக்கவில்லை. எனவே, குண்டைக் கையில் எடுக்கலாம். எடுத்து என்ன

லாகை என்று ஆராயலாம். கம்பியை அங்கேயே விட்டு விட்டுப் பைக்கு அருகே போய்ப் பிரித்தார். உள்ளே நாலு டிரான்சிஸ்டர் பெட்டிகள் இருந்தன.

இது பாட்டரி வெடிகுண்டு. கலிட்ச் போட்டால் அல்லது ஒரு குறிப்பிட்ட மீட்டருக்குத் திருப்பினால் பாட்டரி கனெக்ஷன் ஏற்பட்டுக் குண்டு வெடிக்கும். ஒரு டிரான்சிஸ்டர் தூக்கினார். ஒரு செங்கல்லில் டிரான்சிஸ்டரைச் சரித்து நிற்க வைத்துப் பூதக்கண்ணாடியால் சதுரம் வரும் ஓட்டைகளைப் பார்த்தார். புரட்டி பாட்டரிகளைக் கலைத்தார்—புது பாட்டரிகள் ஸ்குரு டிரைவரால் மெல்ல மூடியை அகற்றினார். பின்பக்கம் லொட் என்று திறந்து கொண்டது.

உள்ளே ஒரு ஜிலடின் ஸ்டிக் இருந்தது. லெளிநாட்டு ஸ்டிக். ஒரு ஆள் கட்டிப் பிடிக்க முடியாத பாறையை இந்த ஒரு ஜிலடின் சுக்கல் சுக்கலாக உடைத்துவிடும். ஒரு ஜனக் கூட்டத்துக்கு நடுவே போட்டால் நாற்பது பேர் சாவார்கள், அறுபது பேர் காயமடைவார்கள்.

ஒரு பாட்டரி ஓயர் ஜிலடினுக்குப் போயிற்று. இன்னொரு ஓயர் கலிட்சுக்குப்போயிற்று. கலிட்ச் போட்டால் போதும்-பாலிடில் நெகடிவ்சேர்ந்து மின்சாரம்உண்டாகி இனிஷியேட்டரைப் பற்றவைத்து ஜிலடின் வெடிக்கும்.

மின் இணைப்புத் தவிர வேறு விஷயம்உண்டா என்று சோதித்தார். சிலதில் ஓயர் கட் செய்தால் வெடித்து விடும் அப்படி ஓர் அமைப்பு இருக்கும். இதில் இல்லை. ஓயர் கட் பண்ணலாமா...?

"முருகா... காப்பாற்று" — தியானித்து கட்டர் எடுத்து மின் கம்பி துண்டித்தார். ஜிலடினை எடுத்து உள்ளே செருகியிருந்த இனிஷியேட்டரை உருவிப்போட்டார் மீதி மூன்றையும் அப்படியே பிரித்துப் போட்டார். நாலு வெடிகுண்டுகளும் செயலற்றுப் போயின.

திரும்பி வந்து காத்து நின்ற ஜ-ஜிக்கு சல்யூட் செய்தார்.

''தாங்க்யூ சின்னசாமி''

''சுபேதார் மேஜர் சின்னசாமிங்க.''

''தாங்க்யூ சுபேதார் மேஜர் சின்னசாமி.''

'அது பரவாயில்லீங்க. ஜிலடின் உங்க தேவயத்துக்கு வேணுங்களா... நான் எடுத்துப் போவட்டுங்களா. அத்தினியும் லெளிநாட்டுச்சரக்கு...அழிச்சிடறது நல்லது.'

''தண்ணி ஊத்தி அழிச்சிடலாமா?''

''வேணாம், என்கிட்ட குடுங்க. ஏர்போர்ட்டுக்கு எடுத்துக்கிட்டுப் போயிடறேன்.''

''ஏர்போர்ட்டா...? கண்ணெதிர்க்க...''

''அழிக்கலா...?சுபேதார் மேஜர், ஜிலடினை வூட்டுக்கு எடுத்துக்கிட்டுப் போயிடுவான்னு பார்க்கறீங்களா... எத்தினி ஜிலடின் வேணும் உங்களுக்கு? நான் தரேன். எதுக்கும் முருகேசனை என்கூட அனுப்புங்க சாட்சிக்கு.''

''முருகேசன்...யாருங்க?''

''சப் இன்ஸ்பெக்டர்...கூட வந்தாரே வண்டில,''

ஏர்போர்ட்டுக்கு லெடிகளைக் கொண்டு வந்து காப்டன் ராஜுவிடம் காட்டி முருகேசனோடு ஜீப்பில்ஏறி ஏர்போர்ட் வடகோடி மூலையில் உள்ள கூலிங் பிட்டுக்கு வந்தார். எல்லா ஜிலடின்களையும் அடுக்கிக் காட்டினார். இனிஷியேட்டர் செருகினார் மெள்ள நூறு கெஜம் மின் கம்பி எடுத்து பாட்டரியில் பொருத்தினார் ஜிலடின் சுற்றி மணம் மூட்டைகள் அடுக்கினார்

கூலிங் பிட் பலத்த காங்க்ரீட்டில் கட்டப்பட்ட நாலடிக்கு நாலடி குழி. ஒரு ஆள் ஆழம்...சுற்றி மணல் மூட்டைகள் இப்போது குழிக்குள்ஜிலடின் குழிக்குமேலும் பத்து மணல் மூட்டைகள், சுவரிலும் பத்து மூட்டைகள்.

சகலரையும் குப்புறப் படுக்கச் சொல்லி ஓயர்லெஸ்ஸில் டவருக்கு வெடி வெடிப்பதை அறிவித்து விட்டு பாட்டரி சுவிட்ச் தட்டி விட்டார். 'டொம்' என்று வெடிச் சத்தம் கேட்டது மணல் மூட்டைகள் பிய்ந்து வெளியே சிதறி விழுந்தன.

''சத்தம் இல்லீங்களே...!'

'கூலிங் பிட்ல மூடி மணல் மூட்டை போட்டா சத்தம் வராது. எல்லாம் வெடிச்சிருச்சு,'' தண்ணீர் திறந்து விட்டுச் சாக்கடை வழியே கவனித்தார். நாலு ஜிலடினும் சுக்கல் சுக்கலாக வந்த பிறகு ஜீப் ஏறி விட்டுக்குப் போனார்.

'நான் முன்னாடியா...அது முன்னாடியா?'

இந்த முறை அவர் முந்திக் கொண்டார். வெடி குண்டு செத்துவிட்டது.

இனி எந்த முறை வெடிகுண்டு முந்திக்கொள்ளப் போகிறதோ...? அடுத்த வெடிகுண்டு கிடைக்கும்வரை சுபேதார் மேஜர் சின்னசாமிக்கு வேலை இல்லை. ஆபீஸில் உட்கார்ந்து பல்லிடுக்கில் உள்ள கறித்துண்டு எடுக்கலாம், வீட்டுக்கு ஐந்து மணிக்குப் போய் வெண்டை கத்தரிச் செடிக்குத் தண்ணீர் ஊற்றலாம்; புளிக்குழம்பும் வறுத்த மீனும் சாப்பிடலாம், பெண்டாட்டியைக் கட்டிக் கொண்டு தூங்கலாம்.

எப்போது வேலை வரும்? தெரியாது.

வேலை வந்தால் அதை உயிரோடு செய்து முடிப் போமா...தெரியாது. முப்பத்தோரு வருடம் வேலை. ஐம்பத்தோரு வயசு என்று இதுவரை எவரால் எழுதப் பட்டிருக்கிறது...? தெரியாது.

'சின்னசாமி அங்கிள். நல்லா இருக்கீங்களா?''— பின்னால் குரல் கேட்டது ஜார்ஜினா உள்ளே நுழைந் தாள்.

''லா, தாயி...வா? எங்கே ஒரு வாரமா காணோம்?''

..வேலை நிறைய இருந்தது அங்கிள். ரெண்டு நாள் லீவு வேற போட்டேன்—பையனுக்கோசரம். கிறிஸ்மஸுக்குத் தணி எடுத்தேன்.''

''இது எத்தினியாவது கிறிஸ்மஸ் அம்மா?''

'நாலாவது அங்கிள்!''—ஜார்ஜினா அமைதியாகப் பதில் சொன்னாள்.

''தான் இல்லாத போயிட்டேனே தாயே...''—சின்னசாமி நூறாவது முறையாய் அவளிடம் புலம்பினார்.

ஜார்ஜினா ஒரு சோகம். வெடிகுண்டு சோகம். எண்பத்தி நாலில் குண்டு வெடித்து ஏர்போர்ட் சிதறிய போது நடந்த சோகம். இருபத்தேழு வயசு சோகம்.

5

சின்னசாமிக்கு அப்போது ஏர்போர்ட் ட்யூட்டி இல்லை. ஏர்போர்ட்டில் அப்போது பாம்ப் ஸ்குவாட் இல்லை. ஆயிரத்துத்தொள்ளாயிரத்து எண்பத்து நான்காம்வருடம், ஆகஸ்ட் மாதம் இரண்டாம் தேதி இரவு இரண்டுமணி...ப்ரவுன் சூட்கேஸ் நிறைய வைக்கப் பட்ட ஜிலடின் ஸ்டிக் வெடித்து ஏர்போர்ட் சிதறி முப்பத்திரண்டு பேர் செத்த பிறகு எல்லா முன்னெச்சரிக்கைகளும் உண்டாயின.

ஜலந்தரிலிருந்து பரங்கிமலை மெட்ராஸ் ரெஜிமெண்டுக்கு வந்த சின்னசாமிக்கு, சுபேதார் மேஜர் பதவி உயர்வு கொடுத்து ஏர்போர்ட் டெபுடேஷனுக்கு அனுப்பினார்கள். காப்டன் ராஜு தலைமையில் ஆறுபேர் நியமிக்கப்பட்டார்கள். வெடிகுண்டு கண்டுபிடிக்கும் 'ரோபோ' வாங்கப்பட்டது. ரோபோவை முன்னால் விட்டுத் தொலைவில் உட்கார்ந்து பார்க்கும் டி. வி. வாங்கப்பட்டது. செக்யூரிடி பலப்பட்டது.

வெறும் பாலாடை சட்டை போட்ட காலத்திலிருந்து ஜார்ஜினாவைச் சின்னசாமிக்குத் தெரியும். இந்தியா முழுவதும் வேலை பார்த்தாலும் சின்னசாமி குடும்பம் பரங்கிமலையில்தான் இருந்தது. கிரவுண்ட் நானூறு ரூபாய் விற்ற காலத்தில் பக்கம் பக்கமாய் சின்னசாமி குடும்பமும் ஜார்ஜினா குடும்பமும் குடியேறின. சின்னசாமி மகள் சரஸ்வதியும் ஜார்ஜினாவும் பள்ளித் தோழிகளானார்கள். தேச சேவையில் சின்னசாமி ஈடுபட்டிருக்க... ஜார்ஜினாவின் அப்பா சரஸ்வதிக்கு கார்டியன் என்று பள்ளியில் கையெழுத்துப் போட்டார்.

பிறகு, ஜார்ஜினா கல்லூரிக்குப் போக, சரஸ்வதி வீட்டில் உட்கார்ந்து சமையல் கற்றுக் கொண்டாள். ஆனாலும் ஜார்ஜினா வரும், அரட்டையடிக்கும், புடலை எடுக்க சரஸ்வதியோடு கடைக்குப் போகும்.

தன் வீட்டுக்கு வெள்ளையடித்தபோது சின்னசாமி வீட்டுக்கும் வெள்ளையடித்தார். தான் கிணறு ஆழப்படுத்தும்போது சின்னசாமி கிணற்றுக்கும் தூர் இறைத்தார். சின்னசாமியின் மனைவி தேவையில்லாமல் வேலைக்காத்தான் செடிதாண்டியதில்லை. ஒவ்வொரு நாளும் உயிரைப் பணயம் வைத்துக் குண்டு பிரிக்கிற புருஷனுக்குத் தன் கற்பே காவல் என்று வாழ்ந்தாள்.

சின்னசாமி லீவுக்கு வரும்போது ஜார்ஜினாவுக்கு என்று பரிசுகள் இல்லாமல் வந்ததில்லை. தனக்குக் கிடைக்கிற உருளைக்கிழங்கு, வனஸ்பதி ரேஷனை அவள் வீட்டுக்கு அனுப்பாமல் உண்டதில்லை. சின்னசாமி இந்து ஆனால், அவருக்குக் கிறிஸ்துவின்மீது நம்பிக்கை இருந்தது அதற்கு ஜார்ஜினா குடும்பம் காரணமாக இருந்தது.

சர்ச்சில் பார்த்த ஜார்ஜினாவை வின்செட்டுக்குப் பிடித்துப் போக, சம்மதம் பேசினார்கள். வின்செட் வீட்டில் அதிகம் ஆசைப்பட்டார்கள். பேச்சு இரண்டு

தடலை முறிந்துபோயிற்று. மூன்றாம் முறை சின்னசாமி மத்யஸ்தம் செய்தார். ஆனாலும் திருமணப் பேச்சு ஆறாயிரம் ரூபாய் சீர் செலவில் முறியும்போல் தோன்றி யது. ஜார்ஜினா சின்னசாமி வீட்டுக் கிணற்றடியில் உட்கார்ந்து சரஸ்வதி மடியில் சாய்ந்து அழுதாள்.

"அடச்சீ போ... ஆறாயிரம் ரூவா ஒருகாசா, நான்... தரேன், போய் முகம் கழுவு" என்று உத்தரவிட்டார். நங்கநல்லூர் நிலத்தை எட்டாயிரத்துக்கு விற்று, ஆறாயிரம் கையெழுத்தில்லாத கடனாய்க் கொடுத்து, ஆயிரம் ரூபாய் கல்யாண மொய் எழுதி, இன்னொரு ஆயிரத்தில் ஜார்ஜினா கல்யாணத்துக்கு தனக்கும் தன் மகளுக்கும் மனைவிக்கும் உடைகளாய் எடுத்தார். இரண்டு லகான் கோழியும் ஒரு கிலோ ஆட்டிறைச்சியும் வாங்கித் தலியே தன் வீட்டு விருந்து வைத்தார்.

ஆறாயிரம் ரூபாயும் சரஸ்வதி கல்யாணத்துக்குத் திருப்பி வந்துவிட்டது வேறு விஷயம். ஆனால், நேரத்துக்கு நிலம் விற்றுக் காசு கொடுத்த நன்றியை ஜார்ஜினாவும் மறக்கவில்லை, அவள் குடும்பமும் மறுத்ததில்லை.

வின்செண்ட்டும் ஜார்ஜினாவும் புருஷனும்பெண்டாட்டியுமாய் மோட்டார் சைக்கிளில் வந்து இறங்குவார்கள். இரண்டு மணி நேரம் ஏகரகளை செய்வார்கள்,

"மிலிட்டரிக்காரர்தானே உங்க அங்கிள்... ஒண்டிக்கு ஒண்டி வரச்சொல்லேன்"— வின்செண்ட் தொடை தட்டுவான்.

"அடப் போய்யா...கிழவன்கூட விளையாடிக்கிட்டு' சின்னசாமி மறுப்பார்.

"உங்களை நம்பி பார்டரை ஒப்படைச்சிருக்கோம்... குஸ்திக்குப் பயப்படறீங்களே."

"இது சரலெடி, கொளுத்திப் போடறேன். இதைப் பாதில அணைச்சு நிறுத்துவியா?"

சடேர் படேரென்ற வெடிக்கு அருகே போய்ப் பயந்து வின்செண்ட் பின்வாங்குவான். இன்னொரு சரவெடி கொளுத்திப் போடுவார் சரியாய்ப் பாதி இடம் வரும் போது கையிலிருந்த காபி தண்ணியை அதன் தலையில் வீசுவார்.

"ஹ...இது நான் கூடத்தான் செய்வேன்."

"செய்யறதுதானே, உன் கையிலும் காபி தண்ணி இருத்திச்சே."

"இப்போ ஒத்தை வெடி வெச்சுட்டேன். எப்படி அணைப்பீங்க?"—கொளுத்திப் போட்டான்.

சின்னசாமி வீட்டுக்குள் நகர்ந்து விட்டார்.

"என்ன, மிலிட்டரி ஆளைக் காணும்...?"

"அணைக்க முடியாத வெடிக்கு நகர்த்துடணும். அதான் புத்திசாலித்தனம்."

ஆனால் வெடிக்கும் என்பது தெரிந்தால்தானே நகர முடியும். ஒரு ப்ரவுன் சூட்கேஸில் கடிகாரம் இணைத்து ஒரு ஜிலடின் குச்சி முக்கால் கிலோவாக இருபத்தைந்து கிலோ அடுக்கி ஏர்லங்கா பயணி உடைமையாக வந்தது. வெடிக்கும் வரை அது வெடிக்கும் என்று யாருக்கும் தெரியவில்லை.

வெடித்த பிறகு வின்செண்ட் என்கிற ஆறடி உயர கறுப்புத் தோலும் வெள்ளைச் சிரிப்புமான இளைஞன் இல்லை. ஒரு வலது கால் மட்டும் கூரைக் கம்பியில் தொங்கிக் கொண்டிருக்க...கட்டைவிரல் க்யூடெக்ஸை வைத்து அதை வின்செண்ட் என்று அடையாளம் கண்டார்கள். அதை மட்டும் பெட்டியில் வைத்து மூடி அடக்கம் செய்தார்கள்.

"ஜார்ஜினா..."—சின்னசாமி மெள்ளத் தானும் கலைந்து அவள் அமைதியையும் கலைத்தார்.

''ஸாரி அங்கிள். இன்னிக்கு மத்தியானம் என்கொயரி மீட்டிங், காப்டன் ராஜு வரணுமாம். லெட்டர் கொடுத்திருக்காங்க.''

''என்ன என்கொயரி?''

''காலைல ஒரு மிலிட்டரி ப்ளேன் மிஸ் அப்ரோச் ஆயிருச்சு. எல்லாரும் கூடி இது மறுபடி நடக்காத...''

''கிழிச்சானுல... ரன்வே தாண்டக் கூடாதுன்னா தாண்டக்கூடாது. தாண்டினா சுட்டுறணும். மிலிட்டரில இதான் ரூல்.''

''இங்கே அது முடியுமா அங்கிள்?''

''முடியாது. மீட்டிங்தான் போட முடியும். பேப்பர் கொண்டா. காப்டன் ராஜு கொச்சின் போயிருக்காரு.''

''அப்போ பாம்ப் ஸ்குவாட்ல யார் வர்றது?''

'நான் வரேன். இங்கே உட்கார்ந்திருக்கறதுக்கு அங்கே வந்து உட்கார்த்திருக்கேன். டீ, பிஸ்கட் சாப்பிட்டுட்டுப் பல் குத்தலாம்.

''இது லெட்டர். இங்கே கையெழுத்துப் போடுங்க''

''ஜார்ஜினா, வேலை புடிச்சிருக்கா? ஒன்றும் கஷ்டமில்லையே?''

''இல்லை அங்கிள். விஸ்செட்டுக்குத் தர மரியாதை எனக்குத் தராங்க.'

''விதவையா இருக்கறதே மரியாதைனு நினைச்சுராதே ஜார்ஜினா.''

''புரியலை அங்கிள்.''

''துணை தேடிக்க ஜார்ஜினா.''

''எனக்கு ஆறு வயசுல பையன் இருக்கான் அங்கிள். அவன்தான் துணை.''

''அவனுக்கும் சேர்த்துச் சொல்றேன் தாயே.''

''அவனுக்குத் தாத்தா—பாட்டி, அம்மா, மிலிட்டரி அங்கிள், சரஸ்வதி எல்லாம் துணை. மறக்காத மீட்டிங்கு வாங்க.''

ஜார்ஜினா அறையை விட்டு வெளியேறிப்படியிறங்கிப் போனாள். இன்டர்நேஷனல் ஏர்போர்ட் அத்தாரிடியிடம் கையெழுத்துவாங்கினாள். கீழே ஏர்போர்ட் லவுஞ்சுக்குப் போனாள். கஸ்டம்ஸ் தாண்டினாள், கன்வேயர் பெல்ட் கடந்தாள். ஒரு நிமிடம் நின்றாள்.

இதோ, இங்கே, இங்கேதான் நடந்தது வின்சென்ட் மரணம். இங்கேதான் நடந்தது. 'வினு வினு' என்று உள்ளுக்குள்ளே விம்மினாள். மெள்ள அருகிலிருக்கும் ப்ளாஸ்டிக் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள்.

வினு அன்று சட்டையில் பட்டன் இல்லை என்று திட்டினான்.

''என்னால முடியலேப்பா. தலை சுத்துது.''

''பேசாத உங்கப்பா வூட்டுக்குப் போறதுதானே. போன வாரமே சொன்னேனே.''

''போர்! பின் குத்திவிட்டா?''

பின் குத்திவிட்டாள்.

''எத்தனை மணிக்கு வருவீங்க?'

''பத்து மணிக்கு முடிஞ்சுரும். சத்ய நாராயணன் வந்துட்டா ட்யூட்டி ஹாண்ட் ஓவர் பண்ணிட்டு வந்துட வேண்டியதுதான். சொதப்பிட்டா நின்னு அவன் வர வரைக்கும் காத்திருக்கணும்.''

''வந்துடுவாரில்லே?''

''வந்துருவான். ஏதோ லவ் மேட்டர்ல மாட்டிக்கிட்டு முழிக்கிறாப்போல சில சமயம் லேட் பண்றான்.''

''வந்துருப்பா.''

"ஏன்...உனக்கோ தலை சுத்தல். இடுப்புநோவு மூணு மாசத்துக்கு லீடு முழுக்க வாந்தியெடுக்கறே. கொஞ்சம் இறுக்கினா 'ஐயோ'ன்னு கூவறே."

"வந்த கம்மா படுத்துக்கப்பா."

"போர்!"

"தானா?"

"கம்மா படுக்கறது."

"பேய்மாறி ஆடணும் ஹான்னு தூங்கணும். இடைப் பட்டதா ஒன்றுமே கிடையாதா...பொம்பளைக்குச் சுகமா இருக்கக்கூடாதா?"

"உங்கதால்புடிச்சுவிடறது, முதுகு சொறிஞ்சுவிடறது மாதிரியா? சொறிஞ்சுவிட்ட சுகத்துல நீங்க தூங்கிடுவீங்க. நான் மல்லாக்கப்படுத்துக்கிட்டுக் கைக்குக் கிடைக்காத பொண்ணுங்களையெல்லாம் நினைச்சுக்கிட்டுப்புரளணும் தேவைதானா?"

"அப்படியெல்லாம் பொண்ணுங்கஉள்ளே இருக்கா?—நெஞ்சுக்கூட்டில் குத்தினாள்."

"புதுசா ஒரு குட்டி டிராஃபிக்ல சேர்ந்துருக்கு. தனி மணம். அது கூந்தலா, உமிழ்நீரா, வேர்வையா...ஐயோ ஐயோ!"

அவன் தொண்டைக்குழியில் விரல் வைத்து அவள் அழுத்த, பின்னடைந்து சுவரோடு சுவராகிக் கைவிரித்துக் கமறி "இன்னும் ஒரு அழுத்து உசிர் போயிடும். மரியாதையா போய் மரியாதையா வாங்க."

"அப்போ ராத்திரிக்குச் சுடு சோறு போடு."

"சுடு சோறா...அப்படின்னா?"

"பழைய சோறுன்னா... உனக்கு உடம்பு தடவி விட்டுட்டு நான் புரண்டு புரண்டு தூங்கறது. சுடு சோறுன்னா திருப்பியா சாப்டுட்டு வேர்வை பொங்க சாப்ட சுகத்திலேயே அங்கியே தூங்கிடறது."

"கஷ்டகாலம்...திருத்தவே முடியாது உங்களை."

படியிறங்கி மோட்டார் பைக் மிதித்து ஏறி அமர்ந்து சிரித்தபடி கேட்டான்.

"சொல்லு...சுடுசோறா இல்லை...?"

கை ஒங்கி அவள் இறங்க, வண்டி விருட்டென்று இளம்பி மறைந்தது.

'தினிப்பண்டாரம்'—ஜார்ஜினா சிரித்துக்கொண்டே கதவு சாத்தினாள். அவன் தட்டு எடுத்து டேபிளில் வைத்துத் தனக்குப் பரிமாறிக் கொண்டாள்.

சோற்றுக் கலயம் தொட்டு சுட்டது. சிரித்தாள். புளிப்பும் காரமுமாய் வேர்த்து வழியச் சாப்பிட்டாள். மின் விசிறியை முழுக்கச் சுழலவிட்டுப் படுத்தாள்.

மாலையில் கொஞ்சமாய் அவனுக்கு மட்டும் குக்கர் வைத்தாள். கோழி எடுத்து வறுத்தாள். ரசம் சூடு செய்தாள். வீடு சுத்தம் செய்து டி.வி.பார்த்தாள். டில்லி நியூஸ் முடிந்ததும் பெட்டியை அணைத்துவிட்டு பைபிள் படிக்கத் துவங்கினாள்.

வயிறு புரண்டது. நெஞ்சுக்குழியில் காரம் ஏறியது. மூச்சு இரைத்தது. 'யேசுவே' என்று பைபிள் மூடினாள். மறுபடி வயிறு குழைந்து புரண்டது. எழுந்து சுவர் பிடித்து பாத்ரூம் போனாள்.

'டமார்' என்று பெரிய இடிமுழக்கம் செவிப்பறையைத் தாக்கிற்று. "யேசுவே" என்று கூவினாள்.

'மிலிட்டரி ஆளுங்க ஏதாவது ப்ராக்டிஸ் பண்றாங்களா...மெயின் ரோட்ல ஏதாவது லாரி மோதின சத்தமா?'—வாசலில் கூக்குரல் கேட்டது.

கதவு திறந்தாள். வானத்தில் பெரிய கரும்புகை தெரிந்தது.

'ப்ளேன் ஆக்ஸிடெண்டா?' ஃபயர் இன்ஜின் சத்தம் கேட்டது. சைரன் ஏதோ விட்டு விட்டு ஒலித்தது.

''குண்டு வெடிச்சுருச்சு...ஏர்போர்ட்ல குண்டு வெடிச்சுருச்சு''—யாரோ கத்திக் கொண்டு குவார்ட்டர்ஸ் நோக்கி ஓடி வந்தார்கள். ''நிறைய பேர் செத்துட்டாங்க'' என்று குரல் கொடுத்தார்கள்.

ஜார்ஜினா பயத்தோடு வீடு பூட்டினாள். கும்பலுக்குள் புகுந்து விஷயம் கேட்டாள்.

ஏர்போர்ட்டிலிருந்து குவார்ட்டர்ஸ் ஒரு பர்லாங் இருக்கும். எதிர்வீட்டு ரேடியோ இன்ஜினீயர் ஜீப் கிளம்ப, தொற்றிக் கொண்டாள்.

ஏர்போர்ட் சுற்றி இராணுவம் வளைத்துக் கொண்டது. நடுக்கூரை பிய்ந்து தெரு வரையில் கற்களும் தகடுகளும் சிதறியிருந்தன. அடர்த்தியாய் ஒரு தூசு ஏர்போர்ட்டைச் சுற்றியிருந்தது.

உள்ளே விட மறுத்துவிட்டார்கள்.

சின்னசாமி பச்சை யூனிஃபார்மில் ஜீப் விட்டு இறங்கி உள்ளே போக, பாய்ந்து போய்க் கைபிடித்துக்கொண்டாள்.

''வினு ட்யூட்டில இருக்கு அங்கிள்...வினு ட்யூட்டில இருக்கு அங்கிள்...'' என்று கத்தினாள் சின்னசாமி கதறிக் கொண்டு உள்ளே ஓடினார்.

சாவு நிறைய என்று தெரிந்துவிட்டது. ரத்தவெள்ளமாய் நிறைய ஆட்களை ஆம்புலன்ஸில் ஏற்றினார்கள். நாலா பக்கமும் அலைந்தாள். ஆம்புலன்ஸ் ஆம்புலன்ஸாய்த் தேடினான்.

''கஸ்டம்ஸ் பக்கம்தான் டாமேஜ் டிராஃபிக்லஜாஸ்தி இல்லை''—யாரோ சொன்னார்கள்.

வெளியே வந்த சின்னசாமி அவளை நோக்கி நடந்து வந்து கைகளைப் பிடித்துக் கொண்டார். அவர் கைகள் நடுங்கின.

''என்ன அங்கிள்?''

பேசாமலிருந்தார்.

''என்ன அங்கிள்?''

இரண்டு கைகளை விரித்து வானம் பார்த்தார்.

''அங்கிள்...''

அவள் தோள்களைப்பற்றி அணைத்தபடி லவுஞ்ச் விளிம்போரம் வந்து ஒரு அட்டைப்பெட்டி காட்டினார்.

ஒரு கால், ஒரு வலது கால் ஷூக்கள் பிய்ந்து முழங்காலுக்கு மேல் பிதைந்து கிடந்தது. வலக் கால் கட்டை விரலில் க்யூடெக்ஸ் இருந்தது.

''வினு வினு வினுப்பா...'' பாய்ந்து, அந்தக் காலைத் தொட முயன்றவளை, அந்த மிலிட்டரிக்காரன், அந்தக் குழந்தையை வளர்த்தவன் இறுக்கி நிறுத்தினான்

ஏர்போர்ட் அவள் அலறலில் உறைந்து போயிற்று. தரையில் புரண்டு தூசோடு தூசாய் அரற்றியவளைக் கட்டுப்படுத்த முடியாமல் திகைத்தது. துணி பறக்கத் தலையில் அடித்துக்கொண்டு ஆடியவளைக் கையில்பிடிக்க முடியாமல் போயிற்று. சுற்றி நின்ற ராணுவ வீரர்கள் கூடத் துக்கத்தில் முகம் திருப்பிக் கொண்டார்கள்.

''எங்க வினு உள்ளே இருக்கு...எங்க வினுப்பா உள்ளே இருக்கு. வினு, வினு. சுடுசோறு வெச்சுருக்கேன் வினு.''—அந்தக் கர்ப்பிணிப் பெண் நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுவதை யாராலும் பார்க்க முடியவில்லை, பார்த்தவர்களால் அழாமல் இருக்க முடியவில்லை.

மிலிட்டரி ஆஸ்பிடல் தாதிகள் அவளை அழுத்திக் கொண்டார்கள். புஜத்தில் ஊசி ஏறிந்து ஏற்றினார்கள். கண் சொருகியவளை அள்ளி எடுத்துக்கொண்டு போனார்கள் ஜார்ஜினாவின் பூட்டிய வீட்டில் சுடுசோறு ஆறத் துவங்கியது. ரசம் ஆறி மணம் துவங்கியது.

"என்னம்மா இங்கேயே உட்கார்ந்துட்டீங்க... உடம்பு சரியில்லையா?"—ரங்கராஜு கேட்டான்.

ஜார்ஜினா திடுக்கிட்டுப் பார்த்தாள்.

"இது அவர் செத்துப்போன இடம் ரங்கராஜு."

"போங்கம்மா...இன்னும் அதையே நினைச்சுக்கிட்டு.. பேசாம மெளன்ட்ரோட் பிராஞ்ச் வாங்கிட்டுப் போயிருங்க."

"மாட்டேன், என்னை எங்கயும் மாத்தாதீங்க... எனக்கு ப்ரமோஷனே வேணாம். என் புருஷன் செத்துப் போன ஏர்போர்ட்லயே நானும் கடைசிவரைக்கும்லேலை செஞ்சு செத்துப்போறேன்னு..."

"வுடுங்கம்மா அந்தப்பேச்சை...லீட்டுக்குப்போங்க."

"ரங்கராஜு நீ லெட்டர் வாங்கலாமா? உங்க அதிகாரிக்கு ஒரு லெட்டர் இருக்குது. இன்னிக்கு மத்தியானம் மீட்டிங் மில் அப்ரோச் என்கொயரி. இந்தியன் ஏர்லைன்ஸ் வரல்ல. மிலிட்டரிக்காரன் வரான்."

"கொடுங்க...கையெழுத்துப் போடறேன். எத்தினி மணிக்கு?"

"மத்தியானம் இரண்டு மணி."

கையெழுத்துப் போட்டான். ஜார்ஜினா எழுந்து தன்னிடத்துக்குப் போனாள்.

ஏர்போர்ட்டின் சகலமுக்கியஸ்தர்களும் கூடினார்கள். இந்தியன் ஏர்லைன்ஸுக்குத் தனி செக்யூரிடி இருந்தது.

ஏர்போர்ட்டுக்குக் காவல் குணசேகரன் உள்ளே வந்து நிற்கிற இந்தியன் ஏர்லைன்ஸ் ஏரோப்ளேனுக்குக் காவல். இந்தியன் ஏர்லைன்ஸ், அவர்கள் விமானத்தை அவர்களே

சுற்றி நின்று பாதுகாத்துக் கொள்வார்கள்—விமானத்தி லிருந்து பயணிகள் இறங்குகின்ற ஏணி மாடிப்படி, சரக்கு இறக்குகிற டிராக்டர் ட்ரைலீலர் உள்ளே விமானத்தில் தருகிற உணவு காண்டீன், பங்கர் என்று அழைக்கப்படும் அரைலட்ட ரிப்பேர்ஷாப். சரக்குக் கூடம் எல்லாம் அவர்கள் பொறுப்பு.

இதே மாதிரி வெளிநாடு பயணம் போகும் ஏர் இந்தியா கம்பெனி தனியே லசித்தது. அவர்களுக்கும் விமானம், படிக்கட்டு, உணவு காண்டீன், சரக்குக் கூடம் எல்லாம் உண்டு.

மிஸ் அப்ரோச் என்கிற— விமானம் இறங்காமல் சட்டென்று மறுபடி உயரப்பறந்த விபரீதம் மிலிட்டரி விமானத்துக்கு நடந்தால் என்ன...இந்தியன் ஏர்லைன் ஸுக்கு நடந்தால் என்ன...

மறுபடி இப்படி நடக்கக்கூடாது. அந்த மாதிரி மறுபடி விமானம் தூக்க முடியாமல் இறங்க நேரிட்டால் ஏற்படும் சேதம் அளவிட முடியாதது. ஓடிவந்த சின்னராசு நடுச் சக்கரத்தில் அடிபட்டு சிக்கிக் கொண்டசல், முந்நூறு கிலோ மீட்டர் லேகத்தில் இறங்கும் விமானம் தரையில் ஓடாது. ஒருபக்கம் சக்கரம் சிக்கினால் மல்லாக்க கவிழ்ந்து விடும். தரையில் ஓடுகிற விமானம் மல்லாக்கக் கவிழ்ந்தால் லட்சம் தூளாய் வெடித்துச் சிதறும்

பலகோடி ரூபாய் நஷ்டம், உயிர்சேதம் நடக்கும்.

இந்தியன் ஏர்லைன்ஸ் செக்யூரிடி ஆபீஸர் ராமசுவாமி இடதுபக்கம் கதவுக்கு விரல் காட்டினார்.

வட்டமேஜையில் உட்கார்ந்தவர்களுக்கு பிஸ்கட் பொட்டலமும், டீ கோப்பைகளும் வைக்கப்பட்டன.

"இந்தியன் ஏர்லைன்ஸ் உங்களை வரவேற்கிறது. முதலில் தெம்பாக டீ, பிறகு பேச்சு...சரியா..." ராமசுவாமி கம்பீரமாய்க் கூட்டம் பார்த்துப் பேசினார்.

"என்னம்மா இங்கேயே உட்கார்ந்துட்டீங்க... உடம்பு சரியில்லையா?"—ரங்கராஜு கேட்டான்.

ஜார்ஜினா நிமிர்ந்து பார்த்தாள்.

"இது அவர் செத்துப்போன இடம் ரங்கராஜு."

"போங்கம்மா...இன்னும் அதையே நினைச்சுக்கிட்டு.. நாம மெண்ட்ரோட் பிராஞ்ச் வாங்கிட்டுப் போயிருக்க."

"வாட்டேன், என்னை எங்கயும் மாத்தாதீங்க... எனக்கு ப்ரமோஷனே வேணாம். என் புருஷன் செத்துப் போன ஏர்போர்ட்லயே நானும் கடைசிவரைக்கும்னாலை செஞ்சு செத்துப்போறேன்னு..."

"விடுங்கம்மா அந்தப்பேச்சை...வீட்டுக்குப்போங்க."

"ரங்கராஜு நீ லெட்டர் வாங்கலாமா? உங்க அதிகாரிக்கு ஒரு லெட்டர் இருக்குது. இன்னிக்கு மத்தியானம் மீட்டிங் மிஸ் அப்ரோச் என்கொயரி இந்தியன் ஏர்லைன்ஸ் ஹோல்ல. மிஸிட்டரிக்காரன் வரான்."

"கொடுங்க...கையெழுத்துப் போடறேன். எத்தினி மணிக்கு?"

"மத்தியானம் இரண்டு மணி."

கையெழுத்துப் போட்டாள். ஜார்ஜினா எழுந்து கண்ணாடத்துக்குப் போனாள்.

ஏர்போர்ட்டின் சகலமுக்கியஸ்தர்களும் கூடினார்கள். இந்தியன் ஏர்லைன்ஸுக்குத் தனி செக்யூரிடி இருந்தது.

ஏர்போர்ட்டுக்குக் காவல் குணசேகரன் உள்ளே வந்து நிற்கிற இந்தியன் ஏர்லைன்ஸ் ஏரோப்ளேனுக்குக் காவல் இந்தியன் ஏர்லைன்ஸ். அவர்கள் விமானத்தை அலசுகிறார்கள்—விமானத்தின் அடியில் ஏறி நின்று பாதுகாத்துக் கொள்வார்கள்—விமானத்திலிருந்து பயணிகள் இறங்குகிற ஏணியும் மாடிப்படி. சரக்கு இறக்குகிற டிராக்டர் ட்ரைலீலர் உள்ளே விமானத்தில் தருகிற உணவு காண்டீன், பங்கர் என்று அழைக்கப்படும் அரைலட்ட ரிப்பேர்ஷாப். சரக்குக் கூடம் எல்லாம் அவர்கள் பொறுப்பு.

இதே மாதிரி வெளிநாடு பயணம் போகும் ஏர் இந்தியா கம்பெனி தனியே வரித்தது. அவர்களுக்கும் விமானம், படிக்கட்டு, உணவு காண்டீன், சரக்குக் கூடம் எல்லாம் உண்டு.

மிஸ் அப்ரோச் என்கிற— விமானம் இறங்காமல் சட்டென்று மறுபடி உயரப்பறந்த விபரீதம் மிலிட்டரி விமானத்துக்கு நடந்தால் என்ன...இந்தியன் ஏர்லைன்ஸுக்கு நடந்தால் என்ன...

மறுபடி இப்படி நடக்கக்கூடாது. அந்த மாதிரி மறுபடி விமானம் தூக்க முடியாமல் இறங்க நேரிட்டால் ஏற்படும் சேதம் அளவிட முடியாதது. ஓடிவந்த சின்னராசு நடுச் சக்கரத்தில் அடிபட்டு சிக்கிக் கொண்டசல், முந்நூறு கிலோ மீட்டர் வேகத்தில் இறங்கும் விமானம் தரையில் ஓடாது. ஒருபக்கம் சக்கரம் சிக்கினால் மல்லாக்க கவிழ்ந்து விடும். தரையில் ஓடுகிற விமானம் மல்லாக்கக் கவிழ்ந்தால் லட்சம் தூளாய் வெடித்துச் சிதறும்

பலகோடி ரூபாய் நஷ்டம், உயிர்சேதம் நடக்கும்.

இந்தியன் ஏர்லைன்ஸ் செக்யூரிடி ஆபீஸர் ராமசுவாமி இடதுபக்கம் கதவுக்கு விரல் காட்டினார்.

வட்டமேஜையில் உட்கார்ந்தவர்களுக்கு பிஸ்கட் பொட்டலமும், டீ கோப்பைகளும் வைக்கப்பட்டன.

"இந்தியன் ஏர்லைன்ஸ் உங்களை வரவேற்கிறது. முதலில் தெம்பாக டீ, பிறகு பேச்சு...சரியா..." ராமசுவாமி கம்பீரமாய்க் கூட்டம் பார்த்துப் பேசினார்.

"என்னமோ இவன் துட்டுல டூ வாங்கித் தர மாதிரி மூஞ்சில கர்வத்தைப் பாரேன். ஏரோப்ளேன்ல எல்லா ருக்கும் ஊத்தறதை நமக்கும் ஊத்தறான்." வைத்திய நாதன் ஸ்டீபனிடம் முணுமுணுத்தான். "இந்தியன் ஏர்லைன்ஸ் டீசாப்பிட்டாலே எனக்கு வயிறு புரட்டும்."

"ஆமா, இந்த மீட்டிங் ஏன் இந்தியன் ஏர்லைன்ஸ்ல..."

"சரி நீயோ நானோ மீட்டிங் போட முடியுமா? போட்டா டீ ஊத்த முடியுமா? ஏன் மீட்டிங்... எனக்கு டீ செலவுன்னு ஆயிரம் கேள்வி. இது ராஜா வீட்டுக் கன்னுக்குட்டி."

"நம்மளைவிடச் சம்பளம் ஜாஸ்தி இருக்கும் இல்லே இந்த ஸ்டாஃபுக்கு."

"வருஷத்துல ரெண்டு ஏர் பாஸ். இந்தியாலுல எந்தக் கோடிக்கு வேணா புருஷன்—பொண்டாட்டியா போயிட்டு வரலாம் நீயும் நானும் ஆயிரம் ப்ளேன் இறக்கறோம், ஏத்தறோம் உன்ன போய் உட்கார முடியுமா?"

"அந்தக் குட்டி யாரு ஸ்டீபன், உங்க ஜாதியா?"

"ஜார்ஜினா... இந்தியன் ஏர்லைன்ஸில் கிளார்க். சம்பளம் கேட்காதே."

"ஏன்?"

"இரண்டு பங்கு இத்தினிக்கும் அஞ்சு ஆறு வருஷ சர்வீஸ் கூட இருக்காது."

"டக்கரா ட்ரஸ் பண்ணியிருக்கா."

"சலவை அலவன்ஸ தராங்க."

"நிஜம்மாவா? பேசாம நீ டாவடியேன் உங்க... ஜாஇன்றே..."

"டாவடிக்கலாம். ஒரு பையன் ஆறு வயசுல இருக்கான்."

"கல்யாணமானதா...தெரியலையே பார்த்தா!"

"அவ புருஷன் ஏர்லைன்ஸ்ல வேலை செய்தவன். விஸ்கான்ட்டுறு பேரு. எண்டபத்திநாலுல பாம் வெடித்து துல செத்துப் போனான்."

"உன் ஒறவுகாரனா?"

"தெரியும்!"

"உடம்பு நல்லா இருக்குப்பா கெட்டிக்காரப் பொண்ணா வேற தெரியுது."

"வந்த வேலை கவனி."

"டீ சாப்பிடறதைச் சொல்றியா?"

"என் கொயரிடா எம்மேல?"

"இனிய நண்பர்களே, இன்றைய கூட்டம் ஒரு முக்கியமான பிரச்னையைக் குறித்துக் கூட்டப்பட்டிருக்கிறது."—இந்தியன் ஏர்லைன்ஸ் செக்யூரிடி ராமசுவாமி எழுந்து பேசத்துவங்கினார். "பல ஏஜென்ஸிகள் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டிய இடம் ஏர்போர்ட். நமக்குள் தெளிவான—தீர்க்கமான புரிந்து கொள்ளல் இல்லாமல் பிரச்னைகள் குறையாது."

"எல்லா மீட்டிங்லயும்தான் இந்தத் தெளிவான—தீர்க்கமான புரிந்து கொள்ளல் பேசறீங்க. அது வர்றதா காணும்!" ஏர் இந்தியா ஆபீஸர் உரக்கப் பேசினார்.

"அவனவன் வேலையை ஒழுங்கா செய்தா பிரச்னை வராது. வேலை செய்ய சோம்பேறித்தனம். அடுத்தவன் மேல பழி போடறீங்க." ஏர்போர்ட் அத்தாரிடி சலித்துக் கொண்டார்.

"புல்லுவெட்டப் பத்து பேர் அனுப்பினா, நீ அனுப்பின ஆளு குறுக்க வரான்னு கம்ப்ளெயிண்ட். புல்லு வெட்டறவன் கூட நானா போக முடியும்?"—தொடர்ந்து பேசினார்.

''போகணும்.'' குணசேகரன் இடைமறித்தார். ''அப்போ செக்யூரிடி எதுக்கு? கேட்ல உட்கார்த்து லோர்க்கடலை சாப்பிடவா?''

''புல் வெட்டறவனுக்குச் சொல்லி அனுப்பணும். 'ரன்வே'ன்றது என்னா...அதுல ஏன் நுழையக்கூடாதுன்னு சொல்லணும். ரோட்ல போறவன்—வர்றவனைப் புடிச்சுப் புல் வெட்ட அனுப்பி அவனுக்கு பாஸ் கொடுன்னு கேட்டா இப்படித்தான் ஆவும்.''

''யார் ரோட்ல போறவன்...எட்டு வருஷமா ஒரே காண்ட்ராக்டர்.''

''காண்ட்ராக்டரா புல் வெட்டறான்? ரங்கராஜு, அந்தப் பையனைக் கூட்டிக்கிட்டு வா.'' குணசேகரன் குரலில் கோபம் இருந்தது 'செக்யூரிடி லோர்க்கடலையா சாப்பிடறான்...லேக லைக்கிறேன் பார் இப்ப.' உள்ளே வன்மம் தோன்றிற்று.

சின்னராசு மெள்ள கதவு திறந்து உள்ளே வந்தான்.

''ஏம்பா, உன் பேர் என்ன...? ஊர் எது?''

''சின்னராசுங்க, ஊரு, தேனிக்குப் பக்கம் ஆலங்காடுங்க.''

''மெட்ராஸ் ஏன் வந்தே...? எப்போ வந்தே?''

''இரண்டு நாள் முன்னாடி லாரில உழவர் கட்சிக் கூட்டத்துக்கு வந்தேங்க.''

''உன்னை புல்லு வெட்ட யார் கூப்பிட்டது?''

''ஏர்போர்ட் பார்த்ததும் லாரி வுட்டு இறங்கி ரெண்டு நாள் விமானம் இறங்கறது— ஏறது பார்த்தேங்க. புல் வெட்ட வரியா?' ன்னாங்க.''

''யார் கூப்பிட்டது உன்னை?''

''மீசை வெச்சிக்கிட்டு வயசானியா ஒரு ஆளுங்க, பேர் தெரியலைங்க.''

''ஏன் ஏரோப்ளேன்கிட்ட போனே?''

''இதுவரைக்கும் அண்ணாந்து பார்த்ததுங்கறதுக்கிட்டக்க பார்த்ததும் ஒரு சந்தோஷத்துல கையாட்டறாப்பல... கையில கத்தி இருந்தது மறந்தே போச்சுங்க... தப்புத் தாங்க.''

''நீ போலாம்.'' குணா அவனை வெளியேற்றினார். ''ஆக, ஊர் பார்க்க வந்த உழவர் கட்சி உறுப்பினரை, ஆலங்காடு விவசாயச் சிறுவனை—ஏர்போர்ட்டில் புல் வெட்ட அனுப்பியது யார் குற்றம்?''

கூட்டம் மௌனமாய் இருந்தது.

''அவன் யார் பொறுப்பு?''

''புல் வெட்டற காண்ட்ராக்ட் இனிமே செக்யூரிடியே பார்த்துக்குமா?'' இன்டர் நேஷனல் ஏர்போர்ட் அத்தாரிடி உறுமியது.

அவங்க அவங்க வேலையைப் பொறுப்பா பார்த்தாபோதும். குணா குத்திக் காட்டினார். ''எனக்குத் தெரியாது. இனிமே நீயே எடுத்துக்க' என்பது தட்டிக் கழித்தல்.''

''பிரச்னை புரியுது. தீர்வு சொல்லுங்க குணசேகரன்.''

''எங்கள் டிபார்ட்மெண்ட் அளவில் தீர்வு இதுதான். இனி செக்யூரிடி கடுமையாகும். தேவையின்றி ஏர்போர்ட்டுகு உள்ளே நுழைய பாஸ் தரமட்டாது. உள்ளேவேலை செய்பவர்கள் எல்லோருடைய பெயரும் எங்களுக்குத் தேவை. நிச்சயமாய் அனைவரும் சட்டையில் அடையாள கார்டு குத்தியிருக்க வேண்டும். அடையாள கார்டு இல்லாதவர் எவராயினும் தடுத்து நிறுத்தப்படுவார்கள். புல் வெட்ட முதல் நாள் அனுமதி வாங்கவேண்டும். பாஸ் இலலாதவர்கள்—தொலைத்துவிட்டவர்களுக்காக இரண்டு நாள் அவகாசம் தருகிறோம். பாஸ் வாங்கவேண்டும்

''போகணும்'' குணசேகரன் இடைமறித்தார். ''அப்போ செக்யூரிடி எதுக்கு? கேட்ல உட்கார்ந்து லேர்க்கடலை சாப்பிடலா?''

''புல் லெட்ட றவனுக்குச் சொல்லி அனுப்பணும். 'ரன்லே'ன்றது என்ன?...அதுல ஏன் நுழையக்கூடா துன்னு சொல்லணும். ரோட்ல போறவன்—வர்றவ னைப் புடிச்சப் புல் லெட்ட அனுப்பி அவனுக்கு பாஸ் கொடுன்னு கேட்டா இப்படித்தான் ஆவும்.''

''யார் ரோட்ல போறவன்...எட்டு லருஷமா ஏரே காண்ட்ராக்டர்.''

''காண்ட்ராக்டரா புல் லெட்டறான்? ரங்கராஜ், அந்தப் பையனைக் கூட்டிக்கிட்டு வா.'' குணசேகரன் குரலில் கோபம் இருந்தது 'செக்யூரிடி லேர்க்கடலையா சாப்பிடறான்...லேக லைக்கிறேன் பார் இப்ப.' உள்ளே லன்மம் தோன்றிற்று.

சின்னராசு மெள்ள கதவு நிறந்து உள்ளே லந்தான்.

''ஏம்பா, உன் பேர் என்ன...? ஊர் எது?''

''சின்னராசுங்க, ஊரு, தேனிக்குப் பக்கம் ஆலங் காடுங்க.''

''மெட்ராஸ் ஏன் வந்தே...? எப்போ வந்தே?''

''இரண்டு நாள் முன்னாடி லாரில உழவர் கட்சிக் கூட்டத்துக்கு வந்தேங்க.''

''உன்னை புல்லு லெட்ட யார் கூப்பிட்டது?''

''ஏர்போர்ட் பார்த்ததும் லாரி லுட்டு இறங்கி ரெண்டு நான் விமானம் இறங்கறது— ஏறது பார்த் தேங்க. புல் லெட்ட லரியா? ன்னாங்க.''

''யார் கூப்பிட்டது உன்னை?''

''மீசை லெச்சிக்கிட்டு லயசானியா ஒரு ஆளுங்க, பேர் தெரியலைங்க.''

''ஏன் ஏரோப்ளேன்லிட்ட போனே?''

''இதுவரைக்கும் அண்ணாந்து பார்த்ததுங்க.லிட்டக்க பார்த்ததும் ஒரு சந்தோஷத்துல கையாட்ட றாப்பல... கையில கத்தி இருந்தது மறந்தே போச்சுங்க... தப்புத் காங்க.''

''நீ போலாம்.'' குணா அவனை லெளியேற்றினார். ''ஆக, ஊர் பார்க்க வந்த உழவர் கட்சி உறுப்பினரை, ஆலங்காடு விவசாயச் சிறுவனை—ஏர்போர்ட்டில் புல் லெட்ட அனுப்பியது யார் குற்றம்?''

கூட்டம் மௌனமாய் இருந்தது.

''அவன் யார் பொறுப்பு?''

''புல் லெட்டற காண்ட்ராக்ட் இனிமே செக்யூரிடியே பார்த்துக்குமா?'' இன்டர் நேஷனல் ஏர்போர்ட் அத்தாரிடி உறுமியது.

அவங்க அவங்க வேலையைப் பொறுப்பா பார்த்தா போதும். குணா குத்திக் காட்டினார். ''எனக்குத் தெரியாது. இனிமே நீயே எடுத்துக்க' என்பது தட்டிக் கழித்தல்.''

''பிரச்னை புரியுது. தீர்வு சொல்லுங்க குணசேகரன்.''

''எங்கள் டிபார்ட்மெண்ட் அளவில் தீர்வு இதுதான். இனி செக்யூரிடி கடுமையாகும் தேவையின்றி ஏர்போர்ட் டுகுள் உள்ளே நுழைய பாஸ் தரமட்டாது. உள்ளேவேலை செய்பவர்கள் எல்லோருடைய பெயரும் எங்களுக்குத் தேவை. நிச்சயமாய் அனைவரும் சட்டையில் அடையாள கார்டு குத்தியிருக்க வேண்டும். அடையாள கார்டு இல்லாதவர் எவராயினும் தடுத்து நிறுத்தப்படுவார்கள். புல் லெட்ட முதல் நாள் அனுமதி வாங்கவேண்டிம். பாஸ் இலலாதவர்கள்—தொலைத்துவிட்டவர்களுக்காக இரண்டு நாள் அவகாசம் தருகிறோம். பாஸ் வாங்கவேண்டும்

இரண்டு நாளுக்குப் பிறகு எல்லா வழிகளிலும்— எல்லா இடங்களிலும் செக்யூரிடி செக் கடுமையாகும்.''

''கேட்க நன்றாய் இருக்கிறது.''

''செயலிலும் நடத்தப்படும்.''

''இது நீர்வா, இல்லையா என்று தெரியவில்லை. எனினும் குணசேகரன் நடவடிக்கைகளுக்கு நன்றி. அவருக்கு ஒத்துழைப்பு தருவோம். வேறு பிரச்னைகள் என்ன...?''

கூட்டம் மௌனமாய் இருந்தது.

''மறுபடி பிரச்னை வரும்போது கூட்டம் கூடலாம். இப்ப ஆளை விடுங்க.''—வைத்தி பரபரத்தான்.

''அப்ப எனக்கு வந்த மெமோ...?''—ஸ்டீபன் உரக்கக் கேட்க...

''மெமோ...என்ன சார்... இப்படி நடந்ததுக்குக் காரணம் என்னன்னு உங்க பக்க விளக்கம் சொல்லுங்க. டில்லிக்கு அனுப்பலாம்.''

''நப்பு எக்பேர்ல இல்லை சார்.''

''அப்படியே எழுதுங்களேன்.''

வைத்தி எழுந்து ஜார்ஜினாவிடம் போய்த் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். தாமதமானாலும் வின்சென்ட் மறைவுக்குத் துக்கம் கேட்டான். வின்சென்ட் மாதிரி ஒரு கெட்டிக்கார ஏர்லைன்ஸ் ஆபீஸர் இருக்க முடியாது என்றான்

ஸ்டீபன் மனோகரனுக்கு வைத்தியின் அட்டகாசம் ஆச்சரியமாய் இருந்தது. வின்செட்டைப் பார்த்தே பிராமல், பலவருடம் பழகியதுபோல் எப்படிப் பொய் சொல்ல முடிகிறது வைத்தியால்?

நான் என்.ஏ. குவார்ட்டர்ஸில் இருக்கிறேன். என்.ஏ. பன்னிரண்டு. உங்கள் குவார்ட்டர்ஸ் என்ன?''

''ஏஸி ஒன்பது.''

''நல்லது. உங்கள் மகனுக்கு என் அன்பைச் சொல்லுங்கள். அவனை எனக்குப் பார்க்க வேண்டும். வின்சென்ட்டை மறுபடி பார்ப்பது போல் இருக்கும்.''

'மாலை வாருங்களேன்''

''நிச்சயம்.'

கம்பீரமாய் நடந்து வேறு யாரோடோ பேசத் துவங்கினான்.

''மிஸ்டர் ஸ்டீபன் மனோகரன்...''—ஜார்ஜினா நெருங்கினாள்.

''உங்கள் பதிலின் பிரதி எங்கள் ஃபைலுக்கு வேண்டும்'

''அனுப்புகிறேன் மேடம்.''

''வின்சென்ட் உங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்.''

ஸ்டீபன் தலைகுனிந்து கொண்டான். வின்சென்ட்டோடு .'.புட்பால் விளையாடிய நேரம், வாரப் பத்திரிகை பரிமாறிக் கொண்டநேரம் மனசில் ஓடிற்று.

''அவர் என் ஃபுட்பால் தோழர்.''

''தெரியும்.''

''வின்சென்ட் செத்துப் போனபோது நான் தாங்க முடியாது அழுதேன்.''

''தெரியும். பின்பக்கம் சலப்பெட்டி தூக்கினீர்கள். தோளில் சலப்பெட்டி வைத்து முகம் புதைத்தபடி அணைத்துக் கொண்டு போனீர்கள்''

''நான் உங்களைக் கவனிக்கவில்லை.''

"நான் கவனித்தேன். அந்த நேர அழுகையிலும் என்னைப் போலவே வின்சன்ட்டுக்குப் பிரியமானவர்கள் இருக்கிறார்கள் என்று கர்வப்பட்டேன்."

"தலமாய் இருக்கிறீர்களா மிஸஸ் ஜார்ஜினா?"

"இருக்கிறேன்."

"கர்த்தருக்குத் தோத்திரம்."

"கர்த்தருக்குத் தோத்திரம்."

உண்மையான அன்புக்கும் உதட்டு அன்புக்கும் பெண்ணால் சுலபமாய் வித்தியாசம் கண்டுபிடித்துவிட முடியும். தலைகுனிந்து தரை நோக்கித் தன் புருஷன் பற்றிப் பேசுகிற ஸ்டீபனையும், 'வின்சென்ட் என் நண்பன்' என்று கண்ணால் மார்புப் பகுதியை அளவெடுக்கிற வைத்தியையும் இனம் கண்டு கொள்ள முடியும்.

ஜார்ஜினா வின்சென்ட்டோடு வாழ்ந்தது ஆறு மாதம் தான் அந்த ஆறுமாதமும் கவலுமாதிரிதான் இருக்கிறது. இன்னும் நிறைய—வின்சென்ட்டைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆவல் வருகிறது.

யாராவது வின்சென்ட் பற்றிப்பேசினால் 'வின்சென்ட் எல்லாம் தெரியும்' என்று சொன்னால் உடனே பேச ஆவல் வருகிறது. இன்னும் யாரெல்லாம் நட்பு என்று கேட்கத் தோன்றுகிறது.

கிளம்பத் தயாரான ஸ்டீபனை நிறுத்தினாள். 'வின்சென்ட் நிறையப்பேரைத் தன் சினேகிதன்னு சொல்லியிருக்காரு. உங்களைப்பத்திக் கூடப் பேசியிருக்காரு. அவர் பெஸ்ட் ஃப்ரெண்ட் யாரு, உங்களுக்குத் தெரியுமா?"

"சத்தி... சத்யநாராயணன். உங்க டிரா...பிக் சூபர்வைஸர்."

"ஆனா அவர் பேசறதில்லை யார் கூடவும்..."

"ஆமாம்...சத்தி ஒரு மாதிரி ஆயிட்டான், அந்த பாம் மேட்டருக்குப் பிறகு."

"காதல் தோல்வின்னு சொன்னாங்களே..." ஜார்ஜினா ஆச்சரியத்தோடு கேட்டாள்.

"அந்தப் பொண்ணு அலாய்ட் பண்ணிடுச்சு."

"ஏன்?"

"தற்கொலை ட்ரை பண்ணாராம். பயத்துருச்சு. பாம் மேட்டர் நடந்து பத்து நாள்ல இது நடந்தது. போலீஸ் கேஸாயிட்டு, அப்புறம் அழுத்திட்டாங்க, அதுலேர்ந்து சரியில்லை."

ஜார்ஜினா திகைத்தாள்.

7

"இந்தப் பையனை நான் ரிலீஸ் பண்றேங்க... சரியா?"—குணசேகரன் ஏர்போர்ட் அத்தாரிடியிடம் கேட்டார்.

"வெட்டிப் போடுங்க இரண்டு துண்டான்னு. நானா கேட்டேன்?"

"நீங்க கேட்டா வெட்டிற முடியுமா—ஊர்ல வெட்ட வேண்டிய ஆளெல்லாம் உலாத்தற போது..."

"உங்க இஷ்டம்."

"ரங்கராஜு, பையனை அனுப்பிடு. இனி ஏர்போர்ட் பக்கம் தலைகாட்டக் கூடாதுன்னு சொல்லு." பையனிடம் கான்ஸ்டபிள் ரங்கராஜு இதை அதட்டலாய்ச் சொல்ல, அவன் கால்தொட்டுக் கும்பிட்டுவிட்டு வெளியேறினான். பசித்தது. எங்கே போக என்று தெரிய

வில்லை. தொலைவில் லைத்தியம் ஸ்டேபனும் நடந்து போவதைப் பார்த்தான் பின்னே இடைவெளிவிட்டு அவர்களைத் தொடர்ந்தான்.

"என்ன சின்னசாமி, மௌனமா உட்கார்ந்திருந்திங்க... தூங்கிவீங்களா மீட்டிங்ல?"

"இல்லைங்க...கவனிச்சுக்கிட்டிருந்தேன்"

"என்ன கவனிச்சீங்க?"

"நீங்க ஏர்பேரேட் அத்தாரிடி ஆளைப் பேசவிட்டு மடக்கினதை, ராமசுவாமி ஐயரு டீ கொடுத்துக் கூர்வத்தோடு உட்கார்ந்திருக்கறதை ஏர்போர்ட் அத்தாரிடி ஆளு பயந்து பரபரத்ததை, அந்தப் பொண்ணை டவர் பசங்க இரண்டும் டாவடிச்சதை."

"அடட...நான் பார்க்கலையே"

"நான் பார்த்தேன்."

"ஏங்க, நல்லா இருக்கா இது... உங்க லயசுக்கு?"

"நான் மைனஸ் ஸ்குவாடு தம்பி. ஒரு இலை அசைஞ்சா ஒரு இடத்துல மண்ணு நிறம் மாறினா உத்து உத்துப் பாக்கறவன்... மனுஷங்க மாறுறது தெரியாத போயிடுமா கண்ணுக்கு? அப்படிப் பழகிப் போச்சு."

"எப்படிக் கண்டுபிடிச்சீங்க?"

"பசங்க ரெண்டும் ஜார்ஜினாவைக் கவனிச்சுப் பேசிக்கிட்டிருந்தானுங்க. ஐயர் பையன் ஒடிப்போய்ப் பேசினான். அடுத்த புள்ளை பேர் தெரியலை."

"ஸ்டீபன் மனோகரன்."

"அட, கிறிஸ்தவனா... அது நிதானமா பேசிச்சு. அது பேச்சு ஜார்ஜினாவுக்குப் புடிச்சது போல."

"சின்னசாமி, பெரியாளு நீங்க நான் ஏதாலது தப்பு பண்ணினேனா...?"—குணா ஆர்வமாய்க் கேட்டார்.

"ஒரு தப்பு பண்ணீங்க."

"என்ன?"

"பையனை விட்டுரட்டுமானு கேட்டிருக்கக்கூடாது. சைலண்டா இருந்திருக்கணும்."

"ஏன்?"

"எனனா ஐடென்டிடி கார்டு இல்லேனு மாட்டினா தண்டிக்க முடியாது வுட்டுருங்க இந்த ஒரு முறையும்னு கோரிக்கை வரும். மாட்டேன்னா, குறுக்கே ஓடின பையனை வுட்டுட்டீங்க...ஐடென்டிடி கார்டு இல்லேனு மடக்கறீங்களேனு பேச்சு வரும்."

"அட, ஆமாம். தப்புத்தான்! அப்புறம்?"

"ராமசுவாமி ஐயருதானே இந்தியன் ஏர்லைன்ஸ் செக்யூரிடி?"

"ஆமா!"

"கொஞ்சம் படபடப்பான ஆளு. எல்லாரையும் எடை போடறாரு என்னை உத்து உத்துப் பார்த்தாரு. இவன் எதுக்கு இங்கே வேஸ்ட்டுனு ஒரு நினைப்பு."

"சே...சே."

"எனக்கும் அவருக்கும் ஒரு நாள் முட்டப் போவுது."

"எப்படிச் சொல்றீங்க?"

"உள்ளே குருவி சொல்லுது."

"எப்படீங்க?"

"நான் மைன்ஸ் ஸ்குவாடுங்க. உள்ளே கத்தற குருவி குரலையும் நான் மதிக்கணும்."

"கடவுளே...நான் வரேங்க. மணி ஆறாயிடுச்சி. இப்படியே வீட்டுக்குப் போறேன்."

"வீடு கிட்டயா..."

"இல்லை. தேனாம்பேட்டை."

''பசங்க உண்டா?''

''ஒரு பொண்ணு.''

''பேர் என்னா?''

''வஞ்சிக்கொடி.''

''அடி சக்கை...வாழ்க வஞ்சிக்கொடி. வரேங்க...''— மெள்ள சல்யூட் அடித்தார்.

''என்னத்துக்கு சல்யூட்? நான் லயசுல இன்னவன்.''

''அதிகாரி அதிகாரிதான். வரேன் தம்பி.''

''செய்யுங்க சின்னசாமி.''

சின்னசாமி மெள்ள நடந்து ட்ரங்க் ரோடு கடந்து குவார்ட்டர்ஸ் பக்கம் போனார். எந்தக் காரணமும் இல்லாமல் அவர் நெஞ்சுக்கூட்டுக்குள் ஒரு குருவி கத்தியது

அவன் பன்னாட்டு வருகை என்கிற பெரிய போர்டின் கீழ் நின்றிருந்தான். காலை எட்டு மணிக்கு ஏர்போர்ட்டுக்கு வந்தான். அவன் தமக்கை மாஸ் என்கிற மலேசிய விமானத்தில் சிங்கப்பூரிலிருந்து வருகிறாள்.பத்து மணிக்கு விமானம் வரும். வாசலில் காசோடு காத்திரு என்று நேற்றே போனில் சொன்னாள். பத்து மணிக்கு வர வேண்டிய மால்,இரவு எட்டு மணிக்கு வரும் என்று நாலே காலுக்குச் சொன்னார்கள்.

டெக்னிகல் ஸ்நாக் என்று சொன்னார்கள்.

அவனுக்கு போர் அடித்தது.

அவன் தமக்கைதான் அவன் வீட்டுக்கும் பணம் காய்ச்சி மரம். அவள் அடிக்கடி சிங்கப்பூர், ஹாங்காங் என்று யாரோடாவது போவாள். திரும்பத் தனியே வருவாள். வரும்போது சீப்பு-கண்ணாடியிலிருந்து சென்ட், டி.வி.

லரை லாங்கி வருவாள். சென்னையில் தெரிந்தவளிடம் இரட்டை விலை சொல்லி விற்பாள்.

அவள் நடிகை ஆக முயற்சித்தாள். அதிர்ஷ்டம் இல்லை. முதல் படம் ஓடவில்லை. இரண்டாவது படம் வெளிவரவில்லை மூன்றாவது படம் பாதி ஷூட்டிங். பிறகு இவளை நீக்கிவிட்டு வேறு ஆள் போட்டுவிட்டார்கள். டி. வி யில் இரண்டு மூன்று நாடகம் செய்தாள். ஆனால்,அதைவிட சிங்கப்பூர், ஹாங்காங் டிரிப் சுமாரான வருமானம் தந்தது. சென்னையிலுள்ள பணக்கார ஆட்களுடன் வெளிநாடு போய் ஒரு வாரம் தங்கி, பிறகு ஊர் திரும்புவது லழக்கமாயிற்று. விமானக்கட்டணம் அவர்களே கொடுத்து விடுவார்கள் பொருட்கள் வாங்க இவள் காசு எடுத்துப் போவாள். சில சமயம் புடவை பார்டரில் டாலர் நோட்டுகள் தைத்துக் கொண்டு போவாள்.

அவள் மாஸ் விமானத்தில்வருகிறாள். என்னகொண்டு வருகிறாள் !என்று தெரியவில்லை. எப்போது விமானம் வரும் என்று தெரியவில்லை. இது கொடுமை. காத்திருக்கும் கொடுமை! அப்படி வந்நாலும் கஸ்டம்ஸ் சுலபமாய் விடுவானா தெரியவில்லை. போன முறை தாளித்து விட்டான். சென்ட், க்யூடெக்ஸுக்குக் கூட வரி போட்டான். ஆனால், கெட்டிக்காரத்தனமாய் கொண்டையில் ஆறு சவரன் நகை பதுக்கிக் கொண்டு வந்தாள். அது நல்ல விலைக்குப் போயிற்று. மாட்டினால் கம்பி எண்ண வேண்டி வரும். இந்த முறை எங்கே எதை ஒளித்து வருகிறாளோ தெரியவில்லை. மாட்டுவானா மாட்டானா, தெரியவில்லை

அவன் படபடப்பாய் இருந்தான். கோபமாய் இருந்தான். 'சிங்கப்பூர் ஏர்போர்ட் ட்யூட்டி ஃப்ரீயாம். இங்கே ட்யூட்டி .'.ப்ரீ கொடுத்தால் என்ன? எதுக்கு கஸ்டம்ஸ்... சாவடிக்கறானுங்க பாவிங்க. என்பது ரூபா சென்ட்டுக்கு நூறு ரூபா வரி—முணுமுணுத்தான்.

வீட்டுக்கு டெலிபோன் செய்தான்.

''நங்கேயே இருடா'' என்று அம்மா கூவினாள். வேறு என்னமோ சொன்னாள். காதில்விழவில்லை. டெலிபோன் சரியாக வேலை செய்யவில்லை. 'இருக்கறது எல்லாம் ஒட்டை டெலிபோன். இதுல வரி வேற.'—முணு முணுத்தான். 'இந்த நாட்டை பாம் போட்டு சாவடிக்கணும்!'

உள்ளே மின்னல் எரிந்தது.
மறுபடி டெலிபோன் செய்தான்.
''ஹலோ...''
''ஏரோட்ராம் ஆபீஸரா?''
''யெஸ்!''

''உங்க ஏர்லைன்ஸ் பாம்பே விமானத்துல படம் பாம் வெச்சுருக்கம். கரெக்டா எட்டு பத்துக்கு அடி வெடிக்கும்''—போன் துண்டித்தான்.

'சாவட்டும்'—சந்தோஷமாய் வெளியே வந்தான். வீட்டில் துங்கியை மாற்றி அப்பாடா என்று உட்கார்ந்த ராமசுவாமிக்கு போன் வந்தது.

''இண்டியன் ஏர்லைன்ஸ் செக்யூரிடி ஆபீஸரா...என் பேர் அப்துல் லத்தீ..ப்''
''யெஸ்!''

''சார். நான் ட்யூட்டி ஆபீஸர். இந்தியா ஏர்போர்ட் அத்தாரிடி. ஒரு அநாமதேய டெலிபோன் கால்வந்தது... பாம்பே ..ப்ளைட்ல டைம் பாம் வெச்சிருக்கறதா. 'எட்டு பத்துக்கு வெடிக்கும்'னான்.''

''உடனே அங்கே வரேன் மிஸ்டர் லத்தீ..ப்.''

மறுபடி உடை மாற்றிக்கொள்ளும்போது, உட்கார விடாத இந்த உத்தியோகத்துக்கு ஏன் வந்தோம் என்று தோன்றியது.

அடுத்த பத்தாவது நிமிடம் முழு யூனிஃபார்மில் இந்தியன் ஏர்லைன்ஸ் செக்யூரிடி ஆபீஸர் ராமசுவாமி

விமானத்துக்கு அருகே வந்து நின்றார். தனக்குக் கீழே இருந்த இருபத்துநாலு பேர்படையை மூன்றாய்ப் பிரித்தார்.

''முதல்ல—டலருக்கு இன்ஃபார்ம் பண்ணுங்க. வர்ற ஃப்ளைட்டை டைவர்ட் பண்ணச்சொல்லுங்க. இரண்டாவது—ஏர்போர்ட் அத்தாரிடிக்குஇன்..பார்ம் பண்ணுங்க. தனி இடத்துக்கு இந்த விமானம் போகணும்னு சொல்லுங்க மூணாவது-செக்யூரிடி. நாலாவது பாம் ஸ்குவாட்.''

இண்டியன் ஏர்லைன்ஸ் பாம்பே .ப்ளைட் தரைக்கு வர, விமானப் பயணிகள் இறங்கியதும் தனியே டிராக்டர் மூட்டி இழுத்துப்போகப்பட்டது. டவரிடம் நகர அனுமதி வாங்கிப் பக்கப் பாதை வழியாக ரன்வேயில் நுழைந்து திரும்பி ஒரு தனி ரன்வேக்குப் போயிற்று. அந்த ரன்வே ஏர்போர்ட்டிலிருந்து அரை மைல் தொலைவில் இருந்தது. சுற்றுப்பகுதியில் ஆளே இல்லாத இடத்துக்கு விமானம் வந்துநின்றுவிட்டது. இழுத்து வந்த டிராக்டர், தன்னைத் துண்டித்துக் கொண்டு விலகி ஓடிப் பதுங்கிக் கொண்டது.

தீயணைக்கும் இன்ஜின்கள்..ஆம்புலன்ஸ்அரைபர்லாங் தூரத்தில் நின்றன. ஏணி, தண்ணீர்க் குழாய்கள் தயார் நிலையில் இருந்தன.

செக்யூரிடிலிருந்து தனியாய்ப் பதினைந்து போலீஸார் ஓடிவந்து ஜீப்புகள் இரண்டு பக்கமும் விலகி நின்று கொண்டார்கள்.

ராமசுவாமி கலவையோடு விமானத்தைச் சுற்றி வந்தார். மாடிப்படி வண்டி வரவழைக்கப்பட்டுக் கதவில் பொருத்தப்பட்டது. யார் உள்ளே ஏறுவது...ஏறி நடக்கும் அதிர்ச்சியில் குண்டு விட்டால் என்ன செய்வது?

''பாம் ஸ்குவாட் எங்கேய்யா?''—கையிலுள்ள வயர்லெஸில் தன் கீழே உள்ள அதிகாரியிடம் ராமசுவாமி சீறினார்.

''வரமாட்டேன்றாங்க சார்.''
''வரமாட்டேன்னு...எங்கேய்யா இருக்காங்க?''
''இங்கேதான் சார். பைனாகுலர்ல பார்த்துக்கிட்டு டைட்டதான் நிக்கறாங்க.''

''கூப்பிடுய்யா லயர்லெஸ்ல.''
''காப்டன் ராஜா ஹியர்.''
''காப்டன், செக்யூரிடி இண்டியன் ஏர்லைன்ஸ் ராஜா.''
''கோ அஹெட் செக்யூரிடி.''
''உள்ளே பாம் இருக்கறதா அனானிமஸ் கால் வந்தது.''

''சந்தோஷம்.''
''நீங்க வரீங்களா?''
''எதுக்கு?''
''பாம் இருக்குனு தகவல் காப்டன்.''
''இருக்கிறதா?''
''புரியலில்லை.''
''பாம் இருந்தால் கூப்பிடுங்கள். வருகிறோம்.''
''இருக்கானு எப்படி நான் கண்டுபிடிப்பது?''

''இந்தியன் ஏர்லைன்ஸ் செக்யூரிடி மீசை வளர்க்கறதுக்கு மட்டுமா?''
ராமசுவாமிக்குப் பெரிய மீசை—முறுக்கு மீசை.
''நான்சென்ஸ். வாட் ஆர் யூ டாக்கிங்?''

''வாட் யுவர் டங் மிஸ்டர், நீங்கள் ஒரு ராணுவ அதிகாரியிடம் பேசுகிறீர்கள் என்று நினைவு கொள்ளுங்கள்.''

''இப்போது வரப்போகிறீர்களா, இல்லையா?''
''உங்கள் கட்டளைக்குக் கீழ்ப்படிய இந்தியராணுவம் இல்லை.''
''பல்குத்தி நிற்கவா பாம் ஸ்குவாட்?''

''மிஸ்டர் செக்யூரிடி ஆபீஸர் பாம் இருப்பின் தகவல் சொல்லுங்கள்...ஸ்குவாட் வரும்.''

''யார் தேடுவது?''

''நீங்கள். இண்டியன் ஏர்லைன்ஸ் செக்யூரிடி தேட வேண்டும்.''

''அட்ராஷியஸ்''

''ராஜா என் கடமைகள் என்னவென்று எனக்குத் தெரியும்.''

ராமசுவாமி இரண்டு ஆட்களுடன் ஏறினார். ஒவ்வொரு சீட்டாய் நூற்றியெழுபது சீட்டும் தேடினார் காக்பிட் அலசினார் காபி தம்ளர் ஸ்டாண்ட், எலெக்ட்ரிக் ஓவன், டாய்லெட்...ஒரு காக்கிப் பை டாய்லெட்டில் இருந்தது. கவனமாய்ப் பிரித்துப் பார்க்க உள்ளே வெற்றிலை எச்சில் துப்பப்பட்டிருந்தது. மேலே பெட்டி வைக்கும் இடம் முழுவதும் தேடினார். தலையணைகள் பிளாங்கெட்டைப் புரட்டிப் பார்த்தார். எதுவும் இல்லை. மணி எட்டு. இது பொய்த் தகவல் இல்லாத வெடிகுண்டு. பாம் இருந்தால் தான் ஸ்குவாட் வருமா...வரவழைக்கிறேன் பார். வெற்றிலை எச்சிலைப் பிரித்து முகர்ந்த கோபம் வேறுபக்கம் திரும்பியது.

''நீ போய் என் கார் டிக்கில ஒரு உடைஞ்ச ஃப்ளாஸ்க் இருக்கும் கொண்டா அதை மறைச்சுக் கொண்டா.''

ஃப்ளாஸ்க் வந்தது. சீட்டின் பின்பக்கம் உள்ள ஆங்கில பேப்பர் ஒன்றை உருவினார். ஃப்ளாஸ்க்கை உருட்டி மடித்து மேலும் கீழும் கவனமாய்ச் செருகி ஒரு சீட்டுக்கு அடியில் வைத்தார்.

லயர்லெஸ் சுவிட்ச் தட்டிவிட்டார்.

''பாம் ஸ்குவாட், செக்யூரிடி ஆபீஸர் ஹியர்.''

"கோ அஹெட் செக்யூரிடி"—காப்டன் குரல் கேட்டது.

"ஒரு பொட்டலம்—ஸீட்டுக்கு அடியில் ஒரு அடி நீளம் ஆறு அங்குலவிட்ட உருளையாய் ஒரு பொட்டலம் இருக்கிறது. என்ன செய்ய?"

"தொடவேண்டாம். அப்படியே இருங்கள். ஸ்குவாட் லரும்."

"வாருங்கள்."

விமான ஸீட் விட்டு இறங்கி விலகி நின்று கொண் டார். தொலைவில் ஒரு ஜீப் சிவப்பு விளக்கு மின்ன, விமானம் நோக்கி வந்து கொண்டிருந்தது.

8

சின்னசாமி ஜீப் விட்டுக் கீழிறங்கி "எந்த இடம் ஐயா?" என்று கேட்டார்.

"எட்டாம் நம்பர் பி ஸீட் ஐயா"—பதில் கேலி இருந்தது.

சின்னசாமி மௌனமாய் விமானத்துக்குள் ஏறினார். உள்ளே மங்கலான வெளிச்சம் இருந்தது. காக்பிட் டிலிருந்து கதவுவரை ஆறு ஸீட் வரிசைகள் ஏழாவது கதவுக்கு அருகில், எட்டாவது அடுத்த வரிசை. பி என்பது ஜன்னலுக்கு அடுத்த ஸீட்.

ஜன்னல் வழியே எட்டிப்பார்த்தார். விமான இறக்கை ஐந்து ஸீட் தள்ளி இருந்தது. இறக்கையில்தான் பெட்ரோல் டாங்க் இருக்கிறது. வெடிவேலை தெரிந்தவன் பெட்ரோல் டாங்க் அருகில் பாம் வைப்பானே தவிர இப்படிக் கதவுக்கு அருகில் வைப்பானா?

மறுபடி ஜன்னல் வழியே எட்டிப்பார்க்க, ராமசுவாமி யும் ஒரு செக்யூரிடியும் நிற்பது தெரிந்தது. அந்தச் சிரிப்பு சரியாக இல்லை. குண்டு இருக்கிற பயம் அவர்கள் உடம்பில் இல்லை. ஆனால், இதை நம்பித் தொட முடியாது. மனசுக்குள்ளே குருவி அமைதியாக இருந்தது. "என்னா சொல்றே...தொடட்டுமா வேணாமா?"

குருவி பதில் சொல்லாது இருந்தது.

குருவி கூடாததை வைத்துத் தொட முடியுமா? முடியாது.

மர கிளிப் எடுத்து பேப்பரில் மாட்டினார். மெல்லிய கம்பியை கிளப்பில் கவனமாய்ச் சுற்றினார். இழுத்து வாசலுக்கு வந்து படியிறங்கி விலகி மெள்ள இழுத்தார். இழுபட்டது. பிறகு சிக்கியது. சற்று வலிவு கொடுத்து இழுக்க உள்ளே பேப்பர் பிரிபடுவது தெரிந்தது. படி யேறி மறுபடி பார்த்தார்.

பேப்பர் பிரிந்து பிளாஸ்க் உருண்டு வழிநடையில் இருந்தது.

மறுபடி ஜன்னல் வழியே வெளியில் பார்த்தார். ராமசுவாமி காதில் செக்யூரிடி ஜவான் ஏதோ சொல்ல அவர் 'சும்மா இரு' என்று அதட்டுவது தெரிந்தது.

ஏமாத்தறானா ஐயர்?

இவனை நம்பித் தொட முடியுமா? முடியாது. மெள்ள ·ப்ளாஸ்டிக் அடியே கயிறு நுழைத்துச் சுருக்கு போட்டார். நீளக்கயிறு பிடித்துக்கொண்டு வெளியே வந்தார். விமானம் விட்டுத் தள்ளி நின்று சடசடவென்று இழுத்தார். ·ப்ளாஸ்க் படியில் உருண்டு விழுந்தது.

ஆக குலுக்கலில், அதிரவில் உருளலில் வெடிக்க வில்லை. இதைக் கையில் தூக்கிப் போகலாம். ஒருவேளை ·ப்ளாஸ்க் மூடி திறந்தால் வெடிக்கும்படி வித்தை வைத் திருக்கலாம்

தரையில் விழுந்த ஃப்ளாஸ்க்கை பெரிய வாய் அகன்ற கொறடால் தூக்கினார். மெள்ள கூலிங் பிட் நோக்கி நடந்தார்.

ஜீப்பிலிருந்த காப்டன் ராஜு கீழிறங்கிப் பின்னே நடந்து வந்தார்-

"என்ன சுபேதார்?"

"இது டூப்புங்க...வெடியில்லை!"

"எப்படிச் சொல்றீங்க?"

"உள்ளே குருவி சொல்லுது!"

"ப்ச்சு."

"இல்லீங்க. அந்த ஆளு—ஐயரு சிரிக்கிறான்."

"இங்கேயே நிறுத்துடலாமா?"

"வேணாம் எதுனா இருந்து தொலைச்சா..."

"என்ன பண்ணப் போறீங்க?"

"கூலிங் பிட் மேலே வெச்சுட்டுத் தொலைவிலிருந்து சுட்டுப் பார்ப்போம். ரிவால்வர் இருக்கா?"

"இருக்கு சுபேதார். டூப்பா மட்டும் இருந்தது... அவனைக் கொன்னுடுவேன்."

"அவன்தான்னு நம்மால நிரூபிக்க முடியாது ஸாப்."

"வாஸ்தவம்."

கூலிங் பிட் மீது ஃப்ளாஸ்க்கை மெள்ள நிறுத்திவிட்டு விலகிக் கொண்டார். காப்டன் ராஜு கைத்துப்பாக்கி எடுத்து எழுபது அடி தொலைவில் நின்று குறிபார்த்து ஃப்ளாஸ்க்கைச் சுட்டார். ஃப்ளாஸ்க் சிதறிற்று. கண்ணாடி சில்லுகள் கலகலத்தன.

கெட்ட வார்த்தை கூறி—காப்டன் ராஜு பல் கடித்தார், "ஏமாத்திட்டான் சின்னசாமி."

"வுட்ருங்க. அவனுங்க போட்டம். ஏர்கிராஃப்ட் க்ளியர்னு சொல்லிடலாம்."

"ஏர் கிராஃப்ட் க்ளியர்" என்று வயர்லெஸில் உத்தரவு கொடுக்கப்பட்டது.

"வாங்க. காலை பிட்டுக்கு வரலாம்."

"ஏன்?"

"அந்த ப்ளாஸ்க்குல ஐயரு கைரேகை இருக்குது. பிடிச்சு உள்ளே போட்டுடரலாம்."

"இப்போ செய்தா என்ன?"

"நாம சந்தேகப்படறதா காட்ட வேணாம்."

"ஃபால்ஸ் அலார்ம்னு நினைக்கறேன்" என்று ராமசுவாமி சொன்னதை இருவரும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

பாம்ப் ஸ்குவாட் ஜீப் சீறலுடன் புறப்பட்டது மறுபடி விமானம் டிராக்டரில் பூட்டப்பட்டு விமான தளத்துக்கு வந்தது.

பாம் இருப்பது பொய்த் தகவல் என்று சகலருக்கும் அறிவிக்கப்பட்டது. எனினும், எல்லா இடங்களிலும் நூறு சதவிகித சோதனை நடத்தும்படி கேட்டுக்கொள்ளப் பட்டது.

மாஸ் விமானம் கடற்கரை தாண்டி உள்ளே வர இறங்க உத்தரவு கொடுக்கப்பட்டது. விமானம் தரை தொட்டது. புறப்படுகிற விமானங்கள் மூன்று தாமதமானதால் ஐந்து நிமிடத்துக்கொரு விமானமாய் பல்வேறு திக்கில் ஒன்றன் பின் ஒன்றாய்ப் புறப்படும்வரை பக்கப் பாதையில் நிறுத்தி வைக்கப்பட்டன. விளக்குகள் அணைத்துவிட்டு அமைதியாய் இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. டிராக்டர் வந்து இழுத்துப் போகும் என்று சொல்லப்பட்டது. இன்ஜின் நிறுத்தப்பட, விமானம் குளிர் காற்றோட்டம் குறைவாயிற்று.

பதினைந்து நிமிடத்துக்குப் பிறகு டிராக்டர் மாட்டி மாஸ் விமானம் இழுபட்டு விமான தளம் வருவதற்குள்

உள்ளே பயணிகள் வியர்வையில் தவித்தார்கள். புத்தகங்களால் விசிறிக் கொண்டார்கள்.

''ஏன் தாமதம்?''—ஒரு பயணி கேட்டதற்கு.

''பாம் பயமுறுத்தல்'' என்று பதில் வந்தது.

கேட்டவர் லாயடைத்தார். வியர்வையைத் துடைத்துக் கொண்டார்.

அவளுக்கு அதிகம் வியர்த்தது. காலையில் கொஞ்சம் அதிகமாகவே பிராந்தி குடித்திருந்தது இப்போது சிரமமாயிற்று மேக்கப் பூச்சு தாண்டி வியர்வை பெருகியது. சிங்கப்பூர் ஷிஃபான் கசகசத்தது கொண்டை அரித்துப் பிடுங்கியது. இரண்டு முறை தன்னை அறியாதுசொறிந்து கொண்டாள். கொண்டை கலைந்தது அவளுக்குத் தெரியவில்லை

தம்பி வந்திருப்பானா என்று கவலைப்பட்டாள்.

''பாம் த்ரெட் நிஜமா சார்?''—கஸ்டம்ஸ் ஆபீஸரிடம் கொஞ்சினாள்.

''பொய்மா. பிரியுங்க பெட்டியை.''

சகலமும் எடுத்து வைத்தாள். சகலத்துக்கும் டூட்டி போடப்பட்டது.

''செயின் எழுதியிருக்கீங்களா போறபோது?''-சுட்டிக் காட்டினார்.

''இதுங்களா...'' அவள் சேலை விலக்கினாள் ''எழுதிட்டேங்க'' என்றாள். சிரித்தாள். நிதானமாய் மார்பை மூடினாள்.

''டூட்டி எவ்வளவு சார்?''

குனிந்து மேஜை பார்த்தாள்.

''தலை எடும்மா.''

''குறைச்சுப் போடுங்க சார்... ப்ளீஸ்''—குனிந்து கொஞ்சினாள்

மேஜையை அவள் தலை மறைத்தது தலையில் ஏதோ தெரிந்தது.

''நிச்சயம் குறைக்கிறேன்''— டூட்டி ஆபீஸர் சொன்னார்.

நிமிர்ந்தாள். முகம் துடைத்துக்கொண்டாள். கஸ்டம்ஸ் ஆபீஸர் எழுந்து நாலு டேபிள் தாண்டி நின்ற பெண் போலீஸைக் கூப்பிட்டார்.

''அவங்க கூடப் போங்கம்மா'' என்றார்.

''எதுக்கு?''—அவள் மிரண்டாள்.

''உங்க ஹேர் ஸ்டைல் செக் பண்ண''

''ஏன்... எதுக்கு?''

''எனக்குச் சந்தேகம்''

அவள் வெளிறினாள். அந்த மனிதன் சிரித்தான்.

''உள்ளே போய்க் கொண்டை அவுக்கறீங்களா இல்லை இங்கேயே பிரிச்சுரட்டுமா?''

''சபர், ப்ளீஸ்... காதருகே குனிந்து பேசத் துவங்க, பெண் போலீஸ் சட்டென்று முழங்கை பிடித்து இழுக்க... கொண்டை அவிழ்ந்தது. நாலு தங்க செயின்கள் தரையில் சிதறின.

அலள் முகத்தைப் பொத்தி அழத் துவங்கினாள்.

தங்கச் சங்கிலிகள் பொறுக்கப்பட்டன.

கைது செய்யப்பட்டாள்,

''வெளியே என் தம்பி இருப்பான். ப்ளீஸ் கூப்பிடுங்க''—கெஞ்சினாள்.

வாசலில் போலீஸ்காரர் போய் அவன் பெயர் செல்ல உள்ளே வந்தான்.

''என்னக்கா?''

''புடிச்சுட்டாங்கடா'

''எப்படி?''

"பாம் பயமுறுத்தல்னு ப்ளேனை சைட்ல நிக்க வெச்சுட்டாங்க. லியர்வைல தலை சொறிஞ்சுட்டேன். கொண்டை கலைஞ்சுப்போச்சு. பார்த்துட்டான்."

அவன் வாய் பொத்திக் கொண்டான். தன் தவறு தன்னை அடித்தது உணர்ந்து மௌனமானான்.

"எப்படியாவது துட்டு புரட்டி உன்னை வெளியே எடுத்தாரேன், கலைப்படாதே"—வெளியே போனவன் கலைப்பட்டான்.

சுபேதார் மேஜர் சின்னசாமியும், காப்டன் ராஜுவும் அந்த ரோபோவின அருகே முழங்கால் போட்டு உடகார்ந் திருந்தார்கள்.

ரோபோ சின்ன டாங்கி பீரங்கி மாதிரி இருந்தது. இரண்டரை அடி உயரம், நாலடி நீளம், மூன்றடி அகலத் துக்கு உறுதியான இருப்பினால் பெல்ட் பதித்த பல் சக்கரங்களுடன் கறுப்பாய் மினுமினுத்து.

பாட்டரி இணைப்புக் கொடுக்க முன்னே நகர்ந்தது. அதன் உடம்பிலிருந்து இரண்டு க்ளாம்ப், கைகள் போல் இருந்தன. முன்பக்கம் எக்ஸ்ரே கருவி இருந்தது பின்னே நீண்ட குழலுடன் ரேஸர் கருவி பொருத்தப்பட்டிருந்தது.

அந்த ரோபோ எப்படி வேண்டுமானாலும் நகரும் படியேறும், இறங்கும். கைகளால் எதிரே உள்ள கல்லைத் தூக்கும். எக்ஸ்ரே கண் பெட்டியை ஊடுருவி தொலைவில் உள்ள டி. வி. பெட்டியில் உள்ளே உள்ளது என்னவென்று காட்டும். லேசர் கருவியாய் பெட்டி ஓரம துளை செய்யும் முந்நூறு அடி தொலைவிலிருந்து ரோபோலை இயக்க முடியும்.

"லேசர் சரியா வொர்க் பண்ணலை சின்னசாமி."

"வேணாம்சார். நாளைக்கு எடுத்துப்போய் டிபார்ட் மெண்ட்ல வெச்சுடலாம். இனிமே பாம் பயமுறுத்தல்னா இதுதான் ஒடனும்"

"ஏன் சின்னசாமி?"

"வெறும் ப்ளாஸ்க்கை பாம்னு தூக்கிட்டுப் போற துக்கு இதுல முடிச்சுடலாம். எனக்கும் வயசாயிடுச்சு. எத்தினி நாள் பயப்படறது...சொல்லுங்க. பொய்யினு உள்ள குருவி சொல்லுது ப்ளாஸ்க்கைத்திறக்க முடியுங் களா. பயமா இருக்கே."

"புரியுது சின்னசாமி."

"அங்கேயே ப்ளாஸ்க் துண்டு பொறுக்கி அவன் கைரேகை பார்த்து மடக்கியிருக்கலாம்"— சின்னசாமி ஆத்திரமாய்ப் பேசினார்.

"அவனது இல்லைன்னு லெச்சுக்குங்க. எங்கே போய் பிடிக்கப் போறீங்க?"

"அது என் வேலை."

சின்னசாமி இந்தியன் ஏர்லைன்ஸ் ஆபீஸுக்குப் போனார் ராமசுவாமிக்கு சல்யூட் அடித்தார்.

"என்ன சுபேதார் மேஜர்?"

"நாளைக்கு ரோபோ டெமான்ஸ்டிரேஷனுக்கு ஐயா வரணும்."

"என்ன ரோபோ?"

"வெடிகுண்டு கண்டுபிடிக்கிறமெஷினுங்க. மனுஷாள் தேவையில்லை."

"அப்போ உங்களுக்கு வேலை இல்லையா?"

"ரோபோ ஓட்டவேணாமா...அந்த வேலைனக்கு."

"எத்தனை மணிக்கு?"

"காலைல பத்து மணிக்கு."

"வரேன்..."

''ஐயா...''

''என்ன?''

''குடிக்கத் தண்ணி வேணும். டம்ளர் எடுத்துக்கட்டுங்களா?''

''வொய் நாட், தண்ணிதானே...சாப்பிடுங்க.''—மேஜையிலிருந்து கண்ணாடி தம்ளர் எடுத்து வைத்தார். அந்த தம்ளர் நுனி பிடித்துத் தண்ணீர் குடித்துவிட்டு சின்னசாமி அதை ஜன்னலோரம் வைத்தார். சல்யூட் அடித்தார். வெளியேறினார் ராமசுவாமி கதவு மூட்டி ஜீப்பில் ஏறியதும் கட்டடம் சுற்றி அருகேவந்தார்.எட்டி கர்சீப்பால் தம்ளரை எடுத்தார். மீண்டும் கட்டடம்சுற்றி சட்டை விளிம்பில் தம்ளரை மறைத்துக்கொண்டு இருளில் மறைந்தார்.

ஆபீஸுக்குவந்து பவுடர் போட்டு ஊதினார்,கட்டை விரல் மின்னியது. பிரதி எடுத்தார்.

நேரே ஜீப் எடுத்து டவரில் அனுமதி வாங்கி கூலிங் பிட்டுகுப் போனார், டார்ச் அடித்து ஃப்ளாஸ்க் துண்டு கள் பொறுக்கினார் அரை மணியில் பல துண்டுகளில் அதே கட்டை விரல் ரேகை மின்னிற்று.

குவார்ட்டர்ஸுக்கு நடந்து போனார். ராமசுவாமி விட்டு காலிங் பெல் அழுத்தினார்.

'ஐயா தூங்கறாங்களே.''—பெண் குரல் கேட்டது.

''எழுப்புங்கம்மா.''

'யார் கூப்பிடறது?''

''சுபேதார் மேஜர் சின்னசாமி,''

''எழுப்பி என்ன விஷயம்னு சொல்றது?''

''மாட்டிகினாருன்னு சொல்லுங்கம்மா.''

''என்ன?''

''மாட்டிகினாருன்னு சொல்லுங்கம்மா.''

'உள்ளே பனிரெண்டு விளக்கு எரிந்

9

ராமசுவாமி சட்டை மாட்டிக்கொண்டு வெளியே வந்தார். சின்னசாமியை உற்றுப் பார்த்தார்.

''வணக்கம் ஐயா...'' — சின்னசாமி வணங்கியது வியப்பாய் இருந்தது

''சுபத்ரா, சிகரெட் எடு'' மனைவி சிகரெட் டப்பாவும் நெருப்புப் பெட்டியும் எடுத்துக் கொடுக்க வெளியே வந்தார்.

''கதவு சாத்திக்கோ.''—சுபத்ரா படியிறங்கி நடந்தார்.

ஏர்போர்ட்டுக்கு எதிரே உள்ள குவார்ட்டர்ஸ் பல்வேறு காம்பௌண்டுகளாகப் பிரிந்து இருந்தன.

இண்டியன் ஏர்லைன்ஸ் காம்பௌண்ட் புதிதாய்ச் சுத்தமாய் இருக்கும். தோட்டங்களில் புல் படர்ந்திருக்கும். பிறகு இண்டர்நேஷனல் ஏர்போர்ட் அத்தாரிடி காம்பௌண்ட். பிறகு நேஷனல் ஏர்போர்ட் காம்பௌண்ட்

பார்க் போல ஐந்து மாடிக் கட்டடங்களுக்கு நடுவே உள்ள இடத்தில் இருவரும் உட்கார்ந்து கொண்டார்கள்.

''நான்தான் . ப்ளாஸ்க் வெச்சேன் சின்னசாமி.''

''கண்டுபிடிச்சுட்டோம் ''

''என்ன செய்யப் போறீங்க?''

''நீங்க சொல்லுங்க ஐயா.''

''இந்த மரியாதையெல்லாம் வேணாம். என்ன பண்ணப் போறீங்க, சொல்லுங்க.'' வாயில் சிகரெட் பொருத்திப் பற்ற வைத்து ஆழமாய் ஒரு இழுப்பு இழுத்து புகை விட்டார்.

''தப்பு பண்ணினாலும் தப்பே செய்யலேன்னாலும் அதிகாரி அதிகாரிதான்யா. என் மரியாதை குறையாது.''

''சரி, கண்டு பிடிச்சுட்டீங்க. என்ன பண்ணப் போறீங்க?''

''ஐயா சொல்லணும்.''

'நீங்க ரிப்போர்ட் பண்ணா எனக்கு ப்ளாக்மார்க். வேற இடத்துக்கு பனிஷ்மெண்டா மாத்துவான். பிரமோஷன் போகும். பொறுப்பில்லாம நடந்துக்கிடேன்னு சார்ஜ் ஷீட் அனுப்புவான். எல்லாத்தையும் விட ஏர்போர்ட் சிரிக்கும். பெரிய கேலியா போவும். அதைவிட முக்கியம்... நான் நங்கநல்லூர்ல கிரவுண்ட் வாங்கி வீடு எழுப்பிட்டேன். இப்போ மாத்தினா எல்லாம் நின்னுபோவும்.''

''எப்படி கண்டுபிடிச்சேன்னு...''

'புரிஞ்சு போச்சு சின்னசாமி. லிட்டுக்கு வந்து படுக்கையில படுத்து எல்லாம் ஒரு தடவை யோசிச்சேன். என் நேர வந்து கூப்பிட்டீங்கன்னு. எதுக்குத் தண்ணி குடிக்க டம்ளர் கேட்டீங்கன்னு...பளீர்னு மின்னிச்சு. போய் டம்ளர் தேடலாம்னு கூட நினைச்சேன். அசதி... உடம்பு அடிச்சுப் போட்டாப்பல அசதி. சரி... ஸ்லிப் பண்ணிட்டோம். மாட்டாத இருந்தா பெரிய விஷயம்னு நினைச்சேன். நீங்க கூப்பிட்டதும் புரிஞ்சுபோச்சு.''

''எப்படின்னு.''

''கைரேகை. ப்ளாஸ்க்குல கைரேகை.''

''சூட்சுமமான ஆளு ஐயா நீங்க.''

''இல்லை சின்னசாமி... சூட்சுமமானவன் இந்தத் தப்பு பண்ணமாட்டான். யார்கிட்ட சொன்னீங்க?''

''யார்கிட்டயும் சொல்லலை.''

ராமசுவாமி திரும்பி ஊடுருவிப் பார்த்தார்.

''அந்த மலை சத்தியமா... தோமையா சத்தியமா யார்கிட்டயும் சொல்லலை.''

''தாங்க்யூ''—மறுபடி புகை இழுத்து விட்டார்.

''சொல்லுங்க சின்னசாமி.''

''என் வேலை கடினம் ஐயா.''

''தெரியும்.''

''அது கேலி பண்ற விஷயமில்லை. உயிரோட போராடற விஷயம். ஒரு குண்டு பிரிக்க உட்கார்றபோது இன்னும் எத்தனி நிமிஷம் உயிரோட இருப்போம்னு தெரியலையேன்னுதான் உட்காருவேன். ஒரு தடவை—ஒரே ஒரு தடவை ஐயா என் பக்கத்துல உட்கார்ந்து நான்வெடி குண்டு பிரிக்கறது பார்த்தீங்கன்னா என்னை மக்கு முண்டம்னு நினைக்க மாட்டீங்க''

''உங்களைமக்குனு நினைச்சுச் செய்யலை சின்னசாமி உங்களை வேலைக்குக் கூப்பிட்டபோதுவரமாட்டேன்னது தோபம். பாம் இருந்தா பாம்ப் ஸ்குவாட் வரும் என்பது அபத்தமான விஷயம்.''

''புரியுது. ஆனா அதுதான் சட்டம் பாம் இருந்தா எங்களைக் கூப்பிடறதுதான் முறை.''

''நிஜமாவே பாம் இருந்து நான் தொட்டு வெடிச்சா பாம்ப் ஸ்குவாட் வந்து என்ன செய்யும்? வழிச்சுப் போடுமா?''

''தொடக்கூடாதுன்ற சட்டம். 'பொட்டலம்இருக்கு, என்னன்னு தெரியலை'ன்னு சொன்னதும் புறப்பட்டு வந்தோமில்லையா... மூணரை மைல் ஏர்போர்ட்ல எங்கியோ பாம் இருக்காம். டெலிபோன் வந்ததுன்னு நீங்க சொன்ன மூணரை மைலும் சுத்த முடியுமா?''

ராமசுவாமி மௌனமாய் சிகரெட் பிடித்தார்.

''ரிப்போர்ட் பண்ணப் போறீங்களா?''

''அதுக்கு இங்கே ஏன் வரேன்.''

''கைரேகை பத்தி இப்படிக் கண்டுபிடிக்கலாம்னு யார் கிட்டயாவது சொன்னீங்களா?''

"காப்டன் ராஜு சொல்லாரு உட்கார்ந்து பார்க்கலாமேன்னு...உடனே உங்க ரேகை கேட்டு வாங்கலாமேன்னு நான்தான் 'வேணாம் இல்லைன்னு போச்சுன்னா மூஞ்சியைக் கொண்டுபோய் எங்கே வெச்சுக்கறது'ன்னு மடக்கிட்டேன்."

"அவருக்கும் சந்தேகமா?"

"நிச்சயமா."

"அவரு நாளைக்கு ப்ளாஸ்க் துண்டு தேடினா?"

"நான்தான் தேடப்போறேன். போய் அழிச்சுட்டு, ரேகை இல்லேன்னுடுவேன்."

"ஏன்?"

"நானும்உங்களைமாதிரி குடித்தனக்காரன். உங்களை மாதிரி குழந்தை பெத்தவன் ஒரு கோலத்துல செய்துட்டீங்களே தவிர உங்களுக்கு ஆள் மேல துவேஷம் இல்லேன்னு தெரியும்."

"என்ன செய்யப் போறீங்க?"

"இப்படி இனிமே செய்யாதீங்கய்யா. வெடி குண்டு விளையாட்டு இல்லேனு சொல்லிட்டு எடுத்த துண்டுகளை அழிச்சுடப்போறேன்."

ராமசாமி விடுக்கென்று எழுந்தார். சின்னசாமியும் எழுந்தார்.

"சின்னசாமி..."

"ஐயா"

"நான் அதிகாரியா இருக்கலாம். ஆனா, வயசுல உங்களைவிடப் பத்து வயசு சின்னவன். நான் பண்ணது தப்பு. என்னை மன்னிச்சுடுங்க."

சட்டென்று சின்னசாமி பாதங்கள் தொட்டு வணங்கினார்.

"தோமையா... தோமையா..." — சின்னசாமி கூப்பினார். அழிச்சுட்டேன். சகல தடயமும் அழிச்சுட்டேன். யாரையும் எதையும் அழிக்க மனுஷாள் பொறக்கலை. நல்லது பண்ண பொறந்திருக்கோம். அப்படித் தப்பித் தவறி கால் புரண்டுச்சா...கடவுளே என்னை மன்னிச்சுடுன்னு கூப்பிட்டா போதும்."

"இந்த நேரம் எனக்கு கடவுள் நீங்கதான் சின்னசாமி."

"இல்லீங்க...நான் மனுஷன்."

"உசந்த மனுஷன். இந்தத் தன்மை எனக்கு வராது."

"ஒவ்வொரு நாளும் மரணத்துக்கு மடியில உட்கார்றவன் ஒருத்தருக்குமே உபத்திரவம் பண்ண முடியாது ஐயா... நான் வரட்டுமா..."

"சின்னசாமி..."

"ஒரு காக்கைக்குத் தெரியாது. வாக்குக் கொடுத்த சின்னசாமி வெட்டிப் போட்டாலும் மாறமாட்டான். இது சத்தியம். நான் மிலிட்டரிக்காரன். சத்தியம் பண்ணமாட்டேன். பண்ணினா மீறமாட்டேன்."

—சொல்லி விட்டு, சின்னசாமி சல்யூட் செய்தார். அதே விதமாய் அதே விறைப்பாய் ராமசுவாமி அதை ஏற்றுக் கொண்டார் முதுகு குனிந்து இருளில் நடக்கிற சின்னசாமியையே பார்த்துக் கொண்டிருந்தார்.

உள்ளே துருபதன் கதை தோன்றியது,

தன்னை அவமானப்படுத்திய துரோணரை வதைக்க ஒரு பிள்ளையும், தன்கைக் கைது செய்து தேர்க் காலில் கட்டிய அர்ஜுனனுக்கு மணம் செய்விக்க ஒரு பெண்ணும் வேண்டுமென்று கேட்ட துருபயாகம் நெஞ்சில் எரிந்தது.

"சின்னசாமி, நான் உங்களுக்குக்கடன்பட்டிருக்கேன். ஆனா, காப்டன் ராஜு. பாம்ஸ்குவாட்லீடர் காப்டன்

ராஜு...என்னை அவமானப்படுத்திய காப்டன் ராஜு... நான் நிச்சயம் பழிவாங்குவேன்.'.

''என்னா, எதாவது பிராப்ளமா...?'' — மனைவி சுபத்ரா உள்ளே நுழையக் கேட்டாள்.

'என்னிக்கு இந்த வேலையை ஏத்துண்டேனோ அன்னிலேர்ந்து பிராப்ளம் தான். எங்கப்பாவுக்கு நான் ஏழாவது புள்ளை. 'சங்கர மடத்துல சேர்ந்து விட்டுர்றேன்... நீ ஒருத்தனாவது வேதம் படி'ன்னு அப்பா கெஞ்சினார். நான் கேட்கலை. வீட்டைவிட்டு ஓடி மெட்ராஸுக்கு வந்து மாமாகிட்ட உட்கார்ந்து இங்கிலீஷ் படிச்சேன். அங்கே தப்பு ஆரம்பிச்சுது. வேதம் படிச்சிருக்கலாம். குறைஞ்சபட்சம் கல்யாண மந்திரம், திலச மந்திரமாவது கத்துண்டிருக்கலாம். ஜாதிக்கு ஒவ்வாத காலல் வேலை...கஷ்டப்படறேன்''

''காசு வருதே... நாலாயிரத்து நானூறு சம்பளம், ட்ரீகுலார்ட்டர்ஸ்...வருஷத்துக்கு ரெண்டு பர்ஸ்ட் கினாஸ் ஏர்பாஸ் கிடைக்கறதே...இந்த ஜனவரி காஷ்மீர் போகலாமா? போன தடவை டில்லி வரைக்கும் போயிட்டு காஷ்மீர் போகாத போயிட்டோம். இந்தத் தடவை காஷ்மீர் போகலாமா?''

இது ஆணாதிக்க சமூகமாம். ஆண்கள் ஆட்சி செய்கிற உலகமாம். இந்த ஆளுமைக்கு அலன் படுகிறவதை யாருக்குத் தெரியும்?'' எந்தப் பெண்ணுக்குத் தெரியும். நாலாயிரத்து நானூறுக்கு நாய் படாத பாடு... சுபத்ராவுக்கு எப்படிப் புரியும்?''

ஒருவேளை சாப்பாட்டுக்கும் நாற்பத்தைந்து ரூபாய்க்கும் திலச மந்திரம் சொல்லிக் கொண்டிருந்திருக்கலாம். துஷ்டரைக் கண்டால் தூர விலகு என்று விலகி விலகிநடக்கலாம். மாலை ஆறுமணிக்குக் காற்றோட சாயங்கால ப்பருடன்மயிலாப்பூர்குளக்கரைக்கு போ ட்கார்ந்து

பேசிக் கொண்டிருக்கலாம் தானம் வாங்கினை வேட்டியும் துண்டுமாய் வலம் வரலாம். அப்பா அப்படித்தான் வாழ்ந்தார். இண்டியன் ஏர்லைன்ஸ் செக்யூரிடி ஆபீஸர் யூனி பார்ம் போட்டு சல்யூட் அடித்தபோது சிரித்தார்.

''நமக்கு சரிப்படுமாடா இது?''

''ஏன் படாது?''

''பலம் வேண்டாமா இதுக்கு?''

'புத்திமானே பலவான்.''

''இதுக்குனு ஒரு தனிபுத்தி இயற்கையா பரம்பரையா வரணும், திருடனைக் கண்டுபிடிக்கிறவன் பக்காதிருடனா இருக்கணும். உன்னால முடியாது நம்ம ஜாதிப் புத்தி வேற ஆயிரம் வரி மனனம் பண்ணிடலாம், அடுத்த தூமகேது எப்போனு மனசுலியே கணக்குப் போட்டு சொல்லலாம், அதிகாரம் பண்ணத் தெரியாது நமக்கு. அதிகாரம் பண்ண ஆணவம் வேணும் ஆணவம் எப்போ வரும்? அவமானம் துச்சமா போறபோது வரும். அவமானம் பட்டுப்பட்டுத் தழும்பேறினவன் அதிகாரம் பண்ண முடியும். அரசாங்கத்துல பிரபலமா இன்னிக்கு இருக்கறவா யாரு...நிறைய அவமானப்பட்டவா. நாமெல்லாம் அவமானம் தாங்க முடியாத ஜந்துக்கள். நமக்கு அதிகாரம் சரிப்படாது.''

''எது சரிப்படுங்கறேன்?''

''அண்டி வாழ்தல், இயைந்து உறைதல் யார்கிட்ட அதிகாரம் இருக்கோ, அவாளோட சுமுகமா இருக்கறது. அதிகாரம் பண்றவனுக்கு அடுத்த படில நின்னு, அவன் அளவுக்கு அதிகமாக ஆடாத புத்தி சொல்றது. அவன் அதிகாரம் குறையாத பார்த்துக்கறது.''

'ஒட்டுண்ணிகள்...பாரசைட்ஸ்.''

''ச்சு...தப்பான வாதம். சரி, அப்படி வெச்சுப்போம் மரத்துல கொடியா படர்ந்த ஒட்டுண்ணி மரத்துத்தண்டை

உறிஞ்சு வளர்றது. வளர்ந்து எங்கே போகும். அங்கேயே மரத்தடியிலேயே பிராணன் விடும் மரத்துக்கே உரமாகும். எது உறிஞ்சுதோ அதுவோ உபயோகம். உபயோகம் இல்லேன்னா மரம் வளர விடுமா? விடாது ராமு. தன்னை அழிவிலிருந்து பாதுகாத்துக் கொள்கிற சக்தி எல்லா உயிருக்கும் உண்டு ஒட்டுண்ணி உபயோகம்கறதாலதான் மரம் தன்னைச் சுத்திக் கொடி வளர விடறதே தவிர.''

''எனக்குப் பெரும் மரமா இருக்கணும்னு ஆசை...''

''படு... படு... ஆசைப்படு... ஆசைப்படறதிலே தப்பில்லை. ஆசைப்படறதுக்குண்டான யோக்கியதையை வளர்த்துக்கோ. எதுக்கு யோக்கியதையோ அதுக்கு ஆசைப்படு. யோக்கியதைக்கு மீறின ஆசைக்குப் பேராசைன்னு பேரு. பேராசை பெரு நஷ்டம் தீராத உபத்திரவம்''—பாட்டுப் பாடினார்.

''குழந்தை பெரிய உத்தியோகம் கிடைச்சுடுத்துன்னு வந்து சொன்னான்...குத்தல் என்ன வேண்டி கிடக்கு. கையாலாகாதது'' அம்மா உள்ளேயிருந்து சுள்ளென்று குரல் கொடுக்க, அடங்கிப் போனார்.

அந்தக் கையாலாகாதத்தனத்துக்கு என்ன அர்த்தம். காசு சம்பாதிக்கறதா, இல்லை வேறெதாவதா...கடைசி வரை காசு சம்பாதிக்கவேயில்லை. வாடகை வீடு தவிர சொந்த வீடு தேவை என்று படவேயில்லை. எட்டு முழ வேட்டி தவிர வேறு உடுப்பு எடுத்ததேயில்லை. காசு கொடுத்துக் காய்கறி வாங்கியதில்லை. சங்கரமடத்தில் பரிசாய்க் கொடுத்த கடுக்கன் தவிர வேறு நகை பூண்ட தில்லை.

நாலு பிள்ளைகளையும் மூன்று பெண்களையும் படிக்க வைத்தார்.

'நான் ஏழை. பரம ஏழை. எனக்குக் கிளி மாதிரி பெண் இருக்கா. எஸ். எஸ். எல். சி தான். நன்னா சமைப்பா.

கோலம் போடுவா. ஸ்லோகம் சொல்லுவா. குடிகை. வரனுக்குத் தட்சணை உண்டு. என்னால தரமுடிஞ்சது ஆயிரம் ரூபா. இந்த மயிலாப்பூர்ல எனக்கு. சமரம் பண்றவர்லேர்ந்து சங்கீதக்காரர் வரைக்கும் பழக்கம். இனாமா வந்து செய்துடுப் போலா கல்யாணமா நடத்த முடியும் வேணும்னா வந்து பெண் பாரு.புடிச்சுப் போச்சுன்னா பண்ணிக்கோ'

மூன்று பெண்களுக்கும் அவ்விதமே கல்யாணம் நடந்தது நாலு பிள்ளைகளுக்கும் அவ்விதமே பெண் பார்க்கப்பட்டது ''ஆயிரம் ரூபாதான் வரதட்சணை கொடுத்தேன். ஆயிரம் ரூபாதான் வரதட்சணை வாங்கு வேன்.'

எவரோடும் சண்டையில்லை. எதனோடும் யுத்த மில்லை இயைந்த வாழ்க்கை இது.

நான் தவறோ...ராமசுவாமிக்கு உடம்பு அசந்து போயிருந்தாலும் மனசு தூங்கவேயில்லை.

10

'சென்னைவிமானநிலைய ஊழியர்கள் குடியிருப்பு'' என்கிற பலகையின் இடதுபக்கம் வாசல் இருந்தது. வாசலுக்குள் எட்டாயிரம் லிட்டர் தண்ணீர் லாரி கர்ப்பணிபோல நுழைந்தது. ஆபீஸர் குவார்ட்டர்ஸ் தாண்டி, குழந்தைகள் விளையாடும் பூங்கா வழியே நுழைந்து ஊழியர்கள் குடியிருப்புக்கு நடுவே போய் ஹார்ன் அடித்தது. விடி விளக்கு மட்டும் போட்டு உறங்கிக் கொண்டிருந்த ஜனங்கள் எழ, பளிச் பளிச்சென குழல் விளக்குகள் மின்னின.

குவார்ட்டர்ஸில் கிணறு உண்டு. அதற்குள் இறக்கிய பம்ப்செட் உண்டு. இருபத்திநாலு மணிநேரமும் தண்ணீர்

உண்டு. ஆனால், அந்தத் தண்ணீரில் சோப்பு நுரைக்காது. பருப்பு வேகாது. குடித்த தாகம் நீராது. ஆனந்தமாய்க் குளிக்கலாம். வீடு கழுவி விடலாம். குடிக்கவும், சமைக்கவும் விமான ஊழியர்கள் குடியிருப்பு சங்கம் தரமணி தண்ணீர் லாரி வரவழைத்தது. காசு அரசாங்கத்திடம் வாங்கிக் கட்டியது.

ஒருகஷ்டம்—தண்ணீர் நடுநிசியில்தான் தான் வரும். இன்று நடுநிசியும் தாண்டிவிட்டது.

பசுபதிநாதன் இரண்டு தலைகள் எடுத்துக்கொண்டு படியிறங்கினார். வயதாக வயதாக தூக்கம் அதிகம் வந்தது. அடிக்கடி உடம்பு ஓய்வு கேட்டது. எட்டு மணி நேர ட்யூட்டி முடிந்து குவார்ட்டர்ஸுக்கு மெள்ள நடந்து வந்து ஷூக்களை அவிழ்த்துவிட்டுப் படுத்து தூங்கிவிடுவார். எழுப்பி சோறு போடுவார்கள். மறுபடி தூக்கம். ஆனால், தண்ணீர் லாரி சத்தம் கேட்டதும் விழிப்பு வந்துவிடும். ஒன்று விட்டு ஒரு நாள் வருகிற லாரி தண்ணீர் நாலு தலையாவது வேண்டும். குடிக்கவும் சமையலுக்கும் போரிங் தண்ணீரை உபயோகப்படுத்தமுடியாது.

இரண்டும் பெரிய தலைவலி. இரண்டு நடைகொண்டு வருவது கஷ்டம் இடுப்பு இழுத்துக் கொள்கிறது. மனைவிக்கு தலை தூக்க முடியாது. குழந்தைகளை எழுப்பலாம். ஒரு பெண் எம்.ஏ முதல்வருடம். மறுபெண் பி.எஸ்ஸி கடைசி வருடம். இரண்டும் போர்வை போர்த்திச் சுருண்டு துணிமூட்டையாய்த் தூங்குகின்றன. எழுப்பினால் 'போப்பா' என்று புரண்டுத்தூங்குவார்கள். பன்னிரண்டு கிலோ மீட்டர் நகரத்துக்குள்ளே போய்ப் படித்துவிட்டு வருகிறாகள். அலுப்பாகத்தான் இருக்கும். எட்டரை மணி டிரெயின் பிடித்துப் பிறகு பஸ் பிடித்து...கஷ்டம்தான்...

"உங்க உத்தியோகத்துல கண்ட பலன் இந்தகுவார்ட்டர்ஸ்தான். இந்த இடத்துக்கு வாடகை சிறில ஆயிரம் ரூபா சொல்லா, நமக்கு நூத்தம்பது ரூபாய்க்குக் கிடைச்

திருக்கு. ஆனா, பஸ் சார்ஜ் பாதி வாடகை ஆறதே...ஒரு பிடி கொத்தமல்லி, கறிவேப்பிலைக்கும் டிரெயின் ஏறிப் போக வேண்டியிருக்கே...ஏர்போர்ட் உத்தியோகமே சுடுகாடு தாண்டிதான் எங்கயும் பாம்பே கொஞ்சம் 'ஜெ ஜே'ன்னு இருக்கும். இங்கே பனை மரமா இருக்கு."

"பக்கத்துல மனுஷா இல்லையா...? அநாவசியமா அலுத்துக்கறே..."

"மேல பஞ்சாபிக்காரன். எதிர்ப் பக்கம் தெலுங்கன். அந்தண்ட மார்வாடி. ஒருத்தரை ஒருத்தர் பார்த்தா சிரிக்கிறோம். மனசு விட்டுப் பேச முடியறதா? நல்லவேளை காய்கறிக்காரன் வந்து கொஞ்ச நேரம் பேசுவான். ஊர் நடப்பு சொல்லுவான். நான் அக்ரஹாரத்துல வளர்ந்தவனம் பத்து வீடு பேசிட்டு வருவேன். எனக்கென்னமோ இப்படி ஒரு வாழ்க்கை..."

தண்ணீருக்கு ஆட்கள் சேர்ந்து விட்டது. நாலாவதாய் தலையோடு பசுபதிநாதன் நிற்க. பின்னால் பெரிய பக்கெட்டுடன் ஸ்வீபன் வந்து நின்றான்.

"அடிசக்கை...உனக்கெதுக்குடா ஜலம்...?பிரம்மசாரிக் கட்டை."

"ஏன், நாங்க குளிக்க...குடிக்க தண்ணி வேணாமா?"

"இதுலதான் குளியலா...?"

"பம்பு தண்ணி அரிக்குது சார்."

"லக்சுரி"

"கரெக்ட். நம்ம லக்சுரி கார்ப்பரேஷன் தண்ணிதான் சோத்துக்குத்தான் நாயா அலையலேண்டியிருக்கே. யாருக்குத்தான் தெரியும் அது."

"நீ மாமிசக்காரன். மெட்ராஸ்லதான் இப்ப மூலைக்கு மூலை மாமிசம் வதக்கறானே."

"முன்னால போங்க... தண்ணி தரைல போவுது..."

வேகமாய் விழும் தண்ணீரைத் தாங்கிப் பிடிக்கப் பகபதியால் முடியவில்லை. தலை தள்ளாடிற்று. நழுவிச் சரியும்போது ஸ்டீபன் தாங்கிப் பிடித்தான். அவரை நகர்த்திவிட்டு மறு தலை வாங்கி நீர் ஏந்தினான். இரண்டு தலைகளையும் வைத்து விட்டுத் தன் பக்கெட்டை நீருக்கு நகர்த்தினான்.

"விடுங்க தலைல தண்ணியைப் பிடிக்க முடியலை. எப்படித் தோள்ல தூக்கப் போறீங்க?" தோளில் ஒரு தலையும் கையில் ஒரு தலையும் தூக்கி அவர் வீடு நோக்கி விரைந்தான். மூடின கதவைக் காலால் எத்தித் திபு திபுவென்று கனத்தோடு உள்ளே போனான். ஹால் தாண்டி நேரே சமையலறையில்போய் இறக்கி வைத்தான்.

தலை இறக்குகிற சத்தம் கேட்டு மூத்த பெண் எழுந்து உட்கார்ந்தாள். "யாரது?" என்று குரல் கொடுத்தாள். அவன் தோள் தலையையும் இறக்க, எழுந்து நின்றாள். புடவை நெஞ்சுவிட்டுச் சரிந்து விழுந்தது. தலைமுடி முடிச்சு அவிழ்ந்து தொங்கியது. கூந்தலை வார கை உயர்த்தி முடிச்சு போட்டுக்கொள்ள, எதிரே வந்து நின்றான் அவன்.

"ஐயோ..." என்கிற பதைப்புடன் அவள் புடவைத் தலைப்பு தேடினாள். தன் காலால் தலைப்பை மிதித்து இழுத்து முடிக் கொள்வதற்குச் சில விநாடிகள் தேவைப் பட்டன.

ஸ்டீபனை அந்த அழகு தாக்கிற்று.

அவளுக்குக் கோபம் வந்தது.

"என்ன வேணும்"

"அப்பா அனுப்பினாரு. அவருக்குத் தலை தூக்க முடியலை. வெச்சுட்டேன்"—வெளியேறினான்

"சீய்... நான்சென்ஸ்"— அவள் உள்ளுக்குள் பொருமினாள்.

பகபதி இரண்டு கைகளாலும் பக்கெட் நீரை எடுத்து மெள்ள மெள்ளத் தலைபோல நடந்து வந்தார்.

"என்னடா. தலையை வெச்சுட்டியா... போறாது. டிரம்ல ஊத்தணும்."

"கொடுங்க சார்"—பக்கெட் வாங்கி தன் இடத்துக்குப் போய்ப் பாணையில் ஊற்றினான். காலி பக்கெட்டுடன் வெளியே வந்தான். தண்ணீர் லாரி க்யூவில் மறுபடி நின்று காத்திருந்தான்.

அந்த போர்ஷனில் சிறிய கூச்சல் கேட்டது.

"என்னால முடியலைடீ. அவன் எடுத்துண்டு வந்தான். என்ன இப்போ... அக்கறை இருந்தா எழுந்து தண்ணி பிடிக்கறதுதானே... அம்மாவும் பெண்களும் மல்லாந்து தூங்கறேள்."

அந்தப் பெண் தலை எடுத்து வந்தது. இவனைப் பார்த்துத் தயங்கியது. உள்ளே போயிற்று. மறுபடி தலையுடன் வந்து க்யூவில் இவனுக்குச் சற்று இடை வெளி விட்டு நின்று கொண்டது

"மேல் துணியின்றிக் கணநேரம் பார்த்தது உறுத்துகிறது. வேண்டுமென்றா பார்த்தேன்? எதுக்கு இத்தனை அலட்டல். நான் முட்டாள். தலையை வாசல்ல வெச்சிருக்கணும். கதவு உதைச்சுப் பெண்கள் இருக்கற இடத்துல போனது முட்டாள்தனம்"

ஸ்டீபன் பக்கெட்டில் நீர் பிடித்தான். பாதி நிறையும் முன்பு திரும்பி, பின்னால் இருக்கிறவளின் தலை பிடுங்கினான்.

"இருங்க... எதுக்கு...?"—அவள் தடுமாறினாள்.

"பரவாயில்லை. உங்களால தலையைத் தாங்கிப் பிடிக்க முடியாது கீழே வெச்சா தண்ணி சிதறி மேட்டா

வும்.'' பசுபதி மற்றொரு தலையோடு வந்தார். அதையும் வாங்கிப் பிடித்தான்.

அவள் ஒரு தலையை இடுப்பில் இடுக்கிக் கொள்ள, பிடித்த தலையைத் தோளில் வைத்து அவளைத் தாண்டிப் போனான். வீட்டு வாசலில் இறக்கினான்.

''குட்தைட் சார்... குட்தைட்மா''—சொல்லிவிட்டு சாதாரணமாய் நடந்து பக்கெட் எடுத்து அறைக்குப் போனான். உடம்பைத் துவாலையால் துடைத்துவிட்டு ஒரு கெரெட் பற்ற வைத்தான். வராண்டாவுக்கு வந்து உட்கார்ந்தான் எதிர்வாடையில் பசுபதிநாதன் வீட்டு வாசலில் நிற்பது தெரிந்தது. இருட்டில் கதவு திறப்பது தெரிந்தது அந்தப் பெண் வாசலுக்கு வந்து நடை விளிம்பில் நின்றது. மறுபடி கூந்தலை உதறி முடிந்து கொண்டது. உட்கார்ந்தது.

இத்தனை அழகாய் ஒரு பெண் குவார்ட்டர்ஸில் இருப்பது எப்படித் தெரியாமல் போயிற்று இவளைப் பார்த்திருக்கிறோம். கவனித்ததில்லை. இரவு பகல் என்று ட்யூட்டி வருவதால் இவள் இருக்கும்நேரம் தெரியவில்லை. எம். ஏ. படிக்கிறாள் என்று கேள்வி. பெயர் கூடத் தெரிய வில்லை. நிலை மாதிரி நிதானமாய்த் தலை முடிந்து கொள்ள...யப்பா. என்ன வனப்பு சூழ்நிலையே மறந்து போய் 'ஹா' என்று பார்த்துக் கொண்டிருந்தான் காலை யில் பார்த்தால் என்ன செய்வாள்? முகம் சுளிப்பாளா... உதடு முறுக்கி வேறு பக்கம் திரும்பிக் கொள்வாளா? என்ன கோபம் அந்த முகத்தில். மறுபடி இவளுக்கு என்னால் கோபம் வரக் கூடாது. வெறுப்பு வரக்கூடாது என்ன செய்யலாம்? ஏதாவது செய்து நன்மதிப்பு பெற்று நல்ல பெயர் சம்பாதிக்க வேண்டும். அப்படி நல்லவ னாய்த் தெரிந்தபின் அவள் இந்தச் சம்பவம் கேட்க நேரிட்டால், 'நான் சாதாரணமாய்ப் பார்த்தேன்' என்று சொல்லிவிட வேண்டும்.

ஆழப்புகை இழுத்துவிட்டான். சிகரெட் ஒளி மிகுந்து மெள்ளக் குறைந்தது. தொலைவிலிருந்து அவள் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'ஏர்போர்ட் பிக்கன் லைட் இப்படித்தான் இருக்கும்' என்று நினைத்துக் கொண்டாள் பளீரென்று ஒளிபொங்கி மெள்ள மறையும், எல்லா ஏர்போர்ட்உச்சியிலும் சுழலும் பீக்கன் விளக்குகள் மாதிரிதான் இவன் சிகரெட்பிடிப்பதும் தெரிகிறது.

அப்பாவுக்கு அறிவேயில்லை. எப்படி ஒரு ஆளை தலை தூக்கி வீட்டுக்குள் வர அனுமதிக்கிறார்? லேடீஸ் பற்றித் தெரிய வேண்டாம். முன்ன பின்... இருப்போம் என்கிற புத்தி வேண்டாம்.

நின்று நிதானமாய்த் தலைமுடித்துத் தலைப்பு நேட. துவஜஸ்தம்பம் மாதிரி நீர் சொட்ட நிற்கிறான். பகீர் என்றுபோய்விட்டது.புடலைத்தலைப்பை மிதித்துமிதித்து அல்லாடி... அவன் பெயர் ஸ்டீபன். டவர்னு தெரியும். ஃபுட்பால் ப்ளேயர்னு அப்பா சொல்லியிருக்கிறார். இது ஏன் தலை தூக்கித்து? உதவியா... இல்லை உள்ள நுழையற உபாயமா? எதுக்கு உபாயம்? இதுவரைக்கும் திரும்பி பார்த்ததில்லை. விருக்குவிருக்குன்னுநடப்பானே தவிர வேற விதமாய் நடந்தது இல்லை. நாமதான் தப்பா நினைச்சுட்டமா... சுள்ளுனு மூஞ்சி, காமிச்சுட்டமோ... புடலை அவுத்து நின்னது நான்! அவனை ச்சீ!, தூன்னா என்ன புண்ணியம்? அதுக்காக ஹான்னாபார்க்கறது. சரி, எல்லா ஆம்பளையும்தான் பார்க்கறான். ஸ்டேஷன்ல படி யேறச்ச இடிச்சுண்டு ஏற்றான். பஸ்ல பின்னால நின்னு முதுகு தொடறான் கார்த்தால பார்த்தா என்ன செய்வான் தலை குனிஞ்சுப்பானோ. வேற வழியா போயிடுவானோ, நின்னு தலை தண்ணிக்கு தாங்க்ஸ் சொல்லலாம். வேணாம்... இதுதான் சாக்குனு பேச ஆரம்பிச்சுடும். எதுக்கு வம்பு? ஹலோன்னா ஹலோம் பே[illegible]லடுக்குனு அடுத்த தலையும்புடுங்கி ஏந்திஇறக்கி

லெச்சாலே...கெட்ட புத்தி இருக்தா இன்னொரு தவலை தூக்குவானா...நமக்குத்தான் எவனைக் கண்டாலும்பயம். எதுக்குப் பயப்படணும். பாருடான்னா நின்னோம். ஒழிஞ்க போறது போ.'

அவன் இருக்கும் இடம் திரும்பினாள். காலியாய் இருந்தது. உள்ளே போனாள், அவன் ஜன்னல் வழியே. அவள் திரும்பிப் பார்த்துவிட்டு உள்ளே போவதைக் கவனித்தான்.

விடிந்தது.

பல் தேய்த்தபடி அவள் வீட்டுவாசலைக்கவனித்தான். காலியாய் இருந்தது இன்று ஒய்வு. அவனுக்கும் பகுபதி நாதனுக்கும், பகுபதி லேட்டாய் எழுந்திருப்பார். அவள் கன்னூரிக்குப் போக வேண்டாமா?

பரிதாபமாய் இருந்தது. எங்கேயாவது போய் காபி சாப்பிட வேண்டும். எங்கே போகலாம்...ஸ்டேஷன் காண்டீன்ல சாப்பிடலாமா?'

பாண்ட்டும் சட்டையும்மாட்டி குவார்ட்டர்ஸ்குறுக்கு வழியாய்ஸ்டேஷன் நோக்கிப் போனான். பொட்டுஒட்டிக் கொண்டிருந்தவள், நிமிர்ந்து அவன் போவதை ஜன்னல் திரைச்சீலை வழியே பார்த்தாள்.

'இன்னிக்கு லீவாச்சே...எங்கே போறது இது?' என்று யோசித்தாள் அவன் மரம் தாண்டி ஸ்டேஷன் பாதையில் போவது தெரிந்தது

''அம்மா நான் கிளம்பறேன்''—குனிந்து பவுடர் சரியாய் இருக்கிறதா என்று பார்த்தாள். தங்கையைத் தனி பீரோ கண்ணாடியில் புடவை மடிப்பை நீவிக் கொண்டான்.

''இரேண்டி...நானும் வரேன்.''

''வேணாம். எனக்குச் சீக்கிரம் போகணும். அம்மா டிபன்பாக்ஸ் ரெடியா?'

''கறி வைக்கலேடி''

''பரவாயில்லை.கொண்டா''—டப்பாலைப் பையில் திணித்துக் கொண்டாள். செருப்புக்குள் கால்கள் நுழைந்து கொண்டன.

''காசு இருக்கா?''

''இருக்கு''

''பாஸ் எடுத்துண்டியா?''

''எடுத்துண்டேன்''

''பேனா, பென்சில்?'

அவள் இறங்கி நடந்தாள். வேகமானாள். 'எதுக்கு இத்தனை வேகமா நடக்கறோம். அவனைப் பார்க்கவா? சே.... சே...பிறகு...பார்த்தால் மன்னிப்பு கேட்கலாமே... எதுக்கு மன்னிப்பு? மன்னிப்பு இல்லை, ஒரு தாங்க்ஸ்... நாலு தலை ஜலத்துக்கு ஒரு தாங்க்ஸ். அது— அப்பா சொல்லிக்கட்டும். நீ ஏன் பறக்கறே எனக்கு,காலேஜுக்கு லேட்டாயிடுத்து. பறக்கறேன், பொய்...பொய்...பொய்... ஆமா...பொய். என்ன இப்போ...? நான் என்ன லவ்வா பண்ணப் போறேன். சும்மா ஹலோ... ஹலோ. தங்கை சனியன் பின்னாடியே வந்துடும். அதுக்கு முன்னாடி ஒரு ஹலோ சொல்லணும்.'

அவன் காபிக்கு ஆர்டர் செய்து நின்றபோது அவள் ஸ்டேஷனுக்குள் படியிறங்கினாள்.

'நினம் இங்கதான் காபி குடிக்குமா... பார்த்ததே யில்லையே',

'ஸோ...இதுதான் டைம். காலேஜ் டைம். எட்டு இருபது வண்டி புடிக்கறாளா தினமும்'

'கான்டீன் பக்கம். நிக்கலாமா, இல்லை லேடீஸ் காரேஜ் பக்கம் போய்விடலாமா?'

'கான்டீன் பக்கம் லேடீஸ் காரேஜ் நிக்காது. மெள்ள காபி டம்ளரோட லேடீஸ் பக்கம் போயிடலாம்மா? வேணாம். இது டூ மச்.'

அவள் பர்ஸ் திறந்து பாஸ் இருக்கிறதா என்று பார்த்தாள். இருந்தது. நாலு ரூபாய் சில்லறை கண்ணுக்குத் தெரிந்தது. பாஸ் வேறு அறையில் லைக்கப்பட்டிருந்தது.

'வண்டி வந்தரும் இப்போ அதுக்குள்ள போக முடியுமா?' வண்டி வரும் திசை பார்த்து பர்ஸைத் தோள் பைக்குள் திணித்தாள். பர்ஸ் தரையில் விழுந்தது.

சரேலென்று ஒரு பையன் ஓடிவந்தான். கருங்கற்கள் தாண்டிப் பரங்கிமலை பக்கமாக ஓடினான்

''ஐயோ என் பர்ஸ், என் பர்ஸ்'' அவள் அலறினாள்

காபிடம்ளர் தரையில் விழுந்து சிதறியது. ஸ்டூபன் அந்தப் பையனை பிளாட்பாரத்தில் ஓடியபடியே துரத்தினான் அவனைத் தாண்டி ஓடினான். நண்டலாளத்தில் குறித்துக் கருங்கல் பொறுக்கிநாலு அடிமுன்பு ஓடுகிறவன் முதுகில் அடித்தான். பையன் வலியில் முதுகு நிமிர்த்த, தாவிப் பிடித்தான் சட்டையைக் கொத்தாய்ப் பிடித்து பிளாட்பாரத்தில் போட்டான்.

பலர் சூழ்ந்துகொண்டு நபதபலென்று பையனை அடித்தார்கள். இவன் அவர்களை விலக்கி காலரோடு இறுகப் பிடித்து அவளெதிரே கொண்டு வந்தான்.

அவள் நிமிர்ந்து அவன் கண்களைச் சந்தித்தாள். மனசு 'ஹலோ' சொல்லிற்று.

11

வன்முறை ஏன் பளீரென்று அதிகரித்துவிட்டது. இது இயல்போ. இதுதான் இயற்கைக் குணமோ. சண்டை போடுகிறவனோடு சண்டை போடாது சாமான்ய ஜனங்களை ஏன் சாகடிக்கிறார்கள். அப்பா... முப்பத்திரண்டு பேர் ஒரு விநாடி நேரத்தில் அந்த ஆகஸ்ட் இரண்டாம் தேதி பத்து ஐம்பத்திரண்டுக்குச் சுக்கல் சுக்கலாய்ப் போனார்கள்.

வின்செண்ட்டும் செத்துப் போனான்-

வெடித்துச் சகலமும் சிதறுகிற போது சத்திய நாராயணன் ஷோபனாலை முத்தமிட்டுக் கொண்டிருந்தான். ஏர்போர்ட் குவார்ட்டர்ஸில் அந்தக் கட்டடத்தில் எட்டு போர்ஷன்களே இருந்தன. நான்கு நான்காய்ப் பிரிக்கப்பட்டிருந்தன. சூட்கேஸ் வெடிப்பதற்குப் பத்து நிமிடத்துக்கு முன்பு இடது மாடிப்படி வழியே ஏறி மேல் தளம் வந்தாள். மேல் தளத்தில் இரண்டு தண்ணீர்த் தொட்டிகள் இருந்தன. ஒரு தண்ணீர்த் தொட்டி மீது மரம் தவழ்ந்து கொண்டிருந்தது. அந்த தண்ணீர்த் தொட்டி உபயோகத்தில் இல்லை. எட்டு குடித்தனத்தில் ஐந்து குடித்தனம் திருமணமாகாத இளைஞர்கள், திருமணமாகியும் மனைவியுடன் இல்லாத ஆட்கள் தண்ணீர் செலவு அதிகமில்லை. எனவே, ஒரு தொட்டி நிரப்பி மற்றது துண்டிக்கப்பட்டிருந்தது.

சத்தி இருட்டு கவிழ்ந்த மர நிழலுக்குப் போனான். சுற்றும் முற்றும் பார்த்தான். குவார்ட்டர்ஸ் அமைதியாய் இருந்தது. சட்டென்று ஏகிறி உள்ளே உட்கார்ந்து கொண்டான். சற்று நேரம் பொறுத்துக் காலடிச் சத்தம் கேட்டது. வலது மாடிப்படி விளக்குப் போடப்பட்டது. அவள் தொட்டி அருகே வந்து நிற்பது ஊர்ஜிதமானது

சத்தி. அவள் குரல் கொடுத்தாள். 'யெஸ்...' அவன் பதிலிறுத்தான்.

கவர்க்கட்டை மீது ஏறினாள். குமாய் மீது கால் வைத்தாள். ஒரு எகிறலில் உள்ளே குதித்தாள்.

''என்ன சத்தி, இந்த நேரத்துக்கு யாராவது பார்த்தா என்ன ஆறது...?''

''உங்கப்பா ஏதாவது திட்டினாரா...?''

''இல்லை. நிறையப் பொய் சொல்லிச் சமாளிச்சுட்டேன்''

''யப்பா... எனக்குக் கலவரமா இருந்தது. கேட்டுக்கிட்டுப் போகலாம்னுதான் வந்தேன்.''

''இப்படி நீ லேர்றதுதான் கலவரமா இருக்கு சத்தி... சாயந்திரம் மூணு மணிலேர்ந்து ஒன்பது வரைக்கும் சுத்தினது போறலையா?''

''உன்னை பிரியவே முடியலை கண்ணம்மா?''

''எனக்குக்கூட சத்தி. ரொம்ப டயர்ட் ஆயிடுச்சு. போய்ப் படுக்கலாம்னா தூங்கவே முடியலை.''

''சாப்பிட்டியா?''

''உம்...மோர் சாதம்''

''நான் ஒண்ணும் சாப்பிடலை. பசியே எடுக்கலை. இப்போ இதுக்குள்ளே உட்கார்ந்ததும் என்னவோ கபகபன்னு பசிக்குது.''

''நான் பிஸ்கட் கொண்டாரட்டா?''

''.....''

''வேணாம்.''

''ஏன்?''

''என் கூடவே இரு''

''பிரிய முடியலையா?''

''யெஸ்.''

''யப்பா...எனக்கும் லவ் பெரிய...கிக்...இல்லை சத்தி திட்ட உட்கார்ந்து பேசினாலும் மயக்கம். பிரிஞ்சி தன்னி இருந்தாலும் மயக்கம். மூணு மணிலேருந்து ம்ரல் கோத்துக்கிட்டு சுத்தினமா...விட்டுக்கு வந்து சாதம் பிசையறபோது கூட யாரோ விரலைக் கோத்துக்கிட்ட மாதிரி...'

''யாரோவா''

''ஐ மீன்...நீ விரலைக் கோத்துக்கிட்டிருக்கிற மாதிரி நான் சாதம் பிசஞ்சுட்டு என் விரலைப்பார்த்துக்கிட்டே இருந்தேன். அம்மா கேட்டாங்க, 'என்னடி முடி இருக்கா'ன்னு, உன் புத்தி உன்னைவிட்டு எங்கே போகும்னேன். 'வர வர கொழுப்பெடுத்து அலையறே'ன்றாங்க.'

''என்னைப் புடிச்சிருக்கா ஷோபனா...''

''எத்தனை ஆயிரம் தடவைதான் கேட்பே...''

''சொல்லேன்.''

''ஐ லவ் யூ!''

''இன்னொரு தடவை சொல்லேன்.''

''ஐ லவ் யூ.''

அவன் அவளைத் தாவி இறுக்கிக் கொண்டான். நெஞ்சோடு அவளை இறுக்கிக் கட்டிக் கொண்டான். அவளுக்கு உடம்பெங்கும் உஷ்ணம் பரவியது. ஆடுகால் நரம்புகள் கனத்து இழுத்தன பின்னிக்கொள்ளவேண்டும் போல் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. அவன் கன்னத்தோடு கன்னம் இழைத்தாள். முதுகு முழுவதும் தடவிக் கொடுத்தாள். இமைய இமையக் கண்கள் கிறங்கிற்று. அவன் காது மடல்களை மெள்ளக்கடித்தாள்..அவன் பின்கழுத்தில் பற்கள் பதித்தாள். பிடரியை இழுத்துத் திருகினாள். 'கிஸ் மீ' என்று அவன் கட்டளையிட, மெள்ளத் தலையைப்

பின்னுக்குத் தள்ளி லாய் பிளந்தாள். அவன் இறுக்கி அவளை முத்தமிட்டான். இன்னும் இறுக்கினான்.

''சத்தி...போதும் சத்தி. என்னை ஏதாவது பண்ணித் தொலைச்சுடாதே...'' மனசு கதறிற்று. மறுப்பு தோன்றிற்று. செயல்படுத்த முடியவில்லை

''சத்தி, ட்யூட்டி இல்லையா.''

''உம்.''

''போகவேண்டாமா?''

''உம்.''

''யாராவது வந்துடுவாங்க சத்தி...ப்ளீஸ் ''

பிரிந்தாள்.

''நாளைக்கு நான் வீட்டுல சொல்லிடப்போறேன்... குட்டி...எங்க வீட்டுல சொல்லி உங்க வீட்டுக்கு வர.''

''வேணாம்ப்பா.''

''ஏன், பிடிக்கலையா?''

''இல்லேப்பா. நான் படிக்கணும். அட்லீஸ்ட் பி ஏ. வாவது முடிக்கணும். இது முதல் வருஷம்தானே.''

''முடியாது என்னை நீ விட்டுருவே.''

''ஏ, குரங்கே...விடறவளா இப்படித் திருட்டுத்தனமா வந்து ஒட்டிக்கறேன். படிப்பு முடியட்டும்ப்பா ''

''எனக்குப் பிரியவே முடியலைடா.''

''கல்யாணம் பண்ணிண்டா ஆபீஸே போகமாட்டீங்கனா?''

''எப்போ கல்யாணம் பண்ணிக்கலாம். அதை முதல்ல சொல்லு.''

''இன்னும் இரண்டு வருஷம் கழிச்சு...கடைசி வருஷம் பி. ஏ. பரீட்சை எழுதின மறுநாள்...''

''அதுக்கு முன்னாடி உங்கப்பாகிட்ட பேசி...''

''வேணாம்.''

''இப்படித் திருட்டுத்தனமா பார்க்கறது அவாய்ட் பண்ணலாமே.''

''இப்பவே வீட்டுக்கு லேசுபாசா தெரியும்.''

''நான்னா...?''

''இல்லை. என்னவோ லவ் ஒடிண்டிருக்குன்னு அம்மா பயபடறா.''

''என்ன சொன்னாங்க?''

''வேற ஜாதிக்காரன் எவனையாவது இழுத்துண்டு வந்தே நாலு கூறா வெட்டிப் போட்டுருவேன்னா. நமக்குள்ளே அந்த ப்ராப்ளம் இல்லை. கிட்டிமுட்டிப்போனா என்னென்ன வருமோ...'

''என்ன வரும்?''

''நாங்க இன்ஜீனியரா பார்த்தோம். டாக்டராப் பார்த்தோம். உங்களுக்கு இரண்டாயிரத்து நூறுதானே சம்பளம்'னு ஏதாவது சொல்லுவா. பிகு பண்ணுவா. உயரம் கம்மிதானே ஆம்பளைன்னா ஆறடி இருக்க வேண்டாமா? மல்லிகாவோட மச்சினன் நிடுங்குன்னு இருப்பான். ஐயோ... எங்கம்மா கிட்ட... ரொம்ப கஷ்டம்...''

''அப்பா...?''

''அவருக்கு ஒண்ணும் தெரியாது. அம்மாதான் எல்லாம்.''

''ஓடிரலாமா?''

''தப்பு. அது மட்டும் நான் பண்ணமாட்டேன்.''

''நான் சொல்றது ரெஜிஸ்தர் மேரேஜ்.''

''நோ. எனக்கு நகை வேணும். பட்டுப்புடவை வேணும். தாலி மனுஷா வேணும். பழசு கட்டிண்டு குப்பைக் காகிதம் முன்னாடி கல்யாணம் பண்ணிக்க

மாட்டேன். சத்தியை எனக்குப் புடிச்சிருக்கு இஷ்டமிருந்தா கல்யாணம் பண்ணி வை. இல்லையா எனகது... கல்யாணமே வேணாம்.''

''உன் அம்மா கடைசிலரைக்கும் ஒப்புக்கலேன்னா?''

''அவளை மாதிரி பத்து மடங்கு கெட்டிக்காரி நான். அழுது, அடம்புடிச்சு, ஆர்ப்பாட்டம் பண்ணி...ஒரு வழி பண்ணிடமாட்டேனா...''

''இப்போ இது பத்தி வாயே திறக்க வேணாமா?''

''ஐயாம் நைஸ்லி சத்தி. இப்பவே கல்யாணம் பண்ணிண்டு...உனக்கு ரொம்ப அவசரம்னா நீ யாரை யாவது பண்ணிக்கோ.''

''ஏய்...''

''நான் உனக்கு ஏ கிளாஸா தோசைக் கல் வாங்கித் தர்றேன்.''

''தோசைக்கல்லா?''

''முதல் முதலா எங்க வீட்டுல, தோசை, மிளகாய்ப் பொடி சாப்பிட்டுத்தானே லவ்வே வந்தது.''

மிளகாயப்பொடி சரியானகாரம். முதல்வில்லலுக்குக் கூடவே வழித்து வாயில் போட்டுக்கொள்ள இரண்டு அரையலில் மிளகாய்காரம் நாக்குசுட்டு, தொண்டையைப் பொசுக்கி விக்கல் தூக்க, தொண்டைக்குள் விள்ளலோடு விக்க, மூக்குக்கும் நாக்குக்கும் இடையே ஒருதுளி ஏறி மெக் மெக்கென்று விக்கி, நாலு சொம்பு ஜலம் குடித்துப் பகல் காக்கை மாதிரி குழறிப் புரைக்கேறி, 'தலையில தட்டு, தலையில தட்டு,' என்று பெரியவர் கத்த...அருகிலிருந்தவள் உள்ளங்கை விரித்துத் தலைக்குக் கொண்டுபோக—அவன் தும்மலுக்கு வாய் திறந்து குனிய, நச்சென்று அடி கழுத்தில் விழுந்தது. மூக்கு வழியே மிளகாய் விரை கீழே விழ உவர் வந்தது.

''இதுக்குக் கழுத்துல அடிக்கணும்னு உங்களுக்கு எப்படித் தோணிச்சு?'' என்று அப்பாவியாய் சத்தி வினவிய போது, வாய்விட்டு நடுக்கூடத்தில் சிரித்துவிட்டாள்.

சிரிக்கிறபோதுதான் சத்தி அவளைச் சரியாகப் பார்த்தான்.

அவளும் நோக்கினாள். கண்கள் கலந்தன இரண்டு மாதம் பிறகு கைகள் கலந்தன காலேஜ் வாசலும் கடற்கரையும் கலந்தன.

எனக்கு கிரேப் ஜூஸ், அவள் கூவினாள்

''எனக்கு மாங்கோ''—அவன் கூவினான்.

'ஓ. என்னை வுட்டுட்டு மாங்கோ சாப்பிடற இல்லை' அவள் கிரேப் உறிஞ்சிச் சிணுங்கினாள்.

''நீ கிரேப் குடிக்கலையா என்னை விட்டுட்டு''...அவன் பதிலுக்கு முறைத்தான். அவள் உதடு சுழித்தாள்.

''லேனா மாத்திக்கலாமா?''—அவன் கேட்டான்.

''நோ. கொண்டா அதை இப்படி.'' இரண்டையும் கலந்தாள். ''குடி இப்போ''—நீட்டினாள்.

''நல்லலேளை.''

''என்ன?''

''நான் காபி ஆர்டர் பண்ணை நினைச்சேன்.''

''ப்ஹொக்'' என்று வாய் நிறையச் சாறோடு சிரித்தாள். அவன் சட்டையை ஈரம் செய்தாள். அவன் துடைத்துக் கொள்ள, ''ஏய், ஒண்ணு பண்ணலாமா?''—கூவினாள்.

''என்ன?''

''...யும் லெமன் ஜூஸும் கலந்து பார்க்கலாமா?'' ...சிரித்தாள். பஸ்ஸர் அழுத்தினாள்.

''ஒரு ப்ளாக் காபி, ஒரு லெமன் வித்ஷ்கர்'' இரண்டையும் சம அளவாய்க் கலந்தாள். ''குடி'' என்று நீட்டினாள்.

''என்னைச் சித்ரவதை பண்றே கண்ணம்மா.''

''காதலுக்காக அவனவன் விஷம் குடிச்சிருக்கான். இது குடிக்கப் பயப்படறியே. நான் குடிக்கறேம்பாரு'' ஒரு சிப் குடித்தாள். ''நல்லா இருக்கு சத்தி.''

''உன் கையால் எது கொடுப்பினும் குடிப்பேன் அரசி காதல் போயின் சாதல், செத்த பிறகும் காதல்'' மூன்று மி..றில் மொத்தமும் குடித்தான், முகம் மாறினான்.

''என்ன சத்தி?''

''நல்லால்லே.''

''கரெக்ட். நல்லா இல்லே''—டம்ளர் நகர்த்தினாள். ஏய்...நீ குடி உன்னுதை...''

''எனக்கென்ன பைத்தியமா கண்டதைக் குடிக்கறதுக்கு. நான் மாட்டே.''

''கொன்னுருவேன்''—அவள் கையை முறுக்கினான்.

'அம்மா...'' நடு ஓட்டலில் கத்தினான். ஓட்டல் திரும்பிப் பார்த்தது.

''வேணா நீயே குடி'' —கலந்ததை நகர்த்திவிட்டு எழுந்தாள். தட்டில் காசு போட்டாள். அவன் அடுத்த டம்ளரையும் மடமடவென்று குடித்து அவள் பின்னே நடந்தான். ஓட்டல் விட்டுப் பின்பக்கம் இறங்கிக் கடற் கரைக்குப் போனார்கள்.

''கோபமா?'' என்றாள்

''இல்லை. தலைசுத்தல்' என்று சைகை செய்தான். நடந்து அலைகள் அருகே போனார்கள், தள்ளாடினான், நின்றான்

''என்ன சத்தி?''

'மறுபடி தலை சுத்தல்'—சைகையில் சொல்லியபடியே பொத்தென்று குப்புற விழுந்தான்.

''சத்தி... சத்தி...''—அவள் பதறினாள்.

''ஐயோ சத்தி...''—புரட்டிப் போட்டாள். அலனுக்குக் கண்கள் செருகின.

''யாராவது ஓடிவாங்களேன்...''—கூவி அழைத்தாள். குழந்தைகளோடு உட்கார்ந்திருந்த முதிர்ந்த தம்பதியை நோக்கி ஓடினாள்.

''என்னங்க,என்ன ஆச்சு?''-யாரோ அருகே உட்கார. எழுந்தான். ''ஒண்ணுமில்லே சார். சும்மா பயமுறுத்தினேன் விளையாட்டுக்கு. நத்திங். நீங்க போங்க.''

''சத்தி?'' அவள் கோபத்தில் கத்தினாள்.

'ஆ...நீ என்னை முட்டாளாக்கலாம். நான் உன்னை முட்டாளாக்கக் கூடாதா?''

''இரண்டு பேரும் முட்டாளாகாம இருந்தா சரி...''—அந்த ஆள் சொல்லிவிட்டுப் போனான். அவன் சொன்ன நேரம் வானத்தில் உள்ள கந்தர்வர்களும் தேவர்களும் 'அப்படியே ஆகட்டும்' என்றார்கள். ஆறு மாதங்கள் கழித்து நீர்த் தொட்டியில் பிணைந்து முத்தமிடுகையில்-

லெடி லெடித்தது—
ஏர்போர்ட் கூரை சிதறியது...
நிலம் நடுங்கியது.
''என்ன அது...'' சத்தி எழுந்திருந்தான்.

ஏர்போர்ட் பக்கம் நெருப்பு உயரா எழுமபித் தரையில் இறங்கிக் கொண்டிருந்தது.

''ஏய்... நான் போறேன்...ஏர்போர்ட்ல ஏதோ பிராப்ளம்.''—எகிறி குதித்துப் படியிறங்கி ஓடினான். ஏப்ரன் வழியே உள்ளே போக முயற்சித்தான்.

"அதுவரைக்கும் போகலை. மாங்கா அடிப்பேன் சின்ன வயசுல... தோட்டக்காரன் பாய்ஞ்சு புடிச்சுக் தலையில அடிப்பான். வாங்கிட்டு சைலண்டா வந்து ஒடற தூரத்துல நின்னு கல் எடுத்து எவன் அடிச்சானோ அவனைப் பார்த்து எறிவேன்."

அவன் விழிகள் சுற்றும்முற்றும் கவனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தன.

"மறுபடி வருவான்னு பார்க்கறீங்களா...?"

"வரலாம் இது மோசமான ஏரியா. ஒரு கும்பலே இங்கே பிக்பாக்கெட் ஆபரேட் பண்ணுது.."

"அந்த ஆள் கும்பலோட வந்துட்டா...?"

"அதுக்கும் தயாரா இருக்கேன். கான்டீன் விறகுக் கட்டை இருக்கு; நெருப்பு இருக்கு. சமாளிக்கலாம்..."

"என் கூடத்தானே இருக்கீங்க...எப்போ பார்த்தீங்க இத்தனையும்...?"

"முதல் கல் விழுந்தவுடனே சுத்தி நோட். பண்ணிட்டேன்."

"அடிதடி பழக்கம்போல் இருக்கு."

"வாழ்க்கைலே சில சமயம் மோசமானதுக்கும் தயாரா இருக்கணும். எதுக்கும் ரெடியா இருக்கணும்."

"எனக்குப் பயமா இருக்கு...நான் தனியா வந்து நிக்கற போது..."

"நானும் அதைத்தான் யோசனை பண்றேன்."

"தினம் நீங்க இங்கேதான் காபி..."

"இனிமே இங்கேதான் காபி தினமும்..."

'வண்டி வருது'

"எனக்கு டைம் ஆகலை."

"காபி சாப்பிடலாமா...உன்னிகிருஷ்ணன், ரெண்டு ஃபில்டர் காபி. எம் ஏ. படிக்கிறீங்களா?"

"ஆமாம். செகண்ட் இயர்."

"அப்புறம்...ஐ'யம் ஸாரி."

"ஏன் திடீர்னு..."

"ராத்திரி வீட்டுக்குள்ளே தடார்னு நுழைஞ்சதுக்கு... ஹால்ல இருப்பீங்கன்னு நான் எதிர்பார்க்கலே."

"தட்ஸ் ஆல்ரைட"—பதில் சொன்னாள். ஆனாலும் வெட்கப்பட்டாள்.

வண்டி வந்து நின்று ஆட்கள் இறங்கி, ஆட்கள் ஏறிக் கிளம்பியது.

சத்தியநாராயணன் ஏர்போர்ட் அருகே வரும்போது மணி பார்த்தான் இன்னும் அரை மணி நேரம் இருந்தது.

உள்ளே போய் காபி சாப்பிடலாமா? லௌஞ்சில் காபி நாலு ரூபாய். கான்டீனில் ஒரு ரூபாய். இரண்டுமே அபத்தமாய் இருக்கும்.

வாசலில் உள்ள ஓட்டல் டீ சுமாராக இருக்கும். காபி என்று ஏதோ ஒரு குழம்பை வைத்துவிடுவான் வி.எல்.ஆர் போகலாம். வண்டி ஏர்போர்ட் வாசல் தாண்டிப் போயிற்று. இடதுபக்கம் ரயில்வே டேஷனில் நுழைந்தது.

ஸ்டாண்ட் போட்டு வண்டியைப் பூட்டினான். படிகள் தாவி ஏறினான். 'டிபன் சாப்பிடலாமா?' என்று யோசித்த படி பாலத்தில் நடந்தான். திரும்பி இறங்கினான்.

பாதிப் படியில் இறங்கும்போது அவள் நிற்பது தெரிந்தது. யாருடனோ சிரித்துப்பேசிக் கொண்டிருந்தாள்.

பி ஏ முடித்து இப்போது எம்.ஏ. படிக்கிறாளாம். போய் விடலாமா? போய்க் குழம்புக் காபியே குடிக்க லாமா? இக்கே ஃபில்டர் காபி கிடைக்கும். அவள் இவனைக் கவனித்துவிட்டாள். லேசாய் முகம் மாறினாள். மறுபடி சிரித்துப் பேசினாள்.

நிமிர்ந்து பார்த்தாள்.

'இவன் ஏன் இங்கு வருகிறான்? ஏதாவது வேவு பார்க்கிறானா? இதுவரை கண்ணில் படவில்லையே. இது தற்செயலா?— நிறுத்திக் கேட்கலாமா? இன்னும் சாகலையா சத்தி?'—கேட்கலாமா? மனசு சரியில்லை யாம் மாத்திரை முழுங்கினாலாம். 'என்ன மனசுக்கு...?' யார் கேட்டாலும் சொல்லவில்லை.

''என்னை மறந்துடு ஷோபனா''—ஆஸ்பத்திரியில் கைகூப்பினான்

''மறக்காம உருகிண்டிருப்பேன்னு நினைச்சியா? பட்டினு இருபது மாத்திரை எடுத்து முழுங்கினவனோட குடித்தனம் பண்ண முடியுமா?''

பதிலே சொல்லாமல் திரும்பியாயிற்று. ''வின்சென்ட் அவனுக்கு நெருங்கிய ஃப்ரெண்ட். அவன் செத்துப் போனதுல அவன் அப்செட் ஆயிட்டான்''—அப்பா சொன்னார்.

நினம் நினம் யாராவது செத்துத்தான் போகிறார்கள் இதற்கெல்லாம் மாத்திரை முழுங்கித் தற்கொலை பண்ணிக் கொள்ள முடியுமா?

''உம் பேர் என்னடு குழந்தே''—அவள் அம்மா ஆஸ்பத்திரி வாசலில் கேட்டாள்.

''ஷோபனா.''

''நினைச்சேன். உன்னைப் பத்திச் சொல்லியிருக்கான் ன்னோட ஏதாவது சண்டையா?''

பகிரென்றது இவளுக்கு என்ன சொல்லியிருக்கிறான்? எவ்வளவு சொல்லியிருக்கிறான்?

''அண்ணனுக்கும் தங்கைக்கும் என்ன சண்டைலரும் மாமி. அப்பாலோட ஃப்ரெண்ட் இவர். அப்பாவுக்கு வர முடியலை. பார்த்துட்டு வரச் சொன்னார். நான் வரட்டுமா?''

அம்மா நிகைத்து நிற்பது தெரிந்தது.

அறுத்துக் கொண்டாள் என்பது புரிந்து போயிற்று. ஏன் நான் ஓடிவரணும். எனக்கு நகை வேணும், புடவை வேணும், சீர் செனத்தி வேணும். குப்பைக் காகிதத்துக்கு முன்னாடி என்னால கல்யாணம் பண்ணிக்க முடியாது. எங்கம்மாவை விட நான் கெட்டிக்காரி. இப்படிப்பட்ட வளுக்குத் தற்கொலை என்பது பயம்தான். ஆனால் என் ரணம் ஏன் உனக்குப் புரியவில்லை. நீர்த்தொட்டிக்கு வரும் முன் நானும் வின்சென்ட்டும் பேசினது உனக்குத் தெரியாது வெல் போய் வா ஷோபனா நிறையப் பட்டுப் புடவை, நிறைய நகைகளோடு வாழ்ந்துக் கொண்டிரு.

ஆனால், அண்ணன்—தங்கை என்று பல்டி அடிப் பாளா ஒருத்தி? ஒரு வேளை போலீஸ்... எவ்தொயரி... இதெல்லாம் வரும் என்று பயந்துவிட்டதா?'

''என்னடா நீ என்னமோ கதை அளந்தே. அந்தப் பொண்ணு தங்கைன்னு சொல்லிப் போறதே.''

வலித்தது.

அம்மாவுக்குக் கைகூப்பினான். ''என்னை விட்டுடு. ப்ளீஸ்.''

''என்ன காரணம் சொல்லுவே?''

''அவனை விடுடி. அவனா சொல்றபோது சொல் லட்டும். சத்தி மறுபடி தயவுசெய்து இதைப் பண்ணாதே.

கிட்டத்தட்ட ஆறாயிரம், போலீஸுக்குச்செலவாயிடுத்து. காகக்குச் சொல்லலை சத்தி...உன் தங்கை கல்யாணம் பணண வெச்சிருந்த காசுலேருந்து எடுத்தேன்னு சொல்ல லரேன். காச போனது போகட்டும்' உன் தங்கை கல்யாணத்தைக் கெடுத்தராதே.'' —அம்மா அழுதாள்.

அவன் இனி செய்வதில்லை என்று லாக்குக் கொடுத் தான்.

மூன்று வாரத்தில் ட்யூட்டியில் சேர்ந்தான். தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருந்தான். எங்கே போட்டாலும் வேலை செய்தான்.

''சத்தி, ஏம்ப்பா சைலண்ட் ஆயிட்டே?'' அலுவலக நண்பர்கள் கேட்டார்கள்.

''பேசி என்ன புண்ணியம்...''

''டிராஃபிக்ல புதுசா ஒரு மேடம் வந்திருக்கு. ஸ்ரீமதியாம்.''

''சரி!''

''அதேகமா உன்கிட்டதான் வேலை கத்துக்கும்.''

''சரி!''

''என்னடா...எதுனா பேசினியா?''

''பேர் சொன்னாங்க சரின்னு கேட்டுக்கிட்டேன். வேலை பத்து நிறையக் கேள்வி கேட்டாங்க. பதில் சொன்னேன்.''

''அவ்வளவுதானா?''

ஸ்ரீமதி ஒரு கை மல்லிகைப்பூ எடுத்து வந்தாள். சைனண்ட்டரில் பேப்பர் பரப்பில் ஷெல்.ப்போல் உள்ள இடத்தில் வைத்தாள்.

''என்ன இது?''

''மல்லிகைப்பூ, கார்கோலேருந்துகொண்டாந்தேன்.''

''எதுக்கு?''

''சும்மா வாசனைக்கு.''

''ஸாரி, எனக்குப் புடிக்காது.' வாரிக் குப்பைத் தொட்டியில் போட்டுக் குப்பைத் தொட்டியைத் தூக்கித் தோளில் வைத்தான்.

''புத்தம் புதுப் பூவைக் குப்பைத் தொட்டியில் போட நீங்களே?''

' நாளைக் காலையில மாரடைப்புல செத்துட்டீங்க... இல்லை, கெய்சர் போடும்போது ஷாக் அடிச்சுக் கருகிட் டீங்க. இந்த மாதிரி ஒரு கூடைப் பூ கொண்டாந்து தொட்டுவாங்க உங்க மேல. வாசனை புடிப்பீங்களா அப்பவும்?''

''ஏன்...ஏன் ஏன் நான் சாகணும்?''

''பொறந்தவங்க எல்லோரும் சாகணும். எப்போ வேணா எந்தக் கணம் வேணா எப்படி வேணா. இது தெரிஞ்சவனுக்கு வாசனையில்லை. வசதி பத்தி அக்கறை இல்லை.''

''உங்களுக்குத் தெரிஞ்சிருச்சா?''

''யெஸ்.''

''எப்போ...எப்படி?''

''கண்ணு முன்னே எனக்குத் தெரிஞ்சவன் துண்டு துண்டா வெடிச்சுச் சிதறியபோது...

''யார் அது??'

''அது நீங்க தெரிஞ்சுக்க வேணாம்...இனிமே என் டேபிள்ல பூ வேணாம்.''

''வேணாம்னா வுடு. ஸ்ரீமதி, என் டேபிள்ல வை. நான் மோந்து பார்க்கறேன்'' ஸ்ரீமதி யார் டேபிளுக்கோ போனாள். சத்தி எடை மெஷினாய் கால்குலேட்டராய், கம்யூட்டராய் உட்கார்ந்து வேலை செய்தான். இயந் திரமாய் இருந்தான்.

நிறுக்கன். முசுடு... ஒரு மாதிரி... ரிசர்வ்ட் என்று பெயர் வாங்கினான்.

எப்போதாவது கனவில் நீர்த் தொட்டி வரும் அவன் மட்டும் நீர்த் தொட்டியில் உட்கார்ந்து காத்திருப்பான்.

தடேரென்று ஃபயர் இன்ஜின் ஹோஸ்உள்ளே விழுந்துநீர் பாய்ச்சப்படும். உடம்பெல்லாம் ஈரமாகும். மேலே தூங்கு மூஞ்சி மரம் தெரியும். துள்ளித் துள்ளி ஃபயர் ஹோஸ் மட்டும் அவன் மீது நீர் பாய்ச்சும். தொட்டி தளும்பி நிரம் பும். அவன் மட்டும் உள்ளே அசையாது உட்கார்ந்திருப் பான். எழுந்தால் தெளிந்து விடும். மூச்சடக்கி மூச்சடக்கி இருப்பான். திணறும். 'பொளேக்' என்று எழுந்திருக்க கனவு கலைந்துபோகும்.

படுக்கை ஈரமாகியிருக்கும். லுங்கி, தலையணை எல்லாவற்றிலும் ஈரம் இருக்கும்.

''என்னடா...குழந்தை மாதிரி படுக்கையிலே...''

''தெரியலேம்மா...கனா...''

''என்ன கனா...?''

''ஃபயர் ஹோஸ் துள்ளிக் கண் முன்னே ஆடும்.'' வரக்கூடாது. வெளிய தலைக்காட்டக்கூடாது.''

பேசாமல் தலை குனிந்து கொண்டான்.

அப்பா தோள் தொட்டுச் சொன்னார்.

''சைகியாட்ரிஸ்ட் பார்க்கறியா?''

பார்த்தான்.

''எங்கிட்டகூட எதையோ மறைக்கறீங்க சத்தி. கம் அவுட் வெளியே வாங்க.''

''வேணாம் சார்.''

''படுக்கப் போறதுக்கு முன்னே நல்லா குளிச்சுட்டு ப்ளாடரை எம்டி பண்ணிட்டுப் படுங்க, இந்தத் தொந் தரவு வராது. கனவு வராம இருக்கணும்னா மனசு விட்டுப் பேசணும்.''

''அடுத்த தடவை வந்து பேச டிரை பண்றேன் டாக்டர்.''

''டேக் யுவர் ஓன் டைம்''

'ஆனா மூஞ்சி செத்துப் போச்சு. என்னிக்கு என்னை விட்டானோ அன்னிக்கே முகம் டல்லாயிடுச்சு. நல்லவேளை, இந்தக் கிறுக்கனைக் கல்யாணம் பண்ணிக் கலை. அவசரப்பட்டுப் பண்ணியிருந்தா...பெட் ஈரமாக்க றானாம். அப்பா சொன்னார்—ஆபீஸ்ல யாரோ சொன் னாங்கண்ணு. சாகற மட்டும் ஈரத்துணி அலசற வேலை தான். தைரியமில்லாதவனுங்க. ஸ்டூபன் கில்லாடி. அல்ஜீப்ரா கணக்கு மாதிரி சொன்னான். 'கல்லு வரும், பின்னால வா'ன்னு. அதே மாதிரி கல்லு வந்தது அதுக்குப் பிறகும் அலர்ட்டா நிக்கறான். ஆம்பளைங்கல்லா அலர்ட்னஸ் வேணும். பொறி பறக்கணும். எப்போ பார்த்தாலும் தூங்கி வழிஞ்சுண்டு. சதா குடிக்கிறானோ என்னவோ...எப்படி ஒழிஞ்சா எனக்கு என்ன...'

'ஸ்டூபன்னு கூப்பிடணுமா... மனோகர்னு கூப் பிடணுமா?''

''ஆபீஸ்ல ஸ்டூபன்னு கூப்பிடுவாங்க. வீட்டுல மனோகர்னு கூப்பிடுங்க.''

''வண்டி வருது மனோ...''

''வெரி குட்... நீங்க இளம்புங்க.''

''ஹலோ சத்தி. எங்கே இவ்வளவு தூரம்?'' ஸ்டூபன் கை நீட்டினான். அவள் முகம் திரும்பினாள்.

''காபி சாப்பிட வந்தேன்''

''உன்னிகிருஷ்ணன்...''

''பரவாயில்லை. நான் பார்த்துக்கறேன்''—நகர்ந் தான்.

''அவரு இந்தியன் ஏர்லைன்ஸில் டிரா...பிக அஸிஸ் டெண்ட்''—அவளிடம் சொன்னான்.

''ஓ...''—அவள் வண்டி வருவதைப் பார்த்தாள்.

வண்டி உள்ளே வந்தது.

''நான் வரட்டுமா?'' — ஸ்டூபனைப் பார்த்துச் சிரித்தாள்.

சத்தி நிமிர்ந்து நோக்கினான்.

அதே பல் வரிசை, அவன் காது கவ்வி, கழுத்து கடித்து...இவனையும் பார்த்துச் சிரித்த பல் வரிசை.

இந்த காபி குடித்துவிட்டு விழுவானோ? கண்கள் செருகிக் கிடப்பானோ?

அருகே போக சும்மா விளையாட்டு செய்யறேன். நீங்க போங்க என்பானோ?

வண்டி ஏறினாள்

ஸ்டீபனைப் பார்த்துக் கையசைத்தாள். பின்னே காபி தம்ளரோடு சத்தி நின்றிருந்தான். முகம் திரும்பிக் கொண்டாள்

அவளுக்கும் நீர்த்தொட்டி கனவு ஒருமுறை வந்தது.

வெளியே பெரிய கலாட்டா. வெடி வெடிக்கிறார்கள் வெடிக்கிற இடம் நோக்கி சத்தி ஓடுகிறான் வெடியில் சிதறித் தூங்குமூஞ்சி மரம் தொட்டி மீது கவிழ்கிறது. அவள் அப்படியே உள்ளே உட்கார்ந்து கொள்கிறாள். இப்போதைக்கு இந்த இடம்தான் பத்திரமான இடம். எந்த வெடியும் இங்கே வராது சிறிய காயம்கூட வராது. ஓடுங்கி உட்கார மரத்துக் கிளைகள் அவளை மெள்ள நிமிண்டுகின்றன. வளைந்து வளைந்து விலக, க... கண்ட இடங்களில் தொடுகின்றன. ஏய், சத்தி...எ... இது... உதற, கனவு கலைந்துவிட்டது.

"ஏர்போர்ட் போறீங்களா?"—ஸ்டீபன் கேட்டான்.

"ஆமா."

"குவார்ட்டர்ஸ்ல டிராப் பண்ணிடறீங்களா? இப்படியேகட் பண்ணி உள்ளே போயிடலாம்."

சத்தி தயங்கினான். "சரி" என்றான்.

வண்டி உதைத்துக் கிளப்பினான். ஸ்டீபன் பின்னே உட்கார, எதிரே நான்கு பேர் வந்து நின்றார்கள். அதில் ஒருவன் ஸ்டீபனிடம் அடிபட்டவன்.

13

மோட்டார் சைக்கிள் நகர்ந்தது நான்கு அடி கடந்த போது குறுக்கே சிமெண்ட் பைப் போடப்பட்டது வெள்ளைச் சட்டையும் வெள்ளை பாண்ட்டுமாய் ஒரு ஆள் கோணலாய் நின்று கை காட்டினான். போட்டிருந்த உடுப்புக்குச் சம்பந்தமில்லாமல் முகத்தில் ஒரு பொறுக்கித் தனம் இருந்தது. மீதி இரண்டு ஆட்களும் அழுக்காய் இருந்தார்கள்.

"யாருப்பா நம்ம தம்பியை அடிச்சது?"

"பின்னாடி...பின்னாடி உடகார்ந்திருக்கிறவன்"—அந்தப் பையன் கத்தினான். மோட்டார் பைக் நகர்ந்தால் தாக்கத் தயாராய் இருந்தார்கள்..

"கூட குட்டி இருந்த ஜோர்ல ஹீரோ ஆயிட்டிருப் பாரு. நிறுத்து வண்டியை."

ஸ்டீபன் முதலில் இறங்கிவான். சத்திக்கு நிலைமை என்னவென்று புரியவில்லை.

"கரெக்ட் கூட பொம்பளை இருந்ததால்தான் அப்படிப் பண்ணேன். தம்பி, உனக்கு எத்தினி துட்டு வேணும்?"— ஸ்டீபன் பின்பக்க பாக்கெட்டிலிருந்து பர்ஸ் எடுத்து நிதானமாய்ப் பிரித்தான். ஐம்பது ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்தான்

காசு பார்த்ததும் அவர்களின் தயார் நிலை தளர் வடைந்தது.

"யாருக்கு உன் துட்டு வேணும். நம்மாளை ஒருத்தன் கைநீட்டி அடிச்சு..." —பேயிலவன் பார்வை காரிலேயே இருந்தது

ஸ்டீபன் இன்னொரு ஐம்பது உருவினான்.

"ஏதோ லயத்துப் பொழப்பு—பிக்பாக்கெட் அடிக்க நேரம் பேர்பாதி போலீஸுக்குப் போயிடுது. இதுல பப்ளிக் வேற அடிச்சா என்ன செய்யறது."

ஸ்டீபன் இன்னொரு ஐம்பது எடுத்தான்

"கம்மா இருடா. நான் பேசறேன்"—வெள்ளைச் சட்டை அருகே வர சகலரும் தளர்வாய் இருக்க, ஸ்டீபன் கண்ணிமைக்கும் நேரத்தில் பணத்தை பர்ஸில் செருகி வெள்ளைச் சட்டை முகத்தில் எட்டி உதைத்தான். இடது கையால் ஒரு ஆளையும், வலது கையால் ஒரு ஆளையும் தாக்கினான். எழுந்த வெள்ளைச் சட்டையைப் பலங் கொண்ட மட்டும் அடித்தான். கலைந்து ஓட முயன்ற பையனைத் தாவி பின்கை முறுக்கி ஆள்காட்டி விரலை எதிர்ப்பக்கம் மடக்கினான். பையன் அலற, பின்பக்கம் உதைத்தான். 'உன்னை வுட்டது தப்பு' என்று முணு முணுத்து, கணுக்காலை தரையோடு வைத்துத் தன் காலால் நசுக்கினான். இரண்டு அழுக்கு ஆட்கள் எழுந்திருக்க...லேசாகப் பிடித்துத் தள்ளினான். ஒருவன் லேலிக்காந்தானில் மோதி முட்டி முதுகு வளைக்க, மற்றவன் தரையோடு தேய்ந்து விழுந்தான்.

"சத்தி, வண்டி கிளப்பு!" ஒரே உதையில் வண்டி னம்பிற்று ஸ்டீபன் தொற்றிக்கொள்ள, நாலு பேரை ம் பின்னே விட்டுப் பறந்தது.

"என்ன ஸ்டீபன் இது?"

"ஸ்டேஷன்ல நமக்குத் தெரிஞ்ச லேடி கிட்டேருந்து ன்பிடுங்கிட்டாங்க. துரத்தி மடக்கினேன். 'பர்ஸ்கிடைச் க்கே, வுட்டுரு'ன்னாங்க. வுட்டுட்டேன். எனக்கு

அப்பவே சந்தேகம். இவன் கும்மா போகமாட்டான்னு. போனா போவுதுன்னு விட்டுட்டேன். இரண்டாவது நிமிஷம் கல்லு அடிச்சான். இப்போ ஆஸ் இட்டாரான். சத்தி, என்னை ஓல்ட் ஏர்போர்ட்டல விட்டுட முடியுமா ப்ளீஸ்..."

"எதுக்கு ஸ்டீபன்?"

"குணசேகரன்கிட்ட கம்ப்ளெயிண்ட் பண்ணலாம்னு."

"குணசேகரன், ஏர்போர்ட் செக்யூரிடி. இங்க ஸ்டேஷன்ல..."

"அவருக்குத் தெரிஞ்ச ரயில்வே போலீஸுக்குச் சொல்லலாம். இந்த ஸ்டேஷன் குண்டாஸ் இடமா போயிடுச்சு. தினம் பிராப்ளம்...நம்ம ஸ்டாஃப் பாதிப் பேர் இப்படித்தான் எல்லா நேரமும் வராங்க, போறாங்க. நம்ம மேல இருக்கற கோவத்துல யாரையாவது மடக்கித் தொந்தரவு பண்ணா..."

"அந்த லேடியை ஏதாவது பண்ணிடுவாங்கன்னு பயப்படறீங்களா?"

"யாரையும் தொந்தரவு செய்யலாம். அந்த லேடியையும் கலாட்டா பண்ணலாம். பாவம், சாஃப்ட் லேடி. தனியா மாட்டினா கஷ்டமில்லையா..."

சத்தி பதில் சொல்லவில்லை.

பழைய ஏர்போர்ட்டுக்குள் வண்டி நுழைந்தது. சிறிய மாடிப்படி அருகே நின்றது.

"நான் போய்க்கிறேன். தாங்க்யூ சத்தி."—ஸ்டீபன் துள்ளி இறங்கி மாடிப்படிகளை நாலாய்க் கடந்து ஓடினான்.

'இந்த இளைஞன் துடிப்பான இளைஞன். அடிதடி தெரிந்த இளைஞன். நிறமையான டவர் ஆள் என்று நாலைந்து பேர் சொல்லியிருக்கிறார்கள். இவன் மாட்டிக் கொண்டானா? பெண்ணுக்காக அடிதடியில் இறங்கியிருக்கிறான். சாஃப்ட் லேடியா? ஷோபனாவா? ஸ்டீபன்,

உனக்கு நேரம் சரியில்லை. சரி, யார் எப்படிப் போனால் எனக்கு என்ன..."

புது ஏர்போர்ட் உள்ளே நுழைந்து பார்க்கிங்ஸ்டான்டில் வண்டி நிறுத்திப் பூட்டி உள்ளே சத்தி நுழைய... ஏர்போர்ட் ஸ்டா.ப் மட்டுமில்லாமல் போலீஸ் ஆட்களும் நின்றிருந்தார்கள். மணி ஒன்பது பத்தாகிவிட்டது.

"சார்...ஐடென்டிடி கார்டு?"

"நான் இந்தியன் ஏர்லைன்ஸ்."

"சரி சார், கார்டு காட்டுங்க."

"எடுத்துட்டு வரலை. இவங்களுக்கும் தெரியும் நான் ஸ்டா.ப்புன்னு."

"எனக்கும் தெரியும் சார்."

"அப்புறம் என்ன?"

"கார்டு இல்லாம உள்ளே விடக் கூடாதுன்னு உத்தரவு."

"நிஜார்னு மடக்கினா எப்படி?"

"தெரியாது சார் எங்களுக்கு ஆர்டர் கார்டு இல்லாம யாரையும் உள்ளே விடமாட்டோம்."

"என்னங்க... சொல்லுங்களேன்"— ஏர்போர்ட்ஸ் ஸ்டா.ப்பிடம் சொன்னான்

"இல்லைசார். செக்யூரிடி ஸ்டிரிக்டாஆயிடுச்சு. ஸோ, கார்டு எடுத்தாங்க."

"இன்னிக்கு மட்டும் வுட்டுருங்கப்பா. நாளைக்குத் தேடி சட்டைல மாட்டிக்கறேன்."—உள்ளே நுழைய யத்தனிக்க... தோளில் கை வைத்தார் போலீஸ்காரர்.

"நீங்க யாருன்னு தெரியும். பல தடவை பார்த்திருக்கேன். கார்டு இல்லேன்னா வுடக்கூடாதுன்னு கட்டளை. என்னை ஏன் தொந்தரவு பண்றீங்க..."

"யார் கட்டளை?"

"ஏ. ஸி, குணசேகரன். லம்பு பண்றாரு."

"இப்போ அவரைத்தான் பார்த்துட்டு வரேன்."

"எங்கே?"

"பழைய ஏர்போர்ட்ல"

"ஏன் சார் பொய் சொல்றீங்க? அவர் அதோ நிக்கறாரு"

குணசேகரன் மஃப்டியில் சில அதிகாரிகளோடு பேசிக் கொண்டிருப்பது கண்ணாடி வழியே தெரிந்தது. சத்தி முகம் துடைத்துக் கொண்டான்.

"சத்தியநாராயணன்"—ஜார்ஜினா ஓடி வந்தாள்.

"என்ன லேட்டு? டிரிம் ஷீட் போட ணும் கல்கத்தா ஃப்ளைட்டுக்கு."

"கணபதி இருப்பாரே..."

"நிஜார்னு வயித்து வலி வந்து துடிச்சாரு. 'சரி, போங்க... சத்தி வந்துடுவாருன்னு அனுப்பினேன். இன்னிக்குனு லேட்டா வரீங்க."

"உள்ளே வரமுடியாது."

"ஏன்?"

"ஐடென்டிடி கார்டு எடுத்துட்டு வரலை."

"ஏன்"?

"ஏன்னா...காணோம். தொலைச்சுட்டேன்"

"கடவுளே... மிஸ்டர் குணசேகரன்..." உள்ளே ஓடினாள். கெஞ்சினாள், குணசேகரன் மறுப்பது தெரிந்தது. இருவரும் பேசிக்கொண்டு வாசலுக்கு வருவது தெரிந்தது.

"நான்டிரிம்ஷீட் தயார் பண்ணிடுவேன். கையெழுத்து போடமுடியாது சார். டிராஃபிக் சூபரின்டெண்டெண்ட் வேணும்."

"அது உங்க பிராப்ளம்."

''உங்களுக்கு அவரை நல்லாத் தெரியுமே...''

''யெஸ் அவரை நாள்லவே தெரியும்... ஆனா, ஐடென்டிடி கார்டு இல்லாம உள்ளே விடமாட்டேன்.''

''திரும்பி கழுத்தை அறுக்கறீங்களே...''

''நான் அறுக்கலை. நீங்க அறுக்கறீங்க. என் கழுத்தை அறுக்கறீங்க. புல்லு வெட்றவனை உள்ளே விட்டேன்'னு சத்தம் போடறீங்க...''

''பழிக்குப் பழியா?''

''இல்லை. இப்படித் திரும் திரும்'னு செக் பண்ணாத் தான் உங்களுக்குப் பொறுப்பு வரும்''

''இவரை மட்டும் விட்டுருங்க, ப்ளீஸ்.''

''ஸாரி மேடம்.''

''ப்ளேன் டிலே ஆகும்.''

''அது உங்க தலைவலி...முன் ட்யூட்டி ஆள்,ரிஸீவர் வராத எப்படிப் போறாரு?''

''நான் அனுப்பிட்டேன் பர்ஸனல் ரிஸ்க் எடுத்து.''

''அனுபவிங்க.''

''சத்தி, நான் டிரிம் ஷீட் போட்டு இங்கே வந்து கையெழுத்து வாங்கிக்கவா?''

''அது தப்புங்க. ட்யூட்டில ஜாயின் பண்ணாம டிரிம் ஷீட் கையெழுத்து போடமாட்டேன். டிரிம் ஷீட் நீங்க தயார் பண்ணக்கூடாது.''

''போங்க எப்படியாவது... குணசேகரன், நான் பர்ஸனலா சம்பந்தப்பட்டுட்டேன்...ப்ளீஸ்.''

''ஸாரி.''

''வேற வழியே இல்லையா?''

''உங்க செக்யூரிடி ஆபீஸர் ராமசுவாமிக்கு போன் பண்ணுங்க. அவர் லெட்டர் தரட்டும், இவரை விடச் சொல்லி. எதுவுமே எழுத்து மூலமா இருக்கட்டும்...''

''ராமசுவாமி ஆபீஸ் பழைய ஏர்போர்ட்ல இருக்கு சார்.''

''அதுக்கு நான் என்ன செய்ய முடியும்...?''

''தலைக்கனம் புடிச்சு ஆ–நீங்க எல்லாரும்...''

''நான் இல்லை மேடம். கண்டும் காணாததுமாக இருந்தேன். நேத்து மீட்டிங் பார்த்தீங்க இல்லை... ஆள் ஆளுக்கு எகிறினதை''

''சே...! ஏண்டா இந்தஉத்தியோகத்துக்குவந்தோம்னு இருக்கு.''

''எனக்கும்''—குணா தலை குனிந்து சொன்னார்.

''வேற வழியே இல்லையா?''

''இப்போ இவரை உள்ளே விடறேன். பதினஞ்சு நிமிஷத்துல எனக்கு ராமசுவாமி லெட்டர் வேணும். 'சத்தியநாராயணன் கார்டு எடுத்துக்கிட்டு வரலை. தயவு செய்து அவரை உள்ளே விடுங்க'ன்னு லெட்டர் வேணும். பதினஞ்சாலது நிமிஷம் வரலை, இவரை வெளியே கொண்டாந்துடுவேன்.''

''ஈகோ...பூதாகாரமாகிவிட்ட ஈகோ.''

''யெஸ்! அதிகார மமதை, கொழுப்பு எது வேணா சொல்லுங்க. போலீஸ்காரனுக்குக் கொழுப்பு வந்தது... தாங்க மாட்டீங்க.''

''சத்தி நீங்க உள்ளே போங்க. டிரிம் ஷீட் விவரம் உங்க டேபிள்ல இருக்கு.''

சத்தி டேபிளுக்கு விரைந்தான் டிரிம் ஷீட் என்பது விமானத்தின் தாங்கு எடை, பெட்ரோல் எடை, ஆட்கள் எடை, பயணிகள் உடைமை எடை, ஏர்பார்சல்கள் எடை என்று பல விஷயங்கள் கொண்டது

பருவ நிலைக்கேற்ப பெட்ரோல் அளவு மாறும். எடை கூடும். அந்த எடையை மையமாக வைத்துக் கொண்டு

பயணிகளை, பயணிகளின் சாமான்களை, தபால் பை களை முக்கியமாகக் கொண்டு ஏர்போர்சல் ஸை ஸ்கூட்டுவதோ, கழிப்பதோ நடக்கும்.

கார்கோ என்றழைக்கப்படும் ஏர்போர்சல் தயாராய் இருக்கும் எல்லா கணக்கும் போட்டு இத்தனை டன் ஏற்று என்றதும் அத்தனை டன் ஏற்ற வேண்டும். முன் பக்கம் பின்பக்கம் என்றும் பிரிக்க வேண்டும்.

ரெமலின்றி விமானம் இறங்க, ஏற இது உதவும்.

நாலைந்து இடங்களுக்கு போன் செய்து எல்லாளை களையும் சந்திக்க்.ப்ர்ம் செய்துகொண்டான்.

ஏர் கார்கோலுக்கு எடை சொன்னான். இரண்டரை டன் ஏற்றச் சொன்னான். ''நாலு டன் ஏத்திட்டோமே... அந்த அம்மா சொல்லிச்சே...''

''கல்கத்தால மழை...இறங்க முடியலேன்னா வேற இடம் தேடுவான். பெட்ரோல் வேணாமா. அது அதிகமா யிட்டது. இறக்கிடு.''

''ஏத்திட்டமே சார்...''

''இறக்குய்யா,''

''லேட்டாவும்.''

''இறக்கினாத்தான் போகலாம்.''

''பேஜாராயிடுச்சுய்யா உங்களோட. ஏய்... இறக் குப்பா ஒண்ணரை டன்லை.''

பதினைந்து நிமிடங்கள் தாமதமாயிற்று. ஏர்க்ரா.ப்ட் கமாண்டர் அனுமதி கொண்டான். உள்ளே உட்கார்ந் திருந்த மந்திய மந்திரி காரணம் கேட்டார். ஒண்ணரை டன் இறங்கியது. சகல மூடிகளையும் மூடி ஸ்குரூக்களை இழுத்துக் கதவுகளை லாக் செய்து விமானம் ரன்வே நோக்கி நகர்ந்தது.

ஜார்ஜினா ஜீப் விட்டு இறங்கிக் குணசேகரனிடம் கடிதம் கொடுத்தாள்.

''அரை மணி ஆயிடுச்சு மேடம்.''

''ஸாரி சார் சத்தி உள்ளே போயிட்டாரா?''

''நானும் ஸாரி பர்ஸனலா இது செய்ய இஷ்ட மில்லை.''

''தெரியும் நீங்க மடக்கினீங்க நானும் மடக்குறேன்... பிரெஸ்டிஜ் இஷ்யூ... இந்த ஏர்போர்ட்டுக்கு என்னிக்கு விடியப்போறதோ?''

''விடியாது. நீங்க ஏன் மாட்டினீங்க? வேற யாராவது கேட்டிருந்தா விட்டிருக்கலே மாட்டேன்.''

''சத்தி கரெக்ட் டயத்துக்கு வந்துடுவார் சார் அந்த நம்பிக்கையில போனை ட்யூட்டி ஆளை போங்கன்னுட் டேன். இந்த விமானம் ஷெட்யூல் டைம் மிஸ்ஸாகி இறங்கிடுச்சு...போறதுக்கும் லேட்டாயிடுச்சு...''

''வேற ஆளே கிடையாதா?''

''இன்னிக்குன்னு பார்த்து இல்லை. விட்டா, போன ட்யூட்டி ஆள் மாட்டிக்குவார் பாவம், அவர் வயித்து வலி கஷ்டம் சார்.''

''கஷ்டம்தான்.''

''மிஸ்டர் குணசேகரன்''—பின்னால் குரல் கேட்டது.

''ஹலோ ஸுபன்... என்ன இங்கே?''

''சத்தி வந்துட்டாரா?''

''என்ன, நீங்களும் சத்தியைத் தேடறீங்க...''

''வழில ஒரு பிராப்ளம் சார். பொறுக்கிப் பசங்க ளோட சண்டை. அடிச்சுப் போட்டுட்டேன். உங்களுக்குச் சொல்லி உதவி கேட்கலாம்னு அங்கே போனேன். இல்லை. சத்தி வந்துட்டாரா?''

''வந்துட்டாரு ஐடென்டிடி கார்டு இல்லை. மடக்கி நிக்க வெச்சு அனுப்பினேன். என்ன பிராப்ளம்?''

''இப்பகூட வழில மடக்கினாங்க சார். நல்லவேளை, உங்க டிபார்ட்மெண்ட் ரங்கராஜு வந்தாரு கார்ல ஏறி வந்துட்டேன்.''

''என்ன பிராப்ளம்?''

''ஸ்டேஷன்ல சார்...பசுபதிநாதனின் பொண்ணுகிட்டே பர்ஸைப் புடுங்கிட்டான் ஒருத்தன். துரத்திப் புடிச்சு பர்ஸ் வாங்கி அடிச்சு அனுப்பினேன். கல்லு எறிஞ்சான் அவங்களை வண்டி ஏத்தி அனுப்பிட்டு திரும்பறப்போ சத்தி வந்தாரு. அவரோட வண்டில வந்தேன். வழில மடக்கினாங்க. மறுபடி சண்டை. என்னைப் பழைய ஏர்போர்ட்ல ட்ராப் பண்ணிட்டு இங்கேவந்தாரு. சரியா வந்தாரா இல்லை இங்கே வழில மடக்கிட்டாங்களான்னு ஒரு வேதனை...''

''லேட்டா வந்தாரு...பத்து நிமிஷம். அதுக்குள்ளே இங்கே ஒரே கலாட்டா''—ஜார்ஜினா பேசினாள்.

''வந்துட்டாரில்ல, அது போதும். குணா, ரயில்வே ஸ்டேஷன்ல நம்ம ஆளுங்க புழங்கற இடம். ஆனா பொறுக்கி கூட்டம் அதிகம். லேடீஸ் தனியா போகமுடியாது. பாதுகாப்பு வேணும்'' என்றான் ஸ்டீபன்.

''முன்னே கூட கம்ப்ளெய்ண்ட் வந்தது. சரி, நான் லோக்கல் போலீஸ் இன்ஸ்பெக்டர்கிட்ட பேசறேன். ஸ்டீபன், கொஞ்சம் இருங்க. நான் ஒரு ரவுண்ட் போயிட்டு வரேன். அப்புறம் ஸ்டேஷனுக்குப் போகலாம். இன்னிக்கு லீவு தானே...?''

''ஆமா சார்.''

''மேடம், சத்தியநாராயணன்கிட்ட நாளைக்கு கார்டு எடுத்துட்டு வரணும்னு சொல்லுங்க. இது... இந்த லெட்டர் இன்னிக்குத்தான் செல்லுபடியாகும்...''

''வந்து நீங்களே சொல்லுங்க.''

''சரி, வாங்க.''

''பசுபதிநாதன் டாட்டரா...?''

''என்ன...?''

''பசுபதிநாதன் மக...ஏன் மறுபடி போறாரு...''

குணா தன்னையே சத்தமாகக் கேட்டுக் கொண்டார்.

''யாரு?''

''ஒண்ணுமில்லை''

''ஏன் பாதில நிறுத்திட்டீங்க?''

ஜார்ஜினா முகம் திருப்பிக் கேட்டாள்.

''சத்தி லவ் பண்ணாரு.''

''யாரை?''

''சரி, விடுங்க...அது பழைய கதை.''

''தற்கொலை விஷயமா...''

''உங்களுக்கும் தெரியுமா?''

''யாரோ சொன்னாங்க.''

''விடுங்க, நமக்கு எதுக்கு...சத்தி.''

''யெஸ் சார்.''

''கார்டு தொலைஞ்சு போச்சுன்னா ஒரு டெம்பரரி கார்டுக்கு எழுதிக் கொடுத்துவிட்டு வாங்கிக்குங்க. ப்ளீஸ், கார்டு இல்லாம வராதீங்க.''

''யெஸ் சார்.''

''இன்னிக்கு ஜார்ஜினாவால உள்ளே அனுமதிச்சேன்.''

''தாங்க்யூ சார்.''

''தாங்க்ஸ் அவங்களுக்குச் சொல்லணும். பதறிட்டாங்க''—குணா அவளை ஆதூரத்துடன் பார்த்தார்.

''அவங்க தப்பு பண்ணாங்க. பதறினாங்க. தாங்க்யூ சார். தாங்க்யூ வெரி மச்'' என்றான் சத்தி.

ஜார்ஜினா கோபமாய் சத்தியைத் திரும்பிப் பார்த்தான்.

"லாட்டு யூ மீன்"—குரலில் கூர்மை சேர்த்து வினவினான்.

"ஒண்ணுமில்லே..."

"உங்க பொறுப்பற்ற நடவடிக்கையால..."

"வார்த்தைகளை அளந்து பேசுங்க...என் பொறுப்பு பத்தி எனக்குத் தெரியும். ப்ளீஸ் போயிடுங்க..."

"நான் இல்லேன்னா..."

"ப்ளீஸ் வெளியே போறீங்களா? ஹலோ, ஏர்கார்கோ?"

—தொலைபேசியில் யாரையோ அழைத்தான்.

ஜார்ஜினா முகம் கறுத்துக் கண்கள் தாழ வெளியே நடப்பதைக் குணசேகரன் பார்த்தார். "லஞ்ச் டைம்லே ஆபீஸ் லாங்க சத்தி."

"வரேன் சார்"

"வழில யாரோ மடக்கினாங்களாமே. ஸ்டேபன் சொன்னாரு போலீஸ் கம்ப்ளெயிண்ட் கொடுக்கப் போறேன். நீங்க ஸ்டேட்மெண்ட் ஒண்ணு..."

"நான் எதுக்கு சார்... எனக்கும் அதுக்கும் சம்பந்தமில்லை. அவரு லி..ப்ட் கேட்டாரு. சண்டை போட்டாரு கொண்டு வந்து இறக்கிவுட்டேன்."

"பசுபதிநாதன் பொண்ணு பர்ஸ் புடுங்கினதா?"

"எனக்குத் தெரியாது சார். நான் பார்க்கலை"

"அப்போ நீங்க..."

"என்னை இழுக்காதீங்க. ஹலோ, ஏர்கார்கோ..."

குணா மெல்ல வெளியேறினார். 'ஒரு வேளை இவன் தற்கொலைக்கு அந்தப் பெண்தான் காரணமோ'—தோள் குலுக்கிக் கொண்டார். காதலில் ஜெயித்தாலும்சரி, தோற்றாலும்சரி; மனிதர்கள் விசித்திரமாய் மாறி விடுகிறார்கள்.

14

பிற்பகலில் ஜார்ஜினா வீட்டுக்கு வந்தபோது குழந்தை வாசலில் விளையாடிக் கொண்டிருந்தான். அவன் ஓடுகிற இடமெல்லாம் ஜார்ஜினாவின் அம்மா ஓடிக் கொண்டிருந்தாள். குவார்ட்டர்ஸுக்கு ஜார்ஜினா வருவதைப் பார்த்துவிட்டு அம்மா குழந்தையை வாரிக் கொண்டு அவளைச் சுட்டிக்காட்டினாள். பிள்ளை எகிறிக் குதித்தது, மழலையுடன் கூவிற்று. தாய் அருகில் வரத் தாவிற்று.

ஜார்ஜினா குழந்தையை அள்ளி இறுக்கிக் கொண்டாள். முகம் முழுவதும் முத்தம் கொடுத்தாள். வேலையில் சுமந்த அத்தனை கனமும் குழந்தையை தழுவிக்கொண்டபோது குறைந்து போயிற்று. குழந்தை பதிலுக்கு அவள் முகத்தில் முத்தமிட...உலகமே சந்தோஷமாய் இருந்தது. 'யேசுவே, இந்தக் கொடுப்பினையாவது எனக்குக்கொடுத்திருக்கிறாயே...உமக்கு ஸ்தோத்ரம்'—மனசு உரக்கக் கடவுளுக்கு நன்றி சொன்னது.

அவனைத் தூக்கிக் கொண்டு உள்ளே போனபோது அப்பா கூடத்தில் பேப்பர் போட்டு அதன்மீது பெரிய அலுமினியப் பாத்திரம் வைத்து ரொட்டி மாவு பிசைந்து கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

"எதுக்குப்பா நீங்க உட்கார்ந்துட்டீங்க இதோட? நான்தான் மத்தியானம் வந்துருவேனில்லே...என்னம்மா இது...அப்பாவை ரொட்டி மாவு பிசைய வுட்டுட்டு..."

"ஒரு மணி நேரமா நான் உருட்டட்டுமா, உருட்டட்டுமா?'னு தொணதொணத்தாரு 'சரி, உருட்டுங்களேன்'னேன். இவனை வுட்டுட்டு இந்தண்டை அந்தண்டை போகமுடியுதா...கால் முளைச்சுப் போச்சு

பையனுக்கு ஒரு இடம் நிக்கமாட்டான்'' என்றாள் அம்மா.

''சாராளுக்குப் பையனைப் பார்க்கவே சரியாயிருக்கும்மா. நீ பசியோட வருவே அதுக்குள்ளயும் ஒரு நாலஞ்சு உருட்டிப்போட்டுடலாம்னு உக்காந்தேன். மாவு பிசைஞ்சு உருட்டிப் போட்டுட்டா மிச்சத்தை அவ பாத்துப்பா.''

''ஒரு நிமிஷம் புள்ளையை வெச்சுக்கம்மா. டிரஸ் மாத்திக்கறேன்'' பிள்ளை இறங்க மறுத்தது. கட்டிலில் அவனை அழுத்தி உட்கார வைத்துக் கைப்பையை விளையாடக் கொடுத்தாள். புடவை அவிழ்த்து ஜாக்கெட் களைந்து நைட்டி உடுத்திக் கொண்டாள். பாத்ரூம்போய் முகம் கழுவிக் கொண்டாள். முகம் துடைத்து அறைக்குத் திரும்பியபோது பிள்ளை பையைக் கவிழ்த்துச் சகலமும் கலைத்துப் போட்டிருந்தான்.

''செல்வா, என்ன இது?''

பிள்ளை அவள் ஐடென்டிடி கார்டை உயர்த்திக் காட்டிற்று. ''ஜார்ஜி...ஜார்ஜி'' என்று கூவிற்று.

''ஆமாம். அது நான்தான். செல்வாவோட அம்மா. செல்வாவோட அம்மாவுக்குஒரு முத்தம் கொடு.' பிள்ளை போட்டோவை முத்திற்று. மெள்ள அதைப் பிடுங்க, பின் பக்கம் மறைத்துக் கொண்டது. கட்டில்விட்டு இறங்க முயற்சித்தது.

''கொடுடீ குட்டி... அம்மாவுக்கு வேணுமில்லே...'' அது மறுத்து, மூடின கதவுக்கு அருகே ஓடிற்று. 'கிராணி கிராணி' என்று கத்திற்று. கட்டிலில் சிதறியதை எடுத்துப் பைக்குள் போட்டாள்.

''கத்தாத செல்வா அம்மா லந்து கதவு திறக்கறேன்.'' பவுடர் பூசிக்கொண்டு பிள்ளையை வாரிக் கொண்டாள். கதவு திறந்து ஹாலுக்கு வந்தாள்.

''கார்டு கொடுத்துருடா...ப்ளீஸ்...''

'மாட்டேன்' என்று பிள்ளை தலையசைத்தது. வலுக்கட்டாயமாகப்பிடுங்கினால் முகம் கோணி அழும். வீடும் அவன் போக்கிலேயே விட்டுத்தான் வாங்கவேண்டும்.

பிள்ளையை அப்பாவிடம் கொடுத்து விட்டுப் பரபரவென்று பூரி இட்டாள். தாத்தாவும் பேரனும் லாசலுக்குப் போக, அம்மா, பூரியை எண்ணெயிலிட்டுப் பொரிக்க, வீட்டில் லேசாய்ப் புகை சூழ்ந்தது இருமல் வந்தது.

அழுத்தி அழுத்திப் பூரி இட்டதில் ஜார்ஜினாவுக்குத் தோளும்முதுகும் வலித்தன. இடுப்பு நெகிழ்ந்துகொண்டது போல் பலவீனமாய் இருந்தது. நல்லவேளை... அம்மாவும் அப்பாவும் கூட இருப்பதால் ஒரு சிறு குழந்தையோடு காலம் தள்ள முடிகிறது. இல்லையெனில், இந்த கிரதில் அநாதையாய் விட்டு, வேலை முடிந்ததும் ஓடி வந்து வாங்கி, வீடு திறந்து பெருக்கி, துணி மடித்து, சமையல் செய்து ஐயோ என்று போய்விடும்.

அதிலும் அப்பா மாதிரி ஓர் இனிமையான ஆள் கிடைப்பது மிகக் கடினம். தான் வந்து வேலை செய்யக் கூடாது என்பதால், சம்மணமிட்டு ஹாலில் உட்கார்ந்து ரொட்டி மாவு பிசைந்திருக்கிறார் பூரி இடத் தெரியாது. தெரிந்திருந்தால் அதுவும் செய்து முடித்திருப்பார் அம்மா அப்பாவின் இனிமையை—இதத்தை உபயோகப் படுத்திக்கொண்டாள்.

'காய் நறுக்கட்டுமா?' என்று கேட்டால், 'நறுக்குங்களேன்' என்று கூடையைக் கவிழ்த்து விட்டு 'நறுக்கினா போறுமா...தோல் அள்ளிப் போட வேணாமா?' என்று அதட்டுவாள் 'எதை எடு...ஒரு அரை குறை வேலை' என்றுஅலுத்தபடி பெருக்குவாள். அப்பா அதைப் பொருட் படுத்துவதில்லை.

இப்படி ஓர் ஆண்பிள்ளை அமைவது சிரமம். காசு காசு என்று நாலு திக்கும் அரித்துக் கொண்டு வந்து கொட்டும்

ஆண்களிடையே அப்பா அதிகம் சம்பாதிக்காமல் இருந்தது. அவர் அடக்கத்துக்குக் காரணமோ என்று தோன்றும். இல்லை...பைபிளை மனனம் பண்ணிப் பண்ணி இந்த இனிய தன்மை படிந்துவிட்டதோ என்றும் எண்ணம் வரும்

நின்று கொண்டோ, நாற்காலியில் உட்கார்ந்தோ ஜெபம் செய்கிறவரில்லை தண்டு விரித்து முழங்காலிட்டு. கைகள் கூப்பி, கண்கள் மூடி, மெல்லிய குரலில் நிதானமாய் மனசு உருக ஜெபம் செய்கிற கிறிஸ்தவர்.

கோயில் கோயில் என்று கோட் அணிந்து போகிற வரும் இல்லை. 'உலகமே இதுல அடக்கம் மனுஷ ஜீவிதமே இதுல அடக்கம். இது எங்கிட்டு இருக்கோ அது கோயில் எனக்கு...'— பைபிளை நெஞ்சில் வைத்துக்கொண்டு பெருமிதப்படுகிறவர்.

"ஒண்ணு தோணுது ஜார்ஜினா. மனிதர்களிடம் மனிதனாக இரு கடவுளிடம் குழந்தையாக இரு நான் சொல்றது சரியா?"

"சரிப்பா."

"குழந்தையா இருன்னா எப்படீம்மா? புரியுதா?"

"சொல்லுங்களேன்."

"உம் புள்ளை ஒடி வந்து, இவனைக் கொல்லு, அவனை அழி, இவனைத் துக்கப்படுத்துன்னு கேட்குமா? கேட்கத் தெரியுமா? என்னா கேட்கும்...பலப்பம், கிலுகிலுப்பை, நின்ற பண்டம். நாமளும் அதான் கேட்கணும். அல்வளவு தான் கேட்கணும்.

'பலூன்தானே...வாங்கித் தரேம்பா. தூங்கு...' அப்பா ஒன்னு உம் புள்ளையைத் தூங்கப் பண்ணிடலாம். தாத்தா தருவாருன்னு தூங்கிடுவான். அப்படித்தான் கேட்டுட்டுத் தூங்கிறணும்."

"புரியலேப்பா"

"அவருக்கும் தெரியும். உனக்கு எது, எப்போ, எவ்வளவு தரணும்னு. தருவார், தூங்கிடு."

"அதாவது..."

"கேட்டுட்டு மறந்துடு. அவருக்குத் தெரியும்."

"அடடா... அப்போ பிரேயர்னு நச்சரிப்புக் கூடாதுங்கறீங்களா?"

"ஆமா, நம்பிக்கை வேணும், அவரிடம் தன்னை ஒப்படைத்தல். அவர் இருக்கிறார் என்கிற உணர்வோடு வாழ்தல்."

குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள். தடுக்கவேண்டாம். ஏனெனில், கடவுள் இத்தகையோருடையதே."

"நீங்க ஏம்ப்பா பிரசங்கம் பண்ணக்கூடாது?"

"கூடாதும்மா. பிரசங்கத்துல கர்வம் வந்துரும். அடிச்சுப் பேச. நானும் ஒரு மெஸய்யான்னு தோணும். எல்லாம் தெரியும்னு மேதாவித்தனம் வரும். மேதாவி, குழந்தையா இருக்க முடியாதும்மா. அப்புறம் கடவுளுடைய அரசுக்கு ரொம்ப தொலைவா போயிடுவோம். சத்தம்தான் மிஞ்சும்."

"இல்லப்பா. எனக்குச் சொன்னதை ஊருக்குச் சொல்லலாமில்லையா...?"

"நான் உனக்குச் சொன்னேனா, இல்லையே...இதை நான் உனக்குச் சொல்லிக்கிட்டேன். நீ பக்கத்துல இருந்தே...அவ்வளவுதான்."

உயிர் நரம்பை இழுத்துச் சுண்டியதுபோல ஜார்ஜினா அதிர்ந்து போனாள். அப்பா உரத்த குரல் கிறிஸ்தவரல்ல. உண்மையான கிறிஸ்தவர்.

"அப்பா, ஜெபம் பண்ணலாமா?" தந்தையும் மகளும் மண்டியிட்டார்கள்.

"என்னப்பா வேண்டினீங்க?"

"காதாசை— திமிங்கலம். காமம்—விஷ ஜந்து. பொச சரிப்பும் பொறாமையும்—உனையிடுகிற நரி."

"எனக்கு இது வரக்கூடாதுன்னு லேண்டினீங்களா?"

"வேலைக்குச் சேர்ந்துட்ட தாயே. நாலு காசு சுயமா சம்பாதிக்க ஆரம்பிச்சுட்ட. பொறுப்பானவேலை இப்படி ஒரு திருட்டுத்தனம் பண்ணா இத்தினி துட்டு வரும்னு நினைப்பு வரக்கூடிய இடம். இத்தினி துட்டு வந்தா இது இதுவாங்கலாம்னு தோணிடலாம். அதுகூடாதில்லையா? காமம் விஷ ஜந்து. லிரல் நீளம்தான் தேனு. கொட்டினா போதும். உச்சி மண்டைக்கு விஷம் ஏறிடும். பின்ன விஷயம்னு படரவிட்டம்னா சரசரன்னு வாழ்க்கையே நாசம் பண்ணிடும். நமக்கு இப்படி ஆயிடுச்சேனு நாலு பேரைப் பார்த்துப் பொரிய ஆரம்பிச்சே... உனக்கும் உனையிடற நரிக்கும் வித்தியாசமே இல்லை. நான் உனக் காகத்தான் பிரார்த்தனை பண்ணினேன் ஜார்ஜினா"

"அப்பா..."

"என்னம்மா?"

"நான் கோயிலுக்குப் போகப் போறதில்லை."

"நான் அதான் சொன்னேன்."

"இல்லப்பா. நீங்க சொன்னது வேற இனிவிடுதான் கோயில்; பைபிள்தான் கடவுள்; நீங்கதான் குரு." வீடே வேதாகமப் பாடசாலையாய்ப் போயிற்று. மனசே கோயிலாய் மாறிற்று.

"தேவ பிதா எந்தன் மேய்ப்பனல்லோ
நிறைவு தாழ்ச்சி அடைகிலனே."

மனசு முழுதும் தெய்வ நம்பிக்கை பெருக எங்கிருந்து நிறைவு வரும்? யாரிடமிருந்து தாழ்ச்சி உண்டாகும்? பூத்தூவலாய், சாரல் மழையாய் வீட்டில் இதம்பரவிற்று. பரவ அப்பா காரணம்.

பூரியும், வெங்காயத் துகையலும் தின்றுவிட்டுப் பிள்ளையைக் கட்டிலில் போட்டுத் தூங்கச் செய்தாள். தானும் அருகில் படுத்துக் கொண்டாள். களைப்புத் தீர அந்திவேளை வரை அசையாது தூங்கினாள்.

விளக்குப்பொருத்தும் நேரத்தில் அம்மா எழுப்பினாள் எழுந்து குளித்துவிட்டு வேறு நைட்டி உடுத்திக் கொண்டாள். குழந்தையை எழுப்பி முகப் துடைத்து பவுடர் போட்டாள். பின்ன தள்ளு வண்டியில் அவளை உட்கார வைத்து மெள்ள குவார்ட்டர்ஸ் சுத்தி வந்தாள். நிறையபேர் வீட்டு வாசலில் சிலப்புத் தண்ணீர் கொட்டி யிருந்தது. என்ன பண்டிகை இன்றைக்கு என்று யோசித் தாள். எதிர் குவார்ட்டர்ஸ் மாமி வாழை இலைப் பையோடு வர, சிரித்தாள்.

"என்ன மாமி...பண்டிகையா எதுனாச்சும்?"

"காரடையான் நோன்புன்னு ஒரு பண்டிகை"

"எதுக்கு?"

மாமி தயங்கினாள்.

"விடு நல்லாயிருக்கணும்னுதான்."

"புதுசு கட்டிக்குவீங்களா?"

"இல்லை. மஞ்சள் கயித்துல தாலி மாதிரி எல்லா பொண்களும் கட்டிண்டு நீர்க்க சுமங்கலியா இருக்க ணும்னு வேண்டிக்கறது.."

"சாயந்தரம்தான் பண்டிகையா?"

"எப்போ மாசம் பொறக்குதோ அப்போ. சில சமயம் காலைல வரும். சில சமயம் சாயந்தரம் பொறக்கும். இன்னிக்கு ஏழு மணிக்குப் பொறக்கறது. நான் வரேன் ஜார்ஜினா. வேலை இருக்கு."

இருட்டத் துவங்கியபோது குவார்ட்டர்ஸ் வாசலில் வண்டியை நிறுத்தினாள் பஸ் பார்க்க செல்வாவுக்கு விருப்பம் அதிகம். தள்ளு வண்டியை பஸ்ஸாக நினைத்து

ஓட்டுலதில் விருப்பம் அதிகம். குழந்தை வாய் பிளந்து தெருவின் ஒட்டத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

வின்செண்ட்டுக்குக்கூட விநோதமான பழக்கங்கள் உண்டு. இந்துக்களை வின்செட்டுக்கு மிகவும் பிடிக்கும். கல்யாணமான புதிதில் ஜிமிக்கித் தந்துவிட்டு லிப்ஸ்டிக் கால் நெற்றியில் பொட்டு வரைந்தான்.

''உங்கப்பா கத்துவாங்க... வேணாம்.''

''அப்புறம் அழிச்சிடு. சும்மா ஒரு அழகுக்குத்தானே'

தலை நிறையப் பூ வைத்து, பொட்டு இட்டு, பட்டுப் புடவை உடுத்தி ஜிமிக்கி அணியச் சொல்லி வேடிக்கைப் பார்த்தான்.

''நல்லா இருக்குல்ல எனக்கு?''

''பொட்டு வெச்சதுமே தூக்கிடுச்சு, பிராமின் லேடி மாதிரி இருக்கே...''

''அவங்க பண்டிகையே விநோதமா இருக்கும். நேத்து எல்லா பிராமின் லேடீஸும் தாலி கட்டிக்கிட்டாங்க.''

''ஆமாமா. மஞ்சள் நூல்ல பூ கோத்து ஏதோ நோன்பாம். என்க்குக்கூடக் கயிறு தாலி ரொம்ப பிடிக்கும் ஜார்ஜினா. சினிமால டொம் டொம்னு மேளம்கொட்டித் தாலி கட்டறப்போ சந்தோஷமா இருக்கும்''

''கரெக்ட் எனக்குகூட குடுமி வெச்சு பட்டை போட்ட ஐயருங்களைப் பார்க்க மரியாதையா இருக்கும்.'

''அப்படிச்சொல்லாதே ஜார்ஜினா, அதுலயும் தப்பான ஆளுங்க உண்டு. ஆனா ஒரு சாமியார் பார்த்தேன் ஜார்ஜினா மவுண்ட்ரோடு ஆபீஸ் போயிட்டு வர்றபோது தேனாம் பேட்டைல ரொம்ப கிட்டத்துல பார்த்தேன். வெள்ளை வெளேர்னு தாடி, காவி டிரஸ், கையில தடி. என்கூட வந்தவரு அப்படியே டைட் பாண்ட்—சட்டை

யோட தரையில விழுந்து கும்பிட்டாரு. யாருன்னு அவரு கேட்டாப்பல. நான் மோட்டார் சைக்கிளை ஸ்டாண்ட் போட்டுக் கைகட்டி நிக்கறேன். அவரு தம்பேரு சொல்லிட்டு, என்னையும் கைகாட்டி ஏதோ சொன்னாராம். ஒரு பார்வை நிமிர்ந்து பார்த்தார் என்னை. உடம்புசில்லுன்னு ஆயிடுச்சு. அவரு கும்பிட்ட மாதிரி கும்பிடப் போறேன். வேணாம்னுட்டாரு. கூட வந்தவங்க எங்க ரெண்டு பேருக்கும் கல்கண்டு, பழம் கொடுத்தாங்க. ரொம்ப சந்தோஷமா வாங்கிட்டேன்''

''ரொம்ப தலைமுறைக்கு முன்னாடி நாம இந்துக்கள் இல்லையா?''

''இருந்திருக்கணும். இப்பவும் வாசல்ல பிள்ளையார் கோயிலுக்குத் துட்டு கேட்பான் கொடுத்துடுவேன். வெள்ளிக்கிழமை பூஜைக்குக் காசு கேட்பான். கொடுத்துடுவேன். மாட்டேன்னு சொல்ல மனசு வராது.''

''உங்களுக்கு ஹிண்டு ஃப்ரெண்ட்ஸ் ஜாஸ்தியா?''

''நான் என்ன சர்ச் நடத்தற ஸ்கூல்லயா வேலை செய்யறேன்? இந்தியன் ஏர்லைன்ஸ்ல...எல்லா ஜாதியும் உண்டு மதமும் உண்டு. எங்க இடத்துல ஐயர் ஆளுங்கதான் ஜாஸ்தி. ஜாலியா பழகுவாளுங்க. விளையாடறத்துக்கு வாங்கடான்னா ஒரு பய லரமாட்டான். ஆபீஸ் வுட்டா நேர வீட்டுக்கு ஓடிடுவான். அடிபடுமோன்னு பயம்.''

''உங்களுக்கு அடிபட்டிருக்கா?''

''இதோ பாரு...மண்டைல ஒரு வடு இருக்கு. கோல் போட்டுட்டு நிக்க முடியாம ஸ்ட்ரெயிட்டா போய் கம்பத்துல முட்டிக்கிட்டேன். கடைசி வரைக்கும் தலைல கர்சீப் கட்டிக்கிட்டு ஆடினேன். அசந்துட்டாங்க பசங்க. நோவலையா... நோவலையான்'னு கேட்கறான். 'நோவும்...தாங்கிட்டேன்'னு சொன்னேன். புரியவே யில்லை. பார்சல் புரட்டறபோது கையில கிழிச்சா போதும்... வலி தாங்கவே மாட்டாங்க.''

''அலங்க சாப்பாடு அப்படி''

''கரெக்ட். கணக்குப் போடறதுக்கும் குமாஸ்தா வேலைக்கும் தான் அந்தச் சாப்பாடு சரியா இருக்கும்''

''அலங்கல்ல பருப்பு உண்டைக் குழம்புன்னு ஒண்ணு செய்வாங்க...''

''ஆமாமா. நம்ம கோலா உருண்டை மாதிரி...''

''நாக்குல ஒட்டும் குழம்பு...''

''உனக்கும் புடிக்குமா அலங்களை?''

''பொண்ணுங்க கொஞ்சம் அலட்டும். அலங்க ஆளுங்க கிட்ட அலங்க பாஷை பேசும். நம்மகிட்ட வேறவிதமா பேசும்.''

''பசங்களும் அப்படித்தான். ஆனா அதிகமா காட்டிக்க மாட்டாங்க. என் சீனியர் ஒருத்தர் இருக்காரு. நீ முழுசா இருக்கேன்னு சொன்னேன். 'ஒரு பதினாரு பூரா கொடுடா. திருச்சில தாயுமான ஸ்வாமின்னு இருக்காரு. வேண்டிக்கறேன்'னு கேட்டார். தரேன்னுருக்கேன்.''

''கொடுத்துருங்கனேன்...''

''எனக்கு இங்கதான் டவுட் வருது. ஏன் ஜார்ஜினா, நாம இந்துலா கிறிஸ்தவரா? ஏன் முடியாதுன்னு சொல்ல மனசு வரலை. சொல்லணும்னு தோணுது ஆனா, என்னவோ தயக்கம்...''

''ஆனா, எங்க அப்பா சொல்லிடுவாரு. மாட்டேன்னுடுவாரு. வெள்ளரித் தோட்டத்துக்குக் காவலாக வைக்கப்படும் பொம்மை, எதையும் காவல் காக்காதது போல மரம், பொன் வெள்ளியால் செய்த தெய்வங்களும் இருக்கின்றன. இவற்றை வைத்திராத நீதிமானே மேலான வன். ஏனெனில், அவன் நிந்தைக்கும் அவமானத்துக்கும் ஆளாகமாட்டான் இதைச் சொல்லித் திருப்பி அனுப்பிடு வார்.''

''அது சரி. ஆனா, அதை நம்பறவங்களுக்கு நடுவுல நாம இருக்கமே...வெள்ளிக்கிழமை ஆபீஸ்ல பூஜை பண்ற போது காலை நீட்டி உட்கார முடியுமா?''

''உட்கார வேண்டாம். எழுந்து காணாம போயிடுங்க ஏங்க, பொட்டு அழிச்சுரட்டுமா?''

''உம்ம்...சரி...''

'என்ன இழுத்தாப்ல வருது பதில்...''

''அழிச்சுடு காலைல அப்பா பார்த்தா திட்டுவாரு''

' காலைல அழிச்சுடறேன்...''

''ஏன்...?''

''உங்களுக்குப் பிடிக்குதே நான் பொட்டு வெச்சுக்கறது''-விநோதமான உணர்வுடன் அலனோடு நெருங்கிக் கொண்டு படுத்தாள்.

இப்போதும் விநோதமான உணர்வு வருகிறது இந்த மண்ணிலிருந்து அன்னியமானதுபோலவும். இந்தமண்ணில் இணைந்து கொள்ளவேண்டும் போலவும் உணர்வு வருகிறது ஒருவேளை எல்லா கிறிஸ்தவருக்கும் வருமோ?

மெள்ளத் தள்ளு வண்டியோடு குவார்ட்டர்ஸுக்குத் திரும்பும்போது, ஸ்கூட்டர் கடந்து போய் நின்றது. எதிர் வீட்டு மாமியின் புருஷன் கணபதி சரட்டென்று ப்ரேக் போட்டு நின்றார். கார்கோவில் இருக்கிறார்.

'என்ன சார்?''

''ஜார்ஜினா, டிராஃபிக் சூபரின்டென்டெண்ட் சத்தி உன் டிபார்ட்மெண்ட்தானே?''

'ஆமா...''

''யாரோ அடிச்சுட்டாங்க சத்தியை.''

''ஐயோ...''

''ஏர்போர்ட் வாசல்ல கட்டை உருட்டி வண்டியை விழவுட்டுத் தபதபன்னு அடிச்சுட்டாங்க.''

''ஐயோ... ஏன்...?''

''தெரியலை, மூஞ்சியெல்லாம் காயம். நல்லவேளை நான் பின்னாலேயே வந்தேன். ஓடிட்டாங்க. அப்படியே நம்ம ஃபர்ஸ்ட் எய்டுக்குக் கொண்டு போய் வுட்டுட்டு வரேன்.தையல் போடணுமாம்...ஆம்புலன்ஸ்ல கூட்டிண்டு போனா ஏர்போர்ட் வர லர ரொம்பக் கும்பல் இடமாயிடுத்து.''

'யேசுவே...' மனசுள் கை கூப்பிற்று. முகம் முழுவதும் ரத்தம் வழிய அரற்றும் சத்தியின் முகம் தோன்றியது.

''நீ இங்கெல்லாம் வராதே. உள்ளே போ?'' அதட்டினார் பதட்டப்பட்டார்.

ஜார்ஜினா வீட்டுக்குப் போய் குழந்தையை அம்மாவிடம் விட்டுவிட்டு டெலிபோன் பூத்திலிருந்து ஏர்போர்ட்டுக்கு போன் செய்தாள். சத்தியின் நிலைமை பற்றி விசாரித்தாள்.

சத்திக்கு இடது கண்ணத்துக்குக் கீழே ஆறு தையல் போடப்பட்டதாம் அருகே பிரைவேட் நர்சிங் ஹோமில் சேர்த்திருக்கிறார்கள். யார் அடித்தது என்று தெரியவில்லையாம்.

டெலிபோனில் விவரம் அறிந்ததும், ''போயிடுங்க... போயிடுங்க...'' என்று கடுமையாய்ப் பேசிய சத்தியநாராயணன் குரல் ஜார்ஜினாவுக்கு அன்று இரவெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தது.

15

நேஷனல் ஏர்போர்ட் அத்தாரிடி — அதாவது. விமானம் இறங்குவதும், மேலேறுவதும் கண்ட்ரோல் செய்து விமானங்கள் வந்து போகின்ற தகவல்கள் பரிமாறி அவற்றின் வருகையைச் செம்மைப்படுத்தும் தனி இயக்கத்தின் அசோஸியேஷன் கடிதமொன்று ஏர்போர்ட் செக்யூரிடிக்கு டைப் செய்தது.

இந்தியன் ஏர்லைன்ஸ் ஊழியர்ஒருவர் விமான நிலையவாசலில் தாக்கப்பட்டதும், அதே நாள் காலையில்அருகே இருக்கும் ரயில் லண்டி நிலையத்தில் நேஷனல் ஏர்போர்ட் அத்தாரிடி உத்தியோகத்திலுள்ளவரை ஒரு கும்பல்சூழ்ந்து அடிக்க முயன்றதும் குறிப்பிட்டு, சம்பந்தப்பட்டபோலீஸ் ஸ்டேஷனுக்கு இது தெரிவித்து ஊழியர்களுக்குத் தக்க பாதுகாப்புக் கொடுக்கும்படி வேண்டியது.

நகல்கள் விமான நிலைய போலீஸ் அதிகாரிக்கும், விமான நிலையம் அருகேயுள்ள போலீஸ்ஆய்வாளருக்கும், இந்தியன் ஏர்லைன்ஸ் ஊழியர் சங்கத்துக்கும் அனுப்பப்பட்டன.

இது ஏர்போர்ட் பாதுகாப்பு சம்பந்தப்பட்டது என்று அதில் வலியுறுத்தப்பட்டிருந்தது

''சண்டைக்கு நீங்களா போனீங்களா, இல்லை அவங்களா வந்தாங்களா...?''— மீனம்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர், ஸ்டீபனைக் கேட்டார். அருகே குணசேகரன் நாற்காலியில் சரிந்து உட்கார்ந்திருந்தார்.

''இல்லீங்க சார். ஒரு லேடி பர்ஸை ஒருத்தன் ஸ்டேஷன்ல...''

''எந்த லேடி?''

ஸ்டீபனுக்குத் தயக்கமாய் இருந்தது. 'அவள் யாரென்று சொல்லலாமா? சொன்னால் அவளையும் ஸ்டேஷனுக்குக் கூப்பிடுவார்களோ, விசாரிப்பார்களோ...! எதற்கு அவளை இழுக்க வேண்டும்?'

''எந்த லேடியு தெரியலே சார்! எங்க குவார்ட்டஸ்ல இருக்கறவங்கன்னு நினைக்கிறேன். பேர் தெரியாது. ஐயோ! பர்ஸ்'ஐ கத்தினாங்க, ஒருத்தன் ஓடினான். கையில பர்ஸ் இருந்துச்சு, துரத்திக்கிட்டு ஓடி மடக்கி இழுத்துக்கிட்டு வந்தேன். பப்ளிக் அடிச்சாங்க சார்...நான் அடிக்கலை. அப்புறம் அந்த லேடி 'பர்ஸ் கிடைச்சுடுச்சு, வுட்டுருங்க'ன்னாங்க. வுட்டுட்டோம். தொலைவுலபோய் கல் அடிச்சான்.''

''யார் மேலே...?''

''என் மேலே...அந்த லேடி மேலே...பப்ளிக் மேலே... அப்போ சத்தி காபிசாப்பிடவந்தாரு. என்னைக்கொண்டு போய் பழைய ஏர்போர்ட்டுலவிட்டுருங்க,செக்யூரிடிகிட்ட கம்ப்ளெயிண்ட் பண்ணணும்'ஐ சொன்னேன்.

''ஏங்க போலீஸ் ஸ்டேஷன் ஒரு இடமா தெரியலையா உங்களுக்கு?''

''தெரியுங்க. த்ரூ ப்ராபர் சானல் வந்தா?''

''சரி, லேடி என்ன ஆனாங்க?''

''டிரெயின் ஏறிப் போயிட்டாங்க சார். அவங்களை ஏத்தி வுட்டுட்டு வாசலுக்கு வந்தோம். அப்போ வழியில மடக்கி டபாய்ச்சானுங்க. அடிச்சுத்துரத்திட்டேன். நாலு பேரு உருட்டுக்கட்டை எடுத்து வந்தாங்க சார்.'

''மணி என்ன?''

''எட்டே முக்கால் இருக்கும்.''

''அப்புறம்...?''

''சத்தி பழைய ஏர்போர்ட்ல என்னை வுட்டுட்டு அலுவு ஏர்போர்ட் போயிட்டார். சாயந்திரம்போறப்போ அவரை மடக்கி அடிச்சிருக்காங்க.''

''காலையில அடிச்ச ஆள்தானா சாயந்தரம் அடிச்சது?''

''தெரியலை சார். அவங்களாத்தான் இருக்கணும்.''

''உங்களோடவந்ததுக்கு சத்தியநாராயணனை அடிச்சிருக்காங்கன்றீங்களா?''

''ஆமா சார்.''

''ஆள் பேர் தெரியுமா?''

''தெரியாது சார். ஆனா அடையாளம் தெரியும்.''

''இப்போ சொன்னதை விவரமா எழுதிக் கொடுங்க. நைட்டே ப்ரவுண்ட் அப் பண்ணிடறேன். சத்தியநாராயணன்கிட்ட இதேமாதிரி புகார் ஒண்ணு எழுதி வாங்கித்தாங்க. அடிபட்டவரு கொடுத்தாத்தான் சரியா வரும்.''

''சரி சார்.''

குணா எழுந்து மெள்ள சல்யூட் செய்துவிட்டு ஸ்டீபனுடன் ஆஸ்பத்திரிக்குக் கிளம்பினார். ஜீப்பில் அருகே உட்கார்ந்த ஸ்டீபனை ஊடுருவிப் பார்த்தார்.

'ஏங்க ஸ்டீபன், அந்த லேடி உங்களுக்குத் தெரிஞ்சவங்களா, இல்லை சத்திக்குத் தெரிஞ்சவங்களா?''

''எனக்கு அவங்க யாருன்னு தெரியாது சார். சத்திக்குத் தெரிஞ்சவங்களா இருக்கணும். ஆவா. அவர் பேசலை அவங்கதிட்ட. ஆனா, அந்த லேடிக்கு அவரைப் பார்த்ததும் முகம் ஒரு மாதிரி ஆயிடுச்சு.''

'ஒரு மாதிரின்னா?''

''எனனவோ பிடிக்காத மாதிரி... தெரியலை. நான் தப்பா நினைச்சுட்டிருக்கலாம். ஏன் சார் கேட்கறீங்க?''

''ஒருவேளை அந்த ஆளுங்க மாட்டி, போலீஸ்காரர் அந்த லேடியைக் கொண்டான்னா... அதுக்கு உங்களைக் கேட்கறதா, இல்லை சத்தியைக் கேட்கறதா... தெரியலுமில்லே எனக்கு.''

"லேடி வேணாம் சார். சங்கடப்படுவாங்க."

"எனக்கு வேணாம். போலீஸ்காரர் கேட்பாரே... எழுதிக் கொடுத்திருக்கியே."

"யாரோ தெரியாதுன்னுதானே எழுதிக் கொடுத்திருக்கேன்."

"போலீஸ்காரரைப் பத்தித் தெரியாது உனக்கு. ஃபர்ஸ்ட் விட்னஸ் கண்டுபிடிச்சுக் கூட்டிட்டுவானு சொல்வார். பர்ஸ் அடிச்சவன் கன்னத்துல அறைஞ்சு 'யார் பர்ஸ்? எங்கே பிடுங்கினே...ஆளைக் காட்டு'னு வேரடி மண்ணோட சகலமும் விசாரிப்பார்."

"என்ன செய்யறது சார்?"

"சத்திகிட்டே எப்படி ஸ்டேட்மெண்ட் வாங்கறதுன்னு யோசிக்கறேன். சத்திக்கு அந்த லேடி தெரிஞ்சிருக்குமோ...விசாரியேன்."

"சார். எனக்கு அவ்வளவு பழக்கமில்லை. அங்கே வந்தாரு. லிஃப்ட் கேட்டேன்."

"எனக்கும் பழக்கமில்லை. அது தவிர கேட்ல வேற ஐடெண்டிடி கார்டு இல்லாத நிறுத்திட்டேன். அதுல வேற கோபம் அவருக்கு."

சத்திக்கு அடி பலமாய்ப்பட்டிருந்தது. கையில் அணிந்திருக்கும் இரும்பு வளையம் கழற்றி உள்ளங்கையில் மடக்கி முகத்தில் குத்தியிருக்கிறார்கள். கன்னமேடு, நெற்றி, காது என்று ப்ளாஸ்டர் ஒட்டப்பட்டிருந்தது காலை மிதித்து குப்புறத் தள்ளியிருக்கிறார்கள் கட்டைவிரல் நசுங்கி நகம் பிய்ந்திருக்கிறது. அடிபடுவதைத் தடுக்கும் முயற்சியில் முழங்கையில் அடி விழுந்திருக்கிறது. எதும்பு முறிவு இல்லை. எனினும், உள்ளே தசை நொழிந்திருக்கிறது. அழுத்தி இடக் கையில் கட்டுப் போட்டிருக்கிறார்கள்.

சட்டை பாண்ட்டெல்லாம் உருவி ஜட்டிக்குமேல் வெள்ளைத் துணி போர்த்தி, வலி மறக்க மயக்கம் கொடுத்துத் தூங்க வைத்திருக்கிறார்கள்.

வெள்ளையாய், சிறிய உருவமாய் வழுக்கைத் தலையும் பெரிய மூக்குக் கண்ணாடியுமாய் சத்தியநாராயணன் அப்பா அவனுக்கு அருகே உட்கார்ந்திருந்தார்.

ஸ்டூபனும் குணாவும் அருகே நிற்க, கவலையுடன் ஏறிட்டுப் பார்த்தார். "போலீஸா?" என்று கேட்டார்.

"இல்லே சார் நான் ஏர்போர்ட் செக்யூரிடி ஆபீஸர் போலீஸ்ல ஸ்டேட்மெண்ட் கேட்கறாங்க."

"என்னத்த செக்யூரிடி போங்க. யார் வம்புக்கும் போகமாட்டான். ஆபீஸ் விட்டா வீடு, வீடு விட்டா ஆபீஸ்னு இருப்பான். இவனை இப்படி அடிச்சுத் துவைச்சுப் போட்டிருக்காங்களே... ரொம்ப நல்ல குழந்தை சார் இவன்'.--உணர்ச்சி வசப்பட்டார்.

"தைரியமா இருங்க. ரொம்ப ஸ்பீட் ஆக்ஷன் எடுக்க ஏற்பாடு செய்துட்டோம். அடி பலமில்லை"

"அது சரி. தலைக்கு வந்தது தலைப்பாகையோட போயிடுத்து. ஆனா, எதுக்கு இவனைப் போய் அடிச்சாங்கனு தெரியலை இன்னமும்."

"கண் முழிச்சாரா?"

"முழிச்சான். 'என்னடா இப்படி'னு கேட்டேன். 'போன ஜென்மத்துப் பாபம்'னு சொல்லிமறுபடி தூங்கிட்டான்."

"குடிக்க ஏதாவது கொடுக்கறது தானே!"

"நர்ஸ் 'நானே தரேன், டிஸ்டர்ப் பண்ணாதிங்க அவரை'ன்னுட்டான். ஆஸ்பத்திரி செலவு நாம தரணுமா, இல்லை கவர்ன்மெண்ட்டா?"

..தெரியலை.''

''வழியில் அடிப்பட்டதற்கு, காம்பெளண்ட் லெளியே நடந்த கலவரத்துக்கு அரசாங்கம் காசு தருமா? இப்போதைக்கு நாம கவனிச்சுப்போம். காசு பத்திக் கவலைப் படாதிங்க.''

''கவலை ஒண்ணுமில்லை... நர்ஸ் கேட்டா பணம் கட்டணுமேன்னு கேட்டு ஏற்பாடு பண்றேன்னு சொன்னேன். தையில் காசு இருக்கு. இருந்தாலும்...''

''வேற யாராலது வந்தாங்களா?''

''இந்தியன் ஏர்லைன்ஸ் செக்யூரிடி வந்தார். ராம சுவாமியாமே 'ஐ வாண்ட் த பெஸ்ட் ட்ரீட்மெண்ட்'ன்னு சத்தம் போட்டுட்டுப் போனார். அதான் கேட்டேன்.''

'அவரையே கேட்டிருக்கலாம்' — குணா மனசுள் நினைத்துக் கொண்டார். ''நாங்கவேற டிபார்ட்மெண்ட் சும்மா ஒரு நட்புல வந்து பார்த்துட்டுப் போறோம். இது மறுபடி நடக்கக்கூடாது பாருங்க... அந்த ஏற்பாடு பண்றோம். நர்ஸ் எங்கே...? எழுப்பலாமா சத்தினை?''

''சத்தி...''—ஸ்டீபன், அவனின் கை தொட்டான். காயமில்லாத கன்னப்பகுதியில் லேசாய்த் தொட்டான்.

திடுக்கென்று ஒரு விழிப்பு வந்தது. மறுபடி கண்கள் மெள்ள முடின.

''சத்தி...''—மறுபடி குரல் கொடுத்தான்.

இம்முறை சத்தியநாராயணன் சிரமப்பட்டுக் கண் விழிக்க முயற்சித்தான்.

''சத்தி...நான் ஸ்டீபன். எப்படிப்பா இருக்கு?''

நிலைக்குத்திச் சில விநாடிகள் ஸ்டீபனைப் பார்த்து இமைகள் கொட்டி அகலத் திறந்து சத்தி எழ முயற்சித்தான்.

'வேணாம் வேணாம்...படு,எப்படி இருக்கு இப்போ?'

''என்னை அடிக்க வந்தான் ஸ்டீபன், உன்னை அடிக்க வந்தான்.''

''ஈஸி...ஈஸி...''

''யாரு... யாரை... யார் அடிச்சா?'' பெரியவர் பதறினார்,

''அவனை விடு சத்தி. நீ எப்படி இருக்கே? போலீஸ் கேஸ் போட்டிருக்கோம். உனக்கு எப்படி? பரவாயில்லையா?''

''வலிக்குது ஸ்டீபன். தலை முழுக்க வலிக்குது. மாத்தி மாத்தி நாலு பேர் நெஞ்சில குத்தி''—சத்திகண்களில் ளரீரென்று நீர் தளும்பி வழிந்தது.

ஸ்டீபன் பற்களைக் கடித்தான்.

''இது என்னாலதான் சத்தி. என்னை அடிக்கறதுக்குப் பதிலா உன்னை அடிச்சுட்டாங்க நான் இதை சும்மாவிட மாட்டேன். அவன் விரல் எலும்பு உடைஞ்சு உன் கால் கீழே போடாம விடமாட்டேன்.''

' ஸ்டீபன்...''—குணா அவனை அடக்கினார்.

''ஒரு ஸ்டேட்மெண்ட்ல கையெழுத்துப் போட்டுடுங்க சத்தி...''— மெள்ள வினவினார்

''ப்ச் ' சத்திக்கு அலுப்பும் வெறுப்பும் வேதனையும் மண்டின. ''பெரிசு பண்ணாதிங்க சார். எனக்கு டைம் சரியில்லை. மார்னிங்லேர்ந்து எல்லாம் தப்பா நடந்தது.''

குணா லேசாய் லெட்கப்பட்டார்.

'இல்லே சத்தி, ஒரு புரொஸீஜர்படி எழுதிக் கொடுத்துட்டா இதுமாதிரி மறுபடி நடக்காம செய்துடலாம். எல்லா ஸ்டாஃபும் இதுபத்திக் கவலைப்படறாங்க.''

சத்தியோசிப்பதுபோல் கண்களைமூடினான் வலியோ இல்லை மருந்து வேகமோ...அப்படியே தூங்கிப் போனான்

மறுபடி எழுப்ப முடியாது. எழுப்புவது நல்லதல்ல. என்ன செய்வது!

"சார் ஸ்டேட்மெண்ட் எதுக்கு சார்? நான் தேடிப் போய் அவனுங்க நெஞ்சுக்கூட்டை உடைச்சுட்டு..."

"சும்மா இருங்க ஸ்டீபன்,"

"என்ன ப்ராப்ளம்? ஏதோ பெரிசா இருக்கும்போல் இருக்கே நீங்க பேசறதைப் பார்த்தா"— பெரியவர் வினவினார்.

"சத்தியநாரயாணன் இங்கே இருக்காரா...?"— வாசலில் குரல் கேட்டது. ஜார்ஜினா குழந்தையுடன் உள்ளே வந்தாள்.

"வாங்க மேடம். இங்கதான்'—குணா வரவேற்றார்.

"ஐயோ... ஏசுவே...' —ஜார்ஜினா முகம் பொத்திக் கொண்டாள்.

"முகம் இப்படி வீங்கியிருக்கு கடவுளே...ஒண்ணும் பயமில்லையே குணசேகரன்?"

"பயம் இல்லீங்க. வலி அதிகம் இருக்கும் போல... கஷ்டப்படறாரு."

"அழுதுட்டாரா...' கண்களில் வழிந்த நீரைக்காட்டிக் கேட்டாள்

"உம்..."—குணா தலையசைத்தார். எல்லார் முகத்திலும் வேதனை மண்டிக் கிடந்தது.

"சார் வந்து..."

"அவங்க அப்பா."

"வணக்கம். நான் ஜார்ஜினா. அவர் கூட வொர்க் பண்றேன். உங்க அனுமதியோட ப்ரேயர் பண்ணட்டுங்களா?"

பெரியவர் தலையாட்டிவிட்டு நகர்ந்து கொண்டார். ஜார்ஜினா சேலைத் தலைப்பைத் தலையில் போட்டுக் கொண்டாள்.

"சத்தி...சத்தியநாராயணன்...நான் பேசறது உங்களுக்குக் கேட்குதா...நான் ஜார்ஜினா. நான் உங்களுக்காக ப்ரே பண்ணப்போறேன் சத்தி. நான் பேசறது கேட்குதா. கடவுளை நினைச்சுக்குங்க சத்தி. நான் பேசறது இறைவனை நினைச்சுக்குங்க சத்தி."

சத்தி மெள்ள கண் விழித்தான். தலையசைக்காது கட்டில் விளிம்பருகே குரல் வந்த இடம் நோக்கி விழிகள் திருப்பினான்.

"நீங்க நல்லாயிடுவீங்க சத்தி. நாளைக்கே உங்க உடம்பு குணமாயிடும்."

ஆண்டவராகிய ஏசுவே, தில்ய மீட்பரே, இறைவனாகிய தந்தையே விண்ணுக்கும் மண்ணுக்கும் தலைவனே எங்கள் நண்பரின் வேதனையை உங்கள் காலடியில் வைக்கிறேன்.

கருணையே உருவான இறைவா? உமது அன்பினால் எங்களை ஒன்றுமில்லாமையிலிருந்து படைத்தீர். உமது தெய்விதப் பராமரிப்பினால் எங்களைக் காப்பாற்றி வருகிறீர். எங்களுக்காக மனுவுரு எடுத்தீர். எங்களுக்கு வழிகாட்டியாக வாழ்கிறீர். எங்கள் பொருட்டு சிலுவை சுமந்தீர்.

இனிமையும் அன்பும் நிறைந்த எங்கள் தோழன் வேதனைக் கண்ணீர் உங்கள் கரங்களை நனைக்க வில்லையா? ஏசுவே? அவர் பொருட்டு நாங்கள் விம்முவதும் உங்கள் செவிகளில் விழவில்லையா? மீட்பரே? எங்களை ஏமாற்றம் அடைய விடாதேயும்...நாங்கள் உம்மீது நம்பிக்கை வைக்கிறோம். எங்கள் எதிரிகள் எங்கள் நிலைகண்டு எக்களிக்க விடாதேயும். ஏனெனில், உம்மை நம்பும் எவரும் வெட்கிப் போவார். உமது நீதியின்படி எங்களை இந்தத் துன்பத்திலிருந்து விடுவித்தருளும். எங்கள் தோழனைச் சொஸ்தப்படுத்தி மறுபடி எங்களோடு வேலைக்கு அனுப்பும். எங்களைப் பிடிக்க மறை

வாக விரித்த கண்ணியிலிருந்து எங்களைத் தப்புவித்தருள் வீர். ஏனெனில், நீர் எனக்கு அடைக்கலமாய் உள்ளீர். ஆண்டவரே வார்த்தை தவறாத இறைவா? இந்த இனிய தினைஞனின் நலனுக்காக நாங்கள் உம்களை வேண்டு கிறோம். எங்கள் குரலுக்குச் செவிசாய்த்து அருளும்.''

மூடின கண்களுக்குள் நீலம் வளர்த்து, நீல நிறத் திடையே சிலுவை வளர்த்து ஜார்ஜினா அல்புடன் மன்றாடினாள். மெல்லிய குரலில் இதம் சேர்த்து ஜெபம் செய்தாள். அவள் உருகிச் சொன்ன வார்த்தைகள் சக்தியை அசைத்து அலைக்கழித்தன.

சக்தி உதடு இறுக்கி அழுதான். நெஞ்சு துள்ளத் துள்ள விம்மினான். அவனுக்குள்ளே வெடி வெடித்துச் சிதறியது. பல உடல்கள் மேலே பறந்தன. வானம் தூசு நிறைந்தது. ஒரு கால் உத்திரத்தில் ரத்தம் சொட்ட ஆடிற்று. ''வினு...வினு...வினுப்பா...'' யாரோ கத்தினார்கள்.

''ஸ்டாப் இட்!''—சக்தி வாய் விட்டுக் கத்தினான். ஆன்பத்திரி உறைந்து போயிற்று. ஜார்ஜினா அதிர்ச்சியுற்று அவனை விழி விரியப் பார்த்தாள்.

''ப்ளீஸ்! டோண்ட் ப்ரே ஃபார் மீ...ப்ளீஸ் டோண்ட் தேட்டு மீ?''—மறுபடி கத்தினான்.

''ஏங்க சக்தி?''

''எனக்குப் பிடிக்கலை.''

ஜார்ஜினா எழுந்தாள். சிலுவைக் குறியிட்டுக் கொண்டாள். குழந்தையை எடுத்துக் கொண்டாள். தலைப்பு தலையிலிருந்து நெகிழ, வாசல்வரை போய் ஒரு முறை அவனைப் பார்த்தாள். வெளியேறினாள்.

இந்தப் பையன் எங்கோ மிக அசிங்கமாய் நசுங்கிப் போயிருக்கிறான் என்று குணசேகரனுக்குப் பட்டது. இதை விடக் கேவலமாய் எந்த மனிதனும் நடந்து கொள்ளமாட்டான் என்று தோன்றியது. நிலை கொள்ளாது குணசேகரன் வெளியேறினார்.

16

ரொம்ப வலிக்கிறதா சக்தி...வலி தாங்காமல் தான் கத்தினியா.

—பெரியவர் குனிந்து தன் மகனின் முகம் தடவியபடி கேட்டார். பிள்ளை அசையாமல் உத்திரம் பார்த்துக் கிடந்தது.

''மனுஷாளுடைய மெண்டல் பேலன்ஸ் எத்தனை நொய்மை வலி, வேதனை, குழப்பம் இல்லாதவரைக்கும் தான் மனுஷன் நல்லவன். வலி தாங்க முடியாது போயிடுத்தா, பட்டுத்தான் தீரணும்னு பயம் வந்தாச்சுன்னா கடவுளேகூட வெறுத்துப் போயிடறது ஏண்டா சக்தி, ஏன் அப்படிக் கத்தினே? எனக்கு உடம்பு உதறிப் போட்டுடுத்து ஒரு செகண்ட்ல பாவம்டா. ரொம்பப் பாவம் அந்தப் பொண்ணு.''

சக்தி பேசாது இருந்தான்.

''அவ உங்க ஆபீஸ்ல வேலை செய்றவளா கிறிஸ்தவப் பொண்ணா... கிறிஸ்தவங்களுக்கே இது வழக்கம். உட்கார்ந்தா ஜெபம் நின்னா ஜெபம் மாத்திரை,மருந்தே வேண்டாம். ஜெபம் பண்ணா போறும். உடம்பு குணமாயிடும்னு நிறையப் பேருக்கு ஒரு நம்பிக்கை நீ கத்தியிருக்கக்கூடாது சக்தி அப்படி ரொம்ப அவமரியாதை. தலையெழுத்தா அந்தக் குழந்தைக்கு அவமானப்படணும்னு.''

சக்தி கண்கள் மூடிக்கொண்டான்.

''எனக்கே கண்ல ஜலம் தளும்பிடுத்து—அந்தப் பொண்ணு ப்ரேயர் கேட்டு...கிறிஸ்டியானிடில ஒரு நல்ல விஷயம் என்ன தெரியுமா—கடவுளோடு பேசுதல். அப்படிப் பேசறதுக்குக் குறுக்கே வேற யாரும் இல்லை பூசாரியோ, குருவோ தேவையில்லை. யார் வேணா நேரடியா கடவுள்

கிட்ட பேசலாம். இடம், பொருள், ஏவல் எதுவுமில்லை. அப்படிப் பேசணு சொல்லித்தர்றது கிறிஸ்தவ மதம்.

உன்னை அந்த ப்ரேயர் என்னவோ பண்ணிடுத்துன்னு நினைக்கிறேன். அழுகை வந்துடுத்து. அதை மறைக்க கத்திக் தொலைச்சுட்டே. அவா ப்ரேயரே அப்படித்தான். தலங்க அடிச்சிடும். சிலருக்குப் புடிக்காது இது. ஆனா...''

''ஸ்டாப் இட்''—மறுபடி சத்தி கத்தினான். ''ப்ளீஸ்! என்னைத் தனியா விடுங்கோ.''

''ஏண்டா?''—கிழவர் அதிர்ச்சியில் தடுமாறினார்.

''எனக்கு உசிரோட இருக்கப் பிடிக்கலே. செத்துட லாம் போல இருக்கு.''

கிழவருக்கு வயிறு கலங்கிற்று. இரண்டு பெண்களுக்கு நடுவே பிறந்த ஒரே பிள்ளை மூணு குழந்தைகள். மூணும் பொண்ணுதான் என் ஜாதகம் சொல்லிற்று. மனைவி வருத்தப்பட்டாள். 'சத்தியநாராயணர் பூஜை பண்ணுங்க. பிள்ளை வரம் கேளுங்கோ'ன்னு யாரோ உபதேசம் செய்தார்கள். நாற்பத்தைந்து நாள் விரத மிருந்து பிறந்த பிள்ளை.

புசுபுசுவென்று உதடு துடித்து அழுகை மண்டிற்று கிழவருக்கு.

மூணு குழந்தைகள்...மூணும் பெண் என்று ஜாதகம் சொன்னது சரிதானோ? மீசையும், மார்பு ரோமமுமாய் இவன் கிடந்தாலும் புத்தி பெண்பிள்ளை புத்திதானோ? புழுங்கிப் புழுங்கித் தன்னைத் தானே கூட்டில் அடைத்து, வாய்திறந்து தன் துக்கம் சொல்லாது குமையும் இளம் தானோ, ஒருவேளை இரண்டு பெண்களுக்கு நடுவே பிறந்து பெண்பிள்ளை குணம் தூக்கலாவிட்டதோ?

என்ன நடந்துவிட்டது இப்போது? செத்துப் போகும் படியாய் என்னமோ நடந்திருக்கிறது. என்ன என்று

சொல்ல மறுக்கிறான். நெஞ்சுக்கூட்டை வேக வைத்துக் கொண்டிருக்கிறான்.

நாலு வருஷத்துக்கு முன்பு இப்படி இல்லை எம். எஸ்ஸி. கணிதம் முதல் வகுப்பு தேறி, தேறின கையோடு செய்தித்தாளுடன் வருகிறபோது உள்ளே நுழைந்து அப்பன் எதிரே விரல் சொடுக்கி, ''தோஸ்த், நான் ..பர்ஸ்ட் கிளாஸ் வாங்கிட்டேன் நீ மோட்டார் சைக்கிள் வாங்கிக் கொடு.''

''மோட்டார் சைக்கிள் டேஞ்சர் இல்லையாடா?''

அப்பாவைப் பின்னால் ஏற்றிக்கொண்டு பிச்ரோட்டில் எல்லா வாகனங்களையும் முந்தி முந்திப் பறந்தபோது பயமும் இருந்தது: சந்தோஷமாகவும் இருந்தது

''எப்படா கத்துண்டே?''

''காலேஜ்ல கத்துண்டேன்.''

''காலேஜ்ல இப்ப இதெல்லாம் கத்துத் தராளா?',

''வாத்தியார் இல்லேப்பா...பசங்க கத்துத் தந்தாங்க. என் கிளாஸ்ல ஒரு நாலு பேருக்குக் கணக்குட்யூஷன் எடுத் தேன். எக்ஸாம் எழுதற அளவுக்குத் தேத்தி வெச்சேன். பதிலுக்கு மோட்டார் சைக்கிள் கத்துக் கொடுத்தாங்க. அந்த நாலு பேரும் பாஸ். அவங்களுக்குஒரேசந்தோஷம்.''

''வேற ஒண்ணும் கத்துக்கலையே?''

''பாண்ட் இன் பண்ணக் கத்துண்டேன். டைகட்டக் கத்துண்டேன். ஒருத்தர் கிடார் கத்துக் கொடுத்தான்.''

''தப்பா ஒண்ணும் கத்துக்கலையே?''

''இல்லைப்பா ''

''லேடீஸைக் கேலி பண்றியோ?''

மோட்டார் சைக்கிள் மெதுவாயிற்று.

''ஏம்ப்பா கேட்கறே?''

''பஸ்ஸ்டாண்டுல ரொம்ப நேரம் நிக்கறீங்களாம் ஒரு குரூப்பா. எதிர் வீட்டு சாரி சொன்னான்.

''ஆமாம்பா. சும்மா வேடிக்கை பாக்கறோம். யார் கிட்டேயும் பேசறதில்லை. கேலி பண்றதில்லை.''

''ஜாக்கிரதைடா சத்தி. பெண்பாவம் பொல்லாது.''

''எனக்குத் தெரியும்பா. உம் புள்ளை கேவலமா நடந்துக்கமாட்டான். உனக்குத் தலை குனிவு ஏற்படாமாட்டான்.''

''அது போறும்டா.''

''ஆனா...''

''என்ன ஆனா...''

''எனக்குப் புடிச்ச பொண்ணை, நான் புரிஞ்சுண்ட பொண்ணை எனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கணும். நீயா எதாவது வாக்குக் கொடுத்துட்டேன்னு பின்னாடி மிரட்டாதே.''

''யாரையாவது பாத்து வெச்சிருக்கியா?''

''இல்லை. இனிமேதான்...''

''ஏண்டா, லவ் பண்ணித்தான் கல்யாணம் செஞ்சுக்கணும்னு ஏதாவது சபதமா?''

''இல்லை...ஒரு ஆசை.''

நியாயம்தான். அழகானவன், அறிவுள்ளவன், அளவான குடும்பத்தில் பிறந்தவன், பெண்களைக் கவர்வதில் விருப்பமுள்ளவன். கவரப்படுவதில் கர்வமுள்ளவன். நியாயம்தானே இது.

''டேய், இன்னும் உனக்கு ஒரு தங்கை இருக்கா கல்யாணத்துக்கு. ஞாபகம் வெச்சுக்கோ.''

''நீ கவலையே படாதேப்பா, ஜாம் ஜாம்னு முடிக்கலாம்.''

''வேலை வெட்டிக்கு ஏதாவது ட்ரை பண்றியா, இல்லை பஸ்ஸ்டாண்டுல வேடிக்கை பார்க்கற[illegible]ரியா?''

''நாலு இடத்துக்கு அப்ளிகேஷன் போட்டிருக்கேன். அதுல ஒண்ணு இந்தியன் ஏர்லைன்ஸ் ஆபீஸர் ட்ரெய்னி.''

''கிடைக்குமா?''

''என் குவாலிஃபிகேஷனுக்குக் கிடைக்கணும். பாம்பேல இன்டர்வியூ இருக்குமாம்.''

''டேய். நீ சத்தியநாராயணர் பூஜை பண்ணுடா. நிச்சயமா இந்த வேலை கிடைக்கும்.''

நிஜமாவா?''

'நீ பொறக்கறதுக்கு அந்தப் பூஜைதானே பண்ணினோம்.''

'பண்ணிடுவோம்.''

'நாற்பத்தஞ்சு நாள் அடக்க ஒடுக்கமா விரதம் இருக்க முடியுமா?''

'முடியும்.''

கட்டைச் சுவரில் உட்கார்ந்து போகிற வருகிற பெண்களைக் கண் விரித்துப் பார்த்து காமெண்ட் அடித்த பிள்ளை கர்ம சிரத்தையாய் பூஜை செய்தது.

பூஜை செய்த அறுபதாம் நாள், சென்னையில் இன்டர்வியூ நடந்தது. பம்பாய்க்கு இன்டர்வியூக்குப் போயிற்று. விரல் பின்னை இன்னும் முப்பது நாள் காத்திருந்தது.

ஏம்ப்பா மிலிட்டரி வேலைக்கு எடுக்கறாங்களாம் போகட்டுமா?''

''வேணாம்டா. இந்த வேலை கிடைக்கும், சும்மாயிரு.'

''ஏம்ப்பா மிலிட்டரி வேணாங்கறே?''

''என்னை விட்டு ரொம்ப தூரம் போயிடுவேடா. ஒருவேளை எனக்கு ஏதாவது ஆயிடுத்துன்னு வெச்சுக்கோ உன்னைத் தேடி சேதி சொல்லி, நீ வரத்துக்குள்ளே என்னை எரிச்சு, கரைச்சு....'

பிள்ளை, அப்பாவின் வாய் பொத்திற்று.
''உன்கிட்டேயே இருக்கணுங்கறியா?''
''இல்லடா. அத்தனை பேராசையில்லை. நாலு மணி நேரத்துல வந்துடற இடத்திலயாவது இருக்கணும்.''
''ஏம்ப்பா அச்சானியமா பேசறே?''
''எனக்கு அம்பத்தாறு வயசு ரிடையராயாச்சு இனி எப்படியோலென்னு பார்க்கற ஜோலிதானே, ஒரு குறிப்பிட்ட வயசுக்குப் பிறகு இதுக்குத் தயாராயிடணும் உன் தங்கை கல்யாணத்தை முடிச்சுட்டேன்னா பெரிய சுமை குறையும்.''

''இந்த வருஷம் முடிச்சுடலாம், கலவலைப்படாதே.''
தங்கைக்கு 'ஹிந்து'வில் விளம்பரம் பண்ணி ஜாதகப் பொருத்தம் பார்த்துத் தேர்வு பண்ணி நேரே போய் மறுபடி ஜாதகம் பரிமாற்றம் செய்து விவரம் சேகரித்து நாலு குடும்பங்களைப் பெண் பார்க்கஅழைத்து அதில் இரண்டு சரி என்று முடிவுபண்ணி, இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து தங்கையின் சம்பந்தம் கேட்டு, மறுபடி அந்தப் பையனின் பூர்வோத்திரம் ரகசியமாய் விசாரித்து, கல்யாணத்தில் குடை பிடித்து விசிறி வீசி, மாப்பிள்ளை வீட்டை உபசரித்து, தாலிகட்டி அட்சதை போட்டதும் அப்பா மனசு தாங்காமல் அரற்றிய போது தோள் தாங்கி 'அழாதேப்பா, அழாதேப்பா' என்று ஆறுதல் சொன்ன பிள்ளை. சுமைதாங்கிய செல்வம்.

'எனக்கு உசிரோட இருக்கப் பிடிக்கலே. என்கிறது, 'செத்துப் போகிறேன்' என்கிறது.

'இது கொடுமைடா சத்தி...இது கொடுமை பூர்வ ஜென்மத்துப் பாவம். எவன் பிள்ளையை எங்கே எட்டி உதைத்தானோ, எவன் வாய் தவறி என்னை அதற்குச் சபித்தானோ, இன்று நீ என்னை எட்டி உதைக்கும்படி ஆகிறது இது மரணத்தைவிடக் கொடுமை சத்திய நாராயணா. உயிரோடு வதைத்தல்.'

ஏர்லைன்ஸ் உத்தியோகம் கிடைத்தது என்று கடிதம் வந்ததும் எப்படிக் குதித்தான். எத்தனை முறை விழுந்து நமஸ்கரித்தான்.

'எனக்கு ஏண்டா இத்தனை நமஸ்காரம். போய் சுவாமிக்குப் பண்ணு.''

''அரசன் விஷ்ணு ரூபம் தகப்பன் விஷ்ணு ரூபம். குரு விஷ்ணு ரூபம் இவ்வுலகமே விஷ்ணு ரூபம்''—பிள்ளை பதில் சொல்லிற்று.

சைவர்கள்தான். ஆனால், திருமால் மீது தளராத பிரேமை உடையவர்கள்.

பம்பாய்க்கு ட்ரெயினிங் என்று போனான். கோவாவில் ஆறு மாதம் வேலை செய்தான். பங்களூரில் ப்ரமோஷன் வாங்கினான். சென்னைக்கு மாற்றலானான். வெளிர் நீலச்சட்டையும் தோளில் பட்டைகளுமாய் அவர் பிள்ளை ஆபீஸுக்குக் கிளம்புவதைத் தெருவே வேடிக்கை பார்த்தது.

''எங்க மாமியார் டெல்லில காலமாயிட்டாளாம். அட்லீஸ்ட் என் மனைவியாவது உடனே அங்கே போக ணும் ஏதாவது செய்யமுடியுமா?''—ராத்திரி பன்னிரண்டு மணிக்குக் கதவு தட்டினார்கள். பத்து மணிக்கு வீடு வந்தவன் விடியற்காலை விமானத்தில் அந்தப் பெண் மணியை அனுப்பி போய்ச் சேர்ந்த தகவல் தெரிந்து சொல்ல பல பேர் நன்றி சொன்னார்கள்.

''திடீர்னு மெட்ராஸ்ல டயபடிக் மாத்திரை கிடைக்கலை சார். பாம்பேல கிடைக்கறதாம். ட்ரை பண்ண முடியுமா? ரெண்டு நாள் மாத்திரை சாப்பிடலை கண்ணை இருட்டிண்டு வர்றது.'' மறுநாள் மாத்திரை வரும்.

''எத்தனை செலவாச்சு சார் இதுக்கு?''
' இரண்டாயிரத்து நானூறு ரூபா.''

"ஐயையோ, பதினெட்டு ரூபா அம்பது பைசா தானே மெட்ராஸ்ல."

"அது மட்டும் கொடுத்தா போதும் மருந்துக்குக் காசு கொடுத்தாத்தான் பலிக்கும். இது ஓசியில டிராவல் பண்ணியிருக்கு."

"தாங்க்யூ, தாங்க்யூசார், உங்க பிள்ளை நன்னாயிருக்கணும்" மேற்கு மாம்பலத்தில் அயோத்தியா மண்டபம் சுற்றிப் பல வீடுகளில் அவன் பெயரும் மோட்டார் பைக் சத்தமும் பழக்கம் இனியன். கம்பீரன், எந்த லம்புக்கும் போகாதவன்.

"புள்ளைக்கு ஏதாவது வரன் பார்க்கிறீரா...பெரிய இடம் ஒண்ணு கையில இருக்கு."

"பார்க்கணும் யாரு பெரிய இடம்?"

'பட்டு ஜவுளிக் கடை வெச்சிருக்கார். கடைசிப் பொண்ணு. கிளி மாதிரி இருப்பா. நல்ல படிப்பு. சங்கீதம் தெரியும். அதெல்லாம் விடுங்கோ கை கொள்ளாத காசு தங்கத்துல இழைச்சு அனுப்புவா பொண்ணை.'

"அப்பா, இங்கே வரேளா ஒரு நிமிஷம்..."

"என்னடா?"

'இத்தனை சொல்றாரேன்னு உனக்கு ஒரு நப்பாசை வரும். நீ மட்டும் போய்ப் பார்த்துட்டுப் பிடிக்கலேனு வந்துடு. உனக்கும் பொழுது போகணுமில்லையா?"

"உனக்கு நப்பாசையா, இல்லையா?"

"என் பொண்டாட்டியை நான் செலக்ட் பண்ணிக் கறேன் நம்பி என்கிட்ட விட்டுடேன்."

"அது இல்லை..."

"என்னால சொல்ஜி, பஜ்ஜி தின்னுட்டு 'பொண்ணு பிடிச்சிருக்கு'ன்னு சொல்ல முடியாதுப்பா. எனக்கு கெட்டிக்

காரியா— பரபரன்னு இருக்கிற மனைவி லேணும். அடங்கின பொண்டாட்டிலேண்டாம். எனக்கு அறிவுள்ள பொண்ணா இருக்கணும்."

"ஏன்?"

"அடுத்த ஜெனரேஷன் ஏகமான காம்பெடீஷன்ல வளரப்போறது. அப்பாவும் அம்மாவும் புத்தியோட இல்லேன்னா குழந்தைகள் சிரமப்படும்."

"அப்போ இந்த வரனை...?"

"நீ போய்ப் பார்த்துட்டு 'பொண்ணு புடிக்கலை'ன்னு சொல்லிவிட்டு வா. உனக்கும் பொழுது போகணுமோன்னோ..."

"பொழுதுபோறத்துக்கு ஆயிரம் வழி இருக்குடா. இந்தப் பாபம் பண்ண வேண்டாம்...ஏன்யா, பொண்ணு நல்ல படிப்புன்னியே, என்ன படிச்சிருக்கு?"

"குடித்தனம் பண்ற பொம்மனாட்டிக்கு ப்ளஸ் டூ போறாதா..."

"போறாது வேற இடம் சொல்லு அலசரமில்லை. நிதானமா சொல்லு"

உடம்பெல்லாம் கரியும், கலைந்ததலையும், பொசுங்கின பாண்ட்டுமாய் ஒரு நாள் விடியலில் வந்தான். 'ஐயோ ஐயோ' என்று நடுக்கூடத்தில் விழுந்து புரண்டு அழுதான்

வீடு எகிறிப்போய் அவனை இறுக்கிக் கொண்டது. முப்பத்திரண்டுபேர்செத்துப் போயிட்டாப்பா...ஒரே விநாடில சுக்கல் சுக்கலா போயிட்டாப்பா. வின்செண்ட் செத்துப் போயிட்டாம்பா. நார் நாரா கிழிஞ்சு போயிட்டாம்பா."

"என்னடா...என்ன ஆச்சு?"

"நான் கொன்னுட்டேம்பா... நான் கொலை பண்ணிட்டேன்."

''யாரு லின்செட்? என்ன கொலை...?''

பேப்பர் வெடிகுண்டு கதை சொல்லிற்று. சத்தி உடம்பு தேறப் பதினைந்து நாளாயிற்று. பதினாறாம் நாள் வெளியே போய் உலாவியபோது பன்னிரண்டு மாத்திரை சாப்பிட்டுக் குபுக்கென்று வாந்தி எடுத்த சத்தம் கேட்டு அவர் மனைவி கதவு இடிக்க வெண்டி கேட்டர் வழியே எட்டிப் பார்த்துக் கூச்சலிட...எதேச்சை யாய் வீட்டுக்கு வந்து இரண்டாவது மாப்பிள்ளை கடப் பாரையால் கதவு பிளந்து ஆஸ்பத்திரிக்கு எடுத்து ஓடி னான். உயிருட்டினான்.

''எத்தனை நடவை கேட்கறது? சொல்லு சத்தி, ஏன் இப்படிப் பண்ணினே?''— மாப்பிள்ளை அதட்டினார் எலர் கேள்விக்கும் பதில் சொல்லாத சத்தியை உலுக்கி னார். சத்தி நிமிர்ந்தான்

''நான் செத்துப் போயிருந்தா யார்கிட்ட இந்தக் கேள்வியைக் கேப்பேள்?''

''என்ன?''

''அப்படி நினைச்சக்குங்கோ.''

''பிரதர், வற்புறுத்த வேண்டாம்... விட்டுருங்கோ.'— மூத்த மாப்பிள்ளை விலக்கினார். அக்காவும் தங்கையும் வாய் பளிக்காது புலம்பினார்கள். வீட்டுச் சந்தோஷத்தை யாரோ பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டாற்போல் இருந்தது. வீடு—ஏர்போர்ட், ஏர்போர்ட்—வீடு. அவனை யாரும் எதுவும் கேட்கவும் இல்லை. அவனாகவும் பேசுவ தில்லை.

மறுபடி இன்று பேசினான்,

'எனக்கு உசிரோட இருக்கவே பிடிக்கலை. செத்துட லாம் போலிருக்கு.'

பெரியவர் வெறுப்புடன் தண்டு உதறினார்.

''அப்படி ஒருகர்மாளன்தலைலஎழுதியிருந்தாயாருடா தடுக்க முடியும்? போ...'' உதறினைத்தோளில் போட்டு ஆஸ்பத்திரி விட்டு வெளியேறினார்.

அந்தப் பெண் ஜார்ஜினா வாசல் வராண்டாவில் குழந்தையுடன் உட்கார்ந்து வெட்டவெளியை வெறித்துக் கொண்டிருப்பது கண்ணில் பட்டது

17

''நமஸ்காரம். என் பேரு ஹரிஹரன். சத்தியோட அப்பா நான்''—கைகூப்பினார்.

ஜார்ஜினா திடுக்கிட்டு நிமிர்ந்தாள். வியந்தாள்.

''தெரியும் வாங்க. உட்காருங்க''—பெஞ்சில் நகர்ந்து உட்கார்ந்தாள்.

''அவன் பண்ணது தப்பு. அபசாரம். உங்களை எத்தனை வேதனைப்படுத்தியிருக்கும்னு எனக்குத் தெரி யும். விநாசகாலே விபரீத புத்தி...தமிழில் இன்னும்- அழகாலே சொல்றா-'கெடுவான் கேடு நினைப்பான்?னு... கெட்டழியணும்னு தலையெழுத்து வரும்போதும் பேச்சும் துக்கிரித்தனமாகும்,''

''சே...சே...என்ன, நீங்களே உங்க மகனை இப்படிப் பேசறீங்க? எனக்குக் கொஞ்சம் கஷ்டமாயிடுச்சு. ஏன் இப்படி...என்ன வேதனை மனசுலேன்னு நினைச்சுக் கிட்டே உட்கார்ந்துட்டேன்'' ஜார்ஜினா புடவைத் தலைப்பைப் போர்த்திக் கொண்டாள்.

''கேட்டேனே...என்னடா இது மகா பாவின்னு கேட் டேனே. 'உசிரோட இருக்கப்பிடிக்கலே'ங்கறான். செத்துப்

போகணுமாம் என்னை 'ஆஸ்பத்திரியை விட்டுப் போ'னு துரத்திட்டான்.''

''எப்போ...?''

''இப்போ ரெண்டு நிமிஷம் முன்னாடி.'

''வீட்டுல ஏதாவது ப்ராப்ளங்களா...''

''இவன்தாம்மா ப்ராப்ளம். அதென்னவோ காத்து, கறுப்பு தீண்டின மாதிரி நாலு வருஷம் இருக்குமா?...ஒரு வெடிகுண்டு வெடிச்சுது பாருங்கோ ஏர்போர்ட்ல. அப்போலேர்ந்தே என்னவோ தப்பாயிடுத்து.''

''கேள்விப்பட்டேன். ஆபீஸ்லயும் யார்கூடயும் பேச மாட்டாரு ஆனா, நல்ல உழைப்பாளி. நிறைய ஞாபக சக்தி.''

''கிறுக்குப்புடிச்சிருக்கே...செத்துப்போறேன்,செத்துப் போறேன்னா போ...'' கிழவருக்கு அழுகை பொங்கிற்று. ''நானா பிடிச்சு லெச்சுண்டிருக்கேன். பிடிச்சிலெச்சுக்கத் தான் முடியுமா... அடிச்சுட்டாளாமேன்னு பதறிப் பாதி சோத்துல எழுந்து வந்தேன். இது செத்துப்போறேங்கறது போகட்டுமே- துண்டு உதறிக் கிளம்பிட்டேன்.''

''தப்பு அங்கிள். இப்போ நீங்க போகக்கூடாது, அவரைத் தனியா விடவே கூடாது. யாராவது கூடவே இருக்கணும். எங்கேயாவது கெட்டுப்போகட்டும்னு விடக் கூடாது. உங்களுக்கு ஏதாவது வேணுமா? காபி சாப்பிடறீங்களா? இங்கே கான்டீன் இருக்கு.''

''வேண்டாம் தாயே. நான் போய் என் வீட்டு மாப் பிள்ளையை அனுப்பறேன்- அவன்தான் சரி இவனுக்கு.''

''முரட்டுத்தனம் காட்டவேண்டாம் அங்கிள்.டயர்டா தெரியறீங்க வாங்க சாப்பிடலாம்.''

''இது யாரு, உன் குழந்தையா?''

''ஆமா. அங்கிளுக்கு ஸ்தோத்திரம் சொல்லு.''

பிள்ளை கரம் குவித்தது. கிழவர் அதன் விரல்களை முத்தமிட்டார்.

''அவர் என்ன செய்யறார்?''

அவள் மெள்ள தடுமாறினாள்.

''அவர் இல்லீங்க?''

''ஏன்?''

''வெடிகுண்டு விபத்துல போயிட்டாரு.''

''ராமா... அப்படியா... யாரு? யாரோ வின் செண்ட்டுனு ஒரு சிநேகிதன் செத்துட்டதா அழுதான்...''

''அவருதான்.''

''ஈஸ்வரா...இந்தக் குழந்தை...?''

''அவரு இறந்தப்போ நான் ஆறு மாசம். அப்புறம் குழந்தை பிறந்து நானும் வேலைக்குச் சேர்ந்து விளையாட்டா நாலரை வருஷம் ஓடிப்போச்சு.''

''கூட யார் இருக்கா?''

''அப்பா, அம்மா.''

''சந்தி அன்னிக்கு ரொம்ப அழுதான் தாயே. உம் பேர் என்ன?''

''ஜார்ஜினா?''

''இவனுக்கு வின்சென்ட் சிநேகிதம்னு தெரியுமா?''

''தெரியும். ஆபீஸ்ல சொன்னாங்க.'

''உன் புருஷன் சொல்லலையோ?''

''சொன்னாமாதிரி நினைவு ஆறு மாசம் எங்களைப் பத்திதான் பேசினமே ஒழிய...''

''நேச்சுரலி அதுகூட முழுக்க பேசி இருக்க முடியாது. இத்தனை துக்கம் வெச்சுண்டு என் மகனுக்கு பிரேயர் பண்ண வந்தியேம்மா.''

''ஏதாவது லவ் மேட்டர் இருந்திருக்குமா அங்கிள்?'' —ஜார்ஜினா திசை திருப்பினாள்.

"இலனுக்கா?"

"இருக்குன்ற மாதிரி பேசறாங்க."

"நிறைய பேசணும். லா... காண்டூன் எங்கே இருக்கு?"

ஒரு ஜன்னல் வழியே இரண்டு கோப்பை காபி வாங்கிக் கொண்டு கல்மேடைக்குமேல் உட்கார்ந்தார்கள்.

"குழந்தை காபி குடிப்பானா?"

"மாட்டான் அங்கிள்.'

"இவன் அன்னிக்கு வந்து 'ஓ'னு அழுதான். முப்பத் திரண்டு பேர் செத்துட்டா. வின்சென்ட் செத்துட் டான்னு புரண்டு புரண்டு அழுதான். என்னடா ஆச்சுன் னேன். நான்தான் கொலை பண்ணினேன்கறான்."

ஜார்ஜினா நடுக்கிட்டாள். காபி புடலையில் சிந்திற்று.

"என்னடா சொல்றேனு கேட்டோம். பதிலே சொல் லலை. சரி, அதிர்ச்சினு விட்டுட்டோம். பதினஞ்சு நாளைக்குப் பிறகு தூக்க மாத்திரை விழுங்கிட்டு வாந்தி எடுத்தான். ஒரே கலவரமாயிடுத்து. நல்லவேளை, என் ரெண்டாவது மாப்பிள்ளை அந்தச் சமயம் வந்தானோ... இவன் பொழைச்சான்."

"இதுகூட யாரோ சொன்னாங்க அங்கிள்."

"பசுபதிநாதன்னு யாராவது வேலை செய்யறாரா ஏர்போர்ட்ல?"

"தெரியாதே... ஏன்?"

"அவர் டாட்டர் ஒரு நாள் ஆஸ்பத்திரிக்கு வந்தா. என்னமோ கேட்டா...இவன் என்னமோ சொன்னான். சின்ன பொண்ணுதான். 'தற்கொலைக்குப் போறவரை லவ் பண்ண முடியாது... ஸாரி'ன்னு போயிடுத்து. அப்பவும் உனக்கிக் கேட்டோம்... உனக்கும் அந்தப் பொண்ணுக்கும் என்னடா சம்பந்தம்னு."

"ஒரு சம்பந்தமும் இல்லாம போயிடுத்து. இனிமே உனக்குத் தெரிஞ்சு என்ன ஆகணும்'னான். இறுக்குப் புடிச்சாலும் பேச்சு மட்டும் லக்கணையா வரும்."

"கொஞ்சம்" விசாரிச்சு அவரைச் சரி பண்ணணும் நீங்க."

"யாரைம்மா விசாரிப்பேன்?"

"இவருக்கு ஸுபன் மனோகரன் இஸ்ரேல்னு ஒரு ஃப்ரெண்டு!"

"தெரியும். இப்போ வந்தாரே..."

"அவர்கிட்ட பேசுங்களேன்!"

"உடம்புக்கு வந்தா வைத்தியம் பண்ணலாம்மா. மனசு லேதனையை நாமதான் சரிபண்ணிக்கணும். பக வானைக் கேட்கணும். இது பேயான்னா ஆடறது."

"நான் ஸுபன்கிட்ட பேசவா? என்ன ஏதுன்னு கேட்கலா?"

"என்ன கேப்பே?"

"பசுபதிநாதன் யாரு? அவர் டாட்டர் யாரு. என்ன சம்பந்தம் சத்திக்குன்னு..."

"அதைவிட முக்கியம். வின்சென்ட்டுக்கும் இவனுக் கும் என்னமோ இருக்கு. அது தெரியணும்."

"அந்தப் பொண்ணைக் கேட்டா தெரியாதா?"

"தெரியலாம்."

"இவரு பேசலேன்னா வேறு யாரையாவது பேச வெச்சு விவரம் தெரிஞ்சுக்கணும் எத்தினி நாள் இப்படி மனசுல வெச்சுக்கிட்டு புழுங்குவார்?"

"விசாரி தாயி. ஏதாவது தெரிஞ்சா இது என் வீட்டு டெலிபோன் நெம்பர். எனக்கு போன் பண்ணு"—பர்ஸி லிருந்து கார்டு எடுத்துக் கொடுத்தார்.

"வரச் சொல்லுப்பா."

"போன் பண்ணைச் சொல்லியிருக்கேன். பேசினா வரச் சொல்றேன். இப்போ எப்படி இருக்கு?"

"வலிக்கிறதுப்பா. தலை முழுக்க வலிக்கிறது."

"போறாத வேளை."

"அப்பா இங்கே டிஸ்ஜார்ஜ் வாங்கிண்டு விட்டுக் கிட்ட எதாவது நர்ஸிங்ஹோம்ல சேர்ந்துடறேன். நீங்க அலையணுமே மாம்பலத்துக்கும், மீனம்பாக்கத்துக்கும்."

"தி. நகர் பஸ் டெர்மினஸ்கிட்ட ஒரு நர்ஸிங்ஹோம் இருக்கு. எனக்குத் தெரிஞ்சவர் அந்த டாக்டர். போயிடலாமா?"

"சரி"

குழந்தைக்கு தி நகரில் ஜார்ஜினா சட்டையும் நிக்கரும் வாங்கினாள். சோப்பு, சீப்பு மற்றும் பழங்கள் வாங்கி திருமூலத்தில் மின்சார ரயில்நிலையத்தில் நுழையும் போது ஸ்டீபன் கண்களில் பட்டான் குழந்தையை இறுக்கிக் கொண்டு இறங்க, யாரோ ஒரு பெண்ணுடன் சிரித்துப் பேசியபடி படியேறினான்.

'இப்போது கூப்பிடலாமா. வேண்டாம். ஆனால், நாளைக்கு ஏர்போர்ட்டில் மாலை ட்யூட்டி.

ஒண்ணு செய்வோம். கடந்து போவோம். அவன் பேசினால் பேசுவோம். இல்லையெனில், மாலை போன் செய்வோம்'—நடையை வினைவாக்கி அவனைக் கடந்து போக.

"மேடம்"—ஸ்டீபன் கூப்பிடுவது கேட்டது.

ஜார்ஜினா திரும்பினாள்.

"குட் ஈவினிங்"

"குட் ஈவினிங் ஸ்டீபன்"

"அப்போ நான் வரட்டுங்களா...?"

"செய்தாயே குழந்தையை முதன் முதலா பார்த்து ட்டு ஒண்ணுமே கொடுக்காத...ஒரு செகண்ட் இரு..."—மறுபடி பர்ஸ் பிரித்துப் பதினோரு ரூபாய் எடுத்துப் பிள்ளை கையில் திணித்தார்.

"எதுக்கு அங்கிள், காசெல்லாம்...?"

"ஒரு மரியாதை. அங்கிள், அங்கிள்னு கூப்பிடறே. என் பேரனுக்கு நான் கொடுத்ததா இருக்கட்டுமே. எப்படிப் போலே?"

"குவார்ட்டர்ஸ் கிட்டதான் அங்கிள் நடந்து போயிடலாம். அப்புறம் இவனுக்கு டிரஸ் எடுக்கணும். மாம்பலம் போகலாம்னு நினைக்கிறேன். வரட்டுமா?"—கைகூப்பினாள். குழந்தையைத் தூக்கிக் கொண்டு திரும்பி மெள்ள நடந்தாள். குழந்தை அவள் தோளைக் கட்டிக் கொண்டு கழுத்து வளைவில் சாய்ந்து கொண்டது.

ஹரிஹரன் மெள்ளச் சத்தி படுத்திருக்கும் இடம் நோக்கி நடந்தார்.

அப்பாவைக் கண்டதும் கை நீட்டினான் கிழவர் ஓடிப்போய்ப் பற்றிக் கொள்ள, நெஞ்சில் அவர் கையை வைத்துக் கொண்டான். "என்னை மன்னிச்சிடுப்பா." ஒருக்களித்து அவர் மறு கையையும் பற்றிக் கொண்டான்.

கோபப்பட்ட தகப்பனுக்கு நெஞ்சு விம்மிற்று

"ச்சே...எதுக்குடா அம்பி. தூங்கு. தூங்கு அமைதியா.

"அவாகிட்டயும் மன்னிப்பு கேட்கணும்."

"நான கேட்டுட்டேன், இத்தனை நாழி வாசல்ல ட்கார்ந்து உன்னைப் பத்தித்தான் பேசினோம் கொஞ்சங்கூட வருத்தப்படலை அந்தப் பெண். எப்படி வது உன்னைச் சரி பண்ணணும், உன் மனசு வேதனை க்கணுங்கறா."

''சத்தி டீஸ்ஜார்ஜ் ஆயிட்டாராமே தெரியுமா?''—கேட்டான்.

''அதுக்குள்ளயா...எப்படி?'' ஜார்ஜினா வியந்தாள். கொஞ்சம் பயந்தாள்.

''தெரியலை. வேற நர்ஸிங்ஹோம் போயிட்டாங்களாம். மார்னிங் அப்ஸெட் ஆயிடுச்சு எனக்கு. குணா அவனைக் கன்னாபின்னானு திட்டிட்டுப் போயிட்டாரு. சரியான காட்டான்னு கத்தினாரு.''

''தப்பு ஸ்டீபன் ஏதோ மனலேதனை. அவரு நிலைமையில நடக்கும் அப்படிக் கத்தத் தோணியிருக்கும்.''

''நேத்து மார்னிங் இலங்க பார்ஸ் அடிச்சுட்டுத்தான் சண்டையாயிடுச்சு. அதே ஆளுங்கதான் சத்தியை அடிச்சுட்டாங்க''

''யாரு இலங்க...பார்த்த மாதிரி இருக்கு?''

''பசுபதிநாதன்னு டவர்ல ராடார் கண்ட்ரோலர். அவர் டாட்டர் பேர் ஷோபனா. எம்.ஏ படிக்கறாங்க. இலங்க ஜார்ஜினா—இந்தியன் ஏர்லைன்ஸ்''

தேடிப்போன மூலிகை ரயில்வே ஸ்டேஷன் சிமெண்ட் படியில் அகப்படுமா...ஜார்ஜினா அவளை உற்று வியப்புடன் பார்த்தாள். நீதானா அது என்கிற பார்வை.

அந்தப் பார்வை ஷோபனாவுக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது. அறிமுகம்கூடத் தேவையிலலை என்ற நினைப்பு போலிருக்கிறது. சின்னதாய் யாரும் அறியாத ஒரு முறைப்பு ஸ்டீபனிடம் செலுத்திவிட்டுச் சும்மா இருந்தாள்.

'அறிமுகச் சிரிப்புக்கூட இல்லை. அத்தனை கர்வமா? ராடார் கண்ட்ரோலர் டாடடர்னா என்ன...ஜனாதிபதி பெண்ணா...குதிரை மாதிரி நிக்குதே...'—ஜார்ஜினா நினைத்துக் கொண்டாள்.

''எனக்கு லேட்டாயிடுச்சு ஸ்டீபன். வரட்டுமா. பை...''

''பை...''—ஸ்டீபன் கண்களில் காதல் இருந்தது. ஷோபனா, ஜார்ஜினாவிடம் விடைபெற்றுக் கூட்டத்துடன் படியிறங்கினாள்.

ஒரு நாள் பேசினா போறும். ஊர் முழுக்கக் கூப்பிட்டுப் பேர் சொல்லிடுவானுங்க. இந்த ஆம்பளைப் பசங்களே ரொம்ப டேஞ்சர். அந்தப் பொம்பளை என்னவோ நான் துணியில்லாத நிக்கற மாதிரி ஹானு பார்க்குது. டீன் ஏஜைப் பார்த்தா எந்த முத்தின பொம்பளைக்கும் பிடிக்கிறதில்லை. நாளைக்கு ஸ்டீபன் வரட்டும் ஸ்டேஷனுக்கு 'அறிமுகம் எல்லாம் உன்னோட வெச்சுக்கோ... என்னை இழுக்காதேனு' சொல்லிடணும். ஒரு கண்ட்ரோல்ல இல்லேன்னா சொதப்பிடுவானுங்க' மனசுக்குள்ளே முணுமுணுத்தாள் ஷோபனா படியிறங்கிக் குறுக்கு வழியில் குவார்ட்டர்ஸ் நோக்கி நடந்தாள்.

''அவங்க எங்கே இருக்காங்க ஸ்டீபன்?''—ஜார்ஜினா கேட்க,

''குவார்ட்டர்ஸ்ல என் எதிர் ப்ளாக். ஏங்க?''—குழந்தையைக் கையில் வாங்கிக்கொண்டு ஸ்டீபன் கூடவே நடந்தான்.

''ஸ்வீட் கேர்ள். நல்ல அழகு...'

''ஆமா.''—ஸ்டீபன் வழிலது தெரிந்தது

''ரொம்ப நாள் ஃப்ரெண்டா?''

''ஆமாங்க.''—ஸ்டீபனிடமிருந்து எக்குத்தப்பாய் ஒரு பொய் வெளியே வந்து விழுந்தது.

''அடிக்கடி வீட்டுக்குப் போவீங்களா...நல்லா இருந்தது அவங்க சுரிதார். எங்கே வாங்கினாகங்கனு கேட்கணும்...''

ஜார்ஜினா ஆழம் பார்த்தாள்.

''போலேங்க நான் கேட்டுச் சொல்றேன்.''

போல் இருக்கிறது. நான் கொலை பண்ணிட்டேன்னு அழுதாராம். கொலை என்றால் வெடி வைத்து சத்தியா? சத்திக்கு வெடியோடு சம்பந்தம் உண்டா? ஆண்டவரே. என் செயல்கள் யாவிலும் மிகுந்த இரக்கத்துடன் நீர் என் முன் சென்று உமது இடையராத துணையால் நான் முன்னேற அருள் புரியும்''

குழந்தை வீட்டுக்குள் துள்ளி ஓடிற்று. பாட்டியிடம் ஓடிக் கட்டிக் கொண்டது. செருப்பை வராண்டாவில் கழற்றி ஹாலுக்குள் நுழைய, குணசேகரன் எழுந்து கரம் கூப்பினார்

கடவுளே...இதோ இன்னொரு மூலிகை.

ஜார்ஜினா கரம் குவித்தாள்.

'சத்தி மோட்டார்பைக் என்கிட்ட இருக்கு மேடம் அவர் ஆஸ்பத்திரிலேர்ந்து டிஸ்சார்ஜ் ஆயிட்டாராமே... என்ன செய்யறது பைக்கை? அவரு அட்ரஸ் இருக்கு.வீட்டு போன் நம்பர் தெரியலை. உங்ககிட்ட இருக்கா. இல்லை ஆபீஸ்ல கேட்கவா...?''

குணசேகரன் கேள்விக்கு ஜார்ஜினா பர்ஸ் பிரித்தாள்.

18

''கிளம்பறேன்... கிளம்பறேன்னாங்க நான்தான் வர்ற நேரம், உட்காருங்கன்னேன்'' — குழந்தையை இடுப்பில் இடுக்கிக் கொண்டு பேசினாள் அம்மா.

''உங்க பையனா...?'' ஹலோ சார்...''—கை குலுக்கினார் குணசேகரன்.

''செல்வா அங்கிளுக்கு ஸ்தோத்திரம் சொல்லு...''

''வணக்கம்...''

''வணக்கம். இங்கே பக்கத்துல வாங்க. என் வீட்டுக்கு வரீங்களா...நம்ம வீட்டுல ஒரு பொண்ணு இருக்கா...

''எம்.ஏ. இங்கிலீஷா?''

''தெரியலையே...நாங்க சினிமா, டிராமாலு சும்மா ஏதாவது பேசுவோமே தவிர...''

''சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்குங்க ஸ்டூபன்...''

''என்னங்க திடீர்னு இப்படி ஒரு அட்வைஸ்?''

''சத்திக்கு அதான் ஏதோ ப்ராப்ளம்.''

''அப்படியா?''

''பேசினாரா அப்புறம்?''

''அவங்க அப்பாதான் பேசினாரு, ஏதோ லவ்மேட்டர் ஃப்ளாப் ஆயிடுச்சு போல...''

''எனக்குத் தெரியாதுங்களே...''

''அப்புறம் அந்த நர்ஸிங்ஹோம் எதுன்னு தெரிஞ்சா சத்தியைப் போய்ப் பார்த்துட்டு வாங்க ஏன் மாத்திட்டாரு?''

''பார்க்கறேன். பார்த்துட்டு உங்களுக்கு போன் பண்றேன் வரட்டுங்களா?''

''வாங்க. சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கணும்.''

''சரிங்க...'' — வெட்கப்பட்டான். குழந்தையை ஜார்ஜினாவிடம் கொடுத்துவிட்டு வளைந்து வணங்கி விட்டு குறுக்குப் பாதையில் குவார்ட்டர்ஸ் நோக்கி நடந்தான். அவன் நடையில் யாரையோ துரத்தும் வேகம் தென்பட்டது.

'இந்தப் பையன் ஷோபனாவிடம் வழிகிறானோ... இவனிடம் எப்படிக் கேட்பது இவளைப்பற்றி...யார் இது பற்றிப் பேச ஆரம்பித்தார்கள். குணா...குணசேகரன் நாளைக்குப் போன் செய்து விசாரிக்க வேண்டும்.

அநாவசியம். இது 'ரிர் காதல் விவகாரம். உலக கெதுக்கு? இது காதல் விவகாரம் மட்டுமில்லை. வேறு என்னவோ இருக்கிறது, வின்சென்ட் சம்பந்தப்பட்டது

வந்திருக்கொடின்னு பேரு. யு.கே.ஜி. படிக்கறா. தம்பி எத்தனாங்கறது?''

பிளை பலைதூக்கி வியப்போடு வேற்று மனிதரை விழிகளால் ஆராய்ந்தது.

''இன்னும் சேர்க்கலைங்க. வர வருஷம் சேர்க்கணும்''

''முழு லயக ஆயிடுச்சுங்களா?''

''ஆசுங்க சேர்க்கணும்''

''சே பிள்ளைக்கு ஒண்ணும் வாங்கிட்டு வரலை. என்னலோ சத்தியைப் பத்தி யோசனை பண்ணிட்டே இங்கே வந்துட்டேன்.''

''பரவாயில்லைங்க. என்ன சாப்பிட நீங்க... அம்மா, ஏதாலது கொடுத்தியா?' என்று கேட்டாள் ஜார்ஜினா.

''கேட்டேனே வரட்டும் வரட்டும்னாங்க...''

''டீ சாப்பிடுவிங்களா?' —உள்ளே வேகமாய் ஓடினான் இரண்டு நிமிடத்தில் பெரிய ட்ரேயில் பிஸ்கட்டும், இரண்டு கோப்பை டீயும் கொண்டு வந்தாள் அவர் எதிரே வைத்தாள்.

''வண்டியைக் கொண்டுபோய் விட்டல் கொடுத்துடும்படி என் காண்ஸ்டபிள்கிட்ட சொல்லிட்டுப் போறேன். ஏர்போர்ட் அளவோ பாதுகாப்பில்லை.''

''அதை நீங்களே சொல்றீங்களா?''

''எங்க லட்சணம் எங்களுக்குத்தான் தெரியும். பிறந்த வீட்டுப் பெருமையை உடன்பிறந்தான்கிட்ட அலட்டிக்க முடியுமா? உண்மையைச் சொல்லித்தானே ஆகணும்.''

ஜார்ஜினா பர்ஸிலிருந்து எடுத்துக்கொடுத்தகார்டைப் பார்த்துத் துண்டு பேப்பரில் டெலிபோன் நம்பரை எழுதிக் கொண்டு கார்டைக் கொடுத்தார் குணசேகரன்

குழந்தையை மடியைவிட்டு இறங்காமலே டீ குடித்தார் ஒரு பிஸ்கட் துண்டை அவள் வாயில் போட்டார்.

''அடிச்சது போலீஸ்ல ரிப்போர்ட் ஆயிடுச்சா? என்ன பண்ணப் போறாங்க?''

''இன்னிக்கு நைட் ரவுண்ட் பண்ணிடுவேன்னாரு. ஸ்டேஷன்லயும் எக்ஸ்ட்ரா பாரா போட்டிருக்கு. குவார்ட்டர்ஸ்ல ஒண்ணும் பயமில்லையே?''

''இதுவரைக்கும் இல்லை''—ஜார்ஜினா பதில் சொன்னாள்.

''ஏன் இல்லை? கொடில துணி போட்டுட்டு அந்தாண்ட போனா போறும்...உருவிக்கிட்டுப் போயிடுவாங்க. ஜாக்கிரதையா இருக்கணும். உங்க வீட்ல வேலைக்குப் போறாங்களா?''—அம்மா இடையே புகுந்தாள்.

''இல்லீங்கம்மா. வீட்டோடதான் இருக்கா. அதுவும் வேலைக்குப் போனா பிள்ளை கஷ்டப்படுமில்லே... பெரிய வங்க சேலத்துல இருக்காங்க. விவசாயம், கைத்தறி...அவங்க பொழுது அவங்களுக்குச் சரியா இருக்கு.''

''ஏன் எடில இருக்கீங்க, குவார்ட்டர்ஸ் கிடைக்காதா உங்களுக்கு?''

''கிடைக்கும். பொண்ணை நல்ல ஸ்கூல்ல சேர்த்திருக்கேன். அதுக்கு வசதியா அங்கேயே இருக்கேன். நாம ஓடலாம் எத்தனி தொலைவானாலும்... குழந்தைங்க பஸ்ஸுக்கு அலையணுமே...!''

''சொந்த வீடா?''—அம்மா மறுபடி கேட்டாள்.

''இல்லீங்க. வாடகை வீடுதான் நம்ம உத்தியோகத்துக்கு எங்கே வீடு வாங்கறது? நாலு வருஷத்துக்கொருக்கா மாத்திடுவான். என் சொத்து படிப்புதான். என் குழந்தைக்கும் அதுதான் சரியா கொடுக்கணும். வாயாடிப் பொண்ணு ஒரு தடவை வாங்கனேன் வீட்டுக்கு...''—எழுந்தார்

ஜார்ஜினா வாசலுக்கு அவருடன் நடந்தாள். படியிறங்கி ஜீப் அருகே போய் நின்றார்.

"காலைல கஷ்டமாயிடுச்சுங்க தாங்கினீங்களோ? அந்தாளு நல்லா இருந்திருந்தா பளீர்னு அடிச்சிருப்பேன்."

"நல்லா இருந்தா நான் ஏன் போய் ப்ரே பண்றேன்? அலங்கப்பா பேசினாரு. ரொம்ப வருத்தப்பட்டாரு செத்துப் போறேன்னு மறுபடி கத்தினாராம்."

"போகட்டும்..."

"சே...! தப்புங்க. பாலம்! பகுபந்நாதன் மகள் ஷோபனாலை இன்னிக்குப் பார்த்தேன்."

"எனக்குப் பேர் தெரியாது. ரெண்டு டாட்டர் அவருக்கு. மூத்த பொண்ணை சத்தி லல் பண்ணினாராம். ப்ராப்ளமாம். கற்கொலை அட்டெம்ப்ட் பண்ணி ப்ரேக் ஆயிடுச்சாம்..."

"இல்லீங்க. வேற ஏதோ இருக்கு. 'வின்சென்ட்டை நான்தான் கொன்னேன்'னாராம். குண்டு வெடிச்சு, நிதறின அன்னிக்கு வீட்டுக்கு வந்து 'ஒ'ன்னு அழுதாராம்."

"கொலையா!"

"இன்னிக்குக் காலைல அலங்க அப்பா சொன்னாரு. எனக்கு சத்திதான் பாம் வெச்சுட்டாரோனு ஒரு கணம் பயமாயிடுச்சு. அது யாருனு பிடிச்சுட்டீங்கல்ல...?"

"இல்லம்மா. அது வேற கதை. உங்ககிட்ட சொல்ல முடியாது. ஆனா, அது சத்தி இல்லை. வெச்சிருக்கவும் முடியாது!"

"ஏன்?"

"நானோ, சத்தியோ, நீங்களோ அந்த மாதிரி வெடி யெல்லாம் வைக்க முடியாது. நமக்குக் கிடைக்காது. பிரமாதமான விஷயம் அது. டைம் செட் பண்ணி வெக்கிற டிஸைன் அது."

"அப்போ ஏன்...?"

"ஏதோ ஷாக்ல பேசியிருக்கணும். வெடி வெடிச்ச பிறகு ஃபயர் பிரிகேட் ஆளு ஒருத்தரு ஆறுமாசம் பைத்திய மாயிட்டாரு. அந்த வெடிகுண்டுக்குப் பிறகு, லர பொட்டியில சாதாரண டைம்பீஸ் பார்த்தாக்கூட கஸ்டம்ஸ் ஆளுங்க பயந்து ஓடினாங்க. ஒரு ஷாக்தான் அது."

"வின்சென்ட் தெரியுங்களா?"

"தெரியும். பார்த்திருக்கேன். பேசியிருக்கேன். அதிகம் பழக்கமில்லை. அவரால ரெண்டு தடவை விண்டோ ஸீட் கிடைச்சது ஏம்மா?"

"வின்சென்ட் நிநேஷ்தங்களோட பேசி அவர் பத்தி அதிகம் தெரிஞ்சுக்கணும்னு ஒரு ஆசை. நானும் அவரும் சரியா ஆறு மாசம்...நாங்க புரிஞ்சு பழக ஆரம்பிச்ச போது..."—தலை குனிந்தாள்.

"புரியுதும்மா...சத்திதான் அவருக்கு பெஸ்ட் நிநேஷ் தன்னு சொன்னாங்க. ஸ்டீபன்கூடச் சொன்னாரு..."

"சத்தி பேசலேமாட்டேன்றாரே. எதையோ மறைக் கிற மாதிரி படுது. என்னை டோட்டலா ஒதுக்கறாரு. பயமா, வேற ஏதாவதான்னு புரியலை."

"ஸ்டீபனை விசாரிக்கச் சொல்லலாமா? அவங்க எல்லாம் ஒரே குரூப்..."

"நான் அந்தப் பொண்ணு மூலமா சத்தி பத்தி விசாரிக்கலாமான்னு பார்த்தேன். ஸ்டீபன் அந்தப் பொண்ணோட போனாரு. அறிமுகப்படுத்தினாரு அது பேசலேயில்லை. அந்தப் பொண்ணோட பர்ஸ்தான் பிக்பாக்கெட் ஆயிடுச்சாம்."

"அந்தப் பொண்ணு பேரை ஸ்டீபன் போலீஸ்ல சொல்லலை. பேர் தெரியாதுன்னுட்டாரு."

"நல்லா பேசிட்டுப் போறாங்களே..."

"நிநேகமாவா...இல்லை...வேற."

''கேட்டேன் ஸ்டேபன்கிட்ட. வீட்டுக்கு அடிக்கடி போவாராம். தண்ணி புடிச்சுக் கொண்டு போய்க் கொடுப்பாராம்.''

குணா சிரித்தார்.

''என்னங்க.''

''எல்லாம் ஒரு லயகதான்.''

''புரியுது. ஸ்டேபன்கிட்ட பேசச் சொல்லலாம்...இது பத்தி அந்தப் பொண்ணுகிட்ட.''

''வேணாம். நான் பேசறேன். என்கிட்ட வந்தே ஆகணும். உங்களுக்கு வின்சென்ட் பத்தித் தெரியணும். சத்தியை விசாரிக்கணும். அல்வளவுதானே. நானே ட்ரை பண்றேன். ஸ்டேபனை லெச்சுக்கிட்டுப் பேசறேன். மோட்டார் சைக்கிளை அவரை விட்டுக் கொடுக்கச் சொல்றேன். கொடுத்துட்டு சத்திகிட்ட பேசறேன்.''

''ரொம்ப தாங்க்ஸ் குணசேகரன்''

''இதுக்குப் போய் என்னம்மா நன்றி சொல்லிக்கிட்டு. எனக்குக் காலைல ரொம்ப கோபமாயிடுச்சு. உண்மையா வந்ததுக்குக் காரணம், உங்களைப் பார்த்து ஆதரவா ரெண்டு வார்த்தை சொல்லிட்டுப் போகணும்னுதான் வந்தேனே தவிர...நான் கிறிஸ்டியன் ஸ்கூல்ல படிச்சவன். நிறைய பாட்டுகள் தெரியும். என்ன பாட்டு...'தேவ பிதா எந்தன் மேய்ப்பன் அல்லோ...' சரிங்களா? இப்பவும் நீங்க ப்ரே பண்ணபோது நானும் செய்தேன். அந்த மடையன் கூச்சல் போட்டதும்''

''வேணாம் குணசேகரன்...விட்டுங்க.''

''மனுஷனைக்கூட அவமதிக்கலாங்க...ஒரு மதத்தை, கடவுளை எப்படி அவமதிக்கறது?''

''தெரியாம செய்தது தானே...அவர் சுயநினைவுல இல்லையே...''

''சரிங்க, விடிக்கு ஏதாவது வேலையா வந்தீங்கன்னா வீட்டுக்கு வாங்க. இது என் கார்டு. சத்தி சமாசாரம் உங்களுக்கு நாளைக்கு நான் போன்பண்றேன். நாளைக்கு என்ன ட்யூட்டி?''

''ரெண்டு மணிலேர்ந்து நைட். ஒன்பது வரைக்கு''

''வரேங்க...''—ஜீப்பில் ஏறினார்.

''உங்க மிஸஸையும் குழந்தையையும் கூட்டிட்டு நீங்களும் வாங்க.''

''சரிங்க...''வண்டி கிளம்பியது.

குழந்தை சாதம் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். படுக்கை தட்டி போடத் தாவி ஏறினான். போர்த்திவிடச் சுருண்டு கொண்டான். ஜார்ஜினா நைட்டுக்கு மாறினாள். சமையலறைக்குப் போய் உணவுப் பாத்திரங்களை டைனிங் டேபிளில் அடுக்கினாள். அப்பாவும் அம்மாவும் வர, கிர்ந்தனை புத்தகம் பிரித்துக் கொண்டார்கள். அப்பா தலை நிமிர்த்திக் கோட்டார்:

''என்னம்மா பாடறது?''

''தேவ பிதா எந்தன் மேய்ப்பன் அல்லோ?'' பாடலாம்பா...''

அவளுக்கும்பிடித்த பாட்டு இது பாடத் துவங்கினாள்

''தேவ பிதா எந்தன்

மேய்ப்பன் அல்லோ;

சிறுமை தாழ்ச்சி அடைகிலேனே...

ஆவலதாய் என்னைப் பைம்புல் மேல்

அவர் மேய்த் தமர் நீர்

அருளுகின்றார்...''

'யரர் யாரை அவமானப்படுத்த முடியும் குணசேகரன் கடவுளிடம பற்றுள்ளவருக்குச் சிறுமை உண்டோ,

நாற்சில உண்டோ...இங்கே வேறும் ஆட்குக்குட்டி நான்
அறிந்தவருக்கு அவமானம் உண்டோ?''

''சாதிமுள் பள்ளத் திறங்கிடினும்
சற்றும் நீங்கு கண்டகுசேனே
வானவரன் என்னோடிருப்பார்
வலை தடியும் தோறுமே தேற்றும்.''

'மரணப் பள்ளத்தில் விழுந்தது போல் ஆயிற்று இந்த வாழ்க்கை. இந்த விதவைவாழ்க்கை. எனக்குப் பயமில்லை சத்தி. எது கண்டும் பயமில்லை. உன் கூச்சலால் நான் ஆடிப் போய்விட வில்லை.'

''பகைவர்க் கெதிரே ஒரு பந்தி
பாங்காய் எனக்கென்றேற் படுத்தி
கசதலம் கொண்டென் தலையைச்
சுகமாய் அபிஷேகம் செய்குவார்.''

'ஏய் ஷோபனா...என்னிடம் என்ன பகை உனக்கு என் தலைமுடிக்குத் வதலம் எதுவோ அதை என் கடவுள் நான் உனக்கென்ன கர்வம் எதிர் எதிர் பத்தியில் உன்ன வனில் சிறியவர் யார்...பெரியவர் யார்...?'

''ஆயுள் முழுவதும் என் பாத்ரம்
அருளும் நலமுமாய் நிரம்பும்
நேயன் வீட்டினில் சிறப்போட
நெடுநாள் குடியாய் நிலைந்
நிருப்பேன்.''

'என் வாழ்க்கை எனக்குச் சுகம் இனி எல்லாம்எனக்கு
ல்லதே நடக்கும். இது என் வீடு. என் புருஷன் வீடு.
ானும் அவனும் வாழ்ந்த இடம். இது போதும் எனக்கு.
ந்த அவமதிப்பும் தாக எனக்கு...'— கண்ணில் நீர்
ான்கிற்று.

''தேவ பிதா எந்தன்''
மேய்ப்பன் அல்லோ?
நிறுமை தாழ்ச்சி அடைகிலேனே...''

என் 'ஜபத்தை ஒதுக்கினாலும், என்னை அலட்சியப் படுத்தினாலும் நான் நிறுமை அடைந்துவிடமாட்டேன், சத்தி. உனக்காக மறுபடி மறுபடி என் ஆண்டவரை வேண்டுவேன்.'

''பரமண்டலத்தில் இருக்கும் எங்கள் பிதாவே...''

ஜெபம் முடித்து, உணவு முடித்து, படுக்கைக்குப் போனதும் தெளிந்த சுமை விலகி, கண் சுழற்றித் தூக்கம் வந்தது. பின்னையை அணைத்துக் கொண்டு தூங்கிப் போனாள்.

அவள் கனவில் சத்தி சிலுவையைத்தூக்கிக் கொண்டு மவுண்ட் ரோட்டில் போகிறான். நிறைய பேர் அவனை அடிக்கிறார்கள். அடி தாங்காமல் இடது, வலதாய் சத்தி அலைக்கழிய, எங்கிருந்தோ வின்செண்ட் ஓடி வந்து சிலுவையை அவனிடமிருந்து அகற்றித் தரையில் நட்டு வைத்து இவன் மீது குற்றமில்லை' என்று கூட்டத்தைத் தடுக்க கூட்டம் மெளிதாய்ச் சண்டையிட்டு வின்செண்டைச் சூழ, 'ஜார்ஜினா, வின்செண்ட்' என்று கூவினாள். அவள் கூச்சல் யார் காதிலும் விழவில்லை. ஜார்ஜினாவை யாரோ முன்னேற விடாமல் பிடித்துத் தடுக்கிறார்கள். திரும்ப, ஷோபனா. கனவு கலைந்து விட்டது.

அப்பா கதவு திறந்து வாசலில் நிற்க, வெளியில ஏதோ கூச்சல் கேட்டது.

ஒரு பையனை குவார்ட்டர்ஸ் செக்யூரிடி சட்டை பிடித்து உலுக்கிக் கொண்டிருந்தான்.

''யாருடா நீ...யாரு நீ...எப்படி வந்தே குவார்ட்டர் ஸுக்குள்ளே...? திருட்டுப் பசங்க. போடு...போடு சொல் றேன்''—யாரோ கூவினார்கள்.

பளீர் பளீரென்று அறையும் சத்தம் கேட்டது. அலறல் கேட்டது.

"யாருப்பா அது?"

"யாரோ நின்னப் புள்ளைய"—அப்பா கலவரமாய்ப் பேசினார். "தேட்டை போட வந்திருக்கான்"—அம்மா கோபமாய்க் கத்தினாள். "மோசமாய்ப் போயிடுச்சு குவார்ட்டர்ஸ். எலனெலனோ வரான்...போறான்... கேள்வி கேட்பாரே இல்லை."

"அடிக்க வேணாம்னு சொல்லுங்க அப்பா..."

"ஏன்? அடிச்சாத்தான் வழிக்கு வருவாங்க. நீ சும்மா இரு."—அம்மா மறுபடி கத்தினாள்.

தாலைந்து அறைக்குள் அவன் சுருண்டு விழுந்தான்.

"நாலு நாளா சாப்பிடலைங்க. ஸ்டீபன் ஐயாவைத் தேடிட்டு வந்தேன்."

"யாருடா ஸ்டீபன் வாய்க்கு வந்த பேர் சொல்றியா" மறுபடி அடித்தார்கள்.

தெரிந்துவிட்டது மிஸ் அப்ரோச் கேஸில் மாட்டிய பையன். புல் வெட்டுகிற பையன். குணா கூட்டிக் கொண்டு வந்த பையன். எதற்கு ஸ்டீபனைத் தேடுகிறான்?

"ஐயோ...அவனைத் தெரியும்ப்பா... ஏர்போர்ட்ல புல் வெட்ட அவன் தடுங்கப்பா."

"கம்மா இருடி..."—அம்மா கூச்சலிட்டாள்.

ஜார்ஜினா வெளியே இறங்கினாள்.

"லாட்ச்மேன், அந்தப் பையனை விடுங்க. அந்தப் பையனை எனக்குத் தெரியும். ஏர்போர்ட்ல புல் வெட்டறவன். ஏம்ப்பா இங்கே வந்தே?"

அவனுக்கும் அடையாளம் தெரிந்துவிட்டது.

"அக்கா, ஸ்டீபன் சாரைத் தேடி வந்தேங்க்கா. குவார்ட்டர்ஸ்ல இருக்காருன்னாங்க. பசிக்குது. சோறு கேக்கலாம்னு வந்தேன். வேலை வாங்கித் தரேன்னாருக்கா."

"அவரு இந்த குவார்ட்டர்ஸ்ல இல்லேப்பா...அடுத்த குவார்ட்டர்ஸ். விடுங்க லாட்ச்மேன். நீப்பா வந்துட்டான்."

"இல்லீங்க. இவன் கொல்லைப்பக்கமா சுத்தறான். ஆள் தேடறவன் கொல்லைப்பக்கமா ஏன் வரணும்?"

"ஒரு இடத்துல ரொட்டி கிடைச்சுதுங்க. வேற எதுனா சாப்பிடக் கிடைக்குமான்னு தேடினேங்க. நான் திருடன் இல்லீங்க. கிராமத்துலயல்லாக்கொட்டை போட்டிருக்கேன். ஊருக்குப் போக காசு இல்லாத..."—தேம்பினான்.

"வா...என்கூட வா..." பையனை ஜார்ஜினா தொட்டு அழைத்தாள். பையன் ஏக அழுக்காய் இருந்தான்.

"மேடம், நீங்க தப்பு பண்றீங்க."—யாரோ தடுத்தார்கள்.

"இல்லீங்க இவனை எனக்குத் தெரியும். ஏர்போர்ட் செக்யூரிடிக்குத் தெரியும். விட்டுருங்க, பாவம்...தெரியாத வந்துட்டான்."

"நீ எதுக்குமே போறே அதுக்கெல்லாம்...?"—அம்மா கடிந்தாள்.

"என்னம்மா இருக்கு சாப்பிட? இருப்பா, இங்கே உட்காரு."

உள்ளே போனாள். நேற்றைய பூரியும், பழைய கேக்கும் இருந்தன. கொஞ்சம் குழம்பு ஊற்றித் தட்டோடு வெளியே எடுத்து வந்தாள். கேக்கை பேப்பரோடு கொடுத்தாள். சாப்பிடு என்று பூரியை நீட்டினாள்.

பையன் இரண்டு கைகளிலும் உணவு வாங்கிக் கொண்டு அழுதான்.

"ஊர் விட்டு ஊர் வரலாம். இப்படி ராத்திரி, தெரியாத இடத்தில சுத்தலாமா? மறுபடி போலீஸ்ல மாட்டியிருந்தா

என்ன ஆகும்... அழுவாம சாப்பிடு...'' கூட்டம் அலனையே வேடிக்கை பார்த்தது.

''என்னவோ இவாளுக்கு மட்டும்தான் கருணை இருக்கிற மாதிரி ஒரு போஸ் இவா மனப்போக்கு எனக்குக் கொஞ்சம்கூடப் புரியலை சார்...''

''மன்னிப்பதும், ஏழைக்கு இரங்குவதும் தவறு என்று தோன்றுமோ—இரக்கம் தவறு என்கிற பாடமோ...சத்திக்குக்கூட இதுதான் பிரச்னையோ?''

ஏதோ ஒரு மரத்தில் இருந்து ஒரு குருவி விடிந்து விட்டது என்று விடாமல் கூவிற்று. ஜார்ஜினா மறுபடி தூங்கப் போனாள்.

'பெருமதிப்புக்குரிய ஜார்ஜினா அவர்களுக்கு...''

—புதிய நர்லிங்ஹோமில் படுக்கையில் அமர்ந்துசத்தி கடிதம் எழுதத்துவங்கினாள்.

19

பெருமதிப்புக்குரிய ஜார்ஜினா அவர்களுக்கு ஒரு வேதனை சூழ்நிலையில் என் மனத்தில் தோன்றிய சில வரிகளை உங்கள் முன் லைக்கிறேன் என்னை வெளிப்படுத்த இத்தக் கடிதம் தவிர எனக்கு வேறு வழி தெரியவில்லை. இது கடிதம்கூட இல்லை. ஒரு கவிதை. இல்லை, இது விதையில்லை ஒரு புலம்பல். உங்களுக்கு என் குரல் கேட்குமா, தெரியவில்லை...

என மனசுக்குள்ளே சில நாய்கள்.
புரண்டு கிடக்கும் எனைத் தின்று
என்றோ மூடிய மனக் கதவை
எவரும் திறக்க வரவேண்டாம்.
திறக்க நினைக்கும் ஒற்றைக்கை

ஓசை கேட்டு அலை நிமிரும்.
நெருங்கக் காலடி சத்தத்தில்
நிமிர்ந்து ரத்தப் பல் காட்டும்.
என்னைத் தின்ற லெறி நாய்கள்
உங்களைத் துரத்த ஓடிவரும்.
நானே கதவைத் திறந்தாலும்
நாய்கள் மடக்கும் வருபவரை.
விதியெனும் கிழவன் எனக்குள்ளே
தள்ளிய நாய்களில் நானில்லை.
நாய்கள் எந்தன் தலைமேலில்,
நானோ நாய்களின் காலின் கீழ்
ஒன்றாய் இரண்டாய் பலநூறாய்
நாய்கள் பெருகுது மனதினில்.
என்னைத் தின்று கண் மூடி
புரண்டு கிடக்குது என்னுள்ளே
நான் யாரிடம் பேச முயன்றாலும்
இந்நாய்களின் ஊளைத் தடுக்கிறது
என்னுள் விழுந்த இந்நாய்கள்
நான் சாகும் நேரம் தூங்கிவிடும்
அந்தக் கணத்தில் கைகுவித்து
கண் வழி கேட்பேன் மன்னிப்பை.
நீர் இருக்கும் இடத்தின் திசை
நோக்கி
நானே, நானாய் கிடந்தபடி...'

கடிதம் முடிந்துவிட்டிருந்தது. ஜார்ஜினா திகைத்தாள். 'என்ன இது...மன்னிப்பா...தான் சுயநினைவில் செய்ய வில்லை என்கிறானா, ஏன் இதைக் கவிதையாய் எழுதினான்? வெளிப்படையாய்ச் சொல்ல வெட்கமா? என்ன அர்த்தம் நாய்கள் என்றால்...உள்ளே இருக்கும் கெட்ட குணங்களுக்கு நாய்கள் என்று பெயரா?

'என் மனசுக்குள்ளே சில நாய்கள்.
புரண்டு கிடக்கும் எனைத்தின்று...'

இலை இலன் வணங்கும் நாய்கள் இல்லையா.
இவனைத் தின்னும் நாய்களா...? நாய்கள் நன்றியுள்
ளவை என்பார்கள். இலன் 'எனைத் தின்று' என்கிறான்
...எது நாய் குணம். காமமா? இடம் பொருள் அறியாது
சண்டையிடும் குணமா? இலை என்னைக் காவல் காக்க
வில்லை. கடித்துத் தின்கிறது என்கிறானே...எது கடித்துத்
தின்கிறது? குற்ற உணர்வா? என்ன குற்ற உணர்வு?
என்னவகை குற்றம்? யாருக்குச் செய்த தீங்கு? எனக்கா,
விறலுக்கா...எல்லோருக்குமேவா...

'நிறுக்க நினைக்கும் ஒற்றைக்கை
ஓசை கேட்டு அலை நிமிரும்...'

ஒரேவது ஒரு கை ஓசைக்கு நிமிரும்.
யாராவது மெல்ல கை நீட்டினாலும் போதும்,
கொஞ்சம் பரிதாபப்பட்டாலும் போதும்: உள்ளே நாய்
கள் சிலிர்த்து நிமிர்ந்துவிடுகின்றன. யார் என்று பார்க்
கின்றன. அருகே நடந்துவர, பயமுறுத்துகின்றன. அவ
னைத் தின்பது நிறுத்திவிட்டு வருவதைத் துரத்துகின்றன.
அது நானில்லை. அந்த நாய்கள் நானில்லை. அப்போது
நீ வேறு. உன் நாய்கள் வேறு. அதாவது உன் புத்தி வேறு
...மனசு வேறு. புத்தி தவறு என்று சொன்னாலும்
உணர்வு ஓடி வந்துவிடுகிறது. வெறி நாய் உணர்வு முந்
திக்கொள்கிறது. உனக்குத் தெரிகிறது தவறு என்று.
ஆனால், ஏதோ ஓர் உணர்வு உன்னை ஆட்டிப் படைக்
கிறது. என்ன அது? 'சாகும் நேரம் தூங்கிவிடும்...'
உணர்வு மெல்ல அடங்க. என் இடம் நோக்கிக் கை
குவித்து கண் வழியே மன்னிப்பு கேட்பாய். உன்னால்
பேச முடியாது. எழுந்து வர முடியாது. 'நானே
நாயாய்க் கிடந்தபடி.'

சத்தி, மன்னிப்பு கேட்கிறாயா...என் ப்ரேயஸைத்
தடுத்து விரட்டிக் கத்தியதற்கு மன்னிப்பு கேட்கிறாயா...?
இரண்டாய் பிளவுபட்டிருக்கிறேன் என்கிறாயா...மனசை
யும் புத்தியையும் ஒன்றாக்குவதுதானே ப்ரேயர்! உணர்வு
மூன்றாவது புத்தி பலதனைச் சேமித்து அமைதியாவதுதானே

வழிபாடு. உனக்கு நீயே உரக்கப் பேசிக் கொள்வதுதானே
ஜெபம். உனக்குப் பதில் நான் பேசினேன் சத்தி. நான்
உரக்க ஜெபம் செய்தது உனக்குள்ளே நீ பேசுவதைத்
தூண்டத்தானே தோழா.

'நான் யாரிடம் பேச முயன்றாலும்,
இந்நாய்களின் ஊளை தடுக்கிறது..'

சத்தி, நீ எங்கே ஒளிந்துகொண்டிருக்கிறாய்? இந்த
நாய்கள், நீ இல்லை என்று தெரிந்துவிட்ட பிறகு ஏன்
சும்மா இருக்கிறாய்?''

'நானோ நாய்களின் காலின் கீழ்'

உனக்குப் புரிந்துவிட்டது சத்தி. ''என்னால், என்
மனசால் முடியாது இவற்றை அடிக்க' என்று உனக்குப்
புரிந்துவிட்டது என்னால் முடியாது என்கிற நிலைவின்
விளைவுதானே இறை நம்பிக்கை நான் பலவீன
என்கிற நிலை புரியும்போதுதானே கடவுள் வழிபாடு.
சத்தி, நீ நல்லவன். ஆனால், உன் நாய்கள் உன்னைத்
தடுக்கின்றன. நீ வெளிவர முயன்றாலும் மறிக்கின்றன.
மற்றவர்... வேறு மனிதர் உன் துணைக்கு வந்தாலும்
விரட்டுகின்றன. இது தெளிவு சத்தி இப்போது அவரைக்
கூப்பிடு. மனிதயத்தனம் முடியாது என்கிறபோது
கடவுளை நினை. கடவுள் என்பது நம்பிக்கை சத்தி.
நான் நலமாவேன் என்கிற நம்பிக்கை. இந்தநம்பிக்கைக்கு
எது ஆதாரம்? நலமானவர்தான் ஆதாரம். நலமானவர்
யார்? தெளிவோடு இருப்பவர். அவர் பேச்சு தான் தூது.
இறைவாக்கு. யார் அது? எனக்குத் தெரிந்து ஒருவர்
உண்டு. முப்பத்திரண்டு வயது அவருக்கு. இன்றும் இப்
போதும் இனி எப்போதும். எத்தனையோ பேர் மடக்கி
மடக்கிக் கேட்டார்கள்—என்னென்னவோ கேட்டார்கள்.
எல்லாவற்றுக்கும் பதில் சொன்னார். ஒரு காசை நீட்டி
அவரிடம் கேட்டார்கள். 'இதை நான் அரசனுக்குக்
கொடுக்கவா, கடவுளுக்குக் கொடுக்கவா...?'-தந்திரமாய்க்

கேட்டார்கள். கடவுளுக்குக் கொடு என்றால், 'அரசனுக்கு வரி தரவேண்டாம் என்கிறான்' என்பார்கள். பாஜ துரோகி என்கிற பட்டம் வரும். அரசனுக்குக் கொடு என்றால், 'கடவுளை இந்த யூதன் மதிக்கவில்லை' என்பார்கள். நாத்திகன் என்று பேசப்படும். அந்த யூத மகன் சொன்னார்...

'அரசனுக்குக் கொடுக்க வேண்டியதை அரசனுக்குக் கொடுங்கள். கடவுளுக்குக் கொடுக்க வேண்டியதைக் கடவுளுக்குக் கொடுங்கள்.'

உனக்குப் புரிகிறதா சத்தி வாழ்வின் கடமைகளில் ஒன்றும் நழுவாது. அந்தக் கடமைகளில் ஈடுபடும்போதே அதற்கும் மேலானதேடலோடு இருப்பது. இங்கேசொல்லப் படுவது புரிகிறதா சத்தி கடமைகளைச் செய்யாதிருத்தல் வாழ்க்கையில்லை. அதே நேரம் கடமைகள் மட்டுமே வாழ்க்கையில்லை. தேடல்தான் வாழ்க்கை.

தேடல் என்பது நம்பிக்கையோடு சம்பந்தப்பட்டது. அந்த நம்பிக்கையே இறை வெளிச்சம் வெற்று நம்பிக்கையா கடவுள் என்று கேள்வி வரும் என்ன ஆதாரம் என்று புத்தி கேட்கும். நானே என்று சொல்கிறார் தெளிந்தவர், எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்கிறார் அவரிடம் கேட்கப்படாதலை இல்லை. அவர் பதில் தராது போனதும் இல்லை. உன் அவநம்பிக்கைதான் நாய்களை அடித்துத் துரத்த மறுக்கிறது. நம்பிக்கையைக் கூப்பிடு. இறைமகன் வருவார். தான் நம்பியதைச் சொல்வார் நான்உன் பொருட்டு அவரைக் கூப்பிட்டேன். உன் செவிவழியே அவருக்குப் பாதை போட்டேன்.

செத்துப் போகும்போது நல்லவன் ஆவேன் என்கிறாயா...சாவு ஓர் உருமாற்றம். உடல் உருமாற்றமடைவது. நிச்சயம் அதில் மரணம் இல்லை சத்தி. ஆன்மா அழிவதுதான் மரணம், பாவத்தின் சம்பளம் மரணம். கொடிய செயலின்விளைவு ஆன்மாவின் அழிவு. சத்தி நீ செவிகளை திறந்துவை போதும், நான் காதுபட பேசியது

தானே உனக்கு எரிச்சல். இதோ இப்போது சத்தமற்றுப் போகிறேன். கடிதம் சத்தம் போடுமா? கவிதை கூச்சலிடுமா? ஆனால், நீ மனச்செவியை மூடாதே. உடம்பின் காதுகளைப் பொத்திக்கொண்ட சத்தி. உன் உள்ளே இருக்கும் காதுகளை மூடாதே. உனக்குக் கவிதை பிடிக்கிறது. நீ எழுதியதுதான் கவிதை. இதோ நானும் கவிதை சொல்கிறேன். உன் மொழிகளிலே நானும் பேசுகிறேன். புரிகிறதா கேள்...''

பிற்பகல் மூன்று மணிக்கு வந்த கடிதத்தை. இரவு பத்து மணிக்கு ட்யூட்டி முடிந்து வீட்டுக்கு வந்து படித்து விட்டு பேனாவும் பேப்பருமாய் டைனிங் டேபிளில் ஜார்ஜினா உட்கார்ந்தாள். கண் மூடினாள் ஜெபம் செய்தாள்.

'கடவுளே, உம்மை இலருக்குப் புரியும் வண்ணமாய் எழுத எனக்கு அருள் தாரும். நானும் ஏதும் அறிகிலேன். ஏசுவே. உம் வாழ்க்கையே எனது பலம் உம் சொல்லே என் வழி. உங்கள் விளக்கமே என் வெளிச்சம்.' பேனாவைப் பிரித்தாள். உள்ளே அவன் தொனியிலேயே கவிதை பொங்கிற்று.

'வெள்ளை அங்கி, சுருள் தாடி
ஒரு யூதன் வந்தான் இவ்வுலகில்
வெளிச்சம் மிகுந்த வானத்தின்
ஒளியைத் தேக்கி தன் முகத்தில்
மெள்ள நுழைந்தான் பூவுலகில்
கன்னி மேரியின் சிசுவாக,
உலகம் முழுவதும் பல நாய்கள்
மறித்துக் கேட்டன அவனைதரே,
'எதற்கு வந்தீர் இவ்விடத்தில்,
என்ன வேலை மானுடத்தில்?'
மெள்ள சிரித்து யூதமகன்
கரத்தை நீட்ட அலை விலகும்.

'மனிதன் எங்கள் முழுப் படைப்பு
மக்கள் எங்கள் குழந்தைகள்.
உருவம் அற்ற ஒளிப்பிழம்பாய்
இருக்கும் எங்கள் தேவபிதா
உருக்கிச் செய்த மானுடத்தை
நீங்கள் ஆள விடமாட்டேன்.
உலகம் என்னும் ஆலயத்தில்
ஒவ்வொரு மனிதரும் தீபங்கள்.
உருட்டிக் கவிழ்க்க நீர் முயன்றால்
உங்களைச் சும்மா விடமாட்டேன்.
உரத்துக் கத்தின அந்நாய்கள்.
பயந்து நடுங்கின தீபங்கள்
நாய்களை உறுத்து பார்த்தபடி
மெள்ளத் திறந்தான் ஆலயத்தை.
இடுப்புக் கயிற்றை அவிழ்த்தெடுத்து
சொடுக்கிப் போட்டான் புவியதிர—
ஓடிப்போச்சு நாயெல்லாம்,
தீபங்கள் எல்லாம் மகிழ்ந்தாட.
ஒற்றைத் தீபம் தலை வணங்கி,
யூதனை நோக்கி வினவியது...
'என்னைப் படைத்த கடவுள்தான்,
நாயைப் படைத்தான் இவ்வுலகில்.
எதிரெதிர் விஷயம் படைத்துவிட்டு,
எதற்கு வந்தீர் விளையாட?'
—துக்கத்தோடு புலம்பியதை,
குனிந்து பார்த்தான் கனிவாக.
மெள்ளத் திரியைத் தூண்டிவிட்டு,
யூதன் சொன்னான் பொதுவாக...
'நாய்கள் குரைக்காதிருந்திருப்பின்,
எம்மை விரும்பி அழைப்பீரோ?
இருளே இங்கு இல்லையெனில்,
உமக்கு ஏதும் மதிப்புண்டோ
விருப்பம் என்பது வார்த்தைதான்

என்ன என்பது முதல்கேள்வி
புரியாதிருப்பின் தேளுங்கள்...
கேட்டவர்தானே வரம் பெறுவர்'
தீபங்கள் வணங்கின தலை குனிந்து—
'ஏசு ஏசு' என்றபடி
என்னுள் கேட்டதை நான்
சொன்னேன்.
''நீயும் கேளேன் என் தோழா.

எழுதி முடித்ததை உரக்கப் படித்தாள். சத்திக்குப் புரியுமா என்று யோசித்தாள். 'நான் ஏன் சத்தி மீது அக்கறைப் படுகிறேன்...ஏன் சத்தி வேதனைக்குத் தவிக்கிறேன்...ஏன் இவ்வளவு விரைவில் அதே மாதிரி கவிதை எழுதுகிறேன். ஏன்சொல்லித்தர ஆசைப்படுகிறேன். சத்தி, வினுவின் சிநேகிதன் என்பதாலா? வினுவைப் பற்றிப் பேசும் என்கிற எண்ணமா? வினுவையே மறுபடி பார்க்கிற உணர்வா? என்னமோ தெரியவில்லை ஆனால், இது சந்தோஷமாக இருக்கிறது. வினுவின் நண்பன் வேதனைப்படுகிறபோது, என் முயற்சி அதைத்தீர்க்கும்... முயற்சி பெரிய சந்தோஷத்தைக் கொடுக்கிறது.'

''ஆனா, ஏ கிளாஸா வந்துடுச்சு கவிதை''—வாய் விட்டுக் கூவினாள்.

''என்ன கவிதைக்கா?'' — அருகே குரல் கேட்டது. சுளீரென்று பயம் தாக்க, எழுந்து நின்றாள். சின்னராசு பல் தெரிய சிரித்தான்.

''சே. நீயா?''

''என்னக்கா, பயந்துட்டீங்களா?''

''சரியான மல்லாட்ட பயிறுடா நீ. ராத்திரி திடுதிப்புன்னு வந்து 'யக்கா'ங்கற...உதை வாங்கினேல்லநேத்து... மறுபடி ஏன் வந்தே.''

''ஸ்டீபன் சார் காலையில என்னை இங்கே அழைச்சுட்டு வந்தார்... 'இவன் எனக்குத் தெரிஞ்ச பையன்தான்;

அடிக்க வேணாம்னு இங்கே எல்லார்கிட்டயும் சொன்னார்...''

''அவரை நீ எப்போ பார்த்தே...''

''நேத்து அவர் குவார்ட்டர்ஸ்லே போய் பார்த்தேன்...இங்கே எனக்குத் தர்ம அடி போட்டது. நீங்க சாப்பாடு போட்டது பத்திச் சொன்னேன்.''

''என்ன சொன்னாரு''

''திட்டினாரு. நொட்டுன்னு ஒரு குட்டு வெச்சாரு, 'வாடா கூட'ன்னு காலையில இங்கே கூட்டிட்டு வந்து வாட்ச்மேன்கிட்ட, செய்யூரிடி ஆபீஸர்கிட்ட பேசினாங்க. ராத்திரி அங்கே லாரில தண்ணி எடுத்தேன். பதல்ல இங்கே பம்ப்புல தண்ணி அடிச்சேன். நேத்து தலையில அடிச்சவரு வீட்டிலேயே சோறு போட்டாங்க.''—மறுபடி பல் தெரிய சிரித்தான்.

''ராத்திரி சாப்பிட்டியா?''

''நேத்து லாரி தண்ணி எடுக்கறப்ப தடிமனா ஒரு ஐயர் வீடு, அடுத்த குவார்ட்டர்ஸ்...அங்கே போட்டாங்க மோர் சாதம், கத்திரிக்கா குழம்பு.''

''எதுக்கு இங்கே வந்தே...?''

''காலையில வந்து தண்ணி அடிக்கணுமாம். அப்போ தண்ணி நல்லா வருமாம்.''

''வேலைல சேர்ந்துட்டியா...?''

''தெரியலை வாடான்னாங்க. மணி என்னாக்கா?''

''பன்னெண்டு இருக்கும்.''

''தூங்கலையாக்கா?''

''தூக்கம் வரலடா...''

''கவிதை எழுதினீங்களா... நான்கூட எழுதுவேன்.''

''அடடே...!''

''நெசமாக்கா...''

''சொல்லு பார்ப்போம்...''

அவன் பல் தெரிய சிரித்தான்.

''சொல்லுடான்னா...''—செல்லமாய் அதட்டினாள்.

''ஒரு காட்டருவி கரையெழுப்பி
நதியாகப் போச்சு.
இது மதுரைக்குப் போகுதென்று
மாமன் வந்து சொன்னார்...
காட்டு நதி கரை வழியே
மதுரைக்குப் போனேன்.
வழியெங்கும் ஊர் முட்ட
திசை மாறலாச்சு,
ஊர் முழுக்க வாய் விலிக்க
மதுரை வழி கேட்டேன்.
கால் பொளிந்து கன்றிவிடும்
தார்சாலை சொன்னார்.
தார்சாலை நதி வழியே...
மதுரைக்கு வந்தேன்...
''என் காட்டருவி மதுரையிலே
காணாமல் போச்சு.''

''ச்சே, கிரேட்டரா...கை கொடு!''

''அவன் வெட்கத்துடன் பின்னடைந்தான்.

''கடவுள் எல்லாருக்கும் அறிவு கொடுத்திருக்காரு. சின்னராசு. நாமதான் பயன்படுத்திக்கறதில்லை பயன் படுத்தறவனைப் பாராட்டறதில்லை. ரொம்ப நல்லா ருக்குடா கவிதை''

''நீங்க எழுதினது படிங்க அக்கா...''

''உன்னுது மாதிரி இல்லடா. இது வேற.''

''படிங்களேன். கேட்போம்''

''தேவி பண்ணக்கூடாது.''

''எப்படிக்கா... என்னைவிடப் படிச்சவங்க நீங்க... உங்க நல்ல மனசுக்கு நீங்க நல்லாதானே எழுதுவீங்க...''

''அதெப்படிடா?''

''கத்தி எல்லாரும் மொட்டு மொட்டுன்னு அடிச்ச போது என்னை இழுத்துட்டு வந்து எனக்குச் சோறு போட்டீங்களே...''—அவன் உதடு துடிக்கப் பேசினான். அவன் கண்களில் நீர் திரள்வது தெரிந்தது. ஜார்ஜினா இவனிடமும் ஒரு சிநேகம் உணர்ந்தாள்.

''ச்ச... போடா... கவிதை படிக்கிறேன் கேளு.''

படித்தாள்.

''ரொம்ப நல்லா இருக்குக்கா.''

''என்னா புரிஞ்சுது?''

''உலகத்துல நல்லதும் உண்டு— கெடுதலும் உண்டு. நாம நல்லது வேணும்னு நினைக்கணும். கெட்டது நினைக்கக் கூடாது.''

''எப்படித் தெரியும்—ஒரு விஷயம் நல்லது கெட்டதுன்னு?''

''அதான் சொல்லிட்டீங்களே. புரியாதிருப்பின் கேளுங்கள்...கேட்டவர் தானே வரம் பெறுவர்.''

''கேட்டவர், தானே இல்லடா. கேட்டவர் தானே... சேர்த்துச் சொல்லணும்.''

''இல்லேக்கா. கேட்டவர், தானே...அதாவது தானாய் வரம் கிடைக்கும்.''

''சின்னராசு, நீ எங்கேயோ போகப் போறடா...''

''இல்லேக்கா. இங்கே கொஞ்சம் இருந்துட்டு ஊருக்குப் போகப் போறேன். காலையில உங்க வீட்டுக்கு ஏதாவது வேலை செய்யணுமா?''

''வேணாம்பா. உன்னை மாதிரி கவிஞனை வேலை வாங்கக்கூடாது.''

சின்னராசு சிரித்தான். ''கவிதை எழுதறதுக்கு நல்ல மனசு போறுங்க. சாப்பிடறதுக்கு எதுனா வேலை வேணுமே?''

இப்போது ஜார்ஜினா சிரித்தாள். ''சரி தர்றேன். காலையில கூப்பிடு.''

அவன் காலையில கூப்பிடவில்லை. ஷோபனா வீட்டில் பெருக்கிக் கொண்டிருந்தான்.

20

''ஏண்டா! எங்க போய் தொலைஞ்சே...? லொங்கு லொங்குனு பத்து தலவலை தண்ணி தூக்கித்தே, ஒரு வாய் காபி கொடுக்கலாம்னு கார்த்தால தேடு தேடுனு தேடினேன். வேற எங்கியாவது வேலை பண்றியா?''

''இல்லம்மா!''

''எங்க வீட்ல வேலைக்குச் சேர்ந்துடறியா!''

அவன் பேசாதிருந்தான். தீர்மானம் செய்யத் தெரியாது இருந்தான்.

''லற்புறுத்தலை. ஐயோ பாவம்! சாப்பாட்டுக்குக் கிடந்து அல்லாடறியேன்னுதான்...''

''சும்மா இரும்மா, தம்பி, உன் பேர் என்ன?'' ஷோபனா உள்ளே புகுந்தாள்.

''சின்னராசுங்க.''

''மாசம் நாப்பது ரூபா சம்பளம்...காலைல காபி டிபன், ராத்திரி சாப்பாடு.''

''நாப்பது ரூபாயா, சோறு போட்டா...?''—அம்மா கூவினாள்.

''அதுக்குக் குறைஞ்சு கிடைக்காதும்மா, என்னப்பா சொல்றே?''

''சரிங்க, என்ன வேலை?''

''தண்ணி எடுத்துக் கொடு. கூடமாட அம்மாவுக்கு ஒத்தாசையா இரு அப்பாவுக்குப் பகல்ல சாப்பாடு கொண்டு போ. முக்கியம் தண்ணி.''

''சரிங்க ஆனா...''

''என்ன ஆனா?''

''லேடீஸ் துணி தோய்க்கமாட்டேன்.''

''வேண்டாம். பாத்திரம் தேய்க்க, துணி தோய்க்க வேலைக்காரி இருக்கா. ஒரு ஜாக்கிரதைக்குத்தான் உன்னை வெச்சுக்கறது!''

''சரிம்மா!''

''பெருக்கலாமோன்னோ இவன்?''—அம்மா கேட்டான்.

''டேய், பெருக்குடா விட்டை''—ஷோபனா உத்தரவிட்டாள்.

பெருக்கும்போது சின்னராசுவுக்கு ஜார்ஜினா ஞாபகம் வந்தது. காலையில் ஆறு மணிக்கு யாரோ தொட்டு எழுப்பும் போது ஜார்ஜினாதான் என்று நினைத்துக் கண் பிரியும் முன் ''வணக்கம்மா'' என்றான்.

''உன்னை எங்கெல்லாம் தேடறது...வீட்டுக்கு வா!'' ஜார்ஜினா வீட்டு வாசலில் ஷோபனா நின்றிருந்தாள்.

''எங்கே வரணுங்க?''—தூக்கம் கலையாமல் கேட்டான்.

''ஸ்டீபன் வரச் சொன்னாரு, வீட்டுக்கு வா''

''சரிங்க.''

ஷோபனா சைக்கிளில் ஏறிப்போய் விட்டாள், பின்னாலேயே நடந்து வழியில் ஒரு பைப்பில் தண்ணீர் அடித்து முகம் துடைத்துக் கொண்டு ரயில்வே லைன் பக்கம் உள்ள குட்டையில் ஒதுங்கிவிட்டு வர,

''எங்கேடா போய்த் தொலைஞ்சே?''— ஷோபனாவின் அம்மா கத்தினாள். ஏன் இவர்களுக்கு மற்றவர் கஷ்டமே புரியவில்லை. பெருக்கித் தண்ணி எடுத்து முற்றும் வேலை.

காலையில் காபி டிபன், இரவில் சோறு. பிற்பகலில் ஜார்ஜினா வீட்டுக்குப் போயிடலாம். வீட்டில் அலர்கள் இருந்தால் வேறு சில கவிதைகள் சொல்லலாம். 'காட்டை விட்டு ஒடிப்போன சின்ன முயல் ஒன்று...' என்கிற தன் கூத்து நாடகம் நடித்துக் காட்டலாம். பத்தாவது படிக்கும் போது இவனே எழுதி இவன் மட்டுமே நடித்து இரண்டாவது பரிசு வாங்கின நாடகம் அது. பத்து நிமிடத்தில் ஒரு கதை சொல்லி ஒரு படிப்பினைச் சொல்லி தனி ஆள் நாடகம் இதற்குத் தான் முதல் பரிசு கிடைத்திருக்க வேண்டும். ஆனால், எட்டாம் வகுப்புப் பெண்கள் நடனமாடிய வள்ளுவர் கண்ட வாழ்க்கைக்கு முதல் பரிசு கொடுத்து விட்டார்கள். ''ஏன் சார்?'' என்று கேட்டதற்கு, 'நீ என்ன, வள்ளுவரை விடப் பெரிய ஆளா?' என்று கேட்டார்கள். இந்தப் போட்டியில் வள்ளுவரா வந்து கலந்து கொண்டார். திருக்குறளுக்குத் தொம் தொம் என்று நடனமாடிவிட்டு முதல் பரிசு வாங்கிவிட்டார்கள்.

''காட்டை விட்டு ஒடிப் போன
சின்ன முயல் ஒன்று,
காத்துப் போன பாதையெல்லாம்
போக முடிவு செய்து...''

—பெருக்கும்போது உள்ளே பாட்டு பொங்கிற்று. ஜார்ஜினாவுக்கு இதை நடித்துக்காட்டவேண்டும். பிற்பகல் போகலாமா? என்னவோ அந்தம்மாவைப் பார்த்தால் மனசுக்கு இதமாக இருக்கிறது. 'கவிதை எழுதப் படிப்பு வேண்டாம், நல்ல மனசு வேண்டும்' என்று சொன்னார்கள். நல்ல மனசு இருக்கிறவர்களால்தான் இப்படிச் சொல்ல முடியும். நீள கவுனில் கொல்லைப் படியில் நின்ற போது தேவதை மாதிரி இருந்தார்கள். சரியான மல்லாட்டப் பயிருடா நீ என்றவர்களே, 'ரொம்ப கிரேட்ரா நீ என்றார்கள். திருத்தம் கவிதையில் சொன்னதும் ஏற்றுக் கொண்டார்கள். கொஞ்சம் தாமதித்திருந்தால் அங்கேயே வேலை கிடைத்திருக்கும்.

என் இங்கு வந்தேன் என்று புரியவில்லை. காலையில் எழுப்பி 'வா' என்றதும் வந்து விட்டேன். காபி கொடுக்கத் தேடினார்களாம். இன்னும் கொடுக்கவில்லை. இனிமேல் கொடுப்பார்களா, தெரியவில்லை. பசிக்கிறது.

''காட்டை விட்டு ஓடிப்போன
சின்ன முயல் ஒன்று
கட்டாந்தரை பெருக்கி விட்டு
காபிக்காக நின்று...''

-புதிதாய் பாட்டு ஒடிற்று.பாட்டு சிரிப்பு கொடுத்தது.

''என்னடா சிரிச்சுக்கறே?''—ஷோபனா கேட்டாள்.

''ஒண்ணுமில்லேம்மா!''

''ஏன் அங்கே படுத்திருந்தே?''

''எங்கேம்மா?''

''இந்தியன் ஏர்லைன்ஸ் குவர்ட்டர்ஸ்ல!''

''சும்மா பேசிட்டிருந்தேன் ராத்திரி''!

''யாரோட!''

''ஏரோப்ளேன் செக்யூரிடி ஆபீஸ்ல வேலை செய்யறாங்களே ஜார்ஜினா அம்மா, அவங்க வீட்டுல.''

ஓ... நேற்று உறுத்துப் பார்த்த பெண் பிள்ளையா... ஸ்டீபன் அறிமுகப்படுத்தின லேடியா...?

''என்ன பேசினே...''

''சும்மா, நாட்டு நடப்பு...''

''எப்ப?''

''ராத்திரி பன்னண்டரை இருக்கும்.''

''ராத்திரி பன்னண்டரை மணிக்கு நாட்டுநடப்பா... அப்புறம்...?''

''அங்கனயே தூங்கிட்டேன்

''எப்படித் தெரியும் அவங்கன?

''புல்லு வெட்ட சொல்ல மாட்டினேனா... அப்போ அவர் ஆபீஸ்ல கேஸ் நடந்துச்சு. அப்போ பார்த்தேன். ஸ்டீபன் சார் சினேகிதம் போல அவரு அங்கன இருப்பாருன்னு போனேன்.''

''எவரு?''

''ஸ்டீபன்.''

''எதுக்கு?''

''ஸ்டீபன் வேலை வாங்கித் தரேன்னாரு.''

''அப்புறம்?''

''அங்கே வாட்ச்மேன் புடிச்சு அடிச்சான் இந்தம்மா தான் தடுத்து 'எனக்குத் தெரியும்'னு சொல்லிச் சோறு போட்டாங்க.''

''என்னடா படிச்சிருக்கே?''

''எஸ்எஸ் எல் சி.''

''பிச்சை எடுக்க வெட்கமாயில்லை... உழைச்சுச் சாப்பிட வேண்டியதுதானே...''

''பிச்சை எடுக்கப் போறேன் என்று சபதமா... இப்போது ஊருக்குப் போனா ராஜா மாதிரி கால்மேல் கால் போட்டுக் கம்பஞ்சோறு சாப்பிடலாம். காட்டுக் கோழியைப் பிடித்து உரித்து முழுசாய் வேகவைத்து மசாலா அடைத்து காரத்தில் கண்ணில் நீர் வடிய நெற்றி வியர்க்கச் சாப்பிடலாம். வேலையா இல்லை கிராமத்தில். களை பிடுங்க இறங்கினால் நான்கு நாட்கள் ஆகும், தென்னை மரம் கழிக்க ஆரம்பித்தால் ஒரு வாரம் ஆகும், ஒய்வு நாள் எப்பது கூட வேலைநாள்தான் மீன்பிடிக்கிற வேலை... தூண்டிலும் முள்ளும் மண் புழுவும் எடுத்து, கோலணமும் கூடையுமாய் உட்கார்ந்தால் வீட்டில் ஆளுக்கு இரண்டு மீன்கள் குழம்பில் ஊறப் போட்டுக்

கிடைக்கும். ஒரு அலுப்பில்தான் கிராமம் விட்டு வெளி யேறிப் பட்டணம் வந்தது'

''போகட்டும்மே விடு. செருப்படி பட்டு, பட்டணமா சீ தூறு போறவரைக்கும் சுத்தட்டும். அப்புறம் போயிட்டு வாடா ஒரு நடை'ன்னாக்கூட மாட்டேன்னுடுவான். போய் சுட்டுக்கிட்டு வரட்டும், விடு.''

வந்த நாலாம் நாளே கூட்டுவிட்டது. அவ்வளவு பெரிய எரோப்னேனை வழி மறித்தானென்று தலையில் அடித் தார்கள் பூட்ஸ் காலால் மிதித்தார்கள். ஆள் விசாரிக்கப் போன இடத்தில் திருடன் என்று மடக்கினார்கள். ஆனால், அதே கூட்டத்தில்தான் குணசேகரனும், ஸ்டீப னும் ஜார்ஜினாவும் இருந்தார்கள். குணசேகரன் இங்கிலீஷில் பேசினாலும் ஆதரவாகப் பேசினதுபுரிந்தது. சட்டென்று ஐந்து ரூபாய் கொடுத்த ஸ்டீபனைப் பிடித் தது. ஜார்ஜினா அக்காதான் கிரேட். 'இவன் புல்லு வெட்டற பையன். எனக்குத் தெரியும் விடுங்க.' அதே மாதிரி ஷோபனாகூட சினேகமாக முடியும். ஷோப னாவைப் பார்க்க மலைப்பாய் இருக்கிறது.

ருக்குமணி, அன்னக்கிளி, சாயிரா எல்லாரும் இவன் கூட எஸ். எஸ் எல் சி வரை படித்தவர்கள்தான். அன் னக்கிளி தை கொள்ளாத உருவம். பாவாடை நுனியை இடுப்பில் செருகிக் கொண்டு நூறு மீட்டர் பந்தயம் ஓடி வரும்போது பல பையன்கள மயக்கம் போட்டார்கள். ருக்குமணிக்கு சரோஜாதேவி என்று ஒரு செல்லப் பெயர். எது கேட்டாலும் 'ஹாங்...ஹாங்' என்று இழுக்கும். கேள்வி கேட்டால் 'ஹூஹூங்...' என்று பதில் சொல்லும் மூளை பேசும். சொக்கப் போவார்கள். சாயிராபேசம் கனவுக் கண்ணி.

ஆனால், ஷோபனா வேறு விதம். பார்க்கப் பார்க்க ஆச்சரியம். இங்கிலீஷ் தூள் பரப்புகிறது. தலையைச் சாய்த்துக் காது குழல் அசைய ஆங்கிலம் பேசுகிற போது, இவனுக்குப் பதில் பேச மாதிரி என்னைக்கு இங்கிலீஷ் கற்றுக்கொள்ளப்போகிறோம்என்றுதோன்றும் கொஞ்சக் கனவுக் கண்ணி.

கால், க்யூடெக்ஸ் நகங்கள், வெள்ளை வெளேரென்ற தோல், உள்ளங்காலில் அழுக்கே இல்லாத இளஞ்சிவப்பு கால் மேல் கால் போட்டு உப்புமா சாப்பிட்டபடி காலை டி.வி. நியூஸ் கேட்கிறது. அருகே கடந்து போனால் ஏதோ ஒரு நறுமணம் தடவிப் போகிறது. தலையா உடம்பா. உடையா தெரியவில்லை. எதில் நறுமணம் என்று புரிய வில்லை.

இவளுக்கும் கவிதை சொல்லிக் காட்டலாம். கவிதை சொல்கிற அளவுக்குத் தமிழ் தெரியுமா, தெரியவில்லை. காலை பேப்பர் படித்துவிட்டு, 'இதுக்கு என்ன அர்த்தம் ஷோபனா?' என்று அப்பா நீட்டுகிறார். பளிச்சென்று விவரித்துச் சொல்கிறது. இங்கே இருந்தா இவங்ககிட்ட இங்கிலீஷ் கத்துக்கலாம் வீட்டுக்குப் போய் அப்பாலிடம் பேசலாம்.

'களுதை இனிமே பூட்ஸ் மாட்டிக்கிட்டுத்தான் களை புடுங்குவீங்களோ தமிழ்லபேசுடா.' அப்பாகூச்சலை ரசிக்க லாம் 'ஏண்டா, துவரம்பருப்புக்கு என்ன இங்கிலீஷ்ல... அரிவாள்மணைக்கு...பெருஞ்சீரகத்துக்கு...? அம்மா கேட் டால் பதில் சொல்லலாம்.

ஒட்டடை அடித்து, பெருக்கி, ஈரத்துணி போட்டுத் தரை துடைத்து நிமிரும் போது இன்னும் அதிகம்பசித்தது.

''நான் போய் ஒரு டீ குடிச்சிட்டு வரேம்மா...'' என்றான்.

''சரி...'' என்றார்கள் காபி பற்றிப் பேசவேயில்லை. ஒருவேளை, ஒரு நாளைக்குத்தான் காபி பலகாரம் போலி ருக்கிறது. ஆனால், இப்போது பசிக்கிறதே.

ஸ்டீபன் வீடு கடக்கும்போது சின்ன சீழ்க்கை ஒலி கேட்டது. வா, வா என்கிற மாதிரி இரட்டை ஒலியாய்க் கூப்பிடுவது தெரிந்தது. திரைக்குப் பின் ஸ்டீபன் இருப்பது தெரிந்தது.

''குட்மார்னிங் சார்''—உரினான்.

''உள்ளே வாடா'' — அடிக்குரலில் அவசரமாய், அதட்டலாய் ஸ்டீபன் குரல் கேட்டது.

''குட்மார்னிங் சார்''—உள்ளே நுழைந்து மெல்லிய குரலுக்குச் சின்னராசு மாற்றிக் கொண்டான்.

''சேர்ந்துட்டியா?''

'எங்கே சார்?'

''எதிர் வீட்டுல வேலைக்கு...''

''ஆமா சார்...''

''வெரிகுட். அப்பப்ப நம்மளையும் கவனிச்சுக்க. உன்னை அங்கே வேலைக்குச் சொன்னதுயார் தெரியுமா?'

''நீங்களா சார்''

''ஆமா. அந்தப் பொண்ணு காலங்காலைல வந்து கதவு தட்டிச்சு. நம்ம பசங்கதான் யாரோனு 'சமின்'னு சொன்னேன். பார்த்தா இது...ஒரே கலாட்டா ஆயிடுச்சு, போ.''

''ரொம்ப தாங்க்ஸ் சார்.''

''அதெல்லாம் வேணாம். எங்கே போற?''

''டீ சாப்பிட.''

''அப்போ ஒண்ணு செய் எனக்கு ஆறு இட்லி, ரெண்டு வடை. உனக்கு ஆறு இட்லி, ரெண்டு வடை...ரெண்டு காபி...ஸ்டேஷன் போய் வாங்கிட்டு வந்துடு...''

''எதுக்கு சார்.''

''உனக்குடா...''

''எனக்கு எதுக்கு சார்?''

''ஏன். நான் கொடுத்துச் சபப்பிட மாட்டியா? என் நம்பி சைக்கிள் எடுத்துக்க...வண்டி ஓட்டுவில்ல?''

விரல் வழியே சட்னி ஜலம் ஒழுக சின்னராசு இட்லிப் பொட்டலத்துடன் நுழைந்தபோது, ஸ்டீபன் எதிர் வீட்டையே திரைக்குப்பின் நின்று பார்ப்பது தெரிந்தது.

சாப்பிட்டுவிட்டு இலைகளை அள்ளிப் பின்பக்கம் வீசி விட்டு காபி ஊற்றி இருவரும் குடித்தபின், சின்னராசு அங்கே சும்மா நிற்பதுபோல் உணர்ந்தான்.

'ஊம். டேய், ஷோபனா டிரஸ் செய்துக்கிடுச்சு. எங்கே போறதுனு புரியலையே. கொஞ்சம் இரு.'' மடமட லென்று பாண்ட் போட்டு, சட்டை 'இன்' பண்ணி, ''நகருடா...''— கண்ணாடி முன்னால் நின்றுவிட்டு, ஷூக்களைத் திணித்துக் கொண்டபோது ஷோபனா வெளியே வந்தாள். ''வா...வா...வெளியே வா...''—அடிக் குரலில் உறுமி, இரண்டுபேரும் வராந்தாவுக்கு வந்து கதவு பூட்டினார்கள்.

''ஹலோ!''—அவள் சிரித்தாள்.

'பையனைச் சேர்த்துக்கிட்டீங்களா? அவன்கிட்ட அதான் சொல்லிக்கிட்டிருக்கேன்.''

''ஸ்மார்ட்டா இருக்கான். நோ ப்ராப்ளம். டேய், அம்மா டிபன் காபிக்குக் கூப்பிடறாங்க. போ...''

''இல்லீங்க...நான்...''

'போடா, கூப்பிடறாங்கல்ல... பசிக்குதுன்னு சொன்னியே... பாவம், வயத்துக்கில்லாத ஓடி வந்திருக்கான்—ஊர் விட்டு. நாம பார்த்துப் போட்டாத்தான் உண்டு. போடா. நிக்கிறியே...காலேஜ் போறீங்களா?''

'இல்லீங்க. லிஸ்டில ரெண்டு இடம் போகணும். புக்ஸ் வாங்கணும்...''

'ஹிக்கின்பாதம்ஸ் பொங்களேன். எனக்குத் தெரிஞ்சவரு இருக்காரு.''

''அப்படிங்களா. வழிக்கின்பாதம்ஸ் எங்கே இருக்கு?''

''மவுண்ட் ரோட்டுலிங்க.''

சின்னராசுவுக்குப் புரிந்தது. அவன் கிராமப்புறத்தான். அங்கும் இது உண்டு. எல்லா இடத்திலும் உண்டு.

'பாக்கு வெச்சிருக்கியா மரகதம்? வெத்திலை பாக்கு வாங்கினேன்... பாக்குப் பொட்டலத்தை எங்கே வுட்டேனோ தெரியலை...'

மரகதம் கருக்குப்பை எடுத்துக்கொடுக்க, 'வெத்திலை போட்டியா...' தனதளக்கிற வெற்றிலை பார்க்க மரகதத்துக்கு வாய் ஊறும். உட்கார்ந்து பாக்கு துண்டித்து, வெற்றிலை தடவி, புலகயிலை கசக்கி, ஒரு அதக்கு அதக்கின சுகத்தில் என்னென்னவெல்லாமோ பேசமுடியும். பேசுவது கேட்டிருக்கேன்.

இரண்டுபேரும் நடந்துபோக, சின்னராசு ஜார்ஜினா வீட்டுக்குப் போனான்.

''எங்கே போயிட்டீங்க கவிஞரே...வாங்க உள்ளே'' —அழைப்பு வந்ததும் பல் தெரிய சிரித்தான்.

''ஒரு சின்ன ஹெல்ப் பண்றியா சின்னராசு?''

''என்னங்க?''

''மோட்டார் சைக்கிள் ஒண்ணு விழிக்குப் போவுது. இங்க ஒரு ஆள் அடிபட்டாரு ரொம்பிங்கிட்ட. அவரு வண்டி அது. அது பின்னால உட்கார்ந்துபோய், அவர் கிட்ட இந்த லெட்டர் கொடுத்துட்டறியா?''

''ராத்திரி தண்ணி எடுக்க வந்துடலாம்களா?''

''சாயந்திரம் வந்துடலாம். மூணு மணிக்கு இங்கு வந்துடலாம்.''

''சரிக்கா.''

கான்ஸ்டபிள் நாகராஜன் வண்டி ஓட்ட, சின்னராசு பின்னால் உட்கார்ந்தபடி பட்டணத்துப்பரபரப்பை அனுபவித்தபடி நியாகராயநகர் டெர்மினலில் இறங்கினதும் சந்தியிடம் கான்ஸ்டபிள் சாவி கொடுக்கும்போது, வணக்கம் சொன்னான். ஜார்ஜினா கடிதம் நீட்டினான்.

21

இந்தப் பையனுடைய நல்ல அம்சமே அவன் சிரிப்புத்தான் என்று பார்த்ததுமே சந்திக்குத் தோன்றியது. முன்பின் பழக்கமில்லாதவரைப் பார்த்து இத்தனை வெள்ளையாய்ச் சிரிக்க எல்லோராலும் முடியாது.

''என்ன தம்பி?''

''ஜார்ஜினா அக்கா கடுதாசு கொடுத்தாங்க.''

''நீ யாரு?''

''என் பேரு சின்னராசுங்க குவார்ட்டர்ஸுல வேலை செய்யறேன்.''

''எந்த ஊரு உனக்கு?''

''தேனி பக்கம்.''

''தேனி...எங்கயோ கேட்ட பேரா இருக்கு... எங்கே இருக்கு தேனி...?''

''தேனி தெரியாதுங்களா? மதுரைப் பக்கம். அக்கா... கடுதாசு கொடுத்துட்டு உடம்பு விசாரிச்சுட்டு வரச் சொல்லிச்சு.''

''ஜார்ஜினாவுக்குத் தம்பி முறையா?''

''இல்லீங்க. அவங்க கிறிஸ்தவங்க. நாம இந்துங்க. அவங்க வீட்டுல வேலை செய்யறேன்.''

''நீ இந்துங்கிறியா?''

''ஆமாங்க...''

இடதுகை மணிக்கட்டு திருப்ப முடியவில்லை. கடிதம் கூடப் பிடிக்க முடியவில்லை. கவர் கிழிக்கக் கடிதம் கிழிந்துவிடும் போலிருந்தது.

''நான் கிழிச்சுத்தரட்டுங்களா?''—வாங்கி கவர் கிழித்தான். கடிதம் பிரித்துக் கொடுத்தான். கொடுக்கும்போது சிரித்தான்.

'வெள்ளை அங்கி, சுருள் தாடி ஒரு
யூதன் வந்தால் இவ்வுலகில்.'

தன்னைப் போலவே ஜார்ஜினாவும் கவிதை எழுதியிருக்கிறாள் என்று தெரிந்ததும் எவருமின்றி தனியே ஆழ்ந்து படிக்க ஆசைப்பட்டான் சத்தி.

''சரி...அப்போ...'' என்று பையனைப் பார்த்தான். ''உங்க உடம்பு விசாரிச்சுட்டு வரச் சொன்னாங்க...'' ''நல்லா இருக்கேன்னு சொல்லுப்பா.''

''காயம் ஆறிடுச்சுங்களா?''—மெள்ள மண்டைக் கட்டையும் புஜத்து பிளாஸ்டரையும் தொட்டுப் பார்த்தான். ''எதனா உங்களுக்குச் செய்யணுங்களா?''

''ஃப்ளாஸ்க் எடுத்துக்கிட்டுப் போய் காபி வாங்கி வர்றியா ரெண்டு பேருக்கும் சேர்த்து...''

சின்னராசு விழித்தான்.

''அட, வாங்கிட்டு வாப்பா. எதிரே ஓட்டல் இருக்குது. பார்த்துப் போ. டிராஃபிக் ஜாஸ்தி.'' அவன் கை கடிதத்தைப் பிரிப்பதும் மடக்குவதுமாக இருந்தது. படிக்கும் ஆவல் முகத்தில் தெரிந்தது ஃப்ளாஸ்க் எடுத்து சின்னராசு நகர்ந்ததும கவிதை பிரித்துப் படித்தான்

சுகமான ஆசிரிய விருத்தம். படிக்கப் படிக்கக் கண் செருகிற்று.

'நாய்கள் குரைக்காதிருப்பின்
எம்மை விரும்பி அழைப்பீரோ?
விருப்பம் என்பது வார்த்தைதான்
என்ன என்பது முதற்கேள்வி
புரியாதிருப்பின் கேளுங்கள்...
கேட்டவர்தானே வரம் பெறுவர்.
தீபங்கள் வணங்கின தலைகுனிந்து
'ஏசு ஏசு' என்றபடி.'

சட்டென்று துயரத்தில் விழிகள் நிலைகுத்தின. லெகு அருகே தலைமீது புடலைத் தலைப்பு போட்டுப் பிரார்த்தனை செய்த ஜார்ஜினாவின் முகம் நினைவுக்கு வந்தது.

'என்னுள் கேட்டதை நான்
சொன்னேன்.
நீயும் கேளேன் என் தோழா''

பளிச்சென்று கண்களில் நீர் முட்டிற்று. என்ன சொல்கிறாள்? ஏசுவை வணங்கு என்றா...அப்படித் தெரியவில்லையே...வன்முறைகள் அதிகமானால் தேவகுமாரன் வருவான் என்றா... வந்து விரட்டுவான் என்கிற தத்துவமா? கடவுள் சிந்தனை உன்னைக் காப்பாற்றும் என்கிற போதனையா?

'நாய்கள் குரைக்காதிருப்பின்
எம்மை விரும்பி அழைப்பீரோ?'

துன்பம் தாங்க முடியாதபோது கூப்பிடு. நான் வருவேன். உலகம் இருட்டாயிருக்கிறதென்றுதானே மனிதனைப் படைத்தேன் மனிதனுக்கு இருட்டு என்றால் என்னைக் கூப்பிடு ஒளியின் குமாரன் ஒளி உருவாய்உள்ள பிதாவின் திருமகன் வருவான்.

'விருப்பம் என்பது வார்த்தைதான். என்ன என்பது முதற்கேள்வி.' உனக்கு விருப்பமா, விடுதலைக்கு விடுதலை தேடுகிறாயா...? ஆம், எனில் வருவேன். இல்லை இதுவே தக்கமே சுகமென்று கருதுகிறாயா...போ. கேட்டவர் தானே வரம் பெறுவர். விடுதலை வேண்டும் என்று கேட்டவர்க்கல்லவா விடுதலை கிடைக்கும்.

நான் எதை மறுக்கிறேன். விடுதலையையா? இல்லை என் மனக் குழப்பத்தையா. 'நீயும் கேளேன் என் தோழா' தோழனா உனக்கு நான். இன்னமுமா? மேலும் குரைத்து உன்னைத் துரத்திய பிறகுமா? நாலு பேர் முன்பு அவமானம் செய்த பிறகுமா?

என்ன சொல்கிறாய் ஜார்ஜினா... என்னை மன்னித்து விட்டேன் என்றா...உண்மை தெரிய என்னை மன்னிப் பாயா ஜார்ஜினா... 'விஜுப்பா... விஜுப்பா' என்று புரண்டு அழுதபோது உன்னிடம் சொல்லியிருக்கவேண்டும் நான்...நானே வின்செண்டைக் கொலை செய்தேன் என்று சொல்ல முடியவில்லை. இன்று வரை யாரிடமும் சொல்ல முடியவில்லை. அன்று உள்ளே புகுந்த நாய்களை உனக்கு அடையாளம் தெரியவில்லை. ஏசு துரத்திவிடுவார் என்கிறாய் ஜார்ஜினா...கடவுளைக் கூப்பிடு என்கிறாய். கயிறு விசு...கடவுள் துரத்தி விடுவார் என்கிறாய். இல்லை... இல்லை ஜார்ஜினா அத்தனை சுலபமில்லை இது. கடவுள் வரமாட்டார்.'

சின்னராசு உள்ளே வந்தான்.

''காபி வாங்கியாந்துட்டேங்க.''

''உள்ளே கப்போர்ட்ல டம்ளர் இருக்கும் பார்.''

''கவிதை படிச்சிட்டீங்களா சார்?'' சிரித்தான்.

''என்ன?''

''அக்கா எழுதின கவிதை படிச்சிட்டீங்களா?''

''உம்... உனக்கு எப்படித் தெரியும்? பிரிச்சுப் பாத்தியா?''

''இல்லீங்க. நேத்து ராத்திரி அக்கா உட்கார்ந்து என் கிட்ட படிச்சுக் காட்டினாங்க.''

''எது?''

''வெள்ளை அங்கி சுருள் தாடி. ஒரு யூதன் வந்தான் இவ்வுலகில்.''

''உங்கிட்டயா...எப்போ...?''

''ராத்திரி பன்னண்டு இருக்கும், குவார்ட்டர்ஸுக்குப் போனேன் அக்கா கொல்லைப்புறம் உட்கார்ந்து இதை உரக்கப் படிச்சுக்கிட்டிருந்தது. எனக்கும் படிச்சுக் காட்டிச்சு.''

''என்னைப் பத்தி எதுவா சொன்னாங்களா?''

''இல்லியே. 'ரொளடிங்க அடிச்சுட்டாங்க. போய்ப் பார்த்து லெட்டர் கொடுத்துட்டு வா'ன்னுச்சு இது நேத்து எழுதின பேப்பருதான். நல்ல கவிதை சார் தத்துவமா எழுதியிருக்காங்க.''

''என்ன புரிஞ்சுது?''

''மனசு சொல்றாங்க சார் அக்கா.''

''மனசுன்னா?''

''உள்ளே ஆயிரம் நாயி...போட்டி, பொறாமை, பயம், சந்தேகம், கோபம், ஆத்திரம்...இதுல யாருக்குக் காயம்? மனசுல லெச்சிருக்கறவனுக்கு அவனை அது மடக்கிக்கிட்டு மிரட்டும் 'மனுஷாள் மனசு நான் இருக்கற இடம் நாய் இருக்கற இடமில்லை'ன்றாரு கடவுள். அப்போ மனுஷன்கேட்கறான்... 'நாயும் நீதானபடைச்சே என்னையும் நீதான படைச்சே...நீயே ரெண்டையும் படைச்சுட்டு விளையாடறியே'ன்றான் மனுஷன்''

''உம்.''

''என்னை நீ நினைக்கறதுக்குத்தான்டா. நாய் உள்ளே வந்தது. நாய் உன்னை மடக்கிக் கடிக்கலேன்னா என்னைக் கூப்பிடுவியா? கூப்பிடு. வரேன். நான் வேணும்னு ஆசைப்படு, வரேன்.''

''நீ படிச்சிருக்கியா சின்னராசு...?''

''எஸ். எஸ். எல். சிங்க.''

''ஏம்பா அப்போ கூலி வேலை செய்யறே?''

''எனக்கு விவசாயம் தேவில. மல்லாட்ட பயிரு போட்டிருக்கோம்.''

''சொந்த வீடா?''

''ஆமாம். சுத்தி கூரை, மேல கூரை''

''நிலம் சொந்தமா?''

''ஏதோ கொஞ்சம் இருக்குதுங்க.''

''வீட்டுல சண்டை போட்டு வந்துட்டியா?''

''இல்லீங்க. பட்டணம் பார்க்க வந்தேன். அப்படியே தங்கிட்டேன்.''

''தேடமாட்டாங்களா...?',

''சொல்லிட்டு வந்திருக்கேன்.''

''எதுக்கு சின்னராசு?''

''நாட்டுப்புறம் கஷ்டமா இருந்திச்சு. மனசுக்குப் புடிக்கலை. இங்கே வந்தேன். பல மனுஷாளுங்க பார்த்தேல் பேசிப் பழகினேன். அக்கா மாதிரி வராதுங்க. நூத்தில ஒண்ணு அக்கா.''

''எப்படிச் சொல்றே?''

''குவார்ட்டர்ஸுல வாட்ச்மேன் மடக்கி அடிச்சான். 'இருட வந்தியா?' னு தலைலயே போட்டான். கும்பலு கூடிப்போச்சு. அக்கா வந்து 'எனக்கு சின்னராசு மைத்

தெரியும், புல் வெட்ட றவருன்னு வீட்டுக்குக் கூட்டிட்டுப் போய்ச் சாப்பாடு கொடுத்தாங்க.'

''புல் வெட்ட றதா?''

''ஏர்போர்ட்ல புல்லு வெட்டப்போனேன். ஏரோப்ளேனைப் பார்த்து ஒரு குஷில கைகாட்டினேன். அவ்வளாம் பெரிய ஏரோப்ளேன் பயந்து மேலே ஓடிப் போயிருச்சு. செம அடி அன்னிக்கு. வாய்லயே போட்டாங்க.''

''நீதானா அது...? கேள்விப்பட்டேன். அப்புறம்.''

''அப்புறம் என்ன ஸ்டீபன் துட்டு குடுத்து அழுவாதேன்னாரு. வேலை வாங்கித் தரேன்னாரு.''

''டவர் ஆளா?''

'தெரியலைங்க.''

''சொல்லு.''

''அவரு தேடிக்கிட்டு குவார்ட்டர்ஸ் போனேன். அங்கேயும் நாலு போட்டாங்க.''

''அடப்பாவி.''

''எல்லாம் சரியாயிடுச்சுங்க, ஸ்டீபன் வீட்டுக்கு எதிர் வீட்டுல ஷோபா அம்மா இருக்காங்கல்லே...அங்கே தண்ணி ஊத்தி, பெருக்கி, தரை மொழுகி.''

''ஷோபாலா? ஷோபனாலா?''

''ஷோபனாதான்.''

''அங்கே வேலை செய்யறியா?''

''ஆமா.''

''எதுக்கு சின்னராசு...பச்சப் பசேல்னு கிராமத்தை வுட்டு இங்கே வந்து கூலி வேலை.''

''சும்மா மாறுதலுக்கு. ரெண்டு மாசம் இங்கன இருந்தா மறுபடி ஊட்டுக்குப் போற ஏக்கம் வரும் அப்போபோயிடு

வேண். கம்மா இட்லி சாம்பாரே சாப்பிட்டுக்கிட்டிருந்தா ஒரு நாள் மோர்க்களி சாப்பிடணும் சாப்பாடு மாறி, இடமும் மாறிடணும். ஒண்ணையே புடிச்சுத் தொங்கக் கூடாது.''

''அடேங்கப்பா.''

சின்னராசு சிரித்தான்.

''அப்புறம்?''

''என்ன...அங்கே இங்கே சாப்பிட்டு, வேலை செய்து, ஊர் பார்த்துட்டு ஓட்டுக்குப் போயிடுவேன். மல்லாட்டா பயிர் இப்போ கணுக்கா நிட்டத்துக்கு வளர்ந்திருக்கும்.''

''சாப்பாட்டுக்குக் கஷ்டப்படலியா?''

''எங்கனா கிடைச்சுடுதுங்க சாப்பாடு, பட்டினில செத்துரமாட்டோம் யாருனா எதுனா செய்வாங்க.''

''பிச்சையெடுப்பியா?''

''வேற வழியே இல்லேன்னா அதுவும் செய்யலாம். ஓட்ல அம்மா கம்மஞ்சோறு வெச்சா ஏன் அரிசிச் சோறு போடமாட்டீங்களாக்கும்னு தூக்கி வாசல்ல போட்டிருவேன். பிச்சையெடுக்கறபோது கம்மஞ்சோறு ஞாபகம் வரும் கம்மஞ்சோறு சாப்பிடறப்பல்லாம் பிச்சை யெடுத்தது ஞாபகத்துக்கு வரும். தூக்கி எறிலேனா, சொல்லுங்க.''

''வயசுக்கு மிஞ்சின புத்தி.''

''இல்லீங்க. கஷ்டப்படாத வளர்ந்துட்டம்னுவெச்சுக் குங்க சின்னச் சின்ன விஷயம்கூடப் புரட்டிப் போட்டுடும் ஒண்ணு மாத்திஒண்ணு அடிலாங்கினாஉலக்கைதலைமேல நின்னாக்கூட தப்பிச்சுக்கறது எப்படின்னுதான் புத்தி போகும். அதுக்குத்தான் வெளியே ஒடிலந்துடறது நாலு பேர் பாக்கறது.எங்கப்பாகூடசொன்னாரு.'போகட்டும்டீ பட்டணம். ஓ தூன்றவரைக்கும் இருக்கட்டும் தானா

வருவான். பொறவு நாம கழுத்தப் பிடிச்சு தள்ளினாக் கூட போக மாட்டான் னாரு.'.

''பட்டணம் ஓ தூன்னு போயிடுச்சா?''

''போயிருக்கும். நல்லவேளை, அக்கா காப்பாத்தி னாங்க.''

''ஜார்ஜினாவா?''

''குணசேகரன்கூடப் பிரியமா நடந்துக்கிட்டாருங்க.'

''செக்யூரிடி ஆபீஸரா. கிடுமுஞ்சியாச்சே?''

''இல்லீங்க. அது ஆபீஸ்ல. வெளிய வந்துட்டா பாருங்களேன். உங்க மோட்டார் சைக்கிளை போலீஸ் காரர் கிட்ட சொல்லி அனுப்பிவுட்டதே அவருதானாம்.''

''எல்லாரும் நல்லவங்கன்றியா?''

''ஆமாங்க. சில சமயம் சிலபேரு கடிச்சுடுவாங்க எதுனா வெறுப்பை எது மேலயாவது காட்டுவாங்க.''

''ப்ச்சு. நான் அப்படித்தான் காட்டிட்டேன். ஜார்ஜினா வந்து ப்ரேயர் பண்ணினப்போ வெளிய போங்கறு கத்திட்டேன்.''

''அதுக்குத்தான் கவிதை எழுதிவீங்களா?''

''சின்னராசு.''

''சொல்லுங்கய்யா...''

''ஒரு உதவி செய்யணுமே! நான் ரொம்ப வருத்தப் பட்டதா, அப்படி செய்ததுக்கு மனசு நொந்து...''— மறுபடி வெட்டவெளியில் சில கணங்கள் சத்தி கண்களை நிறுத்தினான்.

''நான் சொல்றேங்க. எதுனா எழுதித்தரீங்களா?''

''வேணாம் சின்னராசு...படிச்சேன். புரிஞ்சுதுன்னு சொல்லு, போதும். டேய் தம்பி.''

"என்னங்க?"

"காச இருக்கா...?"

"ஒண்ணா ரூபா இருக்குங்க..."

"இந்தா, வெச்சுக்க"— தலையணை கிழிருந்து பர்ஸ் எடுத்து இருபது ரூபாய் நோட்டு உருவிக் கொடுத்தான்.

"எதுக்குங்க?"

"முடிஞ்சபோது வாடா. பெரிட்டிருக்கலாம். பட்டணம் சுத்திப் பாரு."

நர்ஸ உள்ளே வந்து ஜுரம் பார்த்தாள். தலைக்கட்டு அவிழ்த்துவிட்டு மறுபடி வேறு கட்டு போட்டாள்.

"ஒரு தடவ ஸ்பாஞ்ச் பாத் எடுத்துக்கிறீங்களா?"— நர்ஸ் கேட்க, சத்தி மறுத்தான்.

"வேணாங்க நானே பார்த்துக்கறேன்."

"என்ன சொல்றாங்க சார்?"—சின்னராசு.

"குளிப்பாட்டணுமாம். நான் துடைச்சுக்கறேன்னுட்டேன்."

"நான் செய்யறேங்க."

சுரத்துணியில் பிழிந்து சோப்புக்கட்டியைத் துணியில் உரசி உடம்பு முழுவதும் தேய்த்து, மறுபடி வெந்நீர்த் துண்டால் உடம்பு துடைத்து பவுடர் போட்டு, வேறு சட்டை மாட்டி, கை கழுவி, 'அப்போ, நான் வரேங்க" என்று சைகுலித்த பையனின் விரல்களை சத்தி அன்போடு பிடித்துக் கொண்டான்.

"பிச்சையெடுத்துச் சாப்பிடறபோது கம்மஞ் சோறு அருமை தெரியும்லே இல்லே...நிஜம்தான் அது. அக்கா கிட்ட ரொம்ப நன்றின்னு சொல்லு. ரெண்டு நாள்ல டிஸ்சார்ஜ் ஆயிடுவேன்னு சொல்லு."

'வரச் சொல்லட்டுங்களா?"

"வேண்டாம்பா. எதுக்கு சிரமம்...ஒரு வாரத்துல நான் ஆபீஸுக்கு வந்துடுவேன். சின்னராசு, நீ நாளைக்கும் வாயேன்."

பையன் தலையாட்டி விட்டு மின்வண்டி ஏறினான் திருசூலம் ஸ்டேஷனில் இறங்கினான். அக்கா ஏர்போர்ட் ட்யூட்டியில் இருக்கும் என்று எண்ணி நேரே சாலை கடந்து ஏர்போர்ட் போனான்

கண்ணாடிக் கதவுக்கருகே போய் கை வைத்து ஜன்னலைத் தேடினான்.

பின்னே ஒரு லாரி நின்றது. முன் பக்கத்திலிருந்த சின்னசாமி கீழே குதித்தார்.

பின்கதவு திறந்தார். கறுப்பு ரோபோ பல் சக்கரப் பட்டைகளுடன் உள்ளே துணி போட்டு மூடியிருந்தது.

கீழே இறக்க வேண்டும். லாரி டிரைவர், சின்னசாமி, ஒரு கிளீனர், ஒரு பாம்ஸ்குவாட், ஹவில்தார் தூக்கினார்கள். முன் பக்கம் கீழிறங்கி வாங்கினபிறகு நாங்க ஆள் தேவைப்பட்டது

'டேய், தம்பி? இங்கன, வா...'

சின்னராசு திரும்பினான், சிரித்தான்

ஓடிப்போய் கைக் கொடுத்தான்.

22

டேய், சட்டையை இன் பண்ணிக்க. ஒரு கை கொடுத்து அப்படியே கீழே பூ மாதிரி இறக்கு"

சின்னசாமி கட்டளைப்படி ரோபோ இறக்கப்பட்டது

"உம் பேர் என்ன?"

''சின்னராசுங்க.''

''எங்கயோ பார்த்திருக்கேனே உன்னை...?''

''புல்லு வெட்டப் போய் பிடரில அடிவாங்கினேனுங்க... கேஸு நடந்த இடத்துல பார்த்தேனுங்க உங்களை.''

''அடடே, அந்தக் கோமாளியா! இப்போ ஞாபகம் வருது.''

சின்னசாமியின் இயல்பான ஜாக்கிரதை உணர்ச்சி அவனைச் சோதனையிடச் சொல்லிற்று. சில ரூபாய் நோட்டுகளும் நாணயங்களும் தவிர வேறு எதுவுமில்லை.

'தோழரே, ஒரு இரண்டு மணி நேரம் கூடமாட வேலை செய்யறியா?''

''செய்யறேனுங்க.''

''இந்த டி. வி. பொட்டியைப் பூ மாதிரி தூக்கிட்டு வரணும். அப்படியே உள்ளே போய் முதல் தூணாண்ட வைக்கணும்.''

சின்னராசு ஒரு அடிக்கு ஒரு அடி டி வி. பெட்டியை நெஞ்சில் அணைத்துக் கொண்டு போனான். வாசலில் வைத்தான்.

''இது என்னாங்க?''—திரும்பி வந்து ரோபோவைப் பார்த்துக் கேட்டான்.

''நீ சொல்லு.''

''சினிமால வருமே டாங்கிச் சண்டை போட்றது... அதுதானுங்களே?''

''அது மாதிரி. ஆனா இது சண்டை போடாது.'' ரோபோவுக்கு பாட்டரி மூலம் உயிரூட்டினார். ரிமோட் கண்ட்ரோல் எடுத்து ''நகர்ந்து போ' என்று த்தர விட்டார். ரோபோ, ஏர்போர்ட் சண்ணாடிக் கதவு நோக்கித் தானாய் நகர்ந்தது.

ரோபோ மனித பொம்மை மாதிரியானது இல்லை ஒரு யுத்த டாங்கிப் போல் இரும்புப் பட்டைகளில் நகருவது.

இரும்புப் பட்டைகள் பல் சக்கரங்களால் சுழல்வது இரண்டு இரும்புப் பட்டை சக்கரங்களுக்கு இடையே ரோபோ நிற்கும். அதில் லேசர் கதிர், எக்ஸ்ரே கதிர், சுழலும் காமிரா, இரண்டு கைகளைப் போன்ற இரும்புக் கொக்கிகள் இருக்கும்

எக்ஸ்ரே கதிர் பெட்டிகளை ஊடுருவும். லேசர் கதிர் தேவையெனில், பெட்டியைத் துளைக்கும் நாலு பக்கங்களும் சுழலும் காமிரா லெகு தொலைவில் உள்ள டி.வி-க்குத் தான் பார்த்ததை அனுப்பும். கொக்கிகள் பெட்டிகளைப் புரட்டிப் போடும். இழுத்து வரும்.

வெடிகுண்டு இருக்கிறது என்று இனி தகவல்வந்தால் திக் திக்கென்று நெஞ்சு துடிக்க மனிதர்கள் போய்த் தேட வேண்டியதில்லை. எதையாவது தொட்டுச் சிதறி விடுவோமோ என்கிற பயம் இல்லை. இனி ரோபோ போகும். படிகள் ஏறும். மணலில் நகரும். சரிவில் இறங்கும். அவசியமெனில் கதவு இடித்துப் பிளந்து கொண்டு முன்னேறும்.

வெடிகுண்டு தாக்காத தூரத்தில் நின்று கொண்டு ரோபோவை இயக்கலாம். அது பார்ப்பதை டி.வி-யில் பார்க்கலாம் 'இடதுபுறம் திரும்பு, வலது புறம் போ, படியேறு, எக்ஸ்ரே எடு, கதிர் வீச்சில் துளையிடு, அந்தப் பெட்டியை இழுத்து வா' என்று இருநூறு கஜத் தொலைவில் இருந்து கட்டளையிடலாம்.

ஒரு ஒயர் இணைப்புத் தந்துவிட்டால், ரோபோ பார்ப்பது டி வி. பெட்டியில் தெரியும் எக்ஸ்ரே எடுத்தாலும் தெரியும். மூடின பெட்டிக்குள் இருக்கும் சவரக் கத்தி பேனா, பென்சில், கொத்துச் சாவி, கைத்துப்பாக்கி அனைத்தையும் காட்டிக் கொடுக்கும்.

இது வெளியூர் விசேஷம். ஜெர்மன் தயாரிப்பு. மத்திய அரசு வாங்கி சென்னை ஏர்போர்ட் பாம் ஸ்குவாடுக்குத் தந்திருக்கிறது. இன்று வெள்ளோட்டம்; பரிசோதனை.

எப்படி இயங்குகிறதென்று இயக்குபவரே கற்றுக் கொள்ளும் வருப்பு. ஏதும் குறையுண்டா என்கிற அலசல்

அரை மணியில் காப்டன் ராஜு வந்து விடுவார். அதற்கு முன் இன்னசாமி சகல உபகரணங்களையும் பொருத்திவிட்டுக் காத்திருக்க வேண்டும். ரோபோவை பட்டன் அழுத்தி நாய்க்குட்டி போல கூட்டிப் போகலாம். டி. வி. பெட்டிக்குத்தான் ஆள் வேண்டியிருக்கிறது. ஹவில்தார் இன்ன மேனு, மடக்கு நாற்காலி, ஓயர் இணைப்புகள், டீல பாக்ஸ் எடுத்துவர... இன்னராசு மறுபடி டி.வி.யை அணைத்துக் கொண்டு ஏர்போர்ட் லவுஞ்சுக்குப் போனான்.

வாசல் செக்யூரிட்டி—ஏர்போர்ட் அத்தாரிடி ஆள் மடக்க, 'தம்ம பையனுங்க.டி.வி யை உள்ளே வெச்சுட்டுப் போவிடுவான்.,-இன்னசாமி சமாதானம் சொன்னார்.

'ஒரு பாஸ் போட்டுவிட்டு வரக்கூடாதா?''

''போட்டுறலாம், பெரியவரு வரட்டும். நீ போடா. பெட்டி பத்திரம்.''

நடு ஹாலில் பெட்டி வைக்கப்பட்டது. சுவரோரம் மேனு நாற்காலிகள் போடப்பட்டு அதில் டி.வி பொருத்தப்பட்டது. பயணிகள் தானாய் வரும் இன்ன ரோபோவைப் பார்த்து நகர்ந்து கொண்டார்கள், வியர்ந்தார்கள்.

இன்னராசு மெய்மறந்தான். டுகு டுகு டுகு என்கிற சந்தத்துடன் அது மாடி ஏறி இறங்கியபோது வியப்பில் வாய் பொத்திக் கொண்டான். எதிரே போய் மறித்தால் என்ன ஆகும் என்று யோசித்தான்.

பெருக்குகிற ஆள் ஈரத்துணிக் குச்சியைக் குறுக்கே நீட்ட, ரோபோவின் கைகள் நீண்டு குச்சியைத் தட்டி விட்டது. முன்னேறியது எல்லோருக்கும் சிரிப்பு வந்தது. ஹவில்தார் நீள ஓயர் பொருத்தி டி.வி.பெட்டிக்குத் தொடர்பு கொடுக்க, டி-விக்கு மின் இணைப்புத் தந்ததும் காமிரா இயங்கி அதன் பார்வை வழியே ஆள் காட்டியது.

அதன் முன்றடி உயரத்தில் வெறும் மனிதரின் கால்கள் மட்டுமே தெரிந்தன.

சுபேதார் மேஜர் இன்னசாமி, காப்டன் ராஜுவுக்குக் காத்திருந்தார். விமான நிலைய வேலையாட்களும் பயணிகளும் ரோபோவைச் சுற்றிக் கொண்டார்கள்.

காப்டன் ராஜு இன்னொரு ஹவில்தாருடன் உள்ளே வந்தார். கூட்டம் கலைக்கச் சொன்னார். மஃப்டியில் குணசேகரன் தனியே ஐந்து காவலர்களுடன் உள்ளே நுழைந்தார். காவலர்களும் சாதாரண உடையில் இருந்தார்கள்.

டி. வி. உயிர் பெற்றுக் குணசேகரன் கால்களைக் காட்டிற்று.

''எல்லாம் சரியாக இருக்கிறதா, டெஸ்டுகுப் போகலாமா?''—காப்டன் இந்தியில் கேட்க, சகலரும் தயாரானார்கள். இன்னராசு சுவரோரம் தள்ளி நின்று கொண்டார்கள்.

தன்னிடம் இன்னசாமி கொடுத்த மரப்பலகையால் நெஞ்சு மூடி நின்றான் மரப்பலகையைக் கீழே வை என்று யாரும் சொல்லவில்லை. 'ஒருவேளை ரோபோ தப்பா எங்கயாவது போயிருச்சுன்னா... ஓடித் தடுக்கறத்துக்குக் கையிலயே இருக்கட்டும்'ன்னு கொடுத்திருப்பாங்க' என்று நினைத்துக் கொண்டான். ஓடித் தடுக்கத் தயாராய் இருந்தான்.

ரோபோ நகர்ந்தது.

''மிஸ்டர் குணசேகரன்...''

''யெஸ், காப்டன்.''

''இது டெஸ்ட் மட்டுமில்லை, முழு சோதனையாகச் செய்யப் போகிறோம்'' காப்டன் இந்தியில் பேசினார்.

''புரியவில்லை காப்டன்.''

''உங்களுடைய ஆட்கள் தயாரா என்று சோதிக்கப் போகிறோம்.''

''போகிறோம் என்றால்?''

''நீங்களும்...நானும்.''

''சொல்லவில்லையே...?''

''சோதனைக்குத் தயாராய் இரு' என்று முன்கூட்டி சொல்வதற்குப் பெயர் சோதனையா...? உங்கள் ஆட்களின் யோக்கியதை உங்களுக்காவது தெரிய வேண்டாமா?''

''நான் அஸிஸ்டெண்ட் கமிஷனர். கமிஷனரிடம் இது பற்றிப் பேசினீர்களா?''

''கமிஷனர் ஊரில் இல்லை. அதனால் உங்களிடம் பேசுகிறேன்.''

''காப்டன் இது தவறு.''

''எப்படி?''

''இதற்கு அனுமதி வாங்க வேண்டும்.''

''யாரிடம்?''

''கமிஷனரிடம்.''

''லுக் ஹியர் குணா, நான் சிவில் ஏவியேஷன் செக்யூரிடியின் ஒரு பகுதி. திடீர் சோதனை விளம்பரப்படுத்தி விட்டு நடக்கக் கூடாது.''

''என்ன செய்வதாய் இருக்கிறீர்கள்?''

''குண்டு இல்லாத துப்பாக்கி...பாயிண்ட் நைன் ரிவால்வர் ஒன்று இங்கே ஓரிடத்தில் ஒளித்து வைக்கப் பட்டிருக்கிறது ரோபோ அதைக் கண்டு பிடிக்கும். உன் ஆட்கள் எப்படி பராக்கு பார்க்கிறார்கள் என்று நீயே பார்.''

''எனக்கு இதில் சம்மதமில்லை.''

''ஏன், எதனால்?''

''இது ரோபோ டெண்ட்.''

''ஐ ஸீ இப்போது நிஜமாகவே துப்பாக்கி ஒன்றை பயணி ஒருவரிடமிருந்து கண்டுபிடித்தால் ஸ்கூட்டர் ஏறி வீட்டுக்குப் போவாயா, இல்லை காண்டீன் போய் மசால் வடை தின்பாயா?''

காப்டன் ராஜுவுக்கு ஆந்திர மாநிலம். ஜலமூரி வெங்கட ராமராஜு என்பது முழுப் பெயர். ஆனால், உருதுவும் இந்தியும்தான் சரளமாக வரும். தெலுங்கு பேசினால் புரியும். தமிழ் தோடா தோடா மாலும் பிறவி ராணுவ வீரன். தனக்குக் கொடுத்த வேலையை எவர் தடுத்தாலும் தயங்காது செய்கிறவன்

''என் ஆட்களுக்கு டெஸ்ட் வைக்க நீங்கள் யார்?''

''ஸ்டாப் ரோபோ''—ராஜு கட்டளையிட சின்ன சாமி நிறுத்தினார்.

''நீங்கள் போகலாம் குணசேகரன். ஆனால் உங்கள் மறுப்பு, ஒத்துழையாமை—ரிப்போர்ட் செய்யப்படும்.''

''காப்டன் ராஜு, புரியாமல் பேசுகிறீர்கள்.''

''மிஸ்டர் குணசேகரன். இந்த ஏர்போர்ட்டின் பாதுகாப்பு நம் கையில் இருக்கிறது. திடீர் சோதனைகள் செய்வது நமது உரிமை. நம்மை நாமே எடை போட்டுக் கொள்வது புத்திசாலித்தனம்.''

குணசேகரன் யோசித்தார். சரி என்று தலையசைத்தார். ரோபோவின் ஓட்டம் பார்த்துக் கொண்டிருந்த கான்ஸ்டபிள்களை டி.வி. ஸ்கிரீனுக்குத் திருப்பினார்.

''வேடிக்கை பார்க்கலா வந்தே? உன் வேலையைக் கவனிப்பா''—எச்சரித்தார்.

காலலர்கள் விறைப்பானார்கள். பின் கை கட்டி அரை வட்டமாய் டி. வி. எதிரே நின்றார்கள்

ரோபோவின் காமிரா தலை தூக்கிற்று. ஆட்களின் முகம் தேடிற்று. மெள்ள நகர்ந்து இந்தியன் ஏர்லைன்ஸ் கௌண்ட்டருக்குப் போயிற்று. பயணிகளின் பெட்டிகளை எக்ஸ்ரே எடுத்தது.

'தன்னு' கதவு திறந்து கௌண்ட்டருக்குள்ளே நுழைந்தது.

கல்கத்தா விமானத்தின் ஹேர் ஹோஸ்டஸ் மோனிகா தாமஸ், ஜார்ஜினாவுடன் பேசிக் கொண்டிருந்தாள். மோனிகாவின் இடது கையில் வானிடி பாக்ஸ் இருந்தது.

"ஹேய், வாட் இஸ் திஸ்?"—கால் அருகே வந்து நிற்கும் ரோபோவைக் கண்டு மோனிகா ஆச்சரியத்துடன் ஜார்ஜினாவைக் கேட்டாள்.

செக்யூரிடி டெஸ்ட். பாம் ஸ்குவாட் ப்ராபர்டி. அங்கே நிற்கிறார்கள் எல்லோரும்.'

"இது என்ன செய்யும் ஜார்ஜினா?"

"உன் முழங்காலை முத்தமிடும் என்று நினைக்கிறேன்."

"தாங்க்யூ புடலையை உருவாமல் இருந்தால் சரி."

"உருவவும் வசதி இருக்கிறதாய்த் தோன்றுகிறது"—கைகள் போல் உள்ள கொக்கியைச் சுட்டிக் காட்டினாள் ஜார்ஜினா.

"அப்படியா, இன்னும் சந்தோஷம் வேறு வசதிகள் உண்டா?"—மோனிகா ரோபோவைக் குனிந்து பார்க்க, ஜார்ஜினா வாய்விட்டுச் சிரித்தாள். சட்டென்று வாய் பொத்திக் கொண்டாள்

"ஸீ யூ ஜார்ஜினா"-கைப்பெட்டி எடுத்து மோனிகா நகளப்ப, அவளை வழிமறித்தது. கொக்கிகள் நீண்டு அவள் கைப்பெட்டியைப் பற்றின.

"டாமிட், யார் இதைச் செய்வது?"—மோனிகா கூச்சலிட்டாள். டி.வி.யில் பெட்டி தெரிந்தது. எக்ஸ்ரே கதிர்கள் பாய்ந்தன. உள்ளே ஒரு ரிவால்வர் இருப்பது தெரிந்தது. நெகடிவ் ஃபிலிமாய் நீர்க்கோடாய் மின்னிற்று. இது பழக்கப்பட்ட கண்களுக்குத்தான் உடனே தெரியும்.

"தேர்"—குணசேகரன் கத்தினார். கத்தியது பிறகு. அவருக்குக் கீழே வேலை செய்பவர்கள் தமிழ்நாடு காவல் துறையைச் சேர்ந்தவர்கள் தான். ஆனால், குணசேகரனிடம் தனிப் பயிற்சி பெற்றவர்கள். பாதுகாப்புப் பணிக்கான தனி வகுப்புகளைக் குணசேகரனே நேரடியாக எடுத்திருக்கிறார். ஒரு நகரத்தில் மிகப் பலத்த பாதுகாப்பு உள்ள இடம் விமான நிலையம். போலீஸ் அதிகாரிகள், ராணுவ அதிகாரிகள் தவிர வேறெந்தக்கொம்பனும் துப்பாக்கியோடு விமான நிலையம் நுழையமுடியாது. பிரதமரும் ஜனாதிபதியும் தவிர வேறு யாரும் விமானத்துக்குள் ரிவால்வரோடு போகக்கூடாது. பூனைப்படைகள் ராணுவ அதிகாரிகள் கூட விமானத்தில் நுழையும் முன் துப்பாக்கி வேறு, குண்டுகள் வேறு என்று பிரித்துப் பணிப்பெண்களிடம் தந்து விட வேண்டும். இறங்கிய பிறகு வாங்கிக்கொள்ள வேண்டும். இது சட்டம்.

"மீறி விமான நிலையத்துக்குள் யாராவது ஆயுதம் வைத்திருப்பின் மடக்கு. திமிறினால் தலையில் தட்டு. எகிறி ஓடினால் அடித்துப் புரட்டு. தேவையெனில் சுட்டுக் கொல்"

குணசேகரன் வாயால் அவர்கள் கேட்ட பாடம். ஆயுதம் உள்ளவர்களை எப்படி மடக்க வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

'தேர்' என்று கத்தியதற்கு 'தாக்கு' என்று காவலர்கள் பொருள் எடுத்துக் கொண்டார்கள். விநாடி நேரத்தில் டி.வி-யை விட்டு ஐந்து காவலர்களும் கூட்டத்தைப் பிளந்து ஏர்லைன்ஸ் கௌண்ட்டருக்கு ஓடினார்கள். தாண்டி உள்ளே குதித்தார்கள்.

முதலில் ஓடிய காலலர் ஜார்ஜினாவுக்கு அருகே குதித் தார். 'பெண் கையில் பெட்டி. பெட்டிக்குள் துப்பாக்கி' என்று தெரிந்ததே தவிர எந்தப் பெண் என்று தெரிய வில்லை. அவர் டி.வி. பெட்டிக்கு அருகேயிருந்து கொண்டிருக்கு வருவதற்குள் மோனிகா தாமஸ், ஜார்ஜினாவை விட்டு இருபதடி நகர்ந்துவிட்டாள். காலலருக்கு எந்தப் பெண் என்பதில் குழப்பம் வந்துவிட்டது.

மஃப்டியில் உள்ளே குதித்த ஆளை போலீஸ் என்று புரிந்துகொள்ள ஜார்ஜினாவுக்கு அவகாசம் தேவைப் பட்டது. அதற்கு முன் அனிச்சையாய் 'யார் நீ?' என்கிற அதட்டல் வந்துவிட்டது முறைக்கத் தோன்றியது.

"அசைஞ்சே பின்னிருவேன்"—காலலர் கை ஓங்க, ஜார்ஜினா மிரண்டு போனாள். பின்னே நகர்ந்தாள். நகர்ந்தவள் தோள் தொட்டு நிறுத்தப்பட்டு, பளிச்சென்று திருப்பப்பட்டு சுவரோடு ஒட்டி நிறுத்தப்பட்டாள். சுற்றி யுள்ள பயணிகள் உறைந்து போயினர்.

அடுத்த காலலர் விவரமானவர். பெட்டியின் அடை யாளம் அவர் நினைவில் இருந்தது. மோனிகாவின் பின்னால் ஓடி அவள் தோளில் கை வைத்து நிறுத்திப் பெட்டியைப் பறித்துக் கொண்டார். தன் இடது கையால் அவளைச் சுவரோடு நகர்த்தினார். மோனிகா யாரோ திருடன் என்று திமிற...அவள் கால் கட்டை விரலை மிதித்து, 'சமுத்தில் இடது கை வைத்து, முகம தூக்கிச் சுவரோடு அழுத்தியபடி பெட்டியை மூன்றாவது காவலரிடம் வீசினார்.

மோனிகாவுக்கு முன்னால் போன கோ-பைலட் இது கொள்ளைக் கூட்டம் என்று நினைத்துத் தன் கைப்பையை வீசிவிட்டுப் பெட்டி வைத்திருந்த மூன்றாவது காவலர் மீது பாய. பயிற்சி பெற்ற காவலர் நான்கடி விலகி கால்வாஸ் ஷூ அணிந்த புறங்காலால் கோ-பைலட்டின் பிடரியைத் தாக்க, நாலு பயணிகளைச் சிதற அடித்து அவர் தரையில்

படர்ந்தார். எழ முயன்றவரை அடுத்த இரண்டு காலலர் களும் அமுத்திக் கொண்டார்கள்.

இந்தியன் ஏர்லைன்ஸ் பைலட்டை, அழகான ஏர்ஹோஸ்டஸை யாரோ தாக்குகிறார்கள் என்று பயணிகள் கூட்டத்திலிருந்து ஒரு குறுந்தாடி இளைஞன் 'ஹேய்' என நாலு விநாடி தராத்தே போலில் நின் றான். இரண்டு முறை சுழன்று, பெட்டி வைத்திருந்த காவலரைக் காலால் அடிவயிற்றில் தாக்கினான். பெட்டி தரையில் எகிறி விழுந்து சறுக்கி சின்னராசு காலடியில் வந்து நின்றது.

சின்னராசுவுக்கு இந்த பெட்டியில் துப்பாக்கி இருப் பதைக் குணசேகரன் காட்டியதும் கண்டுகொண்டான். பெட்டி எடுக்கக் குறுந்தாடி இளைஞன் குனிய' கையிலிருந்த மரப்பலகையால் ஓங்கி ஒரு போடு போடக் குறுந்தாடி தரை தொட்டது பரவிப் படுத்தது.

வயதான ஒருபெண்மணி கண்செருகிப் பொத்தென்று தண்ணீர் தவலை மாதிரி விழுந்தாள். குழந்தைகள் வீறிட் டன. பெண்கள் அலறினார்கள். என்ன என்று தெரியாமல் எல்லோரும் ஓட, குணசேகரன் இரண்டு கைகளாலும் தலையைப் பிடித்துக் கொண்டார்.

அந்த ரோபோ, சின்னசாமி நோக்கி ஓடிவந்தது சாதுவாய் அவர் அருகே நின்றுகொண்டது.

23

ரோபோவில் சிவால்வர் தெரிந்து அடுத்த நான்கு நிமிடத்தில் அந்த விமான நிலையம் எட்டி உதைத்த நெல்லிக்காய் மூட்டையாய்ப் பிய்ந்து சிதறியது. பதட்டம் அடங்க அரை மணியாயிற்று. ஒரு மணி நேர

தாமதத்துக்குப் பிறகு கல்கத்தா விமானம் பாதிக்கப்பட்ட வர்களுக்குப் பதிலாக வேறு ஊழியர்களோடு புறப்பட்டது.

அது டம்மி ஆபரேஷன் என்று புரிய, எல்லோருக்கும் கோபம் வந்தது. ஆனால், பலகை அடி விழுந்த மூன்றாவது விநாடியில் சுபேதார் சின்னசாமி ஓர் உத்தமமான வேலையைச் செய்தார். சின்னராசு கையிலிருந்த பலகையைப் பிடுங்கிக் கொண்டு வாசற்பக்கக் கதவுப்பக்கம் அலனை நெட்டித் தள்ளி 'ஓடிப்போ' என்று கூவினார். நீல யூனிபார்ம் போட்ட ஆட்களுக்கு இடையே புகுந்த அம்பு மாதிரி குவார்ட்டர்ஸ் நோக்கிப் பறந்து விட்டான் சின்னராசு.

மோனிகா அரை மணியில் சுதாரித்துக் கொண்டாள். ஜார்ஜினாவுக்குப் படபடப்பு நீங்க, கூட அரை மணி ஆயிற்று. அந்தஜந்து காலலர்களும் பரிதாபமாய்விழித்துக் கொண்டு நின்றார்கள். விழுங்கின எச்சில் மூக்குத்துவாரத்தில் ஏறினது போல் அலஸ்தைப்பட்டது குணசேகரன் மட்டுமே. காப்டன் ராஜு, 'ஜோ வாட்' என்கிற விதமாய் நிற்க, சுபேதார் சின்னசாமி ரோபோவை வாசலுக்குக் கூட்டிக் கொண்டு போனார்.

பயணிகள் பதட்டப்படவேண்டாம்என்றும், ரோபோவைத்து ஒந்நிகை நடந்தது என்றும் இரண்டுமுறை ஒலிபெருக்கியில் சொல்லப்பட்டது

''கூட ஒருநாள் போனாலும் போறது. நிம்மதியா டிரெயின்ல போகலாம். உடம்பெல்லாம் தடவிமனுஷாள் கிச்சுக்கிச்சு மூட்டினது போக இப்ப மெஷின் வேற வந்திருக்கு காலைப் பிராண்டறதுக்கு. ஏரோப்ளேன் சந்தோஷமே போயிடுத்து போங்கோ!''

—யாரோ அலுத்துக் கொண்டார்கள்.

''ஒரு ஆக்ஸிடெண்ட்ல கால் முறிஞ்சுபோயிஎலும்புல எவர்சில்வர் ப்ளேட்வெச்சுத் தைச்சிருக்காங்கசார் எனக்கு தொடைக்குப்பக்கத்துல மெட்டல்டிடெக்டர் வர்றபோது

கொய்ங்குது. 'என்ன இது? வெளிய எடு, வெளிய எடு'ன்றான். 'எடுக்க முடியாதுப்பா. உடம்போட வெச்சுத் தைச்சிருக்கு'ன்னேன். நம்பலை. ஒரு தடவையில்லை, ஒவ்வொரு தடவையும்இதே கதைதான். பாண்ட் கழட்டிப் பார்த்துட்டுத்தான் விடறாங்க. ஒருதடவை முன்கூட்டியே பெல்ட், ஜிப் எல்லாம் அவுத்து ரெடியா நின்னேன். பின்னால நிக்கற பாஸஞ்சர்ஸ் 'டாய்லெட் அந்தப் பக்கம் இருக்கு. இது செக்யூரிடி செக்'குன்னு எனக்குச் சொல்லித் தராங்க எங்கே போய் முட்டிக்கிறது? இந்த அழகுல மெஷின் வேற. உள்ளுக்குள்ள எவர்சில்வர் பார்த்துட்டு என்ன செய்யுமோ...?''

பயணிகள் அவரவர் அலுப்பில் சிரித்துச் சுலபமானார்கள். ஆனால் விமான நிலைய ஊழியம், உள்ளே வேலை செய்யும் எட்டு ஏஜெண்ஸியும் கச்சை கட்டிக் கொண்டு நின்றன.

'இந்தியன் ஏர்லைன்ஸ் செக்யூரிடி ஆபீஸர் ராமசுவாமி மாட்டிக்கினான். உம்...மாட்டிக்கினான்'— கிட்டத்தட்ட கையூன்றாது கர்ணம் அடித்தார்.

'எங்கள் ஊழியர் பையில் ரிவால்வர் மறைத்துவைத்து டம்மி ஆபரேஷன் நடத்த எவனுக்கு அனுமதி உண்டு? கைமுறுக்கி, இந்தியன் ஏர்லைன்ஸ் ஊழியரை அடிக்கவும் அவமானப்படுத்தவும் யாருக்கு அதிகாரம் உண்டு? பாம்ப் ஸ்குவாட் ராணுவமாக இருக்கலாம். ஆனால், இந்தியன் ஏர்லைன்ஸ நெட்டிப் பொம்மையல்ல. இது அடாத செயல். அத்துமீறல். பயணிகள்முன்பு எங்களை அவமானம் செய்யத் திட்டமிட்ட நிகழ்ச்சி சிவில் ஏவியேஷன் அதிஸ் டெண்ட் கமிஷனர் குணசேகரனும் அவரது காலலர்களும் சஸ்பெண்ட் செய்யப்பட வேண்டும். காப்டன் ராஜுமீது விசாரணை வேண்டும்.'

—தந்திகள் டில்லிக்குப் பறந்தன.

'வரும் வாரம் நேரடி விசாரணை, அதுவரை அமைதி காக்கவும்' என்று பதில் தந்தி வந்தது.

ஜார்ஜினா அரைநாள் விடுப்பில் அனுப்பப்பட்டாள். வீட்டுக்குப் போகும் முன் தனக்கு நடந்ததுபற்றி எழுத்து மூலம் தெரிவித்தாள். உதவி பைலட்டிடமும், மோனிகா நாயரிடமும் ரிப்போர்ட் வாங்கப்பட்டது. அந்தத் தாடிக் கார இளைஞன்காணாமல்போனான். அன்றையகல்கத்தா பயணிகளில் பத்துப்பேர் தங்களது பயணத்தை ரத்து செய்திருந்தார்கள். அவன் எந்தப் பயணி, எந்த விமானம் புரியவே இல்லை. ஏன் போனான் என்பது புரியவில்லை.

சின்னராசு சின்ன உதறலுடன் குவார்ட்டர்ஸ் வாசலுக்குப் போனான். சிறிதுநேரம் யோசித்துவிட்டு பஸ் ஏறி நியூகராயநகர் போனான். டெர்மினஸுக்குப்பக்கத்தில் உள்ள க்ளினிக்கில் படியேறி, தூங்கிக் கொண்டிருந்த சத்தியநாராயணனை மெள்ள உலுக்கி எழுப்பி விவரம் சொன்னான்.

"அப்படி ஒரு மெஷின் நான் பார்த்ததில்லையே...?"

"நான் பார்த்தேங்க. நானா ஒடுது. பட்டன் தட்டினா திரும்புது. ஜார்ஜினா அம்மா பயந்துபோய் ரொம்ப கஷ்டப்படுவாங்க. துப்பாக்கி வெச்சிருந்தது வேற பொம்பளை. ஆனா, தப்பா ஜார்ஜினா அம்மாவை மடக்கிச் சுடரோரம் நிக்க வெச்சு..."

"இப்படி நடக்காது சின்னராசு."

"கண்ணால பார்த்துட்டு வரேங்க. மடேர்னு நான் ஒரு ஆளை அடிச்சுட்டேன். ஒரு பெரியவரு பலகையைப் பிடுங்கி என்னை ஓடுன்னாரு. வந்துட்டேன்."

"குணசேகரனா?"

"வேற ஒருத்தருங்க."

சத்தி இருப்புக்கொள்ளாமல் நெளித்தான். "என்ன நடந்தது ஏர்போர்ட்டில்? எப்படித் துப்பாக்கி வரும்? யார் அது?"—புரியாமல் பல கேள்விகள் கேட்டான்.

சின்னராசுவுக்கு அது நிஜமா, பொய்யா என்பதே தெரியவில்லை. "நிஜம் இல்லேன்னா ஏன் பாய்ஞ்சு பொம்பளையை அடிக்கறாங்க. நான் பார்த்தேன் சார். டி.வி -ல ரிலாவ்வர் தெரிஞ்சுது."

"நர்ஸ், என் ஆபீஸ்ல ஏதோ பிராப்ளம். நான் அவசரமா போகணும். ஒரு மணி நேரத்துல வந்துடறேன்."

"டாக்டர்கிட்ட பர்மிஷன் வாங்க வேண்டாமா?"

"வந்து பர்மிஷன் வாங்கிக்கறேன். சின்னராசு, என்னைப் பிடிச்சுக்க."

தெரு இறங்கி டாக்ஸியைக் கைதட்டி, உள்ளே சிரமத்துடன் உட்கார்ந்தான்.

"எங்கே சார் போறோம்?"

"ஏர்போர்ட்டுக்கு."

"அங்கே ஒரே கலாட்டாவா இருக்கு சார்"

"அதான் என்னன்னு பார்க்கணும்... ஜார்ஜினாவை அடிச்சாங்கன்ற... ரிலாவ்வர்ங்கற."

"அக்காகிட்ட ரிவால்வர் இல்லை சார்."

"அப்போ ஏன் அடிச்சாங்க?"

"தலறுதலா..."

"ஏர்லைன்ஸ் ஸ்டாஃபை தலறுதலா போலீஸ்காரங்க அடிக்கறதா... நீ யாரை அடிச்சே?"

"தெரியலை சார். ஆனா, ஓடிப்போயிடுன்னுட்டாரு பெரியவரு."

"யாரு அது?"

"தெரியலை சார்."

"நீ அடிச்ச ஆள் என்ன ஆனாரு?"

''பொத்துன்னு தரைல விழுந்தான்.'

''அப்புறம்...?''

''தெரியலை சார்.''

''மூணு பேரு அடிபட்டிருக்காங்க... ஒருவேளை ரொடிங்களா?''

''இல்லை சார். போலீஸ்தான். அடிபட்டது நாலு பேர்.

''வேற யாரு?''

''எபலட் மாதிரி ஒருத்தரு.''

''போடா... பைலட்டை போலீஸ்காரன் தொட்டா அதோட அவன் குளோஸ்.''

''நிஜமா சார் எனக்குப் பயமா இருக்கு சார்.''

''ஏன்?''

''என்னை மறுபடியும் பிடிச்சுட்டுப் போயிடுவாங்களா?''

''நீ ஏண்டா இதுக்குப் போனே...?''

''கூப்பிட்டாருங்க. கூடமாட உதவி செய்யுனு கூப்பிட்டாருங்க.''

''நீ ஒண்ணு செய். வண்டில இரு.''

''எப்படி நடப்பீங்க?''

'டிரைவரு தோள் பிடிச்சுட்டுஉள்ளே போயிடறேன்'.

ஏர்போர்ட் வாசலில்கூட வேலை செய்பவர் தென்பட வண்டி நிறுத்தச் சொல்லி அவரை அருகே கூப்பிட்டான் சத்தி. சகலமும் தெரிந்து கொண்டான்.

''ஒண்ணுமில்ல சத்தி...டம்மி ஆபரேஷன். சர்ப்ரைஸ் செக். பெரும் கலாட்டா ஆயிடுச்சு.''

'ஜார்ஜினாவை அடிச்சாங்களா?''

''அடிக்கலை. மடக்கி சுவத்தோட நிக்க வெச்சுட்டாங்க. பதறிடுச்சு. அதுக்கு அரை நாள் லீவு கொடுத்து அனுப்பிட்டாங்க. வீட்டுக்குப் போயிடுச்சு.'

''ஏர்ஹோஸ்டஸ்கிட்ட எப்படி ரிவால்வர்?''

''பாம்ப் ஸ்குவாடே ஒளிச்சு வெச்சிருக்கு''

''எப்படி இது?''

''செய்யலாம். செய்வோம்கறாங்க. ஒரே ரகளை. வர்ற வாரம் என்கொயரி.'.

''ஜார்ஜினா சரியாயிட்டாங்களா?''

''எல்லாருமே ஷாக் ஆயிட்டாங்க. இப்ப ஓகே. இதுக்காகவா, இவ்வளவு தூரம் வந்தே...உடம்பு எப்படி இருக்கு? பரவாயில்லையா?''

சட்டென்று உள்ளே புரட்டிப் போட்டது போல் இருந்தது. இதற்காகவா இவ்வளவு தூரம் இத்தனை வேகத்தில் வந்தோம்.

''இல்லல துரை. இந்தப்பக்கம் என்னோட டாக்டர் சிநேகிதனை கன்சல்ட் பண்ண வந்தேன். வழில சொன்னாங்க. அதான் விசாரிச்சேன் வரட்டா? நெக்ஸ்ட் வீக் வேலைக்கு வந்துடுவேன்.''

சின்னராசு, சத்தியை வியப்போடு பார்த்தான்.

''திரும்பிப்போலாங்களா...?''—டிரைவர் கேட்டான்.

சத்திக்குப் பதில் சொல்ல முடியவில்லை. சின்னராசு பார்வை தன் மேலேயே இருந்தது உறுத்திற்று.

''இல்லை...நேரா போ. தாம்பரம் தாண்டியதும் ஒரு பிள்ளையார் கோயில் இருக்கும். அதுக்கு ரெண்டு தேங்காய் உடைக்கணும்.''

''சார்...நான் குவார்ட்டர்ஸ்ல இறங்கிக்கிட்டா?''

''எந்த குவார்ட்டர்ஸ்.''

''ஜார்ஜினா அக்கா குவார்ட்டர்ஸ்.''

''வரும்போது இறக்கி விடறேன். இப்ப கூடத் துணைக்கு வா''

'அதசரப்பட்டு விட்டோமோ? இந்தப் பையன் அரை குறையாகப் பேசியது கேட்டுப் பெரிதாய் நினைத்துப் பயந்து விட்டோமோ? டம்மி ஆபரேஷன் என்பது இவனுக்கு எப்படித் தெரியும்? போதாக் குறைக்கு எவன் தலையையோ உடைத்து விட்டுப் பயந்து ஓடி வந்திருக் கிறான். இவன் பேச்சு எப்படி சரியாய் இருக்கும்? அவசரப்பட்டு விட்டோமோ...

எதில் அவசரம் வந்து விட்டது. ஏர்போர்ட்டில் கலாட்டா என்றா? ரிவால்வர், அடிதடி என்று கேட்டா? இல்லை... ஜார்ஜினா ஜார்ஜினா என்று கடிதம் பார்த்து உட்கார்ந்துவிட்டு, அவளுக்கு ஏதோ என்று அலசரப் பட்டு ஏன்...ஏன் இப்படி? ஏன், ஜார்ஜினா இத்தனை முக்கியமானாள்?

ஜார்ஜினா முக்கியமானது இப்போதா? நாலுவருடங் களுக்கு முன்பு வெடிகுண்டு சிதறிய அன்று, 'விஜுப்பா... என் விஜுப்பா...' என்று அழுதபோது ஜார்ஜினா என்னுள் ஐக்கியமாகி விட்டாள் வாயும் வயிறுமாய்ப் புரண்டு அழுதபோது நெஞ்சில் ஆணி அடித்து இறங்கி விட்டாள். இரவும் பகலும் அதே அலறல் உள்ளுக்குள் கேட்டபடி சோறு, தண்ணீர் இல்லாமல் கிடந்த நாட்கள்எத்தனை... சொன்னாலும் வெட்கமடா...சொல்லா விட்டால் துக்க மடா...துக்கமில்லாமல், வெட்கமில்லாமல் வாழுகிறேன் ஒரு பக்கமடா... எந்த சிவிமா...? யார் எழுதிய பாட்டு? எனக்கென்று ஒரு பாட்டை யாரோ எழுதியிருக்கிறார் கள். உள்ளே இருப்பதை எவரிடமும் சொல்லவும் முடி யாது தள்ளவும் முடியாது. சகலரிடமிருந்தும் விலகித் தனியாகி, எவனோ எதற்கோ என்னைக் குத்திப் போட, மறுபடியும் கட்டில் விளிம்பில் தோளுக்கு அருகே வலியின் உச்சத்தில் தவிக்கிற போது ஜீவன் வரவேண்டுமா... வந்து ப்ரேயர் சொல்ல வேண்டுமா?

ஏன் கத்தினேன் அப்படி? வலி தாங்காமலா? ப்ரேயர் பிடிக்காமலா? அவள் அருகாமைக்குப் பயந்தா? இல்லை என்னைப் பற்றி எனக்குப்பயம்.என் மனசு கொட்டிவிடப் போகிறேனே என்கிற பயம். நான் தான்...'நான் தான் உன் புருஷன் சாவுக்கு...' என்று அலறி விடப் போகிறேனோ என்கிற பயம்.

'ஸ்டாப் இட்' என்று கத்தியது அவளைப் பார்த்து இல்லை...என்னைப் பார்த்து. உள்ளிருப்பது பொங்கி விடப் போகிறதே என்கிற பயத்தில் கத்தினேன். எனக்கு நானே கத்தி, கட்டளை போட்டுக் கொண்டேன்.

'வெள்ளை அங்கி, சுருள்தாடி
ஒரு யூதன் வந்தான் இவ்வுலகில்'

என் எல்லாக் கத்தலையும் ஒதுக்கி விட்டு எனக்கு கவிதை எழுதி அனுப்பியிருக்கிறாள். ஏசு கவிதை. 'என்னுள் கேட் டதை நான சொன்னேன். நீயும் கேளேன் என் தோழா' என்று முடிவெடுத்திருக்கிறாள்.

அவள் கேட்ட குரலை எனக்குக் கவிதையாக்கி இருக்கி றாள். என் குரல், என்னுள் எப்போதும் கேட்கும் குரல் அவளுக்குச் சொல்ல முடியுமா? 'ப்ளீஸ், என்னை விட்டுடு' என்று வின்செட் குரல் என்னுள் இருக்கிறதே...இவளிடம் சொல்ல முடியுமா?

தோழனா நான்? தோழமையா என்னுள் இருப்பது? என் தோழமை செய்த பாவத்தை வெளியே சொல்ல முடியுமா? தோழமைக்கு ஒருவர் சிதறிச்செத்துப் போனது கவிதையாக முடியுமா? சே...எந்தப் பிள்ளையார் கோயில் போய் என்ன செய்வது...திரும்பி விடலாமா... சின்னராசு கேட்பானே...'ஏங்க பிள்ளையார் கோயில் போகலையா?'ன்னு...

தாம்பரம் பாலம் இறங்கி வெட்ட வெளியில் தடுக் கென்று ஒரு சின்ன முக்கால் சைஸ் பீரோ மாதிரி பிள்ளை யார் கோயில் ..லாரி ஒன்று நின்று சூடம் காட்டியது.

சத்தி மறுபடி சிரமப்பட்டு இறங்கினான். வாசலில் இரண்டு தேங்காய்கள் வாங்கச் சொன்னான். கற்பூரம் காட்ட, குனிந்து உடம்பு மடித்து வணங்கினான்.

சடேர், சடேர் என்று தேங்காய்கள் சிதறின. சின்ன பாறாங்கல். அதிக நெளிவுசுளிவு இல்லாத விநாயகர் பொம்மை லாரிக்காரன் தரையில் விழுந்து வணங்கினான். படபடவென்று கன்னத்தில் போட்டுக் கண் மூடிக் கை கூப்பினான்.

''என் அனுபவத்திலேர்ந்து ஒண்ணு சொல்றேன். இறங்கி இந்தப் புள்ளையாரைக் கும்பிட்டுப் போனா... 'யப்பா...நீ கூடத் துணையா வரணும்'னு ஒரு குரல் குடுத்துட்டுப் போனா போதும்...ஒரு சின்ன காயம்கூடப் படாது. செக்கியமா ஊர் போய்ச் சேரலாம். எங்கயோ, எந்த ரூட்லயோ லண்டி கவுந்து போனாக்கூட இங்கே வந்து கும்பிட்டுட்டுப் போவாங்க. ரொம்ப சக்திங்க.''

டாச்லி டிரைவர் கும்பிட்ட பிறகு வண்டி ஏறினான்.

''எங்கே போகணுங்க?''

''இந்தியன் ஏர்லைன்ஸ் குவார்ட்டர்ஸ். ஏர்போர்ட் கிட்டக்க பையனை இறக்கி விட்டுட்டு மாம்பலம் போயிடலாம்.''

தாம்பரம் பாலம் ஏறித் தோல் வாசனை கடந்து, பவுடர் வாசனை தாண்டி, மின்வண்டி இருப்புப் பாதை ஒட்டி சிற்றானைக்குட்டியாய் உட்கார்ந்திருக்கும் மலைகள் கடந்து குவார்ட்டர்ஸுக்கு திரும்பியது.

''எது ஜார்ஜினா வீடு ராசு...?''

''இரண்டாவது ரைட்ல திரும்பினா அஞ்சாவது வீடு சார்.''

''நிறுத்து டிரைவர்.''

சட்டென்று வண்டி நின்றது. மேலே போக சத்திக்குத் தயக்கமாய் இருந்தது.

''எது?''

''அந்தப் பூச்செடி இருக்கே...அந்த வீடு சார். போய் இட்டாரட்டுமா?''

''வேண்டாம். நான் வந்தது சொல்ல வேண்டாம். இறங்கு.''

''ஏன் சார்?''

''செல்லா...செல்லா அம்மா இதோ பார்...வாசலுக்கு ஓடறான் பார்...''—குரல் கேட்டது. ஜார்ஜினா குழந்தையைக் துரத்திக் கொண்டு வாசலுக்கு வந்தாள். டாக்சியிலிருந்து இறங்கும் சின்னராசு பார்த்தான்.

''டேய்... எங்கே ஓடிட்ட நீ....''—குழந்தையை வாரி இடுக்கிக் கொண்டே கேட்டாள்.

''சத்தியநாராயணன் சாரைப் பார்க்கப் போனேன். அவரு வந்திருக்காருக்கா...''

''யாருடா...சத்தியா...?'' ஜார்ஜினா முன்னேறிக் குனிந்து பார்த்தாள்.

''ஹாய் சத்தி...!'' குரல் கொடுத்தாள்.

''ஹலோ...''—சத்தி மெள்ளக் குரல் கொடுத்தான். வெட்கப்பட்டான்.

''நல்லாயிட்டீங்களா?'' ஆவலுடன் கேட்டாள். பதில் சொல்ல சத்திக்குத் தெரியவில்லை.

24

'நல்லாயிட்டீங்களா...?'

'யாரைக் கேட்கிறாள், என்னையா...பித்துப் பிடித்தவன் போல் கத்தினாயே... சரியாகிவிட்டதா என்று கேட்கிறாளா? இல்லை, ஆள் தெரியாது அடி வாங்கி

உருண்டு ரத்தமானதைக் கேட்கிறாளா...உள் மனசா... உடம்பா? உடம்பு காயம் நேற்று வாங்கியது. நாளை சரியாகும். உள்ளே பட்ட ரணம், நீ புரண்டு அழுதபோது மிஞ்சிய மனது, பல வருடங்களுக்கு முன்பு பட்ட காயம். இரண்டு சூட்கேஸ் குண்டு வெடித்தபோது தெறித்து மூளைக்குள் விழுந்த வெட்டு. எண்ணங்கள் ஏற்பட்ட காயம், நடைமுறை வாழ்க்கையோடு சுவாதினமில்லாது போல உணர்வு இன்னும் சரியாகவில்லைஜார்ஜினா. அது சரியும் ஆகாது. இந்த நோய் நிரந்தரம்! என்னை எரிக்கும் போதுதான் போகும். இந்த வலி, சாகும் போதுதான் நிற்கும். இதை விடு. என் துயரம் என்னோடு. என்னை மற. நீ எப்படி இருக்கிறாய்? சுவரோடு வைத்து அழுத்தி னார்களாமே...தை முறுக்கித் திருப்பினார்களாமே... இந்தியன் ஏர்லைன்ஸ் என்ன செய்கிறது?'

''என்ன பதிலையே காணோம்?''

''நீங்க எப்படி இருக்கீங்க ஜார்ஜினா? செக்யூரிடி, டம்மி ஆபரேஷன்னு கலாட்டா பண்ணிடுத்தாமே?''

''முதல்ல பயந்துட்டேன். அப்புறம் எல்லாரும் சாதாரணமானவுடனே திரிப்பாயிடுச்சு எப்படிப் பயந் துட்டோம்னு.''

''எப்படீங்க இது? அலால்ட் பண்ணியிருக்கான்— கவத்தோட வெச்சு.''

''நான்தான்க்கா சொன்னேன். உடனே படுக்கையை வுட்டு எழுந்து ஆஸ்பத்திரில் டாக்டர்கிட்ட சொல்லாத கொள்ளாத வந்துட்டாரு.''—சின்னராசு பெரிசாய் வாய் பினந்து கை ஆட்டிப் பேசினான்.

''இதுக்கா வந்திங்க சத்தி?'

சத்திக்கு குழ்நிலை அழுத்தத்தால் மூச்சு முட்டியது. நாற்பது கிலோ மீட்டர் ஓடிய காருக்கு உள்ளே வெந்து புழுங்கியது, உணவு அதிகம் எடுத்துக்கொள்ளாத சிரமம் கண்களைச் சுழற்றியது.

''ரொம்ப டயர்டா தெரியறீங்க சத்தி உள்ள வாங்க. ஏதாவது சாப்பிட்டுட்டுப் போகலாம்.''

குழந்தையுடன் படியேறினாள். தாயிடம் கொடுத் தாள்

''எங்க ஆபீஸ் இவரு. அடிச்சுட்டாங்கன்னு சொன் னேனே... அவரு வந்திருக்காரு...சத்தி. கம் இன்'' — கதவு திறந்து கை நீட்டினாள்.

இனி பற்றிக்கொள்வது தவிர வழியில்லை.

வேண்டாம் என்று மறுத்து வண்டி எடுக்கச் சொன் னால் மூர்க்கன் என்ற நிலைப்புதான் லரும். மன்னித்துக் கொள் என்கிற வார்த்தைக்கு அர்த்தமில்லாது போகும். போகும் உள்ளே வெந்து புழுங்குகிறது

சத்தியநாராயணன் வெளியே வந்தான் சில்லென்ற காற்று உடம்பில் பட்டது முகம் தழுவிற்று.

''வாங்க... மெள்ள வெளியே வாங்க. அம்மா அப்பாவைக் கூப்பிடு. அப்பாவையும் ஒரு பக்கம் புடிச்சுக் கச் சொல்லு''—அறைக்குள்ளிருந்து ஜார்ஜினா அப்பா வும் வெளியே வந்தார்.

நெற்றியில் கட்டோடு ஆள் யாரோ இறங்க, யார் என்ன என்று எதுவும் கேட்காது ஓடிவந்து தோள் பிடித் தார்

''எங்க ஆபீஸ்...சத்தியநாராயணன், இவரு எங்க அப்பா.''

அடிபடாத கை தூக்கிக் கும்பிட்டான்.

''இருக்கட்டும் தம்பி. உள்ளே வாங்க, விசிறி போடும்மா ''

''ஆபீஸ்ல ஏதோ கலாட்டான்னு சின்னராசு சொல்லி ருக்கு உடனே ;என்னவோ ஏதோன்னு வந்துட்டாரு. உட்காருங்க.''—சத்தி தன்னைக் காண வந்தான் என்று சொல்லாது ஜார்ஜினா பொதுப்படையாய்ப் பேசினாள்.

சோபாவில் உட்கார்ந்து சரிந்தபோது சற்று தேவலாம் போல் இருந்தது.

''தம்பி, எர்போர்ட் ஒரு மாதிரி ஆயிடுச்சு. முன்னெல்லாம் சும்மா பொழுது போக, காத்து வாங்க லவுஞ்சுக்குப் போவோம். இப்ப தெருவோட போனாக்கூட சீக்கிரம் தாண்டிப் போயிடணும்னு தோணுது''— ஜார்ஜினா அப்பா பேச, ''தேவையில்லாத ஆடியிருக்காங்க...''—சத்தி பதில் சொன்னான்.

''அப்படிச் சொல்ல முடியாது சத்தி. மாசத்துக்கு ஒரு நடவையாவது இப்படி விரட்டினாத்தான் எல்லாருக்கும் ஒரு ஜாக்கிரதை இருக்கும். இதுல என்ன கூத்துன்னா போலீஸுக்கு இதுடம்மி ஆபரேஷன்னு சொல்லலை. நடநடன்னு கெனண்ட்டருக்கு வந்துட்டாங்க'' — ஜார்ஜினா சொன்னாள்.

''ஏங்க, டம்மி ஆபரேஷனுக்கு ஏர்லைன்ஸ்டா. .பர? முட்டாள் தனம்.''

''எப்படிங்க''.

''ப்ளேன் ஓட்டறவன் துப்பாக்கி எடுத்துட்டுப் போலான்னா அப்போ பாம்ப் ஸ்குவாடுதான் எண்பத்தி நாலுல வெடி வெச்சதுன்னு நான் சொல்லவேன்.''

சட்டென்று எண்பத்து நான்காம் வருடச் சோகம் அங்கே வந்தது. பேச்சு லேகத்தில் சட்டென்று உளறிக் கொட்டியது சத்திக்குப்புரிந்தது. 'சே...நான் ஏன் இப்படி மடையனாய், வார்த்தைகளை வசமின்றி இறைக்கிற வனாய்...' தலை குனிந்து கொண்டான்.

''ஸாரி''—நான்கு பக்கமும் திரும்பினான். ''வெரி ஸாரி...என் மனசுலேர்ந்து அந்த நிசழ்ச்சி போகவே இல்லை. வின்செண்ட்டை மறக்க முடியலை''— திக்கித் திணறிப் பேசினான்.

''நாங்க மெள்ள மெள்ள மறந்துக்கிட்டிருக்கோம் ஐயா. அவன் புள்ளையைப் பார்த்துச் சந்தோஷப்பட்டுக் கிட்டிருக்கோம். பய படுசுட்டி...அப்பனைப் போல''— பெரியவர் திசைமாற்றி எளிதாக்கினார்.

''வின்செண்ட், மகனா...தம்பி வா...கிட்ட வா''... சத்தி ஒரு கை நீட்ட, கட்டுப் போட்டிருக்கிறவனை வியப்போடு பார்த்தது பிள்ளை.

''கிட்ட போ செல்வா. அங்கிள் கூப்பிடறாங்கல்ல... ஸ்தோத்திரம் சொல்லு.''

எட்ட நின்று கை குவித்தது.

பதிலுக்கு வணங்க சத்தி முயற்சி செய்ய, கட்டுப் போட்ட கை சுள்ளென்று இழுத்தது முகம் சுளிக்கப் பிள்ளை வியந்தது.

''நோவுதா...?''—அடிபட்டுக் கட்டுப் போட்டிருக்கிற ஆளை வியப்போடு பார்த்தது.

''ஆமா கண்ணா, கிட்ட வா.''

''ரொம்ப நோவுதா...?''—சற்றுக் கிட்டே வந்தது.

'ஆமாம் குழந்தாய். இது பலவருட நோவு நீ பிறக்கும் முன் கிடைத்த நோவு'—மனசுள் பேசினான்.

கைநீட்ட பிள்ளை அருகே வந்து சாய்ந்துகொண்டது.

'வின்செண்ட்...என் இனிய வின்செண்ட். எவனால் நீ கொல்லப்பட்டாயோ அவன் உன் பிள்ளையைத்தொட்டுக் கொண்டிருக்கிறான். எவனால் நீ வெடித்துச் சிதறிப் போனாயோ அவனால் உன் பிள்ளை தழுவப்பட்டுக் கொண்டிருக்கிறான். வின்செண்ட், உனக்கு இது சம்மதமா...?' பிள்ளை நெற்றி வருடி சத்தி முத்தமிட்டான். முதுகு வருடினான். கட்டு தொட்டுவிட்டு 'வலிக்கிறதா?' என்பது போல் பிள்ளை அவன் முகம் பார்த்தது. மறுபடி தொட்டது.

''ஏய்...''—ஜார்ஜினா அதட்ட திடுக்கிட்டது.

''உம் தொடு தல்லா தொடு''—பின்னையின் கையை எடுத்துக் கட்டில் அழுத்தினான். ''இட்டிப் பையன் தொட்டா தோலாது.''

சட்டென்று பின்னை எட்டித் தலை தொட்டது. தலை காயம் ஆறவில்லை. தொட்டதும் வலித்தது சத்தி முகம் கருக்கினாள்.

''உம்...செல்லா...தப்பு'' — ஜார்ஜினா மறுபடி அதட்டினாள்.

பின்னை கூப்பியது. கண்களை மூடிக்கொண்டது. 'ஏசு சாமியே...' என்று முணுமுணுத்தது. அம்மா செய்வதைபோல் தானும் செய்தது.

''ஓஹோ...செல்லா ப்ரேயர் பண்ணுதுப்பா செல்லா. அங்கின் குணமாகணும்னு சாமிகிட்ட வேண்டிக்க.

அசையாது கண்களை மூடி இமைகள் படபடக்க நிற்கும் பின்னைக் கண்டு சத்தி நெகிழ்ந்தாள். 'கடவுளே, என் மீது எல்லோரும் இரக்கப்படுகிறீர்களே...இந்த இரக்கத்துக்கு நான் தகுதியில்லையே...' உள்ளே கதறினாள். எட்டி சத்தியின் கன்னத்தில் முத்தமிட்டது.

''குட் பாய்'' ஜார்ஜினா அப்பா பாராட்டினார்.

''பின்னைக்கு ஒண்ணுமே வாங்கிண்டு வரலை...நான் பாட்டுக்குத் தடார்னு...''

''அதனாலென்னங்க... இத்தனை லேதனை இருந்தும் ஏர்போர்ட்ல கலாட்டான்னை உடனே...''

''நாம்பரத்துக்குக் கிளம்பிட்டிருந்தோம் ஒரு வேளையா...அப்படியே.''

''பின்னையாருக்குத் தேங்காய் உடைக்கறதா...அது ரொம்ப பேர் கும்பிடறாங்க. பார்த்திருக்கேன்.''

''ஆமா''—சத்தி வரிந்தாள். ''அப்படியே பின்னை ராகலை உங்க வீட்ல இறக்கி விட்டுட்டு...உங்களுக்கு ஒண்ணும் காயம் இல்லையே?''

''இல்லீங்க. போலீஸ்காரர் மன்னிப்பு கேட்டுட்டாரு நிறைய தடவை.''

''செய்யறதை செய்துட்டு...''

''பாவம், பிடின்னா பிடிக்கறாங்க. அடின்னா அடிக்கறாங்க. அவங்களை ஏன் கோவிச்சுக்கணும்?''

''நான் கான்ஸ்டபிளைச் சொல்லலை. இந்த பாம்ப் ஸ்குவாட் பண்ணது ரொம்ப அதிகப்பிரசங்கித்தனம்.''

'நிஜமாகலே பாம்ப் இருந்தா தேவையாத்தானே இருக்கு.''

''நம்ம ஏர்லைன்ஸ்ல ஆக்ஸன் ஒண்ணும் எடுக்கலையா...?''

'நடவடிக்கை நடந்தது...எழுதி வாங்கிட்டாங்க. பெரிய சண்டை ஆகும்னு தோணுது''

''ஆகணுங்க. ஒரு வரைமுறை வேணும்''

''ஒரு ஏர்போர்ட்ல எட்டு ஏஜென்ஸி வேலை செய்யுது. இப்படி அடிச்சுக்கிட்டா யாருக்கு நஷ்டம்? எல்லாரும் பொறுப்போட நடந்துக்கணும். ஒத்துழைப்புக் கொடுக்கணும்...''

'தோல்மே வரலையா உங்களுக்கு?''

''நம்ம ஏர்லைன்ஸ்ல தோல்படறதுக்கு நிறைய பேர் இருக்காங்களே...''—புன்னகை தலமப் பேசினாள்.

கேள்வியோடு சத்தி நிமிர்ந்து முகம் பார்த்தாள்.

ஜார்ஜினா அவள் முகம் பார்த்து வாய்விட்டுச் சிரித்தாள்.

''நான் உங்களைச் சொல்லவில்லை சத்தி.''

''ஸாரிங்க!'

''எதுக்கு?''—சிரிப்பு மறையாமல் கேட்டாள்.

''கொஞ்சம் கத்திட்டதுக்கு.''

''ஹாய்...அது கொஞ்சமா? அப்போ நல்லா கத்தி லிங்கன்னா ஆஸ்பிடல் ரெண்டாயிருக்கும் போல...''

''நிஜமாகவே ஸாரிங்க.''

தன் பெண், சக ஊழியரோடு ஏதோ பேசுகிறாள் என்று ஜார்ஜினா அப்பா உள்ளே போனார். அம்மா நகர்ந்து செல்வாவுடன் சமையலறைக்குப் போனாள்.

''மறந்திருங்க சத்தி அதான் அழகா, 'என் மனசுக் குள்ளே சில நாய்கள்'னு உங்களைச் சொல்லிட்டீங்களே...

''உங்க கவிதையும் ரொம்ப நல்லா இருந்துதுங்க. உடனே ஒரே ராத்திரில உட்கார்ந்து எனக்குப் பதிலா கவிதை எழுதி...ரொம்ப தவிப்பாயிடுச்சிங்க எனக்கு.''

''நாய் துரத்திட்டானேன்னா?''

''அல்வனவு சீக்கிரம் தூரத்தினா போயிட நாயில்லை அது. ஏசு வருவார்னு நம்பற புத்தியும் இல்லை எனக்கு.'

''என்ன ப்ராப்ளம் சத்தி?''—ஜார்ஜினா அடிக்குரலில் கேட்டாள்

சத்தி பேசாதிருந்தான். குனிந்து கால் விரல்கள் பார்த்தான்.

''என்கிட்ட சொல்ல முடியும்னா சொல்லுங்க சத்தி.'

''சொல்ல முடியாதுங்க ஜார்ஜினா. கஷ்டம் அது.''

''ஏன்?''

'என்னை அறியாது உன்னை அழித்தது பற்றி உன்னி டமே எப்படிச் சொல்வது...?' உள்ளே கேள்வி எழுந்தது.

'உன் இந்த நிலைக்கு நானே காரணம் என்று எப்படிப் பிரகடனப்படுத்துவது? பிரகடனப்படுத்தியதும் என்ன செய்வாய்... எட்டி சட்டை பிடித்து உலுக்குவாய்... உடைந்த கையை மறுபடி உடைப்பாய்... ஒழிந்துபோ என்று குத்திக் கொலை செய்வாய்...எதற்குச் சொல்ல. அப்படிக் சொல்லும் வலுவுண்டா என்னிடம்?'

''சரி வேணாம். ப்ராப்ளம் சொல்ல வேணாம். என்னைக் கண்டா மூஞ்சி திருப்பிக்கிறீங்களே, அது ஏன்? ஆபீஸ்ல யார்கூடவும் சிரிச்சுப் பேசாத தனியா இருக்கீங் களே... ஏன்...? வாட்ஸ் ராங் வித் யூ? பர்ஸனல் பிரச் னைன்னா ஆபீஸ்ல கூட வேலை செய்யறவங்க கிட்ட ஏன் காட்டறீங்க? டேபிள்ல வாசனைக்கு வெச்ச மல்லிப் பூவைத் தூக்கிக் குப்பைல போடற அளவுக்கு என்ன கோபம்...யார்மேல?''

சத்தி தலை நிமிர்ந்து பரிதாபமாய்ப் பார்த்தான்.

''கேள்வி கேட்டு நோகடிக்கிறேனா சத்தி?''—ஜார்ஜினா மிருதுவான ஆங்கிலத்தில் கேட்டாள்.

சத்தி இல்லையென்று தலையசைத்தான்.

'கேள்வி நோகடிக்கலை ஜார்ஜினா...அதற்குப் பதில்... ஒரே ஒரு பதில்...அந்தப் பதில் சொல்ல முடியாத பதில்... தீர்க்க முடியாத நோவு'—தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

''சத்தி, யாராவது ஒருத்தர்கிட்ட மனசு விட்டுப் பேசுங்க. அட்லீஸ்ட், உங்க அப்பா கிட்டயாவது இல்லை. ஒரு டாக்டர்கிட்டயாவது உங்களுக்குள்ளே இருக்கிறதெல் லாம் கொட்டுங்க. அது நல்லது சத்தி. உங்கப்பாகிட்ட பேசினேன். என்ன அற்புதமான ஆள் ஏதோ கடுமையா சொல்லிட்டீங்க போல...கண்ணு கலங்கிப் போச்சு அவருக்கு. ஏன் சத்தி இவ்வளவு பிரியமா இருக்காரு உங்க மேல... 'ரொம்ப நல்ல பையம்மா... ஏன் இப்படி மாறிட் டான்னு தெரியலை'ன்னாரு. அந்தப் பாம்ப் வெடிச்சப் புறம்தான்...''

சத்தி கண்கள் மூடிக கொண்டான் வெடிகுண்டு நீர்த்தொட்டியை அதிரச் செய்தது. முத்தமிட்ட உதடுகளை இழுத்துக் கொண்டு எழுந்துநின்று பார்க்க..பெரும் புகை தெரிந்து 'விலு...விலு விலுப்பா... உருண்டு கதறி அழுத ஜார்ஜினா... மனசுள் ஓடியது.

''நானும் சந்தோஷமா இல்லாத. நம்மைச் சுத்தி இருக்கறவங்களையும் சந்தோஷப் படுத்தாத...தப்பு சத்தி. ஆபீஸ்ல எப்படி லேணா இருங்க. கேட்க முடியாது. உங்க இயல்புன்னு போயிடலாம். வீட்ல அந்த வயசான மனுஷனைத் தயவு செய்து காயப்படுத்தாதிங்க. எனக்கு நடந்ததை விடலா உங்களுக்குக் கஷ்டம் நடந்திருக்கும்? எனக்கு ஏற்பட்ட பிரிவை விடலா ஒரு வேதனை உங்களுக்கு நேர்ந்திருக்கும்? நான்சந்தோஷமா இல்லையா வேற வழி இல்லை சத்தி''—ஜார்ஜினா பேசினாள் பேசும்போது அவள் மனசுக்குள் அந்த ஸ்டேஷனில் பார்த்த ஐயர் பெண் தோன்றினாள். இவள்தானே காரணம்—என்று யோசித்தாள்.

''நான் துக்கப்பட்டா லீடு துக்கப்படும். என் வயசான பெற்றோர் துக்கப்படுவாங்க அவங்களுக்காக நான் மாத்திக்கிட்டேன் சத்தி. நீங்களும் மாறலாம், மாறணும். ஒரு லல் ஃபெய்லியருக்குப் போய்...'' ஜார்ஜினா முடிக்கும் முன் சத்தி அதிர்ந்து அவளை ஊடுருவினான்.

அங்கே மௌனம் நிலவியது.

'லவ்வா...என்ன லவ்?'என்பது போல விசித்திரமாய்ப் பார்த்தான்.

''பசுபதிநாதன் டாட்டர் மேல பிரியமா இருந்ததா உங்கப்பா சொன்னாரு.''—ஜார்ஜினா தயங்கினாள்.

'சே...அந்த சமாசாரம் உனக்குத் தெரிந்துவிட்டதா... அதற்காகவா இப்படித்தவிக்கிறேன் என்று நினைக்கிறாய். அது காயமே இல்லை. கீறல். நகக்கீறல். என் தவிப்பு

புரியாது பிறாண்டிவிட்டுப் போய்விட்ட குரங்கு அது. சே...' சத்திக்குக் கடைசி வார்த்தை மட்டும் வெளியே வந்தது.

'என்ன சே...லவ்தானே?''

''சத்தி இல்லையென்று தலையசைத்தான்.''

''என்ன இல்லை?''—ஜார்ஜினா சின்ன அதட்டலுடன் கேட்டாள்.

அதட்டலில் உரிமை கண்டு சத்தி சிரித்தான்.

''லவ்தான் ஜார்ஜினா. அது பாதிப்பில்லை ''— சத்தி ஆங்கிலத்தில் பதில் சொன்னான்.

''பிறரு?''

''ஒண்ணுமில்லை.''

''பொய் சத்தி ''

''நான் பொய் சொல்ல மாட்டேன் ஜார்ஜினா ''

''உண்மையும் சொல்ல மாட்டீங்க இல்லையா?''

''பொய் சொல்லாதிருப்பதே உண்மை சொல்வது என்றுதான் அர்த்தம்.''

''அப்டோ உங்களுக்குள்ளே மறைத்துக் கொண்டிருப்பது?''

''யாருக்கும் தேவைப்படாத உண்மை. சொல்லத் தேவையில்லாத உண்மை.''

''உண்மை சொல்லவில்லை என்பதும் ஒரு பொய் தான்.''

''இல்லை.''

''பொய்.''

''ஜார்ஜினா, எதற்குச் சிரமப்படுகிறீர்கள்?''

''நீங்கள் சிரமப்படுகிறீர்கள் சத்தி. நான் இல்லை.''

''பட்டுவிட்டுப் போகிறேன். உங்களுக்கென்ன?''

"உங்களுக்கென்ன என்று சொல்லும் ஜூனா ஓடிவந்து என்னைப் பார்த்தது?"

"நான் உங்களைப் பார்க்க வரவில்லை ஜார்ஜினா."

"பொய்! என்னைப் பார்த்து—என் முகம் பார்த்துச் சொல்லுங்கள்."

சத்தி நேர் எதிரே முகம் திருப்பிக் கொண்டான்.

ஜார்ஜினா எழுந்து அவன் முகம் இருக்கும் திசைக்கு நடந்து வந்தாள் இடுப்பில் கையூன்றி வலது கை முகவாய் தாங்க நின்றாள்.

'நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்
நிறைந்த கடர்மணிப் பூண்.
பஞ்சுக்கு நேர்பல துன்பங்களாம்.
இவள் பார்வைக்கு நேர் பெருந்தி.
வஞ்சனை யின்றிப் பகையின்றிச் சூதின்றி
வையக மாந்த ரெல்லாம்.
தஞ்சமென் றேயுரைப்பீர் அவள் பேர்,
சக்தி ஓம், சக்தி ஓம், சக்தி ஓம்.'
—சத்திய நாராயணன் மனசுல் பாரதி கவிதையடிற்று.

25

பெண்ணைக் கடவுளென்று கொண்டாட முதன் முதலில் எவனுக்குத் தோன்றியது? எந்த நேரத்தில் தோன்றியது? ஏன் தோன்றியது?

தன்றாய் உடுத்திக் கொண்டு நின்ற பெண் கடவுளானாளா...உணவு இடுகிறபோது கடவுளானாளா... உடம்பு நோவுக்கு உதவிசெய்தபோது தெய்வமாகக்காட்சி

தந்தாளா? ஒடிந்து போன தேர் சக்கரத்துக் கடையாணிக்குப் பதிலாகக் கைவிரல் விட்டுத் தியாகம் செய்த போது கடவுளானாளா...? உதரத்தில் பிள்ளை தாங்கிப் பெற்றபோது சக்தியானாளா? இல்லை. நெஞ்சு வேதனையில் தளும்பி நிற்க, பிழிந்து போட்ட வேதனையில் மனசு தவிக்க, வாய் திறந்து பேச முடியாது, செயலாற்ற முடியாது துவண்டு கிடக்கிறபோது சொல் என்னிடம், உன் மனசு சொல் என்று முகவாய் தாங்கினபோது பெண் கடவுளாயிருக்கிறாள்.

பஞ்சுக்கு நேர் பல துன்பங்களாம் என்று பாடப்பட்டிருக்கிறாள் அவள் பார்வை போதும். துன்பம், நெருப்புப் பட்ட பஞ்சு போலாகும்...

'இது என்ன பிடிவாதம் ஜார்ஜினா? எதற்கு என் முன்னே நெருப்புப் போல் வந்து நிற்கிறாய்? உன் நனல் போன்ற கேள்விகளை வாரியிறைத்து என்னைச் சுட்டுப் பொசுக்குகிறாய்?...சொல்லென்று விழிகளில் கூர்மையேற்றி நோகடிக்கிறாய்

ஜார்ஜினா, நான் வெறும் பஞ்சுப் பொதி. துன்ப மெனனும் நோய் என்னுள் இருக்கும். நோய் அழிய நானும் அழிந்து போவேன்.

கேட்காதே ஜார்ஜினா. எந்தக் கேள்வியும் கேட்காதே நான் உன்னைப் பார்க்க விரும்பியது உண்மைதான். உன்னைச்சுவரோடு அழுத்தினார்கள் என்றதும் துடித்தது உண்மைதான். [உன்னைப் பார்க்க வந்து உள்ளே வர முடியாது ஊர் சுற்றி எதற்கோ, எங்கோ தேங்காய் உடைத்து ஒன்றுமே புரியாமல் வேண்டி நின்றது உண்மை தான். உனக்கு எதற்கு இந்த உண்மை? என்னுள் இருக்கும் இந்த உண்மை உன்னைச் சுடும். ஜார்ஜினா, உன்னைக் காயப்படுத்தும். வேண்டாம், என்னை விடு. தீப்பந்தம் பஞ்சுப் பொதி தாக்க, பற்றியெரிந்த பொதி தீப்பந்தத்தையும் விழுங்கும். சகலமும் பஸ்பமாகும். பற்றியது மடிந்து

தெரிந்தது. வாயும் வயிறுமாய் விதவையாய் ஆஸ்பத்திரியில் பிள்ளைப்பேறுக்காகக் கிடந்தபோது எத்தனை ஆறுதல்கள்...எவ்வளவு இதமான வார்த்தைகள். பிள்ளை பிறந்ததும் எத்தனை பரிசுப் பொருட்கள். அப்பனை விழுங்கிவிட்ட பிள்ளை என இவனை நான் நினைக்கக் கூடாது என்று இந்த குவார்ட்டர்ஸ் முழுவதும் ஆளுக்கு இவனுக்கு அனுப்பின பரிசுகளை என்னால் மறக்க முடியாது சத்தி.

இந்தியன் ஏர்லைன்ஸ் வெறும் நிறுவனம் அல்ல. நாம் மனிதர்கள் எனில் இந்த ஏர்லைன்ஸ் ஒரு குடும்பம். என் வினுவுக்கு நீ வேண்டப்பட்டவன்—இது உண்மை எனில் எனக்கும் வேண்டப்பட்டவன். நான் உன்னை வற்புறுத்துவது இந்த உரிமையில். மற்றபடி உன் தனிமையை உன் அந்தரங்கத்தைக் குலைக்கும் எண்ணம் எனக்கில்லை

எனக்கு உலகம் உதவிற்று நான் உலகத்துக்கு உதவ வேண் உலகம் என்பது மண்ணும் மலையுமா...சர்ச்சும் கோயிலுமா? உலகம் என்பது மனிதர்கள். மனிதனுக்கு மனிதன் உதவுவது கடமை. கடன். என்ன சாப்பிடுகிறீர்கள்...காபி? ஹார்லிக்ஸ்? ஹார்லிக்ஸ் கரைக்கட்டுமா அம்மா...''

—உள்ளே ஓடினாள் ஜார்ஜினா.

சத்தி பேசாது உட்கார்ந்திருந்தான். எதிரே ஒரு பலகையில் பூக்கள் வரைந்து 'நாளை இந்த வீட்டில் பலமும், கிருபையுமாய் இருக்கிறேன்' என்று எழுதப்பட்டிருந்தது. எதிரே மேஜை விரிப்பில் 'கடவுள் என்பது அன்பு' என்று லேஸ் பின்னப்பட்டிருந்தது. ஜன்னல் விளிம்பில் 'ஏசு என் மேய்ப்பர்' என்ற கலர் காகிதம் ஒட்டப்பட்டிருந்தது.

சத்திக்கு ஆடு மாதிரி ஆக வேண்டும் என்று தோன்றியது. ஆடுகூட இல்லை. ஆட்டுக்குட்டி. யார் கழுத்திலோ, கைகளிலோ தாங்கிப் போகும் ஆட்டுக்குட்டி ஆக வேண்டும் போல் இருந்தது

பற்ற வைத்தும் மடிந்து சாம்பல் குப்பையாகும் ஜார்ஜினா.'

ஜார்ஜினா அசைந்தாள்.

''சரி சத்தி, இன்று சொல்ல வேண்டாம். மனசும் உடம்பும் சோர்ந்து கிடக்கிறீர்கள். இன்று வேண்டாம். முதன் முதலாய் என் வீட்டுக்கு வந்து சண்டை வேண்டாம். உடம்பு தேறி ஒரு நாள் உங்களுக்கே விருப்பமிருப்பின் வந்து சொல்லுங்கள். 'ஒரு நாள் உன்னிடம் உண்மையைச் சொல்லேன்' என்று சத்தியம் செய்யுங்கள்.''

அவள் முகலாய் தாங்கி நின்ற கை நீண்டது. சத்தியின் முகத்துக்கு முன்னே நின்றது.

சத்தி பேசாமல் இருந்தான்.

''எதற்குச் சத்தியம்? நீ யார்...உன்னிடம் எதற்கு என்கிறீர்களா?''

நீட்டிய கை மடங்கியது.

சத்தி வேதனையுடன் அவளை நிமிர்ந்து பார்த்தான் ஜார்ஜினா தொடர்ந்து ஆங்கிலத்தில் பேசினாள்.

'நான் வேதனையில் வீழ்ந்தபோது நூறு பேர் ஓடி வந்தார்கள் சத்தி யார் யாரோ தாங்கினார்கள். இந்த குவார்ட்டர்ஸில்—ஏர் இந்தியா குவார்ட்டர்ஸில்—அத்தனை ஆண்களும் பெண்களும் ஓடி ஓடி உதவினார்கள் விழுந்து புரண்டு அழுதபோது ஒரு ராணுவவீரன் பெஹன்ஜி என்று தாங்கினான். யார் யாருக்குச் சகோதரி...நான் அவன் தோளில் முட்டிக்கொண்டு அழுதேன். அந்நிய புருஷன் அவன் என்னைத் தாங்கி நிறுத்தியபோது தான் சகோதரன் போல் உணர்ந்தேன். ஆண் தொடும் விதம் பெண்ணுக்குத் தெரியும். அவன் முகம் முழுவதும் சகோதர பாசம், உலகம் சிறியது மிகச் சிறியது எங்கோ உத்திரப் பிரதேசத்தில் இருக்கிற அவன், சொந்தச் சகோதரியாய் என்னை நினைத்தபோது உலகமே ஒரு குடும்பம் என்று

தலையை உலுக்கிக் கொண்டான்.

'மாடு மாதிரி வளர்ந்த பிறகு ஆட்டுக் குட்டி ஆக முடியாது. நடந்துதான் ஆகவேண்டும். நடக்கத்தே தீர வேண்டும். மேயச்சலுக்கு ஓட்டிப் போனாலும் சரி, தோலுக்கு ஓட்டிப் போனாலும் சரி, நானே நடக்க வேண்டும். ஆனால், நான் எங்கே போகிறேன் என்று தான் தெரியவில்லை

எங்கு போனாலும் தவறில்லை.

இங்கு வந்தது தவறு. வேளை கெட்ட வேளையில் இங்கு வந்து உட்கார்ந்து ஆடு திருடின கள்ளனாய் முழிப்பது பிசகு.

இவனுக்கு எப்படித் தெரியும் ஷோபனா லவ் பற்றி? யார் சொல்லியிருப்பார்கள்? அப்பாவா...அப்பாவாகத் தான் இருக்க முடியும்...ஒருவேளை, வின்செண்ட் சொல்லி யிருக்கக் கூடுமோ ..இருக்காது. வின்செண்ட்டுக்கு முழுக் கத் தெரியாது. அப்பா உளறியிருப்பார்...'யார் அந்தப் பெண்...யார் அந்தப் பெண்?' என்று துளைத்தெடுத்தார். இன்னமும் அவள்தான் காரணம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்.

அன்று கண் மூடியவிறு குலுங்க வெகுநேரம் அழுகது நினைவுக்குவந்தது. அவள் பிரிந்து போனதுக்கம் இல்லை. எல்லோருமே பிரிந்து போய் விட்டார்கள் என்கிற மாதிரி அழுதான். அவள மீது கோபம் வரவில்லை. துக்கம் வந்தது அவனால் வந்த துக்கம் அவளாலே பெரிதாயிற்று. எதற்குமே லாயக்கில்லையோ என்று தேவல் வந்தது. அப்போதும் பெண் கடவுளாய்த் தோன்றினாள். ஷோபனாலாக இல்லாமல், ஜார்ஜினாவாக இல்லாமல் ஒரு பெண் தோன்றினாள் பெரிய பெண். வானத்துக் கும் பூமிக்குமாய் உயர்ந்து நிற்கிற பெண் தோன்றினாள். எல்லா துக்கத்துக்கும் காரணம், எல்லா துக்க நிவர்த்திக் கும் காரணம், சகல விளையாட்டுகளுக்கும் காரணம் நாயே என்கிற மாதிரி தோன்றியது.

'ஜனனீ ஜனனீ... ஜகம் நீ அகம் நீ
ஜகதாரிணி நீ பரிபூரணி நீ
ஜகதாரிணி நீ பரிபூரணி நீ'

—உள்ளே அலறலாய்க் குரல் எழுந்தது. கனமையின் கனிதையாய் மனசு அழுதது. காற்றில் பறக்கிற பஞ்சு மாதிரி எண்ணங்கள் எங்கெங்கோ அலைந்தன. திசை யற்று, தரையில் தேய்ந்து சுழலில் அகப்பட்டு மூலையில் ஒதுங்கி யாரோடும் பேசாது ஒரு கதவிடுக்கில் சுவர்மூலை யில் சிக்கின குப்பைபோல் தன்னுள்தானே சுருண்டு கிடந்தான்.

இப்போதும் அப்படித்தான் படுகிறது. தூக்கினி காற்றின் மேலே பறந்து ஏதோ ஒரு வீட்டுக் கம்பி ஜன்னலில் சிக்கிக்கொண்ட ரோமச் சுருளாய் முன்னும் பின்னும் போக முடியாதபடி சிக்கிக் கொண்ட தலை முடியாய்க் கிடந்தான்.

சிறு தலைமுடி...உதிர்ந்த ரோமம் என்று தெரிந்ததும் ஜார்ஜினா என்ன செய்வாள்...சீ, போ! என்று எடுத்து வீசி விடுவாள். வீசுகிறவரை பேசாதிருப்போம்.

மனசு திடம் கொண்டது.

''சூடு சரியா இருக்கா பாருங்க?''

குடிக்கிற சூடாய், உயர டப்ளர் நிறைய ஹார்லிக்ஸ் வந்தது. குடித்துவிட்டு உதடு துடைத்து எழுந்தான்.

''வரேங்க.''

''சரி, சின்னராசு...''

''எதுக்கு அவன்?''

''எப்படிப் போவீங்க?''

''டிரைவர் துணை போதும்.''

''ஏன், சின்னராசு இருக்கே...சின்னராசு...''

''அவன் அடுத்த குவார்ட்டர்ஸ் ஓடியிருக்கான் பம்ப் அடிக்க. ஷோபாவா...ஷோபனாவா...அந்தவீட்டுக்கு...!'' ஜார்ஜினா அம்மா உள்ளிருந்தபடி குரல் கொடுத்தாள்.

"அட... எந்த ஷோபனா?"— சத்தி வியந்தான். திரும்பிப் பார்த்தான்

"நம்ப ஷோபனா ஸீட்டுக்குத்தான்."

"தப்பா நினைச்சிட்டிருக்கீங்க ஜார்ஜினா. அந்தப் பெண்ணுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை."

"வரிசையா பொய் சொல்லணும்னு தீர்மானம் பண்ணிட்டு லந்திருக்கீங்க. தூங்கற ஆளை எழுப்பலாம். தூங்கற மாதிரி நடிக்கிற ஆளை..."

"ப்ளீஸ்!"

"என்ன ப்ளீஸ்."

"உங்க முன்னாடி நான் நடிக்கலை. எனக்கு நடிக்க முடியாது."

"அதாவது, என்னைக் கண்டா ஒரு மரியாதை..."

"யெஸ்."

"அதான் பார்க்கறபோது மூஞ்சி திருப்பிக்கறீங்க போல..."

"ஸாரி."

"ஐயோடாப்ப... அஞ்சு நிமிஷத்துக்கு ஒரு தடவை இதைச் சொல்லிடறீங்க தவறாம..."

"அதுக்கு...?"

"ஏதோ காரணம் இருக்கு."

"இருக்கு"

"அதான் என்னன்னு கேட்கறேன்?"

"சொல்றேன்."

"எப்ப... செத்துப் போற போதா? நான் இருக்கிற திசை நோக்கிக் கைகூப்பிக் காத்து லழியாலா...?"

"ஜார்ஜினா..."

"யெஸ் சார்."

"உலகம் சிறியது!"

"உம்..."

"மறுபடி நாம் சந்திப்போம்."

"உம்..."

"எப்பலாவது ஒரு நாள் பேசவும் பேசுவோம்"

"ட்ரீம் ஷீட் பத்தியா?"

"இல்லை, என்னைப் பத்தி."

"உம்..."

"நிச்சயமா ஜார்ஜினா... அன்னிக்குக் குப்பை மாதிரி என்னைத் தூக்கியடிக்கப் போறீங்க."

"எதுக்கு?"

"உண்மை சொன்னதுக்கு."

"என்ன உண்மை. வின்சென்ட்டை நீங்க கொன்னுட்டீங்கன்னா...?"

"ஜார்ஜினா!"—சத்தி தள்ளாடினான். அதிர்ந்தான்.

"இப்படி நீங்க சொன்னதா உங்கப்பா சொன்னாரு. இதை நம்ப நான் தயாரா இல்லை ரெண்டு பெட்டி ஜில்லட்டின் ஸ்டிக் எடுத்து வர உங்களுக்கும் எனக்கும் இந்த ஏர்போர்ட்ல இருக்கற யாருக்கும் முடியாது. அது எங்கேயோ எதுக்கோ போக வேண்டியது. இலக்கு தப்பி இங்கே லெடிச்சுது. ப்ளீஸ், கட் தட் ஸ்டோரி."

சத்தி அயர்ச்சியுடன் முகம் நிமிர்த்தினான்.

"நான் வரேங்க. அப்பாகிட்ட சொல்லணுமே..."

"கடைசிவரைக்கும் சொல்லமாட்டீங்க?"

"சொல்றேங்க. அந்த அசிங்கமும் நடக்கட்டும்."

"சின்னராசு இல்லாத போயிடுவீங்களா?"

''நிச்சயம்''

''நான் வேணா வரட்டா துணைக்கு?''

''சேச்சே''

''பயம் இல்லையா?''

''எதுக்கு பயம்?''

''ஒட்டறானேன்னு பயம்.''

''உம்...''—தோள் குலுக்கிச் சிரித்தான்.

அவள் தகப்பனாரும் தாயும் வர, கைகூப்பினான். படியிறங்கினான்.

''சத்தி''

''யெஸ் மேடம் ''

''போய் ஒரு போன் பண்றீங்களா எதிர் வீட்டுக்கு?'' நம்பர் சொன்னாள்.

'ஏங்க...?''

''நல்லபடியா போய்ச் சேர்ந்திங்களோன்னு ஒரு கவலை இருக்கும்.''

''உங்களுக்கு ஏங்க அந்தக் கவலை?''

''உங்களுக்கு என் மேல வரலையா... அதே மாதிரி தான். தோழரே...பயப்படாத போன் பண்ணுங்க.''

''சரிங்க''—காருக்கு உள்ளே அமர்ந்து கைகூப்பினான் டாக்ஸி வளைத்து திரும்பிற்று. பின்பக்க வெளிச்சத்தில் ஜார்ஜினா தேவதை மாதிரி நின்றாள் கையசைத்தாள்.

களைப்பும் வயிற்றுக்குள் போன திரவமும் காற்று வீச்சில் தூக்கம் கொடுத்தது. உள்ளே குழல் ஒளி கேட்டது

'மாணிக்கச் சிலையே மரகதக் கொடியே
தாலே...தாலேலோ
மாதவன் தங்காய் மீன் வழி நங்காய்
தாலே... தாலேலோ'

உள்ளே இருக்கும் பிரமாண்டமான பெண்ணை மனசு தாலாட்டிற்று.

'பாண்டியன் குலத்தில் தோன்றிய கிளியே
தாலே தாலேலோ
ஆண்டவர் மடியில் ஆடிடும் கனியே
தாலே தாலேலோ
நாற்றிசை ஒளிர ஏற்றிய விளக்கே
தாலே தாலேலோ
போற்றிய பேர்க்கு புகல்தரும் நிழலே
தாலே தாலேலோ!'

மனத் தொட்டிலுக்குள் ஜார்ஜினா நின்றாள். இடுப்பில் இடது கை வைத்து வலது கையால் தன் முகத்தைத் தாங்கியபடி சிரித்தாள்.

இருட்டில் பின்பக்கம் வெளிச்சம் மின்ன, நிழலாய் நிழலுருவாய் நின்றாள். உள்ளே குழல் இசை சுழன்றது. வீணையும் கிதாரும் கொஞ்சின. தபேலா உருண்டது. உள்ளே அந்தப் பெண், வானமும் மண்ணும் தாண்டிய உருவம் வளர்ந்தாள். சிரித்தாள்.

''ஐயா!''— டிரைவர் கூப்பிட்டான். தோள் கொடுத்து நர்ஸிங் ஹோம் வாசலில் இறக்கி வராண்டாவுக்கு ஏற்றினான்.

''நர்ஸ், ஒரு போன் பண்ணிக்கட்டுமா?''

''உங்களுக்கு போல் வந்தது சார் இப்போ!''

''யாருங்க?''

''மிஸஸ் ஜார்ஜினா. நீங்க வந்துட்டீங்களான்னு கேட்டாங்க.''

சத்தி மெள்ளத் தலைகுனிந்து சிரித்தான். லெகு நாட்களுக்குப் பிறகு அதில் ஒரு வெட்கம் இருந்தது.

ஆனால் இதற்கு இந்தியன் ஏர்லைன்ஸ் ஊழியர்களின் ஒருமித்த ஆதரவு வேண்டும் என்று ராமசுவாமி நினைத்தார். விமான நிலையத்தில் செக்யூரிடியின் தீவிரம் அவருக்குப் புரியும். எனினும் ஏர்லைன்ஸ் ஊழியர்கள் தங்களில் ஒருவரை இதில் சம்பந்தப்படுத்தி பொது மக்கள் முன்னிலையில் ஏர்ஹோஸ்டேஸே துப்பாக்கி வைத்துக் கொண்டு போகிறாள் என்று எண்ணும்படி வைத்தது மிக அவமானமாய் கருதுவதால் இதுபற்றி முழுவிசாரணைக்கு சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் ஆட்பட வேண்டுமென்று... முற்றுப் புள்ளியே இல்லாது அவருள் வாக்கியம் எழுந்தது.

''ஏர்லைன்ஸ் ஊழியர்கள் பாதுகாப்புச் சட்டத்துக்கு உட்படாதவர்களா... பயங்கரவாதத்துக்கு அப்பாற்பட்டவர்களா... அவர்களை சோதனையிடக் கூடாது என்று ஏதாவது சட்டம் உண்டா... ஆமெனில் சொல் ராமசாமி, உன் சட்டையை உரித்து வெயிலில் நிற்க வைக்க ஏற்பாடு செய்கிறேன்.''

பாம்ப் ஸ்குவாட் காப்டன் ராஜு சுருக்கமாய் சுருங்கச் சொன்னார். இதைப் பெரிதாக்குவது தவிர வேறு வழியில்லை என்று தான் தோன்றிற்று ராணுவம், ராணுவப் பாதுகாப்பு உயர்வுதான். ஆனால் இந்தியன் ஏர்லைன்ஸ் நீ என்ன வேணா செய் என்று குப்புறப் படுக்காது

ராணுவத்திற்கு சிவிலியன்கள் மீது எப்போதுமே ஒரு காட்டம். எடுத்த உடனே குமாஸ்தாவுக்கு மூவாயிரம் சம்பளமா... எதுக்குமே பிரயோஜனமில்லாத ஏர்லைன்ஸ் செக்யூரிடி ஆபீஸருக்கு ஏழாயிரம சம்பளமா என்று கேட்கிறார்கள். இனி எப்படி சகிப்பது. ஏர்லைன்ஸ் செக்யூரிடி

''ஹலோ...! இருங்க இருங்க... உங்களுக்குத்தான்...''

''சத்தி ஹியர்?''—சந்தோஷமாய்க் குரல் கொடுத்தான்.''

''சத்தி, எங்கடா இருக்கே... நான் உன்னைத் தேடி வந்தப்போ நீ நார்லிங்ஹோம்ல இல்லையே... சரி, விட்டுக்கு வந்திருப்பியோனு இங்கே வந்தேன். எங்கடா போயிட்டே...?''—அப்பாவின் குரல் பதற்றமாய் ஒலித்தது.

''ஏர்போர்ட்டுக்கு''— சத்தி நிதானமாய்ப் பதில் சொன்னான்.

''அவ்வளவு தூரமா... எப்படிடா இருக்கே?''

''நல்லா இருக்கேம்பா. சந்தோஷமா இருக்கேன்.''

''சத்தி... சத்தி நிஜமாவா... குரலே மாறியிருக்கேடா... நான் வரட்டுமா?''

''வாயேன். பசிக்கிறதுப்பா. ஏதாவது கொண்டா போனைத் துண்டித்தான்.

''சிஸ்டர், நான் ஒரு போன் பண்ணிக்கலாமா...?''

''ஹலோ... நான் சத்தியநாராயணன். ஜார்ஜினா இருக்காங்களா?''

''சார்... குவார்ட்டர்ஸ் ஏதோ டிஸ்கஷன் நடக்குது.. ஆபீஸர்ஸ் வந்திருக்காங்க.

''எங்கே?''

''கம்யூனிடி ஹால்ல... கூப்பிடவா?''

''வேண்டாம். நான் போன் பண்ணேன்னு சொல்லுங்க. போதும்!''—போன் வைத்தான். கலவையானான்

மிக பொறுப்பான விஷயம். கண்ணில் பட்டவரை காலர் பிடித்து கைதி மாதிரி இழுத்து நடத்த முடியாது. இருநூற்றுப் பத்து ரூபாய் கொடுத்து திருப்பதிக்கு டிக்கெட் வாங்கினாலும் சரி...இரண்டாயிரம் கொடுத்துடெல்லிக்கு டிக்கெட் வாங்கினாலும் சரி...பயணிகள் தான் முதலாளி. மரியாதைக்குரிய நபர். அவர்கள் மனசு நோகாது அவர்கள் பதற்றமடையாது சகல பாதுகாப்பும் செய்வது கம்பியில் நடக்கற வித்தை. லோக்கல் ரௌடிகளை பஸ் பிரயாணி களை நடத்துவதுபோல் நடத்த முடியாது. முரட்டுத்தனம் காட்ட எத்தனை நேரமாகும்.

பயணிகளைப் பதற அடித்தது அடுத்த குற்றம். நாது பேரிடம் எழுதி வாங்கியிருக்கிறார். ஜூரம் தலைவலியும் மனக்லேசமும் இந்தியன் ஏர்லைன்ஸ்மீது அவநம்பிக்கை யும் அந்த டம்மி ஆபரேஷனால் தனக்கு வந்து விட்டது என்று எழுதி வாங்கியிருக்கிறார். ஊழியர்களை திரட்டி இது முறையல்ல என்று கூக்குரலிட வைத்தால் பாம்ப் ஸ்குவாட் திகிர் அடங்கும்.

ஆனால் இத்தனைக்கும் பிறகு ஒரு விஷயம் உறைக் கிறது. இத்தனையும் பாதுகாப்பின் பொருட்டே. நடந்தது. சென்னை விமான நிலையத்திற்கு பாதுகாப்பு தேவையில்லையெனில் பாம்ப்ஸ்குவாட் பின்வாங்கும். ஆனால் வினைஞருக்கு இந்தியன் ஏர்லைன்ஸ் செக்யூரிடி பொறுப்பேற்குமா என்று ராஜினாமா மிரட்டும் மிரட்டி எழுதும். எழுதியதன் பிரதியை டெல்லி பாதுகாப்பு அமைச்சகத்துக்கு அனுப்பும்.

சென்னை விமான நிலையப் பாதுகாப்பு ஏர்லைன்ஸ் செக்யூரிடிடமா... பொத்திக் கொண்டு உட்காரச் சொல் அவனை...உன் வேலையை நீ கவனி ராஜா, என்று பாம்ப் ஸ்குவாடைத் தட்டிக் கொடுக்கும். பிறகு பாம்ப்ஸ்குவாட் சகல இடமும் கை வைக்கும். எனவே இதை ஊழியர்கள் பிரச்சினையாக்கினால் தான், அவமரியாதை விஷயமாகக் கருதினால் தான் விஷயம் பெரிதாக வாய்ப்பு இருக்கிறது.

ஊழியர்கள் பிரச்சினையைக் கிளற ராமகவாமி தம்பூனிடி ஹாலில்கூட்டம் போட்டார் விநாயகர் சதுர்த்தி திருநாளுமன்று விமான புது வருடப் பிறப்பு எதாவது குழந்தைக்குப் பிறந்தநாள் என்று நடக்கும் கம்பூனிடி ஹாலில் ஆபீஸ் விஷயமாகப் பேச கூட்டம் போட்டதும் அதன் முக்கியத்துவம் இறந்து கலகலப்பாய் சிரிப்பும் கேலியுமாய் ஆரம்பித்தது. யாரோ கட்டை விரல் உயர்த்தி ஆட்காட்டி விரல் நீட்டி துப்பாக்கியால் சுடயாரோ சுருண்டு விழுந்தார்கள்.

ராமசுவாமிக்குக் கலவையாய் இருந்தது.

மெல்ல பிரச்சினையை விவரிக்கக் கூட்டம் அமைதியாய் கேட்டது. அக்கௌண்ட்ஸ் ஆபிஸிலிருந்து டிராஃபிக் ஆபிஸ் டெண்ட், கார்கோ இன்சார்ஜ் என்று எல்லோரும் இருக்கும் கூட்டம் சிந்தனையில் ஆழ்ந்தது. ஏர்லைன்ஸ் ஏக்குப் போக்கான ஆட்களை தேர்ந்தெடுப்பதில்லை. மிகுந்த புத்திசாலிகளை நிர்வாகம் விரும்பி கல்லடையிட்டு தேர்ந்தெடுத்திருந்தது. அப்படிப்பட்ட ஆட்களை உணர்ச்சி மயமாய் திருப்புவது கடினம். ஒரு விஷயம் சொல்ல ஒன்பது விஷயம் யோசிக்கிற ஆட்கள் இவர்கள். நூறு கேள்வி கேட்பவர்கள்.

நாம் எதிர்த்து பாம்ப் ஸ்குவாடுடன் போராட வேண்டாமா என்று ராமசுவாமி கேட்டார். நமது உயர் அதிகார வட்டத்திற்கு நமது பாதுகாப்பின்மையைச் சொல்ல வேண்டாமா.

''சொல்லுங்கள்-நாங்கள் என்ன செய்ய வேண்டு மென்று எதிர் பார்க்கிறீர்கள்.''

'ஒற்றுமை வேண்டும். உங்கள் அவமானம் என் அவமானம்.'

''ராமசுவாமி இது உங்கள் அவமானமில்லை. இயலாமை. நீங்கள் என்ன செய்ய முடியும், பாம்ப் ஸ்குவாடை.''

''ஏர்லைன்ஸ் அலுவலரை அவர் அறியாது அவர் பெட்டிக்குள் ரிவால்வர் வைத்தது பிசகு''

...கவும்...

"நிஜமாகவே இப்படி நடந்தது என்றால்... ஏர்ஹோஸ்
டஸுக்குத் தன் பெட்டியில் என்ன இருக்கிறது என்று
தெரியவில்லையெனில்... யார் குற்றம்.

"என்னிடம் டம்மி ஆப்பரேஷன் என்று தகவல்
சொல்லியிருக்க வேண்டும்."

"பிறகு அது எப்படி டம்மி ஆப்பரேஷன் ஆகும்.
ஏர்லைன்ஸ் ஸ்டாஃப் அலட்சியம். செக்யூரிடி ஏர்லைன்ஸ்
ஸ்டாஃபை செக் பண்ணாத விஷயம் எல்லாம் வருகிறதே,
பாம்ப்ஸ்குவாட ஸ்டிராங்காக இருக்கிறது என்பது என்
கருத்து."

"சந்தோஷம்—நாளை மறுபடி ஒரு டம்மி
ஆப்பரேஷன் கார்கோவில் நடக்கும். உள்ளே வந்து
பார்ஸல் எடுத்துப் போகிறவன் கையில், சிகரெட்
பெட்டியில் பாம் வைத்து விட்டுப் போகிற ஆப்பரேஷன்
நடக்கும். என்ன செய்வாய் அப்போது?"

'செக்யூரிடி உங்கள் வேலை, ராமசுவாமி."

"நான் கடுமையாக இருக்கப்போகிறேன் தோழர்களே"

"ஸோ வாட்... நல்லது தானே அது."

"இது, இங்கு நேற்று நடந்தது. சரி என்கிறீர்களா...
ஜார்ஜினா பதில் சொல்லட்டும்." ஜார்ஜினா எழுந்தாள்.

"கடுமைதான். அதிர்ச்சிதான். நூற்றுக்கணக்கான
உயிர்கள் பலியாவதைத் தடுக்க இது அவசியமெனில் நான்
இதை ஏற்கத் தயாராய் இருக்கிறேன். ஏனெனில் இம்
மாதிரி ஒரு நிகழ்ச்சி இங்கே நடந்து அதில் நான் இழந்தது
மிகப் பெரிய சொத்து. இந்த வேதனைக்கு இது... நேற்று
நடந்தது ஒரு பொருட்டே இல்லை. மேலும் நினைமுயா
டம்மி ஆப்பரேஷன் நடக்கும் நாம் அலுசரித்து தான்
போக வேண்டும்."

இரண்டு மூன்று பேர் கை தட்டினார்கள்.

ராமசுவாமி பலவீனம் உணர்ந்தார். இது சரிப்படாது என்று கண்டு கொண்டார்,

"என் எண்ணமும் அதுதான் உங்கள் அபிப்பிராயம் கேட்கலே கூட்டம் கூட்டினேன். உங்களுக்கு உங்கள் வேலையை, வேலை செய்யும் மனோநிலையை அது பாதித்திருக்கிறதா, என்று அறிய விரும்பினேன்."

கூட்டம் பிசுபிசுத்தது.

"ஒருவேளை நாளை இதுபோல் ஏதும் நடந்து உங்களுக்குக் குறையாக அது தோன்றி என்னிடம் புகார் வந்தால் இன்றைய மீட்டிங்கின் மினிட்ஸ் அன்று சாட்சிக்கு வரும். மிக்க நன்றி நண்பர்களே" உரத்த குரலில் ராமசுவாமி பேச கூட்டம் கலைந்தது.

ராமசுவாமி வேறு ஆயுதம் எடுக்கயோசனை செய்தார்.

அந்தப் பயணி எழுதிக் கொடுத்திருக்கிறான். தன்னை யாரோ சின்னப் பையன் மரப்பலகையால் அடித்து வீழ்த்தியதாக. முழு பலத்துடன் ஒரே போடு உச்சியில்போட்டு சரிய வைத்ததாக 'டம்மி ஆப்பரேஷனில் சின்னப் பையன் உண்டா ரௌடிகளும் பங்கா. ரோபோ எடுத்துசுபேதார் சின்னசாமி உள்ளே போக அவருக்கு உதவியாக ஒருசின்ன பையன் போனதாக இண்டர் நேஷனல் ஏர்போர்ட் அத்தாரிடி சொன்னார்கள். அடையாள அட்டை இல்லாதபோது சுபேதார்தான் வாங்கிடறேன் வுட்ருங்க என்றாராம்

யாரது... எங்கே அவன் என்று கேட்டபோது தெரியவில்லை என்றார்கள். இது ஒரு இஷ்யூ. பெரிசு பண்ணவாய்ப்புள்ள இஷ்யூ ஜார்ஜினா எதிர்பாராது தெரிவித்திருக்கலாம். ஸெண்டிமென்டலாய் பேசித் தொலைத்து விட்டது. இருக்கட்டும். என்னிடம் எங்கயாவது மாட்டாமலா போகும், செக்யூரிடி உள்ளே நுழையவிடமாட்டேன் என்று வரும்போது சாவு என்று சொல்லி விடவேண்டும். ...ளே கருவினார். வெளியே புன்சிரிப்புடன் இறங்கினார்.

அந்தப் பையனின் அங்க அடையாளங்கள் அவர்குறிப்பில் இருந்தன. செக்யூரிடி அஸிஸ்டெண்ட் கமிஷனர் குணசேகரனுக்கு தாக்கீதும் இதுபற்றி அனுப்பியாகி விட்டது. ஜீப் எறி குவார்ட்டர்ஸ் விட்டுப் போகும்போது குணசேகரன் ஸ்கூட்டர் முன்னால் போய்க் கொண்டிருந்தது. ட்யூட்டி முடிந்து விட்டிருக்கும். எங்கே போகிறார்...தாயபரம் பக்கம்? அரைகுறையாய் ஒரு கேள்வி ஓடிற்று.

சட்டென்று குணசேகரன் ஸ்கூட்டர் பின்பக்க திகப்பு விளக்கு எரியஓரமாயிற்று. டீக்கடைக்குப்போனது. டேய், என்று குரல் கொடுக்க டீ குடித்துக் கொண்டிருந்தபையன் டக்கென்று டம்ளர் வைத்துவிட்டு தெருவோடு ஓடினான்

ராமசுவாமி சட்டென அந்தப் பையனை மனசுள் படம் பிடித்தார்.

ஜீப் குணசேகரனை தாண்டிப் போயிற்று.

குணசேகரன் இந்தப் பையனைத் தேட வேண்டிய அவசியமென்ன...ஒரு கேள்வி. மரப்பலகையில் பயணியை அடித்த பையனோ.

"நில்லுப்பா."

ஜீப் நின்றது.

"இந்தா நீ இறங்கி டீ சாப்பிடு. வண்டியை நான் ஓட்டிப் போகிறேன். அதுவரை இங்கேயே இரு," எதிரே வரும் லாரிகள் தாண்டப் பிறகு ஓடித்துத் திருப்பினார்.

குணசேகரனை வழி முழுக்க கண்கள் தேடின.

நேர் எதிரே குணசேகரன் ஸ்கூட்டரில் அந்தப்பையனை ஏற்றியபடி போய்க் கொண்டிருப்பது தெரிந்தது. மீனம் பாக்கம் தாண்டி பரங்கிமலை எல்லைக்குள் போயிற்று. திருப்பியது. பூச்செடிகள் நிறைந்த வீட்டு வாசலில் நின்றது. சுபேதார் சின்னசாமி வெளியே வந்தார். வண்டியை வாசலில் நிறுத்திவிட்டு மூவரும் வீட்டுக்குள் போனார்கள். ராமசுவாமி ஜீப்பை அங்கேயே நிறுத்தினார்.

இறங்கி நடந்தார் சப்தம் எழாது படல் கதவு திறந்து வாசல் திண்ணையில் உட்கார்ந்து கொண்டார். உள்ளே பேசுவது சகலமும் அவருக்குக் கேட்டது.

"குணா நான் வாட்டமா இவனால மாட்டிக்கிட்டேன். அந்த ஐயருஎப்படா பாம்ப் ஸ்குவாட் மாட்டும்னு கருவிக்கிட்டிருக்கான். இப்படியாடா அடிப்பாங்க, டேய் கண்ணு, நீ ஊருக்குப் போயிடு. என்ன சொல்ற குணா? இவன் இங்க இருந்தா எல்லோரும் மாட்டுவம்."

ராமசுவாமி மீசையை முறுக்கிக் கொண்டார். பற்கள் தெரியசப்தமின்றி சிரித்தார். உள்ளே பூணூலும் குடுமியுமாய் தோன்றிய தகப்பனிடம் மாலசமாய் பேசினார்

'அப்பா...சாமர்த்தியங்களை விட ஒரு மனிதனை சந்தர்ப்பங்களே உயர்வாகவோ தாழ்வாகவோ மாற்றுகின்றன. சந்தர்ப்பத்துக்கு ஜாதி வித்தியாசம் இல்லை அப்பா. அப்பா. அது சகலருக்கும் பொது. அரசனை ஆண்டியாக்கும், ஆண்டியை அரசனாக்கும் அது பிராமணனை வீரனாக்கும். வீரனை வேதியனாக்கும்.

பாம்ப் ஸ்குவாடின் திரி கிடைத்துவிட்டது.

பாஸிடிவ் நெகடிவ் இரண்டும் கிடைத்து விட்டது. நெகடிவ் பையன் பாஸிடிவ் நான்—எப்போது இந்தப் பையனை நான் தொட்டாலும் பாமப்ஸ்குவாட் வெடிக்கும் அப்படி வெடிக்கவா, வேண்டாமா.

இடையே ஒரு சிறு தும்பு, பல் குச்சி சிக்கிக் கொண்டிருக்கிறது. உருவி எடுத்து விட்டால் இணைப்பு சரியாய் இருக்கும்.

அந்தப் பல் குச்சி சுபேதார் சுபேதார் சின்னசாமி... என்னை மன்னித்து மறந்த சின்னசாமி. அப்பா...நான் வெடிக்கவா வேண்டாமா.

''முதல்ல நீ ஊருக்குப்போடா..இன்னிக்கு ராத்திரியே போ'' குணசேகரன் பர்ஸ் எடுத்தபடியே வெளியே வந்தார்.

வாசலில் உட்கார்ந்திருந்த ராமசுவாமியைப் பார்த்தார். ''முகம் மாறினார்.'' சுபேதார் சார்... குரல் கொடுத்தார்.

சின்னசாமி வெளியே வர சட்டென்று அவர் முகம் இருண்டது.

''என்னங்க ஐயா'' சின்னசாமி வாய்க்கு குழறியது.

''குடிக்க ஒரு டம்ளர் ஜலம் கொடுங்க சுபேதார்.''

''ஐயா...''

''நிஜமாகவே தாகமா இருக்கு சுபேதார். எனக்கு தண்ணி தருவீங்க தானே. இல்லை பார்ப்பானுக்குத் தண்ணி தரமாட்டேன்னு சொல்வீங்களா...''

''பிடிச்சுட்டீங்க...பேசறீங்க. உள்ள வாங்க ஐயா.''

''எதுக்கு...வெளியே கொண்டாந்து கொடுங்க''

''எங்க குடிசைக்கு வரமாட்டீங்களா?''

''தாராளமா வருவேன்'' ஷூ அவிழ்த்து விட்டு உள்ளே நுழைந்தார்.

''அம்மா, ஒரு சொம்புத் தண்ணீர் எடுத்தா. இது எம் பொண்ணுங்க பக்கத்துல மாப்பிள்ளை போட்டோ காட்டினார் சிடில மாப்பிள்ளை நல்ல உத்தியோகத்துல இருக்காரு இரண்டு பேரப்புள்ளைங்க. இது சம்சார முங்க. புருஷன் மிலிட்டிரிக்காரன்னு ரொம்பப் பெருமை அம்மாடி, இவரு பெரிய அதிகாரி. கும்புட்டுக்க''

''வணக்கம்மா.'' ராமசுவாமி தண்ணீர் வாங்கிக் குடித்தார். சொம்பை சுபேதாரிடம் நீட்டினார்

''ஒரு ஹெல்ப் செய்யணும், சுபேதார்.

''ஐயா...''

''ஒன்னு இந்தப் பையன் எங்கியும் போகக்கூடாது, எனக்குத் தெரியாத. இரண்டு எனக்கு எல்லாம் தெரியும்னு உங்க அதிகாரி ராஜுகிட்ட சொல்லணும். மூணு டம்மி ஆப்பரேஷன் இனிமே எனக்குத் தெரியாத நடக்கக் கூடாது.''

''ஐயா...''

நம்மள்ள யார் பெரியவன்னு சண்டை போடறது அர்த்தமில்லை. ஏர்போர்ட் செக்யூரிடி பொதுவான விஷயம். எனக்கு மட்டும்தான் அக்கறைங்கறது நஷ்டத்துல முடியும். ப்ளீஸ், புரிஞ்சுக்கங்க. நான் ஸரேம்மா. பெரிய கும்பிடு போட்டார். குணசேகரனுக்கு அவர் பேசியது ஏதும் புரியவில்லை. ஏதோ சிக்கல் என்பது தெரிந்தது ராமசுவாமி வாசற்கதவு திறந்து நடந்து வெளியேறினார்.

ஒரே விச்சில் வண்டி திருப்பினார்.

வெற்றி பெற்றவன் வீரன் அப்போது தோல்வியடைந்தவன் யார்? எவர் தோல்வினைய முகம் மலர ஏற்றுக் கொள்கிறானோ அவனும் வீரன்தான் அன்று சின்னசாமியிடம் தோல்வி ஒப்புக் கொண்டதால்தான் இன்று ஜெயிக்க முடிந்தது. அப்பா வீரம் என்பதற்குப் பெயர் ஆவேசமல்ல, நிதானம். துவண்டு போகாத நிதானம், குதித்து களிக்காத நிதானம். அப்பா நான் செக்யூரிடி ஆபீஸர். முழு தகுதியும் உடைய செக்யூரிடி ஆபீஸர்.

ஜீப் சந்தோஷமாய் ஏர்போர்ட்டுக்குள் நுழைந்தது.

சத்தியநாராயணன் மடமடவென்று நீலத் தாளில் ஹிண்டு பத்திரிகைக்கு லெட்டர் டு எடிட்டர் எழுதினார். விமான பயணிகளும் பாதுகாப்பும் என்று தலைப்பிட்டான். பாதிக்கப்பட்ட பயணியின் உறவினர் என்ற பெயரில் டம்மி ஆப்பரேஷன் பற்றி எழுதி அதனால் ஏற்பட்ட வேதனைகளை எழுதினான்.

ஏர்போர்ட் பாதுகாக்கப்பட வேண்டிய விஷயம்தான் அதற்காக மிஷின்கன் ரவுடிகளுக்கு நடுவே நான் என்

உறவினருக்கு விடை கொடுக்க வேண்டுமா. பயங்கரவாதிகளுக்கு பயந்து கொண்டு பயணிகளை பயமுறுத்துவது முறைமா. ஏர்போர்ட் அதிகாரிகள், பெண்கள் உட்பட தாக்கப்படுவதைப் பார்த்த பிறகு எனக்கு இந்தியன் ஏர்லைன்ஸ் மீது நம்பிக்கை இல்லை. டம்மி ஆப்பரேஷன் என்று என்னையும் எவரும் அறையலாம். தைரியமுள்ளவர்களே பஸ்ஸில் பிரயாணம் செய்வார்கள் என்று கரி அடுப்பு பஸ் புழக்கத்திற்கு வந்த போது விளம்பரம் வருமாம். நமது ஏர்லைன்ஸும் அப்படி விளம்பரம் தரலாம். அடி உதைக்கு பயப்படாதவர்கள் விமானத்தில் பயணம் செய்யுங்கள் என்று படத்துடன். விளம்பரம் செய்யலாம். சட்ட சபையிலேயே அடி உதை நடக்கிறதே. விமான நிலையத்தில் நடந்தால் என்ன என்று ஆறுதலும் சொல்லலாம்.

பலவீன எதிர் கட்சி இருக்கும்போது ஆளும் கட்சி வைத்ததே சட்டம், போட்டிக்கு வேறு கம்பெனிகள் இல்லாதபோது இந்தியன் ஏர்லைன்ஸ் செய்வதே உபச்சாரம் வாழ்க பாரம், வளர்க வன்முறை'' என்று முடித்திருந்தான்.

இரண்டு நாட்கள் கழித்து அது பிரசுரமாயிற்று. அன்று ட்யூட்டியில் சேர்ந்தான். சகலரும் பத்திரிகை பிரித்து அதுபற்றி பேசிக்கொண்டிருந்தார்கள். டிக்கெட்டை நீட்டி பேர் பெற்றுக் கொள்ளும்போது ஒரு பயணி இரண்டு கன்னங்களையும் கேலியாக பொத்திக் கொண்டதாய் சொன்னார்கள்.

லஞ்ச் பிரித்து வைத்துக் கொண்டபோது ஜார்ஜினா பயணிகள் லிஸ்டுடன் உள்ளே வந்தாள்.

''ஹிண்டு பார்த்தீங்களா சத்தி. வாரியிருக்கான் யாரோ.''

''சாவட்டுங்க. அழுத்திடலாம்னு ட்ரை பண்ணா வராத போகுமா''

''பாலங்க. பாதிக்கப்பட்டது நாமதானே.''

''நாமன்னா...?''

''எல்லா ஏர்போர்ட் ஸ்டாஃபும். தேவையில்லாத பெரிசாக்கறாங்க.''

''அடி வாங்கின நீங்களே இப்படி பேசினா...''

''என்னை யாரும் அடிக்கலை.''

''சுவத்தோட சேர்த்து நிக்க வச்சாங்கன்னா...''

''இல்லையே.''

''நீங்கதானே...சொன்னீங்க.''

''உங்களுக்கிட்ட நான் சொல்லலையே.''

''ஏங்க பொய் சொல்றீங்க.''

''சிலசமயம் சொல்லலாங்க. நல்லதுக்கு சொல்லலாம். நீங்க சொல்லலையா?''

''என்னங்க.''

''தாம்பரத்துக்கு தேங்காய் உடைக்க வந்தேன்னு...''

''ஜார்ஜினா...''

''முழுசும் புரியாத யாரோ முட்டாத்தனமா எழுதிப் போட்டதுக்கு நாம எதிர்க்கணுமே தவிர காட்டிக் கொடுக்கக் கூடாது. அப்படி நடக்கவேயில்லைன்னு சொல்லணுமே தவிர...''

''அது நான்தான் எழுதினேன்.''

''சத்தி...ஏன்...'' கூவினாள்.

''உங்களை அடிச்சுட்டாங்கன்னதும் கோவமா...''

''அதுக்கு...அதுக்கு நீங்க ஏன்...''

''உங்க மேல ஒரு துரும்பு பட்டாக்கூட...''

''யேசுவே...'' ஜார்ஜினா ஆடிப்போய் உட்கார்ந்தாள். பிரித்து வைத்த டிபன் பாக்ஸைப் பார்த்தபடி சத்திய நாராயணன் தலைகுனிந்து உட்கார்ந்திருந்தான். டிபன் பாக்ஸ் எடுத்து மெல்ல மூடினான்.

ஜார்ஜினா சட்டென்று கைநீட்டி டிபன் பாக்ஸை பிரித்தாள் ''முதல்ல சாப்பிடுங்க. அப்புறம் பேசலாம். சரியான முட்டாள் நீங்க இந்தப் பூனையும் பால் குடிக்கு மான்னு இருந்துட்டு...''

''ஏன்... என்ன தப்பு நான் செய்தது,''

''தப்புன்னு உறுத்தி தான், வேற பேர்ல எழுதியிருக் கிங்க, உங்க பேர் போடாத.''

''நான் ஸ்பாட்ல இல்லை.''

''அப்ப எழுதியிருக்கக் கூடாது.''

''இந்த விஷயம் நடக்கவேயில்லையா?''

''நடந்தது. ஆனா நீங்க பயமுறுத்தற மாதிரி இல்லை. பாஸஞ்சர்ஸை கூப்பிட்டு கூப்பிட்டு அடிச்ச மாதிரில்ல எழுதியிருக்கிங்க. பாஸஞ்சர்ஸை போலீஸ் தொடவே யில்லை.''

தலைல அடிச்சு குப்புற போட்டாங்க

''அது யார் தெரியுமா...?''

''சின்னராசு...''

''அப்புறம்?''

''அவனை உள்ள விட்டது செக்யூரிடி மிஸ்டேக்''

''இந்தியன் ஏர்லைன்ஸும் ஏர்போர்ட் செக்யூரிடியும் பங்காளிகளா பரம்பரைசண்டையா,குணாமாட்டுவாரு'

''யாரு குணா?''

''அஸிஸ்டென்ட் கமிஷனர் செக்யூரிடி உங்களைப் பார்க்க வந்தாரே...''

''சாலட்டும்.''

''சரியான ஸாடிஸ்ட்யா நீ.''

''ப்ளீஸ்...யூ டோண்ட் அண்டர்ஸ்டாண்ட் மீ.''

''ஒன்னு புரிஞ்சுக்கங்க சத்தி. உடம்புல இடது கை மட்டும் செத்துடுமா. செத்தா அது உடம்பு பூரா எதி ரொலிக்கும். ஏர்போர்ட்டுங்கற...''

''ப்ளீஸ், எனக்கு வகுப்பு எடுக்காதிங்க.''

''எடுத்தாலும் புரியாத கேஸ்.''

''என்னை முட்டாள்ங்கறதுல ஒரு சந்தோஷம்.''

''சந்தேகமே இல்லை. எமோஷனல் முட்டாள்தான்.''

''ஓகே. போய் போலீஸ்காரன் கிட்ட உதை வாங்கி சாவுங்க. உங்களுக்கு பரிஞ்சுக்கிட்டு வந்தது என் தப்பு தான் கிட்டத்தட்ட ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் அழுதுட் டாரு என் கை புடிச்சுக்கிட்டு தெரியுமா.?

''அதானே பார்த்தேன்.''

''சத்தி.''

''ஆம்பளை கெஞ்சினா ஒரு கிக்குதான் எல்லா பொம்பளைக்கும்.''

''வேற அர்த்தத்துல தப்பா பேசினீங்க பளார்னு அறைஞ்சுடுவேன்''

''இரண்டு லேடீஸ்டாஃப், ஒரு பைலட் ஆகமுனு பேரை அடிச்சுப் போட்டிருக்கான். இதுக்கு ரோஷம் வரலைன்னா ஒரே அர்த்தம் தான்.''

''சத்தி''

''திரில்லுக்கு ஆசைப்படற பொம்பளைங்கன்னு

பளீரென்று சத்தியின் கன்னத்தில் ஜார்ஜினா அறைந்தாள். லிஸ்டை அவன் முகத்தில் வீசி விட்டுப் போனாள். அறைக்குள் அடித்த சத்தம் வாசலில் எதிரொலித்தது. பலரும் திரும்பிப் பார்த்தார்கள். மிரண்டார்கள்.

''வாட்...வாட் ஹாப்பண்ட்...'' என்றார்கள். ஜார்ஜினா கவுண்டருக்குப் போனாள். விசாரித்தவர்களை ஒதுக்கினாள். சத்தியிடம் கேட்டார்கள். சாப்பிடப் போறேன் என்ன வேணும் என்று பதிலுக்குக் கேட்க. ஒதுங்கினார்கள். புரியாமல் அலை மோதினார்கள். எதுக்கு எதுக்கு என்று தங்களுக்குள்ளே விவாதித்தார்கள்.

''எனக்குத் தெரியும் ஹிண்டுல பொய் சொல்ல மாட்டான். ஏர்போர்ட்ல அடிதடி நடந்ததுன்னு போட்டுருக்கே நமக்குத் தெரியலையேன்னு யோசிச்சேன். இன்னிக்குப் பார்த்துட்டேன். பருவப் பெண் பளீர் அறை வாங்கிபர் மயக்கம்.''

இரண்டு மணிக்கு ட்யூட்டி முடிந்து ஜார்ஜினா கைப்பை எடுத்துக் கிளம்பினாள்.

வாசலை நோக்கி நடந்தாள். பின்னே மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டது. சத்தி ஹெல்மெட் மாட்டிய தலையோடு அவளைக் கடந்தான்.

''சத்தி...'' கூவினாள்.

வண்டி பத்தடி போய் நின்றது.

பின்னால் ஏறிக் கொண்டாள்.

''டிராப் மீ ஸம்வேர் இன் சிடி''

''எங்க எக்ஸாக்டா?''

''எங்கியாவது.''

வண்டி கிளம்பியது. ஜார்ஜினா பின்னிட்டை இறுகப் பிடித்துக் கொண்டாள்.

காற்றில் தலை மோதியது. கோதிக் கொள்ளை எடுத்தபோது அவள் முழங்கை அவன் முதுகில் மோதியது.

''என்ன?''

''ஒண்ணுமில்லை...''

''தொட்டு கூப்பிட்டீங்க.''

''ஐயம் ஸாரி.''

''எதுக்கு.''

''அடிச்சதுக்கு.''

''சந்தோஷம்.''

''கோலமா சத்தி.''

''என்னிக்கு கவிதை கிடைச்சுதோ அன்னிக்கேதெரிஞ்சு போச்சு.''

''என்னன்னு''

''நீங்க என்னை கோச்சுக்க மாட்டீங்கன்னு.''

''ஏன்?''

''எம்மேல அக்கறை இருக்கிற ஜென்மம்னு புரிஞ்சு போச்சு—அப்புறம் கோபம் எதுக்கு''

''உங்களை எமோஷனல்னு சொல்லிட்டு நான் பிஹேவ் பண்ணது படுமோசம்.''

''நாம மனுஷங்க ஜார்ஜினா, தேவதைகள் இல்லை, எனக்கு ஒன்னு புரிஞ்சுது''

''என்ன...?''

''எல்லாக்குள்ளயும் நாய் இருக்கு. என்கிட்ட குற்ற உணர்ச்சிங்கற நாய், உங்கக்கிட்ட...''

''என்கிட்ட?''

''ஈகோன்னு ஒரு நாய்.''

பெண்களை கவனிக்கவும்...

''எனக்கு ஈகோவா? என்னைக் கேவலமா பிப்பான பொம்பளைன்னு பேசினா பதில் பேசாம கேட்டுக் கணுமா?''

''அதெப்படி முடியும். பளீர்னு அடிச்சாதானே கற்புக் கரசின்னு நிரூபிக்க முடியும்.''

''அதுக்கு அடிக்கலை சத்தி.''

''வேற எதுக்கு.''

''எல்லா பொம்பளைக்கும் கிக்குன்னு சொன்னீங்க. எல்லா பொம்பளையும் மட்டம்னு சொன்னீங்க. அதுல உங்கம்மாவும் உங்க அக்காவும் அடக்கம். அவங்களும் அல்பமான்னு ஒன்னு போட்டேன்.''

''ஆஹா...மாதர் குல மாணிக்கம்''

'சந்தேமில்லாத...''

''போலீஸ்காரன்'' புடிச்ச கவத்தோட சாச்சா மயங்கிடுவிங்க.''

''சிச்சுவேஷன் தெரியாத பேசறீங்க. இதே போலீஸ் தப்பா வேற நார்மல் டயத்துல ஏதாவது செய்திருந்தா பின்னியிருப்பேன்.''

''ஐ டவுட்...''

''ஒரு அடி புடரில விழுந்துரும்.''

''ஆட்சேபணையே இல்லை. அடி தாங்காத நான் வண்டியை விட்டுருவேன். ரெண்டு பேரும் நேர கைலாசம் போயிடலாம். அங்கே போய் சண்டை போடலாம்.'

''நான் கைலாசத்துக்கு வரலை.''

''சரி யேசுவோட தேவாலயத்துக்கு அவா செர்க்கத் க்கு...நான் வரலாமில்லையா?'

''வாங்கன்னுதான் கூப்பிடறேன்.''

''இப்ப இறங்கிடுங்க. அப்புறம் வரேன்.''

''சத்தி...''

''என்ன?''

''நீங்க என் கூட சண்டை போட்டது பத்தி ஏன் எல்லார்கிட்டயும் சொல்லலை.''

''எதுபத்தி.''

''நான் அடிச்சது பத்தி.''

''மறுபடி அடிப்பாங்க.''

''ஏன்?''

''பொம்பளைய அசிங்கமா கேலி பண்றியாடா படவான்னு இன்னும் ரெண்டு போடுவாங்க.''

''தப்புன்னு தெரியுதுல்ல.''

''யெஸ். நான் பேசினது தப்புதான்.''

''தெரிஞ்சே ஏன் அப்படி பேசணும்?''

''கோலம்.''

''யார் மேல.''

''உங்கக் கஷ்டம் கேட்டு பொறுக்காத சப்போர்ட் பண்றோம்...வலியோட ஓடி வந்து பார்த்தோம்...''

''வருது, வருது...''

''என்ன சத்தி...'' சத்தி வண்டியோடு தடுமாறினான்.

''உண்மை வருது.''

''ஆமா, உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்.''

''அப்படி என்ன அக்கறை''

''அதெல்லாம் சொல்ல முடியுமா?''

''லின்செண்டைக்கொன்னுட்டு ஜார்ஜினாவை விதவை யாக்கிட்டமேன்னு அக்கறையா?''

சத்தி பேசாதிருந்தான்.

''லின்செண்டை நீங்களா கொன்னீங்க?''

சத்தி மெல்ல ப்ரேக்போட்டு சிக்னலில் வண்டி நிறுத்தினான்.

''அது என்ன விஷயம் சத்தி.''

''துளைக்காதீங்க ஜார்ஜினா.''

''ஏன் எதுவும் வகையா பொய் கிடைக்கலையா. நாம்பரம் புள்ளையார் மாதிரி.''

''எங்க இறங்கணும்.''

''இந்தியன் ஏர்லைன்ஸ் குவார்ட்டர்ஸ்.''

''ஸிடில இறக்கி விடுன்னு சொன்னீங்க...''

''இல்லேன்னா ஆட்டோ பிடிச்சு போய்க்குலேன்.''

''எதாவது வேண்டுதலா...என்வண்டில வரணும்னு.''

''ஆமாம்.''

''என்ன விஷயம்?''

''உங்கக் கிட்ட மன்னிப்பு கேட்க முடியலை. அங்க நிறும்பவும் கேலி வரும் பாட்டு வரும். பேச்சு வரும்.''

''மன்னிப்புக் கேட்டாச்சில்ல...''

''கேட்டாச்சு.''

''இறங்கி வீட்டப் பார்க்கப் போறது. பையன் காத்திட்டிருப்பான்ல...''

''எம் பையன் மேல கூட அவ்வளவு அக்கறையா...?''

''உங்க பையன் மேல அக்கறைன்னு யாரு சொன்னாங்க இப்ப. நான் வின்சென்ட் பையனைப் பத்தி கவலைப்பட்டேன்.''

''எந்த வின்சென்ட்? நீங்க கொலை பண்ணினீங்களே அவரா...''

''பேசினது போறும்னு நினைக்கிறேன்.''

''ஏன்.''

''இனிமே மாம்பலம். இது எங்க ஏரியா.''

''அதனால என்ன...''

''இதுவரைக்கும்...ஏதோ நல்ல பேர் எடுத்துருக்கேன். நாலு பேர் இப்படி பாத்தாங்கன்னா...இறங்கிடுங்க. ப்ளீஸ்.''

''அப்படி ஒரு பயமா...அப்ப சரி...இறங்க முடியாது.''

''என்ன பண்ணுவிங்க.''

''நாங்க தான் ஆம்பளை கெஞ்சினா சிக்காகற சீப் பொம்பளைங்களாச்சே...விடமாட்டோம்.''

''வாழை இலைல முள்ளு பட்டாலும், முள்ளுல வாழை இலை பட்டாலும்...''

''இதெல்லாம் நாலு வருஷம் முன்ன...இப்ப, இது ஒழிஞ்சு நார் நாரா போன இலை. இனி எந்த முள் பட்டா என்ன...''

''சரி வீட்டுக்கு வரீங்களா?''

''வரேன். எனக்கென்ன பயம். இது உங்க ஏரியா, உங்க வீடு...உங்களுக்குத்தான் பயமா இருக்கும்.''

''ச்சே...ச்சே...எனக்கென்ன பயம்''

''உங்களுக்கு பயம் இல்லை? அப்புறம் எதுக்கு வாழை இலை...முள்ளுன்னு உபதேசம்...''

''எதோ நல்லது சொன்னேன்... கேட்கலைன்னா அப்புறம் உங்க தலையெழுத்து.''

''யாரு நல்லது சொல்றதுன்னு விவஸ்தையே இல்லாம போச்சு.''

''ன் எனக்கென்ன குறைச்சல்.''

க தான் கொலைகாரனாச்சே...''

''அப்பா...என்ன பேசினாலும் பதிலுக்கு குதறிடறீங்களே.''

''என் கிட்டயும் தாய் இருக்குன்னு நீங்க தானே சொன்னீங்க.''

''தப்பு தப்பு. அம்மா தாயே. இனிமே வாயைத் திறக்கலை. வீடு வந்தாச்சு இறங்குங்க.'' தான் ஜார்ஜினா கீழிறங்கினாள். வாசற் கதவு திறந்தாள். சின்ன சிமெண்ட் தளம் தாண்டிப் படியேறி காலிங்பெல் அழுத்தினாள்

ஒரு வயதான பெண்மணி எழுந்து தள்ளாடி கதவருகே வந்தாள்.

''யாரு...''

''நான் ஜார்ஜினா. சத்தியோட வேலை செய்யறேன். ஏர்போர்ட்ல.''

''சத்தி இன்னும் வரலையே.''

''வந்துட்டாரு.''

''அடடே...வாம்மா...'' பெரியவர் குரல் கேட்டது. முகம் மலர மனைவி தாண்டி கதவருகே வந்தார். தாழ் நீக்கினார்.

''வணக்கம் அங்கிள்.''

''வணக்கம் வா. உட்கார். இப்பத்தான் பேப்பர் படிச்சுட்டிருந்தேன். ஏர்போர்ட் கலாட்டா பத்தி டெட்டர்டு த எடிட்டர்...நீ படிச்சியா.''

''படிச்சேன் அங்கிள். யாரோ வேலையத்தவங்க எழுதிப் போட்டிருக்காங்க.''

சத்தி உள்ளே நுழைந்தான்.

''இது எங்க அம்மா.''

''வணக்கம்மா.''

''இந்தப்பொண்ணுதான் ஆஸ்பத்திரிக்குவந்தா...'' அம்மா வியப்புடன் கேட்டாள்.

''ஆமா வந்து சமர்த்தா மனசு உருக ப்ரே பண்ணித்து. கடிச்சு குதறி அனுப்பிட்டான் உம்புள்ளை.''

''சரி...என்னவோ போறாத காலம்.''

''விடுங்க அங்கிள். நான் சத்தியோடதான் இப்ப வந்தேன்...எடில் ஏதாவது ஷாப்பிங் போலாம்னு... அப்படியே உங்களைப் பார்த்துட்டு போலாம்னு''

''ஜலம் வேணுமா குடிக்க...''

''ம்ம்...குடுங்களேன்.''

கிழவர் குடுகுடுவென்று உள்ளே ஓடினார். பாட்டில் நீர் எடுத்து டம்ளரில் ஊற்றி நீட்டினார். உட்கார்ந்துக்கோ குழந்தே...''

''கிளம்பறேன் அங்கிள்.''

''உட்காரும்மா...இவ்வளவு தூரம் வந்துட்டு ஒரு வாய் காபி சாப்பிடாம போறதா...உட்காரு.''

''வீடு நல்லா இருக்கு அங்கிள்.''

''எப்பவோ வாங்கினது. எங்க இவன்?''

''மாடிக்குப்போயிட்டான். லுங்கி மாத்திண்டுவரேன்னான்.'' அம்மா பதில் சொன்னாள். உள்ளே போனாள்.

'சத்தி கொஞ்சம் சியர்ஃபுல்லாயிட்டாரு. கலனிச்சிங்களா.''

''என்னவோ ஏர்போர்ட்ல கலாட்டா, உன்னை அடிச்சுட்டாங்கன்னு பார்க்க வந்தானாம்... அதெல்லாம் ஒன்னுமில்லைன்னு நீ சமாதானம் பண்ணி அனுப்பினியாமே.''

''இப்ப கார்த்தாலகூட சமாதானம் பண்ணினேன்.''

''என்ன விஷயம்.''

''பொம்பளைங்களே சீப்பு, அல்பம்னாரு.''

''பேகலான்...அடிக்கடி இப்படித்தான்சொல்லுவான்.''

''போட்டேன் ஒரு அறை ''

''ஐயோ நடு ஆபீஸ்லயா.''

''ஆமா...''

''அலன் முரடானாச்சேம்மா.''

''தர்ம நியாயத்தை முரட்டுத்தனம் எதிர்க்கமுடியுமா அங்கிள்.''

''முடியாது. தர்மம் நிச்சயமா வெல்லும்.'' இவன் கத்தலையா...கோச்சுக்கலையா.''

''இல்லை. உங்க வீட்டு வரைக்கும் கொண்டாந்து விட்டுறுக்காரே.''

''ஆச்சரியம்தான், நிஜமாலே அறைஞ்சியா. எப்படி சும்மா இருந்தான்.?''

''அந்த உரிமையை அலர் மேல யாருமே எடுத்துக் கலை அங்கிள் நான் எடுத்துக்கிட்டேன். அடங்கிட்டாரு.''

''புரியறது.''

''அவருக்குத் தெரியும், தெரியும்னு தனியா ஒதுக்கிட் டீங்க. உங்களுக்குத் தெரியாதது பலது இருக்குன்னு சொன்னப்போ ஒதுக்கிடத்தான் வேணும்.''

''ஏன் இப்படி ஆனானாம் திடீர்னு. கேட்டியா...''

''ஏதோ சொன்னார்''

''விஸ்கென்ட்டு கொலைன்னா...''

''ஆமா...அதே கதை தான்...எப்படி என்னான்னு உதுக்கி எடுத்துட்டேன்.''

''சொன்னானா ''

''இல்ல அங்கிள்; மென்னு முழுங்கறார்.''

''நிஜமாலே ஏதாவது பண்ணித் தொலைச்சிருப் பானோ...''

''இருக்காது அங்கிள். எம் புருஷனை கொலை பண்ணின ஆளா என்னைப் பார்க்க ஆஸ்பத்திரிலேருந்து டாக்ஸி வச்சிக்கிட்டு வரும் எங்கயோ ஒரு சின்ன குழப்பம் என்னன்னு விசாரிக்கலாம்னு தான் ஸிடில வேலை இருக்கு லிஃப்ட் குடுங்கன்னு கேட்டுவந்தேன். வினு பத்தி எதாவது கேட்டுத் தெரிஞ்சுக்கணும்னு ஆசையா இருக்கு அங்கிள்.''

''நியாயம்தானே குழந்தே.''

''அப்ப நான் வரட்டுமா.''

''இரும்மா...காபி குடிச்சுட்டுப் போலாம். அம்மாடி காபி கொண்டா...இப்பத்தான் பால் வந்தது, குழந்தை எப்படிம்மா இருக்கான்.''

''நல்லா இருக்கான் அங்கிள். ஒரே ஆட்டம்.''

சத்தி இறங்கி வந்தான். லுங்கியும், அரைக்கைச் சட்டையுமாய் எதிரே வந்து உட்கார்ந்தான்.

''என்னடா கன்னம் சிவந்திருக்கு?''

''ஒண்ணுமில்லப்பா?''

''யாராவது அடிச்சாளா?

''இல்லியே''

''அடி வாங்கினதா கேள்விப்பட்டேன் ''

சட்டென்று நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

''நான் சொல்லிட்டேன்.''

சத்தி தலையில் அடித்துக் கொண்டான்.

''சரியான கிராக்குப்பா இவங்க.''

''சரி. அதை யார் சொல்றது...

''ஏன்... நீங்க வின்சென்டை கொலை பண்ணினதா உங்கப்பாக்கிட்ட சொல்லிக்கீங்க. எங்கிட்ட அடி வாங்கினதை சொல்லக் கூடாதா.''

''ஈஸ்வரா... என்னைக் காப்பாத்து...'' கை அடித்து கூப்பி வணங்கி விட்டு சத்தி மாடிக்குப் போனான்.

''மாடில தான் அவரு ரூமா.''

''ஆமா—அவனே போட்டுண்ட ஜெயில்.''

''நான் போய் பார்க்கட்டுமா''

''பேஷா.''

''நான் கிறிஸ்டியன்...உங்க வீட்டு உள்ளல்லாம்...''

''இது மனுஷா இருக்கற வீடுதாயி. மனுஷாளுக்குள்ள பேதமில்லை. தாராளமா சமையற்கட்டுக்குக் கூட போகலாம்''

மாடிப்படி வளைந்து திரும்பியது. கீழ் வராண்டாவுக்கு இணையாய் மேலேயும் வராண்டா இருந்தது. வராண்டா கதவு ஒருக்களித்து மூடியிருந்தது.

மெல்லக் கதவு தட்டினாள். கை வைத்துத் திறந்தாள். நேரே நேர் எதிரே நீலச்சுவரில் பதினாலுக்குப் பத்தில் வின்சென்ட் போட்டோவில் இதழ் பிரிய சிரித்துக் கொண்டிருந்தான்

''வினு...'' உள்ளே சத்தமின்றி ஒரு குரல் எழும்பியது அவள் நிழல் ஆட ஜன்னலருகே நின்று வெளிப்பக்கம் பார்த்துக் கொண்டிருந்த சத்தி திரும்பினான்.

''வா...ஜார்ஜினா'' என்றான்

ஜார்ஜினா வினுவின் அருகில் போய் நின்றாள். இந்த படம் எடுத்த போது அவளும் இருந்தாள். அவனுக்கு வெகு அருகே நாலடி தூரத்தில் அவன் சிரிப்பை ரசித்தபடி இருந்தாள்.

28

ஏர்லைன்ஸ் முன்பு நடத்திய ஒரு டோர்னமெண்ட்டின் போது எடுக்கப்பட்ட படம் அது. வெள்ளைச் சிரிப்புடன் வின்சென்ட்! காற்றில் அலையும் தலை முடி... ஒரு நாள் சலரம் விடப்பட்ட முகம். வெகு தொலைவில் பனிமூட்டமாய்ப் பரங்கிமலை.

''இந்த போட்டோ ஏன் சத்தி உங்க ரூம்ல?'

''ஞாபகத்துக்குத் தான்.''

''என் புருஷனைக் கொலை பண்ண ஆளா நீங்க... கொலை பண்ணிட்டுப் படத்தை லெச்சுக் கும்பிட நீங்களா?''

சத்தியநாராயணன் பேசாதிருந்தான்.

''என்ன சத்தி நடந்தது...?''—மெல்லிய குரலில் ஜார்ஜினா கேட்டாள்.

சத்தி நகர்ந்து போய் ஜன்னல் வழியே வெறிக்கத் துவங்கினான்.

''சத்தி நான் கஷ்டப் படுவேன்னு மறைக்கறீங்களா இல்லை. நெஜமாகவே ஏதாவது தப்புப் பண்ணிட்டுத் தவிக்கறீங்களா...? அது தெளிவான கேஸ் மெட்ராஸ்ல குண்டு வெடிக்கறதை அந்தக் குண்டு லெச்சவனே விரும்பலை இரண்டுகூட்சேல்ஸ்கிலோனுக்குப் போகலைன்னு தெரிஞ்சவுடனே அவன் பதறி எல்லாருக்கும் போன் பண்ணியிருக்கான். டெலிபோன்ல கத்தியிருக்கான், திட்டியிருக்கான். அப்படி இருக்கறப்போ நீங்க எப்படி இன்வால்வ் ஆகமுடியும்?''

சத்தி திரும்பாமல் நின்றிருந்தான்.

ஜார்ஜினா மெல்லப் போய் அவன் தோள் தொட்டாள். திருப்பினாள்.

"நான் துளைச்சுத் துளைச்சு ஏன் கேட்கறேன் தெரியுமா...விஜு கடைசியா பேசின வார்த்தை என்ன... கடைசியா சாப்பிட்ட உணவு என்ன...சாகறத்துக்குக் கொஞ்ச நேரம் முன்னால அவர் மனசு நிலைமை என்ன... என்னைப் பத்தி ஏதாவது சொன்னாரா... செத்துப் போகப் போறோம்னு அதுக்குத் தெரியுமா...? எனக்குத் தெரியலை சத்தி. விஜு செத்துப் போகும்னு நான் நினைச்சதேயில்லை. சுடு சோறு..."—சட்டென்று நிறுத்தினாள் சங்கள் மூடிக் கொண்டாள். சற்றுத் தள்ளாடி னாள். கால்கள் வலுவிழந்தன. விஸ்செண்ட் நினைப்பில் உடம்பு நடுங்கிற்று. மெல்ல நகர்ந்து சக்தியின் கட்டிலில் உட்கார்ந்து கொண்டாள். கால்களைக் கட்டிலில் வைத் துக் கால்களுக்கு நடுவே முகவாய் வைத்து முழங்கால தட்டித் தரை வெறித்தாள்.

சத்தி அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்

"சரி...சொல்ல வேணாம். எப்பவும் என் புருஷன் நினைவுதான்னு நான் சொல்லமாட்டேன்...மறக்குது... மெள்ள மெள்ள மறக்குது. அழுது அழுது சுருண்ட காலம் போய் அடி மனசுல சினை தித்திப்பா, ரொம்ப மெல்லி சாத் தான் நினைவு இருக்கு இப்போ இந்த போட்டோ இவ்வளவு பெரிசா பார்த்ததும் குபீர்னு கிளம்பிடுச்சு. இப்போ என்கிட்ட இருகறது வெறும் க்யூரியாஸிடி... அதெப்படி சொல்லாம கொள்ளாம ஒரு ஆள் டக்குன்னு சால முடியும்னு ஒரு ஆச்சரியம். துக்கம் மறைஞ்சு போச்சு சத்தி; மழுங்கிப் போச்சு. இன்னும் மழுங்கும்னு நல்லா தெரியுது விஸ்செண்ட்—முழுப் பேர் என்னாங் கன்னா ரெண்டு நிமிஷம் யோசிச்சுத்தான் சொல்லப் போறேன். ஓகே...உங்க புண்ணை நான் கிளறுவானேன். விடுங்க. நான் வரட்டா..."

"அம்மா, காபி!"—பெரியவர் டபரா டம்ளருடன் உள்ளே வந்தார்.

"ஐயோ,என்ன நீங்க போய்... நானே வரேனே தேழே..."

"சூடு ஆறிடும்..."

"ஒரு குரல் கொடுத்தா உடனே ஓடி வந்திருப் பேனே..."

"அது மரியாதை இல்லை. விருந்தாளி இருக்கற இடத் துக்குத்தான் விருந்து வரணும். சாப்பிடுங்கோ. என்ன சொல்றான் புள்ளையாண்டான்?"

"நானும் எப்படி எப்படியோ கரணம் போட்டுப் பார்த்துட்டேன். ஒண்ணும் பேரமாட்டேங்குது."

"அழுத்தக்காரன்."

"இல்லை அங்கிள். நிஜமாகவே ஏதோ ஒருதுக்கம்..."

"சொல்லித் தொலைக்க வேண்டியதுதானே..."-சத்தி யின் அப்பா அலுத்துக் கொண்டார்.

"வேணாம் அங்கிள். நான் கிளம்பறேன். அப்படியே குழந்தைக்கு ஏதாவது பாண்டிபஜார்ல வாங்கிட்டுப் போறேன்."

"டேய்... கொண்டுபோய் பஸ்ஸ்டாண்டுல விடுடா லொங்கு லொங்குன்னு தி. நகர் வரைக்கும் நடக்கணும்."

சத்தி பாண்ட் பாக்கெட்டிலிருந்து பர்ஸ் உருவிச் சட்டைக்குள் வைத்துக் கொண்டான்.

"இந்தப் பக்கம் வந்தா வீட்டுக்கு வாங்கோ."

உபசாரத்தை சிரிப்புடன் ஏற்றாள்.

ரங்கநாதன் தெருவில் இறங்கிக் கொண்டாள். சத்தி ஒரு நகைக்கடை வாசலில் வண்டி நிறுத்திப் பூட்டினான். லுங்கி உதறிக் கட்டிக் கொண்டான்.

"என்ன வாங்கணும்?"

"ஏதாவது சட்டை புதுவிதமா இருந்தா..."

"வாங்க...இந்தக் கடைக்குப் போகலாம்."—பெரிய ரெடிமேட் கடைக்குக் கூட்டிப் போனான்.

பூப்போட்ட சட்டைகளை அவள் எடுக்க முயன்ற போது, "என்ன இது...பெண் குழந்தைக்கு எடுக்கற மாதிரி. விடுங்க...அந்த வரிசைலேருந்து எடுப்பா..."

கழுத்தோடு ஒட்டின காலரும், முக்கால் கையும், கட்டம் போட்டதும், சற்றுத் தொள தொளப்பானதும் எடுத்தான். சட்டையும் நிக்கரும் தொப்பியுமாய் அந்த செட் இருந்தது.

"இது பெரிசுங்க சத்தி."

"இல்லை. சரியா இருக்கும்."

பனியன் துணியில் நிறைய டீ ஷர்ட்ஸ் போடப் பட்டது. நாலு செட் எடுத்தான்.

"ஒன்னு போதும் சத்தி, சும்மா போட்டுப் பார்க்கறத்துக்குத்தான்."

"எல்லாம் போட்டுப் பார்க்கலாம்." அதே கடையில் விளையாட்டுச் சாமான்களும் இருந்தன. கிரேனும், ஹெலிகாப்டரும், டேபிள் நாற்காலியும், கோத்துக் கோத்துச் செய்கிற பிளாஸ்டிக் செட் வாங்கினான்.

"என்ன இது!"

"என் பரிசு!"

"அலனுக்குத் தெரியாது இந்த கேமெல்லாம்."

"வாங்கித் தந்தா தானா செய்வான்."

எல்லாமாகச் சேர்ந்து நானூறு ரூபாய் பில் ஆயிற்று. சத்தி சகலத்துக்கும் தானே கொடுத்தான்.

"சத்தி, இது டூ மச். எனக்குப் பிடிக்காது."

"எனக்குத் தெரியும். ஆனால், உங்களுக்கென்று ஒரு சிறு குண்டூசிகூட இந்தப் பையில் இல்லை. இது வின் சென்ட் மசனுக்காக."

"இந்த அக்கறை இத்தனை நாள் எங்கே போச்சு?"

"பயம்தான்."

"யார்கிட்டே?"

"உங்ககிட்டதான் ஜார்ஜினா. உங்க சாயல்ல யார் பார்த்தாலும் மிரண்டு போய் நிக்கற பயம் எனக்கு."

"ஆனா, காரணம் என்னன்னு சொல்லமாட்டீங்க..." சத்தி மௌனமாய் இருந்தான்.

"உங்க அந்தரங்கம் எனக்குத் தேவையில்லாத விஷயம் தான். ஆனா, அது என் புருஷனைப் பத்தி இருக்கறதால தான் கேட்க வேண்டியிருக்கு."

"ப்ளீஸ் ஜார்ஜினா...நிச்சயமா ஒரு நாள்..."

"சத்தி, நல்ல நட்புக்கு நடுவுல ரகசியம் இல்லை ஒளிவு மறைவு இல்லை. புறம் சொல்லுதலும் இல்லை. வின்சென்ட் உயிரோட இருந்தப்பவும் நீங்க உண்மையா இல்லை. செத்த பிறகும் உண்மையா இல்லை. இந்தாங்க உங்க பை. இது எனக்கோ என் பிள்ளைக்கோ வேண்டாம்" ஜார்ஜினா இறங்கி நடந்தாள்.

"ஜார்ஜினா, ப்ளீஸ்!" — சத்தி பின்தொடர்ந்து ஓடினான்.

"ச்சு...போயிடுங்க சத்தி. நல்லாயில்லே இது."

"கோபப்படாதீங்க ஜார்ஜினா."

"கோபமா...எனக்கா... கொஞ்சம் கூடக் கோபம் இல்லை சத்தி. நான் சாதாரணமாத்தான் ப்ரே பண்ண வந்தேன். நீங்க தூக்கியெறிஞ்சபோது சிலது சில பேர் சொன்னாங்க. அதை வெச்சுக்கிட்டு என் புருஷன் பேசின கடைசி வார்த்தை என்னன்னு தெரிஞ்சுக்க வந்தேன். சாகறதுக்கு முன்னே என்னைப் பத்தி எதுவும் சொன்னாரான்னு தெரிஞ்சுக்க சாதாரணமா ஆசைப்பட்டேன்.

இத்தனை பெரிய படம்...அதுக்குப் பூ...கலங்கிப் போக்க. நிஜமாலே எதாலது தப்புப் பண்ணிட்டீங்களோ... அதை மறைக்கத்தான் இத்தனை செலவு பண்றீங்களோன்னு தோணுது. இந்த டிரஸ் எடுத்துட்டுப் போனா இதைப் பாக்கறப் போல்லாம் இந்தக்கேள்வி வரும். என் பின்னால வராதீங்க சத்தி. என் புருஷன் கடையா என்ன பேரினா என்ன...என்கிட்ட கடைசியாபேரினது என்காதுக்குள்ளே இருக்கு அது. போறும் நான் போறேன். என் பின்னாலயே வராதீங்க சத்தி.''

''இதான் அவன் பேச நான் கேட்ட கடைசி வார்த்தை ஜார்ஜினா.''

ஜார்ஜினா நின்றாள்.

''என்ன அது...?''

''என் பின்னாலயே வராத சத்தி. நான் போறே'னு சொன்னான் அது தான் நான் கேட்ட கடைசி வார்த்தை

''அப்புறம்...?''

''நான் கிளம்பி குவார்ட்டர்ஸுக்கு வந்துட்டேன்.'

''எந்த குவார்ட்டர்ஸ்... நேஷனல் ஏர்போர்ட் அதாரிடி?''

''ஆமா.''

''ஷோபனா பார்க்கலா?''

சத்தி தலை குனிந்தான்.

''உம்...அப்புறம்...''

''சொல்றேன்...''

சத்தி மாம்பலம் ஸ்டேஷனுக்குள் நுழைந்தான். ஜார்ஜினா பின்தொடர்ந்தாள். தென்கோடில் ஒரு பெஞ்சில் உட்கார்ந்தார்கள், காற்று குளுமையாய் வீசிற்று. மெள்ள இருள் கவியத் துவங்கியது.

..ஷோபனாவுக்கும் எனக்கும் ஆறு மாசமா லவ் இனம் னர் சுத்துலோம். எனக்கு மார்னிங் ஷிஃப்டா இருந்தா ஈவினிங் இல்லேன்னா மார்னிங் னர் சுத்துலோம். அன்னிக்குப் பன்னிரண்டுமணிலெயில்லபீச்சுலஉட்கார்ந்து பேசினோம். மியூசியம் போனோம். தாசப்பிரகாஷ்ல சாப்பிட்டோம், எனக்கு ஈவினிங் ஷிஃப்ட். போன்ல அரை நாள் லீவு சொன்னேன். சுத்தினது போறலை. அவளை விட்டுப் பிரியவே முடியலை. மெட்ராஸ்ல எங்கெல்லாம் உட்கார்ந்து பேச முடியுமோ அங்கெல்லாம் உட்கார்ந்து அரட்டையடிச்சோம். மறுபடி ஏர்போர்ட் போன் போட்டேன். வின்செண்ட்தான் எடுத்தான். 'டேய்... இன்னிக்கு உனக்கு எக்ஸ்ட்ரா ட்யூட்டி. சிலோன்ஃப்ளைட் பார்க்கணும்... இன்னிக்குன்னு இப்படிக் கழுத்தறுக் றியே...?'ன்னான், 'எட்டு மணிக்கு வந்துடுவேன்'னு ப்ராமிஸ் பண்ணினேன்

எட்டு பத்து... அவளை குவார்ட்டர்ஸ் வாசல்ல விட்டுட்டுஏர்போர்ட் ஓடினேன். வின்செண்ட்திட்டினான். காரணம் கேட்டான். ஷோபனாவோட நான் சுத்தறது அவனுக்குத் தெரியும். 'வேலையில மரியாதையக் காப்பாத்திக்கடா... அசிங்கமா பேசறாங்க உன்னை'னு கண்டிச்சான். அவனை ரிலீவ் பண்ணிட்டு சிலோன் கௌண்ட்டர்கிட்ட போனேன். ஷோபனாவைப் பார்க்க கணும்போல்இருந்தது. வீட்டுக்குப்போனாதிட்டுவாங்கனு சொல்லிக்கிட்டே போனது ஞாபகம் வந்தது. ஏன் லேட்டு?'னு கேட்டு அவங்க அப்பா அடிக்கிற மாதிரி ஒரு உணர்வு ரொம்ப படபடப்பாயிடுச்சு மறுபடிவின்செண்ட் கிட்ட போய்க் கெஞ்சினேன். 'பகல் முழுக்கச் சுத்தி யிருக்கே...உனக்குப் புத்தியே கிடையாதா...நான் வீட்டுக் குப்போக வேண்டாமா?'ன்னான். 'அரை மணில வந்துட றேன் குவார்ட்டர்ஸ் போயிட்டு'னு கெஞ்சினேன். முடியவே முடியாது, வீட்டில எம்பொண்டாட்டி காத்துக் கிட்டிருப்பா... சாப்பிடணும்'ன்னான். 'ப்ளீஸ்'னு கை பிடிச்சுக் கெஞ்சினேன். 'பசிக்குதுடா. அவ குடா சமைச்சு

லெச்சுட்டு எனக்காகக் காத்துக்கிட்டிருப்பா... இப்படி ரோதனை பண்றியே'ன்னான். 'அரை மணிதான்...ரியா அரை மணிதான்'னு கெஞ்சினேன். 'சாவடிக்கறடா' னு கையை உதறினான். 'குடும்பம், பொண்டாட்டி இதெல்லாம் உனக்குத் தெரியாதுடா'ன்னான்.

எனக்குத் தாபம் வந்திடுச்சு. 'பொறாமைடா...லெ பண்றவங்களைப் பார்த்தாலே உங்களுக்கெல்லாம் பொறாமை. சரி, நானே சாவறேன். நீ சந்தோஷமா போ'னு ஸீட்டுக்கு வந்தேன். என்னை நினைச்சானோ விஸ்சென்ட் தெரியலை. மறுபடி என் ஸீட்டுக்கு வந்து என் வேலையைக் கவனிச்சான்.

மணி எட்டு தாப்பது. 'ரெண்டு சூட்கேஸ், பாசஞ்சர் அடையாளம் காட்டலை'னு போன் வந்தது. ரெண்டு பேரும் போய்ப் பார்த்தோம்.

ப்ரௌன் கலர் சூட்கேஸ். ரெண்டும் சரியானவை. பாசஞ்சர்ஸ் பேர் செக் பண்ணினோம். உள்ளே ப்ளேனுக்குத் தகவல் கொடுத்தோம். அப்படி ஆளே ஏறலைன்னார்கள். சந்தேகம் வந்திடுச்சு. ஏதோ தப்புன்னு தோணிச்சு.

மறுபடி ஷோபனா நினைவு. அதெல்லாமோ விஸ்சென்ட்டும் என்னை மாதிரி இருப்புக்கொள்ளாம தவிச்சான். 'நான் போகட்டுமா?'னு கேட்டேன். சாவடிக்கறே என்னை. ஜார்ஜினா காத்துக்கிட்டிருக்கும்டா நீ பார்த்துக்கன்னான்.

'அரை மணில ஓடி வந்துடறேன்'னு கெஞ்சினேன். பின்னாலயே போனேன். 'என் பின்னால வராத. நான் போறேன். சென்ட்டருக்குப் போய்த் தொலைய றேன்'னு கத்தினான்.

வெளியே வந்தேன். ஏர்போர்ட் அத்தாரிடி ஆள் வாசல்ல மடக்கினார். 'ரெண்டு சூட்கேஸ் அடையாளம் காட்டாம தனியா இருக்கா?'ன்னாரு. 'ஆமா'ன்னேன். 'அதுல பாம்ப் வெச்சிருக்கிறதா போன் வந்தது'ன்னாரு.

எனக்கு உள்ளே போறதா வெளியே போறதான்னு தெரியலை. 'விஸ்சென்ட்டுன்னு ஒருத்தர் இருப்பார். அவர்கிட்ட போய்ச் சொல்லுங்க. எனக்கு ட்யூட்டி முடிஞ்சுபோச்சு'னு சொல்லிட்டு வெளியே வந்து...குவார்ட்டர்ஸ் காலி டாங்க்ல ஷோபனாலோட கொஞ்சிக் குலாவி... கடலளே...' —சந்தி கண்களை மூடிக்கொண்டான்.

அவன் கண்களைத்தாண்டி பெரும் புகை எழுந்தது. ஆஸ்பெஸ்டாஸ் ஓடுகள் பறந்தன. தீப்பிழம்பு கனிந்து ஜ்வலித்துப் பரவியது.

ரொம்ப அல்பம் நான். விஸ்சென்ட்தான் அந்த சூட்கேஸை கஸ்டம்ஸ் ரூமுக்குக் கொண்டு போயிருக்கணும். அவனுக்கு பாம்ப் பயமுத்தல் தெரியுமா தெரியாதான்னு தெரியலை

போன்ல சொன்னதுக்கு முன்னாடியே பாம்ப் வெடிச்சிருச்சு. மாட்டேன். மாட்டேன்னு கெஞ்சினவனை நிக்க வெச்சு அவனுக்குத்தகவலும் சரியா தராம...என் காதல், என் காமம்னு ஓடிவந்து...என் பொறுப்பை அவன் தலையில சுமத்தி...'சாவடிக்கறடா'னு அவன் சொன்னது நிஜமாயிடுச்சு ஜார்ஜினா...நான்தான் அவனைச் சாகடிச்சேன். பசிக்குதுன்னான்...அது கூடக் காதுல போட்டுக்கலை... 'ஜார்ஜினா காத்துக்கிட்டிருக்கும் சோறு வடிச்சுட்டு'ன்னான்...அதான் உங்களைப்பத்தி நான் அவன் வாயால கேட்ட வாக்கியம்.

நீங்க தரையில விழுந்துபுரண்டு அழுதபோது பக்கத்துல இருந்தேன். ஐயோன்னு யாருக்கும் தெரியாம கதறினேன். ஒருத்தருக்கு ரெண்டுபேரைச் சாகடிச்சுட்டேன்னு நினைச்சேன். அப்புறம்தான், இல்லை மூணுபேரு...நீங்கபிள்ளை உண்டாயிருக்கறது தெரிஞ்சுது கண்ணை மூடிப் படுக்கற போதெல்லாம் நீங்க 'விஜுப்பா, விஜுப்பா'னு புரண்டு அழறது... 'பசிக்குது, சாவடிக்கறியேடா'னு அவன் கத்தினது எல்லாம் ஞாபகம் வருது."

சத்தி பேச்சை நிறுத்தினாள்.

மெழுகுவர்த்தி விளக்கை அணையாமல் ஜார்ஜினா வெறித்துக் கொண்டிருந்தாள்.

அவள் கண்களிலிருந்து நீர் கோடாய் இறங்கியது.

மெல்லத் தலை உயர்த்தி வானம் பார்த்தாள் சிரித்தாள்.

''ஸோ...எல்லாம் சொல்லிட்டீங்க ''

''ஆமா ஜார்ஜினா.''

''என் புருஷனைக் கொன்னது நீங்கதான். உங்க உறுத்தல்னால...''

''ஆமா ஜார்ஜினா.''

''இல்லை சத்தி...விடுங்க. ஊழ்வினை. யார் வின்செண்ட்டை உருவாக்கினார்களோ, யார் வளர்த்தார்களோ, யாரால் வின்செண்ட் என்கிற ஜீவன் இங்கு தோன்றிற்றோ அவரால் அழிக்கப்பட்டது. இதுக்கு நீங்கள் காரணமில்லை சத்தி. ஷோபனா காரணமில்லை, இது ஊழ்வினை.'' எழுந்தாள்,

''சரி...அந்தப் பையைக் கொடுங்க...''

சத்தி தன் அருகிலிருந்த பையை எடுத்துக் கொடுத்தான்.

''நன்றி ''

''எதுக்கு ஜார்ஜினா?''

''இந்தப் பரிசுக்கு. உண்மையைச் சொன்னதுக்கு நான் வரேன்?'' வந்து நின்ற மின்வண்டி ஏறினாள். உள்ளே போய் ஜன்னலோரம் உட்கார்ந்தாள்

வண்டி குலுங்கிக் கிளம்பிற்று. சட்டென்று அந்த இடம் வெறுமையாயிற்று.

''பரிக்குதுடா...அவ சோறு வடிச்சு வெச்சிருப்பா'— காதுக்குள் இந்த வாக்கியம் ரீங்கரித்துக் கொண்டேயிருந்தது

'உண்மையாகவே பரியா... பேரிப் பேரி. ஓடி ஓடி. யோசித்து யோசித்து வயிறு சுருண்டு கொள்கிற பரியா இல்லை... ஒன்பதாயிற்று என்பதால் வந்த படுக்கைப் பரியா... பெண்டாட்டி ஏக்கமா!'

உள்ளே நுழையும் போதே கண்களில் அந்த ஏக்கம் தெரியும் காலணி சுருக்கு அவிழ்த்து நிமிரும் போது கண்கள் கண்டபடி மேயும்.

''அப்பா தூங்கிட்டாங்களா?''

' ரொம்ப அக்கறை...''

''அடச்சீ... சொல்லு...''

''மாமாவா, ஏதோ படிச்சுக்கிட்டிருக்காங்க...''

''சோத்தைப்போடு... தூக்கம் கண்ணைச்சுழட்டுது...

''ரசம் சூடு பண்ணவா... வத்தல் வடகம் எதுவா வேணுமா?''

''ஏய். இனிமேதான் சமையல் ஆரம்பமா?''

''தோசை மாவு இருக்கு. தலையைக் கண்டதும் கல்லைப் போடலாமேனு நினைச்சேன்...''

''போடு, ஒங்கிப்போடு... '

''நீங்க முகம் கழுவி வர்றதுக்குள்ள ரெடியாயிடும்...''

''அப்புறம் நீங்க எப்போ ரெடியாவீங்க மேடம்?''

"நீங்க சாப்பிட்டு, நான் சாப்பிட்டு... இடம் துடைச்சு..."

"நீ உள்ளவா..."—காமம் கொடுத்த கோபத்தில் வேறயாருக்கும் கேட்காது உறுமுவான்.

"அப்போ... கல்லு போட வேணாமா?"

"திமிருடி... கொஞ்சம் பார்லையா இருக்கியேன்னு கொஞ்சறேன் பாரு... அது என் தப்பு."

"சோறு வேணாம்னா போங்களேன். ஆபீஸ் எரிச்சலை வீட்டுல வந்து காட்டிட்டு...'?

"உன் மேல எரிஞ்சு விழுந்தேனாடி? இரு, எட்டு மணிக்குக் கேட்கும்படியா கத்தறேன்..."

ஜார்ஜினாவின் மாமனார் மெள்ள செருமி விழித்திருப்பதை உணர்த்த, "நீ குமுக்குள்ள வா" —பொருமிவிட்டுச் சோறு உண்ண உட்காருவான்.

இடுப்புத் தடவி, நெஞ்சில் முட்டி, கன்னம் தொட்டு சாப்பிட முடியாத கோபமும் ஆற்றாமையும் எல்லா செயல்களிலும் தெரியும்.

"என்னத்த ரசம் இது... ஊத்து இன்னும்..." திடுதிடுப்பாய் சாப்பிட்டுவிட்டுக் கட்டிலுக்குப் போய் மல்லாந்து கொள்வான்.

மேடை துடைத்துச் சுத்தம் செய்துவிட்டு அறைக்குள் நுழைந்து கதவு தாளிட்டு "தூங்கிட்டீங்களா..." குரல் கொடுக்க, அசையாது இருப்பான்.

"சே...! என்னா புழுக்கம்...ஃபேன் போட்டாக் கூட உஷ்ணக்காத்துதான்!" —தலைக்குத் தானே சொல்லியபடி பார்க்கிற வசதியாய் நைட்டி இடுப்பு நாடாவைத் தளர்த்தி ஒருக்களித்துப் படுத்துக்கொள்வான். "தூங்கலையா நீங்க?" என்று மறுபடி கேட்பதற்கு, பதில் இல்லாது கிடப்பான்.

ஜன்னல் வழியே வரும் தெரு விளக்கு வெளிச்சம். மெள்ள அவன் அசைவுகள் ஆரம்பமாகும். தெரியாத் தனமாகை விழும். கால் படும். தூக்கத்தில் புரண்டு படுக்கிற விதமாய் அவள் முகுது முழுக்க நெஞ்சு படும்.

"என்னப்பா தூங்கலையா..." சட்டென்று எழுந்து கொள்வாள்.

"தூங்கறதுக்கா லர்றேன் வீட்டுக்கு?"

"இல்லை, சாப்பிடறதுக்கு..."

"ஆமா... சாப்பிடறதுக்கு... உன்னை அப்படியே முழுங்கித் திங்கறதுக்கு..."—இறுக்கிக் கொள்கிற புருஷனிடம் "என்னப்பா லேனும்...?" என்று கொஞ்ச, "எல்லாமும்!" என்று விரல் சொல்லும்.

கை தலறின பாணையாய், பிடி கழன்ற சண்ணாடியாய், கயிறு அறுந்த சரவிளக்காய்ச் சகலமும் போயிற்று.

ஜார்ஜினா விட்டம் வெறித்தபடி படுத்துக்கிடந்தாள். உள்ளே கேலல் எழுந்தது. உடம்பு வேதனைப் பட்டது. புரண்டு பிள்ளையை அணைத்துக் கொண்டாள். பிள்ளை புரண்டு முகுது காட்டித் தூங்கிற்று.

என் வேதனையை மட்டும் நினைத்துக் கொண்டிருக்கிறேன். இந்தக் குழந்தைக்கு எத்தனை வேதனை. லளர வளர...இது என்னென்ன கேட்கப்போகிறதோ... 'அப்பா எங்கே?' 'ஏன் இல்லை?' என்று கேட்டால் என்ன பதில் சொல்லது?

இறுக்கிக் கட்டிக் கொள்ள...புருஷன் இல்லை என்று எங்குகிறேனே...இது மனசுக்குள் எத்தனை தாபம் இருக்கும்...இப்போது புரியாதது மெள்ள மெள்ளத் தலைதூக்கியதும் எத்தனை கேள்விகள் இதற்கு முன் நிற்கும். எனக்கு இரவு மட்டும் தான் வெறுமை. இவனுக்கோ வாழ்க்கை முழுவதுமே வெறுமை.

"அங்கிள் எங்கே... அன்னிக்கு வந்தாரே... அந்த அங்கிள் எங்கே?" என்று உள்ளே நுழைத்ததும் கேட்டுக் கொண்டு ஓடி வந்தான். எல்லா சாயந்தரமும் வருவார் என்று நினைத்தான் போல்ருக்கிறது...

அப்பா காதுக்கு எட்டாமல் 'இது தம்பிக்கு அங்கிள் கொடுத்த டிரஸ்' என்று போட்டுவிட்டாள் பொருத்தமாய் இருந்தது ஒடிப்போய் நாத்தாவிடம் காட்டிற்று.

"என்னடா இது... துரைலிட்டுப் பிள்ளை மாதிரி..." கிழவர் தூக்க... அகப்படாமல் ஓடியது. பின்னதாய்த் தொடை இறுக்கின ஷார்ட்ஸுக்கு புஸ்ஸென்ற சட்டையுர், கழுத்து ஒட்டின காலரும், முக்கால் கையும்... புள்ளை உருவ அமைப்பே மாறிவிட்டது

'என்ன எடுக்கறீங்க நீங்க, பச்சையும் நீலமுமா... இது எடுங்க...'—சத்தி எடுத்துப் போட்டபோது வாங்கப் பயமாய் இருந்தது. போட்டுப் பார்க்க கொள்ளை அழகு வந்து விட்டது. அடுத்த தடவையும் சத்தியைப் கூட்டிட்டுப் போகணும்.

நாலூறு ரூபாய் சட்டென்று எடுத்துக் கொடுத்து விட்டது. ஜார்ஜினா... ஜார்ஜினா என்று ஓடிவந்தது. நான் தான் கொன்னேன் என்று தொண்டை அடைக்கக் கதை சொல்லிற்று

ஷர்ட்—பாண்டில் பார்த்த சத்தியை இன்று ஐங்கியில் பார்த்தபோது வேடிக்கையாய், வித்தியாசமாய் இருந்த என்னைவிட அதிகமாய் விஜுலை நேசித்திருக்குமோ... அந்த உரிமையில் இருடா நீ என்று ஏர்போர்ட் விட்டு ஓடி வந்திருக்குமோ. இதுக்கு நான்தான் காரணம் என்று நாலு வருஷமாய் நொந்து கிடப்பானேன் நான் புரண்டு அழுது பார்த்துவிட்ட அதிர்ச்சியா... இல்லை நின்று பெட்டியைநகர்த்தியிருப்பின் யாருமே செத்துப் போகாது இருந்திருப்பார்கள் என்கிற குற்ற உணர்வா...

தினத்துக்குப் பத்துப் பயமுறுத்தல் கால் வரும். 'ஒரு பெட்டியில் குண்டு இருக்கு' என்று மிரட்டும். எந்தப் பெட்டி என்று தேடுவது. ஒரு நாளைக்கு நாலு முறை அலைத் தேடி பாம்ப் பயமுறுத்தலுக்கு அர்த்தமே இல்லாது போய்... அர்த்தம் இருக்கிற நாளில் அனர்த்தம் ஏற்படவிட்டது.

சத்தி பெட்டி நகர்த்தாதது பிசகா... ஓர் ஆள் குற்ற மாற தலைவிதி... கடவுள்... செயல்... சிதற வேண்டும் என்கிற கட்டளை.

யம்மா... எவ்வளவு பெரிய படம். விஜுவின் தெற்றுப் பல், கற்றை முடி, கண்ணிமைகள் எல்லாம் தெளிவாய்த் தெரியும் அளவு படம் எனக்கும் ஒன்று இப்படி வேணும் சத்தி என்று கேட்கலாமா? வேணாம் வேணாம்... உடம்பு சிலிர்த்துப் போட்டது தலை நிமிரும் போதெல்லாம் கண்களில் பட்டு, நெஞ்சில் தைத்து எதுவும் செய்ய முடியாதபடி போய்விடும் அப்பாவுக்கும், அம்மாவுக்கும் அவ்வளவு பெரிய படம் பார்த்ததுமே வயிறு கலங்கும் மறுபடி வீட்டில் அழுகை வரும். தலண்டு போய் விடும்படி ஆகும் குழந்தை சுற்றிச் சுற்றி வந்து கேள்வி கேட்கும். பாவம் சத்தி, அவ்வளவு பெரிய படம் மாட்டி வைத்துத் தினம் தினம் பார்த்து நெஞ்சு உருகி நான்தான்... நானேதான் என்று பதறித் தனக்குத்தானே சூடு போட்டுக் கொண்ட வேதனையில் அலைந்திருக்கிறது

'அந்தப் படம் வேண்டாம் சத்தி கடவுளிடம் போனவர்களை அத்தனை நெருக்கமாய் வெச்சுக்க வேணாம் அவங்களைத் தொந்தரவு பண்ண வேணாம் என்று சொல்லிவிடலாமா?

ஆனால், சரியாகச் சொல்லிக் கொள்ளாமல் வந்து விட்டோம். என்னவோ சட்டென்று ஏறி வண்டிக்குள் உட்கார்ந்து விட்டோம். சத்தி மூட் அவுட் ஆய்ருப்

பாரோ... சத்தி அம்மா ஆர்த்தடாக்ஸ் போலிருக்கு நீ இறிஸ்தவப் பெண்ணா...வாய் கேட்கவில்லை. கண்கள் கேட்டன. வீடு அழகாய் அடக்காசமாய் இருக்கிறது. நடு மாம்பலத்தில் பத்துப் பன்னிரண்டு லட்சம் பெறும். சத்தி ஒரே பிள்ளை. போட்டி போட்டுக் கொண்டு பெண் கொடுக்க வருவார்கள். சத்தியை கல்யாணத்துக்கு லற்புறுத்த வேண்டும். எல்லாத்தையும் மறந்துட்டு நிம்மதியா, நல்ல பெண்ணா பார்த்துக் கல்யாணம் கட்டி குடித்தனம் பண்ணுன்னு அட்வைஸ் பண்ண வேண்டும்

போயும் போயும் இந்த ஷோபனாவோடு லவ்வுன்னு அலைஞ்சுதாம். என்ன இருக்குது அந்தப் பெண்கிட்ட... நிமிக உடம்பு. ஒரு குரங்கு அலட்சியம். குதிரை நடை. ஆனால். பாதிப் பசங்களுக்த இதுதான் பிறக்கும். ஜிங்கு ஜிங்குன்னு நடக்கறதைப் பார்த்தவுடனேயே ஆகான்னு மனசு துள்ளிடும் போல..

"நான் வேணா ஷோபனாகிட்ட பேசிப் பார்க்கட்டுமா..உனக்காக உன் சார்பா நான் தூது போறேன்." கேட்கலாமா?

'ஸ்வரா...' என்று கையெடுத்துக் கும்பிடும். தொட்டிக்குள் உட்கார்ந்து 'கிஸ்' அடிக்கிறதாம். ஜார்ஜினா வாய்விட்டுச் சிரித்தாள். போய் அதுங்க இரண்டு ஆட்டி அடிச்ச தொட்டியைப் பார்க்க வேண்டும். பார்த்துவிட்டு வந்து, சத்தியிடம் சொல்லி லம்புக் கிழுக்க வேண்டும்.

சத்தி, என் இனிய நண்பா.. நிம்மதியாய்த் தூங்கு உன்னை உன் வேதனையிலிருந்து விடுவித்துக் கொள் என்னிடம் சொல்லிவிட்டதில் பாதிப் பாரம் இறங்கி யிருக்குமே. மீதியை நான் இறக்கி நல்ல இடத்தில் மண்முடிந்து வைக்கிறேன். உள்ளே உள்ள நாயெல்லாம் நான் விரட்டி விடுகிறேன்.

எனக்குள்ளேயும் நாய் இருக்கலாம்.

சுகோ நாயாம். சத்தி பையா. சுகோவும் இல்லை... ஒரு மண்ணும் இல்லை. என்னிடம் உள்ளது அன்பு. அன்பு மட்டுமே. ஜார்ஜினாவின் அன்பு உனக்குப் புரியாது. அவள் சகலமும் கடந்து நிம்மதியாய் ஓரிடத்தில் இருப்பது உனக்குத் தெரியாது.

சகலமும் கடந்து...நிஜமாகவே கடந்துவிட்டேனா...? இல்லை...கொஞ்சம் பாகியிருக்கிறது. இரவு படுத்து கிறது. என்னவோ இல்லை...ஏதோ குறை என்கிற வேதனை வரத்தால் செய்கிறது. இதிலிருந்து மீள வேண்டும். மெள்ள மெள்ள விலகவேண்டும் உடம்பு வதைபடுகிறது என்று தெரிந்தவுடன் மண்டியிட்டு ஜெபம் சொல்லவேண்டும் இல்லை... ஏதாவது கீர்த்தனை நினைத்துக் கொள்ள வேண்டும்.

'ஆ...இன்ப இன்ப ஆலயம்
நல் மேய்ப்பர் கிருபாசனம்
கண்டடைவோம் தரிசனம்
ஆ...இன்ப இன்ப ஆலயம்.
இரண்டு மூன்று பேர் ஒன்றாய்
கெஞ்சும்போது வருவார்
வாக்கு போல தயவாய்
ஆசீர்வாதம் தருவார்...'

கண்கள் பாட்டு சுகத்தோடு செருகி இழுத்தன முழங் கால் உயரப் புற்களுக்கு நடுவே ஜார்ஜினா மண்டியிட்டுப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறாள். அருகே குழந்தை கண்மூடி நிற்கிறான். அவனுக்கு அடுத்து சத்தி மண்டியிட்டு ஜெபம் செய்கிறான். பெரிய ஏரோப்ளேன் சத்தமின்றித் தலைக்கு மேலே பறந்து போகிறது. வெள்ளி வெள்ளியாய்ப் பூக்களைச் சொரிகிறது. வெள்ளிப்பூக்கள் போல் வெட்டப்பட்ட ஜரிகை பேப்பர்கள் தலையெல்லாம் விழுகின்றன. 'ஆ...இன்ப இன்ப ஆலயம்...' தூரத்தே

மாதாகோயில் போக நினைக்கிறார்கள், நடக்கிறார்கள். ஜார்ஜினாவுக்குச் சர்தேகம்...அது கோயிலா... இல்லை திக்கல் டர்மினலா...ஏர்போர்ட்டில் கோயில் உண்டா? ரல்லே தாண்டி...இன்னொரு விமானம் தாழப்பறந்து ஜீரேவர, சத்தி அலனை இழுத்துக்கொண்டு ஓடுகிறான் பிள்ளை அவன் கையில் இருக்கிறது. காது பிளக்கிற ஓசை கேட்டு ஜார்ஜினா கண் விழித்தாள். பிறகு தூக்கமே வரவில்லை.

சத்தி, பாம்பே கௌண்ட்டரில் இருந்தான். தாண்டும் போது குட்மார்னிங் சொன்னான். ஜார்ஜினா டில்லி கௌண்ட்டரில் இருந்தாள். அன்று என்னவோ எல்லா கௌண்ட்டர்களிலும் ஏகக்கூட்டம். ஏர்போர்ட் லவுஞ்ச் முழுக்க ஏகப்பட்ட ரோஜா இதழ்கள்.

பாம்பே கௌண்ட்டர் முடிந்தது அங்கே திருவனந்த புரம் போர்டு மாட்டினார்கள். சத்தி பாம்பே ட்ரிம் ஷீட் தயாரிக்க உதவி செய்துவிட்டு டில்லி கௌண்ட்டருக்கு வந்தான். அருகே நின்று அவள் போர்டிங் கார்டு கொடுப்பதை வேடிக்கை பார்த்தான். டில்லிகௌண்ட்டர் முடிந்தது. நாலு ஸீட் காலியாய் இருந்தது. ஒரு மந்திரியும், அவர் பி ஏ-வும், இரண்டு பாதுகாப்பு அதிகாரி களும் கிளம்பி விட்டார்கள் என்று போலீஸ் வந்து சேதி சொல்லிற்று: குணா வேகமாய் ஓடிவந்தார். கௌண்ட்டர் கதவு திறக்க முயற்சித்தார்.

"இருங்க குணசேகரன்..." —சத்தி கத்தினான். எப்பவோ ஒரு போலீஸ்காரர் விட்டுப்போன லத்தியை கையில் எடுத்து வைத்துக் கொண்டான். "இப்போ வாங்க...கீழ்ப்பக்கம் ஹோல் இருக்கு."

குணா ஹோல் கழற்றிவிட்டு நுழைந்தார். சத்தி லத்தியை இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டு "நான் ரெடி. வாங்க" என்றான்.

"என்ன சத்தியநாராயணன் இது?"

"வேகமா வர்றீங்க..."

"அதுக்காக..."

"அடிக்க வர்றீங்களா...இல்லை சுவத்தோட நிக்க வைக்க வர்றீங்களா...இல்லை எதுவும் விசாரிக்க வர்றீங்க னாலு தெரியலை. அடிக்க வந்தா பதிலுக்குக் கொடுக்க நான் தயார்."

"விளையாடறீங்களா...?" —குணசேகரன் கடுப்பா னார்.

"செக்யூரிடியும், பாம்ப் ஸ்குவாடும் தான் விளை யாடும். நாங்க ஆட முடியுமா...இது தற்காப்புக்காச."

"கீழே போடுங்க சார் அதை. மந்திரி வர்றாரு"

"மந்திரிக்கு நீங்க பயப்படணும். நான் எதுக்குப் பயப்படணும்? டிக்கெட் இருந்தா ஏத்துவேன். இல்லேன்னா இடத்தைக் காலி பண்ணுங்கன்னுவேன்."

"டிராப் தட் ஸ்டிக்."

"முடியாது. இனிமே இண்டியன் ஏர்லைன்ஸ்ல எல்லாரும் கட்டை வெச்சிப்போம். யாராவது கௌண்ட்டர் திறந்து வந்தா ஒரே போடு."

"முட்டாள்..." — குணா சீறினார்.

"பின்னிடுவேன். ஒரு பொம்பளை ஸ்டாஃபை சுவத் தோட நிக்க வெச்சு அறையறீங்க...நீங்களா செக்யூரிடி?"

"சத்தி...என்ன இது!" —ஜார்ஜினா பதறினாள்.

"இண்டியன் ஏர்லைன்ஸ் ஸ்டாஃபுன்னா புழுவா பூச்சியா..."

"ஒரு புடிக்குக் காணமாட்டே சத்தியநாராயணன்... உன் அளவு தெரிஞ்சு பேசு."

"பேசறதுக்கு நான் ரெடி. ஆனா, கௌண்ட்டருக்கு வெளியே போயிடுங்க இது எங்க ஏரியா..."

"இந்த ஏர்போர்ட் மொத்தமும் என் ஏரியா. டிராப் தட் ஸ்டிக்!"

ஜார்ஜினா பளிச்சென்று லத்தியைப் பிடுங்கித் தரையில் விசினாள்.

வாசல் பக்கம் தடதடலென்று போலீஸ் நுழைந்தது. மந்திரியின் டிக்கெட்டுகளை ஜார்ஜினா கொடுத்தாள். மந்திரி நடு லவுஞ்சில் மாலைகள் வாங்கிக் கொண்டார். கூட்டம் 'வாழ்க!' என்று கூவியது. மந்திரியின் பாதுகாப்பு அதிகாரியிடமிருந்து துப்பாக்கி வாங்கிப் பெட்டியில் வைத்தார். குணசேகரன் - விமானத்தில் அனுப்பி வைத்தார்.

இரண்டு நிமிஷத்தில் லவுஞ்ச் காலியாகியது. ஜார்ஜினா ட்ரிம் ஷீட் தயாரிக்கும் பகுதிக்கு ஓடினாள். டைகள் சொன்னாள்.

"லேடி எதிர்ல துள்ளிக் காட்டறீங்களா...? அந்தம்மா சிநேகிதம்கறதால விடறேன்"

"இல்லேன்னா என்ன பண்ணுவீங்க... அண்ணிக்கு நான் இருந்திருக்கணும்...ரெண்டு போலீஸ்காரரை அடிச்சுக் கொன்னுருப்பேன்..."

"போலீஸ்காரர் யாருன்னு தெரியாம விளையாடாதீங்க சத்தியநாராயணன்..."

'சும்மா மிரட்டாதய்யா..."

"வாய்யா, போயான்னா அடி...பல்லு எகிறிடும்"— குணா நெருங்கி வந்தார்.

"அடிறா பார்ப்பம்...என்மேல் கை வை பார்ப்பம்."— சத்தி கோபத்தில் நிலை குலைந்து கூவினான்.

ஜார்ஜினா ஓடி வந்தாள். "சதிதி, என்ன இது...? குணசேகரன் என் சிநேகிதர்."

"அதனால..."

"மந்திரி வெளிநாட்டுக்கு போகணும்னு சொல்லிட்டார். நீங்க உங்க இடத்துக்குப் போங்க. என் கெளண்ட்டர்ல ப்ராப்ளம் வேணாம்.

"நான் ப்ராப்ளம் பண்றேன்?"

"சதிதி, ப்ளீஸ்! குணசேகரனுக்கு டம்மி ஆபரேஷன் பிடிக்கலை. அவரு இதுல இல்லை. அர்த்தமில்லாம சத்தாதீங்க. போங்க உங்க இடத்துக்கு..."

சத்தியை வேறு ஊழியர்கள் தனியே அழைத்துப் போக, குணா அங்கேயே நின்று கொண்டிருந்தார்.

"பைத்தியக்காரனா இருக்கான்."

"இல்லீங்க, அண்ணிக்கு என்னைத் தள்ளிட்டீங்கன்னு அவருக்குக் கோபம்..."

"அவருக்கு ஏன் இவ்வளவு கோபம் வரணும்?"

"விஜு செத்த அண்ணிக்கு இவருக்குப் பதிலா விஜுவை விட்டுட்டு பாம்ப் நியூஸையும் சொல்லாத போயிட்டாராம்" குத்த உணர்ச்சி, வீட்டுல பெரிய படம் மாட்டி வெச்சு...

"போனீங்களா?"

"ஆமாம்..."

"இந்த ஆளுக்குத் துக்கம் இருக்கட்டும். குத்த உணர்ச்சி இருக்கட்டும்...அதுக்காகன்கிட்ட துள்ளினா... இது எனக்கு ப்ரெஸ்டிஜ் மேட்டர் மேடம்! நான் சும்மா விடறதா இல்லே..."

"ப்ளீஸ், எனக்காக..."

"அவர்கிட்ட சொல்லி வைங்க...செக்யூரிடிகிட்ட வாலாட்ட வேண்டாம்னு. அந்த ஆள் பைத்தியக்காரன்ற தால விடறேன் இந்தத் தடவை."

"அவர் பைத்தியம் இல்லை குணா..."

"விஜுவோட ஃப்ரெண்டுங்கறதால பரிதாபப்பட்டுப் பேசறீங்க."

"இல்லை குணசேகரன், ஐ லைக் ஹிம்!"

குணா நிமிர்ந்து பார்த்தபோது ஜார்ஜினா விழிகளைத் தாழ்த்திக் கொண்டாள்.

30

ட்யூட்டி முடிகிற நேரம். சத்தி, ஜார்ஜினாவின் இடத்துக்கு வந்தான்.

"முடிஞ்சுடுத்தா லேலை?"

"உம்ம்..."

"வீட்டுல ட்ராப் பண்ணட்டுமா?"

"வேணாம். தாங்க்ஸ்!"

"ஏன்?"

"பேசாத உம்முலு இருந்ததே உத்தமம்லு ஆயிடுச்சு."

"ஏன், நான் பேசறதுல என்ன தப்பு...?"

"என்ன தப்பா? நாலு நாள் முன்னாடி நான் ஏதோ ஒரு விஷயத்துலசெஷ்டப்பட்டதுக்கு இப்போ கட்டையைத் தூக்கிக்கிட்டு நிக்கறீங்களே...பைத்தியமா உங்களுக்கு..."

"கூட லேலை செய்யறலங்களுக்கு ஒரு கஷ்டம்னா எனக்கென்ன போச்சலு இருந்துட முடியுமா?"

"போதும்ப்பா..." ஜார்ஜினா இரண்டு கைகளையும் நெற்றிக்கு நேரே வைத்துக் கும்பிட்டாள். "ஏதோ வந்தோம் போனோம்லு காலத்தைத்தள்ளிக்கிட்டிருக்கேன் கெடுத்துடாதீங்க!"

"ஏதோ கையைப் புடிச்சு இழுத்துட்ட மாதிரில்ல பேசறீங்க..."—சத்தி பேச்சில் கோபமிருந்தது

"அது கூடத் தேவலாமே...இழுத்த ஆளை மட்டும் தான் திட்டுவாங்க. இன்னொரு பக்கம் சந்தேகம் வராது, போன் பண்ணிக்கேட்கறா—"ஏன் உன்னையே சுத்தறான் சத்திலு?"

சத்தி தலைகுனிந்தான். மெள்ள அவள் இடம்விட்டு நகர்ந்தான்.

ஜார்ஜினா ஒரு திடுதிடுப்பில் தன்னிலை மறந்து பேசி விட்டதை உணர்ந்தாள். யாரும் போன் பண்ணி எதுவும் கேட்கவில்லை. அது பொய். ஆனால், கேட்பார்களோ என்கிற பயம் இருக்கிறது. 'அந்த பயத்தில் இவனிடம் திடுதிடுத்துவிட்டோம். மனசு நோகாதே என்று பிரார்த்தனை செய்துவிட்டு, வலிய நோகடித்தோம். ஏன் இப்படி? இவன் குழப்பம் என்னையும் தொற்றிக் கொண்டதா? நானும் உணர்ச்சிவசப்படுகிற பெண்ணாய்ப் போனேனா?'

அடுத்த ஷிஃப்ட் ஆள் வர, இரண்டு நிமிடம் பேசி விட்டு ஏர்போர்ட் விட்டுக் கிளம்பினாள். பின்னால் சத்தி மோட்டார் சைக்கிளில் வருவது தெரிந்தது. அவன் திரும்பிக் கைகாட்ட, அவளைக் கடந்து—நிறுத்தச் சொன்னது மதிக்காமல் போயிற்று.

'லூஸு... போயிட்டுத் திரும்பி வரும்...'

மறுபடி சின்னக் கோபம் ஜார்ஜினாவைத் தொற்றிக் கொண்டது. 'போகட்டும். பேசாம போகட்டுமே... எமோஷனல் இடியட் யார்? சத்தியா, நானா...?' பேச இஷ்டமில்லை என்று போகிறான்.

குவார்ட்டர்ஸுக்குள் நுழைய, எங்கோ மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டது. ஜார்ஜினா ஆலலுடன் திரும்பினாள். குவார்ட்டர்ஸின் தெரு ஹோலென்றிருந்தது. எதையும் காணோம். ஆனால், எங்கோ பைக் சத்தம் கேட்கிறது. நிஜமாகவே கேட்கிறதா, இல்லை பிரமையா?

படியேறினாள். அம்மா டி. வி-யில் யு. ஜி. ஸி. பார்த்துக்கொண்டிருந்தாள்.

"குழந்தை தூங்கறானாம்மா...?"

"இல்லையே... அந்தப் புள்ளை வந்து கூட்டிட்டுப் போச்சு..."

"எந்தப் புள்ளை?"

"அதான்... அடிபட்டுதே... அன்னிக்கு நம்ம வீட்டுக்கு வந்ததே... அதாம்மா, மோட்டார் சைக்கிள்ள வந்து ஹார்ன் அடிச்சது. இந்தப் பய உடனே ஓடி, கால் மேல கால் லெச்சு ஏறி 'ஓட்டு... ஓட்டு'னு அடம் புடிச்சான்... அதான் ஒரு ரவுண்ட் அடிச்சிட்டு வர்றேன்னு போயிருக்கு..."

"ஏம்மா அவரோட அனுப்பினே?"— வாசலுக்கு விரைந்துபோய்த் தெருவில் இறங்கிப் பார்த்தாள். ஆள் அரவமே இல்லை.

"உங்க ஆபீஸ்தானேடி... எங்கே போயிடப் போறாங்க... இங்கேதான் ரவுண்ட் அடிப்பாங்க..."

'எங்கேயாவது வெளியே ரொம்ப தூரம் போயிட்டாங்களா? — 'ஏசுவே' என்று கூவல் எழுந்தது. மறுவிநாடி இடது பக்கத் திருப்பத்தில் மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டது. பிள்ளை இரண்டு கைகளையும் ஹாண்ட்பாரில் வைத்து பல்லெல்லாம் தெரியும்படி உட்கார்ந்திருந்தான். மோட்டார் சைக்கிள் கடந்து போகும்போது 'அம்மா' என்று கூவினான். மறுகோடிக்குப் போய் லட்டமடித்து மோட்டார் சைக்கிள் மீண்டும் வீட்டு வாசலுக்கு வந்தது. பிள்ளையைப் பருந்து மாதிரித் தூக்கித் தரையில் சத்தி இறக்கினாள். பிள்ளை மறுபடியும் அவன் காலில் கால் வைத்து பாண்ட் பற்றி, மறு காலை அவன் தொடையில் வைத்து ஏறி உட்கார்ந்துகொண்டு "ஓட்டு... ஓட்டு..." என்று கூவியது.

"அம்மா நிட்டும்"—சத்தி பயந்ததுபோல பேசினாள். பிள்ளை, ஜார்ஜினா முகம் பார்த்தது.

"இறங்குடா கீழே... எங்கேயாவது கொண்டு போறாரு..."

"கரெக்ட்... அதான் வீட்டுல டிராப் பண்ணைச் சொல்லிக் கேட்டாங்க உங்கம்மா!"

"நின்னு 'முடியாது'னு சொல்லிட்டுப் போயிருக்கலாம் இல்லே..."

"ஏன் சொல்லணும்? அப்புறம் யாராவது போன் பண்ணுவாங்க... எதுனா கேட்பாங்க... உங்களுக்கு மானம் போயிடும் ஏதோ வந்தமா போனமான்னு இருக்கறதை விட்டுவிட்டு..."— ஜார்ஜினா மாதிரி தலையாட்டிப் பேசினாள் சத்தி.

அவளுக்குச் சிரிப்பு வந்தது.

"அப்போ ஏன் வீட்டுக்கு வரணும்?"

"நான் என் ஃப்ரெண்ட் பார்க்க வந்தேன். இல்லப்பா. நீ என்னோட ஃப்ரெண்ட்தானே குட்டி...?"

பிள்ளை தலையாட்டிற்று. "ஓட்டு... ஓட்டு..." என்று மறுபடி கூவிற்று. ஆக்ஸிலேட்டரைத் திருகிற்று.

"மோட்டார் பைக் சத்தம்னா பயப்படுவான். இப்போ பாருங்க, எப்படி உட்கார்ந்துகிட்டு..."— வாசல் படியில் நின்றபடி ஜார்ஜினாவின் அம்மா பேசினாள்.

"உனக்குப் பயமாடா?"

"விஞ்சென்ட் புள்ளை பயப்படலாமா? உங்கம்மா உன்னைக் கெடுத்துட்டாங்க..."

"பூனையைப் பார்த்துக் கத்துவான்..."

"டேய் குட்டி, புலி பார்க்கலாமா... சிங்கம்...?"

பிள்ளை தலையாட்டிற்று.

"ஏன் மடமடன்னு பேசமாட்டேங்கறான்... அஞ்சு வயசா?"

"முடியப் போவுது"— இதற்கு ஜார்ஜினா பதில் சொன்னாள்.

"இந்த லயசுல வாய் பொரிய வேணாமா?"

"கேட்கறதெல்லாம் கிடைக்குது. பேச வாய்ப்பில்லை வீட்டுல நாங்க பேசறதும் குறைவு..."

"புலி பார்க்கலாமா செல்வா... வண்டலூர் கூட்டிட்டுப் போகட்டா?"

"இப்பவா?"

"ஏன்? எனக்கு ஒரு வேலையும் இல்லை!"

"அவன் தூங்கணும்... பாடம் படிக்கணும்..."

"ஆமா... தூங்கப் பண்ணியே மக்காக்கிடுவீங்க... செல்வா, டாட்டா போலாமா?"

"வேணாம் சத்தி!"

"ஏன். உங்க புள்ளையைத் தூக்கிட்டுப் போயிடு வேன்னு பயமா!"

"இல்லை..."

"செல்வா, போய் ஷூ போட்டுகிட்டு வா. நாம டாட்டா போலாம்... சிங்கம், புலி யானையெல்லாம் பார்க்கலாம்..."

பிள்ளை இறங்கி உள்ளே ஓடி ஷூவோடு வந்தது.

"ஸாக்ஸ் வேணாமா?"—சத்தி இரைந்தான்.

"அம்மா, உன் பேரனைப் பாரு... வெளியே சுத்திக் கிட்டிருக்கணுங்கறான்."

"போகட்டுமேடி... பாவம் அது. உன்னை மாதிரி வீட்டைச் சுத்திக்கிட்டு கிடக்கு. பயம் தெளியட்டும்."

"அவரு ட்யூட்டி முடிஞ்சு வந்திருக்காரு. டயர்டா இருக்காதா?"

"ஒரு டயர்டும் இல்லை. தோழா' ஸாக்ஸ் எடுத்தா ஓடு!"

பிள்ளை ஸாக்ஸ் எடுத்து வர..."இதுதான் ஸாக்ஸா... உங்கம்மா வீட்டுல வேலையே செய்யறதில்லையா..." பிள்ளையை வண்டியிலே உட்கார வைத்து வலது கால் ஸாக்ஸ் போட்டான்.

"ஆமா, நான் வேலையே செய்யறதில்லை. ரொம்ப தெரியுமா உங்களுக்கு... எங்கம்மா இருக்காங்களேன்னு பார்க்கறேன். இல்லேன்னா, நறுக்குனு கிள்ளிடுவேன்."

"ஏன்...என்னைப் பளீர்னு அறைஞ்சதை சொல் லையா?"

"ஐயோ, ஏன் சத்தறீங்க சத்தி!"

"செல்வாக்கிட்டே சொல்லி அனுப்பறேன், எல்லாத் தையும் பாட்டிகிட்ட சொல்லுடானு."

"எப்போ வருவீங்க?"

"டூ அவர்ஸ்!"

பிள்ளை குதூகலமாய் டாட்டா காட்டியது. முத்தம் பறக்க விட்டது. வளைத்து வண்டியில் கைபிடித்துத் தலைமுடி சிலும்பப் போயிற்று.

"பேர் என்ன அந்தப் புள்ளைக்கு?"—அம்மா கேட் டாள்.

"சத்தி... சத்தியநாராயணன். விஜுலோட ரொம்ப நெருக்கமாம். எப்பவும் ஒண்ணா சுத்துவாங்களாம்..." தனக்கு இவனோடு அதிக சம்பந்தமில்லை என்பது போல் பேசினாள் ஜார்ஜினா. வீட்டுக்குள் நுழைந்து சாப்பிட்டு விட்டுப் படுத்தாள், தூக்கம் வரவில்லை. பிள்ளை வர வேண்டுமே என்கிற கவலை உறுத்தியது. அனுப்பியிருக்க வேண்டாமோ...தானாவது கூடப் போயிருக்கலாம் என்று

தோன்றியது. அம்மா ஏதாவது சொல்லும். அப்படிப் போவது நன்றாகவும் இருக்காது. யாருக்கும் தெரியாமல் போகலாம். ஒரு நாள் பீச்சுக்கு அழைத்துப் போக வேண்டும். சாப்பிட ஏதாவது கொடுத்திருக்கலாமோ... இரண்டு மணி நேரம் வெயிலில் சுற்றிவிட்டு... எழுந்து உட்கார்ந்து கொண்டாள். வாசல் கதவு திறந்து பார்த்தாள்.

''இப்போதானே போயிருக்காங்க...''—அம்மா டி. வி. யிலிருந்து திரும்பி சொன்னாள்.

''இல்லை...மாம்பலம் போய் ஏதாவது காய்கறி வாங்கிட்டு வரலாமான்னு பார்க்கறேன்''—பை எடுத்துக் கிளம்பினாள்.

மாம்பலம் போக மனசில்லை. குவார்ட்டர்ஸ் வாசலுக்குப் போய் நின்று கொண்டாள்.

''சே! புள்ளையை அனுப்பிவிட்டு என்ன தவிப்பு இது...'' இரண்டு மணி வெயில் எனக்கே தாங்கலை. இவன் எப்படித் தாங்குவான்.

மணி மூணே முக்கால் இன்னும் அரை மணியில வரணும். வந்துருவாங்களா...இன்னும் லேட்டாகுமா? குவார்ட்டர்ஸ் வாசலில் காத்திருப்பது அபத்தமாய்ப் பட்டது.

'என்னால முடியாதுப்பா என் புள்ளையப் பிரிஞ்சு இருக்க...இனிமே இது மாதிரி அனுப்பக் கூடாது.' மீனம் பாக்கம் ஸ்டேஷனுக்கு நடந்தாள். நாலு பத்து மனசில் பதட்டம் எழுந்தது. வண்டலூர் பஸ் வந்தது. வண்டலூர் சென்று பார்த்து வரலாமா...? வேண்டாம், அங்கிருந்து இந்த நேரம் திரும்பியிருப்பார்கள்.

பஸ் கிளம்பிப் போயிற்று. குவார்ட்டர்ஸுக்குத் திரும்பி நடக்கலாம். அம்மா கேட்கும் 'காய்கறி வாங்கலையா?' என்று. என்னடா இது பேரவஸ்தை...சத்தி வந்தவுடனே கிட்டணும். 'இனிமே இதெல்லாம் வேண்டாம்'னு கட் அண்ட் ரைட்டா சொல்லிடணும்.

திரும்பவும் குவார்ட்டர்ஸ் வாசலுக்குப் போனாள். நடந்தது காலை வலித்தது. வியர்வை பொங்கிற்று. தாகம் வறட்டியது. குவார்ட்டர்ஸ் வாசல் கடையில் ஆரஞ்சு கலர் வாங்கி உறிஞ்சினாள். கடந்து போகிற மோட்டார் பைக்கையெல்லாம் வெறித்தாள். காசு கொடுத்து விட்டு பை எடுத்து உள்ளே நகர...சத்தமின்றி மோட்டார் பைக் அருகே வந்து நின்றது.

''சத்தி...''—சந்தோஷமாய்க் கூவினாள்

''பிள்ளை தலையில் கர்சீப் சுத்தியிருந்தான். உர் ரென்று இருந்தான்.

''என்னடா தலையில...?''

''புலி கடிச்சிடுத்து''—சத்தி பதில் சொன்னான்.

''ஓ! பொய்தானே...'' பிள்ளை தலை நிமிர்த்தினாள்.

பிள்ளை கலீரென்று சிரித்தான்.

''ச்சோ! பயந்துட்டேன்.''

''தொப்பி எடுத்துக்கலே...அதான் வெயிலுக்கு சும்மா தலையில சுத்திவிட்டேன்.'' பிள்ளை பட்டை சாக்லெட் நீட்டி அம்மாவிடம் காட்டிவிட்டு நெஞ்சோடு வைத்துக் கொண்டது.

''எங்கே பையோட கிளம்பிட்டீங்க?''

''இருப்பே தொள்ளலை. 'மாம்பலம் போய் காய்கறி வாங்கிட்டு வரேன்'னு சொல்லிட்டு... ஸ்டேஷனுக்கும் வாசலுக்குமா நடந்துக்கிட்டிருக்கேன்.''

''மாம்பலம் போகணுமா?''

''சாயந்திரம் போனாப் போதும்.''

''ஏன், இப்போ வாங்கலேன்...''

''ஐயோ, இப்பலா...இவன் ஏற்கெனவே வாடிட்டான். டேய், செல்வாக்குட்டி, புலி பார்த்தியா?'

"இவனா... லாடறதா... யானையை விட்டுக் கீழ இறங்க மாட்டேங்கறான். மோட்டார் பைக் மாதிரி யானை ஓட்டணுமாம். சறுக்குமரத்துல படி வழியா ஏறி சறுக்குடான்னா, சறுக்கற வழியாலே ஏறணுமாம்... செம ஆட்டம்."

"கொண்டு போய் வீட்டுல விட்டுருங்க. நான் மாம் பலம் போறேன். காய்கறி வாங்கிட்டு வரேன்னு கிளம்பி இல்லனா நேரம் கழிச்சு வெறுங் கையா போய் நின்னா அம்மா சத்துலாங்க."

"வாங்க...பஸ் பிடிச்சுப் போயிட்டு வர லேட்டாகும். என்னோட பைக்குல வந்துடுங்க செல்வா, இன்னொரு ரவுண்டு போலாமா...நீ வீட்டுக்குப் போறியா...?"

"வீட்டுக்கு லேணாம்... டாட்டா போலாம்." பிள்ளை வெறும் காலை கிக் ஸ்டார்ட்டராய் உதைத்தது... ஆக்ஸிலேட்டர் திருகிச் சத்தம் அதிகமாக்கியது.

"என்னடா, நீ பாட்டுக்கு எதை எதையோ திருகறே..."

"அவன்தான் வண்டி ஓட்டினான். இல்லே செல்வா...?"

பிள்ளை தலையாட்டியது.

"உட்காருங்க, மாம்பலத்துல விட்டுடறேன்."

ஜார்ஜினா ஏறி உட்கார்ந்தாள்.

"இதோ பார்... க்ளட்ச் விட்டு ஆக்ஸிலேட்டர் திருப்பு மெள்ளத் திருப்பணும்." விரலுக்கருகே க்ளட்ச் பிடித்துப் பிள்ளை விட, சத்தி உளரவிட்டான்.

வண்டி இளம்பிற்று.

"எதிர்க்க வண்டி...குறைச்சிடு."

பிள்ளை குறைத்தது. "இப்போ தூக்கு."

பிள்ளை ஆக்ஸிலேட்டர் முறுக்கிற்று. "போதும். போதும். இது ஸ்பீட். குறை...குறை!"

ஜார்ஜினா சந்தோஷமாய்ச் சத்தி தோள் வழியே எட்டிப் பார்த்தாள்.

"எதுக்கு சத்தி இவன் கைல கொடுக்கறீங்க. எங்கியாவது கொண்டுபோய் மோதப் போறான்."

"ப்ரேக் என்கிட்ட இருக்கு. சரியா செய் செல்வா..."

பிள்ளை நிதானமாய் ஆக்ஸிலேட்டர் தர, வண்டியின் இடதுபக்கம் சத்தி கை வைத்திருக்க, நெடுஞ்சாலையில் சீராய் ஓடிற்று.

"ஓட்டறான் பார்த்தீங்களா...!"

ஜார்ஜினா அவன் தோள் எட்டி பிள்ளை ஓட்டுவதைப் பார்த்தாள்.

"பெண்டுல குறை...இன்னும்." பிள்ளை ஆக்ஸிலேட்டரை நிமிர்த்தினான். வண்டி மெதுவாயிற்று.

"ஹை... ஓட்டறான் சத்தி!"

"கெட்டிக்காரன் ஜார்ஜினா. பசங்களை உற்சாகப் படுத்தணும். வண்டலூரால என்ன ஆட்டம் தெரியுமா... செல்வா... புலி எப்படிக் கத்திச்சுடா?"

பிள்ளை ஆக்ஸிலேட்டர் விட்டுத் திரும்பினான். 'உர்ர்...' என்றான். வண்டி சட்டென்று வேகம் குறைந்தது பின்பக்க பஸ் ஹார்ன் அடிக்க, சத்தி சட்டென்று வண்டியை விலக்கினான். மாறுதலால் வண்டி குலுங்கிற்று. பின்னால் உள்ள ஜார்ஜினா அவன் மீது இடித்துக்கொண்டாள். அவள் தோள் பற்றிக்கொண்டாள்.

அந்த மோதலில் சின்ன சுகம் உணர்ந்தாள். புஜம் பற்றிய விரல் வழியே அவன் தோள் தின்மை உணர்ந்தாள்.

அவள் காய்கறி வாங்க, சத்தியும் செல்வாவும் கடைக்குள் ஏறினார்கள். இடுப்பில் தோள்பட்டை கட்டிய கைத்துப்பாக்கியும், பெரிய தொப்பியுமாய் பிள்ளை கடை விட்டு இறங்கினான்.

"எதுக்கு சத்தி இதெல்லாம்...?"

"அவன் அங்கேயே கேட்டான்."

"எங்கே...?"

"மிருகக் காட்சி சாலைல யாரோ ஒரு பையன் வெச் சிருந்தது பார்த்துக் கேட்டான். வாங்கித் தர்றேன்னதும் பிடிவாதம் பண்ணாத விளையாடப் போயிட்டான். ஏமாத்தக் கூடாதில்லே..."

பிள்ளை துப்பாக்கி உருவி அம்மாவைப் பார்த்துச் சுட்டது. முகம் பூவாய் மலர தெருவில் போவோர் வருவோரைச் சுட்டது.

"இதை இத்தனை சந்தோஷமாய் இன்னிக்குத்தான் பார்க்கறேன் சத்தி?"

"நிறையப் பேசணும், அடிக்கடி வெளியே கூட்டிட்டு போகணும்."

"அப்பா இல்லாதது பிள்ளைக்குக் கஷ்டம்தான்.

"இனிமே நான்தான் அப்பா...ஸாரி! அப்பா மாதிரி... ஸாரி! நான்தான் கார்டியன்."

ஜார்ஜினா நிமிர்ந்தாள். அவனை ஊடுருவிப் பார்த் தாள். உள்ளே இனம் புரியாத சந்தோஷம் பரவியது. இது சரியா என்று கூடவே கேள்வி எழுந்தது. அவளுக்குள் யாரோ தேவையாயிருந்தது. இப்படித் தேவையாய் இருக் கிறதே என்று வருத்தமாய் இருந்தது. 'எனக்கு ஒண்ணும் கிடையாதா, என்று கேட்கத் தோன்றியது. 'வேணாம் வேணாம் ஒழுங்கா இரு ஜார்ஜினா' உள்ளே மனசு அதட்டி யது. ஜார்ஜினா மருண்ட மான்போல் நின்றாள்.

காமன் கரும்பு வில் வளைத்தான். நாணேற்றினான். கரும்புவில்லில் மலர் சரம் தொடுத்தான். திரும்பி ரதியைப் பார்த்தான்.

'உம்...நடக்கட்டும். அந்தப் பையனை நான் பார்த் துக் கொள்கிறேன்'—ரதி சிரித்தபடி கூறினாள். மன்மதன் அம்பு ஜார்ஜினாவின் நெஞ்சு தைத்தது.

31

உலகம் சந்தோஷமாய் இருக்கட்டும் என்கிற நினைப்பில்தான். ஆணும் பெண்ணுமாய் பிரித்து படைக்கப்பட்டது. எதிர் எதிர்த் துருவங்களாய் இவர்கள் இருந்தால்தான் ஈர்ப்பு வரும் என்று வெவ்வேறு குணங்கள் தரப்பட்டன. பயந்து மிரளுகிற பெண்மை ஆணுக்கு அதிசயம். அது உணர்ச்சி வசப்பட்டுக் கால் மாற்றித் தவிர்த்து நான்கு திசைக்கும் முகம் திருப்பி, மண் பார்த்து மயக்கத்துடன் பாதி முகம் பார்த்துத் தன் விரல் பார்த் துத் தவிக்கிறது பெரும் காட்சி. பார்க்கப் பார்க்கத் தெரியாத கண் கிறக்கம்.

பெண்ணுக்கு எது மயக்கம்? ஆணின் மடமை. அது மூரடு. மூர்க்கன் என்று நினைக்கிற பெண் அவன் அப்பாவியாய் உள்ளுணர்வு புரியாத ஜென்மமாய் ஏதும் அறியாப் பாலகனாய் நிற்பது பெரும் சிரிப்பு சிரிப்பில் வளரும் சிநேகம். சிநேகத்தின் உச்சியில் காதல். காதலின் வளர்ச்சியில் கனிவு. கனிவின் விளைவாய் வாஞ்சை.

அந்த மூர்க்கன் இவள் வாஞ்சைக்கு வசப்படுவான் என்று இயற்கைக்குத் தெரியும்.

'நான் தான் அப்பா...ஸாரி...! அப்பா மாதிரி ஸாரி...' ஏதோ நினைத்து ஏதோ சொல்கிறோம் என்று சத்திக்குப் புரிய முழுசாக ஒரு நிமிடம் ஆயிற்று. அந்த ஒரு நாடி யில் ஜார்ஜினாவுக்குள் பல பூகம்பங்கள் நிகழ்ந்து விட்டன. ஒரு பிள்ளைக்கு அப்பனாய் இருக்க முயல் பவன் அந்தப் பிள்ளையின் தாய்க்கு உறவற்றுப் போய்

விட முடியுமா? பிள்ளை வர வரைக்கும் தான் உறவு. பெற்றவனோடு சம்பந்தமில்லை என்று நினைத்துக் கொள்ள இயலுமா?

ஜார்ஜினா மிரண்டு தயங்கித் தவித்ததும் சத்தி புரிந்து கொண்டான்.

"நான் சொன்னது சாதாரணமா... குழந்தைக்குத் தாயா...?"

'தென்றல் உறங்கிய போதும்
திங்கள் உறங்கிய போதும்
கண்கள் உறங்கிடுமா
காதல் கண்கள் உறங்கிடுமா!'

காய்கறிக் கடையில் டிரான்சிஸ்டர் பாட்டுப் பாடியது. அடுத்த கடைக்குப் போனால் அந்தம் பாடியது.

ஜார்ஜினா சட்டென்று மாறித் தளர்ந்து நடப்பது விநோதமாய் இருந்தது சத்தியநாராயணனுக்கு. 'கோபமா இல்லை. வேதனையா இல்லை. எதுக்கு சத்தி இந்தப் பேச்செல்லாம்?' என்கிற சலிப்பா. 'இடியட், என்ன பேசறே?' என்று ஏன் சொல்லவில்லை? 'வாடா இங்கே...' பையனைப் பிரித்து இழுத்து துப்பாக்கி பிடுங்கி ஏன் தரையில் எறியவில்லை. 'நான் அப்பா... அப்பா மாதிரி' என்று சொன்னது பிடித்து விட்டதா? நான் அதுமட்டும் தான் சொல்லேன். அந்த அர்த்தத்தில் மட்டும்தான் சொன்னேன்.

'மடையா... உலகத்தில் ஒரு சொல்லுக்கு நூறு அர்த்த முண்டு. மண்ணாந்தை மாதிரி பேசிட்டுப் பின்னாலயே போறியே. அவ குழந்தைக்கு அப்பான்னா அவளுக்கு என்ன... யார் நீ... ஒரு மாதிரிதான் பேசறே நீ...'

'ஐயோ...! நான் அப்படியில்லை. வண்டி குலுங்கிப் பொய்ப்பளை மேல பட்டா... உடனே ஜிவ்வுன்னு ஆயிடுச்சு நான் வேணும்னாலும் சண்ணலை. பையன் வண்டி ஓட்டி

அதான்... அதான்... பையனை வெச்சு அம்மாவை... சே! அசிங்கம் நான் அப்படிப்பட்டவன் இல்லை.

'வண்டலூர் ஜூ ரொம்ப தேவையா? தேவையாங் கறேன்... பேசாம மன்னிப்பு கேளு. மறந்து போச்சா எல்லாம். மாத்திரை முழுங்கி சாவப் பார்த்தவன்தானடா நீ... இவ பட்ட துக்கம் தாங்காமதானே செத்துப் போக ட்ரை பண்ணினது... இப்போ இவ சரிஞுட்டா... சரிஞுட்டா என்ன சொல்லே?"

ஜார்ஜினா முதுகு வளைந்து வெண்டைக்காய் பொறுக்கினாள். நுனி உடைத்துக் கூடையில்போட்டாள். முதுகு நடுவே காலவாய் ஓடி இரண்டு பக்கமும் திடமாய்ப் பள பளத்தது. பின்புறத்தில் முட்டைக்கோஸ் அடுக்கி வைக்கப்பட்டிருக்க, மூக்கும் முகவாயும் ஈர உதடுகளும் கோடாய்த் தெரிந்தன. நிமிர்ந்து பை பிரித்து நின்றபோது சில மாதிரி தெரிந்தாள்.

'சரிஞுட்டா... சரிஞுடுவேன்.'

ரதி வில் வளைத்தாள். நாண் ஏற்றினாள். மன்மதனைப் பார்த்தாள். அவன் முறுவலிக்க, அவளும் சிரிப்புடன் பாணம் எய்தாள். நெஞ்சில் தைத்த பாணம் அப்படியே நின்றது; உள்ளே போகவில்லை மன்மதன் வியப்புடன் பார்த்தான்; பொறு என்று ரதி சைகை செய்தாள்.

'இது தப்பு சத்தி. அவ உன் சிநேகிதன் பொண்டாட்டி; அவங்க குழந்தைக்கு நீ உதவி செய்யறது சரி. ஆனா, வேற ஒருத்தன் பொண்டாட்டியை உடமை ஆக்கிக்கறது தப்புப்பா.'

'அவ விதவைதானே...?'

"வேணாம் கண்ணா. மறுவாழ்வு தர ஆசைப் படறியா... நம்மூர் லேடீஸ் வேற மாதிரி கண்ணா. உனக்கு மரியாதையே அவளுடைய புருஷனோட சிநேகி

கன்கறதாலதான். அதைக் கெடுக்காதே. விண்செண்ட் மேல இருக்கற மரியாதை இவ மேலயும் இருக்கட்டும். புரியுதா...பேசாம ஸடேஷன்ல கொண்டு போய் விட்டுட்டு வீட்டைப் பார்க்கப் போய்ச் சேரு.''

'சரி... சரி, நான் மூஞ்சியைத் திருப்பிக்கறேன். முட்டைக்கோஸையும் கத்திரிக்காயையும் மட்டுமே பார்க்கிறேன்.''

'வெரிகுட். இது மரியாதை.'

ஆமா, ஒரு சந்தேகம். ஜார்ஜினா ஏன் என்னைத் திட்டலை, அதுக்குக் காரணம் தெரியணுமே.'

'திட்டு வாங்காம போமாட்டே... அப்படித்தானே?'

'வேணாம்கறியா?'

'மூட்டைக்கோஸைப் பார்றா...' —மனசு கத்திற்று.

ஜார்ஜினா நகர்ந்து ஒரு ஸ்டிக்கர் கடை வாசலில் நின்றாள் ரங்கநாதன் தெரு நடைபாதையில் கோல வகையிலிருந்து கடவுள் படம்வரை ஸ்டிக்கர் பரப்பி யிருந்தது.

' அதை எடுங்க'' —ஜார்ஜினா கை காட்டினாள்.

இரண்டு கருங்குதிரைகள் முழு வேகத்தில் ஓடும் ஸ்டிக்கர். சத்தி முட்டைக்கோஸிலிருந்து விடுபட்டு ஜார்ஜினாவைத் தேடினான்.

''சத்தி இங்கே இருக்கேன்.''

குரல் வந்த திசை நோக்கிப் பிள்ளையுடன் நகர்ந்தான்.

''உங்க வண்டில இது ஒட்டினா நல்லா இருக்கு மில்லே.''

''ஒட்டிடுங்க.''

''ஏன் ஜார்ஜினா?''

' சும்மாதான் இது பார்த்ததும் உங்க மோட்டார் சைக்கிள் ஞாபகம் வந்திச்சு.'' அவன் பாக்கெட்டில் செருகி

னாள். சேப்பங்கிழங்கு வாங்கினாள். காலிஃப்ளவர் வாங்கினாள்.

''நான் இளம்பறேன் சத்தி'' —ஸ்டேஷன் நோக்கி நடந்தாள். படியேறினார்கள். மெள்ள இருட்டிக்கொண்டு வந்தது. ''மழை வரும்போல இருக்கு ஜார்ஜினா.''

''போயிடலாம்.''

''மின்னுது. வண்டியில கொண்டுபோய் விட்டுட றேன்.''

''வேணாம் சத்தி. நீங்க அங்கேருந்து வர்றதுக்குள்ளே மழை வந்துடும். டிரையின்லே போயிடறேன். செல்வா, அங்கிளுக்கு தாங்க்யூ சொன்னியா?''

பிள்ளை தாங்க்யூ சொல்லியது. சத்தி குனிந்து முத்த மிட்டான். வடக்கிலிருந்து டிரெயின் வந்தது. கூட்டமாய் இருந்தது. லேடீஸ் கம்பார்ட்மெண்டில் அம்மாவும் பிள்ளையும் தொற்றிக்கொண்டார்கள். உள்ளே புகுந்து பிள்ளையை அணைத்தபடி கையசைத்தாள்.

''தாங்க்யூ!''—சத்தி சொன்னாள்.

''எதுக்கு?''

''ஸ்டிக்கருக்கு.''

' ஒட்டிடுங்க உடனே...'' என்றாள்.

வண்டி கிளம்பிற்று. ஜார்ஜினாவின் புன்னகையை அவனெதிரே விட்டுச் சென்றது.

தெற்கிலிருந்து எதிர்வண்டி வடக்கு நோக்கிப் போவது வந்து நின்றது. வண்டி முழுவதும் ஈரமாய் இருந்தது. 'மழையா அங்கே...?'

''மழையா சார் மீனம்பாக்கத்துல...?''

''மழையா, பொளந்து கட்டுது. கிண்டி வரைக்கும் சரியான மழை!''

"அட... இங்கே இல்லையே..."

"பாலிகன். சைதாப்பேட்டைக்கு அந்தப் பக்கத்திலே பாலிகன்."

சத்திக்கு யாரைச் சொல்கிறார் என்று புரியவில்லை. 'அங்கே மழையெனில் எப்படிப் போலார்கள் விடு வரைக்கும். குழந்தை வேறு நனைவானே. பகல் முழுவதும் வெயிலில் அலைந்து மாலையில் மழையில் நனைந்தால்... அடுத்த வண்டி பிடிச்சு... பிடிச்சு என்ன செய்யப் போறே...?'

வெளியே ஓடிவந்து தென்பட்ட ஜெனரல் ஸ்டோர்ஸ் போய் ஒரு குடை வாங்கினான். சின்ன பையனுக்கு ரெயின் கோட் வாங்கினான். தாவி மோட்டார் சைக்கிளில் ஏறினான்.

'டேய் சத்தி...' —மனசு கத்தியது.

'சும்மா கிட. குழந்தை நனையும். பகல் முழுக்க அலனை இழுத்தடிச்சு... இப்போ மழையில நனைஞ்சா நாலுல்ல திட்டு வாங்குவேன்.'

வண்டி மாம்பலம் வாகன வரிசைகளினூடே மடங்கி மடங்கி ஓடியது. சைதாப்பேட்டை தொட்டது பாலம் தாண்டியது. சாரல் துவங்கியது. கிண்டியில் வலுத்தது. பரங்கிமலையில் சுழற்றிச் சுழற்றி அடித்தது. திருசூலம் ரயில் நிலையத்தில் அடர்த்தியாய் மழை பெய்தது. சத்தி தெப்பமாய் நனைந்து விட்டிருந்தான்.

வண்டியை ஸ்டேஷனில் நிறுத்திப் பூட்டி, குடையும் ரெயின் கோட்டும் எடுத்து உள்ளே ஓடினான். ஒரு டி ரெயில் கிளம்பிற்று. 'இந்த வண்டியா... தெரியலையே.' தாவி ஒரு வராண்டாவில் ஓடி, படியிறங்கி நாலாவது படியில் நின்று சுற்றுமுற்றும் பார்த்தான். அம்மாவும் பிள்ளையும் நடந்து படி நோக்கி வந்து கொண்டிருந் தார்கள். மழை பார்த்தார்கள். "இங்கே உட்கார மா...?" —பிள்ளையை ஜார்ஜினா கேட்பது தெரிந்தது.

ஜார்ஜினா அருகே நடந்தான்.

"ஏய்... சத்தி! என்ன இங்கே?"

"மழை பெய்யுதே."

"அதனால...?"

"குடை வாங்கிட்டு வந்தேன்."

"இது என்ன...?"

"ரெயின் கோட். பையன் நனைஞ்சிடுவான்."

ரெயில் கோட் பிரித்து ஈரக்கையால் அவனுக்குப் போர்த்தி மாட்டினான். தொப்பி அணிவித்தான். குடையை அவளிடம் நீட்டினான்.

"மழை பெஞ்சா... தானா நிக்கும்."

"நிக்கலேன்னா... பிள்ளைக்குப் பசிச்சுதுன்னா... நேரா நேரத்துல வீடு போக வேணாமா?"

"சத்தி..."

"இது டூ மச்... அதானே சொல்லப் போறீங்க."

"இல்லை."

சத்தி நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

"தாங்க்யூ! ஸ்டிக்கர் நனைச்சுட்டீங்களா? சரி, அது நனைஞ்சா ஒண்ணும் ஆகாது..."

"இதுவும் ஒண்ணும் ஆவாது. அப்படியே எதுவும் ஆனாலும்..." சத்தி இழுத்தான்.

"ஆனாலும்?"

"எனக்குப் ப்ரே பண்ண ஆள் இருக்கு."

ஜார்ஜினா தலித்தாள். 'ஏன் இழுபடுகிறேன்...?'

"பசிக்குதும்மா." —பிள்ளை கெஞ்சியது.

"வா. வீட்டுக்குப் போவோம்."

"இருங்க. ஒரு காட்பரீஸ்."

"வேணாம் சத்தி. ரெண்டு காட்பரீஸ் முழுசா சாப்பிட்டாச்சு. பசிக்கு சாக்லேட் தர்றது தப்பு. விட்டுக்குப் போய் சாப்பிட மாட்டான். வா செல்வா." வெளியே மழை அடர்த்தியாயிற்று. படியேறினார்கள். ஸ்டேஷன் வாசலில் குடை பிரித்தான்.

"நீங்க எப்படிப் போவிங்க சத்தி?"

"வந்த மாதிரியே."

"செல்வா, போலாமா...?"—மழையில் இறங்கினாள்.

"சத்தி மழை நின்னதும் போங்களேன்."

"நனைஞ்சாச்சு. போயிடறேன் இப்படியே."

நகர்ந்து மழையைக் குனிந்து வாங்கிக் கொண்டு வண்டி உதைத்தான். வண்டி பெரும் சத்தம் எழுப்பியது.

"சத்தி ஜாக்கிரதை."

"தாங்க்யூ."

"சத்தி..."

"என்னா...?"

"உங்க வீட்டு போன் நம்பர் என்ன...?" சொன்னான்.

"மழைல வண்டில போறீங்க. ஜாக்கிரதையா போனீங்களாலு தெரிஞ்சுக்கணும். போன் பண்றேன்."

"நானே பண்றேன்"

"வேணாம். வீட்டுக்குத்தானே போறீங்க. நானே பண்றேன்."

"ஓகே..."

வண்டி கிளம்பி ட்ரங்க் ரோட்டுக்குப் போயிற்று. மழையைக் கிழித்துக் கொண்டு பறந்தது. சிதறி நீர் அடிக்கும் பேருந்துகளைக் கடந்தது. விளக்கெரிய மாம் பலத்துக்குள் நுழைந்தது. அவன் தெருவில் ஓடும் நீரைக் கிழித்துக் கொண்டு வாசலில் வந்து நின்றது.

"என்னடா தொப்பலா நனைஞ்சு வர்றே..." அவன் பதில் சொல்லாது மாடியேறினான். உடைகளைக் களைந்தான். தலை துவட்டினான். லுங்கிக்கு மாறினான்.

தோளில் துண்டு போட்டு ஹாலுக்கு வந்தான். "அம்மா, காபி கொடு..." போனுக்கு அருகே உட்கார்ந்து கொண்டான்.

"எங்கடா மாட்டிண்டே?"—அப்பா கேட்டார்.

"ஏர்போர்ட்லேர்ந்து வர்றியா?"

"ஆமா..."

"நின்னு வர்றதுதானே?"

மணியடித்தது.

"கொஞ்சம் இரு...சத்தி ஹியர்."

"சத்தி, ஜார்ஜினா...ஒழுங்கா போய்ச் சேர்ந்தீங்களா...?"

"ஓ யெஸ்...இப்போதான் உள்ளே வந்து டிரஸ் மாத்திட்டு காபிக்கு உட்கார்ந்தேன்."

"நல்ல மழை இல்லையா..."

"ஏ கிளாஸ் மழை."

"அம்மாகிட்ட சொல்லி மிளகு ரசம் வைக்கச் சொல்லி குடுங்க. நல்லது."

"ஜார்ஜினா..."

"யெஸ், சத்தி."

"நான் வாய் தவறிச் சொல்லிட்டேன்..."

"அப்படியா?"

"அப்படியான்னா...?"

"மனசுல இருந்தது வெளில வந்திடுச்சு."

"இல்லே ஜார்ஜினா"

"மனசுல அப்படி இல்லியா?"

"புரியலை, குழப்பமா இருக்கு. பயமா இருக்கு."

"என்ன பயம்?"

"நிட்டுவீங்களோன்னு..."

"திட்டறதுக்கு ஒண்ணுமில்லை சத்தி. நானும் கும்பிட்டேன். என்ன இது... என்ன இதுன்னு தவிச்சேன். ஆனா..."

"சொல்லுங்க ஜார்ஜினா."

"ஸ்டேஷனுக்கு குடை கொண்டு வந்து கொடுத்து, பையனுக்கு ரெயின் கோட் மாட்டிவிட்டது பார்த்ததும் ஒரு மாதிரி ஆயிடுச்சு. உடம்பு, மனசு ரெண்டுமே நடுங்கிப் போச்சு.

சத்தியின் நெஞ்சில் செருகிக் கொண்டிருந்த அம்பு மெள்ள உள்ளே நுழைந்தது.

'சத்தி, இது வேண்டாம்'—மனசு அதட்டியது.

'சும்மா கிட'—சத்தியும் பதிலுக்கு அதட்டினான்.

"என்ன, பேச்சு காணோம்..."

"சட்டுனு டயர்டாயிடுச்சு ஜார்ஜினா."

"சாப்பிட்டு நல்லா தூங்குங்க."

"தூக்கம் வருமா, தெரியலை."

"நாளைக்கு ட்யூட்டிக்கு வர வேணாமா?"

"வரணும், ஜார்ஜினா..." —சத்தி குரல் நடுங்க அழைத்தான்.

"யெஸ்..."

"என் மேல கோவம் இல்லையே?"

"எனக்கு மனசு மேலதான் கோவம்."

"ஏன்?"

"நாளைக்குச் சொல்றேன். போனை வைக்கட்டுமா? குட் நைட்."

மெள்ள போனை வைத்தான்.

அப்பா பேப்பரில் ஆழ்ந்திருந்தார். காபி எதிரே ஆறிக் கொண்டிருந்தது. அம்மா எப்போது வைத்தாள் தெரியவில்லை ஒரே மிடறில் குடித்து விட்டு எழுந்தான்.

நிதானமாய்ப் படியேறினான். வராண்டாவில் நின்று வேடிக்கைப் பார்த்தான். கை நீட்டி நீர்த்துளி வாங்கினான். உள்ளே நுழைய விளு சிரித்துக் கொண்டிருப்பது கண்களில் பட்டது. மேல் துண்டு எடுத்து அந்தப் படத்தை மறைத்தான். கட்டிலில் உட்கார்ந்து கொண்டான். ஜார்ஜினா அவன் மனசுக்குள்ளே குனிந்து வெண்டைக்காய் ஒடித்துப் போட்டுக் கொண்டிருந்தாள். நடுமுதுகு கால்வாய் மாதிரி ஒடிற்று.

'இதுக்குத்தான் இத்தனை சண்டையா?'— மனசு கேட்டது.

'இல்லை. இது இப்படித் திரும்பும் என்று தெரியாது எனக்கு. திரும்பி விட்டது. இனி இது தான் சரி. இது தான் உசத்தி. இது தான் சரியான நஷ்ட ஈடு, இது தான் என்னைக் கரையேற்றும் தீர்ப்பு'

வடதுருவம் தென் துருவம், ஈர்த்தது. இழுத்தது.

சத்தியின் அப்பா நெற்றி தடவி யோசித்தார். அவருக்குப் புரிந்தது. அவருக்கு வடதுருவம், தென் துருவம் விஷயமில்லை. நெருப்பும் பஞ்சும் என்கிற விஷயம். கவலை கொடுத்தது. நெருப்பு பற்றிக் கவலைப்படவில்லை. பஞ்சு உருத்தெரியாமல் போய்விடுமே என்று பயந்தார். மாடிப்படி யேறினார்.

32

மன்மதன் அம்பு நெஞ்சில் தைத்த பிறகு ஒரு மனிதன் சாதாரணனில்லை. அவன் வேறு ஆள். அவன் உலகம் வேறு உலகம். அதற்குப் பிறகு அவனுக்குப் பிடித்த விஷயம்—அவளும் அவள் இல்லாத போது அவள் நினைவும். காதலில் சிக்கிக் கொண்டவனுக்குக் காது கேட்காது. கண்ணில் கூர்மை வராது. நடை பின்னும். சுவாசம் துரிதமாகும். புத்தி இரண்டாகப் பிளந்து ஒன்று எப்போதும் அவளோடும், மற்றது எதிரே இருப்பவரோடும் பேசிக்கொண்டிருக்கும்

சத்தி, ஜன்னலுக்கு வெளியே ஆகாயம் பார்த்துக் கொண்டிருந்தாலும் அவளோடு இன்னமும் பேசிக் கொண்டிருந்தான். "இது சரியா ஜார்ஜினா...?" என்று சந்தேகம் கேட்டுக் கொண்டிருந்தான்.

அப்பா படியேறி நின்றது தெரிந்தது. உடனே மறைந்தது.

வந்து இரண்டு நிமிடமான பிறகும் பிள்ளை வானத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கிழவர் புருவம் தூக்கினார்.

"சாம்பிராணி போட்டுக்கறியாடா?"

"உம்."

"தணல் போடச் சொல்லட்டுமா?"

"உம்...வேண்டாம்."

'சாம்பிராணி போட்டுக்கறேன்னியே...'

"எப்போ சொன்னேன்?"

"இப்போதான்."

"அப்படியா?"

"என்ன அப்படியா அங்கே என்னத்தை அப்படி பார்க்கறே...?"

"ஒண்ணுமில்லை."

"உடம்பு ஏற்கனவே பலஹீனமா இருக்கு. கொட்ட மழையில நனைஞ்சுட்டு வர்றே. எதுனா வந்ததுன்னா?"

"எனக்கொண்ணும் இல்லைப்பா."

"யாரு போன்ல...ஆபீஸ்காராளா?"

சத்திக்குச் சற்று சுயநினைவு வந்தது. 'அப்பா கேட்டுக் கொண்டிருந்தாரா... முகம் மாற்றம் பார்த்துவிட்டு வந்திருக்கிறாரா...என்ன சொல்வது?'

"ஆமாம் ஆபீஸ்தான்."

"யார்...?" என்று அப்பா முகம் மறுபடி கேட்டது.

"நம்ம ஜார்ஜினாதான்."

"எனக்கு அந்தப் பேர் காதுல விழுந்தது. அதான் கேட்டேன்."

சத்தி மேலும் விழிப்புற்றான்.

"மறுபடி எதாவது தப்பு பண்ணிட்டியா?"—அப்பா திடுமென்று கேட்டார்.

"இல்லையே...ஏன்?"

"திட்டுவீங்களோன்னு ஏதோ பயந்த மாதிரி கேட்டே... அதான்."

சத்திக்கு முழுவதும் விழிப்பு வந்து விட்டது. 'என்னத்தைச் சொல்வது? எனக்கே எதுவும் புரியாதிருக்கும்போது எதைச் சொல்வது?'

"மழையில போகாதீங்க...இன்னும் உடம்பு தேறலியேன்னாங்க. கேட்காம வந்துட்டேன். அதான் ஜாக்கிர

தையா வந்திங்களானு கேட்டாங்க. சொல் பேச்ச கேட் காததுக்குத் திட்டாதிங்கனு சொன்னேன்.''

''ஓகோ...'' நம்பவில்லை என்று முகம் காட்டியது.

''சரி, நான் கொஞ்சம் தூங்கறேன். உனக்கு ஏதாவது வேணுமா?''

தனிமை தேவைப்பட்டது. யாருமே எதிரில் இல்லாத தனிமை அவசியம் என்று தோன்றிற்று.

''சாப்பிட வருவியோன்னோ?''

''வரேன்.''

இதற்குமேல் இப்போது கேட்பது உசிதமில்லை என்று பெரியவர் படியிறங்கினார். மறுபடி வந்து ஏதும் கேட்பாரோ என்று விழிப்பு நிலையிலேயே காத்தி குந்தான்... தன்னை அறியாது கனவு நிலைக்குப் போனான். அன்று இரவு சாப்பிடவே இல்லை. இரண்டு முறை கூப்பிட்ட போது 'வரேன்' என்று சொன்னானே தவிர கனவு கலைந்துப் போகவில்லை. மூன்றாம் முறை மேலே வந்து கூப்பிட்டபோது தூங்கிக் கொண்டிருந்தான்.

காதல் வயப்பட்டவனுக்குக் கனவே உணவு, கற்பனையே ஊற்று நீர். தனிமை அவன் வீடு. காதல் பாட்டுக்கள்தான் தலையணை. சுருண்டு கொள்ளக் கிடைத்த இடமெல்லாம் சொர்க்கம்.

ஏழு மணிக்குக் கண் விழித்து ஏழரைக்கு உடை உடுத்தி கண்ணாடி முன் நின்று படிய பலமுறை வாரி, பல கோணங்களில் தன்னை ரசித்துப் படியிறங்கி, ''நான் ஆபீஸ்ல டிபன் பார்த்துக்கறேன்'' என்று சொல்லிவிட்டு வண்டி உதைத்து ஏழு ஐம்பதுக்கு ஏர்போர்ட் வந்து விட்டான். வாசலில் நின்று அடையாள அட்டை காட்டி, வாய் நிறைய காலை வணக்கம் சொல்லி லவுன்ஜில் எதிர்ப்பட்டவருக்கு வந்தனம் செய்து, அட்டெண்டென்ஸ் ரெஜிஸ்தர் அருகே காத்திருந்து

கையெழுத்திட்டு ஜார்ஜினா இன்னும் வரவில்லை என்பதைக் குறித்துக்கொண்டு... தன் டேபிளுக்கு அருகே போய் பரபரவென்று துடைத்து சாவி வாங்கி...

''அடுத்த டெப்பார்ச்சர் என்னப்பா? இன்னும் ஒன் அவர் இருக்கு இல்ல... கௌண்ட்டர் ஓபனாயிடுச்சா... ஏப்ரான்ல யார் நிக்கறது சாரதியா...?''

''சாரதி. குட்மார்னிங்!'' —லயர்லஸ் நிமின்டி கூப்பிட்டு ''ப்ளூயல் போட்டாச்சா... கௌண்ட்டர் திறக்கலாமா? நோட்டம் ஆபீஸ் யாருப்பா? தங்கமணி... குரல் வெச்சே கண்டுபிடிச்சுட்டேன் பார். குட்மார்னிங்! பேப்பர் ரெடியா?''

எட்டு பத்து. ஜார்ஜினா வரவில்லை. கால்குலேட்டர் எடுத்து விமான எடை குறித்துக்கொள்ள மெல்லிய செண்ட் மணம் சூழ்ந்தது. ஜார்ஜினா...

''ஸாரி சத்தி, லேட்டாயிடுச்சு.''

''குட்மார்னிங்!''

''குட்மார்னிங்! ரெஜிஸ்தர் எங்கே?''

''ஏன் லேட்?''

''தூங்கிட்டேன் சத்தி!''

நிமிர்ந்து பார்த்தான். காரணம் புரிந்தது.

''நைட் தூங்கலையா?''

''தூக்கம் வரலை. நீங்க?''

''ஒன்பதரைக்குத் தூங்கிட்டேன். ஆனா...''

''என்ன ஆனா?''

''சாப்பிடலை.''

''ஏன்?''

''மறந்து போச்சு'' —கைவிரித்தான்.

அவள் விழி மடல் சுருக்கி அவனை உற்றுப் பார்த்தாள். சிரித்தாள் ''கௌண்ட்டருக்குப் போறேன் சத்தி.''

''ஜஸ்ட பெஸ்ட்!''

''எதுக்கு?''

''வேலை செய்யறது ஏர்போர்ட். எல்லாத்துக்கும் அடிக்கடி சொல்லிக்குலோம்... எப்போ என்ன நடக்கும்னு தெரியாது.''

மூலைக்கொருவராய் பிரிந்தார்கள். பேப்பர்களுடன் பறந்தார்கள் ஓர் இயந்திரம் வானில் ஓட, பல மனிதர்கள் மேலே இயந்திரமாய் இயங்கினார்கள். பதினோரு மணி வரை பல விமானங்கள் தரையிலிருந்து வானம் நோக்கிச் சீறின. பயணிகள் குவிந்து, கலைந்து... குவிந்து, கலைந்து ஏர்போர்ட் குப்பையாகி... சுத்தமாகி தாளம் தவறாது இயங்கிற்று.

பதினொன்று பத்து. கொஞ்ச நேரம் ஓய்வு. இனி பன்னிரண்டரைக்கு ஒரு ப்ளைட்!

''ஏம்ப்பா நைட் சாப்பிடலை... கார்த்தால என்ன சாப்பிட்டீங்க?'' —கேட்டபடி ஜார்ஜினா அருகே வந்தாள்.

''இதுவரைக்கும் எதுவும் சாப்பிடலை.''

''தொலை பட்டினியா?''

''பசியே இல்லை ஜார்ஜினா!''

''வாங்க, போய் ஏதாவது சாப்பிடலாம்.''

''கான்டீன்லயா... வேணாம்.''

''அட வாங்கப்பா'' —ஜார்ஜினா கௌண்ட்டர் தாண்டி வெளியே நடந்தாள். சத்தி அடுத்த ஆளிடம் சொல்லிவிட்டுப் பின் தொடர்ந்தான்.

''பொங்கல், பூரி, வடை இருக்கு சத்தி!''

''பூரி, வடை...''

''வேணாம். வெறும் வயித்துல பூரி சாப்பிடாதீங்க. எண்ணெய். ரெண்டு பொங்கல், ரெண்டு வடை.'' டோக்கன் வாங்கி ப்ளேட் எடுத்து பொங்கலுக்கு நின்று, இரண்டு தட்டுகளையும் டேபிளுக்கு எடுத்து வந்தாள். எதிர் எதிராய் வைத்தாள்.

''நேத்து மழைல நனஞ்சுட்டு ராத்திரியும் சாப்பிடலை கார்த்தாலயும் சாப்பிடலையா. உங்க வீட்டுல யாரும் கேட்கலயா?''

''கேட்டாங்களே...''

''என்னன்னு?''

''யார் போன்... ஜார்ஜினாலானு அப்பா கேட்டார்.''

''ஐயோ...'' —ஜார்ஜினா சாப்பிடுவது நிறுத்தினாள். அவரைப் பக்கத்துல வெச்சுக்கிட்டா அப்படிப் பேசினீங்க?''

''தப்பா ஒண்ணும் பேசிடலையே.''

''நப்பா பேசலியா... 'சட்டுன்னு டயர்டாயிடுச்'ன்னீங்க. 'எம்பேர்ல கோபம் இலலியே'ன்னீங்க. எல்லாம் காதுல விழுந்திருக்குமே...?'

''என்ன மறுபடி ஏதாவது தப்பு பண்ணிட்டியா'னு? கேட்டாரு. இல்லை, மழையில போகவேண்டாம்னாங்க வந்துட்டேன். அதான்னு பதில் சொன்னேன்.''

''கஷ்டகாலம்.''

''ஏன்...?''

''அப்பா பக்கத்துல இருக்காருன்னு சொல்லக் கூடாதா... கொஞ்சம் ஜாக்கிரதையா பேசியிருக்கணும்.''

''எனக்கே போன் வெச்சப்புறம்தான் உறைச்சுது. நிதானமா ப்ளான் பண்ணிப்பேச டைம் இல்லையே. தலை சுவட்டிக் கீழே இறங்கினேன்... உங்கிட்டேருந்து [illegible]ன்.''

"தப்புளம்மேலதான் பையனுக்கு வேற டிரஸ் மாத்தி, தானும் மாத்திக்கிட்டு எதிர் வீட்டுக்கு ஓடிட்டேன். இப்போதானடி டிரஸ் மாத்தினே... அதுக்குள்ளேயும் மழையில எங்கே திரும்ப ஓடறே?'ன்னாங்க அம்மா. போன் பண்ணிட்டுவந்து திரும்பவும் டிரஸ் மாத்தினேன்."

"எதிர் வீடு தானே... அவ்வளவு நனஞ்சு போச்சா."

"எதிர் வீடு தான், போன் பண்ணிட்டு நிதானமா நடந்து வந்தா?"

"அம்மா திட்டலையா?"

"'பைத்தியக்காரி'ன்னாங்க."

"ஆமாம்னீங்களா?"

"கரெக்ட்! எப்படி கரெக்டா சொல்றீங்க?"

ஒரு யூகம்தான். நேத்து ரங்கநாதன் தெரு போற வரைக்கும் ஒழுங்காத்தான் இருந்தது. அப்புறம்தான் புடிச்சுடுச்சு:

"தடால்னு தலைல அப்படி ஒரு கல்லு போட்டா எந்தப் பொம்பளைக்கும் பைத்தியம் புடிக்கத்தான் செய்யும். 'நான்தான் செல்லாவுக்கு அப்பா'ன்னீங்களே... அப்படியே ஆடிப்போயிட்டேன்."

"கடவுள் சத்தியமா... வாய் தவறி வந்த வார்த்தை."

"நான் நம்பலை."

"இல்லை ஜார்ஜினா, அப்படி ஒரு கெட்ட எண்ணம் இல்லை என்கிட்ட"

"இது கெட்ட எண்ணமா?"

சத்தி தயங்கினான். இது முட்டுச்சந்து என்று தெரிந்து அசையாது இருந்தான். ஆமெனிலும் தவறு. இல்லையெனிலும் தவறு.

"என்ன பதிலே சொல்லாம இருக்கீங்க?"

"எனக்குத் தெரியலை."

"பொய்."

காதல் யோசிப்பில் பெண்ணிடம் விரைவு அதிகம். அங்கு மேனி மயக்கம் தாண்டி எதிர்கால விளைவு பற்றி யோசனையே வந்துவிடும். ஆண் இதற்கு நேர் எதிர். உடம்பு மயக்கம் மீற அவனுக்கு நாளாகும். உடம்பு மயக்கம் இருக்கும் வரை எல்லாப் பேச்சும் குழப்பமாய்த் தான் இருக்கும்.

சின்னச்சின்ன வில்லையாய் வாய் அசைவது தெரியாமல் விழுங்கும் ஜார்ஜினாவைப் பார்த்துக் கொண்டேயிருக்கலாம் போல் தோன்றியது. இப்போது போய் பேசுவானேன் என்கிற எண்ணம் வந்தது. ஆனால் அவளுக்கோ அவன் பேசியே ஆகவேண்டும். பேசிப் பேசித் தெளிவு வரவேண்டும். அவன் உள் மனசு என்ன என்று தெரிந்து கொள்ளவேண்டும்.

"கெட்ட எண்ணம்னு சொல்லமுடியாது. பேராசை."

"ஏன்?"

"ஒரு யோக்கியதை வேணாமா. நான் அரை லூஸு. எமோஷனல் க்ரூக்."

"யார் சொன்னது?"

"ஏர்போர்ட் மொத்தமும் சொல்லும்."

"சொல்லிட்டுப் போகட்டும். இதுல யோக்கியதைங்கறது என்ன...?"

"நான் உங்களுக்குத் தகுதியான்ற கேள்வி."

"ஜார்ஜினா ஒரு விடோ. ஒரு பையனுக்கு அம்மான்னு யோசிக்கிறீங்களா?"

"ச்சே... ச்சே." —சத்தி வேகமாய் மறுத்தான். அந்த வேகத்தில் காதல் தெரிந்தது.

ஜார்ஜினா நிம்மதியானாள்.

"என்னை யாரோ நேசிக்கறாங்கன்றதை தாங்க முடியலை."

பருக்கைகளை மேஜையில் உதற முன்னே குவிந்த ஜார்ஜினாவின் நெஞ்சில் அவன் கைபட்டது.

''மாரி.''—சத்தி குழம்பினான்.

''வேணும்னுதானே பண்ணீங்க...?'' —ஜார்ஜினா முறைத்தாள்.

''நோ நோ...நெவர்...''—பதட்டமானான்,

''ஆமாம்னு சொல்லுங்களேன். ஏன் பதட்டம்?''

சத்தியநாராயணன் வெட்கமடைந்தான். தலை நிமிர்ந்தான். ''ஆமாம்.'' என்றான்.

''பெண் துணிந்தால் இந்த உலகம் தூசுக்குச் சமம். அவள் ஆணுக்கும் துணிவூட்ட...பிரபஞ்சம் மொத்தமும் அவர்கள் லசப்படும். அங்கே பிரபஞ்சம் வசப்பட்டது.

33

ஆனால் காதலை...எப்படித்தான் வெளியிடுவது... மொழியிலா...? மொழி ஒரு முனை மழுங்கின கருவி. உலகத்தில் எல்லா மொழிகளையும் சேர்த்து ஒரு லாட்டமான புதிய மொழி கண்டுபிடித்தாலும் அதுவும் குறையுள்ள கருவியாகத்தான் இருக்கும். மொழியை வெளியிடும்போதே கையையும் காலையும் ஆட்டி ஆயிரம் சைகைகள் செய்து, சொல்வதை லலுப்படுத்த வேண்டியிருக்கும் அப்படி சைகைகளோடும், சேர்ந்த வசனங்களோடும் சொல்லிய பிறகும் 'நான் சொன்னது உனக்குப் புரிந்ததா? என்று கேட்க வேண்டியிருக்கும். மொழி, மனசு சொல்லாது. மௌனம் சில சமயம் சொல்லும். அந்த மௌனத்துக்கு நடுவே மெள்ள விரல்கள் பற்றி, லேசாய்

அழுத்தி, உதட்டுக்கு அருகே கொண்டுவந்து விரல்களில் முத்தமிட்டு விழிகளை ஊடுருவ... யம்மா... கண்மூடி மனசு பரவசமாகும்.

ஊடுருவச் செல்லும் பார்வை காதலைச் சொல்லும். பார்த்த பின் மூடிய எதிர் ஆள் கண்கள் நன்றியைச் சொல்லும். காதல் உணர்ந்த பிறகு பேசவேண்டிய தேயில்லை. வாய் இறந்து வார்த்தைகள் இறைக்க வேண்டியதில்லை. ஆனால், விரல்கள் பேசும். விழிகள் பாடும். உடம்போ கவிதை சொல்லும். உடம்பின் பாஷைபரிபூரணமானது. ஏனெனில் அது மனிதனின் கண்டுபிடிப்பல்ல. அது அனாதியானது. என்று மனிதன் தோன்றினானோ அன்று இந்த உடல் மொழியும் தோன்றியது. இது இயற்கை கொடுத்த வரம். இயல்பாய்த் தோன்றிய விஷயம். இன்று வரை இதில் கலப்பே இல்லை. வேறு ஊடுருவல் இல்லை. வந்து சேருதலும் வழக்கு ஒழிதலும் இதில் இல்லை. அன்றும் இன்றும் இனி என்றும் மாறாதது இந்த உடம்பு பாஷை. ஆனால் இது லழியே புரிந்துகொள்ளவும், விவரித்துச் சொல்லவும் பழக்கம்வேண்டும். கொஞ்சம் அனுபவம் வேண்டும்.

'வேணும்னுதானே பண்ணீங்க...?' —ஜார்ஜினா முறைத்தாள்.

'நோ... நோ... நெவர்...' —பதட்டமானான்.

'ஆமாம்னு சொலலுங்களேன். ஏன் பதட்டம்?'

சத்தியநாராயணன் வெட்கமடைந்தான். தலை நிமிர்ந்தான். 'ஆமாம்' என்றான்.

அவன் நெஞ்சு தொட்டது விபத்து. அவள் கோபமானது நாடகம். அவன் பதட்டப்பட்டது எதிரொலிப்பு. அவள் சாதாரணமானது காதல். அவன் வெட்கப்பட்டது கவிதை. நல்ல ஆண்மகனுக்குப் பெண் தொடல் கூச்சமுள்ள விஷயம். இங்கே கூச்சமற்றவன் காமுகன். சுயநலமி. சுயநலமியைப் பெண் விரும்புவதில்லை. வெட்கப்பட்டலனை விரும்புகிறாள்.

''சத்தி, நிஜமாலே என்னை லவ் பண்றீங்களா...?''— ஜார்ஜினா கேட்டாள். இத்தனை அலன் பேசியும் போதாது மறுபடி கேட்டாள்.

சத்தியநாராயணன் மெள்ள அவள் விரல்கள் புறத்தில் முத்தமிட்டான். அவளை ஊடுருவிப் பார்த்தான்.

''யம்மா...'' —அலள் தலை நிமிர்த்திக் கண்மூடிக் கொண்டாள். லட்சக்கணக்கான வார்த்தை விரயங்கள் தடுக்கப்பட்டன. மறுபடி மறுபடி சொன்னாலும் புரியாத விஷயம் பத்து நொடிகளில் புரிந்தது. இருவர் வாழ்க்கையும் திசை மாறிற்று.

வெகுநேரம் பார்த்துக்கொண்டு இருந்தார்கள். மிக அதிசயமாய், அன்றுதான் பார்ப்பது மாதிரி பார்த்துக் கொண்டிருந்தார்கள். இத்தனை நாள் எங்கே போயிருந்தோம்... இன்று எப்படிச் சந்தித்துக்கொண்டோம் என்கிற லியப்போடு இருந்தார்கள்.

'நேற்று முன்னாளில் வந்த
உறவன்றடி ; மிக
நெடும் பண்டைக் காலமுதல்
நேர்ந்து வந்ததாம்'

—சத்தி உள்ளே பாரதி கவிதை புரண்டது.

விமானம் ஒன்று தாழ இறங்கித் தலம் கலைத்தது.

''போலாமா?''

''கொஞ்சம் இருங்க'' —எட்டி தன் கைக்குட்டையால் அவனது கிழ் உதட்டோரம் உள்ள பருக்கை துடைத்தாள். எழுந்து நடக்கும்போது இடைவெளி குறைந்திருந்தது. விரல்கள்பட்டன. தோள்கள் உரசின. செடிகளுக்கு நடுவே ஒரு சிறிய ஒற்றையடிப்பாதையில் போகும்போது தன்னை முன்னே நகர்த்தியது அவளுக்குப் பிடித்திருந்தது. அலள்

பின்னே நடக்க அலனுக்குச் சுகமாய் இருந்தது. தொட்ட போதெல்லாம் காதல் பொங்கிற்று. காதல் பொங்கின போதெல்லாம் தொடத் தோன்றிற்று. காதலை இப்படித் தான் லெளியிட வேண்டுமென்று புரிந்து போயிற்று. உள்ளே லவுஞ்சுக்குப் போகும்முன் தொட்டுநிறுத்தினான்.

''ட்யூட்டி முடிச்சு லாசல்ல நிக்கறேன் ஜார்ஜினா.''

''உம்''—அலள் தலையசைத்தாள். அதில் லெட்க மிருந்தது.

'முன்னை மிகப்பழமை
இரணியனாம்—எந்தை
மூர்க்கம் தவிர்க்கலந்த நரசிங்கன் நீ
பின்னையோர் புத்தனென நான்
வளர்ந்திட்டேன்—ஒளிப் பெண்மை
அசோதரையென் றுன்னையெய்தினேன்.
சொன்னவர் சாத்திரத்தில்
மிகவல்லர்காண்; அவர் சொல்லிற்
பழுதிருக்கக் காரணமில்லை;
இன்னுங் கடைசிவரை ஒட்டிருக்குமாம்
இதில் ஏதுக்கு நாணமுற்றுக்
கண்புதைப்பதே?'

சத்தியநாராயணன் மிச்ச நேரம் முழுவதும் கிறங்கி... உள்ளே பாரதி பொங்க அலைமோதினான்.

''ஏன் சத்தி...இன்னிக்கு வீட்டுக்குப் போய் எதுனா வேலையிருக்கா?''

''நான் பேச்சுலர் ஜார்ஜினா...போய் டிரஸ் கழட்டிட்டு லுங்கி உடுத்திட்டுச் சாப்பிடுவேன். தூங்குவேன். பேப்பர் படிப்பேன். டி.வி. பார்ப்பேன். ஏன்...?''

"எங்கயாவது வெளிய போகலாமா...பீச்?"

"நாம மட்டுமா? பையனைக் கூட்டிட்டு வாங்க ஜார்ஜினா."

அவளுக்கு உடம்பு விதிர்த்தது. 'நிஜமாவே என்னை லவ் பண்றியா சத்தி?'—மறுபடி கேள்வி வந்தது. 'ச்சீ என்ன கேள்வி இது...மறுபடி மறுபடி...'

"அவன் குடந்து குதிப்பான். ரொம்ப சந்தோஷமா இருக்கும். தனியா நாம மட்டும் போனோம்னா அவன் நினைப்பே வரும். எழுந்துருவோம்"

"ரொம்ப வெயிலா இருக்கே...?"

"போய் கொஞ்ச நேரம் படுங்க. டிரெயின் புடிச்சு நாலு மணிக்கு மாம்பலம் வாங்க. அப்படியே போயி டலாம்."

"ரொம்ப லேட் பண்ண வேணாம்."

"இருட்டறதுக்கு முன்னே வீட்டுக்கு வந்துடலாம் ஜார்ஜினா. வேற ஒரு செட் டிரஸ் கையில் கொண்டு வாங்க. டவல் கொண்டு வாங்க."

"சரி...அப்போ நாலு மணி...பை!"

வண்டி அவளைச் சுற்றிக் கொண்டு ஓடியது. அவள் நடை துள்ளியது.

தூரையில் மோதி அலை எழும்பியது. பிள்ளை மிரண்டு பின்னடைந்தான். கடற்கரைக்கு வந்து சத்திய நாராயணன் பிள்ளையை வாரிக் கொண்டான். தோளில் தூக்கி உட்கார்த்திக் கொண்டான். அலைகளினூடே நடந்தான். இடுப்பு நனைய நின்றான். பிள்ளை அவன் தலைமுடியை வலிக்கப் பிடித்திருந்தது. ஒவ்வொரு அலைக்கும் கூவியது. ஜார்ஜினா கரையில் நின்று பார்த்துக் கொண்டிருந்தாள். தோளிலிருந்து பையனை இறக்கி, கால்கள் மட்டும் நனைய விட்டு பெரிய அலை வரும்போது உயரத் தூக்கி, மறுபடி இறக்கி, அலன் பயம் தெளிவித்து, பிள்ளை சத்தியநாராயணனைப் போல் மணலில் கால் அகட்டி அழுந்த ஊன்றி நின்றது. அலை தாவிச் சுற்றிக்கொள்ள, ஈ என்று பல் கடித்து அலன் கை கோத்துக் கொண்டது. நெஞ்சு நனைய நின்றது. அலை இழுக்க அவன் தொடைகளை இறுக்கிக் கொண்டு கால் தூக்கி ஆடிற்று. உச்சிதான் நனையவில்லை. சகல இடமும் கடல்நீர் சொட்டிற்று.

"சத்தி...பெரிய அலை"—ஜார்ஜினா கூவினாள்.

தடேர் தடேரென்று எதிரிக் குதித்து வந்த அலையோடு சேர்த்துப் புரண்டு, மேலும் எதிரி சத்தி தலையைத் தாண்டிக் கரைக்குப் போய் ஜார்ஜினா கால்வரைக்கும் வர...இரண்டு நொடி திகைத்தாள். கால்கள் இறுக்கிக் கொண்ட பிள்ளையைப் புஜம் பற்றி மேலே தூக்கினான் சத்தி.

நீர் தெளிக்கப்பட்ட கோழி மாதிரி பிள்ளை தலை சிலுப்பி முகம் துடைத்துக் கொள்ள, சத்தி வாரியணைத்துக் கொண்டான்.

அலனோடு கரையேறினான்.

குழத்தையின் தலையைத் துவட்டி அவனுக்கு உடை மாற்றினாள்.

"நீங்க இப்படியே இருப்பீங்களா? டிரஸ் மாத்த வேணாமா?"—சத்தியை நோக்கிக் கேட்டாள்.

"அங்கே ஒரு ஓட்டல் இருக்கு ஜார்ஜினா அதுக்குள்ளேபோய் மாத்திக்கலாம். டிரஸ் வண்டியில இருக்கு."

கால் புதையப் புதைய மணலில் நடந்தார்கள்.

"என்னை ஏன் லவ் பண்ணீங்க சத்தி?"

"தெரியலை ஜார்ஜினா. எனக்கே கூட ஆச்சரியமா இருக்கு."

"லவ் பண்ணியதன் அர்த்தமென்னனு கேக்கறேன்."

"அதான் தெரியலைன்னு."

"நான் என்ன கேக்கறேன்னு உங்களுக்குப் புரியலை. இது வெறுமனே லவ்தானா?"

சத்தி திரும்பினான்.

"என்னைப் பத்தி ஒரு விஷயம் தெளிவா புரிஞ்சுக்கறது நல்லது. எனக்கு சூட்சுமம் போறாது. மூடின ரெண்டு கைகளையும் நீட்டி 'எந்தக் கையில் மிட்டாய் இருக்கு?'ன்னு கேட்டா தப்பான கைதான் தொடுவேன். 'முட்டாளே, இந்தான்'னு மூஞ்சில இடிச்சு மிட்டாய் கொடுக்கற ஆசை இருந்தா இந்த மாதிரி வார்த்தையை வளைச்சுகேம் ஆடலாம் இல்லையா, ஸ்ட்ரெய்ட்டா என் வாயைத் திறந்து மிட்டாயைப் போட்டுடலாம். அதனால..."

'சத்தி, என்னைக் கல்யாணம் பண்ணிக்கிற ஐடியா இருக்கா உங்களுக்கு?"

"ஒரு நேர்த்திக் கடனுக்கா உங்களோட பீச்சுக்கு வந்தேன்?"

"ஐயோ பாலம், ஜார்ஜினா ஆசைப்படுது...ரெண்டு மணி நேரம் ஸ்பேர் பண்ணுவோம்னு வரலாமில்லையா?"

"பையனைக் கூட்டிக்கிட்டு வாங்கனு நான்தான் சொன்னேன்."

"இதுவும் ஒரு இரக்கமா இருக்கலாமே. அப்பா இல்லாத பிள்ளை... யார் பீச்சுக்குக் கூட்டிக்கிட்டுப் போலாங்கனு..."

சத்தி நின்றான்.

"நான் என்ன செய்யணும் இப்போ?"

"ஒண்ணும் செய்ய வேணாம். கேட்டேன். தெரிஞ்சுக்கணுமில்லையா?"

சத்தி தொடர்ந்து நடந்தான். 'இதை எப்படிச் சொல்வதென்று தெரியவில்லை. 'உன்னைத் திருமணம்

செய்து கொள்ள விரும்புகிறேன்' என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னாலும் 'நிஜமாவா?' என்று மறுபடி மறுபடி சொன்னாலும் ஏன் ஏன் என்று பலவித மாய்க் கேள்விகள் வரத்தான் செய்யும்.

உறவுமுறை பற்றிய விளக்கத்தில் பெண்கள் பலவிதமானவர்கள். மிகுந்த சந்தேகம் உள்ளவர்கள். என் மூளைக்கு இதை எப்படிச் சொல்வது என்று இன்னமும் தெரியவில்லை.

அவன் மௌனமும் யோசனையும் ஜார்ஜினாவுக்குக் குழப்பத்தைக் கொடுத்தன. ஆறோ... சேறோ...அவள் குதிக்கத் தயாராய் இருந்தாள். ஆனால் இது பாறாங் கல்லாய் இருந்துவிடப் போகிறதே என்கிற பயம் தொடர்ந்து இருந்தது. வாழ்க்கை ஒருமுறை உச்சியிலிருந்து உருட்டி விட்டு விட்டது. தலைக்காயம் ஆறி மறுபடி மெள்ள மெள்ள மலையேறி ஒரு நிலைக்குக் கடவுள் அருளால் வர முடிந்து விட்டது. இன்னொரு உருளல் தலைக்காயம் தாங்காது.

"நான் விதலைங்கறது ஒரு வேதனையான விஷயம் தான். இன்னொருத்தர் தொட்டு..."

"ப்ளீஸ், போதும்."

"இல்லை சத்தி...நான் ஒரு குழந்தைக்கு அம்மா. இந்தப் புள்ளையை என்னால பிரிய முடியாதுப்பா. ஏதோ மயக்கத்துல 'லவ் யூ'ன்னுட்டு..."

"இந்த விநாடி ஜார்ஜினா...இந்த விநாடி நான் இந்தப் பையனை, செல்வாவை உங்களைவிட அதிகமா நேசிக்கறேன். இரண்டு மணி நேரம் வெளியே கூட்டிட்டு போன போது இவனும் என்னை இறுக்கிக்கிட்டான். நீ யாரு ஏன்னு அவன் கேட்கவேயில்லை. லவ் யூ-ன்னு நாங்க சொல்லவேயில்லை."

"நான் அவனை மாதிரி குழந்தை இல்லை சத்தி."

"அதான் பிரச்னை."

"நான் பேசறது எரிச்சலா இருக்கா உங்களுக்கு?"

"இல்லை ஜார்ஜினா...தேவையே இல்லாத விஷயம்னு தோணுது."

"என்னால முடியாது" —ஜார்ஜினாவுக்குக் கோபம் வந்தது.

"என்ன செய்யணும்கிறீங்க?" —சத்தியும் திடுதிடுத்தான்.

அவள் திடுதிடுப்பில் அவள் தளர்ந்து போனாள். எதிர்காலம் பற்றி நம்பிக்கை இழந்தாள்.

"செல்வா, வா போகலாம்"—குழந்தைக்குக் கை நீட்டினாள்.

"எங்கே!"—சத்தி கேட்டான்.

"ஒழுங்கா வீடு போய்ச் சேரலாம், வா." சத்திக்குப் பதில் சொல்லவில்லை.

"எப்படி?"

"எதாவது பஸ் பிடிச்சுப் போய் சேர்ந்துக்கறோம்."

"எதுக்கு வந்திங்க?"

"தலையெழுத்து!" உறுதிமொழி கொடுக்காத ஆண் பிள்ளை மீது கோபம் கோபமாய் வந்தது. சத்தியும் கூடானான். இது தேவையில்லாத அலட்டல். ஆசை ஆசையாய்க் குழந்தையைக் கூட்டிக் கொண்டு வந்த பிறகு என்ன நிமிர் இது.

"எந்த பஸ் போவுது ஏர்போர்ட்டுக்கு?"

"எனக்குத் தெரியாது."

"சொல்லாட்டிப் போங்களேன்...மதுரைக்கு வழி வாய்ல...வா செல்வா."

"அந்த வாய்த்தான் எல்லாத்தையும் கெடுத்துக் குட்டிச் சுவராக்குது."

"நான் குட்டிச்சுவருதான். இல்லாட்டி என் பக்கத்துல வந்து நிப்பீங்களா?"

"பக்கத்துல வந்து நின்னா என்ன?"

"கழுதைதான் குட்டிச்சுவர் பக்கத்துல வந்து நிக்கும், போதுமா... ஒண்ணு சொல்லி விளக்கறதுக்குள்ளே தாவு தீர்ந்து போவுது."

"நல்ல புத்தி தேரடியா பேசும் இப்படிக் கேட்டா அப்படிச் சொல்லலியேனு... அப்படிக் கேட்டா இப்படிச் சொன்னியேனு. உசரத்தைக் கொடுத்த கடவுள் புத்தியைக் கொடுக்கலை. அதுக்கு நான் என்ன பண்ண முடியும்?"

"யாருக்கு?"

"உனக்குத்தான்..."

"செருப்பு பிஞ்சிடும்."

"கமான் ட்ரை தட்."

"சனியனே..." —சத்தியின் மீது பாய்ந்து அவன் நெஞ்சில் கை வைத்துத் தள்ளினாள்.

சத்தி மல்லாந்து விழுந்தான்.

முன்னே ஓடிய பிள்ளை ஓடி வந்து சத்தியின் மார்பில் உட்கார்ந்துகொண்டது.

"டேய் வாடா..."

"வரமுடியாதுனு சொல்லு செல்வா."

"பின்னிருவேன்" மறுபடி பிள்ளைக்குப் பாய்ந்தாள். சத்தி புரண்டு குழந்தையோடு எழுந்தான். கடல் நோக்கி நடந்தான்.

"எங்கே போறீங்க?"

"உன் புள்ளை வரமாட்டான். நீ பஸ் பிடிச்சு வீட்டுக்குப் போ."

அவள் துரத்த, அவன் இடைவெளி அதிகமாக்கினான். அவன் செயலற்று நின்றாள். நாலே முக்கால் மணி. பீச்சில் சித்தின மீதி கண்டல் மாதிரி தொலைவாய் நாலைந்து பேர் மட்டுமே இருந்தார்கள். காக்கைகள் விழுகம் வகுத்து இவர்கள் சண்டையை வேடிக்கை பார்த்தன.

"அம்மா... ஐ லவ் யூ, கத்து..." பிள்ளையைத் தூண்டினான். அது மெலிந்த குரலில் கூவியது. அவள் புரியாது நின்றாள்.

"தான் கத்தறேன் பார். செல்வா அம்மா... ஐ லவ் யூ" உரக்கக் கூவினான்.

காக்கைகள் சிதறிப் பறந்தன. அவன் குரல் அவளைத் தாக்கியது. சுற்றுமுற்றும் பார்த்தாள். யாரும் இல்லை என்று சந்தோஷமானாள்.

மறுபடி அவன் கூவினான்.

"செல்வா அம்மா... ஐ லவ் யூ..."

அவளுக்குச் சிரிப்பு வந்தது. பையைத் தொப்பென்று போட்டுவிட்டு உட்கார்ந்தாள். இரண்டு பேரும் அவளைக் கலவரமாய் நெருங்கினார்கள். எந்த விநாடியும் அவள் தாக்கக்கூடும் என்று நினைத்தார்கள். அவள் முழங்காலில் முகம் பொதித்து உட்கார்ந்திருந்தாள். அவன் ஐஸ் குச்சி எடுத்து அவள் இடுப்பில் குத்தினான். பிள்ளை பெரிய இளிஞ்சலால் அவனைப் போலவே முதுகில் கீறிற்று. 'என்ன இம்சை வேண்டுமானாலும் செய்துகொள்ளுங்கள்' என்பது போல் இருந்தாள். சத்தி ஆள்காட்டி விரலையும் நடுவிரலையும் பிரித்து மணலில் நிறுத்தினான்.

'நண்டு வருது நரி வருது'—விரல்களை நகர்த்தினான். தொடை வழியே இடுப்பு ஏறி முதுகுப்புறமாய்த் தோள் தொட்டு மணலோடு விரல்கள் கன்னத்தில் வந்து நின்றன. அவள் சட்டென்று திரும்பி விரல்களை வெடுக்கென்று கடித்தாள். உதறி மல்லாக்கச் சரிந்தவன் முகத்தில் கையை வைத்து அழுத்தினாள். அவன் திணறினான். மூச்சுவிடத் தவித்த தவிப்பில் கைகள் எல்லா இடமும் பட்டன.

ஒரு சுண்டல் பையன் மண்டி போட்டு அவர்களை வேடிக்கைப் பார்த்தான். ஜார்ஜினா விடுவித்தாள். அவளுள் பாரம் குறைந்திருந்தது.

34

வெளிச்சம் வட்டமாய் மேஜையில் மட்டும் பரவியிருந்தது. செருப்பு மிதித்த இடமெல்லாம் மெத்து மெத்தென்று இருந்தது. கண்ணாடி அறைக்குள்ளே காஷ்மீரத்துக் குளிர். சுவரெல்லாம் பூக்கள். பிள்ளைக்கு உயர நாற்காலி கொண்டு வந்து போட்டார்கள்.

ஜார்ஜினா, சத்தியநாராயணன் புஜத்தைத் தன் கையால் கோத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். மனசு உணவிலோ ஓட்டலிலோ ஒட்டவேயில்லை. சத்திக்கு ஆச்சரியம் இன்னமும் அடங்கவில்லை. 'இது என்னுடையதா... அவளுடைய மூக்கு, கன்னம், முகவாய் எல்லாம் என்னுடையதா? இத்தனை நெருக்கத்துக்குத் தான் பிணங்கினேனா? இவள் வேண்டும் என்றுதான் சண்டையிட்டேனா? என் மூர்க்கம் எங்கே, என் சிடுசிடுப்பு எங்கே? என்னவாயிற்று எனக்கு? என்னுள் இருந்த நாய்களைத் துரத்தியது யார்? இவள் ஒல்லோர் அசைவும் எப்படிக் கவிதையாய் இருக்கிறது என்னுள்?'

உடைகள் மாற்றி ஐந்து நட்சத்திர ஓட்டலுக்குள் வந்த போது பிடரியல மணல்துகள் உறுத்திற்று. மனசும் கேள்விகளால் தெருடப்பட்டது.

"என்ன யோசனை?"

"இது எம் பக்கத்துல இருக்கறது ஜார்ஜினாலாலு யோசனை..."

"ஏன் சந்தேகம்?"

"எனக்கு ஜார்ஜினான்னா ஒரு பயம்..."

"ஒரு வெறுப்பு..."

"வெறுப்பு வந்ததில்லை. ஒரு பதட்டம் வரும்..."

"இப்பவும் வருதா?"

"கொஞ்சம்..."

"ஏன்?"

"விட்டுடக்கூடாதேனு பதட்டம்..."

"இனி விட முடியாதுப்பா..."

"ஏன்?"

"பார்டர் தாண்டிட்டோம்..."

"எப்போ?"

"பீச்சுல கீழே தள்ளி முகத்தை அழுத்தினப்போ, யம்மா...ஒரு மாதிரி ஆயிடுச்சு சத்தி. சே...லேடீஸ் ரொம்ப லிக் சத்தி, மனசு சுத்தி ஒரு மெல்லிசு கயிறு. அது அறுந்து போச்சு. நேரம், காலம், இடம், ஏவல் எதுவுமில்லை. என்னோட சத்தினு தோணிட்ட நேரம் அது..."

"நான் உன்னோட சத்திதான் ஜார்ஜினா..."

"புரியுதுப்பா. உன் மனசு புரியுது. ஆனா. மறுபடி மறுபடி கேட்கணும்னு தோணறதையும் அடக்க முடியலை. முட்டாள்தனம்னு தெரிஞ்சும் கேட்கற நினைப்பே..."

"சேனு ஜார்ஜினா."

"கோவிச்சுக்க மாட்டியே?"

"உன்னையா...நானா...?"

"என்னடாலு நினைக்கக் கூடாது..."

"கேள்"

"என்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசைப்படறியா...நிஜம்மா என்னை நேசிக்கிறியா...நான் விதலை சத்தி. ஒரு புள்ளைக்கு அம்மா..."

"கொஞ்சம் கையை விடேன்."

"ஏம்ப்பா?"

"ரெண்டடி தள்ளி உக்காரேன்"

"ஏன் சத்தி?"

"உன் முகம் பார்த்துப் பேசணும்."

ஜார்ஜினா பிரிந்தாள். அவன் தோள் பற்றிய கைகள் மடிமீது துவண்டாற் போல் விழுந்து கிடந்தன.

"எனக்குத் தெரிஞ்சு நீ ஒரு பெண், நான் ஒரு ஆண்...இது முதல் குவாலிபிகேஷன். நீ கெட்டிக்காரி...இது ரெண்டாலது குவாலிபிகேஷன். நீ நல்லல...இது மூணாவது, யூ ஆர் யங்...இது நாலாவது தகுதி. எனக்கு இந்தப் பையனைத் தொடறபோதெல்லாம் ஒரு நிம்மதி. சந்தோஷம் வருது...இது ஐந்தாவது. உன்னோட இன்னிய நிலைமைக்கு நான் காரணம்...நீ விழுந்து புரண்டு அழுது விதலையானதுக்கு நான் காரணம்...அது துடைக்கப்பட்டப் போகுது...இது ஆறாவது தகுதி."

"வினுவைக் கொன்னுட்டம்னு என்னை நேசிக்கிறியா?"

"என்ன தப்பு? வினு இருந்திருந்தா நான் உன்னை மனசால கூட நினைச்சிருக்க மாட்டேன். வினு வேற எப்படியாவது செத்திருந்தா ஐயோ பாவம்னு உதவி செஞ்சிருப்பேனே தவிர உன்னையே நினைச்சுக்கிட்டிருக்க மாட்டேன். உன்னைப் பார்த்தபோதெல்லாம் நான் மிரண்டதுக்கு என் குற்ற உணர்வு காரணம். உன்னை

நேசிக்கக் காரணம் என்ன வேணா இருக்கட்டும் உன்னைக் கல்யாணம் பண்ணிக்க காரணம்—நீ கல்யாணம் கறது என்ன ஜார்ஜினா? எனக்கே எனக்குனு இறுக்கிக்கிற விஷயம் தானே...நீ என் சொத்து நான் உன் சொத்துனு ஆசைப்பட காரணம்தானே...அப்படி ஆசைப்பட காரணம் நீ...''

''தான்னா...எப்படி?''

''வதது ப்ரேயர் பண்ண அன்பு கவிதை எழுதின புத்தி. புள்ளைக்குப் பறந்து பறந்து அலைஞ்ச குணம். என் முட்டாள் தனத்தைப் புரிஞ்சுக்கிட்ட பொறுமை... எல்லாத்தையும் விட...''

''உம்...''

''உன் இளமை. உனக்கு நாப்பது வயசாகியிருந்தா, என்னை லவ் பண்ணியிருப்பேனா? இது பேச நல்லா இருக்காது ஆனா, இதுவும் உண்மை. யூ ஆர் யங். அட்ராக்டிவ் நீ தொட்டுத் தள்ளறும்தானே வம்பு பண்ணினேன் பீச்சுல கிட்ட உட்கார்ந்து முகத்தை அழுத்தினப்போ, உலகத்துல எல்லாரும் காணாமப் போயிடணும்...உன்னையும் என்னையும் தவிரனு தோணிச்சு.''

''அப்போ என்னைக் கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொல்றியா?''

''இன்னுமா என்மேல நம்பிக்கை இல்லே?''

''இல்லாமலா இங்கே உட்கார்ந்துக்கிட்டிருக்கேன். ஆமா, நான் அழகுதானா?''

''போச்சுடா...இதுக்கு எப்படிப் பதில் சொன்னாலும் திருப்தி வராது. ப்ளீஸ். ஜார்ஜினா கொஞ்சம் தெளிவா பேசி. ஒரேசமயம் நூறுகேள்வியை மனசுல வெச்சுக்காதே. ஒவ்வொண்ணா அலசு, அங்கே இங்கே பிரச்னை வரும். கேலி, குத்தல், கோபதாபம் எல்லாம் வரும். நாம ரெண்டு பேரும் தெளிவா இருந்தோம்னா எந்தச்சத்தியும் நம்மைப் பிரிக்க முடியாது.''

''என்னைவிட பையன்மேல பிரியமா இருக்கானு தோணுது—''

''இது பாவமா, தப்பா?''

''என் மேலயும் பிரியமா இருக்கணும்.''

''ஜார்ஜினா?''

''எட்டாங்கிளாஸ் பொண்ணு மாதிரி பேசறேனா?''

''அதென்னமோ லவ்வுல மட்டும் எல்லாப் பொண்ணுங்களும் எட்டாங்கிளாஸ் நடவடிக்கைதான்.''

''இவரு பார்த்தாரு எல்லாப் பொண்ணையும்...''

''பார்த்தவரைக்கும் சொல்றேன்.''

''அந்தக் குதிரைப் பொண்ணா?''

''யாரு குதிரைப் பொண்ணு?''

''ஷோபனா!''

''நல்ல தேரத்துல அவளை ஏன் ஞாபகப்படுத்தறே...?

''ஏன், அதுலவ் இல்லையா?''

''ஙிக் உடம்பு ஙிக்''

''எம் மேல?''

''கடவுளே நான் எழுந்து நின்னு கத்திடுவேன்,''

''என்னான்னு?''

''ஜார்ஜினாவை நான் உண்மையாக நேசிக்கிறேன், நேசிக்கிறேன், நேசிக்கிறேன்...''

''கத்து பார்க்கலாம்...''

''இங்கே வேணாம்...''

''உன்னால முடியாது''

''தயவுசெஞ்சு சேலஞ்சு மட்டும் பண்ணாதே. எனக்கு எங்கே கத்தணும், எப்போ கத்தணும்னு தெரியும். யப்பா கொண்ணாந்துட்டான், சோறு கொணாந்துட்டான்...''

சூப்பும் வெஜிடபிள் பிரியாணியும். பிள்ளைக்கு சிக்கன் லெக்பீஸும், ஜார்ஜினாவுக்கு மட்டன் ரோஸ்ட்டும் பரப்பப்பட்டன.

''நீங்க நான்வெஜ் சாப்பிடமாட்டீங்களா?''

''பழக்கம் இல்லை.''

''நான் நல்லா சமைப்பேன் சத்தி.''

''குழம்பு, ரசம் கூட செய்லே இல்லே...''

''கடைவரைக்கும் நான்வெஜ் சாப்பிடமாட்டீங்களா?''

''சாப்பிடணும்னா சாப்பிடறேன்.''

''வேணாம்ப்பா, உங்க இஷ்டம் போல இருங்க. நான் சாப்பிடலாமில்லையா?''

''கேட்டுக் கேட்டுச் சாப்பிடு.''

''உங்கப்பா சரின்னுடுவாரா சத்தி?''

''அவர் சொல்றது இருக்கட்டும், உங்கப்பா என்ன சொல்லுவாரு இதுக்கு...''

''அவங்களுக்கு என்மேல பிரியம், நான் பாழாப் போயிட்டேனோனு வருத்தம். அழுது கிழுது சம்மதம் வாங்கிடுவேன்.''

''நீ என்ன பண்றே... நேரே வீட்டுக்குப் போய் இன்னிக்கு நடந்ததெல்லாம் சொல்லி 'என் அபிப்ராயம் இது, உங்க நிலைமை என்ன'னு வீட்டுல கேட்டு...''

''முதல்ல நீ கேட்கணும் சத்தி. உங்கப்பா வந்து அழுதார்னா எனக்குத் தாங்காது. விதலை மறுமணம்னா பெண் வீட்டுல சந்தோஷம்கூடப் படலாம். புள்ளையைப் பெத்தவங்க சபிக்காம இருப்பாங்களா?''

''எங்கப்பா சபிக்கமாட்டார்''

''உறுதியாவா?''

''நிச்சயமா''

''நான் கிறிஸ்டியனாச்சே...''

''அதை அவர் பொருட்படுத்த மாட்டார்''

''இல்லை சத்தி. நோவும் அவருக்கு...''

''எங்கப்பாவைப்பத்தி உனக்குத் தெரியாது.''

''அப்போ இன்னிக்குக் கேட்டிருவியா சத்தி.''

''இன்னிக்கேவா?''

''ஏன், நாள் நட்சத்திரம் பார்க்கணுமா?''

''நாம இன்னும் நல்லா பழகி...''—சத்தி இழுத்தான்.

''எதுக்கு நல்லா பழகி?''

''லவ்வுன்னு சொல்றோம்...ஒரு கிஸ்கூட வாங்கலை. கொடுக்கலை.''

சுற்றும்முற்றும் பார்த்தாள். அனைவர் முகமும் இருட்டில் இருந்தது. மேஜைகளில் மட்டும் மங்கிய விளக்கொளி இருந்தது. முகம் உயர்த்தி, அவன் கன்னத்தில் முத்தமிட்டாள். அவன் இறுக்கிக்கொண்டு அவள் இதழில் இதழ் பதித்தான். பிள்ளை அவசரமாய் எழுந்தது. சத்திய நாராயணன் தொடைமீது கால் வைத்து, அவன் கழுத்தை அணைத்து அதுவும் முத்தமிட்டது.

நெஞ்செல்லாம் தழுவி நின்ற பிள்ளையை சத்தி இறுக்கிக் கொண்டான் மாறிமாறி முத்தினான், இறுக்கித் தழுவிக் கொண்டான். ஜார்ஜினா அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்

''எனக்கு நீ வேணும்ப்பா...''

''உனக்குத்தான்.''

''மாறிடமாட்டியே சத்தி. மறுபடி ஒரு துக்கம், ஒரு பிரிவு எனக்குத் தாங்காதப்பா...''

''ஊரே திரண்டு எதிர்த்தாலும் உன்னை விடறதா இல்லை. பயிக்கலையா? சாப்பிடேன்''

உண்டு முடித்து சத்தி பையனைத் தூக்கிக் கொள்ள, இரு இறங்கினார்கள். அகலமான லவுஞ்சைப் பார்த்தபடி பையன் கால் உதைத்து இறங்கினான். நடை நடை வென்று நாலுபக்கமும் ஓடினான். உண்டகளைப்புக்கு லவுஞ்சில் சற்றுநேரம் உட்கார்ந்தார்கள்

''ஆபீஸ்ல கேப்பாங்கப்பா...''

''தெனிவா சொல்லிடப் போறேன்.''

''உங்கப்பாகிட்டே பேசிட்டுச் சொல்லலாமே...''

''எங்கப்பாமேல என்ன சந்தேகம்?''

''அலரு சரினு சொல்லணுமே...''

''சொல்லலை என்ன இப்போ?''

''என் மனசு கஷ்டப்படும் சத்தி. ரொம்ப நல்ல மனுஷன். உங்க வீடு திட்டினா...''

''திட்டாது ஜார்ஜினா. அதுவரைக்கும் எனக்குத் தெரியும்...எங்கம்மா பதறுவா கொஞ்சம். எங்கப்பா சொன்னா போதும். அடங்கிடுவா.''

''நான் மயக்கிட்டேன். வளைச்சுட்டேன். ஒண்ணும் தெரியாத பையனை ஆசைகாட்டி மோசம் பண்ணிட்டேன்னு...''

''சொன்னா என்ன செய்வே?''

''தளர்ந்துடும் சத்தி. நெஜமா அப்படித்தானோனு தோணும்தானா இதுன்னு அலுப்பு வரும்''

''பிறகு?''

''சண்டை ரொம்ப அதிகமானா, வேணாம்ப்பா... கோடி கும்புடு. இடிச்சு நிராய்ச்சலரைக்கும் போதும்னு நகர்ந்துடுவேன்.''

''நான் விடமாட்டேன் ஜார்ஜினா. பொண்டாட்டினு எனக்கு ஒருத்தி இருந்தா அது நீ. சாகறவரைக்கும் உன்னை

யும் உன் பிள்ளையையும் தலையில வெச்சுக்கிட்டுப் போறது என் வேலை.'

''நாலு பேர் லயித்தெரிச்சலைக் கொட்டிக்கிட்டு நாம நல்லா இருக்க முடியுமா?''

''இன்னொருத்தன் அனுபவிக்கிறதையா நட்டிப்பதிச் சேன் விதலை மறுமணம். லயித்தெரிச்சல்னா பட்டுட்டுப் போகட்டும்''

''ரொம்ப இடமா பேசறீங்கப்பா.''

''நீ ஏன் குழம்பறே?''

''உங்கப்பாலை நினைச்சா நடுங்குது ஏறிட்டு 'என்னம்மா?'னு பார்த்தார்னா செத்துடுவேன்.''

''ளெம்பு...''

'எங்கே?''

''எங்க வீட்டுக்கு...''

''சத்தி.''

''ரெண்டுல ஒண்ணு உடனே தெரிஞ்சுக்கலாம், வா.''

''நாம பழகிப் பேசி...''

''எல்லாம் முடிஞ்சு போச்சு. வா...''

''இன்னிக்கு வேணாம்ப்பா...''

''ஏன்?''

''இந்தச் சந்தோஷத்தோடயே வீட்டுக்குப் போகலாம். பதட்டமா போக வேணாம். போய்த் தனித்தனியா யோசிப்போம் நாளைக்குப் பேசுவோம். நேரே போலோம. ரெண்டுபேரும் போலோம் போய் உங்கப்பாகிட்டே கேட்போம். சரியா...பீச்சுல ஓடி ஆடி களைச்சுட்டு இன்னிக்கு வேணாம், ப்ளீஸ். என்னை வீட்டுல இறக்கி விட்டுருங்க போதும்.''

''பின்வாங்கறே...''

''சாமி...தான் பின்னும் வாங்கலை, இளிப்பும் வாங்கலை. இது தடாபுடான்ற விஷயமில்லை சத்தி. குட்டிப் பையா வா...'' பிள்ளைக்குக் கை நீட்டினாள். பையன் அம்மாவைத் தாண்டி சத்தியிடம் ஓடிற்று.

பிள்ளையை முதுகில் தூக்கிக் கொண்டு வாசலுக்கு வந்து வண்டியை உதைத்து, இருவரும் அமர்ந்து கொள்ள நிதானமாய் ஓட்டினான். வண்டிகாற்று கலைத்துச் சீராய் ஓடியது. சத்தி பாடினான்:

''பொன்னென்பேன். சிறு பூவென்பேன்.

காணும் கண்ணென்பேன்...
வேறு என்னென்பேன்...''

பிள்ளை தலையை உச்சிமோந்து பாடிவிட்டு, பின்னே தலைசாய்த்தான் அவளை நோக்கிப் பாடினான்.

''என்னென்பேன்...கலை ஏடென்பேன்,
கண்கள் நானென்றால்
பார்வை நீயென்பேன்...''

ஜார்ஜினா விரல்களால் அவன் பிடரியை நெருடிக் கொண்டு வந்தாள் முதுகு முழுவதும் ஒட்டிக் கொண்டான். 'விழுகூட கெத்து. ஆண் என்கிற அலட்டல் உடையவன். இதோ, இது பெண் சாயல் உள்ள ஆண், பெண் மனசு புரிந்த ஆண். சிநேகிதன். இனிமை நிறைந்தவன். மண்டியிடாதவன். மண்டியிடு என்று சொல்லாத வன். மதிப்பவன். ஏசுவே எமக்கு இரங்கும்'

''குவார்ட்டர்ஸ் வாசல்ல விட்டுடு சத்தி.''

''சரி''

இறங்கி இரண்டு பேரும் கையசைத்தார்கள்.

''ஜார்ஜினா...''
''என?''

''நீ வீட்டுப்படி ஏறுகிறபோது 'ஜார்ஜினா, ஐ லவ் யூ'ன்னு கத்தப்போறேன்...''

''யப்பா...வேணாம் விளையாட்டா இது...''

''யெஸ். ஒட்டல்ல கத்தச் சொன்னே இல்லே... தெருவுல கத்துறேன். படியில கால் வெச்சவுடனே என் குரல் கேட்கும்.....''—வண்டி திரும்பி குவார்ட்டர்ஸ் வாசல் நோக்கி போயிற்று. ஏர்போர்ட்பக்கம் திரும்பிற்று

ஜார்ஜினா பையனைத் தூக்கிக்கொண்டாள். விடுவிடுவென்று நடந்தாள்... உடம்பு முழுவதும் காதானாள். நல்ல வேளை. வீட்டுவாசலில் யாரும் இல்லை. யார் வீட்டு வாசலிலும் ஆட்கள் இல்லை.

குழந்தையை இறக்கிவிட்டுப் படியேறினாள், திரும்பினாள். அவள் வீடு இரண்டு ப்ளாக்கின் இடைவெளிக்கு நேரே இருந்தது. அந்த இடைவெளி வழியே குவார்ட்டர்ஸ் காம்பௌண்ட் சுவர் தெரிந்தது சுவர்மீது சத்தி தலைதெரிந்தது.

''ஜார்ஜினா. ஐ லவ் யூ...' சத்தி உரக்கக் கத்தினான். அவளுக்கு மட்டும் அந்த வாக்கியம் தெளிவாய்க் கேட்டது மற்றவர்களுக்கு ஏதோ சத்தமாய் இருந்தது.

ஜார்ஜினா இதழ்மீது விரல் ஒற்றி காற்றில் அனுப்பினாள் உடம்பும் மனசும் துள்ளிற்று.

அம்மா கதவு திறந்தாள்.

35

என்னப்பா இந்தக் கூச்சல் போட்டே நேத்திக்கு?

இரண்டு பேரும் எதிரும் புதிருமாய் ஏர்போர்ட் அலுவலகத்தில் உட்கார்ந்திருந்தார்கள்.

''நீதானே போடச் சொன்னே...''

'யாரும் பார்த்துட்டாங்கன்னா அசிங்கம் இல்லையா'?

''பார்க்கத்தான் போறாங்க, பேசத்தான் போறாங்க. சுத்தி நிறைய டிராமா நடக்கும். சிலனேனு கேட்டுக்கிட்டு இருந்து நம்ம காரியத்தை நாம முடிப்போம். கல்யாணம் ஆயிட்டு ஒண்ணா செட்டில் ஆயிட்டம்னா. அத்தனை பேச்சும் தானா நின்னுடும்.''

''இன்னிக்கு அப்பாகிட்ட போறமா?''

''நீ சொல்லணும்.''

''சலினிங் போகலாமா?''

நான் ரெடி.''

'உனக்குப் பயமாலே இல்லையா சத்தி?''

''ஒளிஞ்சு ஒளிஞ்சு போறது பிடிக்கலை ஜார்ஜினா... வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டு.'

''கடவுளே யார் வெட்டுபடப் போறமோ...''

''கேட்காம இப்படியே சுத்திக்கிட்டு இருப்பமா?''

''அது இன்னும் அசிங்கம்.''

''கரெட் கேட்டுர்றது பெட்டர் இல்லையா?''

''நான் வரணுமா...?''

''வந்தா நல்லது. நீயே கேட்கறது பெட்டர் இல்லே 'என்ன சொன்னாரு, எப்படிச் சொன்னாரு'னு பிடுங்கி எடுத்துடுலே.''

''போலம்பா.''

''நான் ரெடிம்மா!''

''சத்தி...''

''என்ன?''

''ஐ லவ் யூ''

''என்ன நிஜமா?''

''நேத்து நீ சொல்லதுக்கு நான் பதிலே சொல்லலையே.''

''இப்படியா சொல்றது குசுகுசுன்னு நான் சொன்ன மாதிரி சொல்ல வேணாமா''

''சொல்றேன். எனக்கு பிடிச்ச இடத்துல எனக்குப் பிடிச்ச நேரத்துல... கல்கத்தா கௌண்ட்டர் திறந்துட்டாங்க என் பேப்பர் பேப்பர்...'' ஓடினாள். சத்தி டெலிபோனில் பெட்ரோல் எடை கேட்டான்.

இரண்டு மணிக்கு ஏர்போர்ட் வாசலிலேயே மோட்டார் சைக்கிளின் பின்னே அமர்ந்தாள். மாம்பலம் வந்ததும் நிறுத்தி ஓட்டலில் காபி குடித்தாள், கண்மூடி மூன்று நிமிடம் ப்ரேயர் செய்தாள்.

''போகலாம் சத்தி'' என்றாள்.

முகம் தெளிவாய் இருந்தது

வீட்டு வாசலில் இறங்கி கதவு கை விட்டு திறந்தான். அப்பா எதிர் கொண்டார்.

பின்னால் படியேறின ஜார்ஜினாவை பார்த்தார். ''வாம்மா'' என்றார்.

முகத்தில் புன்னகையில்லை என்று நோன்றிற்று உட்கார்த்து விட்டம் பார்க்க, அவன் லுங்கியும் வேறு சட்டையுமாய் வந்தான். அம்மா காபி கொடுக்க மறுபடி குடித்தார்கள்.

''எங்கே மாம்பலம் பக்கம்... ஷாப்பிங்கா?''

''இல்லை.''

''உன்னோட பேச வந்திருக்காங்கப்பா.''

''என்னோடயா...?'' ஏறிட்டுப் பார்த்தார். ஜார்ஜினாவுக்கு வியர்த்தது.

'உன்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும்'.

''யாரு நீயா அவானா?''

''ரெண்டு பேரும்.''

அம்மா திரும்பிப் பார்த்தாள். அப்பா கண்ணாடி துடைத்துப் போட்டுக் கொண்டார்.

''நாங்க கல்யாணம் பண்ணிக்கிறதா முடிவு பண்ணியிருக்கோம்.''

''நாங்கன்னா?''

''நானும் ஜார்ஜினாவும்.''

ஹால் அமைதியாற்று. நெஞ்சு துடிப்பு காதுக்குக் கேட்டது.

''என்னிக்கு முடிவாச்சு?''

''நேத்து.''

''இன்னிக்குக் கல்யாணமா?''

''இல்லப்பா உங்கிட்ட ஒரு வார்த்தை கேட்கணும்னு...''

அப்பா சோபாவில் உட்கார்ந்து தரையை சிறிது நேரம் லெறித்தார்.

''உனக்கு எதாவது வேலை இருக்கா சத்தி?''

''இல்லையே.''

''சித்த காலார நடத்துட்டு லாயேன் நான் கொஞ்சம் பேசணும் இவாகிட்ட தனியா''

''ஏன் நான் இருக்கும்போதே...''

அப்பா அவனை ஊடுருவிப் பார்த்தார்.

''சரி பேசு...''

எழுந்து வராண்டாவுக்குப் போனான். சிறிது நேரம் நின்றான். செருப்பு மாட்டிக் கொண்டு கதவு திறந்து இறங்கினான். பெரியவர் தொண்டையைச் செருமிக் கொண்டார். பேசினார்.

''விடோ ரீ மேரேஜ். விதவா விவாகம். இன்னிக்கு இதைக் கூடாதுன்னு நான் தடுத்தா, சமூகப் பொறுப்பில்லாதவன்...பரந்த மனசு இல்லாதவன் நான் பெண்கள் சுதந்திரம் பற்றி அக்கறை இல்லாதவன்னு ஆகும்.

எனக்கு இதெல்லாம் உண்டு. இது பிடிக்கும். இதை எத்தனை தூரம் என்னால கடைப்பிடிக்க முடியும்ங்கறதுக்கு சோதனை வெச்சா மாதிரி என் வீட்டுலயே ஒரு விஷயம் வந்து நிக்கறது. இப்போ என்னை என்ன பண்ணுவேனு கேட்கறது

சந்தோஷம் கேள்விக்குப் பதில் சொல்றேன். எனக்கு இதுல ஆட்சேபணை இல்லே

உங்க கல்யாணத்துல எனக்கு ஆட்சேபணை இல்லை போறுமா.

ஜார்ஜினா உதடுதுடிக்க அவரையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

''என் பொண்டாட்டிக்கு இருக்கும். ஆனா, அவ பேச மாட்டா. உம்னு ஒரு வார்த்தை நான் சொன்னா போறும். எப்பேர்ப்பட்ட எரிமலை உள்ள இருந்தாலும் அழுத்தி அடக்கி வெச்சுடுலா. அவ அப்படி வளர்ந்தவ. ஸோ...அவளும் எதிர்ப்பு இல்லை.

எதிர்ப்பு இல்லை, ஆட்சேபணை இல்லைன்னு சொல்றேளே தவிர...சம்மதம்னு சொல்லலை. புரிஞ்சுதா உனக்கு இந்தக் கல்யாணம் எனக்குச் சம்மதம்னு நான் சொல்லலேயில்லை. ஆட்சேபணை இல்லை சம்மதம் இரண்டுக்கும் வித்தியாசம் உண்டு.

ஆட்சேபணை இல்லேன்னா என்ன அர்த்தம். நீ கல்யாணம் பண்ணிக்கோன்னு அர்த்தம். சம்மதம்னா என்ன அர்த்தம். நான் நின்னு பண்ணி வைக்கறேன்னு அர்த்தம்.

ஜார்ஜினா, நான் நின்னு கல்யாணம் பண்ணி வைக்க முடியாது. ஏன்...எதனால...சில காரணங்கள் உண்டு.

எனக்கு சத்தியைத் தவிர மூணு பொண்கள். மூணு பேருக்கும் நல்ல விதமா சாஸ்திர சம்பிரதாயத்தோட

கல்யாணம் ஆயிடுத்து. மாப்பிள்ளைகள் வந்து போயிண்டிருக்கா. என் பொண்களை நல்லபடியா லெச்சுண்டிருக்கா. அப்படி வரவாகிட்ட இவ என் மருமாள்னு உள்ளை அறிமுகப்படுத்த முடியாது.''

என் பரந்த மனப்பான்மை. சமூக நோக்கு அவங்கிட்ட இருக்கலாம் இல்லாமலும் இருக்கலாம். சோதிச்சு பார்க்க முடியாது. தேவையும் இல்லை. 'கிறிஸ்தவப் பொண்ணை, அதுவும் விடோவை வீட்டுக்குள்ள மருமான்னு வெச்சு அறிமுகப்படுத்தறியா...உன் கையால ஒரே ஒரு டம்ளர் ஜலம் குடிக்க மாட்டேன்'னு போயிடலாம். போனால் நஷ்டம் எனக்கு. கஷ்டம் என் பொண்ணுகளுக்கு. சத்தி சந்தோஷமா இருக்கணும்னு என் மத்த குழந்தைகளை நான் படுத்தறது நியாயமா... தர்மமா...

ஸோ, நான் உன்னை மருமகளா ஏத்துக்க முடியாது தாயி. என் புள்ளை இப்படிக் கல்யாணம் பண்ணிண்டுட்டான். எனக்கு இதுல சம்மதம் இல்லைன்னு சொன்னா என் உறவுகள் இன்னும் எங்கூட நெருக்கமாகும். அதனால என்ன...இனி நான்தான் உனக்குப் புள்ளைன்னு மூணு மாப்பிள்ளையும் வரலாம். அறுவத்திமூணு வயசு வரைக்கும் சீரா ஒரேவிதமா ஓடிண்டிருக்கற வாழ்க்கையை உடைச்சு திரும்ப எதிர்த்து நிற்க எனக்கு வலுவில்லை ஜார்ஜினா. அந்த உரம் போயிடுத்து. அதே சமயம் இது தப்பு. கூடவே கூடாதுன்னும் நான் கத்தமாட்டேன்.

அவன் கல்யாணம், அவன் இஷ்டம், தாராளமா பண்ணிக்குங்கோ.

இன்னொரு விஷயம்...நீ குடித்தனம் பண்ணினவ. புள்ளை பெத்தவ உனக்கு ஒரு பக்குவம் உண்டு. என் புள்ளைகிட்ட இது இருக்காது. அவன் எப்போ குணவான்...எப்போ குரங்குனு யாருக்கும் தெரியாது. இது சரியா வர்றது உன் கையிலதான் இருக்[illegible]

அரேன்ஜ்ட் மேரேஜ் தோத்துப் போகலாம்... இந்த மாதிரி கல்யாணம் தோத்துப் போகக்கூடாது. போனா பின்னாடி வர்ற சந்திக்குக் கஷ்டம். இது போனா விஷயம்னு பதிஞ்சுரும். ஸோ, எல்லா பொறுப்பும் உன் தலையில விழும் தோத்துப்போனா உனக்குத்தான் காயம் படும். கவனமா இரு தாயே.

''என்கிட்ட அனுமதி கேட்கணும்னு தோணித்தே... அது பெரிசு. இது உனக்குத்தான் தோணியிருக்கும்னு என் யூகம். என்கிட்ட கேட்டா மாதிரி உங்க வீட்டிலேயும் கேட்டு சிம்பிளா ஆபீஸ்லயோ நண்பர்கள் வீட்டிலேயோ, ரிஜிஸ்தர் பண்ணிக்கோ. உங்க சர்ச்சுல விடமாட்டா. கோயிலுக்கும் போக முடியாது. ரிஜிஸ்தர் ஆபீஸ் தான் போக முடியும் செய் ... தைரியமா செய்... சந்தோஷமா இரு... அலனையும் சந்தோஷப்படுத்து. ஸ்வாமி உனக்கு சகல நல்லதுகளையும் தரட்டும் இது என் பிரார்த்தனை''—தை குலித்தார்.

ஜார்ஜினா கண்களில் நீர் திரண்டு கன்னமிறங்கிற்று.

''வாழ்த்தினா போறுமா...பரிசு தரவேண்டாமா...? இது என் பரிசு. என் மருமாளுக்குனு லெச்சிருந்தது... இந்தா'' ட்ரேஸ் பேப்பரில் மூடியிருந்த பொருளை ஜார்ஜினா கைகளில் திணித்தார்.

'ஆறு பவுன் ரெட்டை வடம் என்னோட பரிசு. மொய் எப்படி வேணா லெச்சுக்கோ. என்னிக்குக் கல்யாணம்னு ஒரு வார்த்தை போன் பண்ணு. அன்னி முழுக்க நாராயண ஜபம் பண்றேன் நனனாயிருக்கணும்னு இங்கிருந்தே பிரார்த்தனை பண்றேன் வேறென்ன பண்ண முடியும் சொல்லு''

ஜார்ஜினா தலையசைத்தாள். விரல் நடுங்க நகையைப் பார்த்தாள்

''போட்டுக்கோ. கழுத்துல போட்டுக்கோ.''

[illegible]தினாள்.

"போட்டுக்கோ தாயோ"
பிரித்து மாட்டிக் கொண்டான்.
"உம்ம். லெகுட் நன்னா இருக்கு உங்கழுத்துக்கு."
"உம்ம். லெகுட் நன்னா இருக்கு உங்கழுத்துக்கு."
ஜார்ஜினா எழுந்தாள். அவர் பாதம் தேடினாள்.
"என்ன நமஸ்காரம் பண்ணப் போறியா... இரு... இரு... இது வேண்டாம்... இப்படிப் பண்ணு. மாமி, வந்து பக்கத்துல நில்லேன். உம் புள்ளையால நொந்து போன ஆத்மா நன்னாயிருக்கணும்னு வேண்டிக்கோ." — மனைவிக்குக் கட்டையிட்டார் மனைவி அருகே வந்து நின்றாள். முகம் கல்லாய் இருந்தது.
ஜார்ஜினா விழுந்து வணங்கினாள்.
"மகராஜியா இரு"
நிமிர்ந்தாள்.
"உன்கிட்ட சொன்ன அன்னிக்கே என்கிட்டயும் மொத்தமும் சொன்னான். அப்பவே தோணித்து இது ரூட் இப்படித்தான்னு. அந்த மாதிரியே நடக்கறது. ரூட்ல தப்பு இல்லை. இனிஷியலா நடங்கல் இருக்கும். ஏச்சுப் பேச்சு வரும். பல்லைக் கடிச்சு தாண்டிட்டே டேக் ஆஃப் தான்.

என்னாடா சட்டுன்னு சரின்னுட்டாரேன்னு ஒரு ஆச்சரியம் உனக்க. அப்படித்தானே? கொஞ்சம் என் இடத்துலேருந்து யோசனை பண்ணிப் பாரு. லெடிச்ச அன்னிக்கு செத்துப் போயிருந்தா எம்புள்ளை... என்ன பண்ண முடியும் என்னால. மாத்திரை முழுங்கின அன்னிக்குச் செத்துப் போயிருந்தா... யாரை நொந்துக்க முடியும் என் புள்ளை செத்துப் போகலை. எங்கியோ சௌக்கியமா குடித்தனம் பண்றான். ஒரு தகப்பனுக்கு இது பெரிசில்லையா. பெரிய கொடுப்பினை இல்லையா என் இஷ்டத்துக்குலா... என் இஷ்டத்துக்கு லா'ன்னு அலைஞ அலைக்கழிச்சு அழவிட்டு, பகவானே மாட்டேன்... நான் மாட்டேன். எனக்குப் பிள்ளை இருக்கான். உசிரோட இருக்கான். நான் செத்துப் போனா

வந்து கொள்ளி போடுவான். இது போறும் தாயி. இது போறும்." பெரியவர் முகம் பொத்தி அழுதார். மாமி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

சத்தி படியேறினான்.
பெரியவர் முகம் துடைத்துக் கொண்டார்.
"இன்னொரு காபி சாப்பிடறியா ஜார்ஜினா..." என்றார்.
ஜார்ஜினா மறுக்க தான் மட்டும் கேட்டு வாங்கிக் குடித்தார்.

"சத்தி, அந்தப் பொண்ணுகிட்ட பேசிட்டேன். போய் வீட்டுல விட்டுட்டு வா. நாளைக்கு கார்த்தால சீக்கிரம் ட்யூட்டிக்குப் போகணுமே."

ஜார்ஜினா கழுத்து நகை சத்திக்கு நல்ல விஷயம் சொல்லிற்று. மாடிக்குத் தாவி ஒடினான். வேறு பாண்ட் -டீ-ஷர்ட்டில் கீழிறங்கினான்.

"நான் வரேன்" என்று கூவிவிட்டு மோட்டார் சைக்கிள் ஏறினான்.

அடையாறு பார்க் ஓட்டலுக்குப் போனான். ரெஸ்டாரெண்ட் நாற்காலிகளில் அமர்ந்தார்கள்.

"என்ன ஜார்ஜினா ஏன் டயர்டா இருக்கே?"
"களைப்பு தான் சத்தி தூங்கணும் போல இருக்கு."
"வீட்டுக்குப் போயிடறியா?"
"வேணாம்."
"பிறகு?"
"இங்கே ரூம் இருக்காதா?"
"ஏய்... நெஜமாவா?"
"நெஜமாதான் சத்தி. சுருண்டு உன் மடியில தூங்கணும்."

எழுந்து ரிசப்ஷனுக்குப் போய் சாவியுடன் வந்தான். வராண்டாக்கள் கடந்து ரூம் திறந்தார்கள். கதவு தாழிட்டார்கள்.

"சத்தி?"

"என்ன ஜார்ஜினா?"

"மிஸ் மீ"—இரண்டு கைகளையும் விரித்தாள்.

அவன் அள்ளிக்கொள்ள துலண்டாள். முத்தமிட நிறங்கினாள்.

"ஏகலே" என்று படுக்கையில் மல்லாந்தாள்.

"என்ன ஆச்சு உனக்கு இன்னிக்கு?"

"உங்கப்பா பெரிய ஆள் சத்தி. சூட்சமக்காரர்."

"புரியலை?"

"தடுத்தா மீறுலோம்னு தெரிஞ்சு போச்சு. கைகழுவிட்டார்."

"என்ன இப்போ..."

"ஒண்ணுமில்லை. அவரும் காயம் படாம நம்மையும் காயப்படுத்தாம...கூட்டுச் சேரா நாடுகள்னா எனக்கு அர்த்தமே தெரியாது...இப்போதான் தெரிஞ்சது."

"ரொம்ப பயந்தியே...நான் சொல்லலையா."

"இனிமேதான் பயமே."

"என்ன பயம்?"

"நம்ம கல்யாணம்...நம்ம சந்தோஷம்...நம்மகிட்ட இருக்கு. நமக்கு யாரும் துணையில்லை. யாரும் எதிரியில்லை. ஸோ..."

"ஸோ...?"

"நமக்குப் பொறுப்பு அதிகமாவுது."

"இது சொல்லத்தான் இங்கே ரூம் போட்டியா?"

"நானா போட்டேன்?"

"நீதானே போடச்சொன்னே..."

"நான் போடச்சொன்னா, போட்டுறதா. உனக்கு ஒரு பொறுப்பு வேண்டாமா? யார் போட்டது இந்த ரூம் நானா நீயா?"

சத்தி யோசித்தான்.

"நாம போட்டோம்" என்றான்.

"தேர் யூ ஆர். இனிமே நாம பண்ற எல்லா காரியத்துக்கும் நாம ரெண்டு பேரும் பொறுப்பு"

"ஆமாம்."

"சத்தி"

"என்ன?"

"எனக்கு இது நல்லா இருக்கா?"

நகையைக் காட்டினாள். அவன் வேறு இடத்தை உற்றுப் பார்த்தான்.

"உங்கப்பா உங்களைப் பத்தி என்ன சொன்னார் தெரியுமா. நீ எப்போ குணலானா இருப்பே, எப்போ குரங்கா இருப்பேனு தெரியாதுன்னார்"

"கரெக்ட்."

"என்ன கரெக்ட்?"

"இப்போ என் ப்ராப்ளம். அதுதான் குணலானா இருக்கறதா குரங்கா இருக்கறதா?"

"உன் இஷ்டத்துக்கு இரு சத்தி"

"இப்போ நான் கொஞ்சம் குரங்குத் தனமுள்ள குணவான்." நகர்ந்து மல்லாந்து கிடந்தவளை அணைத்துக் கொண்டான். கழுத்தில் முத்தமிட்டான்.

"அதாவது மனிதனாகவும் மிருகமாகவும் இருக்கப் போறியா..."

''யெஸ்''

'இப்பவேவா...?''

''யெஸ்...''

''ஆர் யூ இன் லவ்?''

''வெரிமச்''

''நானும் சக்தி...''

அவள் அவனை இறுக்கிக் கொண்டு இடம் கொடுத்தாள்.

36

வாசல்ல நின்னு காத்துல முத்தம் விட்டியே... அப்பவே பகீர்னுச்சு' அம்மா கத்தினாள்.

''என்னாடி இது பிள்ளையைத் தூக்கிட்டு மத்தியானம் போனவ காணமே காணமேன்னு நினைச்சேன். பீச்சுக்குப் போனேன்'னு வந்து சொல்றே. அடுத்த நாளு பிள்ளையை வுட்டுட்டு நீ மட்டும் போனே...மத்தியானம் போனவ ராத்திரி எட்டேமுக்கால் மணிக்கு வரே. ஆனமட்டும் கேட்டேன். நேர் பதிலா இங்கதான் போனேன். இன்னதுதான் சென்சேன்னு சொல்லலையே.

அடியே நான் ஏழுபெத்தவ...எப்ப பொம்பளை சோம்பல் முறிப்பான்னு எங்களுக்குத் தெரியாது? எட்டேமுக்கால் மணிக்குத் தலைக்கு குளிக்கறியே...ஏன்னு கேள்வி வராது?

கல்யாணம் பண்ணிக்கிட்டா என்னன்னு தோணுதாம் பொடிலெச்சு ஊதிப்பாக்கறா, ஒட்டுதா ஒட்டலையான்னு

இது நிமிருடி, நாலாயிரம் ரூபா சம்பாதிக்கிற திமிரு உடுத்திக்கிட்டு அலையற கர்வம். 'எம் பிள்ளைக்காகதான் நான் உசிரோட இருக்கேன்...இல்லாட்டி எப்பவோ செத்திருப்பேன்'னியே, இப்ப எங்கே போச்சு அதெல்லாம்

நண்டு கொழுத்தா வளைல தங்காதும்பாங்க. உளக்குக் கொழுத்துப் போச்சுடி. செலத்தலா ஐயர் பையன்மோட்டார் சைக்கிள்ல வந்ததும் நாடாத்திக்குப் பத்திக்கிச்சாக்கும்.

''அம்மா. அசிங்கம்மா பேசாதே...''— ஜார்ஜினா அதட்டினாள்.

''நீங்க செய்யலாம் நாங்க பேசக்கூடாதாக்கும் எங்கூட போயிருந்த நேத்து? எட்டேமுக்கால் மணி வரைக்கும் எங்க இருந்தே அதைச் சொல்லு முதல்ல''

அடுப்பு உடைந்து வெந்நீர் தலைகவிழ்ந்ததுபோலாயிற்று. சுற்றிலும் ஆவி பறக்கும் நீர் பரவ மணைக் கட்டையில் நிற்பதுபோல் ஜார்ஜினா தவித்தாள் சூடு முகம் தாக்கிற்று சரிந்த தலைமை சரிந்த தலைதான். உடைந்த அடுப்பு உடைந்த அடுப்புதான். இப்போதைக்கு நேர்செய்யமுடியாது சூடு ஆறி நீர் குளிரும்வரை எதுவும் செய்ய இயலாது.

''ஏண்டி, கேட்கறல மனுஷியா தெரியலையா உனக்கு''.—அம்மா இடுப்பில் கைவைத்து அதட்டினாள்.

''எதுக்கு உனக்கு கல்யாணம் இப்ப?''—கேள்வி கேட்டாள்.

''என்ன பதில் இதற்கு? உண்மையில என்னை நானே கேட்டுக் கொண்டாலும் ஏதும் விடை உண்டா இக் கேள்விக்கு. எனக்கு எதற்கு இப்போது கல்யாணம்? உடம்பா மனசா எது கேட்கிறது திருமணம்? உடம்போடு சண்டைபோடலாம்.மனத்தை வேறு வழியில் திருப்பலாம் ஏன் திடீரென்று காதல் வயப்பட்டேன்...ஏன் மயங்கினேன்? அழகா, வசதியா, படிப்பா, பண்பா எதனால் கவரப்பட்டேன்?

இவை ஏதுமில்லை. உண்மையில் இவை காரணமேயில்லை. சக்தி என் பிள்ளையை நேசித்தான். அதில் என்னைக் கவர்ந்தான். ஐந்து வயதுக்கு மழலை போகாத பிள்ளையை நெஞ்சில் அணைத்து கலைப்பட்டான்.

நான் காதல் வயப்பட்டேன். சத்தி எனக்குப் புருஷன் மட்டுமில்லை என் பிள்ளைக்குத் தகப்பன். என் மகனுக்கு காரடியன். இந்தப் பேச்சுத்தானே என்னைத் தடுமாற வைத்தது. இந்த வாக்கியம்தானே நெஞ்சில் ஆணியாய் இறங்கியது. எனக்கு என்ன வேண்டும் என்கிறகேள்வியை விட என் பிள்ளைக்கு எவராவது வேண்டும் என்கிற ஏக்கம் பெரிது.'

'வேய் ஜார்ஜினா...நிஜமா இது?'—மனது மடக்கி யோசிப்பை நிறுத்தியது. திசை மாற்றியது.

''என்னைவிட என் பிள்ளையை நேசிக்கிறீங் கனோன்னு தோணுது. என்னையும் நேசிக்கணும்னு சத்தி. எம்மேலயும் பிரியமா இருக்கணும்னு நீ பேசவில்லையா. தோன்பிடித்து கொஞ்சவில்லையா?''

''கொஞ்சினேன். பேசினேன்.' ஜார்ஜினா கண்கள் மூடிக்கொண்டாள்.

''ஆர் யூ ஸல் இன் சத்தி?''

'வெரிமச்'

'நானும் சத்தி...' இறுக்கிக் கொண்டு இணைந்தது கனவாய் ஒடிற்று. காதல் தெரிந்தவனுக்குக் காமம் புரியவில்லை. கற்றுக் கொடுக்க வேண்டியிருந்தது. முடிந்து வியர்த்துப் பிரிந்தவன் ஒரு நிமிடம் கண் மூடிக்கிடந்தான். விடுகென்று எழுந்து உட்கார்ந்து வியப்புடன்பார்த்தான்.

'ஏய் சத்தி, என்ன பார்க்கறே?'

'இப்ப தான் முதன் முதலா பார்க்கறேன் ஜார்ஜினா.'

ச்சீய், பார்க்காதே நெருங்கி அவன் பார்க்காதபடி இறுக்கிக் கொண்டாள். கட்டிலில் கிடந்த சேலையால் முதுகு தடைத்தாள் அவன் வாலிபன். மறுபடி தழுவிக் கொண்டான்

இது பொய்யா. வேண்டாமென்று விலக்கிவைத்திருந்த விஷயமா. சண்டை போட்டு உடம்பை அடக்க முடியுமா.

மனத்தை வேறு பக்கம் திருப்பி விடுவாயா. 'ஏகவே நான் பாவியோ. நான் சோரம் போனேனோ.'

''இல்லை ஜார்ஜினா விதவைகள் விதவைகளாகவே இருக்க வேண்டிய கட்டாயமில்லை. உலகில் மொழி, மதம், கலாச்சாரம், பண்பாடு எல்லாம் மாறிக் கொண்டிருக்கிறது. சதியை ஊர் ஒழித்தது போல் விதவை என்கிற நிலையையும் சமூகம் ஒழித்து விடப் போகிறது. நீ கள்ளத்தனம் செய்யவில்லை சோரம் போகவில்லை. உனக்குத் துணை தேடினாய். உன்னை நேசிப்பவனை நீ நேசித்தாய். என்று நேசம் வெளிப்பட்டதோ என்று அவனை மனத்தால் வரிந்தாயோ...அன்று அவன் உன் புருஷன். நீ அவன் மனைவி நீங்கள் கணவனும் மனைவியுமாய் இருந்தீர்கள். இதில் கள்ளத்தனம் இல்லை. காமம் மட்டும் இல்லை. இது இணைதல். மறுபடி இணைதல். உடல் உயிர் கலந்து இணைதல் இது வாழ்தல். இதில் வெட்கப்பட எதுமில்லை ஜார்ஜினா. திடம் கொள். ஆமென்று சொல். சட்டத்துக்கு உட்பட்டது என்று பேசு. சமூகம் அங்கீகரித்தது என்று சொல் எழுந்து நில் ஜார்ஜினா.'—உள்ளே காண்டூபம் ரீங்கரித்தது.

''ஏண்டி நாலு வீட்டுக்கு கேட்கறா மாதிரி கத்தறே? பொறுமையா பேசு''—வெந்நீரின் சூடு குறையும்படி அப்பா குளிர் காற்றாய்ப் பேச்சுக்கு இடையே புகுந்தார்

''கத்தட்டும்ப்பா. கத்தினா பயந்துடுவேனா. இல்லை என்னால கத்த முடியாதா. ஏழு பெத்துட்டாங்களாம் ஏழு பெத்துட்டா எல்லாம் தெரிஞ்சுருமா. உனக்கு எதுக்கு கல்யாண்ம்னு கேட்கறாங்களே பல்லுல நாக்கைப் போட்டு ஏழு பெத்த பொம்பளைதானா இது.''

''அப்படியில்லைம்மா. அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வந்துடாதே. இது சங்கடமான விஷயம். நாலு பக்கமும் யோசிக்கணும் உனக்கு பிள்ளை வேற இருக்கு. தப்பு தண்டாவா ஆயிடுச்சுன்னா அவனுக்கும் பாதிப்பு இல்லையா. அது தான் சொல்றாங்க உன் அம்மா.''

''எதுப்பா தப்பு தண்டா. இன்னொரு கல்யாணம் பண்ணிக்கறதா?''

''அது தப்பு இல்லை ஜார்ஜினா. எனக்கும் அப்பப்ப தோணும், இதை மறுபடியும் படரவிட முடியாதானு தோணும்.''

''எங்க படரவுடறது எருக்கஞ் செடியிலயா? ஏன் மரம் தேடணும் கொடிக்கு. வீட்டுக்கூரையிலே உட்கார்ந்து தக்கற கொடி கிடையாதா ஊர் உலகத்துல?''—அம்மா தொடர்ந்து கத்தினாள்.

''உன் கூடவே சடைசி வரைக்கும் இருந்துட்டா உனக்கு சௌகரியம். நாலாயிரம் சம்பாதிக்கிறேனே...''

''ஆமா. உன் சம்பாத்தியத்திலதான் உனக்கு நாங்க சீருசெனத்தி செஞ்சோம் இல்லையா... எம்புருஷன் கொண்டாந்து கொட்டினான் நான் குருவி சேர்க்கறாப் பல சேர்த்து கேட்ட சீருக்கெல்லாம் குறைவில்லாத செய்தேம். உன் நாலாயிரத்துலயா நாங்க மினுக்கறோம்.''

''சும்மா இருடி. நீயும் நானும் செஞ்சது தான் சரிஞ்சு போச்சே. உடைஞ்ச பானையை மடியில வெச்சுக்கிட்டு நான் வாங்கினதுன்னா வழிச்சுக்கிட்டு சிரிப்பாங்க. இனி என்ன ஏதுன்னு கேளு.''—அப்பா அதட்டினார்.

''என்னடி சொல்றே...விவரமா சொல்லு'' அம்மா உட்கார்ந்தாள்.

''நானும் சத்தியநாராயணனும் கல்யாணம் செய்துக்கப் போறோம்.''

''என்னிக்கு?''

''அது நிர்மானமாகலை.''

''கல்யாணம்னு நிர்மானமாயிடுச்சா?''

''ஆயிடுச்சு''

''யார் செய்தது நிர்மானம்?''

''நானும் அவரும்.''

''பெரிய அவரு...உன்னைவிட சின்னவன்தானே...''

''இல்லை. ஆறு மாசம் பெரியவரு.''

''அவன் சரின்னுட்டான். அவங்க வீடு, உறவு ஜனம் மத்த மனுஷாள் சரின்னுலாங்களா?''

''அவங்க அப்பா சரின்னுட்டாரு''

''எப்ப கேட்டே?''

''நேத்து.''

''கழட்டிக்கிட்டு அடிக்கலையா?''

''ஆறு பவுனுக்கு இரட்டை வடம் அவள் மாலை கொடுத்தாரு. அவங்க சீரு.''

''அந்தக் குடும்பம் நமக்கு மேல் நாசப்பட்டது போல இருக்கு.''

''ஒரு நாசமும்படலை. ஒரு பையன். மூணு பொண்ணுங்க. அத்தனை பொண்ணுக்கும் கட்டிக்குடுத்து நல்லா இருக்காங்க.''

''ஏன், பையன் நல்லா இருக்கறது பிடிக்கலையா?''

''நல்லா இருப்போம்னு நம்பிக்கை. இது தப்பு இல்லைன்னு அவங்க அப்பாவும் சொன்னாங்க.''

''அவங்க வீட்டுப் பொம்பளை?''

''எதுவும் பேசலை. சரின்னும் சொல்லலை. வேணாம்னும் சொல்லலை.''

''எக்கேடும் கெட்டு ஒழின்னுட்டுருப்பாங்க.''

''அப்படித்தான் வெச்சுக்கயேன். உன் பதில் என்ன?''

''ஊர் சிரிக்கணும்னு தலையெழுத்து. மாத்த முடியுமா?''

''ஏன் சிரிக்குது?''

'ஒரு பொம்பளைக்கு ரெண்டு ஆம்பளை நல்லா இருக்குமாடி?'' அம்மா முகவாயில் கைவைத்துக் கொண்டாள்.

''எல் புருஷன் செத்துட்டான். இடதுகால்ஷுவோட கொண்டுபோய்ப் புதைச்சுட்டோம்.''

''புருஷன் செத்தா எப்படி வேணா போயிடறதா?''

''ஏய் சும்மா இரு...வம்பா பேசிக்கிட்டு...ஜார்ஜினா எங்கிட்ட சொல்லாத அவங்க வீட்டுக்குப் போய் பேசினியே நல்லதா இது. ஒருவேளை மாட்டேன்னு சத்தியிருந்தா. சண்டைக்கு வந்திருந்தா அசிங்கமாயிட்டிருக்காதா? இன்னிக்கு சரின்னுட்டு நாளைக்கு மாட்டேன்னா என்னம்மா பண்ணுவே. நடால் புடால்னு பேசிட்டு வர விஷயமா?''—அப்பா குரல் உயர்த்தினார்.

''உங்கிட்ட முதல்ல சொல்லாதது தப்புதான். அவங்க பர்மிஷன்தான் எனக்கு ரொம்ப உறுத்துச்சு. அது நவிர என் இஷ்டத்துக்கு மாறா நீங்க இடைஞ்சலா இருக்க மாட்டீங்கன்னு ஒரு நம்பிக்கை''

''உன் இஷ்டம் மட்டுமா இதுல ஜார்ஜினா? நம்மை சுத்தி நாலு மனுஷங்க இருக்காங்களே,''

''போய்க் கேளுப்பா. கூடாதுன்னு யாரும் சொல்ல மாட்டாங்க.''

''முன்னால சரின்னு சொல்லிட்டு பின்னால சிரிப்பாங்கம்மா.''

''பேடி சிரிப்பான் அப்படி அலன் வீட்டுல என்னை மாதிரி பொண்ணு இருந்தா? அவ தாலி அறுத்து நின்னுருந்தா சிரிக்க மாட்டான். மிருகம் சிரிக்கும். பொம்பளையை அடிமையா நினைக்கிற மிருகம் தான் சிரிக்கும்.''

அப்பா சிரித்தார்.

''உனருக்குச் சொல்றதா என்கிட்ட இதைச் சொல்றியா ஜார்ஜினா...''

அவள் பதில் சொல்லும் முன் அம்மா இடைமறித்தாள். ''ஏண்டி அவன் உன்னை நடுவுல விட்டுட்டுப் போய்ட்டான்னு வெச்சுக்க என்ன செய்வே?''

''ஏன் விடணும். விடவேண்டிய அவசியம் என்ன?''

''எச்சப்பண்டம் தொட்டுட்டமே. இளமையா கழியாத பொருளா சொந்த ஜாதிப் பொண்ணா நம்ம நிறத்தோட நம்ம குணத்தோட நம்ம பாஷை பேசற பொம்பளையா வேணும்னு பின்னாடி தோணுச்சுன்னா.''

''இது முறையான கல்யாணம். முறையா டைவர்ஸ் வாங்கிட்டுத்தான் போகணும்.''

''எனக்கென்னமோ இது சரிலரும்னு தோணலை. நீ உடுத்திண்டு போறதுல மயங்கி துரத்தறான். இத்தனை எடுப்பா இருக்கே பொம்பளைன்னு சாய்ஞ்சுட்டான். துணி போட்டுல்ல தூக்கி வெச்சிருக்குது. எல்லாம் தையல் மடிப்புன்னு தெரியலை.''

''ஏம்மா சேரிப் பொம்பளை மாதிரி பேசறியே... லெட்கமாயில்லை?''

''பின்னால நீ லெட்கப்படற போறடி...லயித்து சுருக்கம் மறைச்சுதானடி புடலை கட்டறே.''

'அவுத்துக் காட்டிட்டேன். போதுமா?''

''இல பேசறதைப் பாருங்களேன். இல பேசறதைப் பாருங்களேன். ஏசுவே இந்தக் குடும்பத்தைக் கேடுகாலம் சுத்திடுச்சே?''

''ஜார்ஜினா என்னம்மா சொல்றே?''—அப்பாவின் கேள்விக்கு பதில் சொல்லாது மௌனமாய் இருந்தாள்.

''எய் இங்க என் இப்படித் தழும்பு தழும்பா இருக்கு?'' —சத்தி கேட்டான்.

''பிள்ளை பெத்த வயிறு இப்படித் தான் இருக்கும். பிரசவத்துக்குப் பிறகு பெல்ட் போட்டு ஒழுங்கா கட்டி, ஆனில் ஆயில் இனம் துடைச்சு எக்ஸர்சைஸ் செய்திருக்கணும் செய்யலை. தழும்பு அப்படியே நின்னு போச்சு.''

''குழந்தை பெத்த பிறகும் அழுதிருப்பே...இல்லையா ஜார்ஜினா?''

''பிள்ளை பிறந்துருக்குன்னு உடனே அழுதேன் சத்தி. தலையில அடிச்சுகிட்டு அழுதேன் ஜன்னி வந்துடுச்சு.''

''ஸ்வரா?'' அவன் இறுக்கி தோளில் சாய்த்துக் கொண்டான்.

''வயிறு அசிங்கமா இருக்கா சத்தி?''

''இல்லப்பா. எங்க செல்வா இருந்த வயிறு இல்லியா இது இது எப்படி அசிங்கமா இருக்கும்'' தடவினான்.

''அழகுன்றது மனசு தான் ஜார்ஜினா. என்னைப் பொறுத்தவரை நீ உலக மகா அழகி பேரழகி. சத்தி சத்தின்னு என் மேல இந்த லவ் நீ கொட்டற வரை என்னை இறுக்கி இடுப்புல முடிஞ்சுக்கற வரை நான் இப்படி அப்படி நகர மாட்டேன். நான் உனக்கு இன்னொரு பிள்ளை ஜார்ஜினா. இன்னிக்கும் எங்கம்மாவுக்கு எங்களை விட எங்கப்பா தான் முக்கியம். அவர் தான் முதல். எம்பொண்டாட்டியும் அப்படிதான் இருக்கணும்''

''செல்வா முக்கியமில்லையா?''

''உனக்கு இல்லை. இனி செல்வாவைக் கவனிச்சுக்கப் போறது நான். அது என் பிள்ளை. நான் உன் பிள்ளை. சரியா?''

இதைவிட அற்புதமான சங்கிலி எங்கே உண்டு.

அப்பாவும் அம்மாவும் கொல்லைப்புறம் போய் உட்கார்ந்து பேசினார்கள். ஜார்ஜினா உட்கார்ந்து யந்திரமாய்ப் ரேயர் சொல்லிவிட்டு தட்டு எடுத்து வைத்துக் கொண்டாள். உணவு முடித்தாள் பிள்ளைக்கு அருகே போய் படுத்துக் கொண்டாள். அவன் கால்களை மெல்லப் பிடித்து விட்டாள்.

அப்பா மெள்ள அவளை உலுக்கி எழுப்பினார்.

''என்னப்பா?''

''சரிம்மா செய்துக்க. அந்தப் பிள்ளைய நாளைக்கு வீட்டுக்கு வரச்சொல்லு.''

''எதுக்குப்பா?''

''நாங்க யாருக்கும் கெடுதல் பண்ணாத கிறிஸ்தவங்க தம்பி... எங்களுக்குக் கெடுதல் பண்ணிடாதேன்னு கேட்டுக்கறோம். பிறகு கர்த்தர் விட்ட வழி.''

''தாங்க்யுப்பா.''

பொண்ணை பெத்தவன் எவனும் நெஞ்சார இது தப்புன்னு சொல்ல மாட்டான், ஊர் உலகத்துக்கு பயந்து குறுக்க விழுந்து மறிப்பானே தவிர...மனசார தவறுன்னு சொல்ல மாட்டான். உங்கம்மாவுக்கு எங்களை முதலா கேட்கலையேன்னு தோவம்.'

''உனக்கெதுக்குடி இப்ப கல்யாணம்னு கேட்கறாங்களே?''

''அவ விதலையா இருந்ததில்லை ஜார்ஜினா. அதுனால உண்டான முட்டாள்தனம் பதினேழு வயசுல பிடிச்ச கையை வுடாத அம்பத்தியாறு வயசு வரைக்கும் இறுக்கிட்டு இருக்கா இல்லையா அந்தமூர்க்கம் கொடுத்த கேள்வி இது. தனியே கூட்டிக்கிட்டு போய்க் கேட்டேன். நாளைக்கு நான் செத்துப் போயிட்டா அம்மாளும்

பொண்ணுமா குடித்தனம் நடக்குமா. ஆம்பளைத் துணை வேணாமான்னே இடிஞ்சு போய் உட்கார்ந்திருக்குது.''

''பாலம்ப்பா.''

''அறியாத்தனம். அவளை விடு. நாளைக்கு அந்தப் பையனைக் கூட்டிக்கிட்டு வா பேசலாம். உங்கம்மா, எதுனா ஏடா கூடமா கேட்டாக்கூட பொறுத்துக்கச் சொல்லு.''

''அது பொறுத்துக்கும்பா.''

''சந்தோஷம் இன்னொரு விஷயம்...''

''என்னப்பா?''

'வின்சென்ட் அப்பாகிட்ட போய்ச் சொல்லணும்.''

''ஏன்?''

''செல்லாவுக்கு அவங்க தான் காட்ஃபாதர்''

''ஆமாம்.''

''அது தவிர அவங்க தெரிஞ்சுக்கறது முறை.''

''அனுமதி கேட்கணுமா?''

''தேவையில்லை. தகவலா சொல்லிடணும்.''

''கூடாதுன்னா...''

'சொல்லலாம். கூடாதுன்னு சொல்லலாம். சொல்லாதயும் இருக்கலாம். அது முக்கியமில்லை. ஆனா எங்களுக்கு தெரியாத போச்சேன்னு கூவறதைவிட தெரிவிச்சுடறது நல்லது.''

''அப்பா...''

''என்னம்மா?''

''அவங்க வீட்ல எனக்கு நகை கொடுத்தா மாதிரி...''

''நாளைக்கு நான் கடைக்குப் போய் ஒரு மோதிரம் வாங்கிட்டு வரேன். போட்டு வுடு.''

''உனக்கு சந்தோஷமாப்பா?''

''தெரியலை தாயே. வேதனையான சந்தோஷமா இருக்குது. ப்ரேயர் பண்ணலாம் வா. வேதனை போகணும்.''

தந்தையும் மகளும் மண்டியிட்டார்கள். சிலுவை குறியிட்டுக் கொண்டார்கள்.

''ஏசுவே. என் குழந்தையின் மனத்தில் மறுபடியும் வசந்தம் கொடுத்த கர்த்தரே இருட்டில் வழி தப்பிய ஆடுகள் போல் நாங்கள் அலைகிறோம். மேய்ப்பன் இருக்கும் இடம் தேடி குரல் கொடுக்கிறோம். எங்கள் அலகுரலைப் புரிந்துகொள்ளுங்கள் பிதாவே. இந்த விட்டிலுள்ள மக்களுக்கும் இங்கு வரப் போகும் மகனுக்கும் மேய்ப்பனாய் இருங்கள் சுவாமி. எங்களை நல்வழிப் படுத்தும் எங்களை உம் திருக்கரத்தில் வாரிக் கொள்ளும் துணையின்றி தவிக்கும் என் மகளுக்கு அமைதி தாரும். நல்லதும் தீயதும் நாங்கள் அறிவோம் ஏசுவே. இருட்டினில் உள்ள ஓநாய்களுக்கு நாங்கள் இரையாகி விடாது பார்த்துக் கொள்ளும். உம்மை மனமுருகி...வேண்டுகிறோம் ஆண்டவரே. எங்களுக்குக் கிடைத்தவெல்லாம் நீர் கொடுத்தவை என்று ஏசுகிறோம், எங்களை ஆசீர்வதியும் சுவாமி. உம்மை விட்டு மனத்தால் ஒருநாளும் பிரியாத பலம் எமக்குத் தாரும் எம்மை ரட்சியும் பிதாவே

''எல்லாம்வல்ல திருக்குமாரன் பெயரால் உம்மைத் துதித்து வேண்டுகிறேன். எங்களைக்காத்தருளும். ஆமென் ஆமென்''

காற்றில் ஜன்னல் திறந்து உள்ளே மெர்க்குரி வெளிச்சம் வந்தது.

''ஜார்ஜினா சிலுவைக் குறியிட்டுக் கொண்டு ஜன்னலுக்கு கொக்கி போடப் போனாள் விளக்குக் கம்பத்தின் கீழ் சின்னராசு ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். அலனைப் பார்த்த மாத்திரத்தில் ஜார்ஜினாவுக்குள் சந்தோஷம் பரவிற்று.

சின்னராசு...''

ஜார்ஜினா வாசல் கதவு திறந்தபடி கூப்பிட்டாள் அலன் நடுக்கிட்டு எழுந்து நின்றான்.

''என்ன எழுதறே?''

''ஒண்ணுமில்லேக்கா'' சிரித்தான்.

''பொயட்ரியா கொண்டா...கொண்டா.''

''கவிதை இலலேக்கா லெட்டரு...சும்மா...''

''லெட்டரா...யாருக்கு?''

''யாருக்குமில்லை...சும்மா.',

ஏய் டூப் அடிக்கிறே என்கிட்டயே...''

சிரித்தரன்.

''லெட்டர் மாதிரி, ஒரு கவிதை...''

''பாத்நியா ஏமாத்தறியே...உன் கவிதையை நான் படிக்கக்கூடாதா?''

'சரியா வரலைக்கா...''

''வந்த வரைக்கும் படி''— வாசல் படியில் உட் கார்ந்துகொண்டாள்.

''இது தலைப்புக்கா.''

''எது?''

''கடிதம் எழுத முடியாத காதலிக்கு'...''

''நல்லாருக்கு. ஏன் கடிதம் எழுத முடியலை?''

''நாட்டுப்புறத்துபொண்ணு. பட்டணத்துல இருக்கற எனுக்கு சட்டுன்னு எழுதிட முடியுமா. பல கஷ்டங்கள்''

''ஓஹோ. அப்படி ஒரு விஷயம் இருக்குதோ.'' சிரித்தான்.

''கவிதை படி.''

''ஊர் கோடி வீட்டினிலே
தின்னை கட்டி
பெருமாளாய் நின்னுருக்கும்
சிகப்புப் பொட்டி...
ஊர் ஜனங்கள் வாய் மொழிய
கடிதம் எழுதி
ஒவ்வொன்றாய் தின்றபடி
சிகப்புப் பொட்டி...
நான் ஊர்விட்டு ஊர் வந்து
மூட்டைத் தூக்கி
எனக்குள்ளே உன்னோடு
தனியாய்ப் பேசி
பாழ்பட்டு நிக்கிறேண்டி
காதலிப் பாவி
உன் கண்ணுள் முட்டலையோ
சிகப்புப் பெட்டி.
எது எழுத, ஏன் எழுத
உனக்குள் கேள்வி...
எழுதினாலும் மறைத்து வைக்க
முடியாச் சேரி...
தெரிந்துவிட வாய்விட்டுச்
சிரிக்கும் கேலி...
இது அத்தனையும் எனக்குத்தான்
தெரியுது போடி.
வானத்தில் மாசமொரு
வட்டப் பொட்டி

ஜன்னல் தட்டி
விழி உயர்த்தி நீ பாரு
நிலவுப் பொட்டி
நீ போடு உன் மனசை
என் பேர் எழுதி
இங்கிருந்தே தரைபடர்ந்து
கால்கள் பரப்பி
நான் படிப்பேன் உன்மனசை
இருட்டில் பேசி
சின்னவளே, என்னவளே
காதல் தோழி
வந்தடடி நீ எனக்கு
எழுதாச் சேதி.''

—கடைசி லரி படிக்கும்போது சின்னராசுவின் குரல் அடைத்து கம்மிற்று. கண்களில் நீர் திரண்டது. படித்த பிறகு கவிதையை மடித்து பேப்பர் நுனியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''தம்பி.''—ஜார்ஜினா வியந்தாள்.

''ஆர் யூ இன் லவ்?''—கொஞ்சம் உரக்கக் கேட்டாள்.

''அக்கா...''

''யாரையாவது காதலிக்கிறியா?''

''காதல்னு இல்லேக்கா...புடிச்ச பொண்ணு அங்கே நாட்டுப் புறத்துல இருக்குது லெட்டர்லாம் எழுதாது.''

''போறதுதானே அங்கே...''

''இது சுகம்க்கா.''

''எது?''

''இப்படி...பிரிஞ்சு இருக்கறதும்கூட.''

''கொன்னுட்ட சின்னராசு. மனசுல லவ் இல்லாத வரையில இது எழுத முடியாதப்பா. வந்தடடி நீ எனக்கு எழுதாச்சேதி. யப்பா எழுதினாதான் செய்தியா? சொன்னாதான் காதலா? எனக்கு உடம்பு நடுங்குது சின்னராசு'' —ஜார்ஜினா முகம் பொத்திக் கொண்டாள்.

''லவ் பண்ணவங்கதான் இதைப் புரிஞ்சுக்கவும் முடியும் அக்கா.''

''என்ன?''

''இதைப் புரிஞ்சுக்க கொஞ்சம் அனுபவம் வேணும் அக்கா. கவிதை, ரசனை, காதல், இலக்கியம் இதெல்லாம் எல்லாருக்கும் வந்துடாது அக்கா. கொஞ்சம் பேருக்குதான் வரும். நூத்துல பத்துப் பேர் தான் இதுல மாட்டுவான். தொண்ணூறு பேர் சரிதான் போடான்னுவாங்க. இது வந்தா நல்லாவும் இருக்கும். பாடாய்ப் படுத்தவும் செய்யும். ஷோபனா அக்கா சினிமாவுக்குக் கூட்டிக்கிட்டுப் போனாங்க. நான் இன்டர்லெல்லோட எழுந்து வந்துட்டேன்.''

''ஏன்?''

''மொக்கு மொக்குன்னு அடிச்சுக்கறாங்க. ஜனங்க பல்லைக் கடிச்சுக்கிட்டு பார்க்குது. ஜினா துணி சுத்திக்கிட்டு ஒயே ஒயேன்னு ஆட்டம். எனக்குப் புரியலை. வந்துட்டேன்.''

''உம் பொம்பளை நல்லா இருப்பாளா?''

''ராஜா மெச்சினதேரம்பா.''

''லவ் யூ'னு சொல்லிட்டாளா?''

''சொல்லாது அதெல்லாம். செய்துடும்.''

''செய்துடும்னா...?''

''கோயிலுக்கு வா'னுச்சு. போனேன். விழுந்து கும்பிட்டு குங்குமம் வாங்கியாந்தது. பின்பக்கம் மண்டபம் கூட்டிக்கிட்டுப் போய் வெச்சுவுடுன்னுச்சு. குங்குமம் வெச்சு வுட்டேன்.''

''அதாவது மேரேஜ்''

''எங்களுக்குள்ள அப்படிதான். இனிமே ஊர் கூடி நடக்கணும்.''

''இதெல்லாம் ஆச்சரியமில்லடா. மனசு நிறைஞ்சு கவிதையா எழுதறயே எப்படி?''

''பொய் இல்லேக்கா. நெஜம். உண்மை. ஊசலாட்ட மில்லாத உண்மை. அப்படியிருக்கிற விஷயமெல்லாம் கவிதை.''

''நாட்டுப்புறத்தானா நீ...பாவி! இதெல்லாம் என்னடா பண்ணுவே?''

''அப்புறம் கிழிச்சுப் போட்டுடறதுதான்''

''ப்ளீஸ் கொண்டா அதை''

''எதுக்குக்கா?''

''பத்திரிகைக்கு அனுப்பப் போறேன்.''

''எதுக்குக்கா?''

''எல்லோரும் படிக்கணும் இதை''

''படிச்சுட்டு...?''

''உன்னைப் பாராட்டணும்.''

''நான் அதுக்கு எழுதலை. பாராட்டு வாங்கறது சுலபம். சையூனி பத்துக் காரணம் போட்டா கை தட்டு வாங்க. சினிமால அதாலே பண்றான். ஜனங்க பினாக்ல டிக்கட் வாங்குதே.''

''பிறகு எதுக்குடா எழுதினே?''

''நான் என்னோட பேசறதுக்கு.''

''ஏன் பேசணும்?''

''என்னை நல்லவனாக்கிக் கறதுக்...''

''நீ கெட்டவனா?''

''கெட்டுடலாம். ஜிகினா துணியும், இடுப்பு ஆட்டமும் குலுக்கலும் ஒயே ஒயே கூச்சலும் மனசைக் கெடுத்துடலாம். ஊர்ல ஒரு பொம்பளை ஜன்னலாண்ட உட்கார்ந்து உன்னை நினைச்சுக்கிட்டு இருக்கும்...வெளியே வாடா'னு குரல் கேட்டுச்சு வந்துட்டேன். சினிமால ஆடின பொம்பளையை நகர்த்திட்டேன். அந்தப் பொம்பளை பொய் என் பொம்பளை நெஜம்.''

''ஏசுவே இந்தப் பையனை ஆசீர்வதியும். இந்தக் கிராமத்துப் புருஷனுக்கு நல்லதை தாரும்.''

''சின்னராசு நீ சொல்றது கரெக்ட். இலக்கியம் பத்துப் பேருக்குத்தான். ஆனா அந்தப் பத்து பேரும் கைகோத்துக்கணும்டா. இரும்புச் சங்கிலியா நிக்கணும். நல்லதுக்கு துணையா கெட்டதுக்கு எதிரா அசையாது நிக்கணும்.

அதுக்கு பத்திரிகையில உன்பேர் வரணும். உன் கவிதை வரணும். எழுதினதை கிழிக்காதே சின்னராசு. என் கிட்ட கொடு.''

அவன் சிரித்தான். சரியென்று தலையசைத்தான்.

அவள் கவிதையுடன் உள்ளே ஓடினாள். பர்ஸ் திறந்து நூற்றியோரு ரூபாய் கொண்டு வந்தாள்.

''இது உன் கவிதைக்கு இல்லை...தம்பிக்கு. என் தம்பி கல்யாணத்துக்கு அக்கா எழுதற மொய். கல்யாணப்பரிசு. உன் மனசுக்குப் பிடிச்ச பெண்ணோட நீ சந்தோஷமா...''—அவளால் பேசமுடியவில்லை.

அவன் வாய்பிளந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். வாங்கிக் கொண்டுகரம் குவித்தான் சந்தோஷம் உள்ளவர்களால் தான் சந்தோஷம் உள்ளவர்களை அடையாதும் கண்டுகொள்ளமுடியும். இது புரிந்தவர்கள் பாக்கியவான்கள். கடவுளுடைய ராஜ்யம் அவர்களுக்கு அருகே இருக்கிறது. ஜார்ஜினா கதவு தாழிட்டுக் கொண்டாள்.

ஆபீஸ் போனதும் சத்தியிடம் வீட்டு விவரம் சொன்னாள். வரச் சொல்லி வேண்டினாள். லஞ்சின் போது சின்னராசு கவிதையைக் கொடுத்தாள். பேசினது சொன்னாள். சத்தி கவிதை படித்தான்.

''எழுதியதை மறைத்து வைக்க
முடியாச் சேரி''

அந்த ஊர்ல எங்க உட்கார்ந்து கடிதம் எழுதுவா? அப்படியே எழுதினாலும் எங்க வைக்கறது லெட்டரை. சே. படம போடறான் பார் கவிதையில. இந்தப் பையனைப் பார்க்கணும் ஜார்ஜினா.''

பிற்பகல் இரண்டே முக்கால் மணிக்கு ஜார்ஜினா வீட்டில் காபி குடித்தான் பையனை மடியில் வைத்துக் கொண்டு உடம்பு தடவினான்.

''ரிஜிஸ்தர் மேரேஜ் நெல்முனை அளவுகூடப் பயம் வேண்டாம். நான் மயக்கத்துல சரின்னு சொல்லலை. ஏமாத்தலை இதுல ஜார்ஜினாவுக்கு என்ன லாபம் என்ன நஷ்டம் தெரியாது. இது இந்தக் கல்யாணம் எனக்கு நல்லது. இதுதான் என் மனசுக்கு நல்லது. பெரிய பாரம் இறக்கின நிம்மதி இது எம்புள்ளை ஜார்ஜினா எனக்கு மனைவி. இவன் எனக்கு உசிரு. இனி இவன் தான் என் உலகம். எங்கப்பா வரமாட்டார். நீங்க என் வீட்டுக்கு வந்து ஆட்சேபணை இல்லைன்னு அவர் சொல்றதை நேரே கேட்டுக்கலாம்.''

அப்பா மோதிரம் கொடுத்தார் ஜார்ஜினா அதை அவன் கையில் அணிவித்தாள்.

''ஒரு ப்ரேயர் செய்யலாங்களா. கலந்துக்க முடியுமர்?''

''தாராளமா.''

அவனும் மண்டியிட்டான். கண் மூடி கைகூப்பினான். எல்லோரும் ஆமென் என்றபோது கண் திறந்தான்.

''ஆமென்'னா என்ன அர்த்தம்?''—கேட்டான்

''அப்படியே நடக்கட்டும்னு அர்த்தம்'' — அப்பா பதில் சொன்னார்.

''ஓஹோ ஆமென்.''

சிரித்தார்கள்.

பிள்ளையோடு ஜார்ஜினா மோட்டார் சைக்கிள் ஏறினாள். குவார்ட்டர்ஸ் வியப்புடன் வேடிக்கை பார்த்தது. காலார பரங்கிமலை ஏறினார்கள். வழியில் ஒரு பாறை மீது உட்கார்ந்திருந்த சின்னராசுவைப் பார்த்தார்கள்.

''சின்னராசு...' —ஜார்ஜினா கூவினாள்.

அவன் அருகே ஓடிவந்தான் சிரித்தான்.

''வணக்கங்க''-சத்தியைப் பார்த்துக் கைகூப்பினான்.

''சின்னராசு இவரு சத்தியநாராயணன்...ஞாபகம் இருக்கா?''

''தெரியுங்க...கவிதை கொடுத்து வுட்டீங்களே''

''இவரும் நானும் கல்யாணம் செய்துக்கப் போறோம்.''

''நெசம்மாலா'' வியந்தான்

''ஏண்டா இதுல போய் பொய் சொல்லாங்களா...''

''இதுக்கு என்னமோ சொல்வாங்களே...ஐயோ மறந்துட்டேன்...''

''எதுக்குடா?''

''கல்யாணம்னா உடனே என்னவோ சொல்வாங்களே...''

''கங்க்ராஜுலேஷன்...''

''ஹாங்... கங்க்ராஜுலேஷன்'' இருவரிடமும் கை குலுக்கினான். பிள்ளையும் கைநீட்ட அதையும் பற்றி முத்தமிட்டான்.

''சும்மா கைகுலுக்கிட்டா போதுமா...எங்க மேல ஒரு கவிதை எழுதணும்''

''கட்டளை போட்டு எனக்குக் கவிதை வராதுக்கா.''

''சரி. கட்டளையில்லை வேண்டுகோள்.''

''உங்க கல்யாணத்தன்னிக்கு தரேங்க. எப்போ கல்யாணம்.''

''தெரியலை இனிமேதான்.''

''தோழரே உங்க கெப்புப் பொட்டி கவிதை படிச்சேன். சூப்பர்''—சத்தி மறுபடி சின்னராசுவுடன் கை குலுக்கினான்.

நாலுபடி அவர்களுடன் மலையேறின சின்னராசு சட்டென்று நின்றான். எனக்குக் கீழே ஒரு வேலை இருக்கு அக்கா. ஷோபனா நோட்புக் கேட்டுச்சு வாங்சணும், வரட்டா, கீழிறங்கினான்

சட்டென்று சத்தி முகம் மாறியது.

''இவன் ஷோபனா வீட்டுல வேலை செய்யறான் இல்லையா...?''

''ஆமா, ஏன்?''

''இவன்கிட்ட சொல்லாத இருந்திருக்கலாம்.''

''கல்யாணம் பத்தியா?''

'ம்''

''ஷோபனாவுக்குப் பயப்படறீங்களா?''

''பயம் இல்லை ஜார்ஜினா,''

''சத்தி, உங்கப்பா என் அப்பா முக்கியம். இவங்க சரின்னுட்ட பிறகு ஷோபனாவது புடலங்காயாவது என்கிட்ட வாலாட்டினா ஒட்ட நறுக்கிடுவேன். நான்கூட பொல்லாதவ சத்தி.

''தோள்தட்டி சண்டைக்கு வரவங்களை சமாளிச்சுடலாம் ஜார்ஜினா. இது குள்ளநரி கேஸ்.''

''ஆனால் தோள்தட்டி வருபவர்களையும் நேர்கொண்டு போரிட அசாத்திய பலம் வேண்டும். ஏனெனில் போர் என்பது வலி, அவமானம், துக்கம், கழிவிரக்கம் தருவது.

''எங்கடா போயிட்டே ஜாஸ்''—ஷோபனா அதட்டினாள்.

''மலைக்குப் போயிருந்தேன் அக்கா.''

''கவிதை எழுதவா? உருப்படற வழியைப் பாருடா முதல்ல. நோட்புக் கேட்டேனே...எங்கே?''

''வாங்கிட்டேன்'' நீட்டினான்.

''மீதி நாப்பது பைசா?''

பையிலிருந்து காசு எடுத்தபோது நூறு ரூபாய் நோட்டு வெளிப்பட்டது.

''நூறு ரூபாயா...ஏது ஏது உனக்கு?''—பதறினாள்.

''ஜார்ஜினா அக்கா கொடுத்தாங்க.''

''எவ, அந்த இந்தியன் ஏர்லைன்ஸ் பொம்பளையா? ஏன் கடன் கேட்டியா?''

கவிதைக்குப் பரிசு என்று சொல்ல பயமாய் இருந்தது. மறுபடி ஜாஸ் என்பாள். உருப்படற வழியைப்பாரு என்பாள். உன்னை மாதிரி அதுவும் பைத்தியமா என்பாள். தன்னை ஏதும் சொல்லிவிட்டுப் போகட்டும், ஜார்ஜினாவை இவள் எதுவும் சொல்லிவிடக் கூடாது.

''அவங்களுக்கு கல்யாணம் அதான்...''

''என்னா?''—வியப்பில் முகம் முழுவதும் விரிந்தது.

''சத்தியநாராயணன்னு ஒருத்தரு அவங்களோட வேலை செய்யறவரு கட்டிக்கப் போறாங்க..''

''யார் சொன்னா?''

''அவங்கதான்.''

''எப்ப?''

''இப்ப மலைமேல...''

''என்ன பண்ணறாங்க அங்க ''

''குழந்தையோட உட்கார்ந்திருக்காங்க ரெண்டு பேரும்.''

ஷோபனா நசம் கடித்தாள். அதில் கோபமிருந்தது. துப்பினாள் அதில் ஆத்திரம் தெறித்தது. குவார்ட்டர்ஸ் குவார்ட்டர்ஸாய் விஷயம் பரப்பினாள். அதில் சுக மிருந்தது.

மறநாள் பிற்பகல் விக்டர் தேவசகாயத்தை யாரோ வெயிலில் நிறுத்தினார்கள்.

''உங்க மருமக இரண்டாவதா கட்டிக்கப் போவு தாமே...?'' விசாரித்தார்கள்.

38

விக்டர் தேவாரம் நல்ல கிறிஸ்தவர். 'ஏசு வருவார், உலகத்துக்கு மீட்சி உண்டு' என்று அவர் நிச்சயம் நம்பினார். காமமும் குரோதமும் உடல் பிணியும் சாத்தானின் செய்கைகள். கடவுளுக்கு எதிரே அவன் செய்யும் உபத்திரவங்கள். மண்டியிட்டுக் கடவுளைத் தொழுது மனமுருகிப் பிரார்த்தனை செய்ய அலை ஓடியே போகும்.

கடவுளை நம்பாதவனைக் கண்டு அவர் சிரிப்பது வழக்கம். 'சூரியனும் சந்திரனும் பூமியும் எப்படித் தோன்றின? இதில் ஒன்று குளிர்ந்தும் மற்றது எரிந்தும் நடுவிலுள்ளது உயிர்களோடும் இருப்பது எங்ஙனம்? முதல் முதலாய் இவற்றை எது இயக்கிற்று? இவற்றுக்கு முன்பு பிரபஞ்சம் எப்படி இருந்தது? தெரியாது என்பீரா யின் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அதிகம் இருக்கிறது. இங்கே படைப்பு ப[illegible]தன் அதிசயம்

பற்றிச் சந்தேகம் உள்ளவன் கடவுளை நம்பக்கடவன். நம்ப முடியாத செய்திகளை உலகம் அறியும்தோறும் கடவுளே என் கண்முன் நிற்கிறார். இவைகளைத்தையும் ஆட்டிப்படைக்கிறவல்லமை இவற்றைப் படைத்தவருக்கே இருக்கவேண்டும். அவரை நான் கடவுள் என்கிறேன்.

கடவுளை எனக்குக் காட்டியவர் ஏசு. வாழ்க்கையை எனக்குச் சொல்லிக் கொடுத்தவர் அவரே. 'பொய் சொல்லாதே...திருடாதே...பிறன் மனை விழையாதே. ஒரு கன்னத்தில் அடித்தவனுக்கு மறு கன்னம் காட்டு' என்கிற மகா வாக்கியங்களே என்னை மனிதனாக வளர்த்திருக்கின்றன

நான் என் தந்தையால் கிறிஸ்தவனாக்கப்படவில்லை. என் தாயால் போதிக்கப்படவில்லை. ஆலயங்களினால் நான் மாற்றப்படவில்லை. அந்நியர் இங்கே வந்ததால் மதம் மாறவில்லை. என் தவறுகள் என்னை கிறிஸ்தவனாக்கின. என் தவறுகளுக்கு மனிதர்களும் இயற்கையும் தண்டனை விதித்தபோது நான் அழுதேன். வலி தாங்காமல் அரற்றினேன். தனிமையில் துவண்டேன். எனக்கு ஏன் இத்தனை வேதனை என்று கேட்டுக் கொண்டேன். என் கேள்விக்கு விடையளித்தவர் ஏசு. அவர் பதில் என்னை நேர்படுத்தியது. அவர் கருணை என்னைச் சுகப்படுத்தியது.

நான் பரம்பரை கிறிஸ்தவனல்ல. பயிற்சி பெற்ற கிறிஸ்தவனல்ல. நான் கிறிஸ்துவால் கிறிஸ்தவனானவன். மூன்று தலைமுறைகளாக நாங்கள் கிறிஸ்தவர்கள் என்று அறிவித்துக் கொண்டாலும், என்னுள் கடவுள் கொடுத்த உள்ளொளி என்னை அசைக்கமுடியாத கிறிஸ்தவனாக்கியிருக்கிறது.

கிறிஸ்வின் பெயரை உரக்கச் சொல்லிவிட்டால் கிறிஸ்தவனாக முடியாது. சாப்பிடும்முன்பு ஜெபம் செய்துவிட்டால் பாபம் போகாது. உள்ளேவருந்தி அவரை அழைக்க வேண்டும். அவர் கருணைக்கு கையேந்த வேண்டும். [illegible]தலும் ஒரு மார்க்கம். ஆமாம். அது ஒரு வழி.

மெல்லிய குறுகிய நீண்ட சாலை அது. மெள்ள மெள்ள மலையேறும் வித்தை அது. அதனால்தான் பெரும் ஆர்ப் பாட்டங்கள் அதிலே இல்லை. மலையேறுபவன் தனக் குத்தானே பேசியும் பாடியும் போகும் வழி அது. ஒரு நிச்சயமான பாதை.

விக்டர் தேவாரத்திடம் பேசுபவர்கள் பிரமித்துதான் போவார்கள். கிறிஸ்தவர்கள்கூடப்பலவித சந்தேகங்களை அவரிடம் கேட்டுத் தெளிந்து கொள்வார்கள்.

''நான்கு நாட்களா ஜெபம் செய்யவில்லை அங்கிள். இன்று ஜெபம் செய்ய பயமா இருக்கிறது...

''என்ன பயம்?''

''ஒரு குற்றவுணர்வு''

''அதைக் கடவுளிடம் ஒப்புக்கொண்டுபோ. 'என் அன்றாட வேலைகளில் உம்மை மறக்கும்படி செய்யாதீர் கடவுளே மண்டியிட்டு ஜெபம் செய்யும் சுகத்தை எனக்கு அன்றாடம் தந்தருள்வீர்' என்று கேள்.''

''கடவுள் மன்னிப்பாரா?''

''மனிதர்களை வேறு யார் மன்னிக்க முடியும்? அரச னல்லவோ தண்டனைக்கும் மன்னிப்புக்கும் பொறுப்பான வன் மனிதர்களின் அரசன் யார்?''

—கேட்டவர் கிறங்கி தொழுவதற்குப் போலார்கள்.

''எல்லாம் பேசுகிற உங்களுக்கு இப்படிப்பட்ட சோதனை வந்ததே ஐயா. வாலிபப் பையனை வாரிக் கொடுக்கும்படியாயிற்றே. தொட்டு அழ உடம்புகூட இல்லாது வெறும் சவப்பெட்டியை மகனென்று பார்த்து அழும்படி நேர்ந்ததே.''

''நான் கடவுளின் கையால் நன்மையைப் பெறலாம் தீமையை மட்டும் பெறக்கூடாதா? அவர் கொடுத்ததை அவர் எடுத்துக் கொண்டார். நான் அழுவது எனக்காக இல்லை. என் பிள்ளைக்காக. அவன் ஆன்மா அமைதி யடையநான் அழுகிறேன். அழுது அழுது ஜெபிக்கிறேன்.''

ஜார்ஜினாவுக்கு அருகே மண்டியிட்டுப் பலமுறை ஜெபம் செய்து அவள் மனசை மாற்றியதில் பெரும்பங்கு அவருக்கு உண்டு.

தகப்பனற்ற நிலையில் பிறந்த குழந்தையைக் கையி லெடுத்து முதலில் ஆசீர்வதித்ததும் அவரே.

''உமது ஒளியை இவன்மீது படரவிடும் ஆண்டவரே. இந்தக் குழந்தைக்கு நீயே தாயும் தந்தையுமாய் இரும்.''

நான்கு வயதில் அவனுக்கு ஞானஸ்நானம் செய்வித்து 'கிறிஸ்டோபர் செல்வக் குமாரன்' என்று கிறிஸ்தவப் பெய ரிட்டு அவனுக்கு ஞானத்தந்தையாய் நின்றவர் அவரே

அவரிடத்தே குழந்தையும் மருமகளும் இருந்தபோது சதாநேரமும் அவர் கண்காணிப்பிலேயே செல்வா இருந் தான்

''ஆ இன்ப இன்ப ஆலயம்...நல்மேய்ப்பர் கிருபாசனம் கண்டடைவோம் தரிசனம்.''

—பிள்ளையை நெஞ்சில் வைத்து மெள்ள ஆடிக் கொண்டே பாடுவார். தோளில் போட்டுத் தோட்டத்தில் தடை பயில்வார். செல்வாவுக்குக் கீர்த்தனைகள் தான் தாலாட்டாக மாறின.

''இரண்டு மூன்று பேர் ஒன்றாய் சேரும்போது வருவார். வாக்குப் போல தயவாய் ஆசீர்வாதம் தருவார். ஆ...இன்ப இன்ப ஆலயம்''

ப்ரேயருக்குக் கண்மூடி அந்தக் குழந்தை கையேந்தி நிற்கும்போது உணர்ச்சிவசப்படுவார்

மருமகளுக்கு வேலை கிடைத்து, அவள் வீடு துணை யாய் வர, அவர் இடம் மாற வேண்டியதாயிற்று. இன்னொரு மகனோடு போய் இருக்கும்படி நேர்ந்தது.

'போ' என்று யாரும் சொல்லவில்லை. நன்றாய் இருக்க வேண்டிய மருமகள் வேதனைப்பட்டுச் சம்பாதிக்கும் காசை அவளே அனுபவிக்கட்டும் என்ற பெருந்தன்மை வந்தது. அவளுடைய தாயும் தந்தையும் குழந்தையை நல்லபடி வளர்ப்பார்கள் என்கிற நம்பிக்கையும் இருந்தது. ஞாயிறு தோறும் அந்தக் குடும்பத்தை சர்ச்சிலே பார்த்து ஸ்தோத்திரம் சொல்லி, அன்பு பாராட்டியதே போது மென்றிருந்தது.

ஆனால், இது அநியாயம். அக்கிரமம். கடவுளுக்கு எதிரான காரியம். கிறிஸ்துவுக்கு விசுவாசமில்லாத செயல்.

விதவைத் திருமணம் சமுதாய மாற்றமாய் இருக்கலாம். மதம் அனுமதிக்காது. இன்றைய சூழ்நிலையில் இந்த மாறுதல் உயர்வாய் இருக்கலாம். ஆனால், உள்ளன்புடன் ஒரு கணவனை வரித்தவள் வேறு ஒருவன் தொடலிலுவதும், விபசாரம் செய்வதும் ஒன்றே.

போகட்டும் செய்துவிட்டுப் போகட்டும். ஆனால் அவனை இந்து என்கிறார்கள். அதிலும் பிராமணன் என்கிறார்கள். இது சரிவருமா? இது மதக்குற்றமில்லையா? ஒரு நம்பிக்கையை வேரோடு தகர்ப்பதில்லையா? ஜார்ஜீனா, நீ உருகி உருகி நினைத்த பிரார்த்தனையும் மூச்சுக்கு நூறு 'ஏசுவே' என்கிற கூச்சலும் பொய்தானே? நீ இவ்விதம் இருந்ததும் பொய் இனி இருக்கப் போவதும் பொய் என்றல்லவா ஆகிறது.

என்னிடம் இதைச் சொன்னால் மறுப்பேன் என்று மறைத்துவிட்டீர்களா?

நெருப்பின் புகையையும் காமத்தின் விளைவையும் எத்தனை நாள் மறைக்க முடியும்?

'ஜார்ஜீனா இத்தனைக் கேவலமானவளா?'

—கொதிக்கக் கொதிக்க யோசனை செய்து கொண்டிருந்தபோது வீட்டுக்கு வர அவர்கள் அனுமதி கேட்டிருப்பதாகச் செய்தி வந்தது.

'இந்தப் பாவிகளைப் பார்ப்பதா... இல்லை...புறக்கணிப்பதா? கடவுளே எனக்கு வலிமை கொடும்' கண்மூடி யோசித்தார். இதனால் உண்டான பாதிப்பு என்ன என்று வரிசைப்படுத்தினார். மனசு தெளிந்ததால் வரச் சொன்னார்.

அந்தப் பையன் முகத்தில் அறிவுச் சுடர் விட்டது. படியேறி அவன் கைகூப்பியபோது அவன் முகம் நிர்மலமாய் இருந்தது. விதவையை ஏற்றோம் என்கிற கர்வம் கூட நிழலாடிற்று. ஜார்ஜீனா இருண்டு கிடந்தாள். குழந்தை ஓடிவந்து அவர் கால்களைக் கட்டிக் கொண்டான். அவர் முத்தமிட்டார்.

''என்ன விசேஷம் சொல்லுங்க...''

விக்டர் தேவாரத்தின் வீட்டு ஜனங்கள் சுவரோரமாய் நின்று கொண்டிருந்தார்கள்.

''எதுவாயிருந்தாலும் பயப்படாம சொல்லுங்க...''

''நானும் ஜார்ஜினாவும் கல்யாணம் செய்துக்கறதா தீர்மானம் பண்ணியிருக்கோம். உங்ககிட்ட ஒரு தகவல்..''

''பத்திரிகை கொண்ணாந்திருக்கீங்களா?''

''இல்லை ஒரு செய்தியாத்தான்''

''ஐயா, நீங்க பிராமணர்னு கேள்விப்பட்டேன்...''

''ஆமாங்க''

''உங்க வீட்டுல சம்மதிச்சுட்டாங்களா?''

''சம்மதம்தாங்க ஜார்ஜீனாவோட அப்பாவும் சரின்னுட்டாரு''

''சம்மதம்னா எப்படி... வந்து நின்னு...''

''இல்லீங்க...வரமாட்டாங்க. ஆனா, ஆட்சேபனை இல்லைன்னு சொல்லி ஜார்ஜீனாவுக்குப் பரிசா ஒரு நகை கொடுத்து...''

'ஓகோ..ஜார்ஜினாலை வீட்டுல சேர்க்கமாட்டாங்க.''

''இப்போதைக்கு இல்லை. பின்னால...'.

''கல்யாணத்துக்கு வரலை. அப்புறம் எப்போ வந்தா என்னா. ஜார்ஜினா கிறிஸ்தவப் பொண்ணு. தெரியுங்களா?''

''தெரியும்.''

''மேற்கொண்டு எப்படி?''

''மேற்கொண்டுன்னா...?''—சத்தி வியப்புடன் கேட்டான்.

''மேற்கொண்டு ரெண்டுபேரும் ஒரே மதமா இருக்கப் போறீங்களா இல்லை, இப்படியே...''

''இப்படியே...''

''புருஷன் மனைவிக்குள்ளே இப்படிப் பிரிவு நல்லதுங்களா?''

''மதம் ஒரு விஷயமே இல்லை..'

''எப்படிங்க?''

''நான் ஒரு பிராமின்தான். ஆனா எந்தச் சடங்கிலும் ஈடுபடறதில்லை.''

''சாமி கும்பிடுவீங்க இல்லையா?.'

''பிள்ளையார் கோயில் போறதுண்டு.''

''இவங்களைக் கூட்டிக்கிட்டா...?''

''வந்தா சரி வராட்டியும் சரி அதே சமயம் அவங்க சர்ச் போறதையும் தடுக்க மாட்டேன்.''

''நீங்க வாசல்ல நின்னுடுவீங்க.''

''யெஸ் சர்ச்சுல எனக்கு என்ன வேலை?.'

''அது வாஸ்தவம் இந்தப் புள்ளை எங்கே போவும்னு யோசிச்சீங்களா?''

''புரியலை''

''புரியாதுங்க. ஏன்னா, இவனைப் பத்தி நீங்க ரெண்டு பேரும் யோசிக்கவே இல்லையே. ஏன்னா, உங்களைப் பத்தியே யோசிக்க முடியாத ரெண்டு பேரும் இந்தப் புள்ளையை எப்படி கணக்குல எடுத்துக்கிட்டிருப்பீங்க. இந்தப் புள்ளையைப் பத்தி நீங்க கூட இல்லை...லயதான இவ அப்பாவும் அம்மாவும் கூட யோசிக்கலே. ஏன்னா, விதலையான பொண்ணுதான் அவங்க கண் முன்னால பெரிசா பட்டிருக்கு அதுக்கு ஆம்பளைத் துணை வேணுமேங்கற கவலை தான் தோணியிருக்கு. உங்க ஐயா, அந்த ஐயரு...அவரு தன்னை மட்டும் தான் யோசனை செய்திருக்காரு. புள்ளை, அறுத்துப் போனவனைக் கட்டிக்கிறேன்றான். 'மாட்டேன் மாட்டேன்னா சமூகக் குத்தம். சரின்னா சாஸ்திரக் குத்தம். எதுக்கு வம்பு? எங்கேனா போ'னு கை கழுவிட்டாரு. நான் இந்த விஷயத்தை இந்தப் பையன் பார்வைலேர்ந்து பார்க்க விரும்பறேன். அப்படிப் பார்த்தா இவன் சார்பா யோசனை செய்தா இந்தக் கல்யாணம் தப்பு. இது நடக்கக்கூடாது. இது அயோக்கியத்தனம். இது தான் என் முடிவு.''

''சார். நாங்க ஒருத்தரை ஒருத்தர் விரும்பி...'—சத்தி உரக்கக் குரல் கொடுத்தான்.

''எதை விரும்பின்னு நான் கேட்டு, நீங்க பதில் சொல்ல ஆரம்பிச்சா அசிங்கமாயிடும். அதை விட்டுடுவோம் வீட்டுக்கு நடுவே அதுபேச வேணாம். என் கேள்வி இது—இந்தப் பையன் கிறிஸ்தவன். கிறிஸ்தவனுக்குப் பிறந்தவன். இவன் தாத்தா நான் கிறிஸ்தவன். இவன் தாத்தாவுக்குத் தாத்தா கிறிஸ்தவன். நீங்க யாரு? இவனுக்குப் பதில் சொல்ல முடியுமா?''

''இவனுடைய கார்டியன்''

''அப்பானு சொல்ல மனசு வரலை பாத்திங்களா. கார்டியன். எதுலேருந்து கார்டு பண்ணுவீங்க எது பத்தி. இவங்க அப்பா வின்செண்ட்னு இனிமே தெரியாத மாதிரி

கட முடியுமா? தன் பேரு கிறிஸ்டபர் செல்வக்குமாரன்னு புரியாம போகுமா? ஏன் கிறிஸ்டபர்னு பேரு தனக்குனு கேள்வி கேட்டுக்க மாட்டானா?''

''அவன் கிறிஸ்டியன். கிறிஸ்டியனாகவே வளரட்டுமே.''

''எப்படி? நஞ்சாலூர்ல கோதுமை போட்டுருவீங்களா...மலைமேல பருத்தி விளையுமா...காபியும் தேயிலையும் கடற்கரைல போடலாமா...?' முடியும்... செய்து காட்டறேன்'னு குடுலைல வளர்க்கப் போறீங்களா? குடுலைல பயிர் வந்துரும் வளராது.''

''என்ன செய்யணும்கிறீங்க?''

''பெரியவங்க நீங்களா தீர்மானம் பண்ணது...இந்த இடம் தொடலீங்களா...இவனைப் பத்தி நினைக்கவேயில்லீங்களா?''

''நான் அவன்கூட சர்ச்சுக்குப் போகணும். அவ்வளவுதானே, போறேன்.''

''அடா, அடா. பெரிய மனசு. ஆனா தம்பி. சர்ச் எக்ஸிபிஷன் இல்லை...சினிமா கொட்டாய் இல்லை—பையனை விரல் பிடிச்சுக் கூட்டிப்போய் வேடிக்கை காட்டறதுக்கு. சர்ச் ஒரு நம்பிக்கை. ஒருவித வாழ்க்கை. சில விதிகள் உள்ள மத ஸ்தலம். விளையாட்டில்லை.''

''நீங்க எங்கேவர்றீங்கனு புரியுது மாமா.''—ஜார்ஜினா பேசத் துவங்கினாள்.

''ஜார்ஜினா கெட்டிக்காரப் பொண்ணு. அதுக்குப் புரியாதது உண்டா... சொல்லு''—பெரியவர் திரும்பினார்.

''அவரை கிறிஸ்தவரா மாறச் சொல்றீங்க.''

சத்தி நிகைத்தான்.

''சொல்லலை. ஆனா, அது ஒரு வழி.''

''வாட். நான்சென்ஸ்.''

''சார். என்னை நான் செல்ஸ்னு நீங்க சொல்லலாம். என் மதத்தைச் சொல்லிடப் போறீங்க பிறகு, விக்டர் தேவாரம் பொல்லாதவனா இருப்பான்.''

''நான் உங்களையும் சொல்லலை; உங்க மதத்தையும் சொல்லலை. என்னை மாறச் சொல்றது பத்திச் சொல்றேன்.''

''ஐயா, நான் வாயைத் திறந்து சொல்ல மாட்டேன். சொன்னது அவங்க. நாங்க மூணு தலைமுறைக்கு முன்னாடி மாறினவங்கதான். நம்பிக்கையோட மாறினோம். நப்பாசையோட மாறலை. பணிஞ்சு மாறினோம். பலன் கருதி மாறலை.''

''உங்க முடிவு என்ன?''—சத்தி கேட்டான்.

''இந்தத் திருமணத்துக்கு ஒப்புக்க முடியாது.''

''இதை எப்படி நீங்க தடுக்க முடியும்?''

''உங்களைத் தடுக்க முடியாதுய்யா தெரிஞ்சே தப்பு பண்றவங்களைத் தடுக்க முடியாது. பொய்யா தூங்கறவங்களை எழுப்ப முடியாது. ஆனா, இந்தக் குழந்தை என் பாதுகாப்புல இருக்கு இதுக்கு நான் காட்ஃபாதர். இதை அழிக்க நான் சம்மதிக்க முடியாது இதை என்கிட்ட விட்டுட்டு என்ன வேணா செய்துக்கிட்டுப் போங்க.''

''நோ?''—ஜார்ஜினா சீறினாள். பிள்ளையை வாரித் தன் பக்கம் இழுத்துக் கொண்டாள்.

''பிள்ளையையும் தாயையும் பிரிக்கிறீங்களே ஐயா? உங்களுக்குக் கொஞ்சமாவது இரக்கம் இருக்கா?''—சத்தி கேட்டான்.

''அந்த அம்மா நெருப்புல குதிக்கறேன்னு போவுது. தாயும் புள்ளையும் பிரியக்கூடாதுனு இதையும் தூக்கி நெருப்புல போடவா? புத்தியுள்ளவன் செய்வானா?''

''நான் கிறிஸ்தவனாயிட்டா, நீங்க ஜெயிச்சுட்டதா அர்த்தமா?''

''நான் ஜெயிக்க நீங்க கிறிஸ்தவராக வேண்டாம். நான் கடைசிவரைக்கும் நல்ல கிறிஸ்தவனா இருந்தா போதும். ஒரு நல்ல கிறிஸ்தவன் இந்தத் திருமணத்தை அனுமதிக்க மாட்டான்.''

''உங்க மதம் சொல்ற அன்பு, அஹிம்சை பெரிய பொய் இல்லையா?''

''புரிஞ்சுக்கிட்டு பேசுங்க தம்பி. கோயில் லாசல்ல வட்டி வியாபாரம் செய்துக்கிட்டிருந்தவங்களை ஏசு கயிறால அடிச்சு துரத்தினது உங்களுக்குத் தெரிஞ்சிருக்காது. என் தந்தையின் இடத்தை அசுத்தப்படுத்த ஒரு நாளும் இடம் கொடேன்' என்கிற வார்த்தை உங்களுக்குப் புரியாது. மறுபடி சொலறேன். இந்தக் குழந்தையை அசுத்தப்படுத்த ஒரு நாளும் விடமாட்டேன்.''

''உங்களால எப்படித் தடுக்க முடியும் எங்க திருமணத்தை?''

''கடவுளுடைய அருள், சட்டம் இரண்டாலயும் தடுக்க முடியும்.''

''நான் ரெடி சார்? கிறிஸ்தவர்கள் மத வெறியர் கள்னு சேல்விப்பட்டிருக்கேன். இப்போ பார்த்துட் டேன்.''

''ஒரு மதம் எப்போ வெறியாகும் தெரியுமா தம்பி அது மறுக்கப்படுகிற போது. அது தடுக்கப்படுகிறபோது''

''நான் ஜார்ஜீனாவை மதம் மாறச் சொல்லலையே.''

''ஏன் சொல்லலை. உங்களுக்குள்ளே ஓர் ஒற்றுமை வேணுன்னா இரண்டு பேரும் ஒரே மதமா இருக்கிறது நல்ல துனு தோணலையா? ஜார்ஜீனா இந்துவா மாறதுலனக்கு ஆட்சேபணை இல்லை. இந்தப் பிள்ளை மாறக்கூடாது.

ஏன்னா, இது வின்செண்ட் பிள்ளை என் பேரன். இவன் கிறிஸ்தவன். பிறப்பால்—வளர்ப்பால் இந்தக் குழந்தை கிறிஸ்தவன். இவனை மதம் மாறச்சொல்ல இவன் தகப்ப னுக்கு உரிமை உண்டு. உனக்கு இல்லை. இவன் அம்மா வுக்கும் இல்லை. இனி இது என் பிள்ளை. கீழே இறங்கி விட்டுட்டு நீங்க போகலாம்.''

'மறுத்தால்...''—சத்தி எழுந்து நின்றான்.

பெரியவரும் எழுந்து நின்றார். புஜம் மடித்துக்காட்டி னார். சத்தி திகைத்தான்.

39

''நான் நாடான். விருதுநகர் நாடான். ஒரு பக்கு வத்துக்கு வந்து அமைதியாயிட்டேனே தவிர, தம் புடிச்சு எழுந்து நின்னா பயந்துட மாட்டேன். இது கறி திண்னு வளர்ந்த உடம்பு. கர்லாக்கட்டை சுத்தின கை அரிசி மூட்டை தூக்கிக் காய்ச்சுப்போன முதுகு. நான் நல்லவ னுக்கு நல்லவன். கெட்டவனுக்குக் கெட்டவன். ஒரு கன்னத்தில் அறைஞ்சா மறு கன்னம் காட்டுவேன் வயத் துல அடிச்சாலும் தாங்குவேன். என் மதத்தை நிந்தித் தால், என் கடவுள் வீட்டை மிலேச்சர்கள் மிதித்து ஆடினால், என் தந்தையின் இல்லத்துக்குள் விபச்சாரம் நடந்தால் ஒருபோதும் அனுமதியேன். உடல் மண்ணுக்கு, உயிர் மதத்துக்கு.''

''ஃபானடிக்,''

''சொல்லிட்டுப் போ. கவலையில்லை. எனக்கு மத வெறி. உனக்கு பொம்பளை வெறி, அவளுக்கு ஆம்பளை வெறி. இந்தக் குழந்தை கதி என்னடான்னு யோசிச்சிங் களா'' என்னை 'ஃபானடிக்'ன்றியே...ஒரு கணம் இந்தப் புள்ளையை நீயோ இவளோ யோசிச்சுப் பார்த்தீங்களா?

நாளைக்கு இவ மடிசார் கட்டிக்கிட்டு வெங்கடா ஜலபதி படத்துக்குப் பூ போடுவா. புருஷனுக்குப் பிடிக்குமேனு லேஷம் கட்டுவா. இந்தக் குழந்தை கேட்குமே 'அந்த சாமியாரும்மா?'னு. என்ன பதில்?' அம்மா கும்புடறாளே, நாமும் கும்பிடணுமானு குழம்புமே... கிறிஸ்து நல்லவரா, வெங்கடாஜலபதி நல்லவரானு அல்லாடுமே...அஞ்சு வயது முடிஞ்சு ஆறு வயசுடா இருக்கு...இது மனசு யோசிச்சிங்களா ரெண்டு பேரும்.'

தம்பி நீ ஐயர் பையனா இருந்தும் ஏன் இப்படி அறிவு கெட்டத்தனமா பேசறேனு எனக்குப் புரியலை. கல்யாணம்கறது காமம் தீர்க்கற விஷயம் இல்லடா... அதுக்குப்பேரு விபசாரம் கல்யாணம் வம்ச விருத்தியை முக்கியமா லெச்சு வந்த விஷயம். ஒரு ஆம்பளையும் பொம்பளையும் பேசறது, தொடறது, படுக்கறது, பழகிப் புரிஞ்சுக்கறது—எல்லாத்துக்கும் அடிப்படை வம்ச விருத்தி. நல்ல குழந்தைகள் உற்பத்தி. கிறிஸ்தவனுக்குக் காமம் இல்லையானு கேட்காதே. எல்லா மனுஷாளுக்கும் உண்டு அது வகைப்படுத்தப்பட்டு இவள் இவனோடு சேரட்டும்...கடவுள் இவர்களைப் பல சந்தோஷங்களின் பொருட்டு ஆசீர்வதிக்கட்டும்னு பெரியவங்க வாழ்த்தி நடத்தற விஷயம் அப்படித்தான் இவளுக்கும் நடந்திச்சு. 'இந்தப் பலப்பம் ஒடிஞ்சு போச்சு...வேறு பலப்பம் கொடு'னு கலர் கலரா எழுதறது இவ இஷ்டம். தடுத்தா எனக்குக் கெட்ட பேரு மறுபடி சொல்றேன். நான் உன்னை தடுக்கல. இவனை தடுக்கல. அதுக்கு எனக்கு அதிகாரம் இல்லை. ஆனா, நீங்க இணைந்தால் இவன் வரமாட்டான. உங்களோட இருக்கமாட்டான்.

நாளைக்கு உனக்குப்புள்ளை பொறக்கலாம். உங்கப்பா கோவம் தீர்ந்து வந்து பார்க்கலாம். நீயும் அவனுக்கு உங்க ஜாதிப்படி பூணூல்கல்யாணம் செய்யலாம். அப்போ இந்தப் புள்ளை கதி? அண்ணன் கிறிஸ்தவன், தம்பி ஐயரா? இந்தக் குழந்தை உள்ளுக்குள்ளே எத்தினி அல்லாடும்னு

உனக்குப் புரியுதா. ரெண்டு மதத்துக்குமே ஒரு துரோகம் நடக்குதே...புரியலையா உனக்கு?

'எனக்கு மதமே இல்லை'னு சொல்லிடாதே. இப்போ சொல்லிடலாம். ஆஞ்சு ஒஞ்சு உட்கார்றபோது சொல்ல முடியாதுப்பா. அடிபட்டுத் துடிக்கிறபோது தனியா நிக்க முடியாதுப்பா. மதம் கஞ்சா, அபின் என்று சிலபேர் சொல்றாங்க. வாஸ்தவம். வலிக்கிறபோதுதான், வலியில துடிக்கற போதுதான் அது எப்பேர்ப்பட்ட மருந்துனு உனக்கும் தெரியும். மதம் அபின்தான், வலிக்கும்போது மரத்தும் போக வைக்கிற மருந்துதான். ஆனால், கடவுள் நம்பிக்கை மனித வாழ்க்கைக்கே அடிப்படையா இருக்கற கடவுள் நம்பிக்கை அதுவேற விஷயம். ஒவ்வொருத்தருடைய கடவுள் நம்பிக்கை ஒவ்வொரு மதமா மாறிச்சு நான் ஏசு அவதாரம்னுவேன் நீ ராமர் அவதாரம்னுவே. மதம் மாறும், கதை மாறும், சடங்கு மாறும். நம்பிக்கை ஒண்ணு. அன்பு செய்ங்கிற தத்துவம் ஒண்ணு. உலக வாழ்க்கை அதிசயம்ங்கற வியப்பு ஒண்ணு. நாளைக்கு விடியும், நல்லது ஜெயிக்கும் கெட்டது அழியும்ங்கற கருத்து ஒண்ணு. இந்தப் புள்ளை கடவுள் நம்பிக்கை இல்லாத போயிடும்டா தம்பி. கெட்டதே உத்தமம்னு போயிடும்டா ராஜா. இவனை என்கிட்ட விட்டுரு. நீ போ. இவனை இந்துவாக்கிடறேன்னு சொல்லாதே. காலம் கடந்து போச்சு. ஆறுமாசக் குழந்தைன்னா ஒழிஞ்சு அனுப்பிட்டிருப்பேன். ஆறுவயசு புள்ளைடா. இவன் எதுக்கு உனக்கு இடைஞ்சல்? நீ போ ராஜா...போய் நல்லபடி குடித்தனம் பண்ணு, போ.

நான் வெறியனில்லடா தம்பி. விவேகம் இருக்கறவன் அதனால்தான் உன்னைவிட அதிகம் யோசிக்கறேன்...''

''சத்தி, வாங்க போகலாம். இவரு பிடிவாதம் பிடிக்கறாரு. வா செல்வா''—ஜார்ஜினா பிள்ளையைத் தூக்கிக் கொண்டாள். எவரிடமும் விடைபெறாமல் படியிறங்

னார்கள். சத்தி அவரையே பார்த்து நின்று கொண்டிருந்தான்.

பெரியவர் கரம் தட்டி அவனைக் கூப்பிட்டார்.

''இத்தினி சொன்னபிறகும் புரியாத போதே..ஏன்னா நீ ஆஸ்பத்திரி மயக்கத்துல இருக்கற...குடித்தனம் பண்ற ஆசையில இருக்கற. உனக்குத் தெளிவில்லை எப்படித் தெளிய வைக்கறதுனு எனக்குத் தெரியும்போ. விருதுநகர் நாடான் முன்னே லெச்ச காலைப் பின்னே வைக்க மாட்டான். போ''—நகர்ந்து உள்ளே போனார்.

சத்தி படியிறங்கினான். மோட்டார் சைக்கிள் எடுத்தான். ஜார்ஜினா, செல்வாவோடு நகரின் மையத்துக்குள் இருந்த ரெஸ்டாரெண்டுக்குப் போனான். தலைவலித்தது. நல்ல காபி தேவைப்பட்டது. ஜார்ஜினா டீ விரும்பினாள். குழந்தைக்கும் அதுவே வேண்டுமென்றாள். காத்திருந்தார்கள்.

உலகம் அவர்களைப் பற்றிய எந்த அக்கறையும் இல்லாமல் இயங்கிக் கொண்டிருந்தது.

'என்ன சொல்றீங்க சத்தி?''—ஜார்ஜினா மெல்ல வினவினாள்.

''இந்த ஆள் யாரு நமக்கு உத்தரவு கொடுக்கவும் குறுக்கே விழுந்து தடுக்கவும். நாம போய்க் கேட்டது முட்டாள்தனம்.''

''அவர் விஸ்சென்ட் அப்பா.''

''அவன் செத்ததும் அந்த உறவு முடிஞ்சு போச்சு. தேவையில்லாத போய் நின்னோம்.''

''இல்லை சத்தி. எங்கப்பா போய்ச் சொல்லிடுன்னாங்க. அதான். அதுவுமில்லாம அவரு செல்வாவுடைய காட்ஃபாதர்.''

''காட்ஃபாதர்தானே... கடவுளா? சட்டத்தால உடைப்பாராம். தடுப்பாராம். எப்படி முடியும்?''

''அவரு நேரடியா சண்டைக்கு வரலை சத்தி. பின்பக்கமா வராரு. 'நீ எப்படி வேணா போ...என் பிள்ளையை என்கிட்ட கொடுத்துடு.'னு சொல்றாரு.''

''அம்மாவுக்கு இல்லாத உரிமை காட்ஃபாதருக்கு உண்டா...?''

''அப்பா இல்லாத போது உண்டு. சட்டத்தில இல்லாம இருக்கலாம். சர்ச்சுல காட்ஃபாதர் வார்த்தைக்கு மிகப்பெரிய மதிப்புண்டு. என்னை சர்ச்சலேர்ந்து—மதத்துலேர்ந்து தள்ளி வெச்சுடுவாங்க.''

''செய்யட்டும். வேறு சர்ச்சு...''

''இல்லை. எந்த சர்ச்சும் போக முடியாது சர்ச் போகறது. போகாதது முக்கியமில்லை. நான் லவுக்கட்டாயமா பிள்ளையை மதம் மாத்தறேன். இதுக்கு உரிமையில்லைனு என் மேல வழக்குப் போடலாம். இனி தாயாருக்குப் பிள்ளை மேல உரிமை இல்லைனு வாதாடலாம். என்னைப் பாதுகாக்க நீங்க வந்த பிறகு எனக்கு இந்தப் பிள்ளை சுமை...அவனை என் பொறுப்பில் விடலாம்னு கோர்ட்டுக்கு இழுக்கலாம்.''

''செல்லுபடியாகுமா?''

''தெரியலை. ஆயிடுச்சுன்னா நான் செத்துட்டேன்.''

''எப்படி ஜார்ஜினா?''

''இப்படி ஒரு கேஸ் இருக்குங்க...கொஞ்சம் பெரிய பிள்ளை. பதினெழு வயசு. அவனைக் கேட்டாங்க கோர்ட்ல. அவன் கிறிஸ்டியனாத்தான் இருப்பேன்னான். அம்மா கிட்டேர்ந்து பிரிச்சுட்டாங்க. அது மாதிரி எதாவது செய்யலாம்.''

''கடைசி வரைக்கும் பார்த்துடலாம்.''

''முடியுமா நம்மால?''

''முடியாதது என்ன? ஆறு வயசுப் பிள்ளைக்கு மதம் என்ன தெரியும், கடவுள் என்ன தெரியும். அம்மாதான் அவன் உலகம், எப்படி அவகிட்டேர்ந்து பிரிக்க முடியும்.''

''சத்தி, இதை வேறு விதமா யோசிச்சா என்ன?''

''எப்படி?''

''நீங்க கிறிஸ்டியனாறது கஷ்டமா?''

''ஜார்ஜினா.''

'கேட்கறது தப்புதான். ஆனா சும்மா பெயர் அளவுக்கு. வெறும் பேர் மாறப் போகுது...ஜார்ஜ் சத்திய நாராயணன்னு பேர் மாறப் போகுது. அவ்வளவுதான்.''

'தப்பு ஜார்ஜினா. நீ என் பேர் மாத்திக்க. சத்திய நாராயணனே வேணாம். என்னை ஜார்ஜ்னு கூப்புடு. எதுனா ஒரு பேர்லை. ஆனா, மதம் மாறச் சொல்லாதே.''

''சத்தி,நான் சொல்றது ஒருசின்ன அட்ஜஸ்ட்மெண்ட்.''

'உனக்குப் புரியலை. நான் ஒண்ணும் பெரிய மதவாதியில்லை சகல சாஸ்திரமும் தெரிஞ்ச இந்து இல்லை. இந்து உயர்ந்த மதமே மதம்னு வாதம் செய்யலை. ஆனா, இது தப்பு. யாரோ துரத்தறதுக்குப் பயந்து நான் சர்ச்சுல ஒளிய மாட்டேன் என்னை நானே அவமானப் படுத்திக்க மாட்டேன். நாளைக்கு எனக்கு பைபிள் பத்திக் சொல்லி.. ஏசு பத்திச் சொல்லி...நான் யோசிக்க மதம் மாறலாம். இறிஸ்துவே உண்மைனு நம்பலாம். ஆனா. இப்படி ஏமாத்த மாட்டேன் நானா இதுக்கு ஒப்புக்க முடியாது. இது அட்ஜஸ்ட்மெண்ட் இல்லை. அசிங்கம். உங்க மதத்துக்குக் கூட இது கேவலம். இன்கம்டாக்ஸுக்காக முஸ்லிமா சிலர் மாறியிருக்காங்களாம். நாம இப்படிச் செய்றது நல்லதா?''

''தப்புதான் சத்தி. நாம சேர்ந்து சுகமா வாழறது முக்கியமில்லையா?''

''மனுஷாளை மதம் தடுக்குமா?''

''தொந்தரவு பண்ணும்.''

''செய்யட்டும். தாங்கிப்போம்''

''கடவுளே, ஏன் இப்படி மாறி மாறி அடி விழுது எனக்கு.''

''விழலை. இனிமேதான் விழும்.''

''என்னால முடியாது சத்தி இவளைப்பிரியனுமாலு ஒரு சின்ன பயம் வந்தாக் கூட உடம்பு சுருண்டுபோகுது. இதுக்குப்பதிலா .''பிள்ளையை அணைத்துக்கொண்டாள்.

''என்னைப் பிரியறது உத்தமம்னு தோணுதா''

ஜார்ஜினா திடுக்கிட்டு நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். அவள் கண்கள் கலங்கின

''ஏம்ப்பா இப்படிப் பேசறீங்க. தெருவுக்கு வந்துட்டம்ப்பா. இனிமே பிரியறது முடியாது சத்தி. குவார்ட்டர்ஸ்ல பேச ஆரம்பிச்சுட்டாங்க. நீங்க குவார்ட்டர்சுக்கு குடி வந்து ரெண்டு நாள் ஆகலை. பேச்சுலர்ஸ் ரூமுக்கு வந்த மறு நாளே பக்கத்து வீட்ல கேட்கறாங்க என்னை 'ஏதாவது விசேஷமா''னு.

''சத்தி, உங்களுக்கு அப்படி எண்ணம் இருக்கா? நான் ரொம்ப தொந்தரவு பண்றேனா?''—குரல் குழைந்து தவித்தது.

''அசடு...மற. நமக்குக் கல்யாணம்னு ஆகறவரைக்கும் ஊர் நம்மைப் புரட்டி எடுக்கும். கூடிக் கூடிப் பேசும். போனா பின்னாடி சிரிக்கும். நம்ம குவார்ட்டர்ஸ்ல இது அதிகமாகவே நடக்கும். ஷோபனா நிறைய கதை விடறா நீயும் நானும் ராத்திரி தொட்டில உட்கார்ந்து முத்தம் கொடுக்கறோமாம்.''

''டாமிட் யார் சொன்னது?''

''அடுத்த சும்காரன் கேட்கறான் ஜார்ஜினா. ஷோபனா சும்மா இல்லாத நிறைய இளறிவிடறா.''

''நிறுத்தி வாய்மேல போடட்டுமா?''

''வேணாம். அதுக்கு ஒரு நேரம் வரும். செய்லோம் முதல்ல என்னைப் பத்தின பயத்தை நிறுத்து. மறந்து போய்கூட என்னை கிறிஸ்தவனா மாறச் சொல்லாதே. மனசாலகூட இதைநினைக்காதே நானா மாறனும் நானா லயப்படனும் நானா மண்டிபோட்டு 'ஏசுவே'னு நெஞ்சு லேர்ந்து கூப்பிடனும். அதுதான் அவ்வளவு பெரிய மதத்துக்கு உண்டான மரியாதை, இந்நச்சத்தி வரணும்னு கிறிஸ்தவ மதம் வங்கலை. ஏங்கவும் ஏங்காது. சத்தி ஏங்க னும். ஏசுவுக்கு ஏங்கணும் புரியுதா? மத்த முரட்டுத்தனங் களுக்கு நாம ஒத்துமையா இருந்து பதில் தருவோம். நம்ம கல்யாணம் நடக்கும். யாராலயும் அதைத் தடுக்க முடியாது. உறுதியா இரு ஜார்ஜீனா''. அவள் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டான்.

''சத்தி...சத்தி...முதல் தடவையா எனக்கு இவ்வளவு பெரிய உறுதி கொடுத்திங்க சத்தி.''

''வார்த்தையை விடச் செய்கை முக்கியம்னு நினைச் சேன். வார்த்தையும் முக்கியம்னு உங்க மாமனார் சொல்லிக் காட்டிட்டார் லெட்ஸ் ஃபை.... சட்ட ரீதியா இது என்ன நமக்கு ஆதரவுனு யாரையாவது கன்ஸல்ட் பண்ணலாம். உனக்கு யார் தெரியும்?''

பேசினார்கள். யோசித்தார்கள். இருட்ட, குழந்தை யைத் தூக்கிக்கொண்டு குவார்ட்டர்ஸ் போனார்கள். அவள் விட்டு வாசலில் அவளை இறுக்கி விட்டான். குழந் தைக்கு முத்தம் கொடுத்து உள்ளே ஓடிவிட்டான்.

''ராத்திரிச் சாப்பாட்டுக்கு என்ன சத்தி?''

''எங்கியாவது வெளியே பார்த்துக்கறேன்.''

''வேணாம் நான் சமைச்சு எடுத்துட்டு வரேன். பன் கேரியர்ல எடுத்து வாட்டா?''

''சரி, மூண்டு வேணாம்''

'வெங்காயம்?''

''போடலாம். காரம் குறைச்சு. அப்புறம்...''

''கண்டிப்பா தயிர்சாதம் இருக்கும். சரியா?''—சிரித் தாள்...சிரிப்புக்கு நடுவே கவலை தெரிந்தது.

ஒன்பது மணிக்கு கேரியருடன் வந்தாள். சாப்பிடும் வரை வெளியே மரத்தடி சிமெண்ட் பலகையில் காத்திருந் தாள். அலம்பின டிபன் கேரியர் எடுத்து வந்து கொடுத்து விட்டு அவனும் பேசிக் கொண்டிருந்தான். மெள்ள குவார்ட்டர்ஸ் சுற்றி நடந்தார்கள்

''மணி பன்னெண்டாறது. தூங்கலையா?''— யாரோ கதவு திறந்து கேட்டார்கள்.

''தூங்கலை மாமி''—ஜார்ஜினா அருகே போனாள்.

''இழுத்துப் பறிச்சுண்டிருக்காதே ஜார்ஜீனா. சட் டுனு முடி. குவார்ட்டர்ஸ் காம்பவுண்டுக்குள்ளே சத்தி யைக் கொண்டு வந்துட்டே...வீட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போறதா கஷ்டம்?''

''லீவுக்கு அப்ளை பண்ணியிருக்கேன். அது கிடைக் கணும்.''

''ரொம்ப பேச்சு சுத்தறது ஜார்ஜினா. முப்பது ரூபாய்க்கு மாலை. ஐந்நூறு ரூபாய்க்கு மோதிரம். பேடர்னு முடிச்சுடு கேட்பாரே கிடையாது அப்புறம். வெறும்னே இப்படிச் சுத்திண்டிருந்தியானா தலறா பேசுவா...நாம தான் ஜாக்கிரதையா இருக்கணும். சத்தி கிட்ட சொல்லு''

ஆபீஸிலும் கேட்டார்கள். சிலர் முன் கூட்டிப் பாராட்டினார்கள். 'பையனைக் கேட்டியா?' என்றார் கள். 'சர்ச்சா, கோயிலா...எங்கே திருமணம்?' என்றார் கள். எல்லோரும் நிறைய பேசினார்கள். 'என்கிட்ட வந்து எங்க சமையல் கத்துக்கமூ' என்றார்கள் 'தலை யெழுத்தா ஜார்ஜினாவுக்கு. இனிமே சத்திமாமிசபட்சிணி

ஜார்ஜினாவைச் சமாளிக்க வேணாமா...மனிஷன் எங்கே முடிஞ்சாச்சா. இனிமேதானா...' ஆண்கள் வேறுவித மாய் அரட்டையடித்தார்கள். 'ஜார்ஜினா ஒரு அப்ளி கேஷன் பாரம் குடுக்க டைம் பாராயிடுச்சு தெரியும். இருந்தாலும் பரவாயில்லை. ஜார்ஜினா ரிஜெக்ட் பண் ணிடுச்சுன்னாலே ஒரு பெருமை. நீங்க சண்டை போடும் போதே தெரியும்...உள்ளே ஒரு நூறு ஓடுது. வெளியே நான் டபார் டபார்னு முட்டிக்குதுங்கன்னு. இந்த முறை யாவது கெட்டி நெசவா கிழியாத இருக்கட்டும். வாழ்க வளமுடன்.

நாலு நாட்கள் கழித்து அப்பா ஆபீஸுக்கு போன் செய்தார். உடனே வரச் சொன்னார்.

விக்டர் தேவாரத்திடமிருந்து வக்கீல் நோட்டீஸ் வந்திருந்தது.

பையனுடைய ஞானத்தந்தை என்ற யோக்கியதை யில் அந்தப் பையனின் மனவளர்ச்சி குறித்து மிகுந்த கவலை உடைய நபராய் அவர் இருப்பதால் ஜார்ஜினா அதற்குக் குந்தகம் செய்யும் எந்தக் காரியமும் தடுக்கப் படும் என்றும், மறுமணம் புரியும் எண்ணமிருப்பின் பிள்ளை செல்வ குமாரனை அவரிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும், வேறு மதத்தவரை மணம் புரிவதால் மனைவிக்கு மதம் மாற வாய்ப்பு அதிகம் உள்ளதென்றும், அது செல்வகுமாரன் மனநிலையைப் பாதிக்குமென்றும், அவன் பிறந்து வளர்ந்த மதத்துக்கு எதிராய் அவனை வள ரும்படி தூண்டுமென்றும், அதைத் தடுக்கும் ஒரு சமூகப் பொறுப்பை அவருக்கு சர்ச் வழங்கியிருக்கிறதென்றும் ஞானத்தந்தை என்பது வெறும் மதச்சடங்கில்லை...அது ஒரு வளர்ச்சிக்குக் கொடுத்த உத்தரவாதம். அது பாதிக் கப்படுகிறபோது உரிமை கொள்ள அவருக்கு யோக்கி யதை உண்டென்றும் எழுதியிருந்தது. பத்து நாட்களில் பதில் தராது போனால் வழக்குத் தொடரப்படும். திரும ணத்துக்குத் தடையுத்தரவு வாங்கப்படும் என்று சொல் லப்பட்டது.

ஜார்ஜினா பதறினாள். சத்தியிடம் ஓடினாள். சத்தி அதை எடுத்துக் கொண்டு வக்கீலிடம் ஓடினான்.

அம்மா கத்தத் துவங்கினாள்.

''இந்தக் கேடுகெட்ட ஆம்பளையால லந்த வினை. நான் அப்பவே சொன்னேன்—' வேணாம் நல்லதில்லை. லம்பு வரும்'னு அடக்கி வெச்சுட்டாரு. இப்ப கேட்கறாங் களே கேள்வி—வாசல்ல மடக்கி என்னை. என்ன பதில் சொல்லுவேன்? 'ரெண்டாம்புள்ளை ஐயரா...? அவனுக் குப் பூணூல் போடுவியா, அவனுக்கு மொட்டையடிப் பியா, காது குத்துவியா திருநீறு பூசுவியா...ஆமாம்மா இந்தப் புள்ளை கதி என்னா? உன் நெஞ்சுல கை வெச்சு ஏசுவுக்கு முன்னாடி நிக்கற மாதிரி சொல்லு'ன்றாங்க சொல்ல முடியலையே. கல்யாணம் ஆயிரம் காலத்துப் பயிரு பீச்சுல வெச்சா முடிக்கறது. இப்ப அடிச்ச காத் துல ரெண்டு கண்ணுலயும் மண்ணு. உறுத்துதே உறுத்து தேன்னா...தொடைங்குறியா. தின்ன தொழுப்புடீ இது.''

''பெத்துக்கேலன்னா என்ன செய்வாங்களாம்?''— ஜார்ஜினா ஏதோ கேட்டு இரைந்தாள்.

''ஏன் அந்தப் பாவம் பண்ணிட்டு வந்திட்டியா?'— அம்மா கூச்சலிட்டாள்.

சுளீரென்று உள்ளே உரைத்தது. 'செய்தால் என்ன? இதில் என்ன பாவம்? கருக்கலைப்பு தவறு. கருவாகாத தடுத்தால் என்ன?''

''சத்தி ஒரு வழி இருக்கு'—உள்ளே கூவினாள்.

'சத்தி ஒப்புக்குமா?'— தொஞ்சம் பயந்தாள்.

''ஒப்புக்கமாட்டேன். கூடாது'ன்னு சொல்லிடச் சுன்னா...?'' குழம்பினாள்.

இரவு ஒன்பது மணிக்கு சத்தி வந்தவுடன் தன் யோசிப்பு சொன்னாள்.

''ரெண்டாவது பெத்துக்கிட்டாத்தானே மூத்தவன் மன நிலைமை பத்தி பயம். நான் ஆபரேஷன் செய்துக் கிட்டா...இவன்தான் இவன் மட்டும்தான்னு முடிவு செய் துட்டா. மாமா பயப்படறதுல நியாயம் இருக்கு. நானும் மதம் மாறலை. என் புள்ளையும் மதம் மாறப்போற தில்லை. அப்போ கேஸ் எதுக்கு? அவன் மனசு கலைக்கிற சூழ்நிலையே வரப்போறதில்லையே...பிரிக்கறது எதுக்கு. இது சரியா சத்தி?''

சத்தி தலை குனிந்து உட்கார்ந்திருந்தான்.

உலுக்கினாள்.

எழுந்தாள்.

''என்ன சத்தி?''

''உங்க மாமனார் உன் பிள்ளையைப் பத்தி யோசிக் கலேயில்லைன்னாரு. அதைத்தான் குறையா சொன்னாரு. நீ என்னையும் யோசிக்கலைன்னு இப்ப புரியுது. ஜார் ஜினா, இதைவிடப் பெரிய சுயநலம் உலகத்துல எதுவும் இல்லை. உன்னைத் தவிர வேறு யாரையும் நீ யோசிக் கலேயில்லை. இது தான் உண்மை. தன்னை மட்டுமே யோசிக்கறது குடித்தனம் பண்றதுலகுழப்பம் கொடுக்கும். ரிக்கரம் உடைஞ்சு போகும். இவ்வளவு தான் இப்ப சொல்ல முடியும்.''

நகர்ந்து தன் அறைக்குப் போனான் சத்தி. ஜார் ஜினா நிலோடு மர நிழலில் உட்கார்ந்திருந்தாள்

40

ஒரு விஷயத்தை நாலு பக்கத்திலேருந்தும் பார்க்க உனக்குத் தெரியாதா...? ஒரு பிரச்னை வந்தவுடனே அரண்டு உருண்டு என்ன வேணா செய்துடறதா. என்னைப் பத்தி யோசிக்க டிரை பண் ஜார்ஜினா.

நான் கல்யாணம் பண்ணவுடனே கைகுலுக்குவாங்க. ரெண்டு நாள் கழிச்சு 'எப்படி... எல்லாம் சரியா இருக் கா?'னு கேட்பாங்க. ரெண்டு மாசம் பொறுத்து 'என்ன ஏதாவது விசேஷம் உண்டா?'ன்னுவாங்க ஒரு வருஷம் கழிச்சு 'என்ன ப்ரதர்...ப்ராக்ரஸே காணோம்'னுவாங்க. நாலு வருஷம் கழிச்சு வேறு ஒன்று சொல்வாங்க ஜார்ஜினா.

சரி மத்தவங்க கிடக்கட்டும். எனக்குக் குழந்தை இருக்கக் கூடாதா? விஸ்சென்ட்டோட பையன்தான் என்னுடைய பையன். அதுக்காக என் வித்து வளரக் கூடாதா? செல்வாவுக்குத் தம்பி தங்கை வரக்கூடாதா? அப்படி வந்தா இவனைச் ஓ தூண்னு உதறிடுவேனா? அந்தக் கிழவன் அறிவில்லாத பேசறான்னா, நீ எனனை அப்படி நினைக்கலாமா... நம்ம மலர்ச்சியை நாமே நசுக்கிக் கொல்லணுமா?

விஞ்ஞானம் உதவி பண்ணுது... ஆபரேஷன்னு சொல்றே. இது இல்லைன்னா 'நாமகல்யாணம் செய்துக்கு வோம்... வெவ்வேற தெருவுல வசிப்போம்'னுவியா? நீ யாருக்குப் பயப்படறே? உன் மாமனாருக்கா... இல்லை அவரு சொன்ன மாதிரி நான் மாறிடுவேன்னா, ஒரு பிள்ளையை ஐயரா வளர்த்து இன்னொரு பிள்ளையை அவலமா பண்ணிடுவேன்னா?

பஸ்மாசுரன்னு ஒரு ராட்சஸன். தன் தலையில தானே கையை வெச்சு தன் தவலிமை தாக்கி எரிஞ்சு போனான். மனுஷனுடைய தபஸ் மதம். அவனையே அவன் தபஸ் அழிக்கக்கூடாது. இப்போ உன்னை அழிச்சிட்டிருக்கறது உன் மதம்.

என்ன நடந்து போச்சு. லாயர் நோட்டீஸ் விட்டிருக் காங்க...பதில் தரப்போறோம்.

ஸ்டே ஆர்டர் வாங்க முடியாதபடி செய்யலாம் சட்டத்துல...தெரியுமா? 'எப்போ கூப்பிட்டாலும் வந்து சம்மன் வாங்கறேன். என்பக்கம் நியாயம் சொல்றேன்'னு

எழுதிக் கொடுத்துட்டா எதுக்கும் ஸ்டே ஆர்டர் தரமுடியாது கல்யாணத்தை நிறுத்த முடியாது. கல்யாணம் உடனே நடக்கும். கேஸ் ஆறு வருஷம் ஏழு வருஷம் நடக்கும்

உளறாதே ஜார்ஜினா. இது புதுவழின்னு எல்லிட்ட உளறாதே எனக்குப் பசங்க வேணும்... வீடு நிறைய பசங்க வேணும். லிஸ்சென்ட்டை நமக்கு ஞாபகப்படுத்த செல்லா இருக்கற மாதிரி, நம்ம லவ்வை நமக்கு ஞாபகப் படுத்த பசங்க வேண்டாமா? போ... போய் வேலையைக் கவனி.'

—ஏர்போர்ட் தனியறையில் சத்தி கோபமாய்—ஆனால் தெளிவாய்ப் பேசினான். ஜார்ஜீனா சகலமும் கேட்டுக் கொண்டு நடைபிணமாய் வெளியே வந்தாள். கௌண்ட்டரில் ஏகமாய்த் தவறுகள் செய்தாள் வேறு ஆளை உதவிக்கு வைத்து வேலை முடித்தாள்.

செக்யூரிட்டி ஆபீஸர் குணசேகரனுக்கு போன் செய்து சற்று தனியே பேச வேண்டும் என்றாள். நடந்த வற்றை உணவு இடைவேளையின்போது குணாவிடம் சொன்னாள். சத்தியின் கோபம் சொன்னாள்.

குணாவுக்குக் கோபம் வந்தது.

'ஒரு எமோஷனல் முட்டாளைத் தேடித் தேடி லவ் பண்ணீங்களே, உங்களைச் சொல்லணும், இவரு லவ் வுன்னு வேற சொல்றாரா இதை...உங்க கர்ப்பப்பை சரியில்லை, போன பிரசவத்துல டாமேஜ் ஆயிடுச்சுனு டாக்டர் இப்போ சொல்றாரு, என்ன செய்வாராம் சத்தியநாராயணன்? விட்டுட்டு வேற கட்டுவாரா? நான் பேசறேன், நீங்க போங்க அமைதியா.''

சத்தி ஏப்ராளுக்குப் போய் விமானியுடன் பேசி விட்டுத் திரும்பும்போது சுபேதார் சின்னசாமி பல் குத்துவதை நிறுத்திவிட்டு வணக்கம் சொன்னார்.

''இப்பதான் கேள்விப்பட்டேன் தம்பி வாழ்த்துக்கள். நான் ஜார்ஜீனாவுக்கு ரொம்ப வேண்டப்பட்டவன் என்

பொண்ணோட எங்க வீட்டுல வளர்ந்தது அது. ரொம்ப விவரமான பொண்ணு அது. நல்ல மனசு உள்ளவங்களுக்கு மதம் விஷயமே இல்லை உங்க வீட்டுல சரின்னுட்டாங்களா?''

சத்தி உள்ளே புகைந்து புகைந்து திமிறிக் கொண்டிருந்த விஷயத்தை அவரிடம் இறந்து காட்டினான்.

''அட, கண்றாவியே அப்புறம் கல்யாணம் என்னத்துக்கு...சும்மா ரெண்டு வருஷம் சேர்ந்து இருந்துட்டு பிரிஞ்சுடலாமே. உன்னை மத்தவங்க சொல்றது இருக்கட்டும். அது நிலைமை என்ன...உடம்பு சுகத்துக்குச் சேர்த்தோம்னு அதுக்கே மட்டமா தோணிடாதா? பிறகு மிச்ச நாள் எப்படிப் போவும். ஒரு திருமணம் முழுசாவறது எப்போனு தெரியாதயே போயிட்டிருக்கும் ஜார்ஜினாவுக்கு குழப்பிட்டிருப்பாங்க. நான் பேசறேன்.

ஆறு வயசுப் புள்ளை என்ன மதம் புரிஞ்சுக்கும்? அறுபது வயசு ஆள்கூட தடுமாறுற இடம் அது. நீ கிறிஸ்தவனா மாறிட்டா புள்ளை இரண்டுங்குலம் உசரமா வளர்ந்துடுமா? அப்போ கிறிஸ்தவங்களுக்குப் பிறந்த புள்ளையெல்லாம் உத்தமன்னு சொல்வாங்களா...என் தம்பி புள்ளைய 'மிலிட்டரில சேர்றியாடா?'ன்னேன். என்கிட்ட வளர்ந்த பய.'எனக்கு என்ன பைத்தியமா மிலிட்டரில சேர்றதுக்கு'ன்றான். சினிமா ட்ரூப்ல சேர்ந்து புல்லாங்குழல் வாசிக்கிறான். ஐயர் பொண்ணுங்க பாடுமே. அந்தத் தெலுங்குப் பாட்டெல்லாம் வாசிக்கிறான். யார் கதறுக் கொடுத்தது, எப்படி வந்தது அவன் வயசுல நான் கூத்தாடிக்கு பத்தை வெட்ட மூங்கில் தேடுவனே தவிர அதுல, காத்து வரும். சங்கீதம் வரும்னு நினைத்ததுகூட இல்லை. நான் பேசறேன் ஜார்ஜினாகிட்ட.''

ட்யூட்டி முடிந்த பிற்பகலில் குணசேகரன் சத்தியை மடக்கி ஏப்ராளுக்குக் கூட்டிப் போனார். விமான தளத்தில் காற்று வீசி வீசி அடித்தது.

''அப்போ நீங்க லவ் பண்ணது விஸ்செண்ட் மனைவி ஜார்ஜினாவை இல்லை, வெறும் ஜார்ஜினாவை. விடோ ஜார்ஜினா இல்லை. கொஞ்சம் கன்னி கழிஞ்சு கலைஞ்ச ஜார்ஜினாவை. பையனை வெச்சு அம்மாவை மடக்கிட்டீங்க அதாவது. அயிரை இட்டு வரால் வாங்குபவர் முறைக்காதீங்க சார். நீ யாருடான்னு கேட்கறீங்களா? நான் உடம்புறந்தான். சொந்த அண்ணன். ரத்த பாசம்னு வெச்சுக்குவோம்.

நான் சொல்றேன்...'வெளியே போ'ன்னு ஆஸ்பத்திரில நீங்க கத்தினது நாடகம். பொய் 'நான்தான் விஸ்சென்டைக் கொன்னேன்'னது ஒரு அட்ராக்ஷனுக்கு. அந்த அம்மா வந்து பேசாதானு பார்க்கறதுக்கு. பொம்பளை நிமிர்ந்து நடக்கறதைப் பார்த்ததும் உங்களுக்குக் கிறங்கிப் போச்சு தம்பி இப்போ எதுனா சொல்லி நகர்ந்துடலாமானு பார்க்கறீங்க''

சத்தி அலரைத் தாண்டி நகர்ந்து போனான்.

''சத்தியநாராயணன்''— குணசேகரன் தோள் பிடித்து நிறுத்தினார்.

''பொம்பளை பாவம் பொல்லாது சத்தி. உண்மையிலேயே அந்தப் பொண்ணை நீங்க லவ் பண்ணியிருந்தா. இந்த ஆபரேஷன் விஷயத்தை வேற விதமா சிந்திச்சிருப்பீங்க. குழந்தை முக்கியம்னு அவங்களுக்குத் தெரியாதா? உங்களைச் சோதிக்க அவங்க டிரை பண்றாங்களா? ஒரு சூழ்நிலை அழுத்தம் சார் இது. இது முக்கியம்னு நினைக்கறவரு. அழகா சொந்த ஜாதியில கல்யாணம் செய்துக்கிட்டு எல்லாருக்கும் நிறைவா இருக்கலாமே.

இந்த கண்டிஷன் அவங்க மாமனார் போட்டலை... அவங்களே போட்டதா வெச்சுக்குவம். அப்போ உங்க நிலைமை என்ன...விட்ராயலா?

சார், இன்னொரு ஆங்கிள். அவங்களுக்குக் குழந்தையே பொறக்கலை. அப்போ தள்ளிவெச்சுருவீங்களா? அது

வந்தாலும் எனக்கு நீ முக்கியம் ஜார்ஜினா'ன்னு ஒரு வரி சொல்ல முடியலையே...இதுக்குப் பேர் லவ்வா?

ஊர் பலதும் பேசும் சத்தி சார். மாடும் கன்னுமா தள்ளிக்கிட்டு வந்துட்டான்னு உங்களை எரிக்கற வரைக்கும் பேசும். விடோ, வேற ஜாதி, ஒரு புள்ளை வேற... இத்தனை தாங்கறவரு இதுவ குறை கண்டுபிடிச்சுட்டீங்களா?

சரி, சத்தி அந்தம்மா இதுக்கு ஒப்புக்கலை. ஒரு புள்ளைதான் எனக்குன்னுட்டாங்க...இனி பிரிஞ்சு வேற எவளுக்காவது தாலி கட்டிட முடியுமா நீங்க. ஜார்ஜினாவை மனசுலேர்ந்து எடுத்துட முடியுமா. அது அழுதுக்கிட்டே இந்த ஏர்போர்ட் நடந்துபோவும். தாங்கிப்பீங்களா?

கன்னிப் பொண்ணு காதலிச்சு பிறகு எவனையோ கட்டினா கூட ஊர் மறந்துரும் சத்தி. ஒரு விடோ லவ் பண்ணி அது ஃபெயிலியர் ஆச்சுன்னா அவளை ஒருத்தனுக்கு நாலு பேர் மடக்குவான். நான் வரட்டுமான்னுவான். என்னை வெச்சுக்கிடுன்னுவான். ஜார்ஜினா தாங்குமா? செத்துரும் சத்தி. இதே ஏர்போர்ட்ல தீ பேஸ்ல கை லெச்சுக் கருகிடும்.

ஒருவேளை நீங்க மறுபடி தூக்க மாத்திரை சாப்பிடும்படி வரும். எதிர்த்து நீச்சல் போடணும்னு ஆத்துல இறங்கிட்டு, 'காத்து வாட்டமா இல்லேன்'னு கரையேறுவியா? ஏறினா அது பொய். நீ காட்டிலது பொய் வீரம்.

இந்தஜார்ஜினாவோட உன்னால வாழமுடியலைன்னா உலகத்துல எவளோடயும் நீ நல்லா வாழமுடியாது நான் எழுதித் தரேன், வேற ஒருத்தன் மோதிரம்தான் உன் கால் கீழே கிடக்கு. அப்புறம் உன் இஷ்டம்.

நல்ல பொம்பளைய அழ வெச்சுட்டு எவனும் சந்தோஷமா இருந்துடமுடியாது இது சத்தியம். பிறகு உன் தலைவிதி...போ.''

கழற்காற்று மண்தூள் எழுப்பி ஏர்போர்ட் கண்ணாடிகளைத் தாக்கிற்று. சத்தி தலைகுனிந்து உள்ளே போனான். குணா வெகுநேரம் அந்த வெட்டவெளியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

பரங்கிமலை படிகளில் சுபேதார் சின்னசாமியும் ஜார்ஜீனாவும் உட்கார்ந்திருந்தார்கள்.

''கொஞ்சம் மனசுவிட்டுப் பேசலாம்னுதான் இங்கே அழைச்சுக்கிட்டு வந்தேன். நான் பேசறது கொஞ்சம் நல்லா கேட்டுக்க. வெடுகுண்டு பிரிக்கறவன் யாரையும் வேதனை படுத்தறமாதிரி பேசமாட்டான். வேதனையா இருந்தாலும் பொறுத்துக்க.

லக்கீல் நோட்டீஸ். என்ன, எதுக்கு...யாரு விடறது? வின்சென்ட் அப்பாவா...ஒரு கேள்வி அங்கியே கேட்டுடக் கூடாதா? 'நான் பொம்பளை. வயசு இருபத்தேழு...நீ ஆம்சனை, வயது அறுபத்தெட்டு. உன்னை காட்பாதர்னு நம்பி எம் புள்ளைய எத்தினி நாள் வளர்க்க'ன்னு கேட்கறது தானே.

காட்ஃபாதர்னா, இவரு கடவுளுடைய ஏஜெண்டா? புள்ளைக்கும் கடவுளுக்கும் இடையே புரோக்கர் வேலையா? அது ஒரு மரியாதை. கத்துக் கொடுத்துக் கடவுள் தன்மை வரும்னா, உலகத்துல நிறைய ஆள் கடவுளாயிட்டிருப்பான். மூணு தலைமுறைக்கு முன்னாடி கிறிஸ்தவரானவங்க, நாலாம் தலைமுறையில இந்து ஆகக்கூடாதா? இடது போனா சரி, வலது போனா தப்பா?

என்ன மிரட்டல் இது. எந்தக் காலத்துல செல்லுபடியாகும். சரி, புள்ளைய வெச்சுக்கோ. அது அக்ரீமெண்ட் போட்டுக்கலாம். அது தன் பதினெட்டு வயசுல 'எனக்கு ஏசு வேணாம், எங்கம்மாதான் வேணும்'னு சொல்லிச் சுன்னா மொத்த விக்டர் தேவாரம் ஃபேமிலியும் இந்து வாயிடணும். சம்மதமா?

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். அம்மா தான் கடவுள். எல்லா மதத்துலேயும் எல்லா தேசத்திலேயும். ஏன்? எதனால? அவளுடைய கருப்பையை விட சந்தோஷமான இடம் எதுவுமே இல்லை இந்த உலகத்துல போடா ஜாட்டான்னு வருவியா...பயந்து சாலறியே. பிறத்தியாரையும் சாவடிக்கறியே. நீ அறுத்தலாலே இருந்தா அந்தக் கிழவனுக்குச் சந்தோஷம். மிரட்டறான். செத்துப் போன புள்ளை மேல அத்தினி பாசம் இருந்தா, அதுக்குப் பிறகு நீ கிறிஸ்மஸ் கொண்டாடியிருக்கக் கூடாது. ஹாப்பி நியூ இயர்னு சொல்லியிருக்கக் கூடாது.

மருமவ கொண்டாடினா எரியுதோ. ஹாப்பி நியூ இயர்னா பொசுக்குதோ. உனக்கு ஹாப்பி நியூ இயர் உன் கல்யாணம்தாம்மா. அதைத் தடுக்க இவன் யாரு. நாப்பது ரூவா லாயருக்குத் தொடுத்தா நோட்டீஸு... முண்டா தட்டிக் காமிச்சானாமே. கிறிஸ்தவனா அவன்? ஊர்ல அவனுக்குத் தான் முண்டா இருக்கா?

புள்ளையைக் கொடுத்த அப்பன்காரன் தன் குழந்தையை வாங்க முடியலை சட்டத்தாலே. அம்மாகிட்டேருந்து பிரிக்க முடியலை. ஆயிரம் கேஸு இருக்கு உதாரணத்துக்கு. யாரோ காட்ஃபாதர் பிரிச்சுடுவானா?

இது இருக்கட்டும். இதுக்குப் பயந்து ஆபரேஷன் பண்ணட்டானு கேட்டியாமே அப்போ எதுக்குமா உனக்குக் கல்யாணம்? எதுக்கு ஒரு ஆள் மட்டும் லவ் பண்ணிக்கிட்டு. நாலஞ்சு பேரை பண்றது. அழுவாத ஜார்ஜினா. அத்தினி அசிங்கம்நீ பேசினது. ஒரு செக்யூரிட்டிக்குன்னு செய்துக்கிறியா. சரி உனக்கு அவன் செக்யூரிட்டி. அவனுக்கு செக்யூரிட்டி என்னா...? அறுபது வயசுல அவனுக்கு செக்யூரிட்டி? புள்ளை வளர்ந்து சோறு போடறதை மட்டும் சொல்லலை ஜார்ஜீனா. நாளைக்கு உனக்கும் அவனுக்கும் பிணக்கு வந்தா அதைப் பசங்க சிரிப்பு தீர்க்கும். பெத்ததுகஷ்டப்படுமேனுபுரியாத

இருக்கத் தோணும் ஊர்ல நூத்துக்குத் தொண்ணூறு குடித்தனம் குழந்தைங்களால ஒத்துமையா இருக்கு

உண்மையிலேயே செல்வாவுக்கு உதவி செய்யறதா இருந்தா நீ இன்னும் ரெண்டு பெத்துக்கணும். அஞ்சு வயசுக்கு அது ஏன் வாயாடலை? பழகலை? தனித்துசு போச்சு தம்பி தங்கைன்னு வரட்டும். உங்க எல்லா ரையும் விட உயர்ந்த இடத்துக்கு அவன் போலான். தனக்குப் பிறக்கற குழந்தைக்கு மொட்டை அடிச்சுப் பூணூல் போடணும்னு ஐடியா இருக்கறவன் உன்னை ஏன் தொடறான்? தீபாவளியும் கொண்டாடுங்க, கிறிஸ்மஸுக்கும் மரம் கட்டுங்க...யார் தடுக்கறது. விருதுநகர்ல காலையில மாரியம்மன் கோயில்ல பொங்கல் வெச்சுட்டு சாயந்திரம் சர்ச்சுல கல்யாணம் கட்டறவன் இல்லையா? அம்மா வழில உறவு இந்து...அப்பா வழில உறவு கிறிஸ்தவர்னு இல்லையா? இதுதாண்டி தர்காவில சந்தனக்குடம்னா அஞ்சு ரூபா காணிக்கை போடறதில் லையா நான் இந்துதான் இந்த மலையைப்பார்க்கறப்போ எல்லாம் கடவுளைப் பார்க்கிற மாதிரி இருக்கும் எனக்கு.

கல்யாணம்ங்கிற விஷயத்தை அசிங்கப்படுத்திடாதே ஜார்ஜினா விதவா விவாகம் பிடிக்காதவந்த இதுக்கு வேற கலர் கொடுத்து உடைக்கப் பார்க்கறறங்க. மாட்டாதே. அந்தப் புள்ளை உன் புருஷன் சிநேகிதன். தன்னால உனக்குக் கஷ்டமோன்னு யோசிச்ச புள்ளை அது முழு மனசா அது உன்னை, உன் புள்ளையை ஏத்துக்கது அப்பனை விட்டுட்டு வந்திருக்குது. உங்க வீடும் அவரு வீடும் ஏத்துக்கிட்டதை, இல்லாத உறவு சொல்லி ஒருத்தர் உடைக்கமுடியாது. அந்தக் கிழவன் தானும் சந்தோஷப்படமாட்டாரு. பிறத்தியாரையும் சந்தோஷப்பட விடமாட்டாரு.

இது தட்டிப் போச்சு...தெருவுல உன்னைப் பேர் சொல்லிப் பலர் கூப்பிடுவாங்க. கேவலமா பேசுவாங்க. இது தோற்கக்கூடாது ஜார்ஜினா. இருப[illegible]ஷம்கழிச்சு

உன் புள்ளை கேட்பான். 'சின்ன வயசுல ரொம்ப அலைஞ்சியாமே எல்லு எல்லுன்னு. யார் அது?'ன்னு... செத்துடுவே ஜார்ஜினா. நெஜமாவே அநாதை ஆயிடுவே சுவத்துல ஏறிட்டே ...அன்னாண்ட குதி. மறுபடி இந்தப் பக்கம் குதிக்கலா இத்தினி சிராய்ப்போட ஏறினே?

நீ கேட்ட கேள்வி...ஆபரேஷன் விஷயம் ரொம்ப தப்பு. அசிங்கம். போய் அலன்கிட்ட மன்னிப்பு கேளு. கல்யாணம் கட்டு. நோட்டீஸுக்கு நோட்டீஸ் விடு. முண்டா தட்டினா என்கிட்ட சொல். நான் தட்டமாட் டேன். லெட்டிருவேன். நீ என் பொண்ணு மாதிரி. உங் கப்பா எனக்கு உடன்பிறப்பு. போ தைரியமா. எங்கய் யன் தோமா துணையிருப்பார்."

"சுபேர் சின்னசாமியா இப்படிப் பேசினார்? சத்தி எப்படி அவரைப் பிடிச்சான்?"—குணசேகரன் அதிசயப் பட்டார் யோசித்தார். "சத்தி வேற என் பேச்சைக் கேட்டா மாதிரியே தெரியலையே..." யோசித்தார்.

"ஒண்ணு செய்வோம் ஜார்ஜினா. இந்தக் கல்யாணம் கோர்ட் கேஸுன்னு அலையக்கூடாது. ஸ்டே ஆர்டர் அது இதுன்னு வரக்கூடாது. இதுதான் நம்ம முதல் கவலை இல்லையா?

நான் ஒரு ஏமாத்து வேலை செய்யப் போறேன். மூப் பது ரூபால ஒரு லெட்டர் ஹெட் பிரிண்ட் பண்ணப் போறேன். நர்ஸிங்ஹோம் பேர் போட்டு டாக்டர் பேர் போட்டு. அதுல சர்டிபிகேட் டைப் பண்ணப்போறேன். உங்களுக்கு ஆபரேஷன் ஆயிடுச்சுன்னு சொல்லப் போறேன்.

என் சிநேகிதனை கன்ஸல்ட் பண்ணி பதில் நோட் டீஸ் தரப்போறேன். அதுவும் ஊர்ல இல்லாத வக்கில் பெயர்ல இருக்கும். போஸ்ட் பண்ணுவோம். இல்ல நேரே கொண்டு போய்க் கொடுப்போம்...ஒரு வாரம் லீவு போடுங்க."

"ஐயோ...சத்தி..."—ஜார்ஜினா பதறினாள்.

"சத்திக்கு இதுசோதனை. ஜெயிக்கிறாரா பார்க்கலாம். இதுல ஜெயிக்காத சத்தி உங்களுக்குக் கஷ்டம் தான் தருவாரு."

"சத்தி கல்யாணம் மாட்டேன்னுட்டா?"

"உங்க அப்பா அம்மாலோட வேற ஏர்போர்ட்டுக்கு மாத்திக்கிட்டுப்போங்க. பெங்களூரோ திருவனந்தபுரமோ போய்நிம்மதியா சகலத்துக்கும் தலைமுழுகிட்டு பைபிளும் பாட்டுமா இருங்க. அந்த ஆள் மாட்டேன்னு மட்டும் சொல்லட்டும். நானே வாய்ல மாத்திரையைத் திணிச்சு சாவடிச்சுடறேன். அவங்க வீட்டுல போய் ரகளை பண்றேன். அவங்க வீட்டு மூணு மாப்பிள்ளை கிட்டயும் நியாயம் கேட்கறேன். மாட்டேன்னுட்டா நிம்மதி போச்சு அவனுக்கு."

"ரொம்ப மோசமான ஒரு ஸ்டண்ட் இது."

"வேற வழியில்லை."

"சத்திகிட்ட சொல்லணும் குணசேகரன்..."

"போங்கம்மா, போய்ச் சொல்லுங்க. முடியாதுன்னுவான். வந்து என் ரூம்ல நிம்மதியா அழுங்க. நானே டிரான்ஸ்ஃபருக்கு விண்ணப்பம் டைப் பண்ணித் தரேன். கையெழுத்துப் போடுங்க."

"குணசேகரன்."

"ஆச்ட். எதாவது ஒரு வழிலபோங்க. ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம்னுலாங்க. இந்தக் கல்யாணத்துக்கு ரெண்டாயிரம் பொய் சொல்லலாம்."

"நான் சொல்ல மாட்டேன்."

"உங்க இஷ்டம். நான் ஏமாத்தற உதவிக்கும் ரெடி. டிரான்ஸ்பர் உதவிக்கும் ரெடி. முடிவு நீங்க செய்யணும்."

ஜார்ஜினா எழுந்து ஏர்போட்டுக்குள் போனாள். சத்தியைத் தேடினாள்.

சத்தி, நான்கு நாட்கள் லீவு கேட்டு எழுதி வைத்து விட்டுப் போய்விட்டதாகச் சொன்னார்கள்.

விடுமுறை கேட்ட விண்ணப்பத்தில் உடல்நிலை சரியில்லை என்று எழுதியிருந்தது.

மறுபடி குணசேகரன் அறைக்கு வந்தாள். அழுதாள். குணசேகரன் தன் வக்கில் நண்பருக்கு மொத்த கதையும் போனில் சொன்னார். கார் சாவி தேடினார். "வாங்க, வீட்டுல ட்ராப் பண்ணிட்டுப் போறேன்."

"என்ன செய்யப் போறீங்க குணா?"

"நாளை காலையில சொல்றேன்."

41

"வணக்கம்யா" — குணசேகரன் கைகூப்பியவாறு விக்டர்தேவாரத்தின் வீட்டுபடிகளில் ஏறினார்.

"எம்பேரு குணசேகரன்ங்க. செக்யூரிட்டி ஆபீஸர், ஏர்போர்ட், மெட்ராஸ். அசிஸ்டெண்ட் கமிஷனர் ராங்க்குங்க..."

"வாங்க"-விக்டர் தேவாரம் எழுந்து கைகூப்பினார் இருக்கை கொடுத்து உட்காரச் சொன்னார்

"நான் ஜார்ஜினா விஷயமா பேச வந்திருக்கேங்க இதுல நீங்க யாருன்னு கேள்வி வரலாம். கூடப் பிறந்தவன்னு லெச்சுக்குங்க. அவ்வளவு பாசம் ஜார்ஜினா மேல. இந்த விஷயம் மொத்தமும் என்கிட்ட சொல்லிச்சு. உங்க பயம் நியாயம், உங்க வாதத்துல அர்த்தம் இருக்கு

ரெண்டாவது ஒரு குழந்தை பிறக்கறபோது அது இந்துவா, கிறிஸ்தவனான்னு கேள்வி வரும். பதில்

சொல்லியே ஆகணும். முதல் பிள்ளை ஒரு மதம். ரெண்டாவது ஒரு மதம்னா அது குழப்பம் தரும். பிள்ளை களுக்கு பெற்றோருக்கு வேதனை வரும்

அது புரிஞ்சுதுங்க ஜார்ஜினாவுக்கு. தடுக்குன்னு தண்ணில தன்றாப்ல கிறிஸ்டியனாயிடறியானு பேச்சு வந்ததும் சத்தி மிரண்டுட்டாரு. அதுவும் நல்ல புள்ளை தாங்க. அவருக்கும் உங்க நிலை புரிஞ்சுது.

இது பத்தி தெளிவா யோசனை பண்ணி ஒரு காரியம் ஜார்ஜினா செஞ்சுது.''

'என்ன?''

''ஆபரேஷன் செஞ்சுக்கிச்சு. கருத்தடை ஆபரேஷன். ஒருவாரம் லீவு போட்டு நேத்திக்கு ஆஸ்பத்திரில சேர்ந்து புள்ளை வேண்டாம்னு முடிச்சிடுச்சுங்க. இது நர்சிங் ஹோம் சர்டிபிகேட்...''—நீட்டினார்.

பெரியவர் படித்துப் பார்த்தார்.
''நெஜமாவா'' என்று வியந்தார்.

'இப்பதாங்க ஆஸ்பத்திரிலேருந்து கூட்டிக்கிட்டு வரேன். வாசல்ல கார் இருக்கு. கூப்பிடட்டுமா?''

''வேணாம். சத்தி இதுக்கு...''

''முழு மனசா ஒப்புக்கிட்டாருங்க. 'எனக்கு வில்சென்ட் பையன் போறும்' னுட்டாரு.''
பெரியவர் கலவையானார்.

''இந்த சர்டிபிகேட்டோட உங்க வக்கீல்நோட்டீஸுக்கு லாயர் வெச்சுப் பதிலும் கொண்ணாந்திருக்கேன். சட்டத் தல தாய்க்குத்தாங்க முதல் உரிமை. இருந்தாலும் உங்க பாயிண்ட்டைத் தார்மீகமா ஏத்துக்கிட்டு இவங்க ரெண்டு பேரும் மேற்கொண்டு குழந்தை வேணாம்னது ஒரு பெரிய தியாகம். பையன்மேல அவங்க காட்டற அக்[illegible]க்கு ஒரு

விளக்கம். இந்த மாதிரி பெற்றோரால செல்வாவுக்கு எந்தக் கெடுதலும், எந்த வளர்ச்சி பாதிப்பும் இருக்காதுனு விளக்கம் சொல்லியிருக்காரு. மத்தபடி கோர்ட்டுல கேஸ் போட்டீங்கன்னா சந்திக்கத் தயார்னு...''

''நான் அக்கறைப்பட்டு மறிச்சேன். ஆத்திரப்பட்டு மறிக்கலை. கோர்ட்டுக்குப் போயே தீருவேன்னு பிடிவாதம் பிடிக்கலை.''

''இனி போனாலும் நிக்காது. இதைவிடப் பெரிய தியாகம் நீங்க என்ன செய்ய முடியும்னு கேட்பாங்க.''

''இது பெரிசுதான் தம்பி. நான் ஒப்புக்கறேன். அவரு இந்துங்கறது...''

''அதைச் சொல்லி மறிக்க முடியுமா...முடியாதே தவிர. உடனே மாறணும்னா மாறிட முடியுமா? நாலு வருஷம் கழிச்சு ஜார்ஜினா ப்ரேயர்ல மயங்கியே அவரு மாறிடலாம். செல்வாவுடைய எதிர்காலம் இப்ப ஜாக்கிரதையாயிடுச்சு இல்லையா...''

பெரியவர் தலைகுனிந்தார்

''லக்கீல், 'நேரே பார்த்துச் சொலவிக் கொடுங்க. எதுக்கு கோர்ட் கேஸுன்னு போவணும். அப்படி முடியாதுன்னா கேஸ் ப்பாடட்டும். ஒரே வாய்தால நம்ம பக்கம்'னு சொல்லி...''

''தம்பி...''—பெரியவர் கை கூப்பினார். ''நான் வம்பு பண்றவன் இல்லை. ரௌடித்தனம் பண்ணலை. என் பேரன் மேல எனக்கு இருக்கிற அக்கறைல சொன்னேன். அவங்களுக்கு அக்கறை இருக்கும்னு தெரிஞ்சுது... எனக்கும் சந்தோஷம்தான்.''

''விட்டுருங்களேன். என்ன பாவம் பண்ணமோ...ஒரு புள்ளை சிதறி செத்துப் போச்சு...இனியும் எதுக்கு மத்த

வங்க சுகத்தைக் கெடுக்கணும். எப்படியும் போலட்டும், நமக்கென்ன...—உள்ளேயிருந்து பெண் குரல் பொரிந்து தள்ளியது

"சரிங்க தம்பி...எனக்கு ஆட்சேபணை இல்லை."

"அப்ப லக்கேஜ் நோட்டீஸு?"

"லாபஸ வாங்கிக்கிறேன்."

"ஒரு வரி உங்க லெட்டர்ல எழுதிக் கொடுத்திட்டீங்கன்னா..."

மடமடவென்று பெரியவர் இரண்டு வரியில் எழுதி நீட்டினார்.

"நீங்க நல்லா இருக்கணும். நெடுநாள் திடமா... உங்களுக்கு அறுபத்தெட்டு லயசாமே...இதுவும் ஒரு எதிர் பாயிண்ட்டாம் உங்களுக்கு"

"நான் மறுக்கலை"—பெரியவர் கத்தினார்.

"அப்ப கல்யாணத்துக்கு ஏற்பாடு..."

"கடவுள் சித்தப்படி..."

"வரேங்க. நீங்க வருவீங்களானு தெரிஞ்சுக்கிட்டா"

"இல்லை தம்பி. மனசு ஒப்பாது."

"புரியுதுங்க. நான் வரேன்"—கைகூப்பினார். அவர் கடிதம், லக்கேஜ் நோட்டீஸ், பெரியவர் எதிரே வைத்திருந்த நர்ஸிங்ஹோம் சர்டிபிகேட் எல்லாம் எடுத்துக் கொண்டு வெளியே வந்தார்.

கார் ஏறினார். சாவி போட்டுத் திருகினார். ஜார்ஜினா கலவையுடன் நகம் கடித்தாள்.

"என்ன குணசேகரன்?"

"தெரு திரும்பட்டும், சொல்றேன்."

தெரு திரும்ப...கார் விரைவாகி ஏர்போர்ட் நோக்கி ஓடியது.

"என்ன ஆச்சு குணசேகரன்?"

"லக்கேஜ் நோட்டீஸ் வாபஸ் வாங்கறதா எழுதிக் கொடுத்திருக்காரு"?

"அப்ப கல்யாணத்துக்கு?"

"நோ அப்ஜெக்ஷன்"

"எப்படிங்க?"

"ஒரு பொய். ஒரு அழகான பொய். மூப்பது ரூபா செலவுல சொன்ன பொய். அவங்க வீட்டுலயே அவரை எதிர்த்து அடக்கி சும்மா இருக்கச் சொல்லிட்டாங்க."

கார் திரும்பி ஏர்போட்டுக்குப் போய் நின்றது.

குணசேகரன் காகிதம் நீட்டினார்.

"குணா..." படித்துவிட்டு ஜார்ஜினா வியந்தாள். முகம் மலர்ந்தது

"கங்கிராஜுலேஷன்ஸ் ஜார்ஜினா"

"எப்படி...எப்படி நன்றி சொல்றது குணா"

"புள்ளை பொறந்தா குணசேகரன்னு பேர் வைக்கணும் பொண்ணு பொறந்தா குணவதினு பேர் வைக்கணும் இந்த அண்ணனை மறக்காம இருக்கணும்"

"எப்படி மறப்பேன் குணா"—அவர் கை பிடித்து கண்களில் ஒற்றிக் கொண்டாள். கண்கள் கலங்கி நீர்வழிந்தது.

"சே...என்ன இது. நான் நாலு பொண்ணுங்களுக்கு நடுவே வளர்ந்தவன்மா. எனக்குத் தெரியும்—கல்யாணம் இந்தத் தேசத்துல எத்தனை கஷ்டம்னு போ...சீக்கிரம் கல்யாணம் நடத்து. நல்லபடி குடித்தனம் பண்ணு"

ஜார்ஜினா வண்டி விட்டு இறங்கினாள்.

"சத்திலிட்ட இப்ப சொல்லாதே ஜார்ஜினா ... அலன் சொதப்பிடப் போறான். 'ஆபரேஷன் பண்ணிக்கிட்டேன்'னு சொல்லு. என்ன சொல்றான்னு பார்ப்போம்"

'ஜாயின் பண்ணிட்டாரா?"

"இன்னிக்கு நைட் டியூட்டி வந்துட்டான்"

"லரேன் குணா"—ஜார்ஜினா ஓடினாள். ஏர்போர்ட்டில் சத்தியைத் தேடினாள். கார்கோ லோடு பேசி முடித்து விட்டு வந்த சத்தி, 'வா' என்றான்.

"உடம்புக்கு என்ன சத்தி?"

"ஒண்ணுமில்லே..."

"ஏன் லீவு?"

"லக்கேஜ் நோட்டீஸுக்கு பதில் சொல்லவேண்டாமா? அந்தப் பிரச்னையை முடிச்சேன்."

"தேவையே இல்லை சத்தி"

"ஏன்?"

"அவரு லக்கேஜ் நோட்டீஸை லாபஸ் வாங்கிட்டாரு"

"எப்படி?"

"நான் கருத்தடை ஆபரேஷன் செய்துக்கிட்டேன் சர்டிபிகேட் காட்டினேன்" அலனிடம் நீட்டினாள். வாங்கிப் படித்தான்.

"வேற வழி தெரியலை சத்தி"

சத்தி கண்களை மூடிக் கொண்டான்.

"கோவமா சத்தி?"

"இல்லை ஜார்ஜினா"

"ஏன் கண்களை மூடிக்கிட்டீங்க?"

"நம்ம ரெண்டு பேருக்கும் பிரச்னை முடிக்கிறதுல திருக்கிற அக்கறை வேகம் ஒண்ணா இருக்கு. அந்த சந்தோஷம்"

"இது சந்தோஷம்தானா?"

"ஆமா ஜார்ஜினா. நம்மை விட நம்ம செல்வா நமக்கு முக்கியம்."

"இதில் கோவம் இல்லையே?"

"இல்லை ஜார்ஜினா."

"திட்டினீங்க..."

"ஐ'யம் ஸாரி. குணசேகரன் பேசினதுக்குப் பிறகு புரிஞ்சுது. என் தப்பு தெரிஞ்சுது. செல்வாவுக்கு மட்டும் நான் அப்பாவா இருக்கறதுதான் நல்லது. நம்ம எல்லாருக்கும் நல்லது."

"கடவுளே...எப்படிச் சட்டுன்னு திரும்பிட்டீங்க"

"ஐ லவ் யூ ஜார்ஜினா. ஐ லவ் யூ ஸோ மச். உனக்காக நான் எது வேணா..."

"போதும...போதும்...இது ஏர்போர்ட் சத்தி. அப்பா கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யலாம்."

"உடனே..."

"நல்ல நாள் பார்க்கறீங்களா?"

"எல்லா நாளும் கடவுளுக்கு உகந்த நாளே..."

"ஹய். என்னை மாதிரி பேசறீங்க..."

"மாத்திட்டியே..."

"வர வாரத்தில ஏற்பாடு பண்ணிடலாமா?"

"செய்..."

இந்தியன் ஏர்லைன்ஸ் குவார்ட்டர்ஸின் கம்யூனிடி ஹாலை இளையராஜாவின் இசை மெழுகிக் கொண்டிருந்தது. ஜார்ஜினா சிவப்புப் பட்டுப் புடவையில் நின்றிருந்தாள். சத்தி ஆழ்ந்த நீல சூட் அணிந்திருந்தான். அலன் காலைக் கட்டிக் கொண்டு பூ மாதிரி செல்வா நின்று கொண்டிருந்தான். தட்டு இசை நிற்க, யாரோ ஒரு பெண்

குழந்தை கஜானனம் பாடிற்று. ஜார்ஜினாவின் அப்பா மோதிரம் நீட்ட, சத்தி அதை ஜார்ஜினாவின் கையில் அணிவித்தான். மாலை மாற்றிக்கொண்டார்கள். ரெஜிஸ்திரார் புத்தகம் நீட்ட, இருவரும் கையெழுத்திட்டார்கள். குணசேகரனும், சுபேதார் சின்னசாமியும் சாட்சியிட்டார்கள். கூட்டம் கை தட்டிற்று. இந்தியன் ஏர்லைன்ஸ் மொத்தமும் கைகுலுக்கிற்று. பரிசுகள் வழங்கப்பட்டன. தட்டு இசை மறுபடி துவங்கிற்று.

எல்லோருடைய கைகளிலும் மைசூர்பாகு பொட்டலமும், மிக்ஸர் பாக்கெட்டும் தரப்பட்டன. இந்தியன் ஏர்லைன்ஸ் செக்யூரிட்டி ராமசுவாமி காபி ஜக் எடுத்து சகலருக்கும் ஊற்றினார்.

சுபேதார் சின்னசாமி ஸ்வீட் பாக்கெட்டில் உள்ள ஸ்டாப்ளர் பின்னை மெள்ள விரல்களால் நீக்கி நிமிர்த்தி உருவி எடுக்க, அதையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார் ராமசுவாமி.

"ஏம்ப்பா குணசேகரன், இந்தாளைப் பாரு...ஸ்வீட் பாக்கெட்டைக்கூட ஏதோ வெடிகுண்டு பிரிக்கிற மாதிரி நிதானமா எடுக்கறாரு யோவ், மிக்ஸர்ல இருக்கிற பின் எடுக்கலையா?"

"எடுக்கணும்"—அதையும் சின்னசாமி நிதானமாய்ப் பிரித்து வெளியே எடுக்க கூட்டம் வாய்விட்டுச் சிரித்தது. கை தட்டிற்று. சுபேதார் உற்சாகமாய் எழுந்துபேசினார்.

"தோழர்களே, ஸ்வீட் பாக்கெட்மட்டுமில்லை.மோழ்க் கைப் பிரச்னையைக்கூட நிதானமா வெடிகுண்டு பிரிக்கற மாதிரி பிரிச்சுப் பார்க்கறது நல்லது மனசு வெடிக்காத இருக்கும். நம்ம சத்தி தம்பி, ஏழுலருஷம் முன்னே மடியில விழுந்த குண்டை நெஞ்சுக்குள்ளேயே வெச்ச ஜார்ஜினா துணையோட நிதானமா பிரிச்சுப் பார்த்து சுத்தியிருக்கற எல்லாருக்கும் நிம்மதி கொடுத்துடலையா. அதுவும் நிம்மதி

யாயிடலியா? ஏர்போர்ட்டுல வேலை செய்யறவங்க பதட்டம் படக்கூடாது. பூமியில் சக்கரம் கட்டி ஓடினா உருண்டு தப்பிச்சுடலாம். நாம உசரப் போறவங்க. உசரப் போகப் போக நிதானம் வேணும் எல்லாரும் நிதானமா ரெண்டு பொட்டலத்து ஸ்டாப்ளர் பின்னும் எடுங்க பார்க்கலாம். பதட்டப்படாம பிரிங்க பார்க்கலாம்."

கூட்டம் வாய்விட்டு மறுபடி சிரித்தது அவருக்குக் கட்டுப்பட்டது.

"ஸ்டாப்ளர் பின்னை என் கையில போட்டுருங்க. யார் கால்லேயாவது குத்திடப்போவுது..." அவர் உள்ளங் கைகளில் நிறைய ஸ்டாப்ளர் பின் விழுந்தது.

"ரோபோ வருது. ரோபோ வருது"—யாரோ கூவினார்கள். சக்கரம் போட்ட மேஜையில் ரோபோ மாதிரி தேக்செய்து கூட்டம் பிளந்து கொண்டு வந்தார்கள்.

குணாவின் பரிசாம் அது. அதுதான் இவர்கள் காதலுக்குக் காரணம். கொக்கியும். லேசர் விளக்கும், வீடியோ கண்ணும் உள்ள ரோபோ தேக் வெள்ளை லெவலோர் என்று இருந்தது. இரண்டு பக்க இறும்புப் பட்டைகளிலும் 'சத்தி—ஜார்ஜினா... சத்தி— ஜார்ஜினா, என்று எழுதப்பட்டிருந்தது.

புருஷனும் மனைவியும் தேக் வெட்டி முதல் வில்லை செல்வாவுக்குக் கொடுத்தார்கள். மொத்தமும் துண்டு போடப்பட்டு கூட்டத்துக்குத் தரப்பட்டது.

ஷோபனா கம்யூனிடி ஹால் வாசலில் வந்து எதுவும் தெரியாததுபோல் "என்ன விசேஷம் மாமி?" என்று ஒரு பெண்மணியிடம் கேட்டாள்.

"சத்தி—ஜார்ஜினா கல்யாணமாம். ஒரே அமர்க்களப் படறது. அடுத்தது, உன் கல்யாணம்தான் இங்கே..."

"இங்கேயா...நெவர்..."

''ஏண்டி, ஸ்டீபன் மனோகரனை லவ் பண்றியாமே.. கேள்விப்பட்டேன்...''

''யார் சொன்னா? கும்மா பேசினா லல்லா...இந்த ஆம்பளைங்களோட பேசிப் பழகலே கூடாது. உடனே ஏதாவது பரப்பி விட்டுருவாங்க. நான் அப்பா சொல்ற பையனை சாஸ்திரோத்தமா கல்யாணம் பண்ணிப்பேன். நாப்பது சவரன் ரெடியா இருக்கு மாமி. எனக்கு இந்த மாதிரி மேரேஜெல்லாம் பிடிக்காது. அதான் கலந்தக் கலை...உங்க சன் எம்.ஏ பாஸ் பண்ணிட்டாரா?''

மாமியும் ஷோபனாவும் கம்யூனிடி ஹால் விட்டுப் பேசிக்கொண்டே போனார்கள்.

ஷோபனா ஏதோ ஒரு மூலையில் நின்று தன்னை வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பாள் என்கிற எண்ணத்தில், உள்ளே ஸ்டீபன் பைலா ஆடிக்கொண்டிருந்தான். குணா தாளம் போட்டார். ராமசுவாமி விசிலடித்தார். யாரோ பூக்களை வாரி உயரே எடுத்து வீசினார்கள். பல்லிடுக்கில் சுருட்டிக்கொண்ட வேர்க்கடலையை சுபேதார் நெருப்புக்குச்சி சீவி நீக்கிக்கொண்டிருந்தார். சின்னராசு க்ரீம் அதிகமாய் உள்ள கேக் தரும்படி கேட்டுக்கொண்டிருந்தான். சத்திக்குப் பசித்தது. ஆனால், சாப்பிடத் தோன்றவில்லை. ஜார்ஜினாவுக்குத் தூக்கம் வந்தது. ஆனால் தூங்க முடியலை.

தம்பதி, குழந்தையுடன் இரண்டு மணி நேரத்தில் ஏர்போர்ட் வளாகம் வந்தார்கள். டில்லி விமான டிக்கெட்டுகள், பூங்கொத்துடன் அவர்களிடம் நீட்டப்பட்டன. பார்ட்டிக்கு வரமுடியாமல், டியூட்டியில் இருந்த நண்பர்களுடன் மறுபடி காப்பி சாப்பிட்டார்கள்.

பெட்டிகள் தனியே போக விமானம் ஏறினார்கள்.

விமானம் ஏப்ரான் விட்டு நகர்ந்து, டாக்ஸி வழியே ஓடுபாதை எல்லைக்குப்போயிற்று. டவரை உத்தரவு

கேட்டது. டவர் உத்தரவு வழங்கியதும் முழு வேகத்தில் ஓடி முக்கால் தூரம் ரன்வே கடந்து மெள்ள உயர்ந்தது. வானத்தில் குழந்தையாயிற்று. மூன்று நிமிடியில் சென்னை நகரம் முழுவதும் தெரிந்தது. முப்பது நிமிடியில் தெரு வாகனங்கள் புள்ளியாயின. இருட்டுக் கூட்டங்கள் தெரிந்தன. கூவத்தின் கிளைகள் தெரிந்தன. காதோரம் நரைத்த கடலரசன் முகத்தின் மீது விமானம் பறந்தது. பிறகு மேகத்துக்குள் விமானம் நுழைந்து விட்டது.

''என்னப்பா, சைலண்ட் ஆயிட்டீங்க?''

''பிரமிப்பா இருக்கு...''

''எது?''

''இந்த டேக் ஆஃப்... எத்தனை தடவை ப்ளேன்லே போனாலும், ஒவ்வொரு தடவையும் புதுசு புதுசா...''

''நம்ம லைஃப்கூட டேக் ஆஃப்... ஆயிடுச்சுல்ல...''

''யெஸ்''

''இதுவும் பிரமிப்புதான்...''

''யார் யாரோ ஹெல்ப்பண்ணியிருக்காங்க. உங்கப்பா என் வீடு, குணா, சுபேதார், சின்னராசு...ஏன், பாம்ப் ஸ்குவாட் காப்டன் ராஜுகூட நமக்கு ஹெல்ப் செஞ்சிருக்காங்க.''

''வாஸ்தவம் நீ ஏன் இவ்வளவு டயர்டா தெரியறே ஜார்ஜினா?''

''என்னவோ தூக்கம் வருதுப்பா...''

''தூங்கு—''

அம்மாவும் பிள்ளையும் பத்து நிமிஷத்தில் சாய்ந்து கொண்டு தூங்கினார்கள் சத்தி அலுமினியக் கூரையைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான்

டில்லி ஊதற்காற்றால் சூழப்பட்டிருந்தது. இழுத்துப் போர்த்திக் கொண்டாலும், புடவையைப் பிய்த்து இழுத்தது அந்தக் காற்று. ஜார்ஜினா உடம்பில் சூடு ஏற்படுத்தியது.

டில்லியிலும் இந்தியன் ஏர்லைன்ஸ் ஆட்கள் பூங் கொத்து கொடுத்தார்கள். ஏர்போர்ட் அருகே உள்ள ஓட்டலுக்கு வண்டியில் ஏற்றி அனுப்பினார்கள். ''ஒரு வாரம் விமானம் பறறி நினைக்காதே...'' என்றார்கள்.

அறைக்குள் நுழைந்து குளித்துவிட்டு, செல்லாவுக்கு உணவு வரவழைத்து சத்தி ஊட்டினான், குழந்தைக்குப் போர்வை போர்த்திக் தூங்க வைத்தான். அவனும் ஜார்ஜினாவோடு உணவு முடித்தான்.

பால்கனியிலிருந்து ஒடுபாதை தெரிந்தது. வாயுதூத்தல் குதித்து இறங்குவது தெரிந்தது. சோடியம் விளக்குகள் தரையில் மஞ்சள் உரசி கொண்டிருந்தன.

அருகே ஜார்ஜினா வந்து நிற்க, இடுப்பில் கைகோத்து அணைத்துக் கொண்டான். மெல்லிய புடவையின் மேலே உடம்பு வழவழத்தது. இளிப்பாய் ஆலில் ஆயில் வாசனை மூக்கை நிமிண்டிற்று. பலமாய் இன்ஜீன் சத்தம் கேட்க, இரண்டு பேரும் தலைதூக்கிப் பார்த்தார்கள். ஏர்பஸ் எதிர்க் கட்டடத்தின் விளிம்பில் திடீரென்று விளக்குகளுடன் தோன்றி சிலப்பு நீளம் உயர்ந்து வானம் ஏறியது.

குளிரும் சத்தமும் மேலும் நெருக்கிக் கொள்ள வைத்தன.

''உள்ளே வா ஜார்ஜினா''

''இப்பவேயா?''

''ஆமா.''

''இன்னிக்கு வேணாம்...''

''ஏன்?''

''நான் கான்ராசெப்டிவ் வாங்கலை.''

''அது எதுக்கு இனிமே?''

''வேணும் சத்தி.''

''ஏன் ஜார்ஜினா?''

''நான் ஆபரேஷன் பண்ணிக்கலை...''

'என்ன...?''

''அது வினு அப்பாவைச் சமாதானம் செய்ய குணா தயார் பண்ண பொய்...''

''அப்ப...''

''நான் செய்துக்கலை...''

''நான் சரின்னுட்டேனே ஜார்ஜினா.''

''சுபேதார் நிட்டினாரு. 'இத்தனை தியாகம் பண்ற பையனுக்கு இது கூடச் செய்யமாட்டியா...இதுக்குப் பேர் கல்யாணமா... கல்யாணம், உடம்பா, மனசா, வாழ்க்கையா'னு நிறைய கேட்டுத் திணற அடிச்சாரு. அப்புறம் குண்ணா தான், 'இதுக்கு நான் வழி சொல்றேன்?'னு லெட்டர் ஹெட் பிரிண்ட்பண்ணி மாமாகிட்ட காட்டி...''

''வின்சென்ட் அப்பாவா நமக்குப் பிரச்னை...? வின்சென்ட் அப்பா அனுப்பின லாயர் நோட்டீஸுக்கா பயந்தோம்...? இல்லையே ஜார்ஜினா...''

''வெறெதுக்கு அவரு தான் இடைஞ்சல் செய்யப் போறேன்னு...என் பிள்ளையை என்கிட்டேர்ந்து பிரிக்கப் போறேன்னு...''

''இல்லை ஜார்ஜினா... அல்வளவு அக்கறை செல்வா மேல... உங்க சந்தோஷத்துல அவனை மறந்துட போறீங்க'ன்னு கவலைப் பட்டாரு. எனக்கும் கவலை வந்தது. ஜார்ஜினா, நாளைக்கு எனக்குப் பையன் பிறந்து, அவன் கிறுகிறுப்பையைச் செல்வா பிடுங்கினா நான் அதட்டக்கூட முடியாது. அதட்டினா, தப்பா வரும். என் பிள்ளையைக் கொஞ்சினா செல்வாவைக் கொஞ்சலையே... அப்படின்னு உனக்குத் தோணினாலும் தோணும். அவருடைய சண்டை நியாயம்னு பட்டுது எனக்கு அது தவிர...''

''அது தவிர?''

''குணா கேட்டாரு—'என்னத்துக்கு உனக்கு லவ்வு... புள்ளை பெறலா, லம்ச விருத்தியா? அதுக்கு ஊர்ல எத்தனை பெண்கள் இருக்காங்க. இதுக்கு ஜார்ஜினாவை ஏன் சித்ரவதை பண்றே...உண்மையா லவ் பண்ணுமா'ன்னாரு. இவங்க ரெண்டு பேர் பேச்சு சரின்னு பட்டுது. அதனால...''

''அதனால...''

''நான் ஆபரேஷன் பண்ணிக்கிட்டேன்... லாபெக்டமி.''

''சத்தி...'' ஜார்ஜினா கூச்சத்துடன் வாய் பொத்திக் கொண்டாள்.

''ஒரு வாரம் லீவு...அரை நாள் ஆபரேஷன்... தழும்பு கூட மறைய ஆரம்பிச்சுடுச்சு—இந்த நாப்பது நாள்ல...''

''என்கிட்ட சொல்லாம ஏன் சத்தி...?''

''உன்னைக் 'கூடாது'ன்னு சொல்லிட்டு யோசிச்சுப் பார்த்தேன். எல்லாத்துக்கும் பொம்பளைதான் பலியா... நாமளே இதைச் செய்யக் கூடாதுன்னு தோணிச்சு. என் ஜார்ஜினாலைவிட்டு நான் போகக்கூடாதுன்னு தோணிச்சு. செய்துக்கிட்டேன். எனக்கு ஜார்ஜினான்னு மனைவி இருக்கா. செல்வான்னு ஒரு புள்ளை இருக்கான்.

போதுமே...நமக்குவேற என்ன தேவை...? ஜார்ஜினா, நாம மூணு பேர் போதாதா?''

''சத்தி...'' ஜார்ஜினா அவன் முகம் தாங்கினாள்.

''என்னடா?''—அவன் அவளை வாரிக் கொண்டான்.

''எதுக்குப்பா எவ்வளவு பெரிய தியாகம்...?''

''அட இது சுயநலம். யாராலயும் எதலாயும் உன்னை நான் இழந்துடக் கூடாதுன்ற சுயநலம் உன்னைவிட நான் லக்கி ஜார்ஜினா...''—மெள்ள அவள் கன்னத்தில் கன்னம் வைத்தான்.

''இதைவிட என்ன வேணும்? எனக்கு இனி நீங்க ரெண்டு பேரும்தான் உலகம். 'திருமணம் ஒரு விலங்கு'ன்னு வாங்க ஜார்ஜினா நான் எமோஷனல் ஆள். இன்னொரு விலங்கும் போட்டுக்கிட்டேன். சந்தோஷமா உங்களோட என்னைப் பிணைச்சுக்கிட்டேன்...''

''கல்யாணம் உடம்புக்குத்தான்னு ஆயிடுச்சே இப்போ...''—ஜார்ஜினா வேதனையுடன் பேசினாள்.

''இல்லைனு யாரையாவது சொல்லச் சொல்லு. உடம்பு லெச்சு உரிமை கொண்டாடாம 'என் பிள்ளை என் வாரிசு'னு சட்டமா சொல்ல டிரை பண்றாங்க. உரிமையோ உடம்போ நம்மைப் பிணைக்கலை. இது சிநேகம் ஜார்ஜினா. இது நட்பு. உனக்காக நான் என்ன வேணா செய்யறேன்ற வெளிப்பாடு இது. உன்கிட்டே இருந்து எதுவுமே எதிர்பார்க்கலை—அன்பு தவிர...''

''யப்பா...என் தேவனே...'' அவள் பொங்கி, அவனை ஆரத் தழுவிக் கொண்டாள். முகம் முழுவதும் முத்தமிட்டாள்.

''ஆனா ஒரு விஷயம் சத்தி...''

''என்ன ஜார்ஜீனா?''

''குத்தம் சொல்றதா நினைக்க வேண்டாம்...''

''சொல்லேன் ஜார்ஜீனா...தலறுனு தெரிஞ்சா கூட்டிக் காட்டேன்...''

''ஒரு தப்பு செய்துட்டீங்க...''

''என்ன?''

''ஆபரேஷன் செய்துக்கிட்டமானு உங்ககிட்ட நான் கன்ஸல்ட் பண்ணினேன். கூடாதுன்னவுடனே அதை அலட்சியம் பண்ணாம லேறெங்கியோ பொய் சொன் னேன்...''

''சரி...''

''என்கிட்ட சொல்லாமலே இவ்வளவு பெரிய காரியம் செய்துட்டீங்களே சத்தி. இது சரியா? அன்பும் அக்கறை யும்தான் இதுக்குக்காரணம் எனக்குப் புரியுது. ஆனாலும் ஜார்ஜீனாகிட்ட ஒருவார்த்தை கேட்டிருக்கலாமில்லையா? பொண்டாட்டினு ஆகப் போறவகிட்ட இதைச்சொல் லாம செய்யலாமா? எம்மேல நம்பிக்கையில்லைன்னு தானே...''

அவன் ஜார்ஜினாவின் வாயைப் பொத்தினான்.

''இல்லை ஜார்ஜீனா. நம்பிக்கையில்லாம இல்லை. நீ கேட்டு நான் கூடாதுனு. நான் கேட்க நீ வேண்டாம்னு மறுபடி மறுபடி பேச்சு வளரும். ஒரு பெண்ணுக்குக் குழந்தை கொடுக்கறதுதான் ஆம்பளையோட பெரிய சாதனை கர்வமான காரியம். இங்கே கர்வம் முக்கியம் இல்லை. காதல்தான் முக்கியம்னு பட்டது. மறுபடி உன்னைப் பார்த்து ஆபரேஷன் செய்துக்கோன்னு கேட்க வெட்கமா இருந்தது. ஆனா, நான் கேட்காம செய்தது தப்புதான். இதுவும் எமோஷனல்தான்...''

''சத்தி ப்ளீஸ்...இனிமே எமோஷனலா, என்னைக் கேட்காம எதுவும்...நான் உன் டெநெடிப்பா. உன்னு டைய ஜார்ஜீனா. நமக்குள்ள என்ன பயம்...என்ன தயக் கம்? நாம ஏன் ஒருத்தருக்கொருத்தர் பயப்படணும். எதைக் கண்டு வெட்கப்படணும்?''

''எனக்கு வெட்கமாத்தான் இருக்கு.''

''எதுக்கு?''

''இன்னும் எமோஷனாலே இருக்கோமே...எப்ப...?''

இப்போது அவள் சத்தியின் வாய் பொத்தினாள். ''நீ உன் இஷ்டத்துக்கு இருப்பா. கோவம் வந்தா கத்து. கூச்சல் போடு. ரெண்டு அறைகூடக் கொடேன்...''

''சே. நெவர்...ஒரு நாளும் செய்ய மாட்டேன்.''

''அதுகூடத் தாங்கலாம் சத்தி என்கிட்ட மறைக்க வேண்டாம். மறந்துகூடப் பொய் சொல்ல வேணாம். நானும் மாட்டேன் ஓகே...''

''ஓகே...''

உண்மையான வாழ்க்கை ஒப்பந்தம் அங்கே சொல் லாய் வெளிப்பட்டது மனசு வெளிப்பட்ட சந்தோஷம் செயலாய், இறுகிய தழுவலாய் நடந்தது

''ஏன் சத்தி...செல்வாவோட தாத்தா நினைச்சுக் கிட்டிருப்பாங்க—நம்ம கத்தலுக்கு ஜார்ஜீனா பயந்து ஆபரேஷன் செய்துக்கிச்சுனு...'' அவன் அணைப்பில் இழைந்து கொண்டு பேசினாள்.

''எனக்கென்னவோ அந்த மனுஷனை ரொம்ப பிடிச் சுப் போச்சு ஜார்ஜீனா. அவர் முரட்டுத்தனம் கூட ஒரு கவிதை மாதிரி தோணிச்சு...''

''மறுபடி எப்பலாச்சும் பார்த்தா நெஜம் சொல்லிடப் போறேன். பொய் சொன்னதுக்கு மன்னிப்புக் கேட்கப் போறேன். 'ஆ... நீ பண்ணிகதலையா ஆபரேஷன்?' னு கத்துவாரு சத்தி போறேன் அப்படியே உறைஞ்சுடும். நிஜமா நிஜமாலு கேட்கும். நெஜம்னு தெரிஞ்சுது...''

''தெரிஞ்சுது...''

''கொண்டாடிடுவாரு. பார்வைக்குத்தான முண்டா காட்டற நாடாரே தவர, உள்ளே வெள்ளை. 'நீ கிறிஸ்தவனய்யா. உன்னை கிறிஸ்தலனா மாறச் சொன்னது தப்பு'னுவாரு...''

''யாரு கிறிஸ்தவன் ஜார்ஜினா? ஒரு வரியிலசொல்...''

''தன்னைப் போல் பிறரை நேசிப்பவன்...''

''அப்போ எங்கப்பா, குணா, சுபேதார், உங்கப்பா, நீ நான்...ஏன், அந்தப் பையன் சின்னராசு கவிருன்கூட கிறிஸ்தவங்கதான். அந்தப் பையன்கிட்ட சொல்லிக்கலே யில்லையே ஜார்ஜினா...''

''நான் சொல்லிட்டேன். ஊருக்குப் போறானாம். திரும்ப...இன்னொரு நூறு ரூபா கொடுத்தேன். செல்வா லோட பழைய டாய்ஸ் கொடுத்தேன். அட்ரஸ் கொடுத்திருக்கான். எப்பலாவது நேனிக்குப் 'போய் சின்னராசுனு குரல் கொடுக்கணும்...''

''சந்தோஷமாயிடுவானில்லே...''

''நவிச்சுரும் அன்புல...''—ஜார்ஜினா பரவசத்துடன் பேசினான்.

''என்ன?''

''அன்புல தவிச்சுரும்னேன்...''

''அன்புல தவிக்கறதுன்னா?''

''ஒரு படபடன்னு வந்துரும். என்ன செய்யறதுன்னே தெரியாது...'

''நீ தவிச்சுருக்கியா'' கேட்டான்.

''நானா...உம்ம்...''—யோசித்தாள்.

''இப்போ பாரு...''

பளிச்சென்று அவள் புடவையின் முன்பக்கம் அவிழ்த்து அகற்றி வாரினான்.

''ஏய்...''—ஜார்ஜினா கூவினாள்.

''என்ன?''

''லைட்டுப்பா...''

''இருக்கட்டும்...''

''ஏசுவே...''—அவள் அவன் பார்க்காதிருக்க இறுக்கிக் கொண்டாள். உடம்பு முழுவதும் படபடத்தது. உதட்டிலும் கண்களிலும் வெட்கம் வழிந்தது

ஒரு பெரிய விமானம் பேரிரைச்சலுடன் ரன்வேயில் உரசி, உள்ளே நுழைந்தது.

சின்னராசு, ஆலந்தூர் சந்திப்பில் லாரிக்குக் கை காட்ட...பதினைந்து ரூபாய்க்கு மதுரையில் இறக்கிவிடச் சம்மதித்தார்கள். டயர் ட்யூப் லோடாம். டயர் அடுக்கி, இடைவெளியில் ட்யூப் போட்டு, மேலே தார்பாலின்

போட்டிருந்தார்கள். ட்யூப் மூட்டையில் படுத்துக் கொண்டான் விழாதிருக்க, கயிறுகளுக்கு நடுவே கால் கொடுத்துக் கொண்டான். லுங்கியைப் போர்த்திக் கொண்டான். கூட இரண்டு மூன்று ஆட்கள் அலனைப் போலவே மதுரைக்கு ரேட் பேசி லண்டியில் ஏறினார்கள்.

வண்டி ஏர்போர்ட் தாண்டியது. நகரத்து வெளிச்சம் குறைந்து. வானம் தெளிவாய் தெரிந்தது. சுடர்கள் மின்னின. லாரி வேகத்தில் காற்று தலையைக் கலைத்தது. பையை இழுத்து அருகே வைத்துக் கொண்டான். பையில் தேக் இருந்தது. செல்வா வேண்டாம் என்று தூக்கிப் போட்ட விளையாட்டுச் சாமான்கள் இருந்தன. கொஞ்சம் உபயோகித்த ஷூடெக்ஸ் பாட்டில் இருந்தது. குணா கொடுத்த சிகரெட் லைட்டர் அப்பாவுக்குக் கொடுக்கலாம். அம்மாவுக்கு ஒன்றும் வாங்கவில்லை. ஆனால், காசு இருக்கிறது. இருநூறு ரூபாய். மதுரையில் அம்மாவுக்கு சேலை எடுக்கலாம். அப்பாவுக்கு லேட்டியோ, போர்வையோ கூட வாங்கலாம். எல்லாம் வாங்கிக் கொண்டு தேனிக்கு பஸ் ஏற வேண்டும்.

'உனக்கு என்னடா வாங்கி வந்தே?'—அம்மா கேட்கும்.

'ஒண்ணுமில்லே...'

நிஜமாவே ஒண்ணுமில்லையா.. இத்தனை நாள் இங்கே கிடைத்த அனுபவம் ஒண்ணுமில்லாத விஷயமா? எத்தனை ஜனம், எத்தனை விதம், எத்தனை பிரச்னைகள்...பட்டணத்தில் ஒரு மாதிரி பிரச்னை.. தேனியில் ஒரு மாதிரி பிரச்னை...பட்டணத்தில் ஒருவிதக் கஷ்டம்... தேனியில் ஒருவிதக் கஷ்டம். தேனியில் ஒரு மாதிரி சந்தோஷம். பட்டணத்தில் வேறு மாதிரி ஆனந்தம். இங்கிருக்கிறது அங்கில்லை. அங்கிருக்கிறது இங்கில்லை. எது தேடினோம்

இங்கே... எதன் பொருட்டு இங்கே வந்தோம்? என்ன கிடைத்தது?

எது தேடியும் வரவில்லை. இன்னது வேண்டுமென்றும் தேடவில்லை. என்னமோ தேடினோம், இதான் என்றில்லாமல் தேடினோம். தேடித் தேடி...படீரென்று உள்ளே கவிதைப் பொறி மின்னியது

''பட்டணத்துச் சாலையிலே
சேறு வயல் இல்லை...
சேறு வயல் தேனியிலே
கெட்டித் தரை காணோம்...
பட்டணத்தில் கால் பொளிய
சேறு சுகம் கேட்கும்...
சேறு வயல் மிதித்து வர
கெட்டித் தரை தேடும்...
இங்கிருப்பது அங்கு இல்லை—
அங்கிருப்பது இங்கு இல்லை...
இல்லை என்பதெங்கு என்று
என் மனசு தேடும்...
இல்லாததைத் தேடுவதில்
கெட்ட சுகம் காணும்.
தேடலது என்னவென்று
இன்று கண்டுகொண்டேன்...
தேடுவதை விட்டுவிட்டுத்
தேடலாக நின்றேன்...''

—உட்கார்ந்து வாய்விட்டுக் கவிதை சொன்னான். கூட ஏறிய ஆள். அவனைத் திரும்பிப் பார்த்தான். வண்டி

தாம்பரம் தாண்ட, பெரிய விமானம் ஏர்போர்ட்நோக்கிக் கீழே மெள்ள இறங்கியது.

''ஏய் ப்ளேனு... ப்ளேனு இறங்குது...''— அந்த ஆள் சின்னராசு முதுகு தட்டி ஜானம் காட்டினான்.

''அட போய்யா... ப்ளேனே பார்த்ததில்லையா நீ...'' —முதுகு உதறி, மறுபடி சின்னராசு கவிதைக்குள் மூழ்கிப் போனான். லாரி மதுரை நோக்கிப் போயிற்று. இருளில் உலகம் பார்த்த சுடர்கள் சிரித்தன.

□□□